155 5/E

பிரித்தானியாவின் புதிய அடிப்படை வரலாறு

ஆக்கியோர் :
உவாணரும் மாட்டினும் மூரும்

இரண்டாம் பகுதி
(1485–1688)

தமிழாக்கம் :
சோ. நடராசா

1961

KARTHIGESU SIVATHAMBY
PROFESSOR - EMERITUS, UNIV. OF JAFFNA
VISITING PROFESSOR
Tamil Studies
Taramani, Chennai-600 113.

பிரித்தானியாவின் புதிய அடிப்படை வரலாறு

972
உவா
SL/PR

(புதிய " உவாணரும் மாட்டினும் ")

ஆக்கியோர்

சிலநாள் கேம்பிரிட்சு இயேசு கல்லூரி இணைவுரிமையாளனும்
முன்னாள் அரோ பாடசாலை ஆசானுமாய

யோட்சு தவுன்சென் உவாணர், M.A.

ஒட்சுபோட்டு பலியல் கல்லூரியிலிருந்தவரும்
ஈற்றன் கல்லூரியின் முன்னாள் பிரதமருமான

சேர் சி. என்றி. கே. மாட்டின், K.C.V.O., M.A.

ஒட்சுபோட்டு, தற்கால வரலாற்றுப்பாடசாலை,
சோமவில் கல்லூரி ஆகியவற்றைச் சார்ந்தவருமான

டி. ஏசுகின் மூர்

கொழும்பு தமிழ்ச்சங்கம்
23208.

தமிழாக்கம் :
சோ. நடராசா B.A., (Hons.)

இரண்டாம் பகுதி
1485–1688

அரசகருமமொழித் திணைக்கள வெளியீட்டுப் பிரிவுப் பிரசுரம்
அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பட்டது.

THE NEW GROUNDWORK OF BRITISH HISTORY

SECTION TWO (1485–1688)

by

GEORGE TOWNSEND WARNER, M.A.

Sometime Fellow of Jesus College, Cambridge,
late Master of the Modern Side in Harrow School

SIR C. HENRY K. MARTEN, K.C.V.O., M.A.

Late of Balliol College, Oxford, and late Provost of Eton College

D. ERSKINE MUIR

Final Honours, School of Modern History, Oxford,
Sometime Scholar of Somerville College, Oxford

Translated and published by

The Government of Ceylon

by arrangement with

Blackie and Son, Limited, London and Glasgow

இலண்டனிலும் கிளாசுக்கோவிலுமுள்ள
பிளாக்கி அன் சன் கம்பெனியாரின் இசைவு பெற்று
இலங்கை அரசாங்கத்தாரால் தமிழில் மொழிபெயர்த்து
வெளியிடப்பட்டது

எல்லா உரிமையும் இலங்கை அரசாங்கத்தார்க்கே

முதற் பதிப்பு 1961

2——J. N. B 1137—1,526 (4/59).

முன்னுரை

இலங்கைப் பாடசாலைகளில் உயர்வகுப்புக்களுக்குப் பயன்படுத்தும் பொருட்டு, அரசகருமமொழித் திணைக்களம் மொழிபெயர்த்து வெளியிடும் வரலாற்று நூல்கள் பலவற்றுள் இது வொன்று. 'பிரித்தானியாவின் புதிய அடிப்படைவரலாறு' எனும் பெயரால் 'பிளாக்கி அன் சன் கம்பெனியார் வெளியிட்டுள்ள தொடர் நூல்களுள், இது இரண்டாம் பகுதியாகும் (1485-1688).

இந்நூலை மொழிபெயர்க்க எமக்கு உரிமையளித்த அக்கம்பெனியார்க்கு எமது உளமார்ந்த நன்றி.

இந்நூலை மேலுந் திருத்தமுறச் செய்தற்கு ஏற்ற யோசனைகள் எமக்கு எடுத்துரைக்கப்படின், அவற்றை நாம் உவந்தேற்றுக் கொள்வோம்.

ந. தே. விசயசேகரா,
பிரதியாணையாளர்.

அரசகருமமொழித் திணைக்களம்,
(வெளியீட்டுப் பிரிவு)
24.2.61.

பதிப்பாளர் முகவுரை

உவாணரும் மாட்டினும் இயற்றிய **பிரித்தானிய வரலாற்றின் அடிப் படையின்** முதற்பதிப்பு 1911 இல் வெளியிடப்பட்டது. அற்றைநாள்தொட்டு இந்நூல் பாடசாலைகளில் ஒரு நியமநூலாக இருந்து வருகிறது. பல பதிப் புக்களிலும் திருத்த வெளியீடுகளிலுமாக இந்நூல் பலமுறை புதுக் கியமைக்கப்பட்டுள்ளது. போர்க் காலத்தைப் பயன்படுத்திப் பாட சாலைப் பத்திரத்தேர்விற்கும் புதிய வரலாற்று ஆராய்ச்சிக்கும் ஏற்ற முறையில் அமைய, நூலை அறவே செப்பனிட்டுள்ளோம்.

இப்பணியைத் திருவாட்டி எசுவின் மூர், திரு. உவாணரின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களினதும் சேர் என்றி மாட்டின் அவர்களினதும் இசைவுடன் செய்தார்கள். சேர் என்றி மாட்டின் அரிய தெரிப்புரை கூறியும் படி யோலை ஆய்ந்தும் உதவினார்கள். இப்பணிக்கேற்ற நல் தகுதியுடையவர்கள் திரு. மூர் அவர்கள். வரலாற்றிலே தேர்வாளராயும் கல்வியூட்டுவதில் ஆசிரியராயும் நல்ல பயிற்சி பெற்றவர்கள் அவர்கள்.

1830 இல் இருந்து 1839 ஈறுக உள்ள பருவம் முற்றிலும் புதியதாகும். 1830 ஆம் ஆண்டுவரை உள்ள பாடப்பகுதி பாடசாலைத் தகவுப்பத்திரத் தேர்விற்கு ஆயத்தஞ்செய்வார்க்கு உதவும் வகையில் புதிய முறையில் ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்டுள்ளது. புதிய வரலாற்று நோக்குகளுக்கு இயைய சில அதிகாரங்கள் சீராக்கப்பட்டுள்ளன. முதலாம் நூலில் உள்ள பாடப்பகுதி பெரும்பாலும் திரு உவாணர் எழுதியவாறே உள்ளது. இரண்டாம் நூலில் 1830 வரை உள்ளதும் அவ்வாறே சேர் என்றி மாட்டின் எழுதியவாறே உள்ளது.

குறிப்புக்கள், கால அட்டவணைகள், மற்றை படிப்பித்தற்குரிய துணைப் பொருள்கள் யாவும் திருவாட்டி மூர் அவர்களால் அளிக்கப்பட்டுள்ளன. பாட சாலைப் பத்திரத்தேர்வுக்குரிய கேள்விகள் பலவும் இந்நூலில் அவர்களாற் சேர்க்கப்பட்டுள்ளன.

பிரித்தானிய வரலாற்றில் உள்ள பருவங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பகுதியாக இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது.

பதிப்பாளர் முகவுரை

பழைய பாடசாலைப்பத்திரத் தேர்வுகட்குரிய வினுப்பத்திரங்களே இந்நூலிற் சேர்ப்பதற்கு இசைவளித்தோர்க்கு எம் நன்றி உரியதாகுக. அவராவார் : பிரித்தல் பல்கலைக்கழகம்; (B); கேம்பிரிட்சுப் பல்கலைக்கழகம்; (உள்ளூர்த் தேர்வுச்சபை) (C. L); மத்திய உவல்சுச்சபை (C. W. B.); தறம் பல்கலைக்கழகம். (D); இலண்டன் பல்கலைக் கழகம் ; பாடசாலைப் பொதுத் தேர்வு (L. G. S); புகுந்தேர்வு (L.M.); வடபல்கலைக் கழகங்களின் கூட்டுப் புகுந்தேர்வுச் சபை (N. U. J. B); ஒட்சுபோட்டு கேம்பிரிட்சுப் பாடசாலைகள் தேர்வுச்சபை (O. C.); ஒட்சுபோட்டு உள்ளூர்த் தேர்வுச் சபை (O.L); உவெல்சுப் பல்கலைக்கழகம் (U.W.) அடைப்புக் குறிகளுள் உள்ள ஆங்கில எழுத்துக்களே உரிய கேள்விகளைச் சுட்டப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

பொருளடக்கம்

பகுதி 2—1485—1688

பருவம் ஐந்து—1485—1603

பலம்பொருந்திய முடியாட்சி

நியூடர் வமிசம் (1485—1603)

அதிகாரம்		பக்கம்
1.	புதிய முடியாட்சி—ஏழாம் என்றி (1485—1509)	1
	1. முன்னுரை—புதியகருத்துக்கள்	1
	2. என்றி மன்னனுக்கு எதிராகக் குழப்பம் : ஒழுங்கைத்தை நீக்க வழிவகைகள் ..	4
	3. விதைப்புக்காலம்	9
2.	எட்டாம் என்றி (1509—1547)	18
	1. உவுல்சி	18
	2. சமயச்சீர்திருத்தம்	24
	(1) புதியகல்வி : சேர்மனியிற் சமயச் சீர்திருத்தம்	24
	(11) உரோமுடன் பிணக்கு	30
3.	1329 தொடக்கம் 1542 வரை கொத்துலாந்தின் நிலை	45
4.	ஆரும் எட்டுவேட்டு (1547—1553)..	56
5.	நியூடர் மேரி அரசி (1553—1558) கத்தோலிக்க எதிரியக்கம்	68
6.	கொத்துலாந்திலே சமயச்சீர்திருத்தம்	76
7.	இலிசபெத்து (1558—1603)	81
	1. சமய சம்பந்தமான இணக்கம்	81
	2. இலிசபெத்தின் வெளிநாட்டுப் பூட்கைச் சுருக்கம்	85
	3. கொத்துலாந்தும் இலிசபெத்தும்	88
	4. சூழ்ச்சிக்காலம்	99
	5. ஆமடா	107
	6. இலிசபெத்தும் பாராளுமன்றமும் : சமூகநலத்துக்கான நடவடிக்கைகள் : இலிசபெத்தும் எசெக்சும்	115
	7. இலிசபெத்துக் காலத்தில் இலக்கியம்	120
8.	நியூடர் ஆட்சியில் அயலத்து (1485—1603)	123
	ஐந்தாம் பருவம் பற்றிய குறிப்பு	130
	ஐந்தாம் பருவத்திற்குக் கால அட்டவணை	157—161
	ஐந்தாம் பருவம் பற்றிய பரீட்சை வினுக்கள்	162
	ஆரும் பருவம் (1603—1688)	165
	முடிக்கும் பாராளுமன்றத்துக்குமுண்டான போராட்டம்	165

பொருளடக்கம்

9. முதலாஞ் சேமிசும் (1603—1625) அவன் பிறநாட்டுப் பூட்கையும் 165

10. முதலாஞ் சேமிசும் உண்ணுட்டு அலுவல்களும் 175

1. அரசனுக்கெதிரான சதி 175
2. அரசவின் அமைச்சர் 178
3. மன்னனும் புரட்சுதாந்துக் கட்சிகளும் 180
4. அரசனும் பாராளுமன்றமும் 185

11. முதலாம் சார்ல்சு (1625—1645) 193

1. முதலாம் சார்ல்சின் பிறநாட்டுப்பூட்கை (1625—1649) 193
2. முதலாம் சார்ல்சும் உண்ணுட்டு அலுவல்களும் (1625—1642) 197
3. எதேச்சை அரசாள்கமும் (1629—1640) இங்கிலாந்திலும் கொத்துலாந்திலும் அதிருத்தியும் 203
4. குறுகிய பாராளுமன்றமும் நெடிய பாராளுமன்றமும் (1640—1642) ..212

12. உள்ளுட்டுப்போர் (1642—1645) 219

13. பொதுநலவாயமும் (1645—1653) 230

புரப்பகமும் (1653—1659) 230

1. உள்ளுட்டு அலுவல்கள் 230
2. அரசன் சிரச்சேதம் (1646—1649) 234
3. இங்கிலாந்து குடியரசாதல் 239
4. குரம்வெல்லின் ஆதிக்கம் 243
5. பொதுநல வாயத்தின் பிறநாட்டுப்பூட்கை 248
6. மீட்கிகு இட்டுச்சென்ற நிகழ்ச்சிகள் 252

14. பிரித்தானியப் பேரரசின் தொடக்கம் 255

15. இரண்டாம் சார்ல்சு (1660—1685) 260

1. முதற்கட்டம் : உள்ளுட்டு அலுவல்கள் 260
2. இரண்டாம் கட்டம் : இரண்டாம் சார்லின் வெளிநாட்டுப்பூட்கை 266
3. இரண்டாம் சார்ல்சும் சொந்த ஆட்சி நடத்த அவன்செய்த முயற்சியும் ..271

16. இரண்டாம் சேமிசு (1685—1688) 277

17. கதுவட்டு மன்னராட்சியில் அயலந்தும் கொத்துலாந்தும் 281

1. அயலந்து 281
2. பொதுநலவாய ஆட்சியிலும் பிற்காலச் கதுவட்டு மன்னராட்சியிலும் கொத்துலாந்து 288

ஆரும் பருவம் பற்றிய குறிப்புக்கள் 291

ஆரும் பருவம் பற்றிய கால அட்டவணை 319

ஆரும் பருவம் பற்றிய பரீட்சை வினுக்கள் 322

நாட்டுப் படங்கள்

யாழுகர் சென்ற பாதைகள் 11

ஆமெடா சென்ற பாதை 113

உள்ளுட்டுப் போர் 225

உள்ளுட்டுப் போரின்போது இங்கிலாந்துமீது கொத்துலாந்தர் படையெடுப்பு ..236

கடற்போர்கள், 1649—1674 269

1603 இன் பின் அயலந்து 282

ஐந்தாம் பருவம்

பலம்பொருந்திய முடியாட்சி—தியூடர்கள் (1485–1603)

முதலாம் அதிகாரம்

புதிய முடியாட்சி—ஏழாம் என்றி (1485—1509)

1. முன்னுரை : புதிய கருத்துக்கள்.

ஏழாவது என்றி புதியதொரு அரசபரம்பரையையும் ஆட்சிமுறையையும் தொடக்கினன். தியூடர் மன்னர் இங்கிலாந்தில் ஆட்சி நடத்திய காலத்திலே உலகிற் பெரிய மாற்றங்களுண்டாயின. வரலாற்றில் " தற்காலம் " என்று நாம் கருதும் காலப்பகுதியிற் பிரவேசிக்கிறோம்.

மத்தியகாலத்திலிருந்து தற்காலத்துக்கு மாறும் தன்மை

இங்கிலாந்தில் ஏழாம் என்றி அரசுகட்டிலேறிய காலம் மத்தியகாலத்துக்கும் தற்காலத்துக்கும் இடையிற் சந்தி பிரியுங்காலமாய் இரண்டுமற்ற நிலைமையிலிருந்தது. அரசன் இயற்றிய சட்டங்களிற் பெரும்பாலன மத்திய காலத்தன்மையுடையனவாயிருந்தன. கொள்கைகளிற் பல, குறிப்பாக அரசனது விவாகத்தொடர்புக் கொள்கைகள் தற்காலச் சார்புடையனவாயிருந்தன. சிங்கநோக்காக முன்பின் பார்க்கிறபொழுது சூழ்நிலையின் தன்மை தெளிவாகத் தெரியும். உவொரிக்கு மத்தியகாலப் பேர்வழி ; உவுல்சி, தற்காலப் போக்குடையவர். மூன்றும் இரிச்சாட்டின்காலம் வாளும் கையும், கொலையும் கொடுமையும் நிறைந்தது. அவர் சரித்திரகாலப் பழம்பொருள் அடங்கிய அரும்பொருளகத்துக்குரியவர். எட்டாம் என்றியின் காலம் கொலை மலிந்த கொடுமையுடையதாயினும் தற்காலப் போக்கு நிறைந்தது.

தியூடர்காலத்துத் தனிப்பட்ட இயல்புகள்: குலமுறைத் திருமணங்கள் :

தியூடர் காலத்தை எடுத்துக்காட்டும் புதிய தன்மைகளை அறிந்துகொள்வது சுலபம். வரலாற்றுசிரியர்கள் சுட்டிக் காட்டும் " குலமுறைத்திருமணங்கள் " செய்தல் அரசரின் கொள்கையாயிருந்தது. இக்கொள்கைப்படி அரசர்கள் விவாகத் தொடர்பினால் இராச்சியங்களை இணைத்து உலகப் பேரரசுகளை அமைக்க முயன்றனர். உரோசுப்போர்களில் சிற்றரசர்கள், பண்ணைகளை ஒன்றோடொன்று இணைத்ததையே அவ்வரசர் கொள்கை ஒத்திருந்தது.

இத்திருமணத் தொடர்புகளின் பயனாக ஒரு சமயம் இங்கிலாந்தை சிபெயினுடன் இணைக்கத்தலைப்பட்டனர். மற்றொரு சமயம் கொத்துலாந்தைப் பிரான்சுடன் இணைக்க முயன்றனர். மற்றொரு மேன்மையான தொடர்பு, இங்கிலாந்தைக் கொத்துலாந்துடன் இணைத்தமை. இத்தொடர்பு அசையாமல் வலுப்பெற்று விளங்குகிறது.

2. புதியகல்வி ; 3. சமயச்சீர்திருத்தம் ; 4. இங்கிலந்தின் கடலாதிக்கம்

அது ஒருபுறமாக, **அச்சடிக்கும் முறை** கண்டுபிடிக்கப்பட்டது. **புதிய கல்வி** ஆராய்ச்சியை மேற்கொள்வதாகவும், ஆணை வாக்கியங்களுக்கு அடி பணியாததாகவுமிருந்தது. சமயத்துறையிலும் கலக்கமுண்டாகி, ஈற்றிலே சமயச்சீர்திருத்தத்தில் அது முடிந்தது. தேசமக்கள் பழைய சமயக்கொள்கைக்கும், புதிய கொள்கைக்குமிடையில் ஊசலாடிக்கொண்டிருந்தபின் புதிய சமயத்தையே கடைசியில் ஏற்றனர். இப்புதிய புரட்சுத்தாந்தச் சமயமே முடிவாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பிரான்சு தேசத்திலே படையெடுத்து ஆங்காங்கு சில ஆள்புலப்பகுதிகளை இங்கிலாந்து ஆக்கிரமித்து வந்த கொள்கை மாறிற்று. அதற்குப் பதிலாக எல்லாரும் **புதிய உலகம்** என்ற அமெரிக்காவுக்குச் சென்று அங்கே குடியேற்றங்களை ஏற்படுத்தினர். பின்னர் அந்த முயற்சியே இங்கிலாந்தின் பிந்திய ஆணிப்பெரும் சம்பாத்தியமான பிரித்தானியப் பேரரசிற்கு அடிகோலியது. புதியவொரு காலவவதியைத் தொடங்குவதற்கு இங்கு எடுத்துக்காட்டிய பலவற்றுள் ஒன்றே போதுமானது. ஆனால் அவை யெல்லாமாகச் சேர்ந்து பழைய காலவவதிக்கும் புதிய காலவவதிக்குமிடையே ஒரு பெரும்பிரிவையுண்டாக்கின.

இம்மாற்றங்கள் ஐரோப்பாவுக்குமுரியன

இப்புது யுகத்தின் தனிப்பட்ட இயல்புகள் இங்கிலாந்துக்கே சொந்த மானவையென்றெ, அங்கேயே கருக்கொண்டனவென்றோ சொல்ல முடியாது. குலமுறைத் திருமணங்கள் சிபெயினிலேயே முதன் முதலாரம்பித்தன. புதிய உலகுக்குச் சென்றவர்களில் போத்துக்கலும் சிபெயினும் முன்னோடிகளெனலாம். புதிய கல்வி இத்தாலியிற்றான் முதலாகத் தொடங்கிற்று. உரோமன் கத்தோலிக்கச் சமயத்துக்கு எதிராகச் சேர்மனி இளர்ச்சியை ஆரம்பித்தது. அது பின்னர் மற்றைய ஐரோப்பிய நாடுகளிலும் பரவிப் பலபடியாக அச்சமயத்தை நலித்தது. தியூடர்காலத்து இங்கிலாந்து, பிளந்தேசெனத்துக்காலத்து இங்கிலாந்துடன் பெருமளவில் மாறுபட்டதுபோலவே, 15 ஆம் நூற்றாண்டு ஐரோப்பா, 16 ம் நூற்றாண்டு ஐரோப்பாவுடன் மாறுபட்டது. எனவே இங்கிலாந்திலுண்டான மாற்றங்களைச் சரிவர அறியவேண்டுமானால் ஐரோப்பிய நாடுகளிலுண்டான மாற்றங்களை அறிந்துகொள்வதும் அவசியமாகும்.

" நாட்டினம் " என்ற கருத்து

இம்மாற்றத்தைச் சுருங்கக் கூறில் பழைய கிறித்தவ உலகு புதிய ஐரோப்பாவாக மாறியதெனக் கூறலாம். பழங்காலத்தில் இத்தாலி, பிரான்சு, சிபெயின், சேர்மனி, இங்கிலாந்து ஆகிய தேசத்து மக்கள், பல மொழியுடையவராயும் பல சாதியைச் சேர்ந்தவர்களாயுமிருந்தாலும், சில பொதுப் பிணைப்புடையவராயிருந்தனர். எல்லாரும் ஒரு திருச்சபையைச் சேர்ந்தவர்களாய்க் கிறித்தவ உலகின் அங்கமாய், போப்பாண்டவரும் பேரரசனுந் தலைமைதாங்கும் ஒருலகின் பிரசைகளாய் விளங்கினர். கிறித்து நாதரின் கடைசிப் போசனத்தின்பின் அவர் குறிப்பிட்ட " இரண்டு வாள் " என்பன இவ்விரு பெருந்தலைமைப் பதவிகளையே குறித்தவெனக் கருதினர். " கிறித்துவ உலகு" என்னும் பதம் முடியரசு சார்பான பொருளுடையதாயிருந்தது. எல்லோர்க்கும் பொதுவான சமயக்கொள்கையும், நோக்கத்தில் ஒருமைப்பாடும் பூவுலகிற் கிறித்துநாதரின் பிரதிநிதிகளாயுள்ளவர்க்கு ஒருமித்த பணிவுமே அதில் தொக்க பொருளாகும். ஆனால் " ஐரோப்பா " என்னும்பொழுது அத்தகைய பொருட்செறிவு அங்கு இல்லை. அங்கே ஐரோப்பா முழுவதற்கும் பொதுவான ஆட்சிநிலை இல்லை; தனிப்பெருந்தலைமைக்கு ஒருமித்த பணிவும், நோக்கத்தில் ஒருமைப்பாடும் இடையா. எல்லார்க்கும் பொதுவான தனித் திருச்சபை இடையாது. சுதந்திரமுள்ள பல அரசுகளின் சேர்க்கையே ஐரோப்பா ; ஒவ்வொன்றும் சொந்த ஆட்சிமுறையுடையது ; புவியியல் முறையில் அவை ஒன்றோடொன்று இணைந்துள்ளன ; அரசியலில் ஒன்றோடொன்று பின்னப்பட்டுள்ளன. ஆனால் அவை தனித்தனி தமது சொந்த நலத்தையே கருத்திற்கொண்டியங்குவன. கிறித்தவ உலகு ஐரோப்பாவாக மாறிய தன்மை " நாட்டினம் " என்றதொரு புதிய அரசியற் கருத்தின் பயனாக உண்டானது.

புதிய முடியாட்சிகள் ; நாட்டின உணர்ச்சி வளர்தல் ; வல்லரசுகளின் எழுச்சி

பதினைந்தாம் நூற்றாண்டின் பின்பாதியில் நிலமானிய முறை அழிவுற்று வர, பலம்பொருந்திய முடியாட்சி எங்கும் தலையெடுத்தது. பதினோராம் உலாயி மன்னன் பிரான்சு இராச்சியத்தைக் கட்டியமைத்தான். சிபெயினின் பகுதிகளான அரகன், கசுற்றீல் என்ற சமத்தானங்கள் பேடினந்து இசபெல்லா என்பவர்களின் விவாகங் காரணமாக ஒன்றாய் இணைந்தன. உரோசாப் போரினால் நாட்டிலுண்டான கெடுதிகளைத் தியூடர் மன்னர்கள் நீக்கத் தலைப்பட்டனர். அத்துடன் ஒப்பற்ற வலிமைபொருந்திய முடியாட்சியும் நிறுவப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலும் இன அபிமானந் தழைத்தது. நாட்டினம் என்ற எண்ணத்தில் மக்கள் பெருமைகொண்டனர். பிரெஞ்சு மன்னனை எட்டாவது சார்சு இத்தாலிமீது படையெடுத்துச் சென்றமை அக்காலத்தேசாபிமானத்துக்கும், அதனாலுண்டான

போராசைக்கும் ஓர் எடுத்துக்காட்டாகும். பிரான்சுக்கும் சிபெயினுக்கும் உண்டான நீண்டகாலப் போராட்டமும், அதில் இங்கிலாந்து ஒரு சமயம் பிரான்சுக்கும் மறுசமயம் சிபெயினுக்கும் ஆதரவளித்தமையும், சமயமென்பது தேசங்களின் சொந்தவிடயமேயன்றிப் பொதுவிடயமன்றென்றும், அவ்விடயங்களில் தேசங்கள் தாந்தாம் தனிப்பட்ட முடிபுகளைச் செய்யவேண்டுமென்றும் பரவிய புதிய கருத்தும்; புதிய உலகம் சம்பந்தமான உண்டான போட்டியும் ஆகிய இன்னோரன்ன தன்மைகளெல்லாம், அத்தகைய எடுத்துக்காட்டுகளேயாகும். தியூடர்காலத்து இங்கிலாந்தில் தோன்றிய இப்புதிய தன்மைகளெல்லாவற்றிற்கும் மூலகாரணம் **நாட்டின உணர்ச்சியின் வளர்ச்சியாகும்**. அது இங்கிலாந்தில் மாத்திரமன்றி ஐரோப்பிய நாடுகளெங்குமே காணப்பட்டது. சிலகாலமாக இப்புத்துணர்ச்சியின் வளர்ச்சிக்குப் பழைய கருத்துக்கள், பழைய பூட்கைகள், மத்திய காலப் போப்பாண்டவர் கொண்ட மரபுகள், மத்திய காலப் பேரரசின் மரபுகளென்ற இத்தகைய பாழடைந்த பழைய கொள்கைகள் தடையாயிருந்தன. ஆனால் நாளடைவில் இவைகள் சிறிது சிறிதாக அப்புறப்படுத்தப்பட்டு "நாட்டின" மென்ற சமுதாயம் புதியவொரு அமைப்பாக உருப்பெற்றது. ஆரம்பத்தில் பிரான்சு, சிபெயின், இங்கிலாந்து என்பனவே முக்கிய நாட்டினங்களாக விளங்கின. சேர்மனி, பேரரசென்ற சுமையுடனும், இத்தாலி, போப்பாண்டவராதிக்கமென்ற சுமையுடனும் விளங்கியபடியால் நாட்டினமென்ற தனிவடிவைப் பெறவில்லை. எனவே இவ்விரு நாடுகளும், எளிதிற் கட்டியாளமுடியாத இரசிய வல்லரசும், சர்வதேச அரசியலரங்கில் இடம் பெறுவதற்குப் பல நூற்றாண்டு செல்லல் அவசியமாயிற்று. (குறிப்பு 40).

என்றி மன்னனுக்கெதிராகக் குழப்பம் : ஒழுங்கினத்தை நிக்க வழி வகைகள் : என்றியின் விவாகம் : யோக்கு இலங்கசர் வமிசங்கள் இணைதல்

இங்கிலாந்திலே ஏழாம் என்றி ஆரம்பத்தில் உரோசாப்போர்களாலுண்டான பயன்களைச் சமாளிக்கவேண்டியேற்பட்டது. யோக்குவமிசத்தைச் சேர்ந்த இலிசபெத்தைத் திருமணஞ் செய்ததன் பயனாக என்றி சிவப்பு உரோசுக்கட்சியை வெள்ளை உரோசுக்கட்சியுடன் சேர்த்துக்கொண்டான். இங்கிலாந்தின் அரசுக்கு என்றி அதிகஉரிமைபெற்றிராவிட்டாலும், இலிசபெத்துக்கு அதிக உரிமையிருந்தது. எனவே இவ்விவாகத்தொடர்பாலுண்டான பிள்ளைகளுக்கு எதிர்ப்பில்லாத முழு உரிமையுண்டாயிற்று. அரசகுமாரன் ஒருவன் கள்ளரிடமும் பூதங்கள்வசமுஞ் சிக்கி அல்லலுற்றபின்னர் தன்னை வதைத்த அசுரனைத் தனிச் சண்டையிற் கொன்று அரசிளங்குமரியை மணந்து சுகமாய் வாழ்ந்த புராணக் கதையின் நினைவு இங்கு வரலாம். ஆனால் இந்த உவமை ஒரு சிறிதும் பொருத்தமுடையதன்று. தந்திரமும், கொடுமையும் பணவாசையுங்கொண்ட ஏழாம் என்றிக்கும் கதையில் வரும் கற்பனை அரசகுமாரனுக்கும் எவ்வித பொருத்தமுமில்லை.

இலாம்பேட்டு சிமினெலின் குழப்பம் :

மூன்றும் இரிச்சட்டு விரைவில் முடிவெய்தியமைபோல நாட்டிலுண்டான கலகம் முடிவுறவில்லை; அது பொசுவேத்துக்களத்தில் அடங்கிவிடவில்லை. 1487 இல் உலோவெல் தொடங்கிய குழப்பத்தில் மறுபடியுந் தலைதூக்கிற்று. உவரிக்குக் கோமகனை எட்டுவேட்டு, இளாரன்சு கோமகனை யோட்சின் மகன். எனவே அவன் மூன்றாவது இரிச்சட்டின் மரணத்தின் பின்னர் யோக்குவமிசத்தின் கடைசி ஆண்சந்ததியும் வாரிசுமாகவிருந்தான். அவனை அரசாங்கம் கோபுரத்திற் கைதியாகவைத்திருந்தது. யோக்குக்கட்சியினர் இலாம்பேட்டு சிமினெல் என்பவனை, எட்டுவேட்டுக்குப் பதிலாகப் போலியரசனாய் வேடந் தரிக்கச் செய்தனர்.

சுதோக்குச்சண்டை (1487) : உரோசுயுத்தத்தின் கடைசிப்போர் :

யோக்குவமிசத்தைச் சேர்ந்தவர்களும், சேர்மன் கூலிப்படைகளும் அயலந்தைச் சேர்ந்த கூலிப்படைகளுமாக இலாம்பேட்டுசிமினெலினின் கொடிக்கீழ்த்திரண்டு சுதோக்கு என்ற இடத்திலே போர் செய்தனர். உரோசு யுத்தங்களின் கடைசிப் போர் இதுவே. இதில் யோக்குவமிசத்தினர் தோல்வியடைந்தனர். என்றி, சிமினெலென்ற போலி அரசகுமாரனைப் பரிவோடு நடத்தினன். நிலைமைக்கேற்ற அரசதந்திரமதுவேயென எண்ணினன். உண்மையான அரசகுமாரனை இளாரென்சை இலண்டன் நகரில் ஊர்வலமாக அழைத்துச் சென்று, சிமினெலின் வஞ்சனையை உலகுக்கு வெளிப்படுத்தினன்.

பேக்கின் உவாபெக்கு

சிமினெலிலும் பார்க்க அதிகந்தொல்லையை ஏழாண்டுகளாக என்றிக்கு உண்டுபண்ணியவன் பேக்கின் உவாபெக்கு. கோட்டையிற் சிறைவைக்கப்பட்ட அரசகுமாரர் இருவருள் இளையவன் யோக்குக் கோமகனை இரிச்சட்டு. உவாபெக்கு 1492 இல் அயலந்தில் தோன்றித் தானே அந்த யோக்குக் கோமகனெனக் கிளர்ச்சி நடத்தினன். என்றியின் விரோதிகளையெல்லாம் அவன் தன்னுடு சேர்த்துக்கொண்டான். பேகண்டியைச்சேர்ந்த மாகரெட்டு அவன் பக்கஞ்சேர்ந்து அவனுடைய தொண்டர்களில் முதலிடம் பெற்றனள். பிரெஞ்சு நாட்டுமன்னன் அவனைப் பாரிசு நகருக்கு அழைத்தான். ஆனால் எத்தாப்பிள்சுப் பொருத்தனையின் (1492) பயனாக, என்றி, அவனைப் பிரான்சிலிருந்து வெளியேற்றிவிடச் செய்தான். பின்னர் உவாபெக்கு பிளாண்டேசிலுள்ள மாகரெட்டிடம் போனான். அங்கே பெரியதொரு சதி செய்யப்பட்டது. இதை என்றி அறிந்ததும் இளிபோட்டு, இசுதானிலி, மொந்து போட்டு என்பவர்கள் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர், உவாபெக்கு 1495 இல் படையுடன் கெந்துநகரில் வந்து இறங்கினன். ஆனால் அவனுக்குப் படுதோல்வியுண்டானது. எனவே அவன் மறுபடி

அயலந்துக்குச் சென்று அங்கிருந்து கொத்துலாந்துக்குப் போனான். கொத்துலாந்தின் அரசன், என்றிக்குத் தொல்லை கொடுக்கும் நோக்கத்துடன் உவாபெக்கை ஆதரித்தது மாத்திரமன்றித் தனது சுற்றத்தாரிலொருத்தியை மணமகளாக அவனுக்குக் கொடுத்தான். இரண்டுதரம் கொத்துலாந்திலிருந்து இங்கிலாந்துமீது படை யெடுக்கப்பட்டது. இருமுறையுந் தோல்வியுண்டாகவே 1497 இல் நாலாம் சேமிசு உவாபெக்கைக் கொத்துலாந்தைவிட்டு வெளியேறச் சொன்னான். பேகண்டியரசனுன பிலிப்பு, என்றியுடன் சமாதானஞ் செய்துகொண்டபடியால், உவாபெக்கு பிளாண்டேசுக்குப்போய் அங்கே ஆதரவு பெற முடியாதிருந்தது. 1496 இல் "மினுசு இண்டர்கேசசு" என்ற ஒரு பொருத்தனை செய்யப்பட்டது. அதன்படி இங்கிலாந்து நெதலந்துக்குக் கம்பனி எற்றுமதிசெய்ய உண்பட்டது. மேலும் என்றிக்கு விரோதிகளாயிருப்பவர்களை, பிலிப்பின் இராச்சியத்திற் சேர்த்துக்கொள்ளக் கூடாதெனவும் ஒரு வாசகம் அப்பொருத்தனையிற் காணப்பட்டது. உவாபெக்கு அயலந்துக்குச் சென்று படைதிரட்டிக்கொண்டு, நாலாம் முறையாக இங்கிலந்தின்மீது போர் தொடுத்தான். இதுவே அவன் செய்த கடைசிப்போராகும். அவன் பென்சான்சு என்ற இடத்தில் இறங்கி, செண்மைக்கேல் மௌண்டு என்ற இடத்தைப் பிடித்தான். பின்னர் எட்சீற்றரை வளைந்துகொண்டான். உடனே அரசனின் படை முன்னேறியெதிர்த்தது. அதை எதிர்க்க முடியாமற் புறமுதுகு காட்டி ஓடி 1497 இல் சரணடைந்தான். என்றி, முதலில், அவனைப் பரிவுடன் நடத்தவிரும்பிக் கோபுரத்திற் கைதியாக வைத்திருந்தான். இரண்டு வருடத்தின்பின் அவன் உவாவிக்குடன் தப்பியோட முயன்றான். அதிலே தோல்வியடையவே, என்றி பொறுமையிழந்து, இருவரையுஞ் சிரச்சேதஞ் செய்வித்தான். உவாபெக்குப் பரிவுக்குத் தகுதிபெறவில்லை. ஆனால், 16 வருடமாக, முதலில் மூன்றும் இரிச்சட்டின் கைதியாகவும் பின்னர் ஏழாம் என்றியின் கைதியாகவுமிருந்த இளைஞனுக்கு இக்கதி நேர்ந்தமை கொடிது. அரசவமிசம் மாற்றமடைந்துங்கூட அவனுக்கு நன்மையுண்டாகவில்லை. இரு பகுதியினரும் அவனை ஆபத்தான விரோதியாகவே கருதினர். எசெட்சு என்பவன் சிராபோட்டைப்பற்றி நினைக்கும்பொழுது எவ்வாறு "செத்த பிணத்தைச் சேர்பவர் இல்லை" என்று எண்ணினானோ அவ்வாறே இப்பொழுது என்றியும் எண்ணினான். இதன்பின்னர் எவ்வகையான சதிகளுமுண்டாகவில்லை.

பிரபுக்களுக்கெதிராக என்றியின் நடவடிக்கை

இப்பொழுது என்றி வெற்றி வீரனாக விளங்கினான். பிரபுக்களைத் தலை யெடுக்க அவன் விடவில்லை. சொந்தப் படையிலேதான் அவர்களுடைய பலம் தங்கியிருந்தது. ஆனால் இப்பொழுது படைகளெல்லாவற்றையும் அரசன் தனதாக்கிக்கொண்டான்.

அங்கிநியதிச் சட்டம்

"அங்கிச்" சட்டப்பிரகாரம் சொந்தச் சைனியம் வைத்திருக்கும் முறை நீக்கப்பட்டது. ஒரு பிரபுவின்மீற்ப் படையாட்சியாக நின்று சண்டைசெய்ய உடன்படிக்கை செய்வோருக்கு "அங்கி" வழங்குவது சட்டவிரோதமான தென இச்சட்டம் விதித்தது. கரடி, சிதைந்த தண்டு, முடிச்சு, கபாட யந்திரம், வெள்ளைச்சிங்கம் என்ற விருது தாங்கிய படைகளினால் சாதாரண மக்களுக்கு எற்பட்டுவந்த தொல்லைகளெல்லாமடங்கின! "தனிப்பட்ட படையாட்சி" மறைந்துபோகவே தனிப்பட்ட யுத்தமும் மறைந்தது. என்றியின் நெருங்கிய நண்பனான ஒட்சுபோட்டுவள் ஒருமுறை அரசனை வரவேற்பதற்காகத் தனது விருது ஆகிய தி வேறியின் "ஒலிவிடுதாரகை" யணிந்த தன்சொந்த ஆட்களை வைத்திருந்தான். அதைக்கண்ட மன்னன் கினந்து அவனுக்குக் கடும் அபராதம் விதித்தான். தன் கண்முன்னரே தனது சட்டத்தை எவரும் மீற அவன் விரும்பவில்லை.

நாட்டாண்மை நியதிச்சட்டம்

அங்கிச்சட்டம், இளர்ச்சிக்காரரின் பலத்தை அடக்கியதுபோலவே "நாட்டாண்மை நியதிச் சட்டம்" என்ற மற்றொரு சட்டம் நாட்டிலேயுள்ள கொடுமைக்காரரின் தடுக்கையடக்கிற்று. ஐம்பது வருடமாகச் சட்டமன்றங்கள் பயனற்றுப்போயிருந்தன. ஒரு பிரபுவுக்கெதிராக வழக்கு வந்தால் நடுவர் அதில் தீர்ப்புக் கொடுக்கப் பயப்பட்டனர். வழக்கு விசாரணை நடக்கும்பொழுதே பிரபுவின் ஆட்கள் மன்றத்தைச் சுற்றிவளைந்து, நடுவரைப் பயமுறுத்தவும், தேவையானால் வலோற்காரத்திலிறங்கவுந் தயாராயிருந்தனர். இத்தகைய நாட்டாண்மைத் தனத்துக்கு இச்சட்டம் முற்றுப் புள்ளியிட்டது. இந்தப்பயம் நீங்கவே, சாதாரணச் சட்ட மன்றங்களில் நீதி பரிபாலிக்கப்பட்டது.

இசுரார் சேம்பர்

இசுரார் சேம்பர் என்ற உயர் நீதி மன்றத்தை எற்படுத்தியதன் பயனாக ஏழாவது என்றி மற்றுமொரு முற்காப்பு நடவடிக்கையை எடுத்தான். இந்நீதிமன்றம் பாராளுமன்ற விதியினாலேதான் நிறுவப்பட்டது. இருந்தும் அதற்குரிய அதிகாரம் மறைமுகமாக அரசன் கையிலிருந்தே சென்றது. அரசனே நீதிக்கு ஊற்றுகவிருந்தான். சாதாரணச் சட்டங்களின் மூலம் நீதிவழங்கமுடியாத ஆதிக்கம் வாய்ந்த குற்றவாளிகளை அரசன் தானாகவே விசாரணை செய்ய அதிகாரமுடையவனாயிருந்தான். ஆனால் இந்த அதிகாரத்தைப் பயன் படுத்தித் தானே நீதிபதியாயிருக்க அரசன் விரும்ப

(1) இவ்விருதுகள் முறையே உவாவிக்கு, பக்கிங்கம், போவோட்டு, மோபிறே என்பவர்க்குச் சொந்தமானவை.

வில்லை. அரசன் நீதிபதியாயிருந்தகாலம் மலையேறிவிட்டது. எனவே அவனுடைய அதிகாரம் உயர்நீதி மன்றமான இகரார் சேம்பருக்கு வழங்கப்பட்டது. இம்மன்றத்தில், பிரபுநாயகனும் இறைசேரியதிபதியும், கோச் சின்னப்பிரபுவும், ஒரு விசுப்பாண்டவரும், இரு பிரதம நீதியரசர்களும் அங்கம் வகிப்பர். சாதாரண நீதிமன்றங்களால் விசாரணை செய்யமுடியாத உயர் பிரபுக்களும், கனவான்களும் சட்டவிரோதமான செயல்புரிந்தால் அதை விசாரித்து நீதி வழங்குதற்கேற்ற அதிகாரமெல்லாம் இந்த உயர் நீதிமன்றத்தின் கையிலிருந்தது. அபராதம் விதிக்கவும், சிறைத்தண்டனை விதிக்கவும் இதற்கு அதிகாரமிருந்தது. திருத்தியற்ற தீர்ப்பைக்கொடுக்கும் நடுவர்களைப் பார்த்துக்கொள்ளவும் இதற்கு அதிகாரமிருந்தது. சுருக்கமாகக்கூறுவதானால் இந்த நீதிமன்றம், அதிகார பலமுள்ளவர்களின் சண்டித்தனத்திலிருந்து பலமில்லாதார்களைக் காப்பாற்றும் ஒரு நீதி மன்றமாயிருந்தது. ஆனால் பிற்காலத்தில் இது தன் ஆதிநோக்கத்தைக் கைவிட்டுவிட்டுக் கொடுங்கோன்மைக்குப் பக்கபலமாயிருந்தமை நூதனமே.

பிரபுக்களின் வீழ்ச்சி

எனவே களத்திலும், கழுவிலும், முடியின் அதிகாரத்திலும் அகப்பட்டுப் பிரபுக்களின் அதிகாரம் நலிந்துபோயிற்று. அவர்கள் அரசாங்கத்தில் உயர்பதவிகளைத் தமது தனி உரிமையாகக் கொண்டகாலம் மறைந்தது. அரசகுமாரர்களையும் குமாரத்திகளையும் மணஞ்செய்வதன் பயனால் உண்டான செல்வாக்கும் குன்றியது. என்றி புதிய திருமணக் கொள்கை மேற்கொண்டான். இக்காரணங்களால், இப்பெரிய வமிசத்தவரால் அரசுக்குண்டாகக் கூடிய ஆபத்து நீங்கிற்று. ஆனால் அதன் பயம் இன்னும் இருந்தது. தியூடர் மன்னராட்சியில் மக்கள் தளராது மன்னனையே பெரிதும் ஆதரித்தனர். மன்னன் கொடுங்கோலனுக் காணப்பட்டானும், அவனுட்சி பலங்குன்றினால் நாட்டில் மறுபடியும் குழப்பமுண்டாகுமெனப் பயந்து, மக்கள் அவனை ஆதரித்தனர். எனவே இப்பெரிய பிரபுக்களின் வமிசங்கள், அவர்கள் மூட்டிய குழப்பத்தீயிலேயே எரிந்து அழிந்தன. ஆனால் அது அவர்களுக்குமாத்திரமுண்டான கெடுதியேயன்றிப் பொது மக்களுக்கு எவ்வித நட்டமுமுண்டாக்கவில்லை. உரோசு யுத்தங்கள் பொது மக்களைப் பாதிக்கவில்லை. பிரபுக்கள் பிரபுக்களோடு சண்டையிட்டனர். பொதுமக்கள் அதில் ஈடுபடவில்லை. யோக்குக் கட்சியினர் இலங்காசுற்றர் கட்சியிலும் பார்க்கப் பிரபலமடைந்திருந்தனர். இலங்காசுற்றர்கட்சி நெடுங்காலம் ஆட்சி நடத்தியபடியால, அவர்களுடைய கொடுங்கோன்மையை மக்கள் அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் வாய்த்தது. உவேல்சு எல்லைப்பிரதேசத்திலும் வடக்கிலுமிருந்துவந்த அவர்களுடைய ஆதரவாளர், ஒழுங்கு அற்ற அக்காலத்திற்கூட மிகுந்த கொடுமையும், அநீதியுமுடையவராகக் காணப்பட்டனர். அதனால் பணம்படைத்த வியாபாரிகளும், சமாதானமாகத் தொழில்புரியும் வர்த்தகர்களும், நேர்மைமிக்க கைவினைஞரும் இலங்காசுதர் கட்சியை வெறுத்து யோக்குக் கட்சியை ஆதரித்தனர். ஆனால் நேரடியாக ஆதரியாது அனுதாபங்காட்டுவதுடன் தங்கிவிட்டனர். உள்ளூர்க் குழப்பங்கள் ஒருபுறமாக, மற்றும்படி நாடு முன்னேற்றமடைந்தது. கைத்தொழில் படிப்படியாக விருத்தியடைந்தது. பேகண்டியுடன் நடந்த கம்பளிவியாபாரம் இடையறாது நடைபெற்றது. பழைய பட்டினங்களிற் சில மறைந்தன. அவற்றுக்குப் பதிலாகப் பல புதிய பட்டினங்கள் தோன்றின.

3. விதைப்புக்காலம்

ஏழாம் என்றியின் ஆட்சிக்காலத்தில் விதைப்பும் கனைகட்டுதலும் நடைபெற்றவெனலாம். பழங்காலத்தில் உண்டான நோய்களுக்கு இக்காலத்தில் பரிகாரந்தேடப்பட்டது. விதைப்பின் பயனைப் பிற்காலத்தில் நல்ல விளைவுண்டாயிற்று. ஆனால் வருங்கால விளைவுகள் புலப்படாது மறைந்திருந்தன. இங்கே இவ்விதைப்பின் தன்மைகளைவையென்பதைச் சுருக்கமாகக் கவனிப்பாம்.

தியூடர் வல்லாட்சி : பொதுசன ஆதரவு

1. முதன்முதலாகத் தனிப்பலம் வாய்ந்த தியூடர் முடியாட்சி நிறுவப்பட்டது. உரோசு யுத்தங்களினாற் பிரபுக்கள் பலங்குன்றினர்; மக்கள் சபையினர் பெரிதும் மதிப்பிழந்தனர்; நாட்டிலே சமாதானம் நிலவவேண்டுமென்பதே எல்லார் மனதிலும் உண்டான பெருவிருப்பமாயிற்று. நாட்டில் ஒழுங்குண்டானாற்றான் சமாதானம் நிலவும். ஒழுங்கை நிலைபெறச் செய்வதற்குப் பலமுள்ள அரசன் வேண்டும். எனவே அரசை ஆதரிப்பதென நாட்டவர் முடிவு செய்தனர். அரசன் பலமுள்ளவனுகவும், தைரியமுள்ளவனுகவுமிருக்கட்டும்; எல்லாம் நன்றாகும்; அவன் பலமற்றவனாயிருந்தால், அல்லது பட்டத்துரிமையிற் சிக்கலிருந்தால் மறுபடியும் குழப்பமுண்டாகலாம். ஏழாம் என்றி பேராசைபிடித்தவன்; எட்டாம் என்றி நேரத்துக்கொரு குணமும், கொலைக்கஞ்சாக் கொடுமையுமுடையவன். மேரி அரசி கத்தோலிக்க திருச்சபையைச் சேர்ந்தவளாதலால், புரட்சுத்தாந்த மதத்தவரை கொடுமைப்படுத்துபவளாயும் விளங்கினாள். இருந்தும் தியூடர் மன்னர்களுக்கு மக்களின் ஆதரவிருந்தது. தியூடர் மன்னர்கள் வல்லாட்சியாளர்களாயிருந்தனரென்று சில சமயம் கூறப்படுகிறது. பாராளுமன்றத்தின் அதிகாரத்துக்கு அதிகம் அடங்காமல் தாம் நினைத்தபடி தனியாட்சி நடத்தியமையையே இது குறிப்பிடுமானால் அது உண்மையே. சனங்களின் விருப்பத்துக்கு மாறுக அவர்களை அடக்கி அடிமைகளாக்கி அரசுசெலுத்தினர் எனப்பொருள் கொள்வதானால் அது பிழையான அனுமானமெனவே கூறவேண்டும். தியூடர் மன்னர்கள் தனியாட்சி நடத்தியதற்குக் காரணம் இங்கிலாந்து அவர்களிடத்து நம்பிக்கை வைத்தமையும், அவர்கள் தனியாட்சி நடத்துவதே நல்லதென விரும்பினமையுமே.

நிதி விருத்தி

தனியாட்சி வந்தமைக்குப் பல நியாயங்களுண்டு. அதிகாரம் பணத்திலிருந்தே பிறக்கிறது. ஏழாவது என்றியிடம் பணம் நிறைய இருந்தது. அரசனுடைய கருவூலத்தை வளர்ப்பதற்கு அவன் மந்திரிகளான காடினல் மோட்டனும், எமுசனும், இட்டிலியும் பல உபாயங்களைக் கைக்கொண்டனர். நன்கொடையாக ஏராளமான பொருளைக் கட்டாயப்படுத்தி வாங்கினர். முடியின் உரிமையை மீறிக்குற்றஞ் செய்தவர்கள் மீது கடும் அபராதம் விதித்தனர். எட்டாவது என்றி தன் தந்தை சேர்த்து வைத்த பொருளையெல்லாம் வீண் விரயஞ் செய்தபோதிலும், திருச்சபைக்கும், மடங்களுக்குஞ் சொந்தமான திரவியங்களைக் கொள்ளையடித்துப் பெருஞ் செல்வஞ் சேர்த்தான்.

படைபலக் கட்டுப்பாடு

வெடிமருந்தும் பீரங்கியும்

துப்பாக்கி வெடிமருந்து சர்வ சாதாரண உபயோகத்துக்கு வந்தமையும் முடியின் பலத்தை உயர்த்திற்று. நூறு வருடமாகவே இவ்வெடிமருந்தைப் பற்றி மக்கள் அறிந்திருந்தனர். ஆனால் ஆதியிற் செய்யப்பட்ட துப்பாக்கிகளும், பீரங்கிகளும் நன்முக அமையாதபடியால், பழைய அம்புவில்லு, மூற்றுகை எந்திரம் போன்ற படைகளுக்கு ஈடாய் நிற்கமுடியவில்லை. ஆனால் நாளடைவிற் பீரங்கி நல்லமுறையில் அமைந்ததும், பிரபுக்களின் பழைய காவலரண்கள் அவற்றின்முன் நின்று கொள்ள மாட்டாது அழிந்தன. அன்றியும் பீரங்கிப் படை அரசன் வசமேயிருந்தபடியால் எந்தக்கிளர்ச்சிக்காரரும் அரசனே எதிர்த்து நிற்கமுடியாதிருந்தனர். புராதன யுத்த கவசங்கள் குண்டுக்குமுன் செயலற்றன. அன்றியும் ஒருவரின் நிலையை அறிந்து அவரைத் தாக்கும் விவேகம் குண்டுக்குக் கிடையாது! எனவே கவசம் அணிந்த நைற்றுக்கள் பழங்கால யுத்தத்திற் பெற்ற சலுகைகளைப் பீரங்கியுத்தத்திலே பெறமுடியாதிருந்தனர். எனவே எடுத்த நற்கொல்லாஞ் சண்டைக்குச் செல்லும் பழைய கொள்கை மாற்றமடைந்தது.

என்றியின் வியாபாரப்பூட்கை

2. என்றியின் பிற்காலத்தில் அவனுடைய வியாபாரப் பூட்கை ஒருபடி முன்னேற்றமுடையதாயிருந்தது. கம்பனி வியாபாரத்தை விருத்திசெய்ய எண்ணியிருந்தான். 1506 இல் அதற்கு நல்ல சந்தர்ப்பமுண்டானது. பேகண்டியரசனுடைய பிலிப்பின் கப்பல் உடைந்ததால் அவன் இங்கிலாந்துக் கரையில் வந்து உயிர்பிழைக்க நேரிட்டது. அப்பொழுது என்றி அவனைக் கொண்டு ஒரு வியாபாரப்பொருத்தனையிற் கையொப்பமிடுவித்தான். இதன் பயனாக இங்கிலாந்து மிகுந்த சாதகமான நிபந்தனைகளிற் கம்பனி ஏற்று



மாநிலச் சென்ற பாதைகள்.

மதி செய்யக்கூடியதாயிற்று. இதனால் பிளெமிங்குவாசிகள் இந்தப் பொருத்தணையைத் தீய பொருத்தணையெனப் பொருள்படும் " மாலுசு இண்டர்கேசுசு " என வருணித்தனர்.

கப்பலோட்டல் விதிகள்

இரண்டாம் இரிச்சட்டுகாலத்திலும் நாலாம் எட்டுவேட்டு காலத்திலும் நிறைவேற்றப்பட்ட பழைய கப்பலோட்டல் விதிகளே என்றி நடைமுறையிற் கொண்டுவந்தான். இதன் பிரகாரம் வெளிநாட்டு வியாபாரத்துக்கு ஆங்கிலக் கப்பல்களைப் பயன்படுத்த வேண்டும். குறிப்பாகக் காசுகனியிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உவைன் முழுவதையும் ஆங்கிலக் கப்பல்களிற் கொண்டுவரவேண்டியிருந்தது. இதனால் கப்பற் போக்குவரத்தின் தனியுரிமையை உடைய ஆங்கிலக் கப்பற்காரரின் கூலி அதிகமாயிருந்தபோதிலும், அவர்களுக்கு இருந்த வியாபாரக் கப்பல்களின் தொகைபெருகிற்று.

புதியவுலகம் : " சமுத்திர " வர்த்தகம்

எழாம் என்றியின் ஆட்சிக் காலத்திலேதான் செனோவாவைச் சேர்ந்த கடலோடியான கொலம்பசு இபெயினின் சார்பிற் புதிய உலகத்தைக் கண்டு பிடித்தான் (1492). அத்துடன் வசுகொடிகாமா நன்னம்பிக்கை முனையைச் சுற்றிவந்ததும் போத்துக்கலின் நன்மையை முன்னிட்டுக் கீழ்த்திசை நாடுகளுக்குப் போகமார்க்கங் கண்டுபிடித்ததும் இக்காலமே. (1497) இச்சம்பவங்களைப் பார்த்துக்கொண்டு இங்கிலாந்து சும்மா இருந்துவிடவில்லை. 1497 இல் பிரிசுதலிலுள்ள சில வியாபாரிகள் ஓர் ஆங்கிலக் கப்பலை யமைத்து, யோன்கபற்று, செபசுத்தியன் கபற்று என்ற வெனீசியத் தலைவரிருவரின் முதன்மையில் அமெரிக்கப் பெருநிலத்தையடைந்தனர். இப்புதிய கண்டுபிடிப்புக்களின் பயன் உடனே வெளிப்படவில்லை. சிறிது சிறிதாகவே வெளிப்பட்டது. ஆனால் மாற்றங்கள் உண்டானபோது பெரும் பயன் விளைந்தது.

ஆங்கிலக் கடலோடிகள் : கபற்று சகோதரர்

" கடல் மார்க்கமாக " நடைபெற்ற வியாபாரம் " சமுத்திர மார்க்கமாக " வளர்ச்சியடைந்தது. இதுகாறும் நிலம் சூழ்ந்த மத்தியதரைக்கடல் போன்ற கடல்களே யடுத்து நடைபெற்ற வியாபாரம் அத்திலாந்திக்குச் சமுத்திரம் போன்ற பெரிய சமுத்திரங்களின் மார்க்கமாக நடைபெறத் தொடங்கிற்று. இவ்வாறு வியாபார மார்க்கங்கள் மாற்றமடைந்தமை இங்கிலாந்துக்குப் பெரிய நன்மைக்கேதுவாயிற்று. மத்தியதரைக் கடலானது வியாபாரத்துக்கு முக்கியமான மார்க்கமாயிருந்த காலத்திலே இங்கிலாந்து வெகு தூரத்திலிருந்தது. அத்திலாந்திக்குச் சமுத்திரம் பிரதானமார்க்கமானதும் அது

அமமார்க்கத்தின் வாசற்படியில் அமைந்தது. இவ்வாறே சமுத்திரத்தை யடுத்தல இராச்சியங்கள் விருத்தியடைந்தன. இங்கிலாந்து, பிரான்சு, இபெயின், நெதலந்து என்பன முன்னேறின. வெனிசு, செனோவா, என்பனவும், மத்திய தரைக்கடலையடுத்த ஏனைய துறைமுகங்களும் வீழ்ச்சியடைந்தன. எழாம் என்றியின் ஆட்சியில் விதைகள்மட்டும் ஊன்றப் பட்டன. ஆனால் பல ஆண்டுகளின் பின்னர் விளைவுண்டானபோது இங்கிலாந்து நன்மையையடைந்தது.

புதிய கல்வி : ஆராய்ச்சி உளப்பான்மை : ஒட்சுபோட்டிற் கிரேக்கமொழிப் பயிற்சி

3. புதிய கல்வியும் அவ்வாறேயமைந்தது. இரண்டாவது பிறப்பு என்று சொல்லக்கூடிய " மறுமலர்ச்சி " இத்தாலியில் ஆரம்பித்துப் பின்னர் அது ஏனைய நாடுகளுக்கும் பரவிற்று. அவ்வாறு நாடுகளிலெல்லாம் கல்வியில் ஒரு ஊக்கத்தை உண்டாக்கிற்று. பழைய செம்மொழிகளிற் பயிற்சியையும் உண்மையை அறிவதில் ஆர்வத்தையும் மலர்வித்தது. ஆரம்பத்தில் இப்புதிய கல்வி, பழைய நம்பிக்கைகளில் எவ்வித அவநம்பிக்கையையும் கொண்டுவரவில்லை. பல போப்பாண்டவர்கள் புதிய அறிஞர்களுக்கு ஊக்கமளித்து ஆதரவு வழங்கினர். ஆனால் சில அறிஞர்கள் கிரேக்க. உரோமப் பண்பாட்டில் ஆர்வமுற்றுச் சமயத்துக்கு விரோதமான கருத்துக்களைக் கூறமுற்பட்டபோது, பிடிவாதமுள்ள பிள்ளைகளைப் பெற்றோர் எவ்வாறு கவனக் குறைவாக நடத்துவார்களோ அவ்வாறே திருச்சபையும் அவர்களை நடத்திற்று. ஆனால் இப்புதிய ஆராய்ச்சிமுறை, செம்மொழிநூல்களோடு நிற்கவில்லை; சமயக் கொள்கைகளையுங் கண்டிக்கத் தலைப்பட்டது. இது ஆபத்தானதல்லாவிட்டாலும் விரும்பத்தக்கதன்றெனப் போப்பாண்டவர் கருதினர். எனவே புதிய கல்விக்கும் சமயவாதிகளுக்கும் ஒற்றுமை உண்டாகாதபடியால் அவர்கள் மெதுவாகப் பிரிந்துகொண்டனர். எழாம் என்றியினுட்சிக்காலத்தில் இப்பிரிவு உண்டாகவில்லை. ஒட்சுபோட்டுச் சர்வகலாசாலையில் கிரேக்கமொழி போதித்த குரோசினும் இலினக்கரும், எற்பாட்டைப் பயிற்றிவந்த கொலெற்று என்பவரும், **கல்வியைப்** பரப்புவதிலேயே கருத்துச் செலுத்திவந்தனர். ஆனால் பிளெமிசு அறிஞரான எராசுமசு என்பவரிடத்து வருங்காலத்திலுண்டாகக் கூடிய மாற்றங்களின் குறிகள் காணப்பட்டன. பாதிரிமாரின் சமயக்கொள்கைகளை எராசுமசு கண்டிப்பதற்கு என்றுந் தயாராயிருந்தார். பாதிரிமாரின் கல்வி, பழைய முறையிலமைந்ததோடு அறிவிக்கு ஒவ்வாததாயுமிருந்தது என்பது உண்மையே. ஆயினும் நம்பிக்கையின் அடி அத்திவாரத்தைத் தகர்க்கும் ஆயுதம் பரிகாசமே. எராசுமசு புரட்டசுத்தாந்த சமயத்தை என்றுந் தழுவினாரில்லை. ஆனால் அதற்கான வித்தை அவர் தமது மாணாக்கரிடையே பரப்பியிருந்தார். அவ்விதை நிலத்தில் முளைகொண்டது.

குலமுறைத் திருமணங்கள்

4. குலமுறைத் திருமணம் பற்றிய கொள்கைகளும் இவ்வாறே முளை கொண்டன. இவை பெருஞ் செல்வத்துக்கேதுவாயும், இராச்சியங்களை விவாகத் தொடர்பினால் இணைப்பவையுமான அரச திருமணங்களே. நாட்டினவுணர்ச்சியின் வளர்ச்சியையடுத்து இத்தகைய திருமணப்பூட்கை தொடர்ந்தமை பொருந்துவதன்றேயென முதலில் எமக்குத் தோன்றும். அத்திருமணப் பூட்கை, நாட்டினங்களின் பூட்கைபற்றி நாம் கொண்டுள்ள கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுனதாதலின்.

பதினைந்தாம், பதினாறும் நூற்றாண்டுகளில் அரசன், ஒரு பதவி வகிக்கும் உத்தியோகத்தன் என்ற முறை ஏற்படவில்லை. அவனே நாட்டின் கொள்கைகளை ஆற்றுப்படுத்தினான். அவனுடைய அயல்நாட்டு நட்புகள் திருமணத்தில் நிறைவேறுவது இயல்பே. புதிய ஆணிலங்களைச் சேர்த்துக் கொள்வதற்குக் கல்யாணம் ஒரு சாதனமாயிருந்தது. அது இலேசானமுறையாகவுங் காணப்பட்டது. எனவே அரசரிளஞ்சர்கள் எல்லோரும் கலியாணத்தாகராகவுங் கடமைபூரிந்தனர். இத்தகைய அரசியல் விவாகச் சம்பிரதாயத்தை ஒரு தேசத்தவர் எதிர்க்கலாம். ஆனால் அதையிட்டு விவாக ஒழுங்கு செய்த அரசரிளஞரோ அரசரோ, அதிகம் அக்கறை கொள்ளார். பதினாறும் நூற்றாண்டின் பெரும்பகுதியில் ஐரோப்பிய சரித்திரத்தைப் பெரிதும் பாதிப்பதற்கு எதுவாயிருந்த குலமுறைத் திருமணங்கள் பலவற்றை இங்கிலாந்து செய்யத் தொடங்கிற்று. இக்காலப் பகுதியின் ஐரோப்பிய சரித்திரம் இந்த விவாகத் தொடர்புகளிலேதான் தொங்கிக்கொண்டிருக்கிறதெனச் சொல்லலாம்.

இத்தாலியிற் பிரான்சியர்

பேரரசனும் சிபெயினும் ஆங்கிலர் நட்பை விரும்பல்

எட்டாவது சார்ளசுமன்னன் இத்தாலிமீது படையெடுத்துச் சென்றதைப் பற்றி எலவே கூறியுள்ளோம். 1494 இல் இப் பிரெஞ்சுப் பேரரசன் மிலான், செனுவா, புளோரன்சு என்னும் அரசுகளோடு சேர்ந்துகொண்டு, இத்தாலிக்கூடாக ஒரு சேனையை அனுப்பி, நேப்பிள்சு இராச்சியத்தைக் கைப்பற்றினான். இவனுடைய துணிவும், இலகுவில் வெற்றியீட்டியமுறையும் எல்லாரையும் பயமடையச் செய்தன. மாட்சிமிலியன், பேரரசன் என்ற முறையில் மிலான் இராச்சியத்தில் உரிமை உடையவன். சிபானியபேடினந்து நேப்பிள்சுமீது உரித்துடையவன். மலையைத்தாண்டி இத்தாலியை நோக்கி வந்த திடீர்த் தாக்குதலையெண்ணிப் போப்பாண்டவர் அச்சமடைந்தார். திடீரென்று முன்னேறிச் செல்லும் இந்தக் கொடிய பிரெஞ்சு மன்னனிடமிருந்து அவரைக் காப்பாற்றுவதற்காக எல்லாரும் முயற்சி செய்தனர்.

பிரான்சுடன் இயல்பாகவே விரோதம் பாராட்டி வருந் தேசம் இங்கிலாந்து. எனவே இவர்களெல்லாரும் எழாவது என்றியுடன் நட்புறவு செய்ய முயன்றனர். இங்கிலாந்து விரும்பினால் பிரான்சை உள்ளூர் யுத்தங்களில் ஈடுபடுத்த முடியுமென்றும் அவ்வாறு பிரான்சு ஈடுபடுமானால் இத்தாலியில் அது தலையிடமாட்டாதென்றும் இவர்கள் எண்ணினர். என்றி இவர்களோடு சேரவிரும்பினான். ஒரு நூற்றாண்டாக நாட்டுக்குத் தொல்லை கொடுத்து வந்ததும், ஈற்றில் நன்மையைப் பயந்ததுமான குலமுறைத் திருமணங்களில் முதல் நடவடிக்கையை இங்கிலாந்து எடுத்தது.

இங்கிலாந்து இவ்வாறு தொடர்புகொண்ட விவாகங்களைப் பற்றி அறியாவிட்டால் இக்கால வரலாற்றை அறிந்துகொள்வது முடியாத காரியமாகும்.

சிபெயினும் அபிசுபேக்குக் குடும்பமும்

சிபெயினுக்கும் இங்கிலாந்துக்கு மிடையே மணப்பேச்சு

அரகன்நாட்டுக் கதரீன இளவரசன் ஆதரும், அவனுக்குப்பின்னர் இளவரசன் என்றியும் மணஞ்செய்தல்

முதலில் அரகன் தேசத்தைச் சேர்ந்த பேடினந்துக்கும் கசுற்றீலைச் சேர்ந்த இசபெல்லாவுக்கும் நடந்த விவகாமே இசுப்பானிய இராச்சியம் உருப்பெறுவதற்குக் காரணமாயிருந்தது. அதற்குமுன் சிபெயின் பற்பல சிறுச்சிறு இராச்சியங்களாகப் பிரிந்திருந்தது. அதே காலத்திலே ஒசுத்திரியாவைச் சேர்ந்த மாட்சிமலியன் (அபிசுபேக்குக் குடும்பத்தைச் சேர்ந்தவர்) பேகண்டியைச் சேர்ந்த மேரியை விவாகஞ் செய்தார். இதன் பயனகத் தீரன் சார்ளசு மன்னனின் பேகண்டி இராச்சியமும் நெதலந்தைச் சேர்ந்த வேறு நாடுகளும் அபிசுபேக்குக் குடும்பத்துக்கு உரிமையாயின. மாட்சிமிலியனுக்கு ஒரே ஒரு மகனிருந்தான். அவன் அழகிய பிலிப்பு என்ற பெயருடையவன். சிபானிய அரச தம்பதிகளின் மகளும் பட்டத்துக்குரிமையுடையவளுமான யுவானை என்பவள் இந்தப் பிலிப்பை வதுவை செய்தாள். இதன்பயனக அபிசுபேக்குக் குடும்பத்தினர் சிபெயினுக்கு வந்து சேர்ந்தனர். எனவே பிலிப்புக்கும் யுவானைவுக்கும் பிறந்த சூழந்தையான சார்ளசு (பிறப்பு 1500) ஏராளமான ஆணிலங்களுக்கு உரிமையுடையவனனான். சிபெயினும், ஒசுத்திரிய இராச்சியமும், பேகண்டியும் நெதலந்தும் இத்தாலியிலுள்ள பிரதேசங்களும், கடல்கடந்துள்ள பிரானிய நாடுகளும் அவனுக்கே உரித்தாயின. எழாம் என்றிக்குயுவானை இளவரசியின் இளைய சகோதரியான அரகன் தேசத்துக் கதரீனவழங்கினர். என்றி அவளைத் தனது மூத்தகுமாரனை ஆதருக்கு மணஞ்செய்தான்.

ஆனால் மணமகன் ஒரு வருடத்துள் 1502 இல் இறந்துவிட்டான். எனவே அவனுடைய இரண்டாம் மகனை என்றிக்கு அவள் மறுபடி வாழ்க்கைப் பட்டாள். இவனே பிற்காலத்தில் எட்டாம் என்றி மன்னனுயினன்.

பிரான்சுடன் விரோதம்

எத்தாப்பிள்சுப் பொருத்தனை

கொத்துலாந்துடன் திருமண நட்புறவு.

இவ்விவாகத் தொடர்பினால் இங்கிலாந்தின் எதிர்கால நயநட்டங்கள் எல்லாம் இசுப்பெயினுடனும் ஒசுத்திரியாவுடனும் பிணைக்கப்பட்டன. பிரான்சுக்கெதிராக இங்கிலாந்தின் ஆதரவை அந்நாடுகள் பெற்றுக்கொண்டன. இவ்விவாகத் தொடர்பினால் இங்கிலாந்திலே சமயச்சீர்திருத்தமும், மேரி அரசி புறச்சமயத்தவர்க்கெதிராய் நடத்திய கொடுமைகளும் வருங்காலத்தில் உண்டாகவிருந்தன. இவை எதிர்பாராத பெரிய சம்பவங்களாகும். என்றி எலவே பிரான்சுக் கெதிராகக் கங்கணங்கட்டிக் கொண்டான். தான் பிரான்சுக் கெதிராய் யுத்தத்திலீடுபட்டிருப்பதாகக் காட்டிக்கொள்ளும் நோக்கத்துடன் **1492** இல் ஒரு படையை அனுப்பிக் கப்பல்களைத் தடுத்துப் புலோன் நகரை முற்றுகையிட்டான். ஆனால் இந்த யுத்தம் பெயரளவில் மாத்திரமே நடைபெற்றது. எத்தாப்பிள்சுப் பொருத்தனையின் பயனுகச் சமாதானம் ஏற்படுத்தப்பட்டது (1492). பிரெஞ்சு மன்னன், என்றிக்கு நட்டஈடாக ஏராளமான பணம் வழங்கினன். அத்துடன் அதுவரை பேக்கின் உவாபெக்கு என்ற போலியுரித்தாளை ஆதரித்தமையையும் கைவிட்டான். இவ்வாறு என்றி பெருஞ் செல்வத்தையும், முன்னையிலுங்கூடுதலான பாதுகாப்பையும் பெற்றுவிட்டான். இவ்வளவோடு திருத்தியடையாமல் அபிசுபேக்குக் குடும்பத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் பிரான்சு மீது மற்றுமொரு தாக்குதலைச் செய்ய முற்பட்டனர். பிரான்சு இங்கிலாந்தின் விரோதியாயிருந்தபடியால் கொத்துலாந்துடன் நட்புக்கொண்டிருந்தது. எனவேபிரான்சுக்கும் கொத்துலாந்துக்குமிடையிற் பகை உண்டாக்கிப் பிரான்சைத்தனிமைப் படுத்தல் உயர்ந்த அரச தந்திரமாகும். எனவே ஏழாம்என்றியின் மூத்த மகளான மாகரெட்டைக் கொத்துலாந்தரசனை நாலாம் சேமிசுக்கு மணம் பேசினர். சேமிசு அம்மணத்தை விரும்பி ஏற்றுக்கொண்டான் (1502).

இவ்வாறு இங்கிலாந்தை ஐரோப்பாவில் மிக உன்னத நிலைக்கு உயர்த்திய பின்னர், ஏழாம் என்றி இறந்தான். தான்போட்ட திட்டங்களைச் செயற் படுத்தும் பணியினை தன்மகனுக்கு விட்டுச்சென்றான்.



2 ஆம் அதிகாரம்

எட்டாம் என்றி (1509–1547)

1. உவுல்சி

எட்டாம் என்றியின் ஆட்சி : பிரிவுகள்

எட்டாம் என்றியின் நீண்ட ஆட்சிக்காலம் இரண்டு பகுதியாகப் பிரிகின்றது. முதற் பகுதியில் வெளிநாட்டு அலுவல்களில் அதிக கவனஞ் செலுத்தப்படுகிறது. பிரான்சுக்கும் சிபெயினுக்கும் இடையே போட்டி; பேரரசுக்கும் போப்பாண்டவர்களுக்குமிடையே சூழியற் போராட்டம்; இவையெல்லாம் முதற்காலப் பகுதியைச் சேர்ந்தவை. இரண்டாங் காலப் பகுதியில் சமயச் சீர்திருத்தமுண்டாகிறது. இவ்விரு காலப் பகுதியையுந் தொடர்புறுத்துவது என்றியின் விவாக நீக்கப் பிரச்சினையாகும். இரு காலப் பகுதிகளும் தனித்தன்மை வாய்ந்தமையால் ஒன்றுக்கொன்று வேறுபாடுடையன. முதற்காலப் பகுதி பெருமைமிக்கதாய்க் காணப்பட்டாலும் உண்மையில் உருப்படியான பயனைக் கொடுக்கவில்லை. எவ்வளவோ சூழ்ச்சிகளும் திட்டங்களும் நட்புறவுகளும் செய்யப்பட்டபோதிலும், கைமேற் பலன்கிடைக்கவில்லை. இரண்டாவது காலப்பகுதி ஆங்கில சரித்திரம் முழுவதிலும் மிக முக்கியமான காலமெனலாம். முதற்பகுதி பலவகையிற் பயனற்றதாயிருந்தபோதிலும் ஒரு விடயத்தைக் கருதுமிடத்து அது சிறந்ததெனலாம்; உவுல்சியிருந்த காலம் அது; ஐரோப்பிய அரசியல் அரங்கில் இங்கிலாந்தும் முக்கியமான இடத்தைப் பெறச்செய்த முதல் அரசறிஞன் உவுல்சியேயாகும் (குறிப்பு 41).

இத்தாலியின் சிறப்பு : இங்கிலாந்துக்குச் சிறப்பிடம் அளிக்கப்படாமை

நாட்டினவரசுகள் இக்காலத்திற்முன் றேன்றின. தோன்றுதற்குக் காரணம் நாட்டினவுணர்ச்சி; ஐரோப்பிய அரசியலிலே தோன்றிய புதிய அமிசம் இதுவேயென்பதை எலவே குறிப்பிட்டுள்ளோம். மத்திய காலத்தில் நிலவிவந்த கிறித்தவ உலகு, போப்பாண்டவர் தலைமை, பேரரசின் முதன்மை என்ற கருத்துக்களோடு இப்புதிய கருத்து அப்பொழுதும் போட்டியிட்டபடியேயிருந்தது. எனவே அரசியலின் முக்கிய அரங்கு இத்தாலியிலேயே அமைந்தது. ஆனால் இங்கிலாந்துக்கு அங்கே நேரடியான உரிமைகளோ பற்றுக்களோ இடையா. போப்பாண்டவர், பேராசர் என்போரைப் பொறுத்தவரைகிறித்தவ உலகிலே இங்கிலாந்துக் குச்சிறப்பான இடம் இருக்கவில்லை. கொன்சுதான்சு மாநாட்டிலே (1414)

ஒவ்வொரு நாடும் தனித்தனி வாக்களித்த பொழுது, இங்கிலாந்து ஒரு தனி நாடெனக்கருதப்படவில்லை. சேர்மனியோடு அது ஒன்றுகச் சேர்த்தெண்ணப்பட்டது.

உவுல்சியின் பூட்கையாலுண்டான விளைவு : ஐரோப்பிய அரசியலில் இங்கிலாந்து

ஐரோப்பிய அரசியல் விவகாரங்களுக்கு மத்தியதானமாயிருந்தது இத்தாலி. உவுல்சி இவ்வரசியலிலே தலையிட்டதன் பயனாக இங்கிலாந்துக்கு முக்கியமான இடத்தை உண்டாக்கிவிடலாமென எண்ணினான். ஒரு தேசத்துக்கெதிராக மற்றொரு தேசத்தைப் பிணங்கவைத்து, அதன் பயனாக ஐரோப்பிய அரசியலில் இங்கிலாந்து சிறிது காலமாகச் செல்வாக்குப் பெற்றது. ஈற்றில் என்றியின் விவாக நீக்கத்துக்கு ஓரளவு தடையாயிருந்தது இத்தாலிய அரசியலே. இதுவே உரோமுடன் இங்கிலாந்து தனக்கிருந்த தொடர்புகளைத் துண்டித்துக்கொள்வதற்கும், சமயச் சீர்திருத்தத்தை உண்டாக்குவதற்கும் காரணமாயது.

எட்டாம் என்றியின் ஆரம்பப் பூட்கை

எட்டாவது என்றியின் ஆட்சியில் முதலிருபது ஆண்டுகளில், சூழியலறிஞர்யாவரும் இங்கிலாந்தின் அரசியல் நோக்கங்களை முக்கிய பிரச்சினையாக ஆராய்ந்தனர். அத்துடன், அதன் சூழியல், இங்கிலாந்திற் றேன்றிய மிகப் பெரிய சூழியலறிஞருள் ஒருவன் கையிலிருந்தமையாலும் என்ன பலனைக் கருதி இந்த அரசியற் சூழியலை இங்கிலந்து கையாண்டதோ அப்பலன் கிடைக்காது போனபோதிலும், நிகழ்ச்சிகளின் போக்கை அறிந்து கொள்வது அவசியமாகும்.

பிரான்சுமீது தாக்குதல்

என்றியின் ஆரம்பப் பூட்கை பிரான்சைத்தாக்குதல் ஆகும். வெளி நாட்டு அரசியல் நிலைமை இதற்கு வாய்ப்பளித்தது. எட்டாவது சார்சின் இத்தாலியப் படையெடுப்பின்பின்னர் அங்கே குழப்பம் தாண்டவமாடிற்று. கான்பிரேக்கூட்டவையின்படி பிரான்சும், சிபெயினும் போப்பாண்டவரும் ஒன்று சேர்ந்து வெனிசைத் தாக்க முற்பட்டனர். ஆனால் இப்பொழுது அவர்களிடையே பிணக்குண்டானது.

இரண்டாம் யூலியசு என்ற போப்பாண்டவர் இத்தாலியிலிருந்து பிரெஞ் சுக்காரரை வெளியே கலைக்க எண்ணிப் பரிசுத்த கூட்டவையொன்றை அமைத்தார்.

என்றி பரிசுத்த கூட்டவையிற் சேர்தல் : பிரான்சுமீது படையெடுப்பு (1511–13) : தோமசு உவல்சியும் அவனுடைய புதிய பூட்கையும்

பிரெஞ்சு யுத்தத்தில் உவல்சியின் வெற்றி : பிரெஞ்சு நட்புறவு : அரசவின் சகோதரியின் மணவினை

இக்கூட்டவையிற் சேர்ந்து பிரான்சைப் பின்புறத்திலிருந்து தாக்குமாறு தனது மருகனை எட்டாவது என்றியை இசுப்பானிய மன்னனை பேடினந்து ஊக்கப்படுத்தினன். புகழ்பெற வேண்டுமென்று ஆசைப்பட்ட என்றி அதற்கு இணங்கினன். 1511 இல் இனே மீது படையெடுத்துப் பலன் கிட்டவில்லே. 1513 இல் நடத்திய படையெடுப்பிலே தெருன், தூர்னை என்ற இருநகரங்கள் கைப்பற்றப்பட்டதுடன் சுபோர் அமரில் வெற்றியுங் கிடைத்தது. பிரான்சுடன் நட்புப் பூண்ட கொத்துலாந்து இங்கிலாந்து மீது படையெடுத்தது. புனொடன் யுத்தத்திலே கொத்துலாந்துப் படை படுதோல்வியடைந்தது. எல்லா வேலேயையுந் தானே தனித்துச் செய்துவர, பேடினந்தும் மாட்சிமிலியனும் பலன் முழுவதையும் பெற்று வருகிறார்களென உணர்ந்த என்றி நட்புறவைக் கைவிட்டு, விலகி நின்றான்.

இத்தருணத்திலேதான் உவல்சி அரசியலிலே தலையிட்டுப் புகழ்பெற்றான். இதுவரை எல்லாம் பழைய முறையிலேயே நடைபெற்றன ; இனேயில் இழந்த பகுதிகளைத் திரும்பப் பெற்றுக்கொள்ளும் முயற்சி, பழைய எதிரியான பிரான்சுடன் போர், அதன் பயனுகப் பழைய பகைநாடான கொத்துலாந்து எல்லேப் புறங்களிலிருந்து படையெடுத்தல் ; இவற்றோடு சம்பந்தப்பட்ட சூழியலினும் யுத்தத்துக்குச் செய்த ஆயத்தங்களினும் உவல்சிக்குத் திடீரெனப் பெரிய புகழுண்டானது. ஒட்சுபோட்டுமோட்டினல்கல்லாரி இனைவுமையாளனும் இலிமின்றன் மடாதிபதியும், கந்தபரி புரோகிதனும், ஏழாம் என்றியின் அரச குருவுமான உவல்சி, எட்டாம் என்றியில், வேலேகொடுத்து வேலேக்கேற்ற சன்மானம் வழங்கும் நல்ல எசமானனைக் கண்டான். 1513 இல் படையெடுப்புக்கான ஒழுங்குகளெல்லாம் சீரிய முறையிலே உவல்சி செய்தபடியால் அதற்குப் பிரதியுபகாரமாக மன்னன் அவனைத் தூர்னை விசுப்பாண்டவராகவும் அடுத்த ஆண்டு இலிங்கன் விசுப்பாண்டவராகவும் நியமித்தான். மேலும் அவனிடத்துப் பூரண நம்பிக்கையும் வைத்தான். இராச்சிய பாரத்தை வகிப்பதற்குப் புதியவொரு அரசியல் நிபுணன் இவ்வாறு தோன்றி, அரசியல் அலுவல்களில் முற்றுயெதிர்பாராதவொரு திருப்பத்தை யுண்டாக்கினன். பிரான்சை எதிர்க்கும் பூட்கையைக் கைவிட்டு அதனேடு நட்புக் கொண்டான்

சிபெயினுக்கு எதிர்ப்பு

மாட்சிமிலியன் மீதும் பேடினந்து மீதும் கோபங்கொண்டிருந்த என்றி உவல்சியின் திட்டங்களே வரவேற்றான். சந்தர்ப்பம் விரைவில் வந்தது. பன்னிரண்டாம் உலாயி மன்னனின் பட்டத்தரசி இறந்தாள். புதியவொரு

இல்லக்கிழத்தியை அவன் திருமணஞ் செய்ய எண்ணிக்கொண்டிருக்கையில், உவல்சி, எட்டாம் என்றியின் இளைய சகோதரியான மேரியைப் பரம இரகசியமாக மணம்பேசி ஒழுங்கு செய்தான். அரசனுக்கு வயது ஐம்பத்திரண்டு ; மணமகளுக்குப் பதினேழு ; இருந்தும் அரசறிஞனுக்கு இத்தகைய பொருத்தக் குறைகளேப்பற்றி அக்கறை கிடையாது. தனிப்பட்டவர்களின் சொந்த விருப்புவெறுப்புக்கள் அரசியற் சூழ்ச்சியில் இடம் பெறுவதில்லே. இந்தச் சூழ்ச்சி மிகத் திறமைவாய்ந்தது. தந்திரமும் அமைதியும் விரைவும் பொருந்திய சிபானிய சூழியலறிஞர்களேயும் இத்தாலிய சூழியலறிஞர்களேயும் போன்ற ஒரு விற்பன்னன் இங்கிலாந்திலுமிருக்கிறான் என்பதை இது காட்டியதுமன்றி இங்கிலாந்தைப் பிரான்சுடன் நட்பாயிருக்கவுஞ் செய்தது. இதன்பயனுகப் புதியவொரு அன்னிய நாட்டுப்பூட்கை உருவாயிற்று. சிபெயின் இங்கிலாந்தின் எதிரியாகவும், கடலிலும், புதிய உலகத்திலும் அதனே இங்கிலாந்து எதிர்த்துக் கொள்ளவும் வேண்டிய நிலேமை படிப்படியாக உண்டாகி அதுவே இங்கிலாந்தின் அன்னிய நாட்டுப்பூட்கை மரபாக நிலேநாட்டப்பட்டது.

இங்கிலாந்துடன் நட்புக்கொள்ள ஆவல்

இவ்வாறு நாளடைவிலுண்டான விளேவுகள் தெளிவுடையனவாகவும் பாரதூரமான பலாபலன்களேயுடையனவாகவுமிருந்தன. ஆனல் உடனடியாக ஏற்பட்ட விளேவுகள் குழப்பமுடையனவாய் உருப்படியான நன்மை பயக்காதனவாய் இருந்தன. அதாவது உவல்சியின் அரசறிவு காலப்போக்கிலேதான் தெளிவு பெற்றது. அந்நாளில் உவல்சியின் அரசியற்றிறமை அவனுடைய சூழியலினல் மறைக்கப்பட்டது. உடனுக்குடன் நடக்கும் நிகழ்ச்சிகளே ஆராய்ந்து அவற்றுக்கேற்றவகையிற் சூழியலேக் கையாள வேண்டியதாயிருந்ததால் அச்சூழியல் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதாகவும் தோற்றியது. பரிசுத்த கூட்டவையிலிருந்து இங்கிலாந்து விலகிப் பிரான்சுடன் நட்புக்கொண்டதன் முதற் பயன், ஐரோப்பிய அரசியல் விவகாரங்களிலே இங்கிலாந்து முக்கியம் வாய்ந்ததென்பதை உலகுக்கு அறிவுறுத்தியமையே. அதையறிந்த சூழ் வல்லோரெல்லாரும் இங்கிலாந்தின் நட்பை விரும்பினர்கள். எந்தப்பக்கத்துக்கும் வெற்றி தரக்கூடிய செல்வாக்குடையதாயிருந்தது இங்கிலாந்து. இந்த அதிகார நிலேமை பேணுதற்குப் பக்கச்சார்பின்றியிருப்பது, அல்லது அவ்வாறிருப்பதாகக் காட்டிக்கொள்வதுதான் சிறந்த ஒரே ஒரு வழியென உவல்சி கண்டான். ஒருபக்கத்தின் சார்பாகத்திடமாய் நிச்சயிப்பதனல் அவ்வாறு நிச்சயிக்கும் சந்தர்ப்பத்தினுலுண்டான அதிகாரம் நழுவி விடுமென அவன் எண்ணினன். உவல்சியின் பூட்கை சில சமயம் பிரான்சுக்குச் சார்பாயுஞ் சில சமயம் சிபெயினுக்குச் சார்பாயும் ஊசலாடினலும் முக்கியமான நெருக்கடி காலங்களில் பிரான்சுக்குச் சாதகமாகவே அவன் நின்றான்.

முதலாம் பிரான்சிசு : பன்னிரண்டாம் உலூயியும் (1515) பேடினந்தும் (1516) இறத்தல் : சிபெயினின் சார்ளசு : 1516 இல் செய்யப்பட்ட அமைதிப்பொருத்தனை

வரலாற்று நிகழ்ச்சிகளைச் சுருக்கமாக ஆராய்ந்தால் இவ்விடயம் தெளிவாகத் தெரியும். பன்னிரண்டாம் உலூயி மன்னனுக்கு மேரி அரசிளங் குமரியைத் திருமணஞ் செய்த இராசதந்திரத்தின் பயன் முற்றுமுன்னர் 1515 இல் அரசன் இறந்து போனான். அவனுக்குப் பின் அரசனான முதலாம் பிரான்சிசு பேராசை கொண்ட இளைஞன். மிலான் இராச்சியப் பிரிவைத் திரும்பப் பெற்றுவிடவேண்டுமென்ற நோக்கங்கொண்டு அவன் திடீரெனப் போரிலிறங்கினான். மாரிஞானுக்கு கோமகனுக்கு நட்புறவான சுவிசுப் படைகளைத் தோற்கடித்தான். பிரான்சு மறுபடியும் பலம் பெற்று எழுந்துவிடுமோவென்று வேண்ய ஐரோப்பிய அரசுகள் பயந்தன. அடுத்த ஆண்டிலே அரசன் தேசத்துப் பேடினந்து இறக்கவே அவனுடைய பேரப்பிள்ளையான சார்ளசு அரசுகட்டிலேறினான். அதன்பயனாகப் பேகண்டி, நெதலந்து, சிபெயின், சிசிலி ஆகிய இராச்சியங்களெல்லாவற்றுக்கும் அவனே அரசனானான். இது மற்றை அரசுகளுக் கெல்லாம் பயத்தைக் கொடுக்கக்கூடிய பெரும் ஆள்புலப்பகுதியாகும். இந்த ஆபத்தை அகற்றும் நோக்கமாக உவல்சி, பிரான்சுடன் ஓர் நட்புறவு செய்தான். பிரெஞ்சு மன்னனின் மூத்த குமாரனுக்கு என்றியின் மகள் மேரியாகிய இளங்குழந்தையை விவாகஞ் செய்ய வாக்களித்தான். போப் பாண்டவர், பேரரசன் ஆகியோரையும் பிரான்சு, சிபெயின், கொத்துலாந்து நாடுகளையும் ஒன்று சேர்த்து மிகுந்த திறமையுடன் சர்வதேச அமைதிப் பொருத்தனை ஒன்று செய்தான். ஐரோப்பிய அரசியல் விவகாரங்களில் இங்கிலாந்து நடுநாயகமாகத் தோற்றுமாறு செய்தான்.

மாட்சிமிலியனின் மரணம் (1519) : பேரரசிற்குப் போட்டி : "பொன்னுடைக் களம்" : என்றி சார்சுடன் சேர்தல்

1519 இல் பேரரசன் மாட்சிமிலியன் இறந்ததும் புதிய மாற்றமுண்டானது. பிரான்சிசும், ஐந்தாவது சார்சும் பட்டத்துக்கு வரவிரும்பினர்கள். தற்பெருமை கொண்ட என்றி தானும் பட்டத்துக்கு வர உரிமையுடையவனென உவல்சி மூலம் அறிவித்தான். ஆனால் அவனுடைய கோரிக்கையை எவரும் பொருட்படுத்தவில்லை. ஈற்றில் சார்சுமன்னனே பேரரசனாகத் தெரியப்பட்டான். இங்கிலாந்து இரண்டு பக்கத்திலும் சேராமல் நடுநிலை வகித்தது. என்றியுடன் பகைத்தால் அவன் எதிர்க்கட்சியைச் சேர்ந்துவிடுவானென்ற பயத்தை ஒவ்வொரு கட்சியினரும் மனதிற் கொள்ளும்படி இந்நடவடிக்கை செய்தது. உவல்சிக்குப் போப்பாண்டவர் பதவியளிப்பதாகவும் "திருப்பீடத்தில்" உண்டாகும் அடுத்த வெற்றிடத்துக்கு உவல்சியை ஆதரிப்பதாகவும் என்றியும் உவல்சியும் தங்கள் பக்கம் நிற்க

வேண்டுமென்றும் எல்லாவல்லரசுகளும் ஆசை காட்டின. இக்கட்டத்திலே தான் என்றி பிரான்சிசைப் பொன்னுடைக்களத்திற் சந்தித்தான்; அங்கு அவனுக்கு மிக உன்னதமான வரவேற்பு அளிக்கப்பட்டது; என்றி பிரான்சிசுடன் எவ்வித பொருத்தனையுஞ் செய்துகொள்ளாது கலே நகருக்குச் சென்று அங்கே சார்சுப்பேரரசனைக் கண்டு பேசினான்.

இளைஞர்காலம் : அரகன் நாட்டுக் கதரீனின் செல்வாக்கு : சிபானிய நட்புறவை உவல்சி நிராகரித்தல் : பிரெஞ்சுத் தோல்வி : உரோமைச்சூறையாடல் : இங்கிலாந்து பிரான்சுடன் மறுபடி நட்புப்பூணல்

எல்லாம் இப்பொழுது இளைஞர் கையிலேயே தங்கிற்று. பிரான்சு மன்னன் பிரான்சிசும் இங்கிலாந்து என்றியும் சிபானியச் சார்சும் பன்னிரண்டாம் உலூயி, பேடினந்து, மாட்சிமிலியன் ஆகியோரிலும் பார்க்கக் கவனக் குறைவுள்ளவராகவும், விடயங்களை ஆராயும் தன்மை குறைந்தவராகவும் காணப்பட்டனர். மாட்சிமிலியன், பேடினந்து என்போரின் ஆணிலங்கள் ஒன்று சேர்ந்தபடியால் பிரச்சினை குறுகித் தீவிரமடைந்தது. சிபெயின், பேரரசு என்பவற்றை இப்பொழுது தனித்தனி கருத்திற் கொள்ளவேண்டிய நிலைமையிருக்கவில்லை. இப்பொழுது இவ்விரு நாடுகளும் ஒரே பேரரசனின் கீழ் பிரான்சின் இருபக்கத்திலுங் இடந்தன. ஆனால் போட்டி தணியவில்லை. என்றி, தனது இசுப்பானிய மனைவியின் தூண்டுதலாலும், இங்கிலாந்துக்கும் பிளாந்தேசுக்குமுள்ள வியாபாரத் தொடர்பினாலும், பிரான்சுடன் போர் செய்யவேண்டுமென்ற ஆங்கிலப் பிரபுக்களின் பழைமையான விருப்பத்தினாலும், சிபெயினின் பக்கஞ் சேர்ந்தான். உவல்சிக்கு இது உடன்பாடில்லையாயினும் மன்னனைத் திருப்ப அவனால் முடியவில்லை. ஆங்கிலேயர் இழந்த மாகாணங்களைத் திரும்பக் கைப்பற்றுவதற்குப் போர்த்திட்டங்களை வகுத்தல் சுலபம்; ஆனால் அதை நடைமுறைக்குக் கொண்டுவருவது கடினம் என்பதை இரண்டு படையெடுப்புக்களின் பயனாய் உணர்ந்துகொண்டிருந்தது. போர் செய்வதற்குப் பணம் சேர்ப்பது முடியாத காரியமாயிற்று. பாராளுமன்றம் பணத்தையொதுக்க மறுத்தது. "இணக்கமான கடன் முறை" என்ற புதிய கவர்ச்சியூட்டக்கூடிய பெயரால் உவல்சி, நன்கொடைபெற முயன்றான். மக்கள் அதை ஆட்சேபித்ததுமன்றி அதற்கெதிராகக் கிளர்ச்சியுஞ் செய்தனர். 1525 இல் பாவியா என்ற இடத்திலே பிரான்சிசு தோல்வியடைந்து கைதியானான். இதனைத் உவல்சி இசுப்பெயினின் பக்கத்திலிருந்து விலகினான். 1527 இல் பூபன்கோமகனின் தலைமையிலிருந்த பேரரசுப்படைகள் உரோமை முற்றுகையிட்டு ஏழாம் கிளெமெந்து என்ற போப்பாண்டவரைக் கைதுசெய்தன. இதனால் உண்டான ஆத்திரத்தை உவல்சி பயன்படுத்திப் பிரான்சுடன் புதிய நட்புறவைச்செய்ய முயன்றான்.

இச்சம்பவங்களையடுத்து என்றி மன்னனின் விவாக நீக்கஞ் சம்பந்தமான தொல்லைகளுண்டாயின. அதன் பயனாக உவுல்சி அதிகாரமிழந்தான்; சமயச் சீர்திருத்தமுமுண்டானது. உவுல்சியின் அரசியற் சூழ்ச்சி மக்கள் மனதில் மயக்கத்தை உண்டாக்கிற்று. அவர்கள் அதைச் சரிவரத் தெளிந்து கொள்ள முடியாது நொதுமலாயிருந்தனர். ஆனால் போப்பாண்டவரின் அதிகாரம் மறுபடியும் இங்கிலாந்திலே தலைகாட்டியதும் மக்கள் கொதித் தெழுந்தனர். சமயச் சீர்திருத்தத்தின் தோற்றுவாயை இங்குக்காணலாம்.

2. சமயச் சீர்திருத்தம்

I புதிய கல்வி: சேர்மனியிற் சமயச் சீர்திருத்தம்

உலகசரித்திரத்திற் றேன்றிய பெருமக்களின் வாழ்க்கை ஓரளவுக்கு அக்காலக் கருத்து வேகத்தினால் உருப்படுத்தப்படுகிறது; அவர்கள் யுக கருமத்தின் விளைவுகளே; இது எங்கும் நிகழக்கூடிய பொது உண்மை யாகும். மேலும் அவர்கள் தம் கருத்துக்கேன மக்கள் மனதிற் பதிய வைத்துச் சமுதாயத்தைத் தமது கொள்கைப்படி மாற்றியமைப்பர். உலூதர் விடயத்திலும் இஃது உண்மை. எனவே தொடங்கப்பட்ட ஓர் இயக்கத்தை அவர் எந்தக் கட்டத்திற் கையேற்று அதற்கு எவ்வாறு புதியவொரு திருப்பத்தை உண்டாக்கினர் என அறிந்தாலன்றி, அவர் நிறைவேற்றிய வேலைகளின் முதன்மையைச் சரிவர அறிந்துகொள்ளமுடியாது.

கல்வியின் புத்துயிர்ப்பு : கிரேக்கநூல் : கலை மறுமலர்ச்சி

மத்தியகாலப் பெரும் பகுதியிலே கொள்சுதாந்திநோப்பிளிலேதானும் பழைய கிரேக்க மொழிப்புலமை மிக அருமையாயிருந்தது. எனவே ஐரோப்பாவின் ஏனைய பகுதிகளில் இப்புலமை இல்லையெனவே கூறலாம். பதினான்காம் நூற்றாண்டினிறுதியிலும் விசேடமாகப் பதினைந்தாம் நூற்றாண்டிலும் பழைய கிரேக்க மொழிபயிறல் இத்தாலியிற் புதிய மலர்ச்சியடைந்தது. கிரேக்க மொழியிற் பற்றுண்டாகவே இத் தாலி மக்கள், கிரேக்க நூல்களை வாசிக்கத் தலைப்பட்டனர். முதலில் செம்மொழிப் புலவர்களின் நூல்களையும் குறிப்பாகப் பிளேற்றோவின் நூல் களையும் வாசித்தனர். ஆராய்ச்சிக்கத்தைத் தூண்டிவிட்டால் அது எங்கும் பரவும். கிரேக்கச் செம்மொழியைப் பயின்றவர்கள் இலத்தீன் செம்மொழி யையும் பயிலத் தலைப்பட்டனர். இத்தாலிய மறுமலர்ச்சி, இலக்கிய மறு மலர்ச்சியாகவும், கலைகளின் மறுமலர்ச்சியாகவும் உருவெடுத்தது. நூலறிவு, சிற்பக்கலை, இலக்கியம், ஓவியம் என்னுந் துறைகளில் இத்தாலிய மறு மலர்ச்சிக்கு உலகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது. ஆனால் சமயச்சீர் திருத்தத்துக்கு எவரும் அதற்குக் கடமைப்படவில்லை. ஏனெனில் புதிய

கல்வி எந்தவகையிலும் போப்பாண்டவர் அதிகாரத்துக்கு மாறுபிருக்க வில்லை. நூல்களைப் பயிலுதலும், விளக்கம் உரைத்தலும், திறனாய்தலுமே அதன் வேலையாயிருந்தன. அதற்குமேல் எதுவுஞ் செய்யவில்லை.

திருச்சபை : போப்பாட்சியின் வீழ்ச்சி : போப்பாண்டவர் இளவரசன் போலாதல்

ஆனால் இத்தாலியிலும் ஐரோப்பாவின் ஏனைய பாகங்களிலும், படிப் படைவிடச் செய்கையிற் பலவற்றைச் சாதிக்கவேண்டியிருந்தது. புதிய கல்வி இத்தாலிய நூலறிவைத் தூண்டியபோது, திருச்சபையானது ஒழுக்கத்திலும் செல்வாக்கிலும் குன்றிவந்ததென்பது அத்திருச்சபைத் தலைவர்களான போப்பாண்டவர் மூலம் தெளிவாயிற்று. துருக்கியரைக் கலைத்துவிடும் விடயத்தில் ஐரோப்பாவை மறுபடியுந் தூண்ட, நேர்மையும் நல்லெண்ண முமுள்ள இரண்டாம் பயசினாற்கூட முடியாமற் போய்விட்டது. சிலுவை யுத்த ஆர்வம் மறைந்தது. 1470 தொடக்கம் போப்பாண்டவர்களும் சூழ்நிலையை அனுசரித்து வாழ்வு நடத்தினர். திருச்சபைக்கு வலிமை பொருந்திய இராச்சியங்களைச் சேர்க்கும் முயற்சியில் அவர்களும் இத்தாலிய அரசகுமாரர்கள் போல வாழ்வு நடத்தினர். இத்தாலியக் குறுநில மன்னர் களுக்கெதிராகப் போப்பாண்டவர் தனித்து நிற்பதாலுற் பலம் பொருந்திய இராச்சியங்களை அமைக்கவேண்டுமென அவர்கள் எண்ணினர்.

கலை ஆதரவாளரான போப்பாண்டவர் : சேர்மனியிலும் இங்கிலாந்திலும் புதிய கல்வி : சீர்திருத்தத்தை விரும்பல்

அக்காலத்திலேற்பட்ட பல திறமான ஒழுக்கக் கேடுகளும், போப்பாட்சி யின் வெறுமையும், இலௌகீகத்துக்கும் திருச்சபைக்குமுண்டான நெருங் கிய தொடர்பும், சமயத்துக்கும் வாழ்வுக்குமிடையில் ஏற்பட்ட பிரிவும் புதிய கல்விக்கும் பழைய சமயநூற் கல்விக்குமிடையிலுண்டான பிளவும் என்ற இவ்விடயங்கள் இத்தாலிய மக்களின் உள்ளத்தைக் கலக்கவில்லை. போப்பாட்சி முறையில் விளக்கம் பெற்ற மத்தியகாலத் திருச்சபையின் நிலையும், அமைப்பும், உரிமைகளும் ஏற்புடையனவென் றும், அவை சந்திரசூரியர் நிலைக்கும் வரை நிலைத்திருக்குமெனவும் இத்தாலிய மக்கள் கருதிவந்தனர். திருச்சபைப் பாதிரிமார் மடமை குடிகொண்ட அறிவில்லா மக்களென நூலறிஞர் அவர்களைச் சற்றே குறைகூறியபோதிலும், போப்பாட்சியும் அதன் முறைகளும் ஏற்புடையன வென்றே அவர்கள் கருதினர். போப்பாண்டவர்களும் நம்பிக்கையுடன் நூலறிஞர்களை ஆதரித்தனர். ஐந்தாம் நிக்கலசு, பத்தாம் இலியோ போன்ற போப்பாண்டவர்கள் இலக்கிய கர்த்தாக்களையும், கலைஞரையும் பெரிதும் ஆதரித்தனர். இரண்டாம் யூலியசு போன்றவர்கள் பிரமாந்தே, ரபபியெல், மைக்கல் அஞ்சிலோ போன்ற சிறந்த சிற்பிகளையும் ஓவிய

விற்பன்னரையும் உரோமாபுரியில் வைத்து அவர்களுக்காகவேண்டிய வசதி களேயெல்லாஞ் செய்து கொடுத்தாதரித்தார்கள். இத்தாலியைப்போலன்றிச் சேர்மனியும் இங்கிலாந்தும், "தவருனவை எவ்வளவு பழையனவாயினும் தவறுடையனவே, சரியானவை எவ்வளவு புதியனவாயினும் சரியான வையே" யென்ற கொள்கையைப் பின்பற்றின. சேர்மனியிலும் இங்கிலாந் திலும் புதிய கல்வி காரியார்த்தமான பயனைக் கருதிற்று. வாழ்க்கைக்குப் பயன்கொடாதபடிப்பினாற் பயனில்லை யென்று இவ்விரு நாட்டு மக்களும் கருதினர். நல்லறிவு மக்கள் நல்வாழ்வு நடத்தவும் நற்கருமங்களைச் செய்யவும் உதவவேண்டும். இல்லையேல் நல்லறிவாற் பயனில்லை. இத் தாலியிலே செம்மொழி நூல்களில் நூலறிஞர் ஈடுபட்டனர். அல்பிசுமலைக்கு அப்பாலுள்ள நாடுகளிலே புதிய ஏற்பாடுகளை ஆராயத் தலைப்பட்டனர்.

வடக்கே புதிய கல்வி இரண்டு தன்மையைப் பெற்றது. பழைய சமய சாத்திரமரபுகளையும் மக்கள் முன்னுட்கவிற் பயின்று வந்த போதனைகளையும் புறக்கணிக்காது, தாம் ஆராய்ந்து கண்ட உண்மைகளே சரி யென்று கொண்ட சமயநூலறிஞர் ஒருபுறம்; அதிகாரிகள், சமயத் தலைவர்களென்போரின் கருத்துக்களை மதியாமல், தாம் சரியெனக் கண்டவற்றைச்செயலிற் காட்டும் சீர்திருத்தவாதிகள்மற்றொருபுறம். முந்தியவகையைச் சேர்ந்தவர் எராசுமசு; பிந்திய வகையைச் சேர்ந்தவர் உலூதர்.

எராசுமசு; அவருடைய புதிய ஏற்பாட்டின் பதிப்பு

பிளெமிங்கராலை தெசிடேரியசு எராசுமசு அநாதைப்பிள்ளையாக மடமொன்றில் வளர்ந்துவந்தார். சிறுவனுயிருக்கும்பொழுதே பாதிரிமார்மீது தணியாத வெறுப்புக்கொண்டார். அவர்களுடைய வாழ்க்கையும் இவருக்கு வெறுப்பை யளித்தது. வயது வந்ததும் இவர் மடத்து வாழ்க்கையைக் கைவிட்டார். முதலில் பரிசுப் பல்கலைக்கழகத் திலும் பின்னர் ஒட்சுபோட்டுப் பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றார். பின்னர் சேர்மனி, இத்தாலியாகிய தேசங்களுட்பட்ட பல இடங்களைச் சுற்றிப் பார்த்தார். இத்தாலிய மறுமலர்ச்சி காரிய சாத்தியமற்ற போக்குடை யதாயிருந்தது. எராசுமசின் மனம் அதை விரும்பவில்லை. சேர்மனியில் நடைபெற்ற சமய சாத்திரவிவாதங்களும் அவரைக் கவரவில்லை. அவருடைய பரந்த மனம் இவ்விரு குறுகிய போக்குக்களிலும் சிக்க மறுத்தது. அவருடைய ஆராய்ச்சிப் போக்கானது மற்ற வர்களை ஒரு புதிய பாதையிலிட்டுச் சென்றது. ஆனால் ஈற்றில் அவரே அப்பாதையிற் செல்ல மனமஞ்சிப் பின்னின்றார். அவருடைய செல்வாக்கு இரண்டு வகையில் வெளிப்பட்டது. "**மடைமையின் மகிமை**" என்ற பெயருடன் அவர் எழுதிய முதல் நூலில் பாதிரிகளின் பழைய கருளுடகக் கல்விமுறையை எனனஞ் செய்து உலகத்தவரும், அறிஞருலகும் அதைப்

பார்த்து நகைக்கச்செய்தார்[1]. முன்னரும் பல அறிஞர் பாதிரிகளை நையாண்டி செய்ததுண்டு. ஆனால் அவர்களதனாற் பாதிரிகளுக்கு அதிக நட்டம் விளைக்கவில்லை. ஆனால் எராசுமசின் சாதுரியமான வார்த்தைகள் நஞ்சூட்டிய அம்புகள் போன்றன. அவற்றுக்குப் பதில் எழுதுவது மிகக் கடினமாயிருந்தது. பாதிரிகளின் கருத்துக்களையும், வாழ்க்கை முறையை யும் எனனஞ்செய்ததால் மக்கள் அவர்களுடைய ஆச்சிரமதருமத்தையும் கொள்கைகளையும் வெறுத்தனர். இதனால் திருச்சபையின் "தூண்களிற்" சில பலவீனமடைந்தன. எராசுமசின் சாதுரிய வசனங்களிலும் பார்க்க அவருடைய கண்டனங்களே சிறப்புடையன. 1516 இல் அவர் கிரேக்க ஏற்பாட்டைப் பூரணமாகப் பதிப்பித்தார். இதற்கு இலத்தீன் மொழி பெயர்ப்பையும் வெளியிட்டார். அதில் தமக்குப் பிழையெனத் தோன்றிய வற்றை எடுத்துக் காட்டினார். அவற்றுக்கு எழுதிய குறிப்புக்களிலே அக்காலக் கொள்கைகளைப் பற்றித் தாம் கொண்ட கருத்துக்களை ஒளிப்பு மறைப்பின்றி எடுத்து விளக்கினர். இதனை ஓர் உதாரணத்தின்மூலம் விளக்குவாம். ஆகமத்தில் "இந்தப் பாறையில் எனது திருச்சபையைக் கட்டியெழுப்புவேன்" என்று வரும் வாக்கியத்துக்கு விளக்கம் கொடுக் கையில் இது போப்பாண்டவரை மாத்திரங் குறிப்பிடுவதன்றென்றும், எல்லாக் கிறித்தவரையுமே அது குறிப்பிடுவதென்றும் காட்டினர். இத் தகைய ஆராய்ச்சிமுறை போப்பாட்சிக்கு ஓர் அறைகூவல் விடுவதுபோன்ற தாகும். இதை அவ்வாட்சி கிறித்தவ விவிலிய வேதவாக்குக்களைக் காட்டி மறுக்கவேண்டியிருந்தது. இல்லையேல் எராசுமசின் கட்சி சரியெனக்கொள் ளப்படும்.

மாட்டின் உலூதர்: பாபமன்னிப்பு: உரோமுடன் உலூதரின் பிணக்கு

எராசுமசின் போதனைகளை உலூதர் சாதனையிற் காட்டினர். இவர் சாதாரணக் கிராமவாசிக்கு மகனுகப் பிறந்து எபேட்டு நகரிலிருந்த ஒகத் தின் மடத்திற் பயிற்சி பெற்றார். மடத்து வாழ்க்கை அவருக்கு உள்ள அமைதியைக் கொடுக்கவில்லை. தான் ஒரு பாவியென்ற எண்ணம் அவரை இடையருமல் வருத்தியது. 1508 இல் அவர் மடத்தைவிட்டு விலகி உவிற்றன் பேக்கிற் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சட்சன் பல்கலைக்கழகத்திலே சமய நூற்போதனை செய்தார். 1510 இல் அவர் உரோமாபுரிக்குச் சென்றார். அங்கே போப்பாண்டவர் மாளிகையில் நிலவிய பொல்லாத கவனக் குறைவும், அலட்சிய மனோபாவமும் அவருக்குத் தெரியவந்தன. அதனால் அவர் விவிலிய வேதத்தை முன்னெயிலும் அதிக கவனத்தோடு கற்றார். "பரமண்டலத்துக்குப் போவதானால் ஒருபெருமூச்சு விட்டு மிக இலேசாகப்

[1]இந்நூல் பாதிரிகளை எனனஞ் செய்யும் நோக்கமாக எழுதப்படவில்லை. மடைமையிற் றெங்கியவர்களை இகழ்ந்தே எழுதப்பட்டது. பாதிரிகளிடையிலே தான் எராளமான மடையர்களை எராசுமசு கண்டார்.

போய்ச் சேர்ந்துவிடலாம்" என்ற "மெனடகக் கொள்கையை" மாற்றுவ தற்கு விவிலியவேத ஆராய்ச்சியே சிறந்த வழியெனக் கண்டார். தொமி னிக்கன் பாதிரியான தெற்செல் என்பவர் சட்சனிக்குப் பாபமன்னிப்புக் கொடுக்க வந்தார். (செய்த பாவத்துக்கு விதிக்கும் தண்டனையைப் பணம் கொடுத்து நீக்குவதே இம்மன்னிப்பு). உரோமிற் கட்டவிருந்த சென் பீற்றர் தேவாலயத்தின் கட்டட நிதிக்குப் பணமுதவினுற் பாபம் மன்னிக்கப்படு மென அவர் கூறவே, உலூதர் கோபங்கொண்டெழுந்தார். அறிவு குறைந்தவர்களும் கவனமற்றவர்களுமான சாதாரண மக்கள், இவ்வாறு பணங் கொடுப்பதைப் பிழையாக விளங்கிக்கொள்வார்களென அவரெண்ணி னர். உள்ளத்திற் கழிவிரக்கங்கொண்டு பாபத்துக்குப் பிராயச்சித்தஞ்செய்ய வேண்டும். இது செய்யாவிட்டால் பாவமன்னிப்பினுலும் பயனில்லை; பய பக்தியுடன் செய்யப்படுந் தானதருமங்களினுலும் பயனில்லை. எனவே தமது கருத்துக்களை விளக்கும் உரைகளை உவிற்றன்பேக்குத் தேவாலயக் கதவில் எழுதித் தொங்கவிட்டார். மக்கள் இவற்றைப் பற்றித் தம்முடன் கலந்தாலோசிக்கலாமென்றும், போப்பாண்டவர் இவற்றைப் பற்றித் தமது உள்ளக் கருத்தை விளக்கவேண்டுமென்றும் அதிற் கேட்டிருந்தார். சமயசாத்திரத்தில் தமக்கு ஐயமுண்டாக்கிய ஒரு விடயத்தைப் பற்றித் தாம் வாதிக்க விரும்புவதாக உலூதர் கேட்டார். ஆனல் போப்பாட்சி அத்தகைய வாதத்தை விரும்பவில்லை. பாவ மன்னிப்புக் கோப்பாடு பலவித இழிவுகளுக்கிடமளித்தது. பிற்காலத்திலே திரெந்து நகரில் கூடிய கழகத்தில் திருச்சபை "அவமானத்துக்கேதுவான இலாபங்களை அவற்றில் நாட்டமுள்ளோர் பெறுகிறார்களெனக்" கண்டித்தது. ஆனல் இப்பாவ மன்னிப்புமுறையினுல் போப்பாட்சிக்கு இலாபமுண்டென்பதில் ஐயமில்லை. அதை நீக்கினுல் போப்பாட்சியின் பண நிலை சீர்குலைந்துவிடும். அதிலே தலையிடுவது ஆபத்துக்கேதுவாகும். எனவே உலூதரின் வாயை யடக்கவேண்டியது அவசியமாயிற்று.

போப்பாண்டவரை உலூதர் தாக்குதல்

ஆனல் உலூதர் தமது இலர்ச்சியைக் கைவிடவில்லை. இவ்விடயங்களை யிட்டு மௌனமாயிருக்குமாறு போப்பாண்டவர் கட்டளையிட்டார். உலூதர் அதற்குக் காரணங்கேட்டார். போப்பாண்டவரே தவறுடையவராயிருந்தா லென்ன? போப்பாண்டவர்கள் முன்னர் தவறிழைக்கவில்லையா? இப் பொழுது ஆட்சிப்பீடத்திலுள்ள பத்தாம் இலியோவும் தவறு செய்வதில் என்ன வியப்பு என்றெல்லாம் உலூதர் வினவினர்.

சீர்திருத்தங்களை வேண்டி நிற்றல்

இந்தப்பிணக்கு ஒய்வின்றி நடைபெற்றது. உலூதரின் கருத்துக்களுக்கு மக்கள் செவிசாய்த்தனர். எல்லாருக்கும் விளங்கக்கூடியவகையிலே உலூ தர் பேசினர். இதுகாறும் சமயவாதங்களெல்லாம் இலத்தீன் மொழியில்

நடைபெற்று வந்தன. உலூதர் இலத்தீன் மொழியைக் கைவிட்டு சேர்மன் மக்கள் எளிதில் விளங்கக்கூடிய சேர்மன்மொழியிற் பேசினர். விரைவில் அவருடைய கருத்துக்கள் தீவிரமாயின. சமயக்கோட்பாடுகளில் மாற்றம் வேண்டுமென அவர் முழங்கினர். ஏழு தேவதிரவிய அனுமானங்களில் நாலைக் கீளந்துவிடவேண்டுமெனக் கேட்டார். போப்பாட்சிக்கு மேலாக ஒரு பொதுச் சபையிருக்க வேண்டுமெனக் குறிப்பிட்டார்.

உலூதரைக் கண்டித்தல்: போப்பாண்டவரும் பேரரசனும் பிணங்குதல்

உலூதரை அடக்குவதற்கு நல்ல வழி அவர் கூறிய குறைகளை நீக்கி மக்கள் அவருக்கு ஆதரவளியாமற்றடுப்பதே. கெட்டவழக்கங்களை மாற்றவும் நியாயமான சீர்திருத்தங்கள், சலுகைகள் மூலம் மக்களின் கோபத்தைத் தணிக்கவும் உண்மையாக முயற்சி செய்வதே இதற்குச் சிறந்த வழி. ஆனல் போப்பாட்சி இதனை விரும்பவில்லை. 1521 இல் உவோமிசு என்ற நகரிற் கூடிய சங்கத்திலே உலூதர் கண்டிக்கப்பட்டார். அவருடைய பரநெறிக்கொள்கைகளை வேரோடு களைந்துவிடவேண்டுமெனப் பேரரசைச் சேர்ந்த அரசகுமாரருக்குக் கட்டளையிடப்பட்டது. ஆனல் ஐந்து வருடத்துட் போப்பாண்டவரும் பேரரசனும் பிணங்கிக்கொண்டனர். பாவி யாவில் நடந்த சண்டையில், பிரான்சிசு சாள்சு மன்னன் கையில் தோல்வி யடைந்தபொழுது சில வாக்குறுதிகளைச் செய்தான். அவற்றை நிறை வேற்றுதிருப்பதால் வரும் பாவத்தைத் தாம் மன்னித்துவிடுவதாகப் போப்பாண்டவர் கூறினர். இதனுற் கோபமுற்ற சாள்சு பரநெறியாளருக் கெதிராகப் போப்பாண்டவரை ஆதரிக்க மறுத்தான். ஏகாதிபத்தியக்கொள் கையில் மாற்றமுண்டானது. கடவுளுக்கும் பேரரசனுக்கும் பொறுப்புக் கூறும்வகையில் ஒவ்வொரு சிற்றரசனும் உலூதர் விடயத்தில் நடந்து கொள்ளலாமென உரிமையளிக்கப்பட்டது. அதாவது ஒவ்வொருவரும் தத்தம் விருப்பப்படி நடந்துகொள்ளலாமென்றுயிற்று. அதைத் தொடர்ந்து சிபானியக் கத்தோலிக்கரையும் சேர்மன் உலூதர் வாதி களையும் கொண்ட ஏகாதிபத்தியப் படையொன்று நெறிமாறிய பூபன் என்ற பிரெஞ்சுப் பிரபுவின் தலைமையில் உரோமாபுரியைச் சூறையாடிப் பெருங்கொடுமை புரிந்தது. போப்பாண்டவரைச் சென் அஞ்செலோக்கோட் டையிற் சிறைவைத்தது.

உலூதரின் மதம் சேர்மனியெங்கும் பரவினபோதும் வலிமையுள்ள எந்த அரசும் அவருடைய கருத்துக்களை, போப்பாண்டவர் அதிகாரத்தை மீறி, நடைமுறையிற் கொண்டுவரவில்லை. ஆனல் இங்கிலாந்து மாத்திரம் இந்த நடவடிக்கையிலீடுபட்டது. எனவே ஆங்கிலச் சமயச்சீர்திருத்தம் இங்கிலாந்துக்கு மட்டுமன்றி ஐரோப்பாமுழுவதற்கும் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியாயிருந்தமைக்கு இதுவே காரணமாகும் (குறிப்பு 44).

II உரோமுடன் பிணக்கு.

ஆங்கிலச் சீர்திருத்தவாதிகள் : கொலெற்று : எராசுமசு : மூர் : உவுல்சி : அவனின் சீர்திருத்தங்கள்

சேர்மானிய நூலறிஞரைப்போலவே ஆங்கில நூலறிஞரும் புதிய கல்வியைப் பயில்வதில் மிகுந்த ஊக்கங்காட்டினர். அவர்களைப் போலவே இவர்களும் காரியசாத்தியமான முறையிற் கல்விநாடினர். புளோரன்சிலே கல்வி கற்ற குரேசின் என்பவர் 1491 இல் ஒட்சுபோட்டுப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியரானார். சென் போலின் உப அத்தியட்சகுருவான யோன்கொலெற்று என்பவர் எராசுமசைப் போலவே கிரேக்க மொழிப் பயிற்சியைப் பெரிதும் மதித்தார். பரிசுத்த வேதாகமங்களிலுள்ள சிந்தனைச் செல்வங்கள் பூட்டி வைக்கப்பட்ட பெட்டகம் கிரேக்க மொழியென அவர் எண்ணினார். பழைய சமயபண்டிதர்களின் கல்வி பயனற்றதென்றும் தப்பான வழியிற் செலுத்துவதென்றும் ஒதுக்கிவிட்டுப் புதிய எற்பாட்டின் நேரான கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டு தமது போதனையை நடத்தினார். சென்போல் உயர்நிலைப்பாடசாலையை அவர் நிறுவியபொழுது, தமது கொள்கைகளைப்பற்றித் தெளிவாக விளக்கினர். ஆசிரிய பீடத்தின் பின்னுற் றிறித்துநாதரின் குழந்தைப் படிவத்தை அமைத்து அதன்கீழே " அவன்வாக்கைக் கேண்மினே " என்ற சொற்றொடரைப் பொறித்தார். எராசுமசு தானும் கேம்பிரிட்சுப் பல்கலைக் கழகத்திலே ஆசிரியராயிருந்து இலத்திமர், பிசர் போன்றவர்களுக்குத் தமது போதனையால் ஞானச்சுடர் கொளுத்தினர். அவருடைய நண்பர் தோமசு மூர் என்பவர் வாக்குச்சாதுரியம், உள்ளத்துறவு என்பனவற்றில் இவருக்கு ஒப்பானவர். தோமசுமூர் ஓர் இலட்சிய உலகைத் தமது **உற்றேப்பியா** என்ற நூலிற் கற்பனை செய்தார். அந்த உலகம் எங்குமில்லாத ஓர் உலகம். பொறையுடைத் தத்துவங்களும், விசாலமான கொள்கைகளுமுள்ளது ; எவ்வளவோ காலத்துக்குப் பின்னர் உண்டாக வேண்டிய மாற்றங்களை முன்னுகவே குறிப்பிடுந் தன்மை அந்நூலில் உண்டு. பொதுநலவாயமொன்றை அவர் அதிற் கற்பனை செய்துகாண்கிறார்.

அங்கே நிலவுஞ் சட்டங்களின் நோக்கம் குடிகளின் நன்மையே. தாந்தாம் நினைந்தபடி கடவுளை வணங்க அங்கே சுதந்திரமுண்டு. எனெனில் " மனிதன் தான் விரும்பியபடியே சிரத்தை பூண்பதற்கு அதிகாரமுடையவனன்று " (கடவுளருள் வேண்டுமென்றபடி.). பொருள் எல்லாருக்கும் பொதுவுடைமையானபடியால் அங்கே வறுமை இடையாது ; மக்கட்சமூதாயத்தின் நலனுக்கு உழைப்பு அவசியமானபடியால் எல்லாருந் தொழில் புரியவேண்டும். " மக்களை அடிமைப்படுத்த " மன்னன் முயல்கிறனென்று ஐயம் தோன்றுமானால் உடனே அம்மன்னனைப் பதவியிலிருந்து நீக்கவேண்டும். எல்லாக்குழந்தைகளுக்கும் கல்வி கற்பிக்கப்படும். குற்றவாளி தண்டனையனுபவித்த பின்னர் " நேர்மையுமுண்மையுமுள்ளவனுக வாழ்க்கை நடத்தக்கூடியவாறு தண்டனை அமையவேண்டும். " நற்கால அரசு என்னென்ன விடயங்களை முயன்று அமைத்துள்ளதோ, மேலும் எத்துணை விடயங்களை அடைய முயல்கின்றதோ அவையெல்லாம் இந்நூலிலே கற்பித்து எழுதப்பட்டுள்ளன. காலத்துக்குரிய அல்லல்களையும் தடைகளையும் மீறி மனிதனுடைய ஆன்மா எவ்வாறு விரிந்து செல்கிறதென்பதை " **உற்றேப்பியா** " (அல்லது இலட்சியபுரி) என்ற நூல் காட்டுவதுபோல வேறெந்நூலுங் காட்டவில்லை. மூரும் கொலெற்றும் எனைக் " கிரேக்க " மொழிப் புலவர்களும் இரு பல்கலைக் கழகங்களிலும், பழைய கருத்துக்களையும், கல்வி முறைகளையும் இறுகப் பிடித்துக்கொண்டிருந்த கருங்குடப் பேர்வழிகளுக்கெதிராய் எத்துணை போராடியபோதிலும், சீர்திருத்த வழியில் காரிய சாத்தியமான முன்னேற்றமடைய முடியாதிருந்தனர். அரசனும், உவுல்சியும் அசைந்தாலன்றி ஒன்றும் நடைபெறாது. ஆனால் அவர்கள் அப்பொழுது வெளிநாட்டு விவகாரங்களில் மூழ்கியிருந்தனர். சீர்திருத்தம் அவசியமென்பதை உவுல்சி உணர்ந்திருந்தான். ஆனால் சமயம் ஏற்றதாயிருக்கவில்லை. மேலும் அவனுக்கு வேறு விடயங்களைக் கவனிக்க நேரமுங் கிடைக்கவில்லை. போப்பாண்டவரின் பிரதிநிதியாக அவனிருந்தபடியால் திருச்சபை விடயங்களிலே தலையிட அவனுக்கு அதிகாரமிருந்தது. ஆனால் அதைப் பின்போட்டு வந்தான். எடுத்த சில முயற்சிகளும் கவனமும் சாவதானமும் நிறைந்தனவாயிருந்தன. சில மடங்களைத் திருத்தவேண்டுமென எண்ணினான். சிறிய மடங்கள் சிலவற்றை நீக்கிவிட்டு அவற்றுக்குரிய நிதியைக் கொண்டு ஒட்சுபோட்டிலே காடினல் கல்லூரியை நிறுவினான்.

உரோமிலிருந்து அரசனை அவமானப்படுத்தும் முயற்சிகள் நடைபெற்றால், உரோமுக்கெதிராக மக்கள் மன்னனை ஆதரிக்க ஆயத்தராய் இருந்தனர். என்றி உண்மையான ஆங்கிலேயன் ; காலத்துக்கேற்ற ஆங்கிலேயப் பண்பைப் பூரணமாகப் பெற்றவன். அவனுடைய செல்வாக்குக்குக் காரணமாயிருந்ததும் அதுவே. தனது குடிகளின் இயல்புகளை அவன் நன்கறிந்திருந்தான் ; அவ்வாறே குடிகளும் அவனை நன்றாக அறிந்திருந்தனர். இதுவரை அவன் போப்பாண்டவருடன் பிணங்கியது கிடையாது. உலூதரின் கொள்கைகளை வன்மையாகக் கண்டித்தான். ஆசாரத்திற்கு எதிரான கொள்கையுடையவனின் கொள்கைகளை மறுத்துத் தனது பெயரால் அவன் ஒரு நூலும் வெளியிட்டான். இனைமெந்துப் போப்பாண்டவர் இந்நற்செண்டை மெச்சி அரசனுக்குப் பொன்மலர் பரிசாக வழங்கினர். இனைமெந்துக்கு முன்னிருந்த பத்தாவது இலியோப் போப்பாண்டவர் அவனுக்கு " வேதநெறிப் பாதுகாவலன் " என்ற பட்டத்தை வழங்கினார் ; அது இன்றும் ஆங்கில நாணயங்களில் வழங்குகிறது. ஆனால் என்றி தனது மனைவியான கதரீன் விடயத்திற் கருத்திழந்தான்.

என்றியும் அவன் மனைவியும்

என்றிக்கும் கதரினுக்கும் மன ஒருமைப்பாட்டைக் கொடுக்கக் கூடிய விடயங்களதிகமிருக்கவில்லை. உவல்சியின் ஆலோசனைப்படி என்றி பிரான்சுடன் அடிக்கடி நட்புக்கொண்டான். அது கதரினுக்குப் பிரியமானதன்று. கதரின் அரசனுக்குத் தொல்லை கொடுத்தாள். இது அவ்வளவு புத்தி சாலித்தனமானதன்று. மேலும் அவளுக்கு[1] ஆண் சந்ததியில்லை. அரசனுக்குப் பின் அரசுகட்டிலேற ஆண்மகனில்லையே யென்று மன்னன் மனமுடைந்தான். ஒருவரையொருவர் வெறுத்தனர். மேலும் அரசியின் தோழமை அவனுக்கு ஒயாத வெறுப்பையே கொடுத்தது. ஆன்பொலின் என்ற பெயருள்ள ஒரு பெண்மணி மாலிகையிலிருந்தாள். அவள் மீது என்றி மோகங்கொண்டு அவளை விவாகஞ் செய்ய முடிவு செய்தான். அதற்குக் கதரீனை நீக்க வேண்டும். இந்நிலையில் அவன் உவல்சியின் துணையை நாடினான். சாத்திரபூர்வமான சில நியாயங்களைக் கண்டுபிடித்தான். கதரின் என்றியின் சகோதரனுடைய விதவை. எனவே இந்த விவாகம் சட்டவிரோதமானது. ஆனால் போப்பாண்டவரின் விசேட அனுமதிப்படியிது நடந்தேறியது. இவ்வாறு போப்பாண்டவர் அனுமதி வழங்கியது தவறென என்றிக்குப்பட்டது. விவாகம் செல்லுபடியாகாதெனத் தள்ளிவிட இயலாதா? போப்பாண்டவர்கள் அரசர்க்கு, இதிலும் பெரிய சலுகைகளைச் செய்ததுண்டு.

உவல்சி என்றியை ஆதரித்தல்: உவல்சியின் வழியில் இடர்கள்: உரோமைத் தாக்கியதின் விளைவு

உவல்சி இதற்கு மாறுகூறவில்லை. அவனே இந்த யோசனையை என்றிக்குக் கூறியுமிருக்கலாம். கதரீனை விவாகநீக்கஞ் செய்வதால் அவளுடைய இசப்பானியக் கொள்கைகளும் அகன்றுவிடும். பதிலாக என்றிக்குப் பிரெஞ்சு அரசகுமாரியொருத்தியை மணஞ் செய்துவிடலாமென உவல்சி திட்டமிட்டான். போப்பாண்டவர் மனத்தைத் திருப்பமுடிந்தாலும் பல தொல்லைகளிருப்பதை அவன் உணர்ந்தான். கதரின் நல்லொழுக்க முடையவள். அவளுடைய கற்பைப் பற்றி எதுவுங் குறைகூறமுடியாது. குடிகள் அவளை ஆதரிப்பார்கள். என்றி ஆன்பொலினை மணஞ் செய்ய எண்ணினான் என்ற செய்தி வெளிவருமானால் மக்கள் கதரினை ஆதரிப்பார்கள். கதரினின் விவாகநீக்கத்தைப் பிரான்சும் எதிர்க்கும், இசுப்பெயினும் எதிர்க்கும். என்றிக்கும் கதரினுக்கும் பிறந்த மகளான மேரியை பிரான்சின் அரசகுமாரனுக்கு வதுவை செய்ய நிச்சயம் பண்ணியிருந்தனர். கதரினின் விவாகநீக்கத்தால் மேரி அரசுரிமை அற்று விடுவாள். அதனால்

[1]கதரினுக்கு நான்கு மக்கள் பிறந்தும், ஒருவரும் உயிரோடிருக்கவில்லை. தன் சகோதரனின் விதவையான கதரினைத் தான் விவாகஞ் செய்ததால் கடவுள் கொடுத்த தண்டனையிதுவென அவன் எண்ணினான்.

பிரான்சு கதரினின் விவாக நீக்கத்தை எதிர்க்கும். ஐந்தாம் சார்ளசு கதரினுடைய மருகனைபடியால் இசுப்பெயினும கதரினின் விவாக நீக்கத்தை எதிர்க்கும். 1527 இலே, இவ்விடயம் அவதானமாக வெளிவிடப்பட்டபொழுது, உரோம் தாக்கப்பட்டது. கிளெமெந்துப் போப்பாண்டவர் ஐந்தாம் சார்ளசு மன்னனின் கையிற் சிக்கியிருந்தார். எனவே பொலிய மன்னனுக்கு மிகுந்த அவமானந் தரக்கூடிய ஒருவிடயத்தைச் செய்யுமாறு போப்பாண்டவரைக் கேட்டுக்கொள்வதற்குக் காலநேரம் வாய்ப்பாயிருக்கவில்லை. எனவே உவல்சி பின்வாங்கியதில் ஆச்சரியமெதுவுமில்லை.

போப்பாண்டவரின் தாமதம்

அவர் எதிர்பார்த்தபடியே கருமங்கள் நடந்தன. பிரான்சிடமிருந்தோ பிசெயினிடமிருந்தோ எவ்வித உதவியும் கிடைக்கவில்லை. கிளெமெந்துப் போப்பாண்டவர் காலங்கடத்தினார். பின்னர் வழக்கைவிசாரிக்குமாறு உவல்சியையும் காடினல் கம்பெசோவையும் ஏற்படுத்தினார். ஆனால் நீர்ப்புக்கூற அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படவில்லை. ஒற்றேபர் மாதத்திலே கம்பெசோ இங்கிலாந்தையடைந்தார். ஆனால், விசாரணை அடுத்த யூன் மாதம்வரை ஆரம்பிக்கப்படவில்லை. தீர்ப்பு யூலே மாதத்திலே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் யூலே முடிவில் கம்பெசோ விசாரணையை மேலும் இரண்டு மாதத்துக்குத் தவணை போட்டார். இந்தத் தாமதம் என்றிக்கு ஆத்திரத்தையூட்டிற்று.

என்றி நடவடிக்கை எடுக்க நிச்சயித்தல்

இங்கிலாந்தில் அதிகாரமுடையவன் என்றிதான்; உவல்சி யன்றென்ற உண்மை இப்பொழுது உலகுக்குத் தெளிவாயிற்று. என்றி திடசித்தமும் தான் நினைத்ததைச் செய்வதற்கு இடையூறாக மரபு வழக்குக்களோ, நயநட்டங்களோ குறுக்கிடுவதைக் கவனியாத மனப்பான்மையும் உடையவன். இவை உவல்சியிடம் இடையா. முன்நிறைந்த அரசியற் பற்றைகளுக்கூடாகச் சாவதானமாக உவல்சி செல்வதைச் சனங்கள் பார்த்துக்கொண்டு நிற்க, என்றி அரசன் எருத்துமாடுபோலப் புதரில் திடீரெனப் பிரவேசித்தான்.

உவல்சியின் மானக்கேடு: உவல்சியின் மரணம் (1530)

என்றி உவல்சியைப் பதவியிலிருந்து நீக்கினான். போப்பாண்டவரின் பிரதிநிதியாக விருந்துகொண்டு, வெளிநாட்டு மன்றுகட்கு மேன்முறையீடு செய்வதைத் தடுக்கும் சட்டத்தை உவல்சி மீறியதற்காக அவன்மீது வழக்குத் தொடுக்குமாறு என்றி தனது சட்ட அறிஞருக்குக் கட்டளையிட்டான். இக்

குற்றச்சாட்டு அநீதியானது. அரசனுடைய விருப்பத்துக்கு இணங்க அவனுடைய சார்பாகப் பயன்படுத்துவதற்காகவே உவல்சி போப்பாண்டவர் பிரதிநிதிக்குரிய அதிகாரங்களைத் தான் பெற்றுக் கொண்டான். ஆனால் அவ்விடயம் தன்னைத் தப்புவிக்கமாட்டாதென உவல்சி உணர்ந்தான். உவல்சி உடனே அரசனுக்கு வணங்கித் தனது உடைமையெல்லாவற்றையும் "கருணைவாய்ந்த" தனது மன்னவனுக்குச் சமர்ப்பிப்பதாகக் கூறினான். என்றி அவனுடைய சொத்துக்களையும் வேத்தியற் சின்னத்தையும் கைப்பற்றிக்கொண்டு யோக்கினுள்ள குருபீடத்துக்கு அனுப்பினான். உவல்சியின் உதவி தனக்கு மறுபடியுந் தேவைப்படுமோ படாதோ என்பதை அவன் உடனே உணர்ந்துகொள்ள முடியவில்லை. உவல்சிக்குப் பகைவர்கள் பலர் இருந்தார்கள். இப்போது அவர்களுடைய கை ஓங்கிற்று. இராசத்துரோகக் குற்றச்சாட்டின் பேரில் உவல்சி யோக்குநகரிற் கைது செய்யப்பட்டுத் தெற்கே கோபுரத்திற் சிறையிருக்க அனுப்பப்பட்டான். அரசனிலும் மரணமே அவனுக்கு அதிக பரிவு காட்டிற்று. மனமுடைந்து பலங்குன்றி, நம்பிக்கையிழந்த உவல்சி இலீசுதரில் இறந்தான். உவல்சி இறக்குந் தறுவாயில், என்றி தூதன்மூலம் பதவிநீங்கியபின் சேர்த்துக் கொண்ட 1500 பவுணை என்ன செய்தாயென்று கேட்பித்தான். அரசனுக்குச் செலவு செய்த பெருந்தொகைப் பணத்தில், அரசன் கைப்பற்றியது போக உவல்சி கையிலிருந்தது அவ்வளவேயாகும் (குறிப்பு 41).

மூர் மண்டிலநாயகராதல் : போப்பாட்சிக்கெதிரான பூட்கை

உவல்சி வீழ்ச்சியடைந்த பின்னர் என்றி செய்த இரண்டு செய்கைகள் வருங்காலச் சரித்திரத்துக்கு மிக முக்கியமானவை. ஒன்று பாராளுமன்றத்தைக் கூட்டக் கட்டளை பிறப்பித்தமை ; மற்றது உவல்சியின் பின்னர் சேர் தோமசு மூரை மண்டிலநாயகராக நியமித்தமை. கடந்த 14 வருடத்தில் ஒரேயொருமுறை தவிரப் பாராளுமன்றங் கூடவில்லை. அரசன் சாதாரண மனிதரில் ஒருவனைத் தனது மனச்சாட்சிக்குக் காவலனாக அமர்த்தித் தனது அந்தரங்க அலுவலையெல்லாம் அவன் கையிலே கொடுத்து ஆட்சி செய்தல் அதனிலுங்கூடிய காலத்துக்கு நடைபெறவில்லை.[1] இவ்விரு சம்பவங்களும் ஒரு விடயத்தையே நெளிவுபடுத்தின. அதாவது அரசியலிலே திருச்சபையின் செல்வாக்குக் குன்றிவிட்டது. "அமைச்சனும்" பாமரனும் திருச்சபை வகித்துவந்த இடத்தை நிரப்பினர்.

திருச்சபையைக் கண்டித்தபொழுதெல்லாம் என்றி உண்மையில் போப்பாண்டவரின் அதிகாரத்தை இங்கிலாந்திலிருந்து அகற்றவே முயன்றான். உரோமன் கத்தோலிக்கச் சமயக்கோட்பாடுகளை அவன் கண்டிக்கவில்லை. அதற்கு மாறுகக் குடிகள் அச்சமயத்தைப் பின்பற்றவேண்டுமென அவன் வற்புறுத்தினான் என்பதைப் பின்னர் அறிவாம்.

[1]மண்டிலநாயகம் அரசனின் "மனச்சாட்சிக்குக் காவலன்" எனப்பட்டு வந்தான்.

சீர்திருத்தப் பாராளுமன்றம் : திருச்சபையின்மீது தாக்கல்

1529 இல் சீர்திருத்தப் பாராளுமன்றம் என்று வழங்கப்பட்ட பாராளுமன்றம் கூடிற்று. திருச்சபை சம்பந்தமாக மன்னன் வகுத்த திட்டத்தை நடைமுறையிற் கொண்டுவர அது ஆரம்பித்தது. முதலடி மென்மையான ஓரிடத்தில் விழுந்தது. இதுவரை பாதிரிமாரும், திருச்சபையும் மரணசாதன நிரூபணத்தின்போது பெருந்தொகையான பணத்தைப்பெற்று வந்தனர். அத்துடன் பிரேத ஊர்வலம் சம்பந்தமாகவும் பணங் கிடைத்தது. சில பாதிரிமார் விவசாயஞ் செய்தும் வியாபாரம் நடத்தியும் பணஞ் சேர்த்தனர். இந்த வருமானமெல்லாம் நிறுத்தப்பட்டன. பாதிரிகளிற் பலருக்கும் பலவழியாகக் குருமானியம் கிடைத்தது. இப் "பல்வகை மானியங்கள்" நிறுத்தப்பட்டன. அத்துடன் தலத்துவதியாமை வழக்கம் மன்னனின் அனுமதியின்றி யிருக்கக்கூடாதெனத் தடைசெய்யப்பட்டது. முன்னெல்லாம் இந்த அனுமதி போப்பாண்டவரால் வழங்கப்பட்டது. இப்பொழுது அரசன் இவ்வதிகாரத்தை எடுத்துக்கொண்டான். பாதிரிமாரின் உரிமைகளைக் குறைக்கும் விடயத்தில் அரசன் எடுத்த முதல் நடவடிக்கையிதுவே.

பிரிமுனேரிக்கட்டளை

பாராளுமன்றத்து இரண்டாம் வகுதலில், உவல்சி சிக்கிய வலையிற் பாதிரிமாருஞ் சிக்கவேண்டியேற்பட்டது. போப்பாண்டவரின் அதிகாரம் இங்கிலாந்திலு முண்டெனக் கூறும் பிரிமுனேரித்தண்டத்துக்கு உவல்சி ஆட்பட்டான். பாதிரிமாரும் அதே தண்டத்துக்காட்பட்டனர். கந்தபரிச் சங்கம் 10,00,000 பவுண் நன்கொடை கொடுத்து அரசனின் மன்னிப்பைப் பெற்றது. யோக்கு 18,000 பவுண் கொடுத்துப் பெற்றுக்கொண்டது. இவ்வகையில் பாமரரும் அக்குற்றத்துக்காட்பட்டனர். ஆனால் அரசன் கருணை கூர்ந்து அவர்களெல்லாரையும் பிரதியுபகாரமின்றி மன்னித்து விட்டான். "மன்னன் தாராள மனப்பான்மையுடனும், விசேட கருணையுடனும் பரிவு கொண்டு, வள்ளன்மை காட்டி" மன்னித்தானெனப் பாராளுமன்ற விதி இதனை வருணித்தது.

குருமானிய முதல்வரும்படிவிதி (1532)

அடுத்த பாராளுமன்ற வகற்காலம் வருமுன்னர் மன்னனின் தூதுவர்கள் அவனது விவாகநீக்கம் சம்பந்தமான முயற்சிகளை உரோமிற் செய்துவந்தார்கள். ஆனால் அதில் நன்மை கிடைக்கவில்லை. எனவே பாராளுமன்றம் திருகாணியை மறுபடியும் முறுக்கிவிட்டது. குருமானிய முதல்வரும்படிவிதி என்ற விதி நிறைவேற்றப்பட்டது. "அரசனும் அவனது குடிகளும் மற்றக் கிறித்தவ இராச்சியங்களில் இருப்பவர்களைப்போலவே பரிசுத்த திருச்சங்கத்துக்குப் பணிவுடையவராயும் பத்தியுடையவராயும் கத்தோலிக்கராயும் விநயமுடைய குழந்தைகளாயுமிருந்த போதிலும்" குரு

மானியத்தின் முதல்வருமானத்தைப் போப்பாண்டவர்க்குக் கொடுக்கும் வழக்கம் ஒழியவேண்டும்[1]. எந்த விசுப்பாண்டவர் அவ்வழக்கத்தைக் கைக்கொள்ளுகிறாரோ அவருடைய நிலமும்பொருள்களும் அரசனுற் கைப்பற்றப்படும். இதன்பயனுகப் புதியவொரு விசுப்பாண்டவரை நியமிக்கும் பட்சத்தில் போப்பாண்டவர் அதற்கு அனுமதிப்பத்திரமளிக்க மறுத்தால் அவருடைய அனுமதியின்றியே ஒரு விசுப்பாண்டவரைச் சக விசுப்பாண்டவர்மார் இருவர் நியமிக்கலாம். இவ்விடயத்திலே முதலில் அரசனும் பாராளுமன்றமும் மிகப் பலத்தைப் பயன்படுத்தாமல் அன்பாகக் கேட்டுப்பார்த்தல் வேண்டும். நடைமுறைக்குக் கொண்டுவருவதா இல்லையாவென்பதை அரசனே நிச்சயிக்க வேண்டும்.

ஆனுல் உரோமிலிருந்து எதுவுங் கிடையாவிட்டால் அதைப் பொருட்படுத்தாமலே கருமங்களை முடிக்க என்றி தயாராயிருந்தான்.

பல்கலைக்கழகங்களும், திருமண ஒழிப்பும்

என்றிக்கும் கதரினுக்கும் நடந்த திருமணம் சட்டத்துக்குப்பட்டதன்று, எனப் பலர் கருதினர். அரசனும் இக்கருத்தைக் கொண்டவர்களுடைய ஆதரவைப் பெற்றுத் தன் கருத்தை வலியுறுத்த முயன்றான். பல்கலைக்கழகங்களில் தகுதிவாய்ந்த குருமார்கள் கற்றனர். இப்பொழுது தனது திருமணம் பற்றி அவர்களுடைய தீர்ப்பைக் கேட்க என்றி விரும்பினன். உண்மையில், பிறநாட்டுப் பல்கலைக்கழகங்கள் மாறுபாடான விடைகளைக் கொடுத்தபோதும், ஒட்சுபோட்டு கேம்பிரிச்சுப் பல்கலைக்கழகங்கள் என்றியின் கருத்தையே கொண்டன.

உரோமுக்கு மேன்முறையீடு செய்தல் தடுக்கப்பட்டது

என்றிக்கும் கதரினுக்கும் நடந்த திருமணம் முறையற்றதென்று கிரான்மர் பிரகடனஞ் செய்தார். அரசன் ஆன்பொலினை வதுவை செய்த விடயத்தை அவர் கொண்டாடினர். விவாகச் சடங்கு இரகசியமாக நடைபெற்றது. பாராளுமன்றமும் இப்பொழுது தலையிட்டது. மரணசாதனம், விவாகம், விவாகநீக்கம் என்ற விடயங்கள் சம்பந்தமாகத் தற்போது ஒழுங்குசெய்யப்பட்டவை சம்பந்தமாகவேனும் இனிமேல் ஒழுங்கு செய்ய வேண்டுபவை சம்பந்தமாகவேனும் எவ்வித மேன்முறையீடுகளையும் உரோமுக்கு அனுப்பலாகாதென ஒரு சட்டத்தைச் செய்தது. இதற்கு மேன்முறையீட்டு விதியெனப் பெயர். இனிமேல் இத்தகைய முறையீடுகளைத் திருச்சங்க மேற்சபைக்கு அனுப்ப ஒழுங்கு செய்யப்பட்டது. இவ்வழி என்றி அதைக்கட்டுப்படுத்த முடியும்.

[1]இவ்வழக்கம் இவ்வளவில் முற்றுமொழியவில்லை. 1534 இல் செய்யப்பட்ட விதியொன்று குருமாவியமுதல் வருமானத்தை முற்றுமுழுக்கு வழங்கிற்று.

என்றி, ஆன் இருவருடைய திருமணமும் அங்கீகரிக்கப்பட்டது, உரோமுக்கு வழங்கப்படும் கட்டணம் நிறுத்தப்படல்

பாராளுமன்றம் ஐந்தாம் வைகலின்போது கூடியபொழுது கதரினின் விவாகநீக்கஞ் செய்யப்பட்டாள்— ஆன்பொலினின் விவாகம் உலகுக்குப் பிரகடனஞ் செய்யப்பட்டது. இம்மாதிரியான தீவிரகட்டத்தையடைந்தும் பாராளுமன்றம் தைரியமாயிருந்தது. "போப்பென்று வழங்கப்படும் உரோமாபுரி விசுப்பாண்டவர்" எனப் போப்பாண்டவரை அது முதன் முதலாக வருணிக்கத் தொடங்கிற்று. மேற்றிராசனத்தின் குருசங்கமும், உபஅத்தியட்சருமே இனி மேல் விசுப்பாண்டவரைத் தெரிவு செய்யவேண்டும். அன்றியும் தெரிவு செய்யும் உரிமை[1] என்ற அரசகட்டளைக்கிணங்கத் தெரிவு செய்யவேண்டும்; அக்கட்டளையில் அரசன் யாரைக் குறிப்பிட்டானோ அவரையே தெரிவு செய்யவேண்டும் என்றெல்லாம் ஒழுங்குபடுத்திற்று. அரசன் ஒரு கையால் உரிமையை வழங்கி மற்றைக்கையால் அதை எடுப்பது போலிருந்தது இப்புதியவொழுங்கு. பீற்றரின் அணு (பென்சு) என்ற கட்டணமும், உரோமுக்கு வழங்கப்பட்ட வேறு கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டன. அரசனுடைய அனுமதியின்றித் திருச்சபை சம்பந்தமான கட்டளைச் சட்டங் களொன்றுஞ் செய்யக்கூடாதெனவும் விதிக்கப்பட்டது. கடைசி நேரத்திலே தானும் போப்பாண்டவர் மனம் மாறினுல் அரசன் விருப்பப்படி இச்சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவரவோ நிறுத்தவோ அவனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. **முதல் அரச உரிமை விதிப்படி** கதரினின் விவாகம் செல்லுபடியாகாதெனவும், அவளுடைய மகளான மேரிக்குப் பட்டத்துக்கு உரிமை கிடையாதெனவும் விதிக்கப்பட்டது.

ஆதிக்கவிதி : என்றி இங்கிலாந்துத் திருச்சபையின் பெருந்தலைவனுதல்

பாராளுமன்றத்தின் ஐந்தாவது ஆறுவது வைகல்களுக்கிடையில், அரசனின் விவாக நீக்கஞ் சம்பந்தமாகக் கிரான்மர் செய்த தீர்ப்பைப் போப்பாண்டவர் தள்ளிவிட்டார். இதையறிந்த அரசன் "உரோமின் விசுப்பாண்டவரின் பெயரும், அவரைப்பற்றிக் கருவமாயும், அகங்காரத்துடனும் குறிப்பிடப்படும் பெருமையுரைகளும் எந்தப் பிரார்த்தனைகளிலும், ஆராதனை நூல்களிலும், தரிசனவிதிப்புத்தகங்களிலும் இருக்கக்கூடாதென வும் " அவருடைய பெயரையோ அவரைப்பற்றிய நினைவையோ ஒருபோதும் ஞாபகத்தில் வைக்கக்கூடாதெனவும் " அரசகட்டளை பிறப்பித்தான். இங்கிலாந்துத் திருச்சபையின் பெருந்தலைவனுக அரசனைப் பிரகடனஞ் செய்யும் ஆதிக்கவிதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டது. வேற்றுநாட்டு அதிகாரத் தாபனங்களுக்குக் கீழ்ப்படியமாட்டோமென்றும் இந்தப் பாராளுமன்றஞ் செய்யும் விதிகளையே ஏற்றுக்கொள்வோமென்றும் சத்தியப்பிரமாணஞ்

[1]Congé d elire

செய்யுமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். இச்சத்தியப் பிரமாணத்தைச் செய்ய மறுத்த மண்டிலநாயகன் சேர் தொமசு மூரும்[1] ஃபிஷர் பாண்டவர் பிசரும் சிறையிலிடப்பட்டனர்.

சிறிய மடங்கள் ஒழிக்கப்படல்

பாராளுமன்றத்தின் கடைசிக் கூட்டமான ஏழாவது வைகலின்போது [1]சிறிய மடங்களுக்கு முற்றுப்புள்ளிவைக்கப்பட்டது. இங்கிலாந்தில் முன்னெல்லாம் போப்பாண்டவர் செலுத்திவந்த திருச்சபை யதிகாரங்களை இப்பொழுது அரசன் கைப்பற்றிக் கொண்டதால், அந்தந்தத் துறவுக்குழுக்களைச் சேர்ந்த உத்தியோகத்தராலும் போப்பாண்டவரின் உத்தியோகத்தராலும் பரிபாலிக்கப்பட்டு வந்த மடங்களின் மேற்பார்வையாளனாக அரசன் நியமிக்கப்பட்டான். மேற்பார்வையென்பதென்ன வென்று அவர்கள் விரைவில் அறியத்தலைப்பட்டனர். 200 பவுண் வருட வருமானமில்லாத மடங்களெல்லாம் ஒழிக்கப்பட்டன. அவற்றின் நிலங்களை அரசன் கைப்பற்றினான். இந்தக் கடைசிக் கைங்கரியத்தையும் நிறை வேற்றிக்கொண்டு சீர்திருத்தப்பாராளுமன்றம் முடிவுற்றது. இச்சிறிய மடங்களிற் பல ஒழிக்கப்படத்தக்கவையே. மத்திய காலம் முழுவதிலும், மடங்களின் நிலைமைபற்றி ஆராய்ந்து அவ்வப்போது தகுந்த நடவடிக்கைகளெடுக்கப்பட்டு வந்தன. சிறிய மடங்கள் சிலவற்றில் ஊழல்களிருப்பதை உவல்சி அறிந்து அவற்றை ஒழித்துக்கட்டினான். எனவே எனறி இப்பொழுது எடுத்து வந்த நடவடிக்கையை வெகு சிலரே எதிர்க்கக்கூடியதாயிருந்தது. இச்சிறு மடங்கள் பயனற்றவையாகவும், சோம்பலுக்கும், வேறு தீமைகளுக்கும் உறைவிடமாகாவுமிருந்தன.

சீர்திருத்தம் ஓர் அரசியல் இயக்கம்

என்றியும் அவனுடைய பாராளுமன்றமும் செய்ததொண்டுகளை ஆராயுமிடத்து இருவிடயங்கள் தெளிவாகின்றன. அரசியலையே அடிப்படையாகக் கொண்ட இத்தகைய சீர்திருத்தம் முன்னெருபோதும் ஏற்பட்டதில்லை. நீதி, நியாயம், பற்று என்பவை குறுக்கிடவில்லை. எல்லாம் காரியபூர்வமான வகையிற் செய்யப்பட்டன. போப்பாண்டவரின் அதிகாரத்தை நீக்க முயன்றவர்களின் முக்கியமான நோக்கம் உரோமுக்கு இங்கிலாந்திலிருந்து பணம் போகாது தடை செய்வதே (குறிப்பு 42).

[1]பாராளுமன்றத்தினால ஏற்றுக்கொள்ளப்பட்ட விவாக நீக்கத்தையும், போப்பாண்டவருக்கு எதிரான சட்டங்களையும் மூர் ஏற்றுக்கொண்டார்; மன்னனின் ஆதிக்கத்தை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை.

முடியின் அதிகாரம் அதிகரித்தல்

இரண்டாவதாக மற்றெரு விடயங் கவனிக்கத் தக்கது. போப்பாண்டவரின் அதிகாரத்தை அகற்றிய சீர்திருத்தப் பாராளுமன்றம் ஆங்கிலர் சரித்திரத்தில் அரசனுக்கு முன்பின்னெருபோது மில்லாத அதிகாரங்களை வழங்கிற்று. போப்பாண்டவரின் அதிகாரம் முழுவதையும் திருச்சபைகளுக்குச் சொந்தமான பெருந்தொகை நிலங்களையும் கைப்பற்றிய அரசனுக்கு அவன் விருப்பப்படி சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வரவு மதிகாரமளிக்கப்பட்டது. அரசுக்கு உரிமையுடையவரை நியமிக்கும் உரிமையும் அவன் கையிலேயே விடப்பட்டது. இராசத்துரோகவிதியென ஒரு புதியவிதி அவன் கையிலிருந்தது. அதன்பிரகாரம், அரசனுக்கு எதிராக **மனத்தால் நினைப்பதுதானும்** இராசத்துரோகமெனக் கருதப்பட்டது.

தோமசு குரம்வெல்: குரம்வெல் விக்கர் செனரல் ஆதல்: மூர், பிசர் ஆகியோரைத் தூக்கிலிடல்: "அருள்யாத்திரை" எனப்பட்ட குழப்பம் 1536: குரம்வெல்லைத் தாக்கல்: வடக்கேயுள்ள ஏள்களும் கலகக்காரரைச் சேர்ந்தனர்: புரட்சி அடக்கப்பட்டது.

சீர்திருத்தப் பாராளுமன்றத்தின் வேலைகளை என்றியின்கீழிருந்து உருப்படுத்துவதிற் பெரிய பங்கெடுத்தவன் **தோமசு குரம்வெல்.** மேலே கூறிய இரு அமிசங்களும் இவனிடத்திலே பிரதிபலித்தன. இவன் ஒரு நியாயவாதி; வட்டிக்குப் பணம் கொடுத்துப் பெரும் பொருள் தேடினான். பிரதிநிதிகள் சபை அங்கத்தவனாகவுமிருந்தான். இவன் உவல்சியின்கீழ்ப் பணியாற்றியவன். ஆனால் உள்ளத்திலே மிகுந்த இராச விசுவாசமுள்ளவன். காடினலுக்குச் சார்பானவனன்று. இளம் வயதில் இவன் இத்தாலியிலிருந்ததனால் அங்கே வல்லாட்சிமுறை எவ்வாறு கொடுரமாக நடைமுறையிற் கொண்டுவரப்பட்டதென்பதை நேரிலறிந்தவன். அரசனைச் சருவாதிக்கமுடையவனாக்குவதில் அவன் எவ்விதத் தடைகளையும் பொருட்படுத்தாது முயன்றவன். ஆதிக்க விதியின்கீழ் "விக்கர் செனரலாகக்" கடமையாற்றிய இவன் திருச்சபையை அரசன் ஆணைக்குக் கீழே கொண்டுவருதற்குரிய நடவடிக்கை யெல்லாவற்றையுமெடுத்தான். அரச அனுமதி பெற்றவர்களை உபதேசஞ் செய்யலாமெனவும் விதித்தான். ஆதிக்கவிதிக்குச் சார்பாகப் பாதிரிமார் உபதேசஞ் செய்யுமாறு நிர்ப்பந்தப்படுத்தினான். முதலிற் சிறிய மடங்களை ஒழித்தான்; பின்னர் பெரிய மடங்களை ஒழித்தான். அவற்றுக்குரிய சொத்துக்களை முடிக்குரிமை ஆக்கினான். எதிரிடையாக நின்றவர்களை நிர்மூலம் பண்ணினான். ஆதிக்க விதியை எதிர்த்த சேர் தோமசு மூரையும், சிறந்த அறிஞரும் தூய வாழ்க்கை நடத்திய ஒழுக்கமுள்ள பிசர் என்ற விசுப்பாண்டவரையும் சிரச்சேதஞ் செய்வித்தான். அதே குற்றத்தின்பேரில், சாட்டர் கவுசைச் சேர்ந்த பல பாதிரிமாரை ஒன்றுசேர்த்துக் தூக்கிலிடுவித்தான்; சிலரை நியூ

கேட்டிலே சங்கிலியிற் பூட்டி இறந்துபோக விட்டான். சிறிய மடங்களை ஒழித்ததன் பயனாக 1536 இலே வடக்கே குழப்பமுண்டானபோது குரம் வெல் அஞ்சவில்லை. இக்குழப்பம் "அருள்யாத்திரை" என வழங்கப் பட்டது. சமயத்துக்கு ஆபத்து வந்துவிட்டதென்ற உண்மையான உணர்ச்சி பெற்ற மக்களாலேயே இக்குழப்பம் தொடக்கப்பட்டபடியால் இது கொடிய வினைவுகட்கேதுவாயிருந்தது. வடக்கேயுள்ளவர்கள் தெற்கிலுள்ளவர்களை லும் பார்க்கக் கத்தோலிக்க சமயத்தில் வைராக்கியமுடையவர்கள்; புதிய கருத்துக்களை அவர்கள் அதிகம் வரவேற்கவில்லை; மடங்களுக்கு உண் டான ஆபத்துக் கடைசியில் திருச்சபைகளுக்குமுண்டாகக் கூடுமென அவர் கள் எண்ணினர். குழப்பக்காரருக்கு உரோபெட்டு ஆசுக்கு என்பவர் தலைமை தாங்கினர். கிறித்துநாதரின் ஐந்து ஊறுகளைத் தமது கொடிக்குச் சின்னமாகக் கொண்டனர். மடங்களை மறுபடியும் அமைக்கவேண்டுமென் றும், சீர்திருத்தஞ் செய்யும் விசுபாண்டவர்களைக் கலைத்துவிடவேண்டுமென் றும் குரம்வெல்லை நாடுகடத்த வேண்டுமென்றும் கலகக்காரர் கோரி னர். இக்கடைசிக் கோரிக்கை வடக்கேயிருந்த பிரபுக்களையும் இக்கலகத்தை ஆதரிக்கச் செய்தது. அவர்கள் குரம்வெல்மீது பயமும் வெறுப்பும் கொண்டனர். பழைய பிரபுக்கள் குரம்வெல் நச்சுப்பாம்பெனவும், புதிதாக உயர்வுற்றவனெனவும் எண்ணினர். பேசிக் குடும்பத்தவரும் வெசுற்று மோலந்து, இலத்திமர் பிரபுக்களும் போர்க்குசயரைச் சேர்ந்த தேக்கர் எனும் என்ற இத்தகையோரெல்லாருஞ் சேர்ந்தனர். இவர்கள் இங்கிலாந்திலுள்ள திறமையிக்க சேனையைத் திரட்டினர்கள். குருமாரும், குருசிரேட்டர்களும் யுத்தகளத்திலே திரண்டனர். பாளிங்குக் குருசிரேட்டர் யுத்த உடையிற் குதிரைமீது சென்றார். என்றி கலகக்காரருடன் யுத்தஞ் செய்யுமாறு நோபோக்கை அனுப்பினான். அவர் யுத்தஞ் செய்வதற்குப் பலமற்றவராயிருந்தபடியால் சமதானஞ் செய்யுமாறு கட்டளையிடப்பட்டார். என்றி வாய்ப்புப்பார்த்துக் கொண்டிருந்தான். கலகக்காரர் கலைந் தனர்; ஆனால், மறுபடியும் கலகம் தொடங்கியதன் விளைவாக அரசனும் குரம்வெலும் சமாதான உடன்படிக்கையில் விட்டுக்கொடுத்த சலுகைகளை நிராகரித்தனர். கலகத்தலைவர்களைக் கைது செய்தனர். தாசிபிரபு, அசிபிரபு, நாலு பெரிய மடங்களின் அத்தியட்சக் குருமார் ஆகிய எல் லோரும் தூக்கிலிடப்பட்டனர். வடபகுதியெங்குமுள்ள ஏனைய கலகக்கார ரிற் பலரும் தூக்குத் தண்டனை பெற்றனர். ஆதிக்க விதியின் கருத்து இதுவென விளக்குவதற்கு இவை உதாரணமாயமைந்தன.

பெரிய மடங்கள் கலைக்கப்படல்

"அருள்யாத்திரை" தோல்வியடைந்தமையால் பெரிய மடங்கள் வீழ்ச்சி யுற்றன. சில மடங்கள் இராசத்துரோகக் குற்றத்துக்காகப் பறிமுதல் செய்யப்பட்டன. மற்றவை அரசனுக்கடங்குவதே புத்தியென வெண்ணி யடங்கின. பாதிரிமாருக்கு உபகாரச்சம்பளம் வழங்கப்பட்டது. புதிதாக ஏற்

படுத்தப்பட்ட ஆறு விசுப்பாண்டவர் கோவிற்பற்றின்மேற் ஆறு பெரிய மடங்கள் இலௌகிகக் கினைகளாக மாற்றியமைக்கப்பட்டன. அவற்றின் சொத்தில் ஒரு சிறு பகுதி பாடசாலைகள் தொடங்கப் பயன்படுத்தப்பட்டது. ஒரு சிறு பகுதி கரைப்பகுதியிலே கோட்டைகளமைக்கப் பயன்படுத்தப் பட்டது. பெரும்பகுதி அரசனால் அபகரிக்கப்பட்டது. அவற்றிற் பெரும் பாகத்தை அவன் தனது அமைச்சருக்கும், அரசவைப் பிரபுக்களுக்கும் மானியமாக வழங்கினான். பலவற்றை விற்றான். சிறிது காலத்துள் அவை பல கைப்பட்டுவிட்டன. அதனால் சமயச் சீர்திருத்தம் மாறாது நிலை பெறுவதற்கு இங்கிலாந்திலே வசதியுண்டானது. இங்கிலாந்து மறுபடியும் உரோமச் சமயச்சூழ்ச்சிக்குட்படுமானால் அவ்வாறு கைப்பற்றப்பட்ட நிலங் களைத் திருப்பிக் கொடுக்க வேண்டியேறபடும். சில வருடங்களில் இவ் வாறு பகுத்துக் கொடுக்கப்பட்ட கோவிற் காணிகளில் 40,000 குடும்பங்கள் உரிமை கொண்டாடின. இந்த 40,000 பேரும் தடித்த புரட்டசுத்தாந்த வாதிகளாவர். மேரி அரசி பிற்காலத்திலே உரோமன் கத்தோலிக்க சமயத்தை மறுபடியும் தாபிக்க முயன்றபோது அதற்குப் பேரிடையூறு யிருந்தது இந்த விடயமே. இந்நிலங்களை வலோற்காரமாகத் திருப்பி யெடுக்கவும் முடியாதிருந்தது. பணங்கொடுத்து வாங்குவதற்கும் அவளி டம் பணமிருக்கவில்லை. பெரிய மடங்கள் நிலைகுலைந்ததால் இங்கிலாந்தின் பொருளாதார நிலையிற் பெரிய மாற்றங்களுண்டாயின. பாதிரிகள் பெரிய நிலக்கிழார்களாயிருந்தனர். அவர்கள் அனுசரித்த முறை பழங்கால முறை. தொழிலாளர் விடயத்தில் அவர்களுடைய முறை வீண்செலவுக் கேதுவானது. இப்பொழுது புதிய நிலக்கிழார்களும் புதியமுறைகளும் தோற்றின. ஆட்டுவளர்ப்பும், அடைப்பு முறையும் கைக்கொள்ளப்பட்ட மையாற் குறைந்த ஆட்களே வேலைக்கமர்த்தப்பட்டார்கள். அதனால் வேலை யில்லாத் திண்டாட்டமும் அதனாலேற்படும் துன்பங்களும் மலிந்தன.

என்றியின் திருமணங்களும் அரசரிமையும்: இங்கிலாந்தின் பொருளியல் வாழ்க்கையிலுண்டான விளைவு

அருள்யாத்திரைக் குழப்பமுண்டான அடுத்த வருடத்தில் என்றியின் வாழ்க்கையில் ஒரு பெரிய சம்பவம் நிகழ்ந்தது. 1533 இல் அவன் ஆன் பொலினை மணந்தான். அவர்களுக்கு இலிசபெது என்ற குழந்தை செத்தம்பரிலே பிறந்தது. தனக்கு ஒரு மகன் பிறக்கவேண்டுமென்று என்றி விரும்பினான். அது நிறைவேறவில்லை. உண்மையில் ஆனுக்குப் பிறந்த ஆண்குழந்தை அரகன்நாட்டுக் கதரினுக்குப் பிறந்த குழந்தை போல, பிறந்த உடனேயே இறந்துவிட்டது. 1936 ஆம் ஆண்டு சனவரி யிற் கதரின் இறந்தாள். அரசனின் அலட்சியத்துக்குத் தான் ஆளா யிருப்பதை ஆன் உணர்ந்துகொண்டாள். தனது சக்களத்தியான கதரினு டைய மரணைச் சடங்குகள் நடைபெற்றபொழுதே ஆன் தன்னுடைய கதி என்னவாகுமென்பதை யறிந்துகொண்டாள். அவளுக்கு மறுபடியும் ஒரு

ஆண்மகவு பிறந்து இறந்த மூன்று மாதங்களுக்கிடையிலே அவள் கைது செய்யப்பட்டு, விசாரணை செய்து சிரச்சேதஞ் செய்யப்பட்டாள் (1536 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் தேதி). அந்த மாதம் முடிவதற்குள்ளே என்றி மூன்றாவது மணவியாக சேன்செய்மூர் என்பவளே விவாகஞ் செய்தான். சேனுக்கு என்றி நெடுநாளாக ஆசைப்பட்டபடி ஒரு மகன் பிறந்தான். 1537 ஒற்றேபரிற் பிறந்த இம்மகனுக்கு எட்டுவேட்டு எனப் பெயர் வழங்கப்பட்டது. தாய் அவன் பிறந்து பத்துநாட்களில் இறந்து விட்டாள். சேனே என்றி மணஞ்செய்தபொழுது என்றியின் ஏனைய அரசிகள் இருவரும் இறந்துபோனபடியால், சேனுக்குப் பிறந்த மகன் பட்டத்துக்குரிமை பெறுவான் என்பதில் எள்ளளவும் சந்தேகமிருக்க வில்லை. என்றியின் எஞ்சிய காலம் அவ்வளவு சிறப்புடையதன்று; முன்னேற்றமோ, பிற்போக்கோ இல்லாத காலம். அதுவரை நடத்திய கருமங்களைச் சிலர் பார்த்துத் துக்கமுற்றனர். வேறுசிலர் திருத்தங்களுக்குத் திடீரென முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டதேயென நினைந்தனர். ஆனால் இவ்வகையினர் சிறு கட்சியைச் சேர்ந்தவர்களே. மக்களிற் பெரும்பாலோர் தற்காலிகமாகத் திருத்தியடைந்தவராய்க் காணப்பட்டனர். அரசனும் திருத்தியடைந்தவனாய்க் காணப்பட்டான்.

விவிலியமொழிபெயர்ப்பு; "பெரிய விவிலிய நூல்"

விவிலிய நூலின் மொழிபெயர்ப்புவிடயமாக முக்கியமானவொரு நடவடிக்கையெடுக்கப்பட்டது. திண்டிலின் மொழிபெயர்ப்புக்கள் வெளிநாட்டில் அச்சடிக்கப்பட்டுக் கள்ளத்தனமாக இங்கிலாந்துக்குக் கொண்டுவரப்பட்டன. அவற்றிற் பெரும்பாலானவை நாசமாக்கப்பட்டன. குரம்வெல் என்பவன் மைல்சுகவடேலே ஒரு புதிய மொழிபெயர்ப்பைச் செய்யுமாறு கேட்டான். 1537 இல் இந்த மொழிபெயர்ப்பைத் திண்டிலின் மொழிபெயர்ப்புடன் யோன் உரோசேசு என்பவர் சேர்த்து மதியு, என்றதம் புனைப் பெயரோடு வெளியிட்டார். அதற்கு அங்கீகாரமளிக்குமாறு அரசனேவேண்ட, அவன் அவ்வாறே செய்தான். இரான்மர் அதற்கு முகவுரை யெழுதினர். "பெரிய விவிலியநூல்" என்றழைக்கப்பட்ட இந்நூல் திருச்சபைகளால் பயன்படுத்தப்பட்டது. தனிப்பட்டவர்களும் இந்நூலைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டனர். 1543 இலே "விவசாயிகளும், தொழிலாளரும் உயர்வகுப்பைச் சேர்ந்த பெண்களைத் தவிர ஏனைய பெண்களும்" இந்த விவிலிய நூலைப் பயிலக்கூடாதெனத் தடைவிதிக்கப்பட்டனர். 1544 இலே கூட்டுப் பிரார்த்தனையும், 1545 காலே மாலைப் பிரார்த்தனைக்குரிய தேவாராதனையும் ஆங்கிலத்திலே பிரசுரிக்கப்பட்டன.

கத்தோலிக்கக் கோட்பாட்டை என்றி ஆதரித்தல்: ஆறுகட்டளைகள் (1539)

இவ்வாறு விவிலியநூலை மக்கள் வாசிக்க அனுமதியளிக்கப்பட்ட போதிலும், பழைய சமயக்கொள்கைகளை விடுமாறு மக்களுக்கு ஊக்கமளிக்கப் படவில்லை. திருச்சபையின் கோட்பாடுகளில் அவர்கள் நம்பிக்கைவைக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. பிரபுக்களின் தலைவரான நோபக்குக் கோமகன் இரான்மரையும் சீர்திருத்தவாதிகளையும் எதிர்த்தார். வின் செசுற்றர் விசுப்பாண்டவரான காடினரும், இலண்டன் விசுப்பாண்டவரான பொனரும் அவ்வாறே எதிர்த்தனர். என்றிகூட எதிர்த்தான். சீர்திருத்தமென்ற பொங்கும் அலைக்கு அணைபோல இவர்களெல்லாருஞ் சேர்ந்து **ஆறுகட்டளை**களென்ற நியதிச் சட்டத்தைப் பிறப்பித்தனர். அவர்களுடைய மனப்போக்கை அச்சட்டத்திலே காணலாம். (1) திருமாறுபாட்டுக் கோட்பாடு என்னும் கோட்பாட்டை வற்புறுத்தல் (2) ஒருவகைச் சற்பிரசாதக் கொள்கையைக் கடைப்பிடித்தல் (3) குருமார் விவாகஞ் செய்தல் சட்டவிரோதமெனக் கொள்ளல் (4) கற்புவிரதங்காத்தல் (5) தனிப்பட்ட ஆராதனை செய்தல் (6) தற்பிழையொப்புக்கோட்பாட்டைப் பயன்படுத்தல் என்பனவே இவ்வாறு கட்டளைகளாகும். பழைய மதக்கொள்கையின் முக்கியமான அமிசங்கள் இவற்றிலே அடங்கியிருத்தலைக் காணலாம். முதற்கட்டளையை முதன் மீறியவர் மரணதண்டனைக்காளாவர் எனவும் ஏனைய கட்டளைகளை இரண்டாம்முறை மீறியவர்க்கும் அதே தண்டனை விதிக்கப்படுமென்றுஞ் சட்டஞ் செய்தபின், இவ்வாறு கட்டளைகளுக்கும் அடங்கி நடப்பவரைப் பரநெறியாளர் என எச்சந்தர்ப்பத்திலுஞ் சொல்லமுடியாதென்ற கொள்கையுடன் பாராளுமன்றம் திருத்தியடைந்தது.

புரட்டசுத்தாந்த நட்புறவிற்குக் குரம்வெல் முயலுதல்: அவன் தோல்வி அவன் சிரச்சேதம் செய்யப்பட்டமை

பழைய சமயக்கொள்கைகளை மாற்ற முயற்சிசெய்வோருக் கெதிராக இவ்வாறு மிகத் தெளிவாய் அரசாங்கம் தனது கொள்கையைக் கூறியதைத் தொடர்ந்து குரம்வெல் அதிகாரத்திலிருந்து வீழ்ந்தான். 1539 இல் சேர்மனியிலிருந்த புரட்டசுத்தாந்திய இளவரசரைப் பலப்படுத்துவதற்காக இங்கிலாந்தில் சம்பந்தந் தேடமுற்பட்ட குரம்வெல், கிளீபிசுக் கோமகனின் சகோதரியான ஆன் என்பவளைக் கலியாணஞ் செய்துகொள்ள வாக்களிக்குமாறு என்றியைத் தூண்டினான். எனினும் இத்தொடர்பு முதலிற் சிலவரவில்லை. ஆனால் நாலு வருடமாக மனைவியின்றியிருந்த என்றி, இப்பொழுது தனது வாக்குறுதியைக் காப்பாற்ற விரும்பினான். ஆன் மிக அழகுவாய்ந்தவளென என்றிக்குக் கூறப்பட்டது. ஆனால் அவள் எளிமையே உருவானவள்; கலியாண வைபவத்தில் என்றி மனதை அடக்கிக்கொண்டான். பின்னர் அந்த "பிளாந்தேசைச் சேர்ந்த பெண்குதிரை"யை விவாக நீக்கஞ் செய்து

கொண்டான். குரம்வெல்லைக் கோபித்தான். நோபக்குக் கோமகன் தலைமையிற் குரொம்வெலின் எதிரிகள் அவனுக்கு மாறுக எழுந்தனர். அர்த்தமில்லாத இராசத்துரோகக் குற்றச்சாட்டின்பேரில் அவன் விசாரணை செய்யப்பட்டுச் சிரச்சேதஞ் செய்யப்பட்டான் (1540) (குறிப்பு 43).

1540 தொடக்கம் 1547 வரை எவ்வித முக்கிய சம்பவமும் நிகழவில்லை. கொத்துலாந்துச் சரித்திரம் கூறுமிடத்து கொத்துலாந்துடன் நடந்த சண்டை விவரிக்கப்படும. அரசன் மறுபடியும் இருமுறை விவாகஞ் செய்தான். முதலிற் கதரின் அவேட்டை மணந்தான். அவள்தூட்ட நடத்தைக் காரியென்ற குற்றச்சாட்டின் பேரிற் சிரச்சேதஞ் செய்யப்பட்டாள். பின்னர் கதரின்பார் என்பவளை மணந்தான். அரசாங்கம் தனக்குள்ள கடன்களை இலேசாகத் தீர்த்தற்கு ஒழுங்கு செய்வதற்காக, நாணயம் மிக இளக்கமாக்கப்பட்டது. ஆனல் அதனலுண்டான பலாபலன் ஆறுவது எட்டுவேட்டு ஆட்சிக்காலத்தையே சேர்ந்ததெனலாம். என்றி மன்னன் செய்த கடைசிச் செயல் நோபக்குக் கோமகனின் மகனை சிறேபிரபுவை அரசைக் கைப்பற்ற விரும்பினன் என்ற குற்றச்சாட்டின் பேரிற் கொல்வித்ததாகும்.

கொலேத்தண்டனை செய்யும் சேவகனின் கோடரியுடன் ஆரம்பித்த என்றியின் ஆட்சி அவ்வாறே முடிவுற்றது. கோடரியும், தூக்கிடும் கயிறும் இக்கால ஆட்சியில் முக்கியத்துவமடைந்தமையால் இவ்வாட்சிக்காலம் இரத்தப் பிரவாகமுள்ள ஆட்சியென எடுத்தாற்போல் நினைக்கத் தோன்றும். ஆனல் அக்கால மக்கள் அவ்வாறு எண்ணவில்லை. உரோசுச் சண்டைகளின் நீண்ட குழப்பம் முடிந்ததும் ஏழாம் என்றியின் காலத்தில் அந்தப்பயம் இருந்தே வந்தது. எட்டாம் என்றிகாலத்தில் அது ஒழிந்து எங்கும் செழிப்பும் சமாதானமும் நிலவின. இங்கிலாந்து திருந்திய என்றியினுட்சியில் ஒன்றிய மகிழ்ச்சியில் திளைத்தது. கடைசிவரை அவன் புகழ் மாயவில்லை. அவனிடம் கருணையில்லை; நியாயமில்லை; விசுவாச மற்றவனுய் விளங்கினன்; நன்றியில்லாக் குண முடையவனுயிருந்தான். தனக்குத் தேவையான தென்னவென்றும் இங்கிலாந்துக்குத் தேவையான தென்னவென்றுமறிந்து அவற்றைப் பெற்றுத் தனக்கு வேண்டியதை எடுத்துக்கொண்டு மற்றதைக் கொடுத்தான். அறம் அவனுக்கும் புறம்பானது.

3 ஆம் அதிகாரம்

1329 ஆம் ஆண்டு தொடக்கம் 1542 வரை கொத்துலாந்தின் நிலை. 14 ஆம் நூற்றுண்டிலிருந்து கொத்துலாந்தின் நிலை

இங்கிலாந்தையும் கொத்துலாந்தையும் ஒன்றுயிணைப்பதற்கு முதலாம் எட்டுவேட்டு போட்ட திட்டம் கடைசிமுறையாகத் தோல்வியடைந்த பின்னர் இவ்விரு நாடுகளும் ஒன்றேடொன்று அதிகம் தொடர்புற்றிருக்கவில்லை. அயலவராயிருந்தாலும் தொல்லை கொடுப்பவராகவேயிருந்தனர். எல்லைப் புறத்தில் எப்பொழுதும் சண்டை நிகழ்ந்தது. கொத்துலாந்து பிரான்சுடன் எப்பொழுதும் நட்பாகவேயிருந்தது. சிறு சிறு சண்டைகள் அடிக்கடி பெரிய யுத்தமாக மாறின. அவற்றிற் கொத்துலாந்தே பெரும்பாலும் தோல்வியடைந்து வந்தது. ஐக்கியத்துக்கான முன்னேற்றமெதுவுமுண்டாகவில்லை. இப்பொழுது இருநாடுகளும் ஒரேநோக்கும் ஒரேபற்றுமுடையனவாய்ச் சமயத் துறையில் ஒன்றுபடுங்காலம் வந்தது. இலட்சிய ஒற்றுமை இரு நாடுகளையும் நெருங்கி உறவாடச் செய்தது. இலிசபெது அரசியின் அறிவு நட்பமும், நற்பேறும் ஒன்று சேர்ந்து முதலாம் சேமிசு மன்னன் காலத்தில் இரு நாடுகளையும் ஒருகுடைக்கீழ் ஒன்றுபடுத்தின. இருநூறு வருடமாக இவ்விரு நாடுகளும் பகைமை சாதித்து வந்தன. சற்றில் இவை எவ்வாறு ஒன்றுபட்டனவென்பதைச் செவ்விதிலறிந்துகொள்ளக் கொத்துலாந்தில் இரண்டு நூற்றுண்டாக நிலவிய கொள்கையையும் சமூக நிலையையும் அறிவது அவசியம் (குறிப்பு 45).

உரோபெட்டு புறூசின் மரணம் (1329)

உரோபெட்டு புறூசு 1329 இலே இறந்தான். நோதாந்தன் பொருத்தத்திற்குப் பின்னர் ஓராண்டே இவன் உயிர்வாழ முடிந்தது. அவனுக்குப் பின்னர் ஐயாட்டைப் பராயத்தனன அவன் மகன் இடேவிட்டு அரசனனன்.

14 ஆம் நூற்றுண்டிலே கொத்துலாந்தின் அரசியற் பூட்கையின் சிறப்பியல்புகள்

இரண்டாம் இடேவிட்டு மன்னனுட்சியிலும் சதுவட்டு மன்னராட்சிக் காலத்திலும் நிகழ்ந்த கொத்துலாந்துச் சரித்திரத்தைத் தொடர்பாகக் கூறுவது இவ்வத்தியாயத்தின் நோக்கமன்று. அக்காலத்திலே நிலவிய பொதுத் தன்மைகளெவையென்பதைக் குறிப்பிடுவதே இதன் நோக்கம். முதலில் கொத்துலாந்தின் அதிகாரம் வாய்ந்த அயல்நாடென்ற முறையில் **இங்கிலாந்துடன் அதற்கிருந்த பிரதான தொடர்புகளை நோக்குவோம்.** எனெனில்

இங்கிலாந்தின் செல்வாக்கு கொத்துலாந்தின் அரசியலைப் பெரிதும் பாதித் திருக்கும். இரண்டாவதாக இங்கிலாந்துக் கெதிராகப் பிரான்சும் கொத்து லாந்தும் பொதுப்படையான வைரங்கொண்டிருந்தமையால், **பிரான்சுடன் அது கொண்ட நிரந்தரமான நட்பைப்பற்றி** ஆராய்வோம். மூன்றுவதாக அரசர்க்கு அல்லும் பகலும் தொல்லைகொடுத்து நாட்டின் முன்னேற்றத் துக்கு இன்னல் விளைத்த பலம் பொருந்திய கொத்துலாந்துப் பிரபுக்களைப் பற்றியும் கொடுமைமிக்க மலைநாட்டு வாசிகளைப்பற்றியும் ஆராய்வோம். **இது உள்ளூர்க்குழப்ப மென்ற** தலைப்பில் ஆராயப்படும். இருநூறு வருடங் களாக வெளிநாட்டிலிருந்து வந்த பகைப்படைகளாலும் உள்ளூர்க் கல கங்களாலும், கொத்துலாந்து இன்னலுற்றது.

இரண்டாம் இடேவிட்டு (1329–70)

இங்கிலாந்துடன் போர் (1333)

இரண்டாம் இடேவிட்டின் ஆட்சிக்காலத்திலே படையெடுப்பும், கலகமும் கொத்துலாந்தில் எற்பட்டன. யோனின் மகனை எட்டுவேட்டு பலியலும், இங்கிலாந்துக்கு ஆதரவாயிருந்தமையாற்றமது "நிலபுலங்களையிழந்த" கொத்துலாந்துப் பிரபுக்களும், உரோபட்டு மன்னனிறந்ததும், இழந்த தமது சொத்துக்களைப் பெறலாமென்ற நோக்கத்துடன் குழப்பஞ்செய்ய முற் பட்டனர். 1332 இலே, பேத்து நகருக் கண்மையிலுள்ள இடப்பிளின் மூர் என்ற இடத்தில் அரசனின் படைகளைப் புறங்கண்டு, எட்டுவேட்டு பலியலைச் சேவை மானியமுறையரசனாக முடிசூட்டினர். நாலு மாதத்தில் அவனைக் கொத்துலாந்திலிருந்து கலைத்துவிட்டு 1333 இல் மூன்றும் எட்டுவேட்டு வடக்கே சென்று **அலிடன் குன்றிலே** கொத்துலாந்து மக்களை முறியடித்தான். ஆங்கிலர், கொத்துலாந்தை அடிப்படுத்தினர். எட்டுவேட்டு பலியல் திரும்பி வந்தான்; இடேவிட்டு இளவல், பாதுகாப்புக்காகப் பிரான்சுக்கு அனுப்பப்பட்டான். ஆனால் எட்டுவேட்டு பிரெஞ்சுச்சண்டைகளிலீடுபட்டான். 1337 இல் எட்டுவேட்டு பலியலைநாட்டை விட்டுக் கலைத்தனர். பின்னர் படிப்படியாக, இழந்த கோட்டைகளைச் கொத்துலாந்து மீளப் பெற்றுக் கொண்டது.

பிரான்சு, கொத்துலாந்து நட்புறவு

மூன்றுவது எட்டுவேட்டின் தலைமை நோக்கம் பிரான்சுக்கும் கொத்துலாந் துக்குமுள்ள நட்புறவை முறிப்பதாகும். கொத்துலாந்தை அடிமைப்படுத் தலாமென்று அவன் போட்ட திட்டம் தோல்வியுற்றது. எனவே வேறு சூழியல் முறைகள் பலவற்றை அவன் அனுசரித்தான். பிரெஞ்சு நட்பைக் கைவிட்டால் 1334 இலே பலியல் தன்னிடம் ஒப்படைத்த தாழ்நிலப் பிரதேசங்களைக் கொத்துலாந்துக்குக் கொடுப்பதாக வாக்களித்தான். 1341 இலே பிரான்சிலிருந்து திரும்பிய இரண்டாவது இடேவிட்டு, சற்றில்

தான் பிரான்சுடனேயே நிற்கவேண்டுமென முடிவு செய்தான். 1346 இல் மூன்றுவது எட்டுவேட்டு கலேநகரை முற்றுகையிட்டபொழுது இடே விட்டு இங்கிலாந்தின்மீது படையெடுத்தான்.

கொத்துலாந்து நெவில்சுக் குறுசுப் போர்க்களத்தில் தோற்கடிக்கப்பட்டமை (1346)

தறமுக்குச் சமீபத்திலுள்ள **நெவில்சுக்குறுசு** என்ற போர்க்களத் தில் அவனுடைய படை தோற்கடிக்கப்பட்டு அவனும் கைது செய்யப் பட்டான். அத்துடன் சமீபத்திலே கொத்துலாந்து திரும்பப் பெற்றுக்கொண்ட தாழ்நிலப் பிரதேசங்களையும் இங்கிலாந்து மறுபடியும் பிடித்துக்கொண்டது.

இடேவிட்டு, 11 வருடமாக இங்கிலாந்திலே கைதியாயிருந்தான். பின்னர் 1357 இல் விடுதலை செய்யப்பட்டான். அவனுடைய விடுதலைக்கு ஈடாக 100,000 மேக்குகள் விதிக்கப்பட்டு அது பத்துவருடத்துட் கொடுக்கப்பட வேண்டுமெனவும் கட்டளை செய்யப்பட்டது. அக்காலத்தில் இது பெரிய தொகையாகவிருந்ததால் கொத்துலாந்துக்குப் பெரிய பளுவாயிற்று. ஆனால் கொத்துலாந்து அதைக் கட்டிற்று. அரசன் சிறையிருக்கும்வரை நாடு சுதந்திர மிழந்ததாகவே கருதப்பட்டது. 100,000 மேக்கைப்பற்றிப் பேசிப் பயனென்ன? அரசன் ஒரு மேக்குக்கே வழியில்லாதிருந்தான். அவனுக்குப் பின் அரசு ரிமைக்குத் தகுதியுடையவனும் இருந்தவன் உரோபெட்டு சுதுவட்டு என் னும் மாமன் முறையான ஒருவன். அவன்மீது இவனுக்கு இருந்த பகைமையினால் தனக்குப் பின் ஓர் ஆங்கில அரசகுமாரனையே பட்டத்திற்கு வைக்கவேண்டுமென்று விரும்பினான். 1364 ஆம் ஆண்டு கூடிய கொத்துலாந்துப் பாராளுமன்றம் இக்கொள்கையைக் கடுமையாக எதிர்த்தது. அன்னான் தொடக்கம் கொத்துலாந்தின் சுதந்திரத்துக்கு ஆபத்து ஒன்றும் எற்படவில்லை.

போர்: ஒத்தபேண் 1388; ஒமில்தன் குன்று (1402)

14 ஆம் நூற்றாண்டின் கடைசி 50 வருடங்களில் எல்லைப்புறச் சண்டை கள் அடிக்கடி உண்டாயின. ஒத்தபேண் (1388) என்ற இடத்தில் ஒரு நாள் இரவு நிலவிலே நடந்த சண்டை குறிப்பிடத்தக்கது. இங்கிலாந்துக்கும் கொத்துலாந்துக்கும் இடையில் இருந்துவந்த உறவைக் குறிப்பிடும்பொழுது இவை ஞாபகத்தில் வைக்கத்தக்கன. ஆனால் இக்காலத்திலும் இலங் காகற்றர் அரசர்கள் ஆண்ட காலத்திலும் கொத்துலாந்தை வெற்றிகொள் வதற்குத் தீவிரமான முயற்சி ஒன்றும் நடைபெறவில்லை. முக்கியமான ஒரு சண்டை ஒமில்தன் குன்றில் (1402) நடந்தது. இதிலே வடபகுதியைச் சேர்ந்த தக்ளசுப் பிரபுவை இடைமறித்துப் பேசிகுலத்தினர் தோற்கடித்தனர். இந்தச் சண்டையின் பயனுகவே பேசி, கிளெண்டோவர், தக்ளசு, மோட்டிமர் குடும்பத்தினர் என்போர் ஒன்றுகூடி நாலாம் என்

றிக்குத் தொல்லே கொடுத்தனர். அதனுல் இங்கிலாந்தின் சரித்திரத்திலே பெரிய விளைவுகளுண்டாயின. ஆங்கில வில்வீரருக்கு முன்னர் கொத்துலாலந்து வில்வீரர் நின்று கொள்ளா மாட்டாரென்ற விடயத்தை மறுபடியும் இது தெளிவுபடுத்திற்று. மற்றும்படி கொத்துலாலந்தின் நிலையில் இது எவ்வித மாற்றத்தையுமுண்டாக்கவில்லே. கொத்துலாந்தர் பிரான்சுடன் செய்து கொண்ட நட்புறவைக் கைவிடவில்லே. ஐந்தாம் என்றிக்கும் பெற்போட்டுக்கு மெதிராய்ப் பிரான்சிற் சண்டையிடுமாறு கொத்துலாந்து தனதுசைனியத்தைப் பிரான்சுக்கு அனுப்பிற்று. அப்படை போசே களத்தில் நடந்த சண்டையிலே வெற்றியீட்டிற்று. (அது சரித்திரத்தில் முதன்முதலாக ஒரு திருப்பத்தை யுண்டாக்கிற்று, 1422); தக்ளசு[1], தன் பழம்புகழுக்கு எற்றவாறு வேணில்களத்திலே மறுபடியுந் தோல்வியுற்று உயிரையுமிழந்தான். "எரிங்குப் போரிலே" தாணிலி சுதுவட்டு உயிர்துறந்தான். "ஒளியன்சு மாதின்" சைனியத்திலே கொத்துலாலந்தர் பிறர் சண்டை செய்தனர். ஆரும் என்றியின் ஆட்சிக்காலத்திலே, பிரெஞ்சுக்காரர் அதிக தொல்லே கொடுத்ததனுல் கொத்துலாந்தரின் பகைமைக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்க முடியாமற் போய்விட்டது. அதன்பின்னர் உரோசுயுத்தங்களுண்டாயின. எனவே தியூடர் காலம்வரை, கொத்துலாந்து தலேயீடின்றித் தனியாகவிடப்பட்டது. இனி கொத்துலாந்தில் உண்டான உள்ளூர்த் தொல்லேகளேப் பற்றிக் குறிப்பிடுவோம்.

சுதுவட்டுவமிசம்; இரண்டாம் உரோபெட்டு (1370–90); இவ்வமிசத்தவரின் துரதிட்டம்

இரண்டாவது இடேவிட்டு 1370 இல் இறந்தான். அவனுக்கு உரித்தாளர் இல்லே. எனவே புரூசின்மகன் மாசறிக்கும் அவள் கணவன் உவாற்றர் சுதுவட்டுக்கும் பிறந்த பின்னே அரசகட்டிலேறினுன். இவனது அபிடேகப் பெயர் இரண்டாம் உரோபெட்டு. இவனே துரதிட்டம் பொருந்திய சுதுவட்டு வமிசத்தை ஆரம்பித்தான். இவனுடைய வமிசத்தில் அரசர் அறுவரும் அரசிஒருத்தியும் கொத்துலாந்துச் சிங்காசனத்திலிருந்து ஆட்சி நடத்தினர். இவர்களில் மூன்றுவது உரோபெட்டு ஒருவனே அமைதியான மரணத்தையடைந்தான். இவன் இறப்பதற்கு முன் இவனுடைய மக்களில் ஒருவன் கொலேக்காளானுன். மற்றெருவன் இங்கிலாந்திற் சிறைவைக்கப்பட்டான். வயதில் முதிர்வடைந்து இறந்தவனும் மூன்றும் உரோபெட்டே. மற்றவர்களில் எவரும் 45 வயதுக்கு இருக்கவில்லே. முப்பத்தைந்து வயதையடையு முன்னரே மூவர் உயிர் துறந்தனர். முதலாம் சேமிசு கொலே செய்யப்பட்டான். உரோச்சுபேக்கு முற்றுகையிலே பீரங்கி வெடித்து இரண்டாம் சேமிசு உயிர் துறந்தான். மூன்றுவது சேமிசு சதிகாரரால் கொலேசெய்யப்பட்டான். நாலாம் சேமிசு புளொடென்களத்தி லிறந்தான். ஐந்தாம் சேமிசு மண

[1] "தென்மன்" (தோல்வியடைபவன்) என்பதே இவனுக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயர். ஒமில்தன், சருசுபெரி, வேணில் என்ற களங்களில் தோல்வியடைந்து இப்பெயரை நிலைநாட்டினுன்.

முடைந்து இறந்தான். அவனுடைய மகள் 19 வருடம் சிறையிருந்தபின் ரெச்சேதஞ் செய்யப்பட்டாள். மன்னனேப் போலவே நாடும் துரதிட்ட வசப்பட்டது. மன்னனின் அகாலமரணத்தினுல், குற்றகவையரே அடிக்கடி அரசுக்கட்டிலேற நேர்ந்தது. முதலாம் சேமிசு 11 வயதில் அரியணே யேறினுன். இரண்டாம் சேமிசு ஆறு வயதில் அரசனுனுன். மூன்றும் சேமிசு ஒன்பது வயதில் அரசனுனுன். நாலாம் சேமிசு 15 வயதிலே அரசனுனுன். ஐந்தாம் சேமிசு அரசுக்கு வந்தபொழுது அவனுக்குப் பதினெட்டு மாதங்கூட நிரம்பவில்லே. அவனுடைய மகளான மேரி அரசியான பொழுது அவள் பிறந்து ஒருவாரமே ஆனது. எனவே குற்றகவையரே அடுத்தடுத்து அரசெய்தினுர்கள். பதிலாளிகளே அடுத்தடுத்து ஆட்சி நடத்தினர். பேராசையும், வல்லடிச் செயல்களும் தாண்டவமாடின. வருடாவருடம், ஒவ்வோர் ஆட்சியின் போதும் போரையடுத்துக் கலகமும் கலகத்தை யடுத்துப் போருமுண்டாயின. நாட்டினச் சுயவாட்சி நல்லதே. ஆனுல் நாட்டிலே ஒழுங்கோ திடமான ஆட்சியோ இல்லாததனுலே சுதந்திரத்தினுல் நன்மையுண்டாகவில்லே. பெரிய செல்வாக்குள்ள குடும்பத்தவரை யடக்கியடிபணியச் செய்வதிலே அரசன் தனது பலம் முழுவதையுஞ் செலவு செய்தபடியால் தனது குடிகளுக்கு அவன் அதிக நன்மை செய்ய முடியாது போயிற்று.

மூன்றுவது உரோபேட்டு 1390–1406; முதலாம் சேமிசு 1406–37; முதலாம் சேமிசு கொலேசெய்யப்படல்

மூன்றுவது உரொபேட்டு முடவனுகவேயிருந்தான். ஆட்சி அவனுடைய சகோதரனுன அல்பனிக் கோமகன் கையிலிருந்தது. அவனும் தக்ளசுமாகச் சேர்ந்து உரொபேட்டின் மூத்த குமாரனை உரோதசே என்பவனேக் கைது செய்வதிற் சம்பந்தப்படிருந்தனர்; அன்றியும், அவன் சிறைச்சாலேயில் இறந்தமைக்கும் அவர்கள் எதுவாயிருந்தனர் போலும். சேமிசு என்ற கனிட்ட புத்திரன் போரோய்வுக் காலத்திலே பிரான்சுக்குக் கப்பலிற் செல்லும்பொழுது 1406 இல் ஆங்கிலேயர் கைது செய்தனர். மூன்றுவது உரொபேட்டு இச்சம்பவத்தின் பின்னர் சிலநாளில் இறந்துபோனுன். அல்பனி 1420 இல் இறக்கும்வரை பதிலாளியாக இருந்தான். 1424 இல் சேமிசு நிரும்பிவந்ததும், புதிய பதிலாளியாகவிருந்த அல்பனிக் கோமகனை மேடொக்கு என்பவனேயும் அவனுடைய இரு மக்களேயுங் கொன்றான். அவர்களுடைய சொத்துக்களேப் பறிமுதல் செய்தான். பிரபுக்கள் சங்கத்துக்கு எதிராகச் சட்டங்கள் செய்யப்பட்டன. மலேநாட்டு முதலிகளில் மூன்னேமாமிருப்பவர்கள் தூக்கிலிடப்பட்டனர். தக்ளசு சிறையிலடைக்கப்பட்டான். சிறுதேண் பிரபுவின் பட்டமும் பதவியும் பறிக்கப்பட்டன. இக்கடைசிச் செய்கை அரசனுக்கே அழிவைக் கொண்டுவந்தது. சிறுதேண் பட்டத்துக்கு உரிமையுடையவனுன சேர் உரொபேட்டு நிறகாம் அரசனேக் கொலே செய்ய மலேநாட்டிலே சதி செய்தான். சந்தர்ப்பமும் விரை

வில் வந்தது. சிறிசுமசைக் கொண்டாட சேமிசு பேத்து நகருக்குச் சென்று கரும் பிரையர்களின் மடத்திலே தங்கினான். இரவிற் சதிகாரர் ஆரவாரத் தொடு மடத்துட்புகுந்தனர். அரசியுடனும் தோழி களுடனுமிருந்த மன்னனைக் கிரகாம் குத்திக்கொன்றான்.

இரண்டாம் சேமிசு (1437–60), தக்ளசு குடும்பம்

இரண்டாம் சேமிசின் ஆட்சிக்காலத்திலே "கரிய" தக்ளசுக் குடும் பத்தார் செல்வாக்கின் உச்ச நிலையையடைந்து, பின் வீழ்ச்சியெய்தினர். இங்கிலாந்திலே "அரசுநிலை செய்வோன்" என்ற பட்டம் பெற்ற நெவிலின் குடும்பத்தவரைப் போலவே கொத்துலாந்திலும் தக்ளசுக் குடும்பத்தவர் அதேகாலத்திற் கருமம் புரிந்து வந்தபடியால், அக்குடும்பத்தவரைப்பற் றிச் சிறிது விரிவாக அறிவது நன்று.

"கரிய தக்ளசு"

இரண்டாம் சேமிசு ஆறுவயதுப் பையனாயிருந்த காலத்திலே ஆச்சி போல்டு தக்ளசு (ஐந்தாவது எள்) அவனுடைய பதிலாளியாக விருந்தான். தக்ளசுக் குடும்பத்தவர்க்குரிமையான முயற்சி இவனிடங் காணப்படவில்லை. தான் பதிலாளியாக இருந்த காலத்திலே குறிப் பாக எவ்வகை விசேடத் தொண்டையுஞ் செய்யாமல் 1439 இல் இறந்தான். தக்ளசின் பட்டமும் பதவியும் (ஆறுவது எள்) உலிலியம் என்பவனை யடைந்தன. ஆனால் பதிலாண்மை அவனுக்கு வழங்கப்படவில்லை. அவனுக்கு அப்பொழுது 17 வயது. இவை இரிச்சட்டு நெவில் என்ன நிலையிலிருந் தானோ அதே நிலையில் அவனுமிருந்தான். தூரேன் கோமகனும் தக்ளசு எனுமான அவன் கொத்துலாந்திலே தாழ் பூமி நெடுகிலும் நில முடைய வனாயிருந்தான். சிறந்த போர் வீரர்களாயிரவரை உடையவனாயிருந்தான். மூன்றும் உரொபேட்டின் பெண் வழியில் பூட்டனை படியால் இவனுக்கும் அரசுரிமையிருந்தது. எனவே கொத்துலாந்துக் குடிகளுள் இவன் மிகச் செல்வாக்குடைய குடிமகனாயிருந்தான். அரசனுக்கு அமைச்சர் இருவர் இருந் தனர். ஒருவன் மண்டிலை நாயகனான கிறைற்றன். இவனே எடின்பரேக் கோட்டையின் ஆள்பதியாயிருந்தான்; மற்றவன் இலிவிந்தன்; இவன் அரசனின் மெய்க்காவலன்; இவர்களிருவரும் தம்முட் பிணங்கிக் கொண் டிருந்தனர். இப்பொழுது தக்ளசை வீழ்த்தும் நோக்கமாக ஒன்று சேர்ந்து ஒரு சதி செய்தனர். தக்ளசும் அவன் தம்பியான ஜேடிவிட்டும் எடின்பரேக் கோட்டையில் இளம் பிராயத்தனான அரசனை சந்திக்கு மாறு அழைக்கப்பட்டனர். இரவிலே சாப்பிடும் நேரம் இரு சகோதரர்களையும் கைதுசெய்து கோட்டை முற்றத்திலே சிரச்சேதம் செய்தனர் (1440)[1].

[1]இச்சந்தர்ப்பத்திலேதான் "கரிய இடபத்தின் மண்டையோடு" (மரணத்துக்கறிகுறி) உணவு மேசையில் வைக்கப்பட்டதெனக் கூறுவர்.

1425 : கரிய தக்ளசின் அழிவு

தொல்லை நிறைந்த சில காலத்தின் பின்னர் தக்ளசுக் குடும்பத்தின் தலைமை மற்றொரு உலிலியத்தின் (எட்டாவதுஎள்) கைக்குச் சென்றது. சில வருடமாக இரண்டாவது சேமிசு தக்ளசுடன் நட்புப் பூண்டிருந் தான். 1452 இல் சேமிசுக்கு 21 வயதாயிருக்கும்போது, தக்ளசுக்கும், கிறைற்றன், இலிவிந்தன், குறேபோட்டு போன்ற பிரபுக்களுமிடை யிலுண்டான பகைமை நாட்டுக்குக் கேடு உண்டாக்குகிறதென எண்ணினான். எனவே தக்ளசைச் தேளிங்கு என்ற நகருக்கு அழைத்து உடனிருந்து உணவருந்தினான். உரொசு எனுடனும் குறேபோட்டு எனுடனுஞ் சேர்ந்து கலகம் விளைக்கத் திட்டமிட்டானென அவன் மீது அரசன் குற்றஞ்சாட்டி, இந்த நட்பை விட்டுவிட வேண்டுமெனக் கட்டளையிட்டான். தக்ளசு அதற்கு மாறுகூறவே அரசன் கத்தியாற்குத்தி அவனைக் கொன்றான். இறந்தவனுடைய சகோதரனை சேமிசு ஒன்பதாவது எள் பட்டத்திற்கு வந்தவன், ஆரும் என்றியுடன் கலகம் விளைத்து இராசத்துரோகஞ் செய்தான். சிறிது காலமாக அரசன் அவனுடைய குற்றத்தை மன்னித் தான். பின்னர் ஆங்கிலேயரையும் மலைநாட்டவரையுஞ் சேர்த்துச் சதி புரிந்தான். சேனை திரட்டிச் சண்டைக்குச் சென்றவன் எசுக்குடேல் என்ற இடத்திலுள்ள ஆக்கினைம் களத்திலே முறியடிக்கப்பட்டான். பின்னர் இங்கிலாந்துக்கு ஓடினான். கரியதக்ளசுக் குடும்பம் இவ்வாறு அழி வுற்றது. ஆனால் இளைய தக்ளசுக் குடும்பத்தைச் சேர்ந்த சிவப்புத் தக்ளசுகளான அங்கசு ஏள்களின் துணையோடுதான் அரசன் இந்த வெற்றியைப் பெற்றான். எனவே தக்ளசுக் குடும்பம் முற்றாக ஒழிய வில்லை. மூத்த தக்ளசுகளைப் போலவே இவர்களும் மரசனுக்குத் தொல்லை கொடுத்துவந்தனர்.

மூன்றாம் சேமிசு (1460–88); ஆங்கிலேயர் கொத்துலாந்தின்மீது படையெடுத்தல்; மூன்றாம் சேமிசுக் கெதிராகச் சதி; அங்கசின் கலகம்; சோச்பேனின் பின் சேமிசு இறத்தல் (1488)

1460 இல் இரண்டாம் சேமிசு உரோசு பேக்கிலே, பீரங்கிக் குண்டினால் உயிர் துறந்தான். அப்பொழுது மூன்றாம் சேமிசுக்கு 9 வயது. அதனால் வழமைபோற் பதிலாட்சி நடைபெற்றது. நேர்மையும் தேசாபிமானமுமுள்ள அரசறிஞரான கெனடியென்பார், சென். அந்துறூசின் விசுப்பாண்டவர், இலங்காசுற்றர் பக்கத்தை ஆதரித்தார். அரசனின் தாயை நாலாவது எட்டுவேட்டு வசப்படுத்திக்கொண்டு, நாடுகடத்தப்பட்ட தக்ளசுடனும் மலைநாட்டு மக்கள் சிலருடனுஞ் சேர்ந்து கொண்டான். உரோசு யுத்தங்களின் எதிரொலி கொத்துலாந்திலும் எல்லைப்புறத்திலும் யுத்தங்களையுண்டாக் கிற்று. சேமிசு வளர்ந்ததும் தனது இரு சகோதரருடனும் கடுமையாக முரண் பட்டான். மூத்தவன் வழமைபோலத் துரோகியாக மாறி இங்கிலாந்துடன்

உறவுகொண்டு, நாலாம் எட்டுவேட்டின் ஊழியனாகவிருந்துகொண்டு கொத்துலாந்தின் அரசுக்கு உரிமை கொண்டாடினான். பின்னர் இரிச்செட்டு குளொசுற்றர் தலைமையில் ஆங்கிலப் படையுடன் கொத்துலாந்து மீது படை யெடுத்துச்சென்றான். சேமிசு தனது பிரபுக்களைத் துணைக்கு அழைத்தான். அங்கசு ஏளான ஆச்சிபோல்டு தக்ளசின் தலைமையில் அவர்கள் கூடினர். எதிரியுடன் சண்டை செய்வதற்கு முன்னர் அவர்கள் தமக்குள் இருந்த வனமத்தைத் தீர்க்க முற்பட்டனர். சேமிசு அமைதிப்பிரியன்; கலைகளில் ஆர்வமுள்ளவன். சங்கீதம் கட்டடக்கலை ஆகியவற்றில் திறமையுள்ள கலை ஞர் சிலருடன் நட்புக் கொண்டிருந்தான். இவர்களுள் முக்கியமானவன் மேசன் வேலைசெய்யும் உரொபேட்டு கொக்ரன் என்பவன். அக்காலச் சரித்திராசிரியர் ஒருவர் இவனைப் "பற்றிச் சாதாரணமான சொற்ப நில முள்ள ஒருவன்" எனக் குறிப்பிட்டார். பிரபுக்கள் இவனை வெறுத்தனர். எனவே இவனை வீழ்த்தப் பார்த்தும் அதற்கு வழியறியாதிருந்தனர். "பூனைக்கு நானே மணியைக் கட்டுகிறேன்" என்று அங்கசு முன்வந்தான். அதனால் அவன் "பூனைக்கு மணி கட்டும் ஆச்சிபோல்டு" எனப் பெயர் பெற்றான். அவன் அரசனுக்கு உதவியாகச் சென்று கொக்ரனை அவனது பாசறையிலேயே கைது செய்து உலோடர் பாலத்திலே தூக்கிலிட்டான் (1482). சேமிசையும் கைது செய்து எடின்பரேக் கோட்டையிற் சிறை வைத்தான். அங்கசும் அவனுடைய நண்பர்களும் அல்பனியுடன் சமா தானஞ் செய்து கொண்டனர். பின்னர் அல்பனியும் அங்கசும் முரண் பட்டனர். சிறிது காலத்துக்கு அல்பனி அரசனுடன் நட்புப்பூண்டான். பின்னர் அவனோடு பிணங்கி, இங்கிலாந்துடன் சேர்ந்து சூழ்ச்சி செய்து கொண்டு, 1483 இல் இங்கிலாந்துக்கே ஓடினான். அடுத்த வருடம் அவனும் தக்ளசு ஏனுமாக நம்பிரிசயர் மீது படையெடுத்துத் தோல்வியடைந் தனர். அல்பனி பிரான்சுக்கோடி அங்கே 1485 இல் கொலைசெய்யப் பட்டான். மூன்று வருடத்தின் பின்னர் அரசனுக்கெதிராக அங்கசு புதிய வொரு சதி செய்தான். அவனோடு 15 வயதுள்ள அரசிளங்குமரனை சேமிசைத் தம்மாதிக்கத்திலே வைத்திருந்த தெற்கிலுள்ள பிரபுக்களும் சேர்ந்து கொண்டனர். இந்த அரசிளங் குமரனே பின்னர் நாலாவது சேமிசாகப் பட்டத்துக்கு வந்தான். 1488 இல் அரசனும் வடக்கேயுள்ள பிரபுக்களுஞ் சேர்ந்து சண்டை செய்து தேளிங்கருகிலுள்ள சோச்சிபேணிற் கிளர்ச்சியாளர்பால்தோல்வியுற்றனர். யுத்த முடிவில் சேமிசு இறந்தான். அவன் படுகொலை செய்யப்பட்டிருந்தலுங் கூடும்.

நாலாம் சேமிசு (1488–1513); இங்கிலாந்துடன் திருமண நட்புறவு; இங்கிலாந்துடன் சண்டை (1513) புளொடன் (1513)

நாலாம் சேமிசின் ஆட்சி, தந்தைக்கெதிராக மைந்தன் கண்டெடுத்துப் போர் புரிந்த அமங்கலமான படலத்துடன் ஆரம்பித்தபோதிலும், நன்மை யுண்டாகுமென்பதற்குச் சில அறிகுறிகள் காணப்பட்டன. அரசன் வலிமை

யடைந்து சட்டத்தை நிலைநாட்டினான். கொத்துலாந்தின் சாபக்கேடான உள்ளூர்க் குழப்பங்களடங்கின. சேமிசுக்கு ஏழாம் என்றியின் மகளான தியூடர் வமிசத்து மாகரெட்டை வதுவை செய்தலால் இங்கிலாந்துக்கும் கொத்லாந்திற்கும் இணைப்புண்டானது. அதனால் எல்லைப்புறச்சண்டை குறைந் தது. மலைநாட்டவரும் அடக்கி வைக்கப்பட்டனர். நாடு வளம் மலிந்தது. ஆட்சிக்காலமும் "பொற்காலம்" எனச் சரியாகவே கொள்ளப்பட்டது. ஏழாம் என்றி இறக்கும்வரை எல்லாம் சுமுகமாக நடந்தன. எட்டாம் என்றி பட்டத்துக்கு வந்ததும் மைத்துனனிடையே சொந்த விடயங்களிற் பிணக் குண்டாயிற்று. பிரான்சுக்கெதிராக ஐரோப்பிய நாடுகள் ஒன்று சேர்ந்த பொழுது என்றியும்அதிற் சேர்ந்தான். பிரான்சுடனிருந்த பழைய நட்பு சேமிசைக் கவர்ந்திழுக்கவே மத்திய காலத்திருந்த துணிவுச் செயல் விரும்பும் பிரபுவைப் போலப் பிரான்சின் பக்கத்திலே சேர்ந்து புளொடன் களத்திலே (1513) எல்லாவற்றையும் இழந்தான். சரே என் பவன் அவனுடைய சைனியத்தை முற்றுக நிர்மூலஞ் செய்தான். கொத்து லாந்துக்கு அது படு தோல்வியாயிற்று. உயர்ந்தவரும், தாழ்ந்தவரும், அரசமாளிகையிலிருப்போரும், கோட்டையிலிருந்தோரும், பட்டினவாசிகளும் குடிசைவாசிகளும் எல்லாரும் நட்டமடைந்தனர். சரே தனது வேலையைச் செம்மையாகச் செய்து முடித்தான். அதற்கு மேலே செல்ல அவசியமில்லாதிருந்தது. மறுபடியும் ஒரு கொத்துலாந்துச் சைனியம் இங்கிலாந்திற் பிரவேசிக்க ஒரு நூற்றாண்டு சென்றது.

ஐந்தாம் சேமிசு (1513–42)

ஐந்தாம் சேமிசின் ஆட்சி பிரதானமாக இரண்டாம் மூன்றாம் சேமிசு மன்னரின் ஆட்சிபோன்றதே. உள்ளூர்க் குழப்பங்கள் மறுபடியுந் தலை காட்டின. அரசனுடைய ஆதரவைப் பெறுவதற்காகப் பல குடும்பங்கள் தம்மூட்டாம் கலகம் விளைத்தன. எட்டாம் என்றியும் அவனுடைய அமைச்சர் களும் கொத்துலாந்திலே ஆங்கிலேயருக்குச் சார்பான ஒரு தூரோகிகள் கூட்டத்தை வளர்த்து வந்தனர். அவர்களுடைய முயற்சியினால் உள்ளூர்க் குழப்பங்களங்கே அதிகரித்தன. அத்துடன் சமயச் சீர்திருத்தம் தொடங் கியதாலும் அது வளர்ந்தது. தியூடர் அரசனை என்றி உரோமுக்கு எதிராக நடவடிக்கையெடுத்ததும் சுதுவட்டு மன்னன் பழைய மதத்தை முன்னெயிலும் பார்க்கப் பலமாகப் பிடித்துக் கொண்டான். ஆரம்பத்திலே மதச் சீர்திருத்தத்தின் தொடக்கம், தேசங்களிடையேயுள்ள பிரிவைக் குறைப்பதிலும் பார்க்கக் கூட்டிவைத்தது என்று கூறி, கொத்துலாந்தில் மதச் சீர்திருத்தத்தின்சரித்தத்தை இவ்வளவில் நிறுத்துவோம். பின்னர் மேரி யினுட்சியைப் பற்றிக் கூறுமிடத்துக் குறிப்பிடுவோம்.

மாகரெட்டு, தக்ளிசு ஆகியோரின் பதிலாண்மை

புளொடன் போரின்பின் கொத்துலாந்தை ஆட்சி செய்வதற்கு எஞ்சி நின்றவர்கள் அரசி தியூடர் மாகரெட்டும், சிவப்புத் தக்ளிசு வமிசத்துத் தலைவன் அங்கசும், அமிற்றன்வமிசத்தலைவன் அரனுமே. ஒரு வருடத்துள் அரசி அங்கசை மணந்தாள். எனவே கொத்துலாந்திலுள்ள ஆங்கிலக் கட்சியினர் தக்ளிசு வமிசத்தவரே. அவர்கள் எட்டாம் என்றியுடன் இராசத்துரோகமான கடிதப் போக்குவரத்திலீடுபட்டனர்.

மாகரெட்டை எதிர்த்துப் பிரான்சு அல்பனியை அனுப்புதல், சிவப்பு தக்ளிசு நாடு கடத்தப்படல்

ஆங்கிலேயர் கட்சி கொத்துலாந்திலே பெற்ற செல்வாக்கைப்பற்றிப் பிரான்சு இயல்பாகவே சஞ்சலமடைந்தது. மூன்றாவது சேமியின் ஆட்சியிலிருந்து இராசத்துரோகியான பிரபுவின் மகனான அல்பனிக் கோமகன் 1515 இல் பதிலாளியாகக் கொத்துலாந்துக்கு வந்தான். இவனே கொத்துலாலந்து அரசுக்கு உரிமை பாராட்டியவன். மாகரெட்டும் அங்கசும் இங்கிலாந்திற்கு ஓடினர். பின்னர் சில ஆண்டில் அவர்கள் திரும்பிவந்து அவனுக்குக் கடும் பகைவராயினர். 1524 இல் அல்பனிகொத்துலாந்திலிருந்து வெளியேறினான். அரசன் தன் தாயின் அதிகாரத்திற்குட்பட்டான். அவள் நேரத்தோடு அங்கசை விவாக நீக்கஞ் செய்துவிட்டாள். பின்னர் அங்கசு அரசனைத் தன் வயப்படுத்திக்கொண்டான். ஆனால் நாளடைவில் சேமிசு தேளிங்கிலிருந்த தன் தாயிடம் போய்ச் சேர்ந்தான். தக்ளிசின் ஆட்சியை எதிர்த்தவர்களையும், அவன் இங்கிலாந்துடன் சேர்ந்த துரோகத்தை வெறுத்தவர்களையும் ஒன்று சேர்த்து உண்மையில் அரசனுக ஆட்சி செய்யத் துவங்கினான். அங்கசு, நாடு கடத்தப்பட்டு இங்கிலாந்திற் புகலடைந்தான். அங்கே, என்றி யரசனிடம் இளைப்பாறற் சம்பளம் பெற்று வாழ்ந்தான்.

சேமிசு போப்பாட்சியை ஆதரித்தல்
இசு மேரியை மணஞ் செய்தல்
இங்கிலாந்தின் மீது படையெடுத்தல்

இவனுட்சியின் கடைசிப் பதினைந்து ஆண்டுகள் சற்றே செல்வச் சிறப் புடையனவாயிருந்தன. பொதுவாகப் பார்க்குமிடத்து இங்கிலாந்துடன் சமாதானம் நிலவியது. அதனால் உள்ளூரில் இராசத் துரோகம் குறைந்தது. சேமிசு எல்லைப் புறவாசிகளிடையே அமைதியை உண்டாக்கச் சில முயற்சிகள் செய்தான். எல்லைப்புறப் பிரபுக்களை அடக்கினான். ஊரைச் சுற்றிப் பார்த்துப் பிரசித்திபெற்ற சண்டியர்களைத் தூக்கிலிடுவித்தான். மலைநாட்டையுஞ் சுற்றிப் பார்த்து அங்கே காவற்சேனைகளை அமைத்தும் சில தலைவர்களைச் சிறையிலிட்டும் தீவுகளின் அதிகாரத்தைத்தானே கைப்பற்றியும்

23208

அமைதிநாட்ட முயன்றான். திருச்சபையைச் சீர்திருத்தவேண்டுமென்ற பேச்சுண்டானது. எடின்பரோவிலே நீதிக்கழகம் அமைக்கப்பட்டது. வெளித்தோற்றமளவில் என்றியும் சேமிசும் நட்பினராயிருந்தபோதிலும் அவர்களிடம் உண்மையான மன ஒற்றுமை காணப்படவில்லை. என்றி உரோமின் பிடியிலிருந்து நீங்கிவிட்டான். சேமிசும் அப்படியே செய்யவேண்டுமென விரும்பினான். அத்துடன் கொத்துலாந்து பிரான்சுடன் கொண்ட பழைய நட்புறவைக் கைவிடல்வேண்டுமெனவும் அவன் விரும்பினான். சேமிசு தனது பழைய நண்பனின் நட்பையோ உரோமின் ஆதரவையோ கைவிட விரும்பவில்லை. மேலும் அவனுடைய திருமணக்கொள்கை என்றியைச் சஞ்சலப்படுத்திற்று. முதலில் அவன் முதலாம் பிரான்சிசின் மகளான மடலீனை மணந்தான். என்றி தனது மகளான மேரியை அவனுக்குக் கொடுக்கவிருந்தான். தன்னுடைய முதலாம் அரசி இறக்கவே சேமிசு பிரான்சுக்குச் சென்று கெமேரியை மணந்தான். ஆனால் தனக்கு நாலாம் மனைவியாக அவளை மணஞ் செய்ய என்றி எண்ணியிருந்தான். பின்னர் அவன் இளீபிசைச் சேர்ந்த ஆனை மணந்து திருத்தியடைய வேண்டியிருந்தது. இது மேலும் அவனுக்குச் சஞ்சலத்தை உண்டாக்கிற்று. சேமிசு தனது மாமனைப் பேட்டி காண மறுத்ததிலிருந்து இரு அரசரிடையிலுமுள்ள பிரிவு அதிகரித்து நாளடைவிற் சண்டை மூண்டது. அரசத்துரோகியான அங்கசென்பவன் தலைமையில் ஓர் ஆங்கிலப் படை சண்டை செய்து, திவியடேல் என்ற இடத்திலே முறியடிக்கப்பட்டது. சேமிசு அதற்குப் பதிலாகத் தனது பிரபுக்களை 1542 இல் பாலாமூரில் ஒன்று சேர்த்தும் அவர்கள் படையெடுத்துச் செல்வதற்கு மறுத்தனர். என்றாலும், எல்லைப்புறத்தவர் எப்பொழுதுஞ் சண்டையிடத் தயாராயிருந்தார்கள். எனவே அவர்களை உவெசுற்று மாச்செசு என்ற இடத்தில் திரட்டி, கடைசி நேரத்தில் ஒலிவர் சின்கிளேயர் என்ற நண்பனும் பாமர மகனுமான ஒருவன் தலைமையில் அப்படையை ஏவினான். கொத்துலாந்துப் பிரபுக்கள் சின்கிளேயரை வெறுத்து அவன் தலைமையிற் செல்ல மறுத்தனர். ஆங்கிலச் சேனைக் காவலனை உவாற்றன் இதை முன்னரே அறிந்து இரண்டாயிரம் ஆட்களுடன் எதிர்த்தான். கொத்துலாந்துப் படை எசெட்சுக்கும் சதுப்பு நிலத்துக்குமிடையிலகப்பட்டு அலங்கோலமாகப் பின் வாங்கி, பின்னர் பயத்தினால் குழப்பமடைந்து தெதறிற்று. எனவே தோல்வி படுதோல்வியாயிற்று. **சோல்வே மொசு** என்ற களத்திலேஉண்டான "சண்டை" தொடங்குமுன் முடிவுற்றது. துப்பாக்கிகளையெல்லாம் இழந்து, 1,200 பேர் கைது செய்யப்பட்டனர்; பலர் நீரில் மூழ்கி இறந்தனர். ஆங்கிலேயர் எழு பேரையே இழந்தனர்.

சுதுவட்டு மேரியின் பிறப்பு

இதனாலேற்பட்ட அவமானம் சேமிசு அரசனை நலித்தது. இரண்டு வாரத்தின் பின்னர் அவனுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

"பெட்டையோடு வந்தது, பெட்டையோடு போகும்" என்று அவன் சொன்னான். மயக்கத்திலே, அவன் அடிக்கடி, "நாசமாய் போக ஒலிவர் ஒடினான்" என்று முணுமுணுத்தான். நோயுற்ற அரசன் ஒருவாரம் கிடந்தழுந்திய பின் போக்கிலந்திலே இறந்தான்.

சேமிசு அரசர் முதலிலவின் சரித்திரம் துக்ககரமானது. உள்ளூர்க் குழப்பங்களாலும் அடிக்கடி உண்டான பதிலாண்மைகளாலும் கொத்துலாந்து நீலே சுலேயாது தப்பினதிலிருந்து சுதந்திர உணர்ச்சியும், ஒற்றுமை உணர்ச்சியும் நல்ல அடிப்படையில் இருந்தன என்பது தெரிகிறது. கொத்துலாந்து உருக்குலேயாது தப்பியதோடு முன்னேற்றமுமடைந்தது; 15 ஆம் நூற்றாண்டிலே வியாபாரம் விருத்தியடைந்தது. சட்டமுறை அபிவிருத்தி யெய்திற்று. சென் அந்துரூசு, கிளாசுக்கோ, அபடீன் என்ற மூன்று பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்டன. சேமிசுஅரசர் ஐவர் காலத்திலும் கொத்துலாந்து இலக்கியம் பெரிதும் வளர்ந்தது. கொத்துலாந்தின் "காவியப் பொற்காலத்திலே" தான் முதலாம் சேமிசு, உரொபேட்டு என்றிசன், உவில்லியம்தன்பார், காவின் தக்ளசு, சேர் இடேவிட்டு இலின்சே, போன்ற சிறந்த புலவர்கள் விளங்கினர்.

4 ஆம் அதிகாரம்

ஆரும் எட்டுவேட்டு (1547–1553)

அரச உரிமை

எட்டாம் என்றிக்குப்பின் அரச உரிமை எவருக்குச் செல்லவேண்டுமென்பதை அவன் தனது மரண சாதனத்தில் நிருணயிக்கும் அதிகாரத்தைப் பாராளு மன்றம் அவனுக்கு வழங்கிற்று. அதன் பிரகாரம் அவன் தனக்குப்பின்னர் தனது மகன் எட்டுவேட்டுக்கு அரசுரிமையை வழங்கினான். மகன் பிள்ளையின்றி இறந்தால் அரசு தன் மகள் மேரிக்குச் செல்லவேண்டுமென்றும் அவளுக்கும் பிள்ளையில்லாவிட்டால் இலிசபெத்துக்கும், அவளும் பிள்ளையின்றி இறந்தால் என்றியின் இளைய சகோதரியான மேரியின் வழித்தோன்றல்களுக்குச் செல்லவேண்டுமென்றும் என்றி தனது மரணசாதனத்திற் குறிப்பிட்டான். என்றி எதிர்பார்த்தபடி தன் பிற்சந்ததியாருக்குப் பிள்ளையில்லாமற்போனது குறிப்பிடத்தக்கது. ஆனால், அவனுடைய சாதனத்திற் கூறியுள்ளவாறு எல்லாம் நிறைவேற்றப்படவில்லை. அரச உரிமை கடைசியாகக் கொத்துலாந்து வமிசத்தைச் சேர்ந்த என்றியின் மூத்த சகோதரியின் வழிப்பிறந்தவருக்குச் சென்றது. இச்சந்ததியை என்றி தனது சாதனத்திற் குறிப்பிடாது விட்டான்.

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

பதிலாண்மை ; சொமசெற்று—புரவலன்

ஆனால், எட்டுவேட்டுக்கு ஒன்பது வயதாயிருந்ததால், ஆட்சிநடத்தப் பதிலாளியை ஏற்படுத்த வேண்டியிருந்தது. இப்பதிலாளியின் அரசியற் கருத்துக்கள், சமயக் கருத்துக்களிலேயே எல்லாம் தங்கியிருந்தது. பல்திறக் கொள்கைகளையுடையவர்களை உறுப்பினராகக் கொண்ட ஒரு கழகத்தை என்றி நியமித்தான். இதனால் இக்கழகம் விடயங்களை இருந்தவாறே இருக்கக்கவிட்டுக் கருமம் நடத்துமென அவன் எண்ணினான். இங்கேயும் என்றியின் திட்டம் நிறைவேறவில்லை. இளவரசனின் மாமனான செய்மூர் இச்சபையின் ஒரு பகுதியைத் தன்பக்கம் வசப்படுத்திக்கொண்டு மண்டிலப்புரவலனைத் தன்னை உலகுக்குப் பிரகடனஞ் செய்வித்தான். அந்தக் கட்சியின் ஆதரவுடன் சொமசெற்றுக் கோமகன் என அவன் பட்டஞ் சூடிக்கொண்டு தனது கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டுவர முயன்றான்.

புதிய அரசாங்கத்தை எதிர்நோக்கிய இன்னல்கள்

சொமசெற்றின் பூட்கையிலே இரண்டு முக்கியமான போக்கைக் காணலாம். முதலில் மக்களுக்கு இன்னல் விளைத்த பொருளாதார மாற்றங்களைச் செம்மைசெய்யவேண்டியிருந்தது. இரண்டாவதாகச் சமய சம்பந்தமான பிரச்சினையைத் தீர்க்கவேண்டியிருந்தது (குறிப்பு 46).

சமுதாய சமயப் பிணக்குக்கள் : பொருளாதார இன்னல்கள் ; கமங்கள் புற்றரைகளாக மாற்றப்படுதல் ; புதிய நிலக்கிழாரின் புதிய முறைகள் ; மதிப்புக்குன்றிய நாணயம்.

பல தொல்லைகள் அவனை நோக்கி எதிர்நின்றன. உடனே பயன்படுத்தவேண்டிய வாய்ப்புக்கள் பல உண்டாயின. பயன்படுத்தத் தவறினால் அவை பேராபத்து விளைவிக்கக் கூடியனவாயிருந்தன. சமயத்துறையில் மேலும் மாறுதல்கள் வேண்டுமென ஒரு சாரார் விரும்பினர். இவர்களிற் சிலர் பூரணமான புரட்சனத்தாந்திய சமய முறையை மனமார விரும்பினர். வேறுசிலர் சமய மடங்களுக்குச் சொந்தமான பொருள் பண்டங்களை மேலும் கொள்ளையடிக்க விரும்பி மதச்சீர்திருத்தத்துக்குக் கிளர்ச்சி செய்தனர். இக்கட்சி பிரசித்தமானதாயிருந்தபோதிலும், சிறிய கட்சியே. மக்களிற் பெரும்பாலோர், விசேடமாக வைதிக மனப்போக்குள்ள வடக்கிலும் மேற்கிலுமுள்ளோர், தமது பழைய மதக்கோட்பாடுகளில் எவரும் தலையிடுவதை விரும்பவில்லை. சமயப் பிணக்குக்கள் ஒரு புறமாக, பாரதூரமான பொருளாதார இன்னல்களுமுண்டாயின. "கறுத்தச்சாவு" நிகழ்ந்த காலந்தொட்டே கமங்களை மந்தை வளர்க்கும் புற்றரைகளாக மாற்றும் முயற்சி நடைபெற்று வந்தது. இதற்காகப் பழைய பண்ணைவாரக்காரரையும் பண்ணைகளிலிருந்து கலைத்து வந்

தார்கள். ஆட்டு வளர்ப்புக்கு அதிக ஆட்கள் தேவைப்படுவதில்லை. அதனாலே பலர் வேலையிழந்தனர். மடங்கள் அழிக்கப்பட்டதால் மேலும் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்தது. மடத்துக்குருமார் பழங்கால முறைகளையனுசரிக்கும் நிலக்கிழாராகவிருந்தனர். அவர்கள் பழைய விவசாய முறைகளையே பெரிதும் கைக்கொண்டதனால், பெருந் தொகையான ஆட்களை வேலைக்கமர்த்தினர். மடத்து நிலங்களின் புதிய சொந்தக்காரர் சீர்திருத்தம் விரும்பினவர்கள். பழைய வழக்கங் களையும் பழைய வாரக்காரையும் அவர்கள் பொருட்படுத்த விரும்பவில்லை. மக்களிடையே துன்பமுண்டான காலங்களிலே மடங்கள் முன்வந்து அவர் களுக்கு உதவிபுரிந்தன. மேலும் என்றி வெளியிட்ட மதிப்புக்குன்றிய நாணயம் தொல்லைகளையுண்டாக்கிற்று. பணத்துக்குத் தோற்றப்பெறுமானங் கிடைக்கவில்லை. ஒரு சிலின் நாணயம் ஒரு சிலின் மதிப்பையுடையதா, அல்லது ஆறு பென்சு மதிப்புத்தான் அருற்குரியதாவென்று மக்கள் சந்தேகப்பட்ட னர். அப்பொழுதெல்லாம் வியாபாரம் குழப்பமடைந்தது; அதனாலேற் பட்ட கெடுதி அதிகரித்தது. எல்லா நாணயங்களும் மோசமானவையா யிருக்கவில்லை. நல்ல சிலின் கிடைத்தால் மக்களவற்றை இயல்பாகவே கைவிட விரும்பாதிருந்தனர். தங்களிடமுள்ள மதிப்புக்குன்றிய நாணயத்தை மற்றவரிடம் கொடுத்துவிட முயன்றனர். எனவே, நல்ல நாணயத்தை எல்லாரும் சேமித்தனர். சிலர் அதை உருக்கி வெள்ளி யைப் பயன்படுத்தினர். நல்லதுக்குப் பதிலாகக் கெட்ட நாணயம் வழங் கிற்று. இவ்வாறு சமயத்துறையில் ஐயமும் பிரிவுங் காணப்பட்டதோடு விவசாயத்துறையிலே பெருகிய இன்னலும் வியாபாரத்துறையிலே குழப் பமுங் காணப்பட்டன. புதிய பிரபுப்புரவலன் இவற்றையெல்லாம் தீர்க்கவேண்டிய கடமையுடையவனாயிருந்தான். மற்றுமொரு முக்கிய மான விடயத்தை அவன் கவனிக்கவேண்டியிருந்தது. அது அவ்வளவு அவசரமான விடயமன்று. அதுவே இளவரசனின் திருமணம். இவ்வி டயங்களிலெல்லாம் சொமசெற்றுத் தோல்வியே யடைந்தான். அறிவும் நேர்மையுமுள்ளவனாயிருந்தபோதிலும், அவனுடைய திட்டங்கள் நன்மை பயப்பனவாயிருந்தபோதிலும், அவற்றை நிறைவேற்ற அனுசரித்த முறை கள் கெட்டனவாயிருந்தன. அதனால் அவனுடைய தோல்வி இரங்கத் தக்கது. அவன் பூட்கையின் இலக்குக்கள் போற்றத்தக்கவை; ஆனால், அப்பூட்கையின் விளைவுகள் கேட்டில் முடிந்தன.

சொமசெற்றின் கொத்துலாந்துப் பூட்கை; கொத்துலாந்து அரசியை மணஞ் செய்யத்திட்டம்; பிங்கிகுளு யுத்தம் (1547)

முதலாம் எட்டுவேட்டு ஆட்சிக்காலத்திலிருந்து அந்நாள்வரை இருந்த எந்தப்பெரிய அரசறிஞனுக்கும் கிடையாத ஒரு சந்தர்ப்பம் சொமசெற்றுக்

குக் கிடைத்தது. அதாவது, அரசத்திருமணவாயிலாக இங்கிலாந்தையும் கொத்துலாந்தையும் இணைக்கக்கூடிய வாய்ப்பு அக்காலத்திலிருந்தமையே. அனுதையாயிருந்த, ஐந்தாம் சேமிசின் மகளான கொத்துலாந்து இராணி மேரியே இளவரசனுக்கு ஆறும் எட்டுவேட்டின் எதிர்கால மனைவியென் பது கண்கூடாயிற்று. கூசு மேரி என்ற அன்னையரசியின் தலைமையிலே பிரெஞ்சுக் கத்தோலிக்கக் கட்சியொன்றும் சமயச் சீர்திருத்தத்தை விரும் பிய "ஆங்கிலேயர்" கட்சியொன்றும் கொத்துலாந்தில் பிணங்கிக் கொண் டிருந்தன. ஆங்கிலேயரை வெறுத்தல் என்னும் பொதுக் கொள்கை யிலே இவ்விரு கட்சியினரும் ஒன்று சேராமற் கவனித்துக்கொள்ள வேண் டியது சொமசெற்றின் கடமையாயிருந்தது. இதனை அவன் உடனே கவ னிக்கமுயன்றான். அவன் போட்ட விவாகத்திட்டத்தை மக்கள் உளமு ஆதரிக்காததைக் கண்டு அவன் ஒரு சைனியத்தைக் கொத்துலாந்து மீது அனுப்பினான். அச்சேனை கொத்துலாந்தரைப் பிங்கிகுளு (1547) களத்திலே தோற்கடித்தது. கொத்துலாந்தின் ஆதரவைப் பெறும்வழி இதுவன்று. கொத்துலாந்து மக்களின் மனநிலையை அண்டிலி என்பவர் மறக்கமுடியாத வார்த்தைகளிற் பின்வருமாறு கூறினர்: "சம்பந்தத்துக்கு நாம் மாறில்லை; ஆனால், மனம் பேசிவந்த முறையை நாம் வெறுக்கிறோம்." அரசியை உடனே பிரான்சுக்கு அனுப்பினர். அங்கே அவளுக்கும் பிரெ ஞ்சு மன்னனின் பட்டத்திளவரசனுக்கும் சம்பந்தம் பேசப்பட்டது. சொம செற்றின் ஆத்திரச் செயல் அவனுடைய திட்டங்களுக்கே கெடுதியை உண் டாக்கிற்று.

முதற் பிரார்த்தனை நூல் (1549)

சமயவிடயங்களிலும் சொமசெற்று புத்தியீனமாக நடந்தான். இங்கி லாந்திலே சீர்திருத்தம் வெகுதூரம் முன்னேற்றமடையுமென நினைத்துக் கொண்டு அவன் கத்தோலிக்க பூசையையும், பூசையை இலத்தீன் மொழி யில் நடத்துவதையும் நிறுத்துமாறு கட்டளையிட்டான். ஆங்கிலத்திலே பூசை நடத்த ஒரு நூலைத் தயாரிக்குமாறு கிரான்மருக்குக் கட்டளையிட் டான். அவ்வாறே அவர் முதலாவது பிரார்த்தனைப் புத்தகத்தைத் தயார் செய்தார். கிரான்மருடைய வசனநடை பூசைக்கு ஓர் உயர் தகைமையை யும் அழகையுமுதவிற்று. அது வழக்கத்தில் வந்து இன்றுவரை நிலவுகிறது.

கிருச்சபையில் மாற்றங்கள்; சிலைகளும் படங்களும் அழிக்கப்படல்

திருச்சபைகளில் உள்ள விக்கிரகங்களை நீக்கவும் சுவரில் மாட்டியுள்ள படங்களை அழிக்கவும் சில ஆணையாளரைச் சொமசெற்று அடுத்தடுத்து யாக அனுப்பினான். இத்திருத்தங்களைச் சில ஆணையாளரின் சேவகர் கள் மக்களுக்கு மனத்தாங்கலுண்டாகும் முறையிலே செய்தனர். அவர்

கள் குருமார் வேடம் பூண்டு தெருவிற் பவனிவந்து படங்களை எரித்துக் கலவரஞ் செய்தனர். வைதிகப் போக்குள்ள சில பகுதிகளில் மக்கள் இச்செய்கைகளைப் பெரிதும் வெறுத்தனர். மிகப் பழங்காலந்தொட்டே மக்கள் தலைமுறை தலைமுறையாக மரபுபற்றி வந்த பூசை முறைகளைத் தாமறிந்த எளிய முறையிலே நடத்திக் கடவுளை வழிபடும் நன்னெறி அஃதெனப் போற்றி வந்தார்கள். விக்கிரகங்களுக்கு முன்னால் நின்று கொண்டு எல்லையில்லாத பிரார்த்தனைகளைச் செய்தார்கள். அவை மந்த புத்தியுள்ள மக்கள் இரட்சகரையும் அருச்சகர்களையும் நினைக்கத் துணை புரிந்தன. அழகிய தேவாலயங்களில் தொங்கவிடப்பட்ட திருப்படங்கள் அத் தேவாலயங்களை அழகு படுத்தித் தூய்மையாக்கிவந்தன. அன்றியும் அல்லலுற்று அழுத பத்தர்களின் இட்டசித்திகளையருளிவந்தன. அந்த நினைவுகள் மக்கள் மனத்தில் என்றும் நீங்காது நிலைத்திருந்தன. இவையெல்லாம் இன்று ஒன்றுசேரத் துடைத்துத் தள்ளப்பட்டன. வானவர் நாட்டின் வழியை அடைத்தமைபோல இச்செய்கை பாமர மக்களுக்குத் தென்பட்டது. புண்ணியவான்களின் பலவிதப்பட்ட மாலிகைகளை அழித்து விட்டு அவையிருந்தவிடங்களிலே சுண்ணந்தீட்டிய வெண்சிறைக்கோட்டங்களை அமைத்தமைபோல அவர்களுக்குத் தோன்றியது.

தொழிற்குழுமங்கள் ஒழிக்கப்படல் ; குழுமச் சொத்துக்கள் பறிமுதலாதல்

இம்மாற்றங்களைதற்கென விசாரணையிலாழ்ந்திருந்த மக்களின் மயங்கிய மனத்திலே மற்றுமொரு பேரிடி விழுந்தது. இப்போது இது நகரங்களைப்பாதித்தது. சமயமுறைகளைப் போலவே ஒவ்வொரு நகரத்திலுந் தொழிற்குழுமங்கள் சருவசாதாரணமாகக் காணப் பட்டன. அவை பல நோக்கங்களைக் கொண்டவை. சில சமூகத்துக்கு அவசியமான தொழில்களை நடத்துவன. அவை பயன் குன்றிவந்தமையுமொரு தலை ; வேறு சில பயனற்றனவாயினும் மக்களின் வேடிக்கைகளுக்காக நிலவிவந்தன ; அவை விழாக் கொண்டாட்டங்களும் புராண நாடகங்களுமாகும். வேறுசில சமயப்பத்தியை வளர்ப்பதையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டன. வேறுசில காயிய பூர்வமான நோக்கத்தைக் கொண்டன. தொழிற் குழுமத்தைச் சேர்ந்த ஒருவன் நோயுற்றே, இன்னலடைந்தோ காணப்பட்டால், அந்தக்குழு அவனுக்கு உதவி புரியும். அவனுடைய ஆயுதங்கள் களவுபோனால், அல்லது வீடு தீயினாலழிந்தால் அக்குழுமம் அவனுக்கு உதவி செய்யும். வறுமையுற்ற தொழிலாளியின் ஈமக்கிரியைகளுக்குத் தொழிற்குழுமம் உதவிபுரியும். அவன் பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றுவித்து, விதவையையும் காப்பாற்றும். அவனுடைய ஆன்ம சாந்திக்காகத் தேவாலயத்திலே பூசை செய்விக்கும். தருமத்துக்குப் பணமும் நிலமும் கொடுப்போர் மரணசாதனஞ் செய்வோரெல்லாரும் குழுமத்தின் பேரில் அவ்வாறு செய்தமையாற் குழுமம் நிதியுடைய தாபனமாக விளங்கிற்று. இப்பொழுது அரசாங்கம் இக்குழுமங்களின்

பணத்திலும் சொத்திலுங் கண்போட்டது. இறந்தோர் சார்பில் பூசை செய்வித்தல் போன்ற சமயச் சடங்குகளுக்காக அக்குழுமங்களுக்கும், மடங்களுக்கிருந்தவாறே, அதிக பணமுஞ் சொத்துமிருந்தன. எனவே, அச்சொத்துக்களையெல்லாம் பறிமுதல் செய்வதற்கொரு விதி இயற்றப்பட்டது. பெயரளவில் சமயச் சார்பான சொத்துக்களே பறிமுதல் செய்யப்படுமென்றிருந்தாலும், உண்மையிலே கையிலகப்பட்ட எல்லா உடைமையும் பறிமுதல் செய்யப்பட்டன. இன்றுள்ள சகாயச் சங்கங்களின் நிதிகளையும் நோயாளர் சகாயச் சங்கங்களின் நிதியையும் தொழிலாளர் சங்க நிதிகளையும் அரசாங்கம் பறிமுதல் செய்யுமானால் என்ன நிலையுண்டாகுமோ, அதே நிலையே அன்றும் உண்டானது. இவ்விதி எழை மக்களுக்குக் கெடுதியையுண்டாக்கி அவர்களை ஆத்திரங்கொள்ளச் செய்தது. இலண்டன் நகரிலுள்ள தொழிற்குழுமங்கள் விடயத்தில் இவ்விதி நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை. அது ஆபத்தான முயற்சியென விடப்பட்டது போலும். எனவே, இப்பட்சபாதமான செய்கை மக்களுக்குமேலுங் கோபமூட்டிற்று.

பூட்கையின் விளைவு

வருந்தொல்லை பலபகல் தாமதிக்கவில்லை. சூட்டிலி செய்மூர் பிரபு சொமசெற்றின் சகோதரன். அவன் கலகம் மூட்டச் சதிசெய்தான். எட்டாம் என்றியின் விதவையான கதரின் பார் என்பவளை விவாகஞ் செய்திருந்தான். அரசநிலை ஆக்கும் உவரிக்கு என்பவனைப் போல இவனும் தனக்கு ஒரு நிலையை உண்டாக்கிக்கொள்ள எண்ணினான். இவன் தனது தொழிற்சாலைகளிலே கள்ளக் காசை அடிப்பித்தான். பீரங்கிகளைச் செய்வித்தான். ஒற்றுக்கோட்டையை அரண் செய்தான். சொமசெற்றுக் கெதிராகச் சதிசெய்தான். குறித்த கழகமானது நீசத்துவ விதியொன்றை நிறைவேற்றி, அவனைச் சிரச்சேதஞ் செய்தது. நெருங்கிய சற்றத்தவனை இவனின் இராசத்துரோகத் திட்டங்கள் சொமசெற்றுக்கு நன்மைக் கேதுவானவையல்ல.

கலகம்

பின்னர் மேற்கிலும் கிழக்கிலும் ஒரே நேரத்தில் இரண்டு கலகங்கள் கிளம்பின. சொமசெற்றின் பலவீனம் இங்கும் தெட்டத்தெளிய வெளியாயிற்று. சொமசெற்றின் தோல்வியை இவை மேலும் எடுத்துக்காட்டின. இக்கலகங்கள் வெவ்வேறு காரணங்களைக் கொண்டெழுந்தன. அவை வேறு வேறு வகையிலடக்கப்பட்டன. இவ்விரு கலகங்களின் இயல்புகளைப் பற்றியும் ஆராய்வது நன்று.

மேற்கே சமயக்கிளர்ச்சி ; கிழக்கிலே பொருளாதாரப் புரட்சி

மேற்கே எழுந்த கலகம் சமயத்தையே முற்றுக அடிப்படையாகக் கொண்டது. அங்குள்ள மக்கள் பெரும்பாலும் கத்தோலிக்கமதத்தைச் சேர்ந்தவர்கள். அம்மதத்தின் பழைய வழிபாட்டுப் புத்தகத்துக்குப் பதிலாகப் **புதிய பிரார்த்தனைப் புத்தகம் 1549 இல்** புகுத்தப்பட்டது. கிழக்குப் பிரதேசத்திலே சமயத்துறையில் எவ்வித அதிருத்தியுங் காணப்படவில்லை. அங்குள்ளவர்கள், பிரதானமாக நோபக்கிலும் அதன் கிழக்கிலுமுள்ளோரிற் பெரும்பாலோர், நெடுநாளாகத்திலிருந்து வந்தவர்களானபடியால், புரட்சுத்தாந்திய சமயத்தைப் பெரிதும் எற்றுக்கொண்டனர். இங்கே கலகம் இளம்பியதற்குக் காரணம் சமூக விடயங்களாகும். புல்வெளிகளும் செய்கைக்குரிய நிலங்களும் ஆட்டு வளர்ப்பை முன்னிட்டு அடைப்புக்களாக்கப்பட்டதால் ஏராளமான மக்கள் வேலையில்லாது துன்புற்றனர். மதிப்புக் குன்றிய நாணயம் அடிக்கப்பட்டதாலே பொருள் உற்பத்தியாளரும் தொழிலாளரும் இன்னலுற்றனர். சம்பளங்களும் பொருள்களின் விலைகளும் தலைகீழாக மாறின. நோவிச்சிலும் ஏனைய நகரங்களிலுமுள்ள மக்கள் தொழிற்குழுமங்களின் சொத்துக்கள் பறிமுதலானதைப் பற்றி ஆத்திரமுற்றனர். செல்வரும் வறியோரும் அதாவது, முன்னேற்றமின்றி விவசாயத்தையே நம்பிவாழ்ந்த கத்தோலிக்க மதம் பரவியுள்ள மேற்குப் பிரதேசமும், முற்போக்கும் பொருள் உற்பத்தியுமுள்ளதும் புரட்சுத்தாந்தியச் சார்புள்ளதுமான கிழக்குப் பிரதேசமும் ஒரே சமயத்திலே கலகஞ்செய்ய முற்பட்டன.

மேற்குக் கலகம் அடக்கப்படல்

கலகம் உண்டானால் அரசாங்கம் அதை அடக்கிவிடும். எக்காரணத்தாலே கலகமுண்டானது என்பது பற்றியவிசாரணை, அறியாமையால் அக் கலகத்திலீடுபட்டவருக்கு அனுதாபங்காட்டல், கலகம் உண்டாவதற்குரிய காரணத்தை நீக்குதல் என்ற இன்னோரன்ன விடயங்கள், கலகக்காரர் ஆயுதங்களை வைத்துவிட்டுச் சாதாரண குடிகளாக அடங்கிய பின்னரே அரசாங்கத்தாற் கவனிக்கப்படும். நல்ல நோக்கத்தை உள்ளத்திலே கொண்ட சொமசெற்று இதனை உணரவில்லை. மக்கள் தமது பழைய சமயத்துக்காகக் கலகஞ்செய்கிறார்களே என்பதை சொமசெற்று உணர்ந்து அனுதாபங்காட்டவுமில்லை ; தயவுசூரவுமில்லை. எனினும், அவனால் அவர்களை இலேசாக அடக்க முடியவில்லை. 1549 ஆம் ஆண்டுக் கோடை காலம் முற்றுய், மேற்குப் பிரதேசத்திற் கலகம் நடைபெற்றது. பொமெரேய், அருண்டெல் என்பவர்களின் தலைமையிலே 10,000 மக்கள் திரண்டெழுந்தனர். எங்கும் கத்தோலிக்க பூசை கொண்டாடப்பட்டது. எட்சீற்றர் நகரம் முற்றுகையிடப்பட்டது. அரசாங்கம் நெருக்கடியை உணர்ந்சேர்மன் கூலிப் படைகளைத் தனது சேனையிற் சேர்க்கவேண்டிய நிலைமையுண்டானது. இப்படைக்குக் கிறேதி உவிற்றன் பிரபு தலைமை தாங்கினார். கிளர்ச்சிக்காரரை இப்படை செள் மேரிகிவித்திலும் சாம்போட்டுக் கோட்டினிக்களத்திலும் சந்தித்துச் சண்டை செய்தது. படைப்பலமும் ஒழுங்குக் கட்டுப்பாடுமிருந்தும் மிக முயன்றே கலகக்காரரை வெற்றிகொள்ள முடிந்தது. இக் கொடுஞ் சண்டைகளிலே நாலாயிரம்பேர்வரை கொல்லப்பட்டனர். ஈற்றிலே கலகத் தலைவர்கள் தைபேணிலே தூக்கிலிடப்பட்டனர். பின்னர் நாட்டில் ஒழுங்கு நிலவிற்று.

கெற்றின் கலகம் ; சொமசெற்றின் தலை ; உவிக்கு கலகக்காரரை அடக்குதல்

மேற்கிலே சொமசெற்றுக் கொடுமையான யுத்தம் நடத்தினான். சேர்மன் துப்பாக்கிகள் ஆங்கில விவசாயிகள் மீது குண்டுகளைப் பொழிந்தன. ஆனால், கிழக்கிலே சொமசெற்று மிக மென்மையாயிருந்தான். உரோபெட்டு, உவிலியம் கெற்று என்ற இருவர் தலைமையில் எழுந்த பெருந்தொகையான கலகக்காரர் நோவிச்சுக்கு வெளியே நகரைப் பார்த்தபடியுள்ள மலைச் சுக் கோல்டுக் குன்றில் முகாமடித்தனர். சுற்றியுள்ள உயர்வகுப்பு மக்களிடமிருந்து அவர்கள் உணவுப் பொருள்களை நிர்ப்பந்தித்துப் பெற்றார்கள். வேலியடைப்பினாலும் மதிப்புக்குன்றிய நாணயத்தினாலுமுண்டான தீமைகளைச் சொமசெற்று உணர்ந்து கலகக்காரர்மீது அனுதாபங்கொண்டான். காலப்போக்கில் அத்தீமைகளை மாற்றவும் நினைத்தான். எனவே, கலகக்காரரோடு சமாதான நிபந்தனைகளைப் பேசினான். இதைக் கண்ட கலகக்காரர் ஆயுதத்தைக் கீழே வைக்கவிரும்பவில்லை. எனவே, கலகக்காரருக்கும் சுற்றியுள்ள உயர்வகுப்பாருக்கும் சண்டை மூண்டது. கழகம் சொமசெற்றை விட்டுப் பலம் பொருந்திய மற்றொருவனின் உதவியை நாடிற்று. இவன் பெயர் உவிக்குப் பிரபு. பிற்காலத்திலே இவன் தொதம்பலந்துக் கோமகனுகப் பதவி ஏற்றான். உவிக்கு தைரியமாகக் கலகக்காரரை எதிர்த்து ஏராளமானவரைக் கொன்று ஏனையோரைக் கலைத்துவிட்டான்.

சொமசெற்றின் வீழ்ச்சி

ஊக்கமுள்ள தலைவனென்று உவிக்குப் புகழீட்டினான். அந்தப் பெயரோடு சொமசெற்றை விழுத்தத் திட்டமிட்டான். சொமசெற்றுப் பல விடயங்களிலே தோல்வியடைந்தான். கழகத்திலிருந்த அவனுடைய எதிரிகள் அவன் மீது பொறுமை கொண்டனர். அவனது கட்சி பலமற்றதாயிருந்தது. 1551 இலே அவன் கழகத்துக்குப் பணிந்தான். பின்னர் கோட்டையிற் சிறை வைக்கப்பட்டான். சிறிது காலமாய் அவன் மன்னிப்பைப் பெற்றுக் கழகத்தில் மறுபடியும் இடம்பெற்றான். ஆனால், உவிக்கு அவனை விட்டுவைப்பது ஆபத்தென உணர்ந்தான். 1525 ஆம் ஆண்டு சனவரியில், சதியாலோசனை செய்த குற்றச்சாட்டின்பேரில் சொமசெற்று சிரச்சேதஞ் செய்யப்பட்டான்.

சொமசெற்று இவ்வாறு வீழ்ச்சியடைந்தான். நேர்மையும் நல்லெக்கமு முள்ளவன்; தன்காலத்துக்குப் பொருந்தாத மிக முற்போக்கான முறை களைக் கையாண்டமையே அவன் செய்த பெரிய குற்றம். இலண்டனிலே தன்னைச் சூழ்ந்துள்ளவர்கள் கொண்ட கருத்துக்களும் அரசவையில் மக் கள் தெரிவித்த அபிப்பிராயங்களும் நாடெங்குமுள்ள கருத்தென அவன் தவருய் எண்ணினான். எட்டாம் என்றியின் ஆட்சியில் உரோமத் தலையை மக்கள் உற்சாகமாகத் தட்டிக் கழித்தனர் என்றும் மக்கள் எல்லாரும் சமயத் துறையிலே பெரிய மாற்றங்களை விரும்புகின்றனர் என்றும் தவ ருக எண்ணினான். அதனால் கண்டபடி மாற்றங்களை உண்டாக்கினான். அவனிடத்துப் பல குறைகளிருந்தபோதிலும் இங்கிலாந்திலே பலர் அவனை நேசித்தனர். அவன் கிரச்சேதஞ் செய்யப்பட்டபொழுது பலர் சூழ்ந்து நின்று தமது கைக் குட்டைகளை அவனுடைய இரத்தத்திலே தோய்த்த னர். நல்ல மனிதனொருவனின் ஞாபகத்துக்கறிகுறியாக அக்கைக்குட்டை களைக் காப்பாற்றி வைத்திருக்க விரும்பினர். சொமசெற்று நேர்மையுள்ள வன். அவனுக்குப் பின்னர் அவனுடைய பதவியை வகித்தவனைப் பற்றி அவ்வாறு கூற முடியாது.

நொதம்பலந்தும் ஆறும் எட்டுவேட்டும்

சொமசெற்று இறந்தபொழுது எட்டுவேட்டுக்கு ஏறக்குறைய பதினை ந்து வயது. இளவரசன்பால் எல்லாரும் பெரும் நம்பிக்கை கொண் டிருந்தனர். பதினாண்மைக் காலத்திலுண்டான குறைகளையெல்லாம் அர சன் நீக்கிவிடுவானென எல்லாரும் நம்பினர். "அரசனுக்கு வயது வந் ததும் நூறு சமயத் துரோகிகளைக் கழுவேற்றுவா"னென்று அமிசயர் பிரபு ஒருவர் உற்சாகத்துடன் கூறினர். இத்தகைய பலாற்கார முறை கள் எட்டுவேட்டைத் துன்பப் படுத்தியிருக்கமாட்டா. தனது மாமனின் கிரச்சேதத்தைப் பற்றி அவ்வரசன் விருப்பு வெறுப்பின்றிப் பின்வருமாறு தனது நாளேட்டிலே எழுதிவைத்திருந்தான்; "காலை 8 மணிக்கும் 9 மணிக் குமிடையிலே சொமசெற்றுக்கோமகனின் தலை வெட்டப்பட்டது". எட்டுவேட்டு ஆளப்பிறந்தவனல்லன் என்பது பின்நடந்த நிகழ்ச்சிகளாற்றெரியவந்தது.

இரண்டாம் பிரார்த்தனைப் புத்தகம் (1552); நாற்பத்திரண்டு உறுப்புக்கள்

1552 இலே **இரண்டாம் பிரார்த்தனைப் புத்தகம்** பிரசுரிக்கப்பட்டது. இது முன்னதிலும் தீவிரமானது. மதச்சீர்திருத்தஞ் சம்பந்தமாக ஐரோ ப்பிய நாடுகளிலனுசரிக்கப்பட்ட முறைகளுக்கு அண்ணியது. முதலா வது பிரார்த்தனைப் புத்தகத்திலும் பார்க்கக் புரட்டசத்தாந்திய முறைகளுக்கு இது சார்பானது.[1] தேவாலயச் சடங்குகள் பல நீக்கப்

[1]தேவபூசையிலே பிரதிட்டைப் பிரார்த்தனை செய்யும்போது அதை ஞாபக பூசையாக மாத்திரம் செய்வதற்குரிய சொற்கள் சேர்க்கப்பட்டன. சிலர் தேவ பூசையை முழந்தாளில் நின்று செய்யக்கூடாதெனவும் கூறினர்.

பட்டன. 42 சமய உறுப்புக்கள் பிரசுரிக்கப்பட்டன. வேறு திருத்தங் களுஞ் செய்யப்பட்டன. இவையெல்லாம் தீவிர திருத்தவாதிகளின் கருத் தையனுசரித்தே செய்யப்பட்டன. அத்துடன் சில பயனுள்ள நடவடிக்கை களுமெடுக்கப்பட்டன. தொழிலாளரின் இன்னல்களைத் தீர்ப்பதற்காக வேலி யடைக்கும் முயற்சி கண்காணிக்கப்பட்டது. அதன் பயனாக விவசாயம் விருத்திசெய்யப்பட்டது. ஒவ்வொரு கோயிற்பற்றிலும் வறியவர்க்குச் சகாயஞ் செய்வதற்காக நிதி திரட்டும் நோக்கமாய் வறியவர் சகாயச் சட்டம் செய்யப் பட்டது. அரசனுடைய வீட்டுச் செலவுகள் குறைக்கப்பட்டன. அரசியல் தொல்லைகள் நாளடைவில் மாறி விடுவது இயல்பு. அவப்பேருக இங்கி லாந்திலே அரசியல் அமைதிக்கு நேரமில்லாது போய்விட்டது. இங்கிலாந்து க்குத் தேவைப்பட்டது நிலையான அரசாங்கம். ஆனால், மறுபடியும் ஆட் சியில் மாற்றமேற்படக்கூடிய நிலையுண்டானது. எட்டுவேட்டு நோயுற் றான். அவனுக்குப் பின்னர் அரசரிமை கத்தோலிக்க சமயத்தையனுசரி க்கும் மேரிக்குச் செல்லவேண்டியிருந்தது. எதிர்காலம் நிச்சயமற்றதா யிருந்தது. அதனால் நிகழ்காலம் இருள் நிறைந்ததும் நிலையற்றதும் தொல்லையுடையதுமாயிருந்தது.

புரட்சுத்தாந்த அரசரிமை; நொதம்பலந்தின் குணம்: எட்டுவேட்டின் மரணசாதனம்; சேன்கிறே சிமாட்டி

சொமசெற்றின் வீழ்ச்சிக்குச் சூழ்ச்சி செய்தவனும் அக்காலே ஆட்சி பீடத்திலமர்ந்திருந்தவனுமான உவொறிக்குப் பிரபுவுக்கு எற்பட்ட இன்னல் வேறேவருக்குமுண்டாகவில்லை. உவொறிக்கு ஏழாவது என்றியின் அமைச் சனான இட்டிலியின் மகன். இட்டிலியை எட்டாம் என்றி சிரச்சேதஞ் செய்தான். அதற்கு முக்கிய காரணம், அரசனுக்குப் பணம் சேகரிப்பதில் அவன் காட்டிய ஊக்கம் மக்களிடையே அவனிடம் வெறுப்பையுண்டாக்கிய மையாகும். இந்த உவொறிக்கு நொதம்பந்துக் கோமகன் பதவியைப் பெற்றான். இவன் சிறந்த போர்வீரனுகவும் நேர்மையல்லாத நெறியிற் சென்றபோதிலும் சிறந்த அரசியல் வாதியாகவும் விளங்கினான். பொது சன ஆதரவு என்னும் அலையின் சிகரத்தில் எப்பொழுதும் நிற்பது அரசியல் வாதிக்குரிய இயல்பான குணம். அது இவனிடமிருந்தது. உண் மையோ, நம்பிக்கை வைப்பதற்குத் தகுந்த இயல்போ இவனிடமில்லை. தீவிர சீர்திருத்தவாதிகளின் கட்சியில் இவன் சேர்ந்ததற்கு இரண்டு காரணங்களுண்டு. ஒன்று, அரசனுடைய கட்சியுமதுவாயிருந்தமை. மற் றையது எட்டாம் என்றியின் ஆதரவாளரான பழைய பிரபுக்கள் செல்வாக்குப் பெற்றால் தனக்கு அழிவுண்டாகுமென்று அவன் எண்ணியமை. புதிய புரட்சுத்தாந்திய சமயக் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளும் நிலைமை யில் மக்களிருக்கவில்லை. அவ்வாறிருந்தாலும் நேர்மையுள்ள சொம செற்று அப்புதிய சமயத்தை மக்கள் கைக்கொள்ளச் செய்ய முடியாதிருந்த

பொழுது, நேர்மையற்றவனும் தன்னலங்கருதியவனுமான நொதம்பலந்து அம்முயற்சியில் தோல்வியுறுவது நிச்சயமே. ஒரு புறத்திலே எட்டுவேட்டு இளவரசனின் ஆதரவையும் மறுபுறத்தில் ஒருநிலையில் நில்லாத கழகத்தின் ஆதரவையும் நம்பிய நொதம்பலந்து, எட்டுவேட்டின் நேகசுகங்குன்றி வரவரத் தனது நிலையும் ஆபத்தடைந்து வருவதை 1552 இல் அறிந்தான். எனவே, தனது நிலையைத் திறப்படுத்துவதற்கு முயன்றான். மேரி பட்டத்துக்கு வந்தால் சமயச் சீர்திருத்தம் பாழடையுமென்பதை எட்டுவேட்டிற்கு உணர்த்துவது கடினமன்று. சமயச் சீர்திருத்த விடயத்திலே நொதம்பலந்து உண்மையுள்ளவனுயிராவிட்டாலும், எட்டுவேட்டைப் பொறுத்தவரையில் அதனை மனமார அவன் ஆதரித்தான். எனவே, நொதம்பலந்தின் ஆலோசனைப்படி அவன் தனக்குப்பின் தனது அரசு, மேரிக்கோ, இலிசபெத்துக்கோ செல்லக்கூடாதென்றும் அதற்குக் காரணம் அவர்கள் முறையற்ற திருமணத்தின் பயனுகப் பிறந்தவர்களென்றும், அரசுரிமை எட்டாம் என்றியின் கடைசிச் சகோதரியுடைய பேத்தியான சேன் ஹிறே சீமாட்டிக்கே செல்ல வேண்டுமென்றும் மரணசாதனம் எழுதினான். மேலும், நொதம்பலந்து தனது இரண்டாம் மகனை இல்பேட்டுப் பிரபுவைச் சேன் சீமாட்டிக்குச் சொற்பகாலத்துக்கு முன்னரே மணஞ் செய்வித்திருந்தான். இதனுல் அரசுரிமை புரட்டஸ்தாந்திய சமயத்தைச் சேர்ந்த ஒருவருக்குச் செல்லக்கூடியதாயிருந்ததுமன்றித் தனது குடும்பச் செல்வாக்கும் அதிகரிக்கக் கூடியதாயிருக்குமென எண்ணினான். தனக்கு எவ்வகையிலும் ஆபத்துண்டாகாதெனவும் புதிய அரசியின் மாமனென்ற முறையில் தானே ஆட்சியை நடத்த முடியுமென்றும் அவன் மனப்பால் குடித்தான். **(குறிப்பு 46.)**

நொதம்பலந்தின் தோல்வி ; "ஒன்பது நாள்" அரசி ; நொதம்பலந்து தூக்கிலிடப்படல்

புரட்டஸ்தாந்திய சமயத்தைக் கைக்கொள்ளும் அரசனே ஆட்சி நடத்தவேண்டுமென்று மக்கள் விரும்பியிருந்தால் நொதம்பலந்தின் திட்டம் வெற்றியளித்திருக்கும். நல்லரசிக்குரிய இயல்புகளெல்லாம் சேன் சீமாட்டியிடம் இருந்தமை உண்மையே. ஆனுல், மக்கள் இப்புதிய ஒழுங்கை விரும்பவில்லை யென்பது நாளடைவில் தெரியவந்தது. 1553 இலே எட்டுவேட்டு இறந்ததும் அச்செய்தியை மேரி அறிந்துகொள்வதற்கு முன்னதாகவே நொதம்பலந்து மேரியைப் பிடித்துவிடத் தெண்டித்தான். ஆனுல், அவளுடைய நண்பனொருவன் நேரத்தோடு அவளுக்கு எச்சரிக்கை செய்திருந்தான். அதன் பயனுக அவள் நோபக்கிலிருந்த அவேட்டுக் குடும்பத்தவரான கத்தோலிக்க நண்பர்களிடம் ஒளித்தோடிவிட்டாள். அங்கேயிருந்து கொண்டு தானே பட்டத்தரசியென மக்களுக்குப் பிரகடனஞ் செய்தாள். எல்லாரும் அவளுடைய கட்சியை ஆதரித்தனர். இலண்டனிலே தானும் நொதம்பலந்தின் திட்டங்களெல்லாம் படுதோல்வியடைந்தன.



சேன் சீமாட்டியைப் பட்டத்தரசியாக நொதம்பலந்து பிரகடனஞ் செய்தான். சனங்களிற் சிலர் மௌனஞ் சாதித்தனர். சிலர் எதிர்த்தனர். நொதம்பலந்து தன் மகனை உரொபேட்டு இட்டிலிப் பிரபுவைமேரியைக் கைது செய்யுமாறு அனுப்பினன். அவன் நோபக்கையடைந்ததும் அவனோடு சென்ற போர்வீரர் சண்டையிட மறுத்தனர். கடற்படை மேரியை ஆதரித்தது. ஆயிரக்கணக்கான மக்கள் மேரிக்கு ஆதரவளித்தனர். கிழக்குப் பிரதேசங்களுக்குத் தண்டெடுத்துச் சென்ற நொதம்பலந்தின் படைவீரர் புரட்சி செய்து நொதம்பலந்தைக் கைவிட்டுச் சென்றனர். எட்டுவேட்டு இறந்து இரண்டு வாரஞ்செல்வதற்குள்ளே நொதம்பலந்து நம்பிக்கையிழந்தவனும், மேரியைப் பட்டத்தரசியாகக் கேம்பிரிச்சிலே பிரகடனஞ் செய்ய வேண்டியேற்பட்டது. தியூடர் அரசைச் சேர்ந்த ஒருவரின் கோபத்தை இவ்வாறு தணிக்க முடியாதென்பதை அவன் விரைவிலுணர்ந்தான். அடுத்த நாளே அவன் கைதுசெய்யப்பட்டுக் கோட்டையிற் காவல் வைக்கப்பட்டான். அங்கும் அவன் மேலும் பல ஈனத்தொழில்களைச் செய்தபின் தூக்கு மேடையில் நின்று தான் உள்ளத்தால் எப்பொழுதும் கத்தோலிக்க சமயத்தையே கடைப்பிடித்து வந்தவன் எனக் கூறினன். இவ்வாறு தனது சமயத்தை மறுதலித்ததைப் புரட்சுத்தாந்தியர் பார்த்துப் பரிகாசஞ் செய்தனர். எல்லாராலும் வெறுத்து ஏளனஞ் செய்யப்பட்டவனாய் அவன் இறந்தான்.

5 ஆம் அதிகாரம்

தியூடர் மேரி அரசி (1553–1558)

கத்தோலிக்க எதிரியக்கம்

அரசு கட்டிலேறியபொழுது மேரிக்கு வயது முப்பத்தியாறு. பாதி இசுப்பானியக் கலப்பும் பாதி தியூடர்க் கலப்புமுள்ளவள். பிறப்பாலும் வயதாலும் பிடிவாத குணமுடையவள். வாழ்வு முழுவதும் கசப்பு; தாயைப் புறக்கணித்தார்கள்; அவள்மீது பழி சுமத்தினர்கள். மேரியின் பட்டத்துரிமையைப் பற்றிச் சந்தேகப்பட்டனர். அவள் பிறப்பையே திருமண உரிமையாற் பிறவாத பிறப்பென விளம்பரஞ் செய்தனர்; பகைவர் சூழ்ந்த வாழ்வு; அடிக்கடி சிறையிருந்தது போன்ற சீவனம். சாதியாற் பாதி பிறநாட்டவள்; நாட்டுமக்கள் எந்த உரோமச் சமயத்தில் ஐயங் கொண்டனரோ அதில் நிறைந்த ஆர்வம்; எனவே பயிற்சியாலும், பண்பாலும், இங்கிலாந்தின் போக்குக்கு அனுகூலமில்லாத உளப்பான்மை. இதுவே மேரியரசின் நிலை. நொதம்பலந்து சாதுரியமுள்ள அரசியலான் அல்லன்; எனினும் மேரி அரசியானால் எத்தகைய தன்மையுடன் விளங்குவாளென்பது அவனுக்குத் தெரிந்தது.

இங்கிலாந்தில் மேரிக்கு ஆதரவு

ஆங்கிலேயர் மேரியின் ஆட்சியைப்பற்றி அத்துணைப் பயங்கொள்ளவில்லை. கத்தோலிக்க மன்னராட்சியிலேயே இங்கிலாந்து இதுகாறுமிருந்து வந்தது. எனவே புதிதாக ஆட்சிக்கு வந்த கத்தோலிக்க அரசியைப் பற்றிப் பயப்படுவதற்குக் காரணமில்லை. உரோமுக்கெதிராக எட்டாவது என்றி மன்னன் தீவிரமான நடவடிக்கைகளெடுத்து வந்தகாலத்திலும், உள்ளத்திலுண்மையுள்ள கத்தோலிக்க சமயியாகவேயிருந்து வந்தான். ஆறும் எட்டுவேட்டு ஆட்சி நடத்தவில்லை; அவன் காலத்தில் பதிலாளியாகச் சொமசெற்றும் நொதம்பலந்துமே ஆட்சி நடத்தினர். அவர்களுடைய ஆட்சியையே புரட்சுத்தாந்திய ஆட்சிக்கு உதாரணமாகக் கொள்வதானால், அவ்வாட்சி அவ்வளவு சிறப்புடையதாகத் தெரியவில்லை. தியூடர் குலத்து என்றியரசனின் மகளான மேரியே தமது புதிய அரசியென ஆங்கிலேயர் அபிமானம் கொண்டனர். அதனால் தியூடர் வமிசத்துக்கு அவர்கள் எப்பொழுதும் காட்டி வந்த மரியாதையையும் விசுவாசத்தையும் இப்பொழுதும் காட்டி அவளை அரசியாக ஏற்றுக் கொண்டனர். ஆறும் எட்டுவேட்டினுட்சியில், சமயக் கோட்பாட்டிலே மாற்றங்களேற்படுத்த வேண்டுமெனச் செய்த முயற்சிகளெல்லாம் சனங்களாற் பெரிதும் வெறுக்கப்பட்டன. "நல்ல என்றி மன்ன"னின் ஆட்சி மறுபடியும் வரமாட்டாதோவென மக்கள் எதிர்பார்த்தனர். மேரி, இங்கிலாந்தை மறுபடியும் உரோமின் ஆதிக்கத்திற் கொண்டுவந்து விடுவாளென்ற பயம் அவள் பட்டத்துக்கு வந்த மகிழ்ச்சியிலடிபட்டுப் போய்விட்டது.

மேரியின் ஆட்சிக்காலப்பிரிவு
கத்தோலிக்கப் புத்துயிர்ப்பு

எனவே மேரியின் சொற்பகால ஆட்சியை இரண்டாகப் பிரிக்கலாம். முதலாவது, நிலைமையைத் திடப்படுத்தி, ஆறும் எட்டுவேட்டு கொண்டு வந்த அகாலச் சீர்திருத்தங்களை மாற்றியகாலம். இரண்டாவது காலத்திலே மேரி சபானியக் கணவனை மணந்து, இங்கிலாந்தில் மறுபடியும் உரோமின் ஆதிக்கத்தைப் புனருத்தாரணஞ் செய்ய முயன்றாள். இரண்டாம் காலப் பகுதியிலே தான் அவளுடைய ஆட்சிக்காலத்தைக் கொடுங்கோலாட்சியாக்கிய சமயத்துன்புறுத்தல்களுண்டாயின.

பிசப்புக்கள்
சபானியத் திருமணம் (1554)
வயற்றின் கலகம்
சேன் கிறே சீமாட்டி கொலை செய்யப்படல்

ஆரம்பத்திலே மக்கள் மேரியின் அபிப்பிராயங்களை ஆதரித்தனர். பொதுசன ஆதரவின் பேரிலேயே தேவபூசை மறுபடியும் அனுட்டிக்கப்பட்டது.

மேரி அரசியான இரண்டு மாதத்துக்குள்ளே பாராளுமன்றம் கூடிற்று; ஆறும் எட்டுவேட்டு நிறைவேற்றிய சமய விதிகளெல்லாம் நீக்கப்பட்டன. "எட்டாம் என்றியின் கடைசி நாட்களில் இங்கிலாந்திலே அனுசரிக்கப்பட்டு வந்த தேவபூசை" மறுபடியும் அனுட்டிக்கப்பட்டது. எட்டுவேட்டின் புரோ டிதராயிருந்த யோன் நொட்சு போன்ற முக்கிய சமயவாதிகள் நாட்டைவிட்டு வெளியேறினர். கிரான்மர் மேற்றிராணியாரும் அவர் கட்சியைச்சேர்ந்த இலத் திமர், ஹிட்டிலி போன்றவர்களும் பதவியிலிருந்து நீக்கப்பட்டனர். அக்குரு பீடங்களை முன்னர் வகித்துவந்த விசப்பாண்டவர்களான காடினரும், பொன் னரும், வின்செசுற்றர் குருபீடத்துக்கும் இலண்டன் குரு பீடத்துக்கும் மறு படியும் நியமிக்கப்பட்டனர். அரசியின் விவாக விடயங்கூட ஆங்கிலேயருக்கு எவ்வித மனக்கசப்பையுமுண்டாக்கவில்லை. தெவன் கோமகனை கோட் டினியை மேரி விவாகஞ் செய்யவேண்டுமென மக்கள் விரும்பினர். கோட்டினிக் கோமகன் யோக்கு வமிசத்தின் கடைசிப் பிரதிநிதியாவன். மேரியின் இனத்தவரும், போப்பாண்டவரின் பிரதிநிதியாக இருந்த வருமான இரெசினல்டு போல் என்பவரும், சிபானியத் தூதரான இரெனுட்டும் செய்த தூண்டுதலின் பயனாக மேரி அதற்கு இளைங் காது சிபானிய மன்னனை இரண்டாம் பிலிப்பை மணக்கவேண்டுமென விரும்பினள். இதை மக்கள் ஆதரிக்கவில்லை. அதனால் எங்கும் அதிருத் தியுண்டாகிக் கலகத்தில் முடிந்தது. **சேர் தொமசு வயற்று** என்பவன் ஒரு தொண்டர் கூட்டத்தைச் சேர்ந்தான். சேன்மேரே சீமாட்டியின் தந் தையான சபோக்கும், நொதம்பலந்தின் நண்பர்களும் அவனுக்கு ஆதர வளித்தனர். உடனே அரசியைக் கைதுசெய்யப் புறப்பட்டனர். இலண் டன் வாசிகள் மேரியை ஆதரித்தபடியால், வயற்று தோல்வியடைந்தான். உடனே அவனையும் சபோக்கையும் கைதுசெய்து சிரச்சேதஞ் செய்தனர். மேரி இதைச் சாட்டாகக் கொண்டு கிறே சீமாட்டியையும் அவளுடைய கணவனையுஞ் சிரச்சேதஞ் செய்வித்தாள். சேன்மேரே சீமாட்டிக்கு இந்தக் கலகக்காரரின் சதியைப்பற்றி உண்மையில் ஒன்றுமே தெரியாது. இலிச பெது இளவரசியிலும் சந்தேகமுற்று அவனையுஞ் சிறையிலிட்டனர். அவள் தன்னையும் கொலை செய்வார்களோவென்று சிறையிலிருந்து அஞ்சினள். ஆனால் மேரி அவ்வளவு தூரம் செல்லத் துணியவில்லை. ஆனால் சிபானியக் கணவனைக் கலியாணஞ் செய்யும் முயற்சியில் அவள் ஈடுபட்டாள். தனக்கொரு குழந்தை பிறக்குமானால், இங்கிலாந்தின் அரசுரிமைக்கு இலிச பெதுடன் அதற்கும் உரிமையிருக்குமென்பதே அவளது எண்ணம்.

சிபானிய திருமணத்தின் அபாயங்கள்

ஆட்சியில் திருப்பம் உண்டாதல்

அக்காலத்துக் குலமுறைக் கலியாணங்களுள் இதுவே மிக ஆபத்துக் கேதுவாயிருந்தது. ஐரோப்பாவில் அந்தக்காலத்திலே மிகப் பலமுற்று விளங் கிய ஓர் அரசின் நட்பை இவ்விவாகத்தின் பயனாக இங்கிலாந்து பெறலாமிற்

பெற்றது உண்மையே. கொத்துலாந்து அரசி மேரிக்கும், பிரான்சின் அரச குமரனுக்கும் ஏற்பட்ட விவாக சம்பந்தத்துக்கு இது எட்டிக்குப் போட்டி யாயமைந்ததெனத் கொள்ளலாம். அக்காலத்தில் ஐரோப்பாவில் விளங் கிய இரண்டு வல்லரசுகள் பிரான்சும் சிபெயினுமே. கொத்துலாந்தரசியைப் பிரெஞ்சு இளவரசன் திருமணம் செய்ய ஒழுங்காயிற்று. எனவே, இங் கிலாந்து அரசியான மேரியை சிபானிய மன்னன் மணஞ் செய்யவேண்டியதே. சிபெயின் பிரான்சிலும் பார்க்கப் பலம் வாய்ந்த வல்லரசு. இங் கிலாந்து இவ்வாறு பெருமை பாராட்டிக் கொள்ளலாம். ஆனால் இந்த விவாகத்தினாலே பல இன்னல்கள் எதிர்நோக்கி நின்றன. பிரான்சும், சிபெயினும் யுத்தத்திலிறங்கினால், இங்கிலாந்தும், கொத்துலாந்தும் பிணங்க வேண்டியேற்படும். பிரெஞ்சு அரசும் கொத்துலாந்தரசும் ஒன்றுபட்டால், இங்கிலாந்தைப் பாதுகாக்க சிபானியச் சைனியங்கள் இங்கிலாந்தில் வந்திறங்க லாம். அது இங்கிலாந்தின் சுதந்திரத்துக்கு ஆபத்தை விளைக்கும். அத னிலும் பெரிய ஆபத்து இங்கிலாந்தை இசுப்பானிய மன்னர் ஆட்சி செய்வது. இரண்டு அரசும் ஒன்றாலல் அத்தகைய நிலையும் உண்டாகலாம். நெதலந்து வாசிகள் இவ்வாறே தமது சுதந்திரத்தை யிழந்தமைபோல இங்கிலாந்தும் இழக்கலாம். நெதலந்து சிபெயினின் ஒரு மாகாண மாகவே ஆட்சி செய்யப்பட்டது. அதனால் நெதலந்துக் கேற்பட்ட கெடுதி கொஞ்சமன்று. இந்த விவாகப் பொருத்தனையிலே முற்காப்புக்கள் இருந்தனவென்பது உண்மையே. இங்கிலாந்தின் விடயங்களையும், வரு மானங்களையும் மேரியே பரிபாலிக்கவேண்டும். சேனையிலோ கடற் படை யிலோ அந்நியர் தலைமை தாங்கமுடியாது. இச்சம்பந்தங் காரணமாக இங்கிலாந்து பிரான்சுடன் சண்டை செய்ய இழுக்கப்படமாட்டாது. அரச தம்பதிகளுக்கு மகன் பிறந்தால் அவன் இங்கிலாந்தையும், பேகண்டியையும், நெதலந்தையும் அரசாள்வான்; சிபெயினுக்கு மன்னனுகான். இவை நியாயமான முற்காப்புக்களே. எது நேர்ந்துவிடக்கூடுமென்று மக்கள் அஞ்சுகிறார்களோ அதற்கெதிராக முற்காப்புக்கள்எடுத்தலே உலகியற்கை. ஆயின், பொருத்தனைகளின்படி எப்பொழுதும் அரசுகள் நடப்பதில்லையே. பாதி சிபானியப் பிறப்புள்ள தாய்க்கும், சிபானியத் தந்தைக்கும் பிறந்த மகனிடத்து ஆபத்துக்கேதுவான குணங்கள் நிரம்பியிருக்கும். ஆனால் அத்தகைய ஒரு மகன் பிறவாமை இங்கிலாந்தின் அதிட்டமே. "சிபானியச் சம்பந்தம் வேண்டாம்" என்றே வயற்று பிரசாரஞ் செய்தான். கலகம் அதற்காகவே உண்டானது. அது பொதுமக்கள் மனதில் உள்ள பயத்தை வெளிக்காட்டிற்று. அவனும் அவனுடைய ஆதரவாளர்களும் கொண்ட அபிப்பிராயம் சரியானதே.

மறுபடியும் உரோமின்கீழ் இங்கிலாந்து (1554)
உடற்றற் பூட்கை
இரிட்டிலியையும், இலத்திமரையும் எரித்தல்
கிரான்மரை எரித்தல் (1556)

மேரியின் ஆட்சியில் சிபானிய சம்பந்தம் ஒரு திருப்பத்தையுண்டாக்கிற்று. இங்கிலாந்தை மறுபடியும் உரோமுக்குப் பணியச் செய்வதற்கு மேரி திட்டமிட்டாள். அதற்கு அவளுக்கு சிபெயினின் பக்கபலமுமிருந்தது. போப்பாண்டவர் பிரதிநிதியான போல் இங்கிலாந்தில் இறங்க அனுமதிக்கப்பட்டார். தேர்தல்களை மிகக் கவனமாக ஒழுங்கு செய்ததன் பயனாய் மேரிக் காதரவான பாராளுமன்றம் உருவாயிற்று. அக்காரணத்தால் எட்டாம் என்றி இயற்றிய சமயச் சட்டங்கள் விலக்கப்பட்டன. உரோமிலிருந்து பிரிந்திருந்த பாவத்தைமன்னித்தருள வேண்டுமெனப் பாராளுமன்றம் குறையிரந்தது. போல் அதனை ஏற்று, இங்கிலாந்தை உரோமிலிருந்து விலக்கியுள்ள தடையை நீக்கி, மறுபடியும் இங்கிலாந்தை உரோமுக்குப் பணிவுள்ளவர் கூட்டத்திற் சேர்த்தார். அத்துடன் பழைய மடச் சொத்துக்களைப் புதிய சொந்தக்காரர் அனுபவிக்கவும் விட்டார். சமயத்துரோகம் சம்பந்தமான சட்டங்களைப் பாராளுமன்றம் மறுபடியும் நடைமுறைக்குக் கொண்டுவந்தது. புரட்டகத்தாந்திய மதத்தைச் சேர்ந்தவர்களை உற்றும் படலமும் ஆரம்பித்தது. குளோசுற்றர் விசப் பாண்டவரான ஹூப்பரும், பரிசுத்த போல் தேவாலய உயர் பதவிப் பாதிரியாரான உரோசரும் பரிசுத்த இடேலிட்டு மடத்து விசப்பாண்டவர் பெரரும், சமய நிந்தனை செய்தனர் என்ற குற்றச் சாட்டின் பேரில் விசாரணை செய்யப்பட்டனர். அவர்களோடு மேலும் பதினெல்வர் விசாரிக்கப்பட்டனர். இவர்கள் தமது குற்றத்தை ஒப்புக்கொண்டு மதம் மாறுவரென மேரியும் அவளுடைய ஆலோசனைக் குழுவினரும் எதிர்பார்த்தனர். ஆனால் ஒருவர் மாத்திரமே அவ்வாறு செய்தனர். மற்றவர்கள் தூக்கு மேடையேறினர். பின்வரும் நிகழ்ச்சிகளுக்கு இது ஒரு பீடிகையாய் அமைந்தது. மேரி அரசி தனக்கொரு குழந்தை பிறக்குமென எதிர்பார்த்தாள். 1555 மே மாதத்தில் அந்நம்பிக்கை சிதறடிக்கப்பட்டது. ஐந்த ஏமாற்றம் அவளைத் திருச்சபை விடயத்தில் அதிக ஊக்கங்கொள்ளச் செய்திருக்கலாம். கோடை காலம் முழுவதும் சமயத்துன்புறுத்தல் அதிகரித்தது. செற்றம்பரிலே கிரான்மர், இலத்திமர், இரிட்டிலி ஆகியோர் ஒருமித்து விசாரிக்கப் பட்டனர். இலத்திமரும், இரிட்டிலியும் ஒட்சுபோட்டிலே தீக்கிரையாக்கப் பட்டனர். கிரான்மர் விடயத்தில் தாமதமுண்டானது. அதிமேற்றிராணியாரை எரிப்பதற்கு உரோமின் விசேட அனுமதிவேண்டியிருந்தது. மேலும் அவர் தமது கொள்கையைக் கைவிடலாமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. முதலில் அவ்வாறு செய்தபின் அவர்தைரியமாக அதை மறுத்துத்

தாம் புரட்டகத்தாந்திய வாதியாகவே இறக்க விரும்புவதாகக் கூறினார். தன்பிழையொப்பிய அறிக்கையிலே ஒப்பமிட்ட "தகுதியற்ற தன் கையை" முதலில் நெருப்பிலே நீட்டினர்.

சமயத் துன்புறுத்தலுக்காளான கடைசிப் பெரியார் கிரான்மரே. ஏறக் குறைய ஆறு திருச்சபைப் பெரியாரைத் தவிர, சமயத்துக்காக உயிர் நீத்த குறிப்பிடத்தக்க பெரியவர்கள் வேறெவருமில்லையெனலாம். பொது மக்களிற் பிரசித்தி பெற்ற எவரும் தமது கொள்கைக்காகத் துன்பப் படவில்லை. ஒன்றில் அத்தகைய உயர் நிலையிலிருந்தவர்கள் சாவதான மாயிருந்திருக்கவேண்டும். அல்லது அரசாங்கம் அத்தகையோரைத் துன்புறுத்துவதிலே அதிக சாவதானமாயிருந்திருக்கவேண்டும். ஆனால் சாதாரண மக்களாய், வெளியுலகறியத்தக்க சிறப்பில்லாதவரான 270 தியாகிகள் வரை உயிர் நீத்தார்கள். இவர்களுக்கு "எவ்வித ஞாபகச் சின்னமும் நிறுவப்படவில்லை." இலத்திமர் தமது சகோதர விசப்பாண்டவரான இரிட்டிலிக்குக் கூறிய வீரவார்த்தைகளை எல்லாருமறிவர். "ஆண்மையுள்ளவனுயிரு மாசுற்றர் இரிட்டிலி; இன்று இங்கிலாந்திலே ஆண்டவனருளால் நாம் கொளுத்தும் தீபம் ஒருபோதும் அணையாது." தீபங் கொளுத்தப்பட்டது உண்மையே. ஆயின் இச்சமய நீபத்தை ஏற்றிவைப்பதில் முக்கியமான பங்கு கொண்டோர் இலத்திமர், இரிட்டிலி, கிரான்மர் என் போரும் உயிர்த்தியாகிகள் பிறருந்தானை எனுங் கேள்வி எழலாம். ஒருவர் விசப்பாண்டவர் என்றமையால், சமயத்துக்காக உயிர்த்தியாகஞ் செய்வது சாதாரண ஏழையொருவனினும் அவர்க்கு எளிதாகிவிடாது. எனினும், போர்வீரனொருவன் தன் தாய்நாட்டுக்காக உயிர் கொடுப்பது போன்று விசப்பாண்டவரும், அவசிய மேற்படின், தம்மதத்துக்காக உயிர் துறக்கச் சித்தமாயிருத்தல் வேண்டும். உயிர்த்தியாகஞ் செய்வது குருத்துவப்பதவி வகிப்போர்க்குச் சிலவேளைதவிர்க்கமுடியாத கடமையாகிவிடுகிறது. உயர்பதவியிலுள்ளவர்களனுபவிக்குந் துன்பங்களைக் கண்டு சாதாரண மனிதர் அதிர்ச்சியடையலாம்; ஆனால் தம்மைப்போன்றவர்கள் காட்டும் வீரமே அவர்களுக்கு மனத்தில் நம்பிக்கையைத் தூண்டும். எட்டாம் என்றி காலத்திலே சீர்திருத்தத்தில் உற்சாகங் காட்டியவர்கள் திருச்சபைக் குரிய நிலங்களைப் பெற்றார்கள். ஆறாம் எட்டுவேட்டு காலத்திலே அரசனும் மந்திரிகளும் அதற்கு வழி காட்டிகளாயிருந்தார்கள். ஆனால் மேரியின் காலத்தில் உயிர்நீத்த புரட்டகத்தாந்தியர் தமது கொள்கைக்காகவே தியாகஞ் செய்தனரென்பதிலேயமில்லை. உலக நன்மைகளின் பொருட்டும், வஞ்சக நோக்கங்களைக் கொண்டும், நிச்சயமில்லாத கொள்கைகளைக் கொண்டுமே புரட்டகத்தாந்தியர் மதம் நிறுவினரென இதுவரை மக்கள் சந்தேகங்கொண்டனர். சமயத் துன்புறுத்தல் இங்கிலாந்திலே முன்னரும் நிலவிவந்ததொன்றே. நாலாம் என்றியாட்சியிலும் ஐந்தாம் என்றியாட்சியிலும் உலொல்லாடியர் தீக்கிரையாக்கப்பட்டனர். எட்டாம் என்றி காலத்திலே மக்கள் தாம்கொண்ட

கொள்கைக்காக உயிர் துறந்ததுண்டு. ஆதிக்க விதிப்படி, சத்தியப் பிரமாணஞ் செய்ய மறுத்ததற்காக மூர் என்பவரும் பிசரும் உயிர் துறந்தனர். பட்டத்துரிமையை மன்னரும், பாராளுமன்றமும் நிச்சயப் படுத்துவதிலே தமக்கு ஆட்சேபமில்லையென்றும், என்றி அத்துறையிலே செய்யும் முடிவைத் தாம் ஏற்றுக்கொள்ளத் தயாரென்றும், சட்ட அனுபவமுள்ள மூர் கூறினர். ஆனால் போப்பாட்சி அதிகாரத்தை மறுக்கும் சட்டத்துக்குத் தாம் அடங்கிச் சத்தியப் பிரமாணஞ் செய்ய முடியாதென மறுத்தார். தமது மதக் கொள்கைக்கு மாறுகப் போவதிலும் சாவதே மேலென அவர் உயிர் நீத்தார். அவருடன் பிசரும் மாண்டார். ஆனால் இவர்கள் தனிப்பட்ட இருபோர்வழிகள். இவர்களுடைய தியாகம் மக்கள் மனதிலே ஆழப்பதிந்தபோதிலும், பலருடைய ஆதரவைப் பெற்ற பேரியக்கத்தின் தொண்டர்களென்ற முறையிலிவர்கள் தியாகஞ் செய்யவில்லை. பாமர மக்கள் தமது மதக் கொள்கைக்காக நெருப்பிலே எரிந்து இறக்கும் அவத்தையும், திடசித்தமும் புரட்டகத்தாந்திய இயக்கத்துக்கு ஆக்கமளித்தன.

மேரிமீது வெறுப்பு

பிரெஞ்சு யுத்தம்

சமயத் துன்புறுத்தல் மூலம் இங்கிலாந்திலே மதமாற்றத்தை யுண்டாக்கலாமென மேரி எண்ணினாள். அத்துறையிலே அவள் பல முயற்சிகளையுஞ் செய்தாள். ஆனால் அவை எதிர்க் கட்சியையே பலப்படுத்தின. மக்கள் அவள் மீதும், போல், பொனர் என்பவர் மீதும், கத்தோலிக்கர் மீதும், மேரியைச் சமயத் துன்புறுத்தலில் ஊக்குவித்தவளாக அதிக காரணமின்றிக் குற்றஞ் சாட்டப்பட்ட அவளுடைய கணவனான சிபானிய மன்னன் பிலிப்புமீதும் கடுத்துக் கோபித்தனர். எனினும் நிலைமையைச் சமாளிக்க எவ்வித நடவடிக்கையுமெடுக்க முடியாமற் போயிற்று. வெளி நாட்டு உதவியின்றிக் கலகஞ் செய்தால் அது தோல்வியடைந்துவிடும்; பிரெஞ்சுப் படைகளைத் துணைக்கு அழைத்தால் உடனே சிபானியப் படைகள் வந்திறங்கும்; நாடு யுத்தகளமாகிவிடும். என்ன நேர்ந்தாலும் அந்த நிலை நேரக்கூடாது. மேலும் மேரி அரசி மாற்றமுடியாததும் உயிரைக் குடிக்கக் கூடியதுமானவொரு நோயினாற் பீடிக்கப்பட்டிருக்கிறாளென்பதையும் மக்களுணர்ந்து காலந்தாழ்த்தியிருந்தனர். இக்காலை நிலையில் அதுவே சிறந்ததாகக் காணப்பட்டது.

மேரி மேலும் உயிர்வாழுங் காலம் சொற்பமாயிருந்தாலும், இங்கிலாந்துக்கு மற்றுமொரு அவமானத்தைக் கொண்டுவர அது போதியதாயிருந்தது; சிபானிய சம்பந்தத்தாலுண்டான மற்றொரு பயன் இஃதென மக்கள் கூறினர். சிபெயினுடன் கொண்ட நட்பு பிரான்சுடன் யுத்தத்துக்கு ஏதுவாயிற்று. பிரான்சுடன் யுத்தஞ் செய்வதால் இங்கிலாந்துக்கு எவ்வித

நன்மையுங் கிடையாது. பிரான்சுக்கோ, ஆங்கிலேயர்கையில் கலே நகரிருந்து வந்தபடியால், யுத்தத்தால் நன்மையுண்டாகும். எனவே பிரான்சு முதலிற் கலே நகரைத் தாக்கிற்று. அங்கே காவல் செய்த படை சிறு தொகையினது. கோட்டையும் அழிவுற்றுக் கிடந்தது. இக்காரணங்களாலே பிரான்சுக்கு வெற்றி நிச்சயமாயிருந்தது. கலேயிலே தளகர்த்தனாயிருந்த உவெந்துவேத்துப் பிரபுவுக்குப் பிரெஞ்சுக்காரரின் நோக்கம் தெரிந்தது. உடனே அவன் துணைப்படையும், பணமும் அனுப்புமாறு மேரிக்கு விரைவாகச் செய்திவிடுத்தான். ஆனால் மேரி எதையுமனுப்ப முடியவில்லை. தேவாலயங்களையும் மடங்களையும் புனருத்தாரணஞ் செய்யும் புண்ணிய கைங்கரியத்திலே அவள் தான் மிச்சம் பிடிக்கக்கூடிய பணமெல்லாவற்றையுஞ் செலவு செய்து கொண்டிருந்தாள். பிரெஞ்சுப்படைகள் நெருங்கிவிட்டனவென்று திசெம்பர் மாதம் 29 ஆம் தேதி உவெந்துவேத்துப் பிரபு மேரிக்கு விடுத்த கடிதத்துக்கு அவள் "கலே நகரை அப்படைதாக்கமாட்டாது" எனத் தனக்குச் செய்தி கிடைத்ததாகப் பதிலெழுதினாள். இப்பதில் உவெந்துவேத்துக்குக் கிடைக்கு முன்னரே, 25,000 பிரெஞ்சுப் போர்வீரர்கள் கலே நகரக் கோட்டை வாசலையடைந்தனரென நிச்சயமாகச் செய்தி கிடைத்தது. எதிரியின் 50 வீரருக்குப் ஆங்கிலவீரன் ஒருவன் எனும் வீதத்திலிருந்த காவற் சேனைகொண்டு கோட்டையைக் காவல் செய்தான். இருந்தும் உவெந்து வேத்து ஐந்து நாட்களாகக் காத்திருந்தான். இங்கிலாந்திலிருந்து ஒரு கப்பலோ, ஒரு வீரனோ வரக்காணவில்லை. சனவரி மாதம் 6 ஆம் தேதி உவெந்துவேத்து அடிபணிந்தான். அயலேயிருந்த கிசுநெசுக்கோட்டையில் ஒரே பிரபு ஒருவாறு எதிர்ப்பு நடத்தி சனவரி 20 ஆம் தேதியிலே அவனும் விட்டுக் கொடுத்தான்.

பிரான்சிலேயிருந்த ஆங்கிலேயருடைய கடைசிப் பிரதேசம் இவ்வாறு வீழ்ச்சியுற்றது. ஐரோப்பாவிலே ஆங்கிலப் பண்டங்களை வியாபாரஞ் செய்வதற்குக் கலே நகரம் ஆங்கிலேயருக்கு ஒரு வாயிலாயிருந்தது. பிரான்சு மீது தாக்குதல் புரியவும் இது கேந்திரத்தானமாயிருந்தது. ஆனால் அந்நிலை நேரத்தோடே மலையேறிவிட்டது. இங்கிலாந்தின் பூட்கையிலே மாற்றமுண்டானது. பிரான்சிலே நாடு பிடிக்கும் கொள்கையை இங்கிலாந்து கைவிட்டது. கடல்கடந்த நாடுகளை இங்கிலாந்து பார்க்கத் தொடங்கிற்று. வருங்காலத்தில் சிபெயினை இங்கிலாந்து தேசத்தின் விரோதியாகவெண்ணிற்று. ஆனால் உடனே அந்நிலையுண்டாகவில்லை. 1347 தொடங்கியே கலே நகரம் ஆங்கிலேயர் கையிலிருந்து வந்தது. கறுத்த இனவரசனும், ஐந்தாம் என்றியும் நடத்திய இறெசி யுத்தத்திலுஞ்சு, அசின்கோட்டுக் களங்களிற் செய்த சண்டைகளிலுஞ்சு அடைந்த

பெரும் வெற்றிகளிற் கடைசியாக எஞ்சிய பயனுமிருந்தது கலே. அதைப் பாதுகாப்பதிலேயே இங்கிலாந்தின் பெருமை தங்கியிருந்தது. ஆனால் அது வீழ்ந்ததால் இங்கிலாந்துக்குப் பெரிய அவமானமுண்டாயிற்று. "இறக்கும் பொழுது என்னிதயத்திலே கலே என்ற சொல் பதிந்திருக்கு" மென மேரி கூறினுள்.

மேரியின் மரணம்

துன்பத்தினலும், தனக்கும் தனது நாட்டுக்கும் நன்மை பயக்கும் பொருட்டுத் தான் போட்ட பெருந் திட்டங்கள் முற்றுகத் தோல்வியுற்றதனலும் மனமுடைந்த மேரி ஒரு சில மாதங்கள் அழுந்திய பின் இறந்தாள். எஞ்சியவை அவள் செய்த மீட்சியற்ற துன்பமும், அவளுடைய வாழ்க்கை எவ்வளவு துக்கம் நிறைந்ததாயிருந்ததோ அத் தகைய துக்கத்தின் நினைவுமேயாகும் **(குறிப்பு 47)**.

6 ஆம் அதிகாரம்

கொத்துலாந்திலே சமயச் சீர்திருத்தம்

கொத்துலாந்திலுண்டான சமயச் சீர்திருத்தத்தின் அரசியல் முக்கியத்துவம்

இங்கிலாந்து, உரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சிறிது சிறிதாகக் கைவிட்டு வந்த காலத்திலே கொத்துலாந்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கவனித்துக்கொண்டு அதன் பின்னர் இலிசபெது இராணியின் ஆட்சியைப் பற்றி ஆராய்வது நன்று. கொத்துலாந்திலுண்டான சமயச் சீர்திருத்தம் தனித் தன்மை வாய்ந்தது. அத்துடன் கொத்துலாந்து வாசிகளின் வாழ்க்கையிலும் இரு நாடுகளின் தொடர்பிலும் இச்சமயச் சீர்திருத்தம் மிகுந்த முக்கியத்துவமும் பெற்றது.

கொத்துலாந்துச் சமயச் சீர்திருத்தம் சம்பந்தமாக மனதிலே பதியச் செய்ய வேண்டிய முதல் விடயம் இது: இங்கிலாந்துக்குப் பெரிய ஆபத்து நிறைந்த காலத்தில், அதன் இராணுவப் பாதுகாப்பில் நிலவிய குறையை இச்சீர்திருத்தம் நீக்கிற்று என்பதே. கொத்துலாந்து பிரான்சின் சதாகாலைக் கூட்டுறவு நாடு; அது கத்தோலிக்க மதத்தை அனுசரிக்கும் நாடாயிருக்குமானல் இலிசபெத்தின் காலத்திலே சமயச் சீர்திருத்த எதிர்ப்புத் தொடக்குவதற்கு வாய்ப்பான ஒரு நிலையமாய் அமைந்திருக்கும். ஆனல் கொத்துலாந்து சமயச் சீர்திருத்தத்துக்குச் சார்புள்ளதாயிருந்தபடியால் இங்கிலாந்தின் புறமுதுகிலே குத்துவதற்கு அதன் எதிரிகளுக்கு அது இடமளியாதிருந்தது.

இரண்டாவதாக, இரண்டு சிறிய அரசுகள் ஒன்று சேர்ந்து ஒரு வல்லரசாக விளங்க வழி வகுத்தது. பதினுறும் நூற்றாண்டினாரம்பத்திலே யிருந்த

ஐரோப்பிய சூழியலறிஞர்கள், சிபெயினைப் பின்பற்றும் இரண்டாந்தர வல்லரசாகவே இங்கிலாந்தைக் கருதினர். கொத்துலாந்திலே உண்டான சமயச் சீர்திருத்தத்தினலும், இலிசபெத்தரசியின் அரசறிவாலும், இரு நாடுகளும் இணைந்து முதற்றரமான முக்கியத்துவம் வாய்ந்த புரட்டசுத்தாந்திய வல்லரசாக விளங்கின. ஐரோப்பிய அரசியலில் இந் நிகழ்ச்சி மதிப்பிடற்கு அரிய விளைவுகளையுடையதாயிருந்தது; மேலும் கடல் சூழ்ந்த ஒரு தீவாக இருந்த நன்மையை இங்கிலாந்து முதன் முறையாக அனுபவித்தது.

மூன்றுவதாக, ஆளும் மன்னருக்கு எதிராக நின்று சமயச் சீர்திருத்தங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிய முதல் நாடு கொத்துலாந்தென்பதை அது உலகுக்குக் காட்டிற்று. அரசனுடைய ஆதரவாலோ, அரசியற் கட்சிகளின் ஆதரவாலோ ஏற்படாது பொது சன ஆதரவால் ஏற்பட்ட முதற் சீர்திருத்தமிதுவே.

சீர்திருத்த வாதிகளின் ஐக்கியம் இலகுவில் எய்தப்படவில்லை

இவை பெரிய நிகழ்ச்சிகளே. ஆனல் முதலிற் பார்க்கும் பொழுது இவை இயல்பாகவே ஏற்படக்கூடியவையென எண்ணலாம். இரண்டு தேசங்களிலும் ஒரே நேரத்திலே சீர்திருத்தமுண்டாயிற்று.

தற்பாதுகாப்பை முன்னிட்டு இவ்விருதேசத்துச் சீர்திருத்தவாதிகளும் ஒன்று சேர்வது இயற்கையே. ஆனல் ஆரம்பத்திலே அவ்வாறு நடைபெறுவது முடியாத காரியமாயிருந்தது. இரு நாட்டவரும் சிவிய விரோதிகளாயிருந்தனர். அத்துடன் அவர்கள் பகைமையை வளர்ப்பதற்குப் பல ஏதுக்களிருந்தன. மேலும் அவ்விருநாடுகளும் ஆதரித்த சீர்திருத்தங்களும் வெவ்வேறு தனியியல்பையுடையனவாயிருந்தன. எட்டாம் என்றி கொத்துலாந்துச் சீர்திருத்தக் காரரைக் கலகக காராக மதித்து நடத்தியிருப்பான்.

கொத்துலாந்துச் சீர்திருத்தத்தின் தனித்தன்மை

இங்கிலாந்திலே தனக்கு வசதியான வழியில் அரசன் சீர்திருத்தத்தை உருவாக்கினன். தனது அரசியல் தேவைகளுக்கேற்றவாறு அதை வளர்த்தான். கொத்துலாந்துச் சீர்திருத்தம் அத்தகையதன்று. அதன் ஆரம்பம் அரசியலில் நிலைபெறவில்லை; அது அரசன் தலைமையில் நடைபெறவுமில்லை. திருச்சபைகளுக்கிருந்த ஏராளமான செல்வத்தைக் கண்டு கொத்துலாந்துப் பிரபுக்கள் ஆசைப்பட்டனர். ஐந்தாம் சேமிசு அரசன் அவர்களிற் றங்காது தனது திருச்சபைக் குருமாரையும், பிரான்சையும், போப்பாண்டவரையுமே நம்பியிருந்தான். சீர்திருத்த வாதிகளோடு சேர்ந்தால் மேற்கூறிய பழைய நண்பர்களைக் கைவிட நேர்ந்திருக்கும்; ஆனல் அரசன் அதற்குத் தயாராயிருக்கவில்லை.

கொத்துலாந்துத் திருச்சபை (1500)

கொத்துலாந்திலுள்ள திருச்சபைகள் செல்வமுடையனவாயிருந்த போதிலும், திருச்சபை யலுவல்களுக்கு அச்செல்வத்திற் பெரும்பகுதி செலவு செய்யப்படவில்லே. விசப்பாண்டவர்கள், பிரபுக்களிலும் சிறப்பான வாழ்க்கை நடத்தினர். அவர்களிடத்திலே சமயவாழ்க்கை காணப்படவில்லே. இலெளகீகப் போக்குடையவராயும், யுத்தத்தில் நாட்டமுடையவராயும், பணத்திலேயே பேராசையுடையவராயுமிருந்தனர். பெரிய குடும்பங்களிலே உதித்த கனிட்ட புத்திரர்களே இவ்வாறு திருச்சபைப் பதவிகளே ஏற்று, அவற்றின் பெருஞ் செல்வத்தைத் தமது குடும்ப உபயோகத்துக்காகக் கொள்ளே யடித்தனர். மேலும் தம்மூட்டாமே கலகம் விளைத்தனர். பரிசுத்த அண்டு ரூசின் அதிமேற்றிராணியாரான சேமிசு பீற்றன் ஒருமுறை அதே திருச்சபையைச் சேர்ந்த மடாதிபதியின் ஒழுக்கக் கேட்டைக் கண்டு அவரைத் திருந்துமாறு கட்டளேயிட்டார். அம்மடாதிபதி எப்பேண் குடும்பத்தைச் சேர்ந்தவன். தாழ் நாட்டிலுள்ளவர்களில் மிக முரட்டுத் தனமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன். இக்கட்டளேயைச் செவிமடுத்ததும் அவன் தனது சேவகர்களே ஆயுதபாணிகளாக்கி, அதிமேற்றிராணியாருடன் போர் செய்யச் சித்தமானன். குருவருக்கத்தைச் சேர்ந்தவர்கள்கூட இம்மாதிரிச் சம்பவங்களில் ஈடுபடுதல் அக்காலத்திலே அருமையன்று. சாதாரணக் குருமார் வறியவராயும், அறியாமை மிக்கவராயுமிருந்தனர். ஒழுக்கங் கெட்டவராய்க் காணப்பட்டனர். போதிக்கத் தெரியாத "ஊமைநாய்கள்," "சேர் யோன் இலத்தினிலிக் குடிவெறிக்குண்டர்" என இவர்களேப் பற்றி சேர் இடேவிட்டு இலின்சே குறிப்பிட்டார். இங்கிலாந்திலே பளுவெனக் கண்ட வரிப்பணம் கொத்துலாந்தில் மிகுந்த இன்னலே விளேத்தது. மரண வீட்டிலே தண்டப்படும் வரிப்பணமும், குருமார் பெறும் "நல்லாடை"யும், கோதானமும், வறியவருக்குப் பெரிய பாரமாயின. சுற்றத் தொடர்பு எங்கும் பரந்துள்ள கொத்துலாந்து போன்ற சிறிய தேசத்திலே, விவாகச் சடங்குகளும், அதிக பணச் செலவையுண்டாக்கின. திருச்சபை எவ்வளவு கொடுமையை வளர்த்ததென்பதற்கு இது மற்றுமொரு சான்றாகும். விவாகஞ் செய்வதற்கு உரிமையுள்ள இனமுறையினர் இன்னின்னரென்றும், அதற்கு மீறி விவாக சம்பந்தஞ் செய்வோர் விசேட அனுமதியைப் பணங் கொடுத்துத் திருச்சபையிடம் பெறவேண்டுமென்றும் விதியிருந்ததால், அனுமதி பெறும் தொல்லே ஓயாமலுண்டாயிற்று. அதனலும் மக்கள் அல்லலுற்றனர். குருமார் ஒழுக்கங் குன்றினவராயிருந்தனர். அது உலகப் பிரசித்தமாயிற்று. குருமார் பிரமசாரிகளாயிருக்கவேண்டுமென்ற விதியை வெளி வெளியாக மீறியவர்கள் கொத்துலாந்தில் இருந்தது போல் அத்தனே அதிகமாக வேறெந்த நாட்டிலுமிருக்கவில்லே. குருமாருக்குப் பிறந்த பிள்ளேகளேச் சட்டபூர்வமான பிள்ளேகளாக்கிய குறிப்புக்கள் அடிக்கடி காணப்பட்டன. எனவே குருமாரின் ஒழுக்கக் கேட்டை நீக்க எவ்வித நடவடிக்கையுமெடுக்கப்படவில்லே. சீர்திருத்தஞ் செய்வதற்குத்

திட்டங்கள் போடப்பட்டன. கட்டளேகள் பிறப்பிக்கப்பட்டன. வேறு கருமங்களும் செய்யப்பட்டன. ஆனல், காரிய பூர்வமாக ஒன்றுஞ் செய்யப்படவில்லே.

காடினல் பீற்றன் கொலே செய்யப்படல்

இதற்கிடையிலே சேர்மனியிற் சமயச் சீர்திருத்தம் நடத்திய தலேவர்களின் கருத்துக்கள் கொத்துலாந்தையடையத் தொடங்கின. வேதாகம நூல்களின் மொழி பெயர்ப்புக்கள் எங்கும் நடைபெற்றன. புதிய இக்கருத்துக்களேப் பரவவிடாமற் றடைசெய்வதற்குப் பாராளுமன்றமும் திருச்சபையும் முயன்றன. சேர்மனியிலே பிரயாணஞ் செய்து அக்காலக் கருத்துக்களிற் பயிற்சி பெற்ற பற்றிக்கு அமிற்றன் என்பவரை 1528 இலே வைதிகத்திற் கெதிரான கொள்கையுடைய பரநெறியாளர் என்ற குற்றத்துக்காக விசாரணே செய்து தீக்கிரையாக்கினர். "திருவாளர் பற்றிக்கு இளப்பிய புகை மணம்" கண்டு மற்றவர்களஞ்சவில்லே. வெளிநாடுகளிற் பிரயாணஞ் செய்து புதிய கருத்துக்களேப் பயின்று வந்த யோச்சு விசாட்டு என்பவர் 1543 இலே கொத்துலாந்துக்குத் திரும்பினர். அவர் முதலிலே நண்டீயிலும் பின்னர் அயர்ச்சியரிலும் போதனே செய்தார். குருமாருடன் வாதந் தொடுத்தார். வாதம் முற்றவே பீற்றன் அவரைக் கைது செய்து விசாரித்து சென் அண்டுறூசிலே கொலேத் தண்டனேக் குட்படுத்தினர். மூன்று மாதங் கழித்து விசாட்டின் கொலேக்குப் பழி வாங்கப்பட்டது. இலெசிலி, மெல்வில் என்போரும் கேக்கோல்டி குடும்பத்தைச் சேர்ந்தோரும் கூட்டமாகச் சென்று பீற்றனுடைய கோட்டையிற் பிரவேசித்து, அவரிருந்த நாற்காலியிலேயே அவரைக் குத்திக் கொன்றனர். மூன்று மாதங்களுக்கு முன்னர் எந்த உப்பரிகையில் நின்று கொண்டு பீற்றன், விசாட்டின் மரணத்தைப் பார்த்தாரோ அதே உப்பரிகையின் சுவர்மீது அவருடைய பிரேதத்தை நகர மக்கள் பார்ப்பதற்குத் தூக்கிவிட்டனர். கொலேயாளிகள் அக்கோட்டையிலேயே ஒரு வருடத்துக்கதிகமாக முற்றுகை செய்யப்பட்டனர். கடைசியில் முற்றுகையிட்டவருக்குத் துணேபுரியச் சில பிரெஞ்சுக் கப்பல்கள் வந்தன. கோட்டைவாசிகள் அடிபணிந்தனர். அவர்கள் கடைசியாக அடிமைக் கப்பல்களிலே பிரெஞ்சுக்காரரின் அடிமைகளாக வேலே செய்ய அனுப்பப்பட்டனர். அவர்களோடு ஒரு விசேட குணம் வாய்ந்த குருவானவருஞ் சென்றார். இவர் இறித்து நாதரிடத்து உண்மையான பத்தியுள்ளவர். விசாட்டுக்கு நண்பராயிருந்தவர். ஈசுற்றர் போர் நிறுத்தத்திலே கோட்டையில் மற்றவர்களோடு புகுந்து மேலே சொன்ன கொலேயாளிகளுக்குச் சமயபோதனே செய்து வந்தவர். இவர் பிற்காலத்திலே பெரும் புகழ் பெற்று விளங்கினர். இவர் பெயர் யோன் நொட்சு.

1547 இலே எட்டாம் என்றி இறந்தான். பட்டத்து இளவரசனேச் சிறு பிள்ளேயாயிருந்த மேரி சுதுவட்டுக்கு வதுவை செய்ய சொமசெற்றுத்

திட்டமிட்டிருந்தான். ஆனால் பிங்கிக் களத்தில் நடந்த சண்டையின் பயனாக அந்தக் கொள்கை நிறைவேறவில்லே. மேரி பிரான்சுக்கு அனுப்பப்பட்டாள். கொத்துலாந்தும் இங்கிலாந்தும் கடும் பகை கொண்டன. கொத்துலாந்திலுள்ள சீர்திருத்தக் கட்சிக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது. சீர்திருத்த வாதிகள் துணை பெறுவதானால் இங்கிலாந்திலிருந்தே பெறவேண்டும். ஆனால் அவ்வாறு பெறுவது இராசத் துரோகமாகும். ஆரும் எட்டுவேட்டு தனது சபைக்கு வந்த கொத்துலாந்துச் சீர்திருத்தவாதிகளே வரவேற்றான். பிரெஞ்சு அடிமைக் கப்பல்களில் வேலே செய்த யோன் நொட்சை விடுதலேசெய்வித்தான்.

நொட்சு

திபூடர் மேரி அரசுக்கு வந்ததும், நிலேமை மேலும் மாறிற்று. இங்கிலாந்திலே கத்தோலிக்க சமயம் பலமடைந்தது. இரு தேசங்களிலும் சீர்திருத்த வாதிகள் துன்புறுத்தப்பட்டனர். அதனால் அவர்களிடையே ஒருமைப்பாடு உண்டானது. ஆங்கிலேயரின் இயல்பைப் பற்றியும் வாழ்க்கை முறை பற்றியும் சிறிது அளவு அறிந்து கொண்டு நொட்சு கொத்துலாந்துக்குத் திரும்பினர். 1549 இலே பிரெஞ்சு அடிமைக் கப்பலிலிருந்து விடுதலே பெற்ற நாள்தொடங்கி நொட்சு எட்டுவேட்டின் அரச குருவானர். அவரை விசப்பாண்டவராக்கவும் அரசன் விரும்பினன். எதிர்காலத்தில் நீமையுண்டாகுமென முன்னறிவுபெற்ற நொட்சு அப்பதவியை விரும்பவில்லே. கொத்துலாந்திலுள்ள உரோமக் கத்தோலிக்கத் திருச்சபை அகத்தே இன்னும் திருத்தமடையாததை நொட்சு உணர்ந்தார். பருவம் இன்னும் வரவில்லேயென எண்ணி அவர் மறுபடியும் ஒதுங்கிக் கொண்டார். ஆனால் இயக்கம் நடைபெற்றது. "கொடுங்கோலாட்சியை நோக்கமாகக் கொண்ட கொடிய அதிகாரத்துக்" கெதிராய்த் "தேவனின் வாக்கையும், திருச்சபையையும்" நிறுவ இளைஞேகேண், ஆகயில், மோட்டன், எசுக்கின் போன்ற சில செல்வாக்குள்ள பிரபுக்கள் ஒன்று சேர்ந்தனர். சீர்திருத்த வாதிகளே ஆதரிக்கப் பலம்பொருந்திய சில பிரபுக்களோடு, தாமும் முன்வந்திருப்பதாக மக்கள் ஆர்ப்பாட்டஞ் செய்து விளம்பரப் படுத்தினர். உரோமன் திருச்சபை அரசனேயும் பிரெஞ்சு அரசையுமே தஞ்சமென்றெண்ண வேண்டியிருந்தது. அந்நட்பு 1558 ஆம் ஆண்டு எப்பிரலில் உறுதிப்பட்டது. எனெனில் அக்காலத்தே கொத்துலாந்து அரசி மேரிக்கும் பிரான்சின் அரசிளங்குமரனன பிரான்சிசுக்கும் திருமணம் நடந்தேறிற்று.

7 ஆம் அதிகாரம்

இலிசபெது (1558–1603)

இலிசபெது அரசுகட்டிலேறுதல்

1558 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே திபூடர் மேரி அரசி இறந்தாள். எட்டாம் என்றியின் மரணசாதனப்படி அவளுடைய சகோதரியான இலிசபெது சிங்காசனமேறினள். மேரி மரணப்படுக்கையிலிருக்கும்பொழுதே இலிசபெத்தின் பட்டத்துரிமையை ஒப்புக்கொண்டாள். எனவே, அதைப்பற்றிய பிணக்கு உண்டாகவில்லே.

1. சமய சம்பந்தமான இணக்கம்

சமயப்பிரச்சினே

மிக முக்கியமானதும் முதலிற் கவனிக்கப்படவேண்டியதுமாயிருந்த பிரச்சினே சமயப் பிரச்சினேயே. கடந்த முப்பது வருடமாகப் பல மாற்றங்களுண்டாகி வந்தன. முதலில் எட்டாம் என்றி கொண்டுவந்த **அரசியல் பூர்வமான** சமயச் சீர்திருத்தத்தையும் போப்பாட்சியின் ஆதிக்கத்தை இங்கிலாந்திலிருந்து அகற்றிவிட்டு, மதக்கோட்பாடுகளில் மாற்றத்தையுண்டாக்காமல் விட்டதையும் குறிப்பிடலாம். ஆரும் எட்டுவேட்டின் காலத்திலே **மதக்கோட்பாடுகளிலேயே** திருத்த முண்டாக்க முயற்சி செய்யப்பட்டது. இது அகாலமானதாகவும் பொதுசன ஆதரவைப் பெறுததாகவுமிருந்தது. பின்னர் மேரி காலத்திலே என்றி செய்த சீர்திருத்தங்கள் அகற்றப்பட்டன. பின்னர் கத்தோலிக்க சமயம் அதன் உண்மைவடிவில் இங்கிலாந்திலே புகுத்தப்பட்டது. இதுவும் மக்களிடையே பெரிய எதிர்ப்பையுண்டாக்கிற்று. இலிசபெதும் அவளுடைய ஆற்றல்வாய்ந்த அமைச்சர் செசிலுமாகப் புதியவொரு முறையை உருவாக்கினர். அது நாளடைவில் நிலேபெற்றது.

இலிசபெது புரட்சுத்தாந்தியத் தலேவி

இலிசபெது சமயத்துறையிலே புரட்சுத்தாந்தியக் கொள்கையை ஆதரிக்கவேண்டியிருந்தது. எட்டாம் என்றிக்கும் ஆன் பொலீனுக்கும் நிகழ்ந்த திருமணம் சட்டபூர்வமானதென்பதை எந்தக் கத்தோலிக்க சமயியும் ஒப்புக்கொள்ளமாட்டான். எனவே பட்டத்துரிமையைப் பாதுகாக்க வேண்டுமானால் இலிசபெது புரட்சுத்தாந்திய சமயத்தையே கைக் கொண்டு, போப்பாட்சியின் ஆதிக்கத்தை நிராகரிக்கவேண்டியிருந்தது.

இலிசபெத்தின் நல்வாய்ப்புகள், மேரியின் துன்புறுத்தலின் பலன்

ஆனால் இப்பிரச்சினை சம்பந்தமான சில தன்மைகள் மாறி விட்டன. அதனால் இலிசபெது செய்யவேண்டிய கருமங்கள் இலேசாகிவிட்டன. புரட்சுத்தாந்தியர் பலமடைந்தனர். கத்தோலிக்கர் பலம் குன்றியது. விவிலிய வேதத்தை மொழிபெயர்த்ததாலே புரட்சுத்தாந்தியருக்கு ஆதரவு அதிகரித்தது. வேதம் எல்லாருக்கும் பொதுவாயிருந்தாலும், மொழிபெயர்ப்பின் மூலம் எல்லாரும் அதை வாசிக்கக்கூடியதாயிருந்தபடியாலே சமய விடயங்களில் அவர்கள் சொந்த அபிப்பிரயத்தைக் கொள்ளக்கூடியவராயிருந்தனர். சமயகுரவர்கள் அதிகாரபூர்வமாகக் கூறுவதை ஏற்றுக்கொள்ளாது சொந்த ஆராய்ச்சியின்மூலம் சொந்த முடிபுக்கு வருவதே புரட்சுத்தாந்திய கோட்பாட்டின் அடிப்படைக் கொள்கையாகும். மேலும் புரட்சுத்தாந்திய வாதிகளே மேரி துன்புறுத்தியமை அக்கட்சிக்கே ஆதரவையளித்தது. இரண்டுங்கெட்ட நிலையில் நின்றவர்கள், புரட்சுத்தாந்தியர் நேர்மையுமுண்மையுமுடையவரென்பதை நேராக அறிந்தனர். மூனறுவதாக, எட்டாம் என்றியின் கோட்பாடுகள் எப்பொழுதும் திருத்தியளிக்கக் கூடியவையல்ல. கத்தோலிக்க சமயத்தை ஏற்றுக்கொண்டு, போப்பாண்டவரின் அதிகாரத்தை மறுப்பது எப்படி? இலிசபெத்தின் ஆட்சி நிலைநிற்பதானால் ஒன்றிற் கத்தோலிக்கரின் ஆதரவு இருக்கவேண்டும்; அல்லது புரட்சுத்தாந்தியர் ஆதரவு இருக்கவேண்டும். முடிவாகக் கூறுமிடத்து கத்தோலிக்கர் கட்சி வெளிநாட்டுக் கட்சியானபடியாற் பலங்குன்றியது. அது சபானிய அரசனான பிலிப்பின் கட்சி; இனி, இலிசபெத்துக்குப் போட்டியாயுள்ள கத்தோலிக்க அரசி, கொத்துலாந்து மேரி, பிரெஞ்சு அரசகுமாரனின் மனைவி. எனவே இலிசபெத்தை ஆதரித்தவர்கள் புரட்சுத்தாந்தியக் கட்சியைச் சேர்ந்தவராகவே காணப்பட்டனர். அவர்களே விசுவாசமுள்ள கட்சியினராகவும், கத்தோலிக்கர் விசுவாசமற்ற கூட்சியினராகவும் கருதப்பட்டனர். சில சந்தர்ப்பங்களிலே இது நியாயமற்றதாகவும் சில சமயங்களில் உண்மையுள்ளதாகவும் எப்பொழுதும் முற்றுய் மறுக்க முடியாததாகவுமிருந்தது.

போப்பாட்சி அதிகாரம் செல்லுபடியாகாமற் செய்யப்பட்டது; ஆதிக்கவிதி (1559); ஒரு சீர்விதி (1559) பிரார்த்தனைப்புத்தகம்

இச்சீர்திருத்தமென்ற பெரிய நாடகம் முடிவுறும்பொழுது பெரிய அரசியற் சூழ்ச்சியையோ, சிக்கலான இச்சமயப்பிரச்சினையை ஒன்றுசேரத் தீர்த்து வைக்கக்கூடிய பெரும் பயன் விளைக்கும் செய்கையையோ ஒருவர் எதிர்பார்க்கலாம். ஆனால் அத்தகைய சம்பவம் எதுவும் நிகழவில்லை. "இலிசபெது சமயப்பிரச்சினையைத் தீர்த்தமுறை" அவ்வளவு விசேடம் வாய்ந்ததன்று. முந்திய ஆட்சிகளில் நடந்த மாற்றங்களோடு

ஒப்பிடும்பொழுது அது மிதமானதாகக் காணப்படுகின்றது. போல இறந்தபடியால் கந்தபரி அதிமேற்றிராணியார் பதவி காலியாயிற்று. புரட்சுத்தாந்திய மிதவாதியான மத்தியு பாக்கருக்கு அப்பதவி வழங்கப்பட்டது. கடவுள் வணக்கம், சமயக்கோட்பாடு, பூசையிலே தேவகற்பனைகளை ஆங்கிலத்திலே சொல்லுதல், சுவிசேடத்தையும் திருமுகத்தையும் ஆங்கிலத்திலே வாசித்தல் போன்றவை அனுமதிக்கப்பட்டன. 1559 இலே பாராளுமன்றங்கூடி இணக்க மொன்றையாத்தது. அதன் விபரங்களின் சுருக்கம் பின்வருமாறு:

1. **1554** ஆம் ஆண்டு விதியை விலக்கல். போப்பாட்சியின் அதிகாரம் இங்கிலாந்திலே செல்லுபடியாகாமற் செய்யப்பட்டது. எட்டாம் என்றியின் சமயச்சட்டங்கள் மறுபடியும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன.

2. சமயத்துறையிலும், சாதாரண வாழ்க்கைத் துறையிலும், அரசிக்கே ஆதிக்கம் உண்டென விதிக்கும் ஆதிக்கவிதி நிறைவேற்றப்பட்டது.

3. ஒரு சீர்விதி: இதன்படி ஆறாம் எட்டுவேட்டின் இரண்டாவது பிரார்த்தனைப் புத்தகத்தை ஒப்புக்கொள்ளுதல்; குருமாரின் அங்கியும் தேவாலய உபகரணங்களும், ஆறாம் எட்டுவேட்டின் இரண்டாம் வருட ஆட்சியிலே பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டபடியமைதல்; ஆறாம் எட்டுவேட்டின் சமயக்கூறுகள் 542 இலிருந்து 39 ஆகக் குறைக்கப்பட்டு மீண்டும் விதிக்கப்பட்டன.

கத்தோலிக்கர்மீது மிதமான தண்டனை

திருச்சபை சம்பந்தமான பெரியதோர் இணக்கத்துக்கு இவை எம்மாத்திரம்? இவற்றில் விசேட அமிசமுள்ளவை அற்பம். புதிதாக ஒன்றுமில்லை. ஆனால் மிருந்த சாதுரியம் வாய்ந்தவையென்பதில் ஐயமில்லை. முதலாவது விதி தவிர்க்கமுடியாதது. போப்பாண்டவர் அதிகாரத்தை இங்கிலாந்து இனி எப்பொழுதும் ஏற்பது முடியாத காரியம். கத்தோலிக்க சமயத்துக்குப் பெரிய அடிவிழுந்தபொழுதிலும், அச்சமயத்தவரின் மனதை மேலும் துன்புறுத்தக்கூடிய கருமமொன்றுஞ் செய்யப்படவில்லை. எட்டாம் என்றி வெட்டொன்று துண்டிரண்டாக "நானே திருச்சபைத் தலைவன்" என்று கூறினான். இலிசபெது மிக நாகரிகமாகவும் சாவதானமாகவும் ஆதிக்கவிதியை விதித்தாள். உத்தியோகம் வகிப்போரே சத்தியப் பிரமாணஞ் செய்யவேண்டுமென்றும் சாதாரண மக்கள் அவ்வாறு செய்ய வேண்டியதில்லையென்றும் விதிக்கப்பட்டது. அக்காலத்தில் வழங்கிய பிரார்த்தனைப் புத்தகமே இன்றும் வழக்கத்திலிருக்கிறது. உரோமுக்கெதிரான ஒரு வார்த்தைகூட அதிலில்லை. எட்டுவேட்டின் பிரார்த்தனைப் புத்தகத்திலே அத்தகைய ஒரு பகுதியிருந்தது. இலிசபெத்தின் ஆலோசகர் அதனை அகற்றிவிட்டனர். "யூதர், துருக்கியர், பரசமயத்

தவர், நாத்திகரென்" போரை மதம் மாற்றுமாறு பிரார்த்தனையிலே காணப்பட்டது. ஆனால் அந்த நிரையிலே போப்பின் அதிகாரத்தை ஆதரிப் பவர் சேர்க்கப்பட்டிலர். நற்கருணைப் பூசையிற் கூறும் வாக்கியங்கள் ஆண்டவனின் சாட்சாத்காரத்தில் நம்பிக்கையுடையவர்க்கும் இல்லாதவர்க் கும் பொதுவாயமைக்கப்பட்டன. மன்னரைக் குறிக்கும் பிரார்த்தனை இரண்டு சேர்க்கப்பட்டன. ஒன்று புரட்டசுத்தாந்தியச் சார்பு அதிக முடையதாயும் மற்றது குறைய உடையதாயுமமைக்கப்பட்டது. 'ஒன்றை விரும்பாதவர் மற்றதைப் பயன்படுத்தலாம். மக்கள் தமக்கு நல்லதென நம்பியதைப் பல வழியிற் புரிந்துகொண்டு, சட்டத்தை மீறுதலாய் விளங்கும் வண்ணம் சட்டங்களமைந்தன. போப்பாண்டவர் அதிகாரத்தைப்பற்றி முரட் டுப் பிடிவாதங்காட்டுவார்க்கன்றி மற்றெவர்க்கும் எவ்வித கொடுமைக்குமிட மில்லாமற் செய்யப்பட்டது. போப்பாண்டவரே அதிகாரியென்று வாதாடு வோர் தேசத்துரோகிகளாக்கப்பட்டனர். மேரியால் நியமிக்கப்பட்ட விசப் பாண்டவர்களில் ஒருவரும், சில குருமாருமே ஆதிக்கவிதிப்படி சத்தியப் பிரமாணஞ் செய்ய மறுத்தனர். அது எதிர்பார்க்கப்பட்டதே. அவர்கள் தமது பதவியை விட்டுவிலினர். இலிசபெது தனக்கியைந்தவர்களை அப் பதவிகளிலே நியமித்தாள். அதன்பயனாகத் திருச்சபைத் தலைவர்களெல் லாரும் தன்னையாதரிப்பவராயிருக்கச் செய்தாள். தேவாலயத்துக்குப் பூசைக்குப் போகாமல் வீட்டிலே பூசை செய்த கத்தோலிக்கர்மீது தலையிட அரசாங்கம் எத்தனிக்கவில்லை. தேவாராதனைக்குப் போகாததற்காக ஒரு சிலிங்கு தண்டனை மாத்திரம் அவர்கள் மீது விதிக்கப்பட்டது. தனக்கும் தனது குடும்பத்தவர்க்குமாக மொத்தமாய் ஒரு மாதத்துக்கு 20 சிலிங்கு தண்டனை கொடுக்கவும் ஒருவனுக்கு அனுமதியளிக்கப்பட்டது. இது ஒரு சிறுதொகையெனத் தோன்றலாம். இக்காலமதிப்புப்படி பார்ப்பதா னால் அத் தொகையைப் பத்திலொளவது பெருக்கவேண்டும். மேலும் இவ்வாறு "தேவாலயஞ் செல்ல மறுத்தவர்" தமது குருமாருக்குத் தட்சணை வேறு கொடுக்க வேண்டியுமிருந்தது. எனவே கத்தோலிக்கரா யிருப்பது அக்காலத்திலே செலவு மிக்க காரியமாயிற்று. கிராமப் பெருமக்கள் இவ்வாறுண்டாகும் செலவைக் குறைப்பதற்காகக் கிராமத் தேவாலயத்துக்குப் போகத் தலைப்பட்டனர். ஒவ்வொருவராகப் போகத் தொடங்கினர். எவ்வளவு காலமுந் தாமதிப்பதற்கு அரசி ஆயத்தமா யிருந்தாள். தனது சமயக்கோட்பாடுகள் வேரூன்றுவதற்கு அவள் அவ காசமளித்தாள். பின்வந்த சந்ததியார் உரோமன் கத்தோலிக்க சமயம் இங்கிலாந்திலே பெருவழக்காயிருந்ததென்பதை உணரமுடியாதவராயிரு தனர். அதனால் ஆங்கிலச் சமயக்கோட்பாட்டை அவர்கள் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொண்டனர் **(குறிப்பு 48).**

2. இலிசபெத்தின் வெளிநாட்டுப்பூட்கை சம்பந்தமான சுருக்கம்

இதுவரை இலிசபெத்தரசியின் ஆட்சியின் ஓர் அமிசமான திருச்சபைத் தீர்ப்பைப் பற்றியே கவனித்தோம். அது ஆங்கிலச் சமயச் சீர்திருத் தத்துக்கு முற்றுப்புள்ளியிட்டது. இது முக்கியமானதென்பதில் ஐயமில்லை. ஆனால் கவனத்தை மீர்க்கக்கூடியதன்று; அக்காலத்திற்கூட அது முடி வான தீர்ப்பாகத் தோன்றியதில்லை. மேலும் சமய விடயத்தில் அவள் காட்டிய சகிப்புத்தன்மையும், சிக்கல்களைத் தீர்த்து வைப்பதிற் காட்டிய சிறந்த உளப்பான்மையும் மக்கள் மனதை ஆட்கொண்டன. 1570 இலே ஐந்தாம் பயசு என்ற போப்பாண்டவர் மென்மையான நடவடிக்கையாலே பயனில்லையென்று கண்டு, இலிசபெத்தைத் திருச்சபை வெளியேற்றஞ் செய்தார். அதன் விளைவாக, நயமாய்ச் சொல்லி அவளை வசப்படுத்து வதைவிட்டுக் கடும் நடவடிக்கையெடுக்க நேர்ந்தது.

கத்தோலிக்கர் கத்தோலிக்க இறையையே விரும்பினர்

1570 இற்குப் பல வருடங்களுக்கு முன்னரே இவ்வாட்சியின் தொடக்கத் திலிருந்து இங்கிலாந்தை மறுபடியும் கத்தோலிக்கமயமாக்கக்கூடிய எதுக் கள் காணப்பட்டன. அக்காலத்து ஐரோப்பிய அரசியல் முறை "அரசனெவ்வழி குடிகளவ்வழி" யென்ற முதுமொழியைப் பின்பற்றி யது. அரசன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவனாயிருந்தால் நாடு மதே நெறியையுடையதாயிருக்குமெனக் கருதப்பட்டது. பெரும்பாலும் இது உண்மையாகவேயிருந்தது. ஆனும் அரசனின் சமயத்திலிருந்து திட்ட மாகப் பிரிந்து நிற்கும் தேசத்துக்கு இதுவரை உதாரணங் கிடையாது. இங்கிலாந்திலேயுண்டான சமய மாற்றங்களெல்லாம் இதனையே வலியுறுத்து கின்றன. எட்டாம் என்றி, ஆறும் எட்டுவேட்டு, மேரி, இப்பொழுது இலிசபெது இவர்களுடைய சமயக் கருத்துக்கள் ஒரு அந்தத்திலிருந்து மற்ற அந்தம்வரை மாறிக்கொண்டே வந்தன. மக்களும் அவ்வாறே தமது கருத்துக்களையும் மாற்றினர். சமயச் சீர்திருத்தத்திலிருந்து இங்கி லாந்து மறுபடியும் கத்தோலிக்க சமயத்தை மேற்கொள்வதானால் சிங் காசனத்திற் கத்தோலிக்க அரசனிருந்தாற் சரியாகுமென எண்ணினர்.

பெயிலிலிருந்து இடர், சீர்திருத்தத்துக்கு எதிர்ப்பு

அதற்குப் பலவழிகளுண்டு. (1) இங்கிலாந்தின் அடுத்த பட்டத்துரிமை கொத்துலாந்து மேரி அரசிக்குரியது. அவள் கத்தோலிக்க சமயத்தவள். அவள் பட்டத்துக்கு வந்தால் எல்லாஞ் சரியாகிவிடுமெனக் கத்தோலிக்கத் தலைவர்களெண்ணினர். அத்துடன் அவளுடைய பிரெஞ்சுக் கணவன் இறந்தபின்னர் ஆங்கிலக் கத்தோலிக்கர் ஒருவரை மணந்தால் எல்லாம் ஒழுங்காகும். (2) காலஞ் சென்ற மேரியரசியின் கணவனை

சபானிய பிலிப்பு ஆங்கிலச் சிங்காசனத்தைப் போரினுலோ இலிசபெத்தை விவாகஞ்செய்வதினுலோ பெற்றுவிடலாம். போப்பாண்டவரனுமதி கொடுத்தால் அவன் தானுகவே இலிசபெத்தை மணக்கவிரும்புவான். அல்லது அவள் அபிசுபேக்கு வமிசத்தைச் சேர்ந்த ஒருவனே மணப்பாள். இவற்றில் எது நடந்தாலும் சபானிய கத்தோலிக்க ஆதிக்கம் மறுபடியும் இங்கிலாந்திலே நிலைநிற்கும்.

இலிசபெத்துக்கெதிராகப் பலத்த கட்சிகள் இளம்பின. சிபெயினும் போரசுமென்ருல் பிரான்சும் போற்றிக்கு இராச்சியங்களுந் தவிர்ந்த ஐரோப்பா முழுவதுமென்றே கொள்ளவேண்டும். புதிய உலகத்திற் கிடைத்த செல்வத்தால் சிபெயின் எல்லேயில்லாத செல்வப் பெருக்குடையதாயிருந்தது. ஐரோப்பாவிலே சபானியப் போர்வீரரே மற்றெவரிலுஞ் சிறப்புற்று விளங்கினர். போப்பாட்சி மன்றத்திலே நிலவிய பல குறைகள் நீக்கப்பட்டன. முன்னர் மக்கள் முறைப்பட்ட பல தீமைகள் ஒழிக்கப்பட்டன. திரெந்துச் சபையிலே (1546–63) சீர்திருத்தக்கோட்பாடுகளிற் சார்புள்ள பலர் மறுபடியும் கத்தோலிக்க நெறிக்கு இழுக்கப்பட்டனர். போப்பாண்டவர்களும், முன்போல ஆர்வமும், ஊக்கமுமுடையவர்களாயினர். உரோமன் திருச்சபையங்கத்தவரிடையிலும் இக்கிளர்ச்சி காணப்பட்டது. பாநெறியாளரை மனந்திருப்புமாறு ஏசு சங்கம் நிறுவப்பட்டது. சேர்மனியிலே சீர்திருத்தத்துக்கு மாருக உண்டான இயக்கம் பெரிய முயற்சிகளையெல்லாஞ் செய்துவிட்டது. இப்பொழுது அவ்வியக்கத்தினர் இங்கிலாந்திலே தொண்டு செய்ய முற்பட்டனர். **(குறிப்பு 49)**

இலிசபெத்தின் முக்கியத்துவம்

இங்கிலாந்தின் சிக்கலான நிலேமையில் இச்சமயக்கிளர்ச்சி வெற்றியடைவதும் தோல்வியுறுவதும், சிங்காசனத்தில் எச்சமயத்தைச் சேர்ந்தவர் ஆட்சிசெய்வார் என்பதைப் பொறுத்திருந்தது. இலிசபெது ஆட்சி நடத்தும்வரை எல்லாம் ஒழுங்காயிருக்கும். ஆனுல் கத்தோலிக்கச் சார்புள்ள ஒருவர் பட்டத்துக்கு வந்தால் தொல்லேயுண்டாகுமென்பது தெளிவாயிற்று. புரட்டசுத்தாந்திய உரிமையாளர் பட்டம் பெற்றுல் எல்லாம் நன்மையாய் முடியும். கத்தோலிக்க நண்பர்களின் படைப்பல ஆதரவுபெற்ற கொத்துலாந்து அரசி பட்டத்துக்கு வருவாளானுல் அது பெரும் ஆபத்தாய் முடியும். முதலில் இந்த ஆபத்தே தலேகாட்டிற்று. அவ்வரசி இறந்ததும் வேறுவகையிலே தொல்லேயுண்டாயிற்று. சீர்திருத்த விரோதியான சிபெயினுடனும் சீர்திருத்த எதிரிகளுடனும் நேரடியான யுத்தத்திலிறங்க வேண்டியிருந்தது. இங்கிலாந்து எதிர்க்க முடியாத பலமுள்ள படைகள் எதிர்க்கட்சியிற் சேரக்கூடிய நிலேமையுண்டாயிற்று.

திருமணப் பிரச்சினேயை அவள் பயன்படுத்தல்

கத்தோலிக்கருடைய கட்சி வெற்றிபெறவேண்டுமானுல் தக்கதருணத்தில் இலிசபெது இறக்கவேண்டியது அவசியமில்லாவிட்டாலும், பெரிதும் விரும்பத்தக்கது. ஆனுல் புரட்டசுத்தாந்திய இங்கிலாந்துக்கு அவள் உயிரோடிருப்பது மிக அவசியம். மேலும் அவள் புரட்டசுத்தாந்தியக் கணவனேப் பெறுவதும் அத்தியாவசியமாயிற்று. ஏனெனில் பட்டத்துரிமை அப்பொழுது தான் அவளுக்குப் பிறக்கும் பிள்ளேக்குரிமையுடையதாகும். ஆனுல் இலிசபெது மையல்காட்டி வந்தாளன்றி மணஞ்செய்ய மறுத்தாள். அவளாட்சிபிற பெரும் புதிராயிருந்ததொருவிடயம் இதுவேயாகும். அவள் நியாயமான அளவுக்கு விருப்பங் கொண்ட சம்பந்தங்களும் தேசமக்களுக்குப் பிரியமில்லாதனவாயிருந்தன. அவள் விரும்பியதாக அடிக்கடி காட்டிக் கொண்ட மனுளன் கத்தோலிக்க சமயத்தவனுன ஒரு பிரெஞ்சு அரசகுமாரனுவான்.

பிரான்சுடன் இலிசபெத்தின் நட்பு

இவ்விடயத்திலே தேசமக்களிலும் பார்க்க இலிசபெது புத்தி சாதுரியமுடையவளாய்க் காணப்பட்டாள். சிபெயினுக்கு எதிராய் நிற்கக்கூடிய பலம் பொருந்திய சிறந்த நட்புறவுநாடு பிரான்சு என்பதை உணர்ந்தாள். பிரான்சு கத்தோலிக்க நாடாயிருந்தபோதிலும், கத்தோலிக்க எதிர்ச் சீர்திருத்தக் கட்சியிற் சேரவில்லே. சிபெயின்மீது பிரான்சுக்கு வெறுப்பும் கடும் பயமுமிருந்ததால் அந்த இயக்கத்திலே அந்நாட்டுடன் அது சேர விரும்பவில்லே. சிபெயினின் பெரிய எதிரியாகப் பிரான்சு விளங்கிற்று. எனவே பிரான்சைத் தன் பக்கம் சேர்த்துக்கொள்வதற்கு, விவாகசம்பந்தமென்ற தூண்டிலேப் போட்டுக்கொண்டேயிருந்தாள். இங்கிலாந்து பிரான்சுடன் சேர்ந்துவிடக் கூடுமென்ற அச்சத்தால் சிபெயினும் இங்கிலாந்துக் கெதிராக முரட்டுத்தனமாயொன்றுஞ் செய்யாதிருந்துவந்தது. விவாகஞ் செய்துவிட்டால் பக்கச்சார்பு உண்டாகி அவளுக்கிருந்த விலே குறைந்துவிடும். எனவே பிரெஞ்சு அரசகுமாரனேடு மையல் கொண்டதாக நடித்ததின் பயனுய், சிபெயினே அடக்கிவைத்ததோடு பிரான்சையும் தன்பக்கம் வைத்துக்கொண்டாள். பிரான்சுடனிருந்த இந்த நட்பு அவளுடைய ஆட்சிக்காலம் முழுவதும் நிலவிற்று. மிகுந்த இன்னல்கள் உண்டாகும் காலங்களிலெல்லாம் பிரான்சு இங்கிலாந்துக்கு ஆதரவாயிருந்தது. ஈற்றில் பட்டத்துரிமை கொத்துலாந்து மன்னனுக்குச் சென்றது.

சமயச்சீர்திருத்த எதிர்ப்பு இயக்கத்திற்கெதிராக நீண்ட போராட்டம்

எனவே இலிசபெத்தின் ஆட்சிக்காலம் முழுவதும் சமயச்சீர்திருத்த எதிர்ப்பு இயக்கத்தவரோடு நீண்ட போராட்டம் நடந்தது. இப்போராட்டத்தை நாலுபடியாகப் பிரித்து ஆராயலாம்.

1. கொத்துலாந்திற் போராட்டம் (1558–68) : இலிசபெத்தின் ஆட்சிக் காலத்து முதற்பத்து வருடத்தை இது உள்ளடக்குவது. இக்காலப் பகுதியின் முடிவிலே கொத்துலாந்து இராணி மேரி இங்கிலாந்திலே இலிசபெத்தின் கீழ்ச் சரணாகதியடைந்தாள்.

2. சூழ்ச்சிக்காலம் (1568–87) : இச்சூழ்ச்சிகளெல்லாம் ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தன. அதாவது மேரியை விடுதலை செய்து, கத்தோலிக்க மணாளனொருவனை அவளுக்கு விவாகஞ் செய்துவைத்துப் பின்னர் இலிசபெது இறந்தபின்னர் அவளுக்குப் பட்டங்கட்டுதல். இலிசபெது உயிரோடிருக்கும்வரை பட்டத்துக்கு எவரும் வரமுடியாததாலால், இச்சூழ்ச்சிகளிற் பெரும்பாலன, இலிசபெத்தைக் கொலை செய்வதையே முக்கிய நோக்கமாகக் கொண்டன. இச்சூழ்ச்சிகளெல்லாம் மேரியின் சிரச்சேதத்துடன் (1587) முடிவடைந்தன. அதற்குமேல் சூழ்ச்சி செய்வதற்கு ஏதுவில்லாமற் போய்விட்டது.

3. ஆமடா (1588) : சமயச்சீர்திருத்த எதிர்ப்பு இயக்கத்தினர் ஒன்று கூடிக் கடைசியாக நேரடி யுத்தத்திலீடுபட்டுத் தோல்வியுற்றனர்.

4. இலிசபெத்தின் கடைசிக்காலம் (1589–1603) : சிபெயினுடன் ஆரம்பித்த போர், இக்காலப்பகுதியிலே விசேடமாகக் கடற்போரிலே வெற்றிகண்டது. இங்கிலாந்திலே கடலோடும் துறையில் ஒரு புதிய ஊக்கம் உண்டாயிற்று. கடற்கொள்ளைக்காரர் பல தீரச்செயல்களை நடத்தினர் ; குடியேற்றத்தின் ஆரம்ப முயற்சிகள் காணப்பட்டன. இவற்றில் சில முந்திய காலப்பகுதியையுஞ் சேர்ந்தன.

3. கொத்துலாந்தும் இலிசபெத்தும்

இங்கிலாந்து அரசுக்கு மேரி சுதுவட்டு உரிமை கொண்டாடுதல்

இலிசபெது தீர்த்துவைக்க முனைந்த கொத்துலாந்துப் பிரச்சினை மிகச் சிக்கலானது. சுதுவட்டுமேரி, முதலில் ஆங்கில அரசு தனக்குரிமையுடைதெனக் கூறினாள்[1]. அவள் கத்தோலிக்க மதத்தவள். அதனாற் கத்தோலிக்க வல்லரசுகள் அவளுக்கு ஆதரவளித்தன. பிரான்சுக்கும் கொத்

[1] எட்டாம் என்றியின் மூத்த சகோதரி றியூடர் மாகரெட்டின் ஒரே புதல்வி மேரியாதலால், மாகரெட்டின் பின்னர் அவளுக்கே எல்லா உரிமைக்கும் பாத்தியதையிருந்தது முன்றேன்றல் உரிமைப்படி இலிசபெத்தின் பின்னர் அவளுக்கே ஆங்கில அரசுக்குரிமையுண்டு. ஆனால் எட்டாம் என்றியின் மரணசாதனப்படி, அரசுரிமை அவனுடைய இரண்டாம் சகோதரியான மேரி (அதாவது கேறே குடும்பத்தினர்)யின் சந்ததிக்கே செல்லவேண்டியிருந்தது. மூத்த சகோதரியின் சந்ததிக்கன்று. இதை மக்கள் ஏற்றுக்கொள்ளாதபடியால் சுதுவட்டு மேரிக்குப் பட்டத்துரிமையுண்டென ஏற்றுக்கொள்ளப்பட்டது.

லாந்துக்குமிருந்துவந்த பரம்பரை நட்பை அவள் ஆதரித்தாள். அது இங்கிலாந்துக்கு எப்பொழுதும் ஆபத்துக்கேதுவாயிருந்தது. இலிசபெது அரசு கட்டிலேறுவதற்கு ஆறுமாதங்களுக்கு முன்னர், மேரி பிரெஞ்சு மன்னனின் மூத்த மகனை மணஞ் செய்தாள். தான் பிள்ளையின்றி இறந்தால் கொத்துலாந்து அரசும் இங்கிலாந்தரசின் உரிமையும் அவனுக்கே செல்லவேண்டுமென ஒழுங்கு செய்திருந்தாள். எனவே கடையியாகப் பிரான்சும் கொத்துலாந்தும் நிச்சயமாக ஒன்றுபட்டு விடுமென்பதற்கு அறிகுறிகளுண்டாயின.

பிரெஞ்சு கொத்துலாந்து நட்புறவு, கேமேரிக்கெதிராகச் சீர்திருத்த வாதிகள் ; சீர்திருத்தவாதிகளுக்கு நொட்சு வழிகாட்டல்

ஆளும் மன்னனுக்கெதிராக அம்மன்னனின் குடிகளோடு சேர்ந்து நிற்பதை இலிசபெது ஒருகாலும் விரும்பவியதில்லை. அவள் தன் வாழ்நாள் முழுவதும் மன்னனின் அதிகாரத்தை ஆதரித்தே வந்தாள்.

இருந்தும் மேரியின் கலகப்போக்குள்ள குடிகள் இலிசபெத்தின் சிறந்த நட்புறவாளராயிருந்து வந்தனர். பிரெஞ்சு நட்புறவைக் கொத்துலாந்திலுள்ள புரட்சுத்தாந்தியர் பெரிதும் வெறுத்தனர். பிரெஞ்சுப் படையினர் அங்கே ஆட்சிசெய்வதையும் வெறுத்தனர். சுதுவட்டுமேரி பிரான்சுக்குச் சென்று அங்கே தன் கணவனோடு வாழ்ந்தாள். அவளுடைய தாயான கேமேரி, கிளென்கேண் முதலிய புரட்சுத்தாந்திய பிரபுக்கள் தம்மைத் திருச்சபைப் பிரபுக்களெனக் கூறிக்கொண்டு சமயச்சீர்திருத்த இயக்கத்துக்குத் தலைமைதாங்கி நடத்திய இளர்ச்சிகளை மிகுந்த மெத்துடன் அடக்கிவந்தாள். கொத்துலாந்தைத் தான் பெறுவதானால் இலிசபெது அங்குள்ள சீர்திருத்தக்காரருக்கு உதவிபுரிய வேண்டும். இரண்டு காரணங்களால் அது செய்யத்தகாத காரியமென உணர்ந்தாள். ஒன்று அவ்வாறு செய்தால் பிரான்சைப் பகைக்க நேரிடும். சிபெயினுடனும் பிரான்சுடனும் ஒரே நேரத்திலே பகைப்பது ஏற்றதன்று. மேலும் மற்றொரு மன்னனுக்கெதிராய் விளங்கும் பிரசைகளுக்குத் தான் உதவி செய்வதை அவள் விரும்பவில்லை. அன்றியும் அஃது ஒவ்வாததொரு முன்மாதிரியாகும். அப்படியானால் இங்கிலாந்திலே இலிசபெத்துக்கெதிராயுள்ள பிரசைகளைப் பிரான்சு மனமொவ்வாதே ஆதரிக்கலாம். **பயங்கரமான பெண்களாட்சிக் கெதிராய் எழுந்த எக்காள முதலொலி** என்ற புகழ் பெற்ற பிரசுரமொன்றை நொட்சு ஆர்வமிகுதியினால் எழுதிப் பிரசுரித்து விட்டார். அது மூன்று கத்தோலிக்க அரசிகளான [1]மேரியரசிகளைத் தாக்க எழுந்தது. இம்மூவரும் நொட்சின் மனதுக்கு வெறுக்கத்தக்கவராய்க் காணப்பட்டனர். மணப்பருவமுள்ளவர்களும், அந்த மணத்தினால் நாட்

[1] றியூடர் மேரி, சுதுவாட்டுமேரி, கேமேரி.

டையே பலவித இன்னல்களுக்குட்படுத்தக் கூடியவர்களும், அவ்வகையில் ஆபத்துக்கேதுவானவர்களுமான மூன்று அரசிகளின் கையில் கொத்துலாந்தின் விதியும் இங்கிலாந்தின் விதியும் (நெருக்கடியான தொரு கட்டத்திலே) தங்கியிருந்தமை மிக நூதனமானதென்று சரித்திராசிரியர்களெல்லாரும் குறிப்பிட்டனர். அத்தகைய நிலை வெளி வெளியாகப் பேசுமியல்புடைய நொட்சுக்கு உணர்ச்சியையெழுப்பிற்று. அதனால் அவன் வழமையான தனது எளிய நடையிலும்பார்க்க விளக்கமாகவே அந்தப் பிரசுரத்தை எழுதினான். கத்தோலிக்க மதத்தினளான தியூடர் மேரியை வாட்டக்கினப்பிய அந்த **எக்காள ஓசை** புரட்டசுத்தாந்திய மதத்தினளான இலிசபெத்தின் காதை, அரசுரிமையேற்கும் நேரத்தில் செவிடுபடும்படி செய்தமை துரதிட்டமே. இலிசபெது அந்தப் பிரசுரத்தை வாசித்துக் கோபமுற்றாள். நொட்சு இங்கிலாந்திற்கூடாக செல்வதற்குத் தடை விதித்தாள். அவருக்கும் தனக்கும் எவ்வித தொடர்பு மிருக்கக்கூடாதெனக் கூறினாள்.

பேதில் நடந்த போதனை, பதிலாளிக்கெதிராகப் புரட்சி

1559, 1560 ஆகிய இரு ஆண்டுகள் பல சம்பவம் நிறைந்தவையாகும். சரித்திரத்திலே இவ்வளவு சம்பவம் நிறைந்த ஆண்டுகள் கிடையா. நொட்சு கொத்துலாந்துக்குத் திரும்பிவந்து சீர்திருத்தவாதிகளுக்கு உற்சாக மூட்டினார். "அறுநூறு ஏக்காளங்கள் ஒரே நேரத்தில் ஒலாமற் காதைப் பிளந்தாற்கூட இந்த ஒரு மனிதன் ஒரு மணிநேரத்தில் ஊட்டக்கூடிய உயிர்ப்பை ஊட்டமாட்டா" என்று அவரை நன்கறிந்த ஒருவர் கூறினார். அஞ்சாமையே நொட்சின் பெருங்குணம். அவரை அடக்கஞ் செய்த கல்லறைக்கு முன்னால் நின்று மோட்டன் கூறிய வார்த்தைகள் இதனை வலியுறுத்தும். "மனிதனுக்கு ஒருகாலும் பயப்படாத ஒருவர் இங்கே அடங்கியிட்டார்." பதிலாளியோடு உபதேசகரும் திருச்சபைப் பிரமுகர்களும் பிணங்கத் தலைப்பட்டனர். இருகட்சியினருமாகப் பேதுநகரிலே கூடுமாறு அழைக்கப்பட்டனர். ஒவ்வொரு கட்சியும் சதி நடக்குமென மற்றக் கட்சி மீது சந்தேகங்கொண்டு கூடியது. மே மாதம் 11 ஆம் தேதி, விக்கிரக ஆராதனைக்கு எதிராக நொட்சு ஒரு சொற்பொழிவு நிகழ்த்தினார். திரண்டு நின்ற கூட்டம் நகரில் உள்ள மடங்களையும் சமய சம்பந்தமான கட்டடங்களையும் தாக்கியுடைத்தது. துக்கப்படத்தக்க இந்த மனோபாவம் சென் அண்டுறூசு, தேவிங்கு, தண்டீ, எடின்பரே முதலிய பல இடங்களுக்குப் பரவிற்று. "கூடுகளைக் கொழுத்துங்கள், காக்கைகள் பறந்து விடுமென்று" நொட்சு ஆர்ப்பரித்தார். திருச்சபைப் பிரமுகர்கள் ஆயுதபாணிகளாயெழுந்து எடின்பரே நகரைக் கைப்பற்றினர். பிரமுக்களுடைய வம்சத்தைச் சேர்ந்த பெரும்பகுதியினர் இதிற் சேர்ந்தனர். ஆறாம் எட்வேட்டின் இரண்டாவது பிரார்த்தனைப் புத்தகத்தைத் திருச்சபைகளில்

பயன்படுத்துமாறு விதிக்கப்பட்டது. மடங்களிலிருந்து கொள்ளையடிக்கப்பட்ட பொருள்கள் "விசுவாசமுள்ள குருமார்க்கு வழங்கப்பட்டவேண்டும்" எனவும் விதிக்கப்பட்டது. ஆனால் அப்பொருள் எதுவும் அவர்களுக்குச் செல்லவில்லை; பிரபுக்கள் அவற்றைத் தாமே கைப்பற்றிக்கொண்டனர்.

சீர்திருத்தவாதிகள் இலிசபெத்துக்கு மேன்முறையீடு செய்தனர், இலிசபெது சீர்திருத்தவாதிகளுக்கு உதவிபுரிதல்

இக்கலகத்தையடக்கப் பதிலாளி பிரான்சிடம் துணைவேண்டினர். அங்கேயும், முக்கியமான சில சம்பவங்கள் நிகழ்ந்தன. காற்றோ கான் மீதே (1559) உடன்படிக்கைப்படி பிரான்சும் சிபெயினும் சமாதானஞ் செய்துகொண்டன. இவ்விரு நாடுகளும் பகைத்திருக்க வேண்டுமென விரும்பிய இலிசபெத்துக்கு இது ஒரு கெட்ட சகுனமாகும். இப்பொருத்தனையைக் கொண்டாடுவதற்கு ஒழுங்குசெய்யப்பட ஒரு சிலம்பச் சண்டையிலே இரண்டாம் என்றி விபத்துக்குள்ளாகி இறந்தான். உடனே மேரியின் கணவனான பிரான்சிசு பிரான்சின் அரசனானான். யூலை மாதத்தில் பிரெஞ்சுப் படையொன்று கொத்துலாந்துக்குத் துணைசெய்ய ஆயத்தப்பட்டது. சீர்திருத்தக் கட்சியினர் இலிசபெத்திடம் துணைவேண்டினர். அவள் வெளியாக உதவிசெய்ய மறுத்துவிட்டு அந்தரங்கமாய்ப் பண முறுப்பினாள். திருச்சபைப் பிரமுக்களுக்கும் பிரெஞ்சு உதவிபெற்ற பதிலாளிக்கு மூண்டான இப்பிணக்கு எவ்வாறு முடியுமென்பதை இலிசபெது பார்த்துக்கொண்டிருந்தாள். பிரெஞ்சுப்படை இலீது நகரத்தைப் பிடித்தது. சீர்திருத்தக் கட்சி அவர்களை அங்கிருந்து கலைக்க முடியவில்லை. எதிரிகள் தாக்கை நிருவகித்துக்கொண்டு பிரெஞ்சுப்படை, தேவிங்கு நகரையுங் கைப்பற்றியது. சீர்திருத்தக் கட்சி தோல்வியடையுமெனக் கண்ட இலிசபெது படைத்துணை செய்யவெண்ணி விந்தர் தலைமையில் ஒரு கடற்படையைப் போதுக்குடாவுக்கு அனுப்பினாள். இது பரம இரகசியமாகவிருந்தபடியால் சண்டையில் ஈடுபடும்வரை இப்படை யார் கட்சிக்குச் சார்பானதென்பதை எவரும் அறியவில்லை. சண்டையில் நிச்சயமான வெற்றி இடைத்தது. இலீது நகரம் முற்றுகையிடப்பட்டதால் பிரெஞ்சுக் காரருக்கு எவ்வித துணையும் பெறமுடியவில்லை (திசெம்பர் 1559).

பதிலாளிக்கெதிராகப் பொருத்தனை; ஆங்கிலேயரதும் சீர்திருத்த வாதிகளினதும் வெற்றி; இலீதுப் பொருத்தனை (யூலை 1560)

இலிசபெது உரிய காலத்தில் உதவிய இப்படைத்துணைக்கு முக்கிய காரணராயிருந்தவர் இலெதிங்டனைச் சேர்ந்த மெயிற்றுலந்து என்பவர். "சமயக்" கூச்சலே விட்டுவிட்டு, பிரெஞ்சுக்காரரையும் பதிலாளியையும் எங்கள்

[1] பணங்கொண்டு சென்ற தூதுவனிடமிருந்து பொதுவெல் அதைக் களவாடினான்.

நாட்டிலிருந்து அப்புறப்படுத்தவேண்டுமென்ற தேசாபிமானம் மிக்க குரலை எழுப்புமாறு சீர்திருத்தக்காரரை இணங்கச் செய்தவர் இவரெனவே கூறலாம். நவெம்பரில் இவர் இலிசபெத்தைப் பேட்டிகாணச் சென்றார். இவர் காலத்துக்குப் பொருந்தாத முற்போக்கான கருத்துக்களையுடைய அரசறிஞர். "இங்கிலாந்தும் கொத்துலாந்தும் நிரந்தரமான நண்பர்களாய் ஐக்கியப்படவேண்டும். அதுவே எனது இலக்கு" என்று அவர் எழுதினார். அவருடைய இலக்குப் பலித்ததென்பதற்கு முதற்சான்று விந்தரின் கப்பற்படைச் செலவே. கீசுமேரிக்கெதிராக இலிசபெத்துக்கும் திருச்சபைப் பிரபுக்களுக்குமிடையிலே ஒருபொருத்தனை பெப்புருவரி மாதத்திற் செய்யப்பட்டது. எப்பிரில் மாதத்தில் ஆங்கிலப்படையொன்று கொத்துலாந்திற் பிரவேசித்தது. இலீது நகரை ஆங்கிலப்படைகளும் கொத்துலாந்துப் படைகளும் முற்றுகையிட்டன. யூன் மாதத்திலே பதிலாளி இறந்தார். அதற்கு ஒருமாதத்தின் பின்னர் பிரெஞ்சுக்காரர் அடிபணிந்தனர். கொத்துலாந்திலிருந்து பிரெஞ்சுக்காரர் வெளியேறினர். ஆங்கிலப் படைகளும் வெளியேறின. இரண்டு தேசங்களின் சரித்திரத்திலும் பகைமைக்குப் பதிலாக முதன்முதன் நன்றியறிதல் உண்டானது. சலுகைகளொன்றுங் கேட்கப்படவில்லை. கெடுதிக்கேதுவான பழைய மேலாண்மை உரிமை கோரப்படவில்லை. அதைப்பற்றி ஒருவார்த்தைகூடப் பேசப்படவில்லை. இலிசபெது தக்க தருணத்தில் மிகுந்த சாதுரியத்துடன் நீதியான முறையில் நடந்துகொண்டாள். அதன் பயனாக வெற்றி பெற்றாள். கொத்துலாந்திற் சீர் திருத்தக்கட்சிக்குப் பாதுகாப்புண்டானது. அவள் எதிர்பார்த்தது இதுவன்று. தனது தேசத்தின் எல்லையிலே புரட்டசுத்தாந்திய சமயச் சார்புள்ள கொத்துலாந்து இருப்பது தனக்குப் பாதுகாப்பென எண்ணினாள். இதில் நல்ல திட்டம் அவளைச் சேர்ந்தது. 1560 ஆம் ஆண்டு திசெம்பரில் இரண்டாம் பிரான்சிசு இறந்தான். சுதுவட்டுமேரி, பிரான்சு அரசனின் மனைவியென்ற நிலை நீங்கினாள். அவளுக்குப் பிள்ளையுமில்லை. அதனால் அவள் விதவையான, கொத்துலாந்துநாட்டு அரசியாகவே விளங்கினாள்.

சீர்திருத்தத் திருச்சபை அமைத்தல்

அதே ஆண்டில் அவளுடைய இராச்சியத்தில் முக்கியமான பல நிகழ்ச்சிகளின் பயனாக மாற்றங்களுண்டாயின. 1560 ஆம் ஆண்டு ஓகத்து மாதத்திலே கொத்துலாந்துப் பாராளுமன்றம் கூடிச் சீர்திருத்தத் திருச்சபையொன்று ஏற்படுத்த அனுமதியளித்தது. போப்பாண்டவராதிக்கம் நீக்கப்பட்டது. புரட்டசுத்தாந்திய சமயமே அங்கீகரிக்கப்பட்டது. பூசையும் ஏனைய உரோமன் கத்தோலிக்கச் சடங்குகளுந் தடைசெய்யப்பட்டு அத்தடை மீறுவோருக்குக் கடுந்தண்டனைகளும் விதிக்கப்பட்டன.

கொத்துலாந்துக்கு மேரி சுதுவட்டின் வரவு, அவளுடைய எதிரிகள்

1561 ஆம் ஆண்டு ஓகத்து மாதத்திலே மேரி தனது இராச்சியத்துக்கு வந்தாள். அது அவளுடைய அழிவுக்கேதுவாயிற்று. "வானம் துக்கம் நிறைந்து காணப்பட்டது.....அது ஆண்டவன் எமக்குக் காட்டிய எச்சரிக்கை" என்றார் நொட்சு. மேரியின் வரவு பரிதாபகரமான ஒரு துக்கச் சம்பவம்; அதை எளிதில் உணரமுடியாது. அவளுக்கு வயது பத்தொன்பதுதான். உயர்ந்த நாகரிகம் நிலவிய பிரான்சிலே, முதலில் அரசிளங்குமரியாகவும், பின்னர் பிரான்சின் அரசியாகவும் அவள் இன்பமான வாழ்க்கை நடத்தினாள். திடீரெனக் கணவன் இறந்தான். பிள்ளையில்லாத கைம்பெண்ணாக அவள் பிரான்சைவிட்டு கொத்துலாந்துக்குத் திரும்பினாள்—உள்ளத்தை அலைக்கும் மாற்றம்; வாழ்க்கைவசதி பண்பாடு நடையுடை பாவனை இவற்றில் கொத்துலாந்து பிரான்சுக்கு எவ்வளவோ தாழ்ந்தது. ஓர் உதாரணம் கூறலாம். அம்போயிசிலுள்ள சாட்டோ மாளிகையையும் ஒலிறூட்டவுசுக்கோட்டையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் முன்னையது எளிமையும் அழகும் உடையதாய் மகிழ்ச்சிதரக்கூடிய ஆற்றையும் கிராமக்காட்சிகளையும் சூழப்பெற்றதாய் விளங்கும். பெரிய மாளிகைகளுக்குப் பெயர்போன அந்நாட்டிலே இது வனப்புநிறைந்தவொரு "பெருங் குடிவீடு". மற்றது தாழ்பூமியிற் பதிந்து கிடப்பது; இருளும், துக்கமும் குடிகொண்டது. கனத்த பெரிய சுவர்களைக் குடைந்து துவாரஞ் செய்தது போன்ற பலகணிகள் எப்பொழுதும் இருள்மண்டிய சிறையையே ஞாபகப்படுத்துமன்றி இராசவில்லத்தை நினைவூட்டமாட்டா. மேரி தன் தாயகந் திரும்பியதும் குடிகள் அவளை உள்ளங் கனிந்த அன்போடு குதூகலமாக வரவேற்றனர். புராதன அரச குடும்பமான சுதுவட்டு வமிசத்தைச் சேர்ந்த தமது அரசியை மறுபடியும் சிங்காசனத்திலேற்ற மக்கள் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் அரசி உண்மையாகவே கத்தோலிக்க சமயத்தை அனுசரிப்பவள்; பிரான்சையே முதலில் நேசித்தாள். அதன் பின்னரே கொத்துலாந்தை நேசித்தாள். அத்தகையவளுக்கும், புரட்டசுத்தாந்திய சமயத்தில் ஊறிய குடிகளுக்கும் பிரபுக்களுக்குமிடையில் நிலைபெற்ற அன்பு எவ்வாறுண்டாகும்? ஒலிறூட்டவுசிலே தனிப்பட்ட கத்தோலிக்க முதற் பூசை நடந்தது. வெளியே மக்கள் குழுமி நின்று சத்தமிட்டனர். வாசலில் நின்றுகொண்டு பூசை செய்யும் குருவைக் கொலைசெய்யுமாறு கதறினர். நொட்சு அவளை முதன்முறை பேட்டிகண்டபொழுது அவளுடைய திருச்சபையை ஏளனஞ் செய்தார். எடின்பறோவில் அவள் பிரவேசித்தபொழுது அவளுக்குப் பெரியதொரு விவிலிய வேதநூல் பரிசாக வழங்கப்பட்டது. அது தெளிவானதொரு குறிப்பாகும். கத்தோலிக்கப் பூசையைக் கைவிடுமாறு சில குழந்தைகளைக் கொண்டு சொற்பொழிவாற்றுவித்தனர். சீர்திருத்தக் கோட்பாடுகளை உபதேசிக்கும் குருமார் ஒவ்வொருவரும் அரசியைத் தெருட்டி அவளுடைய கொள்கைகளை மாற்றுவதே தமது கடமையென நினைத்தனர்.

பிரபுக்களும் இவர்களுக்கு இசைக்கவில்லை. முதல் வருடத்திலேயே அரசியைக் கொன்றுவிடப் பொதுவெல் சூழ்ச்சிசெய்தான் போலும். கத்தோலிக்கர் கட்சித்தலைவனன அன்றிலி கூட, அமிற்றன் குடும்பத்தவரோடு சூழ்ச்சி செய்து, அரசியைச் சண்டைக்குத் தூண்டினான். அரசப் படைகள் அவனோடு சண்டைசெய்து அவனைக் கொன்றன. மேரிக்கு விசுவாசத்தோடு நடந்தவர் மிகச் சிலரே.

இருந்தும் அவளுக்குப் பலமிருந்தது. அழகும் சாமர்த்தியமும் அவளிடமிருந்தன. "அவள் தந்திரசாலி என்றே நான் நினைக்கிறேன். இல்லையேல் என் மதிப்புப் பிழையானதாகும்" என்று நொட்ச கூறினர். மேலும் ஆங்கில அரசுக்கும் அவள் உரிமையுடையவள். இதை இலிசபெது ஏற்றுக்கொள்ளாலிட்டாலும் இதுவே உண்மை. மற்றுமொரு ஆயுதம் அவள் கையிலிருந்தது: அவள் மறுபடியும் விவாகஞ் செய்யக் கூடிய நிலையிலிருந்தாள்.

மேரியின் விவாகம், இலிசபெத்தின் விருப்பங்கள்

அவள் மறுவிவாகஞ் செய்துகொள்வானென்றே எல்லாரும் நினைத்தனர். இங்கிலாந்திலும் கொத்துலாந்திலும் ஐரோப்பாவிலுமுள்ள அரசியல் வாதிகள் எல்லோரும் அவளுக்குக் கலியாணம் பேசத்தலைப்பட்டனர். பலவிதமான வதந்திகளடிபட்டன. தென்மாக்கு மன்னன், சுவீடன் மன்னன், போசனின் மகனிலொருவன், தொன்காளோசு, பிரெஞ்சு அரசகுமாரன் ஒருவன், இரண்டாவது பிலிப்பு, என்ற இவர்களெல்லாருடைய பெயருங் கூறப்பட்டன. இலிசபெது தனது நண்பனான இலீசிற்றர் பிரபுவை மணஞ்செய்யுமாறு கூறினாள். மேரி அதனை ஆலோசிப்பதாகக் கூறிவிட்டு அந்தரங்கத்திலே தனது மைத்துனனான இடானிலிப் பிரபுவாகிய என்றியை மணஞ்செய்ய நிச்சயித்தாள்.

இடானிலித் திருமணம்

இச்சம்பந்தத்தினால் கொத்துலாந்து பிரான்சுடனே, சிபெயினுடனே தொடர்புபடவேண்டிய நிலைமையில்லாது போயிற்று. இது இலிசபெத்தின் விருப்பத்துக்குகந்ததாய் இருந்தது போலும். எனெனில், இச்சம்பந்தத்தை அவள் எதிர்த்தபோதிலும் தடுக்க முயலவில்லை. விரும்பினால், அவள் தடுத்திருக்கலாம். இடானிலி இங்கிலாந்திலிருந்து கொத்துலாந்துக்குச் செல்ல இலிசபெது அனுமதித்தாள். ஆனால் அதில் ஆபத்து நிறைந்திருந்தது. இடானிலியும் தியூடர் வமிசத்தையே சேர்ந்தவன். எட்டாம் என்றியின் சகோதரி மாகரெட்டு. அவள் நாலாம் சேமிசை மணந்தாள். அந்த அடியில் வந்த பேரப்பிள்ளைகளே இடானிலியும் மேரியும். இலிசபெத்துக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால், அதாவது சூழ்ச்சிக்காரரின் விளக்கப்படி, இலிசபெது கொலை செய்யப்பட்டால், மேரிக்கும் இடானிலிக்கும் இருக்கும் உரிமையை எவரும் மறுக்கமுடியாது. இதனால் பயனாக ஆங்கிலச் சிங்காசனத்திலே கத்தோலிக்க அரசு ஆட்சி நடத்தும்.



சூழ்ச்சிகள்

இலிசபெத்தின் எதிரிகளுக்கு ஏற்பட்ட துரதிட்டங்களால், அவளுக்கேற்பட்ட தொல்லைகள் நீங்கின. மேரி தனது கணவனான இடானிலியுடன் முரண்பட்டாள். இடானிலி முட்டாள்; துர்நடத்தையுடையவன். மேரிக்கு அவனால் எவ்வித பயனுமுண்டாகவில்லை. கணவனுக்குக் கொடுக்க வேண்டிய விவாகக் கிரீடத்தைக் கொடாது மறுத்தாள். அதனால் அவன் அவளோடு பிணங்கிக் கொண்டு, புரட்டசுத்தாந்திய பிரபுக்கள் சிலருடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தான். மேரியின் இத்தாலியச் செயலாளனான இரிசியோவை முதலிற் கொல்லல் அவர்கள் திட்டமாயிருந்தது. சூழ்ச்சிக்காரர் அடுத்தபடியாக என்ன செய்திருப்பார்களென்பது ஒருவருக்குந் தெரியாது. மேரியைக் கைது செய்து இடானிலிக்கு முடிசூட்ட எண்ணியிருக்கலாம். பொதுவெலும், புதிய கோமானான அன்றிலியும் மேரிக்கு விசுவாசமுள்ளவராயிருந்தனர். எதிரிகளாகப் பலர் சேர்ந்தனர். தக்ளசுக் கூட்டத்தவரான, உருதுவெனும், மோட்டனும்; இத்தாலியத் தான்றோன்றிக்கு எதிராயுள்ள பல பிரபுக்கள்; ஆதரவு இழந்து மனம்புழுங்கிக் கிடந்த இலெதிங்டன், முடியைத் தனது மகனுக்குக் கொடாதமையாற் சீற்றங்கொண்ட இலெனொட்சு, குடியினால் தனது தைரியத்தைக் கைவிடாத காப்பாற்றி வந்த மேரியின் சீர்கெட்ட கணவன்—இவர்களெல்லாரும் மேரிக்கெதிராயிருந்தனர். சதிகாரர் இடானிலியை ஆதரிப்பதாக உடன்படிக்கை செய்து அதிற் கையொப்பமிட்டனர்[1]. "என்ன குற்றம் செய்தானும்" சதியினாலேற்படும் வீணவுகளிலிருந்து சதிகாரரை இடானிலி காப்பாற்ற வேண்டுமெனவும், "கிறித்துவின் வேதத்திற்கேற்ப"ச் சமயத்தை நிலைநாட்டவேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது.

[1]சூறித்த சூழ்ச்சியைப் பலர் அறிந்திருந்தனர். இக்கொலே நடக்க மூன்று நாட்களுக்கு முன்னர் ஆங்கிலத்தூதுவர் செலிலுக்கு அறிவித்திருந்தனர்.

ஒலிறூட்டவுசில் இரிசியோ கொலைசெய்யப்படல் (1566), கேக்கோபீல்டில் இடானிலி கொலை செய்யப்பட்டான்.

மாச்சுமாதம் 12 ஆம் திகதி இடானிலி ஒலிறூட்டவுசிலுள்ள மேரியின் அறைக்கு வந்தான். பின்னால் உருதுவெனும், மோட்டனும், ஏனைய சதிகாரரும் நின்றனர். இரிசியோ மேரியின் உடையைப் பற்றிக்கொண்டு ஆதரவற்றவனாய் நின்றான். அப்பொழுதுண்டான சண்டையில் உணவு மேசை புரண்டது. உடனே இரிசியோவை எல்லாருமாக இழுத்துக் குத்தி இயமலோகத்துக்கு அனுப்பிவிட்டனர். பிரேதத்தை மாடியிலிருந்து கிழே வீழ்த்தினர். சோச்சு தக்கிளசினாற் குத்தப்பட்ட இடானிலியின் ஈட்டி பிரேதத்திலே குத்திக் கிடந்தது.

இதைப்போலக் கொடிய அரசியற்கொலை கிடையாது. கொலைகாரரிலிருந்து தப்புவதற்கு மேரி கையாண்ட வியத்தகு சாமர்த்தியத்துக்கு ஈடே இல்லை. இரண்டு நாட்களிலே இடானிலியை அவள் வசப்படுத்தினாள். குற்றமன்னிப்புத் தருவதாகப் பேசினாள். தன்னோடு தன்பாருக்கு ஒளித்தோடுமாறு இடானிலியை இணங்கச் செய்தாள். அதில் மேரியின் நண்பர்களும் சேர்ந்தனர். பொதுவெல் ஆட்களைக் கொண்டு வந்தபோது கொலைகாரரெல்லாம் ஓடி ஒளித்தனர். மேரிக்கு யூன் மாதத்திலே ஒரு மகன் பிறந்தான். கோடைகாலம் முழுவதும் சமாதானஞ் செய்துகொள்வதைப் பற்றிப் பேசினாள். ஆனால் அவள் நடந்ததை மறக்கவில்லை. ஒற்றோபரிலே அதே சதிகாரர் மற்றொரு உடன்படிக்கையிற் கையொப்பமிட்டனர். இச்சமயம் இடானிலியைக் கொலைசெய்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் விபரமாயொன்றும் திட்டமிடப்படவில்லை. 1567 ஆம் ஆண்டு சனவரியில் இடானிலி கிளாசுக்கோவில் வைசூரிநோய் கண்டான். நோய் சுகப்படும் தருணத்திலே மேரி அவனிடம் போனாள். அவனைக் கேக்கோபீல்டு என்ற பழைய மடமொன்றுக்குக் கொண்டுவந்தாள். இது எடின்பறோவுக்கு வெளியேயுள்ளது[1]. இங்கே மேரி அடிக்கடி சென்று அவனைப் பார்த்துவந்தாள். பெப்புருவரி மாதம் 9 ஆம் தேதியே அவள் அவனைக் கடைசியாகத் தரிசித்தாள். மேல்மாடியில் இருவரும் இருக்கையில் பொதுவெல்லும் அவனுடைய ஆட்களும் இடானிலியின் அறைக்குக் கீழாகவுள்ள அறையில் வெடிமருந்தைக் கொண்டு போய் வைத்தார்கள். பின்னர் பொதுவெல் அரசியைக் கூட்டிக்கொண்டு ஒலிறூட்டவுசில் நடைபெறும் பொம்மைக்கூத்துப் பார்க்கக் குதிரையேறிப் போய்விட்டான். காலை இரண்டு மணிக்கு மறுபடியும் கேக்கோபீல்டுக்கு இருவரும் வந்தனர். பெப்புருவரி மாதம் 10 ஆம் தேதி காலை இரண்டு மணிக்கு கேக்கோபீல்டு மடம் வெடிமருந்தினால் அழிக்கப்பட்டது. இடானிலியும் அவனுடைய சேவகனும் தோட்டத்திலே இறந்து கிடந்தனர். அவர்கள் உடம்பிலே வெடிமருந்து காணப்படவில்லை. அவர்கள் திருகிக் கொல்லப்பட்டனர்.

[1]இவ்விடத்தில் இப்பொழுது பல்கலைக் கழகக் கட்டடங்கள் உள.

மேரி பொதுவெல்லை மணத்தல்

பொதுவெல் செய்த குற்றம் நிச்சயமாயிற்று. இச்சூழ்ச்சியைப்பற்றி எவ்வளவுதூரம் மேரி அறிந்திருந்தாளென்பது சரித்திரப் புதிர்களிலொன்றாகும். அவளுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்றே அக்காலத்தவர் நம்பினர். அதனோடு சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகளை ஆராயுமிடத்து அவளுக்குத் தெரிந்திருக்கவேண்டுமென்பதைச் சந்தேகிப்பவர் இன்றுமில்லை. சூழ்ச்சியிலே பலர் சிக்கியிருந்தபடியால், அதை அம்பலப்படுத்த ஒருவரும் விரும்பவில்லை. விசாரணையொன்று ஏற்படுத்திப் பின்னர் அதைக் கைவிட்டு விட்டனர். பொதுவெல் " நிரபராதி " யெனக் காட்டப்பட்டான். மற்றொரு பேரிடி விழுந்தது. எப்பிரில் மாதக் கடைசியில் பொதுவெல் மேரியை அவள் அனுமதியுடன் பிடித்துக் கொண்டு தன்பாருக்குப் போனான். தன்னுடைய மனைவியின் விவாகத்தை விரைவாக நீக்கிக் கொண்டு இருவாரத்துள் மேரியும் பொதுவெலும் ஒன்றாக எடின்பறோவுக்குட் பிரவேசித்தனர். மே மாதம் 15 ஆம் திகதி இருவரும் மணஞ் செய்தனர். இவ்விவாகம் உலகைத் திடுக்கிடச் செய்தது. போப்பாண்டவரும் பிலிப்பும் அதிசயப்பட்டனர். பொதுவெல்தான் இடானிலியைக் கொலைசெய்தவனென்று எழுதிய அட்டைகள் எடின்பறோ நகரிலேயே தோன்றின.

மேரிக்கெதிராக எழுச்சி

அடுத்ததாக வடக்கேயுள்ள பிரபுக்கள் பொதுவெலுக்கெதிராகக் கிளம்பினர். பிங்கிக்களத்துக்குச் சமீபத்திலுள்ள காபெரிக்குன்றிலே இருபக்கத்துப் படைகளும் எதிரூன்றின. பொதுவெலின் ஆட்கள் அவனைக் கைவிட்டு நழுவினர். அவனும் ஒளித்தோடினான். மேரியைக் கைதுசெய்து அவளுடைய குறுகிய செவ்வங்கியுடன் எடின்பறோவுக்குக் கொண்டு வந்தனர். சனங்கள் ஏளனமாகக் கூச்சலிட்டனர். உலொக்குலெவன் என்ற தீவில் அவள் சிறைவைக்கப்பட்டாள். இச்சம்பவத்தையடுத்துப் பொதுவெலின் பரிசாரகன் ஒருவனிடமிருந்து " பேழைக்கடிதங்கள் " எனப் புகழ்பெற்ற கடிதங்களைக் கொண்ட வெள்ளிப்பேழை கைப்பற்றப்பட்டது. இப்பரிசாரகன் பொதுவெலின் பொருள்களை எடுப்பதற்காக எடின்பறோக் கோட்டைக்கு அனுப்பப்பட்டவன். இக்கடிதங்கள் மேரியினாற் பொதுவெலுக்கு எழுதப்பட்ட காதற்கடிதங்கள். இவை இடானிலியின் கொலைக்கு முன்னர் எழுதப்பட்டவை. இவற்றிலே காதல் விடயங்களோடு, மேரிதான் தன் கணவனைக் கேக்கோபீல்டுக்கு வருமாறு எவ்வாறு இசையச் செய்தாளென்பதைப் பற்றிய விபரங்களுமடங்கியிருந்தன. அங்கே அவனுக்கு என்ன நடக்குமென்பது சந்தேகமின்றிச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இவை உண்மையான கடிதங்களாயிருந்தால், இடானிலியின் கொலைக்கும், பொதுவெல் அவளை அழைத்துச் சென்றதற்கும் அவளும் உடந்தையாயிருந்தாளென்பதை நிறுவும். அவளுடைய எதிரி

கள் அவளைச் சிறை வைப்பதற்கும் தங்கள் குற்றத்தை மறைப்பதற்கும் காத்திருந்த சான்றுகளையே. ஆனல் இக்கடிதங்கள் காலதாமதமின்றித் திடீரென்று கைப்பற்றப்பட்டமை சந்தேகத்தையுண்டுபண்ணலாம். இக்கடிதங்களிற் சிலபகுதிகள் கள்ளமாகச் சேர்க்கப்பட்டனவென்பதற்கும் வேறுவகையில் மாற்றஞ் செய்யப்பட்டன வென்பதற்கும் நல்ல சான்றுகளுண்டு[1].

உலொக்குலெவன்

மேரி உலொக்குலெவனிலே சிறையிருந்தபொழுது அவள் சார்பாக இலிசபெது சில முயற்சிகளைச் செய்தாள். அவளுக்குப் பிரபுக்கள் எவ்வித ஊறுஞ் செய்யக்கூடாதெனவும் சேமிசு இளவரசனை இங்கிலாந்துக்கு அனுப்பும்படியும் கடிதமெழுதினுள். மேரியை விசாரணை செய்யவும் ஒரு யோசனையிருந்தது. ஈற்றில் அவள் தனது அரசுரிமையைத் தன் மகனுக்குக் கொடுத்துவிட்டுப் பட்டத்தைத் துறக்கவேண்டுமென்றும் அவளுக்கு ஒருவழிச் சகோதரன் முறையானவனுன மோறே பதிலாளியாயிருக்க வேண்டுமென்றும் கடைசியில் முடிவு செய்யப்பட்டது. தனது ஆபரணங்களிற் சிலவற்றை அவள் அவனிடம் நம்பிக்கைக்குக் கொடுத்திருந்தாள். சில இலிசபெத்துக்கு விற்கப்பட்டன.

மேரி இங்கிலாந்துக்கு ஓடுதல் (1568)

இலிசபெது தனக்கு உதவி செய்வாள், அல்லது பிரான்சிடமோ வேறு அரசிடமோ போய்த் துணை கேட்பதற்குத் தன்னை இங்கிலாந்தைவிட்டுப் போக அனுமதிப்பாளென்று மேரி நம்பியிருந்தாள். ஆனல் பிரான்சுக்குச் சென்று படைத்துணை கொண்டுவந்து தனது குடிகளை துன்பப்படுத்த இலிசபெது ஒருப்படவில்லை. கொத்துலாந்தர் மேரியைத் தமது அரசியாக மறுபடியும் ஏற்றுக் கொள்ளவேண்டுமென அவர்களைக் கேட்க இலிசபெத்து விரும்பவில்லை ; இருந்தும் கொத்துலாந்துப் பிரபுக்கள் அவளை அரசாட்சியிலிருந்து நீக்கிவிட உரிமையற்றவர்களெனவும் அவள் வாதாடினுள்.

விசாரணை ஆணைக்குழு ; மேரியை இங்கிலாந்திலே தங்கச்செய்தல்

இவ்விடயங்களை விசாரணை செய்வதற்கு கொத்துலாந்துப் பிரபுக்களையும் பிரதான ஆங்கிலக் கத்தோலிக்கப் பிரபுக்களையும், ஆங்கிலப் புரட்டசுத்தாந்தியப் பிரபுக்களையுங் கொண்ட ஒரு விசாரணை ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. தனது கட்சியை எடுத்துச் சொல்ல மேரி நியாயவாதிகளை அனுப்பினுள். பின்னர் அவர்களை நிறுத்திவிடவே விசாரணைக்குழு

[1]அதேத பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை நோக்குக.

கூடினந்தது. மேரி இங்கிலாந்திலேயே தங்கினுள். விசாரணைச்சபை " பேழைக் கடிதங்கள் " **உண்மையான சாட்சியங்களென்று ஒப்புக்கொண்டபடியால்**[1] மேரியைத் தனது அரசசபையில் ஏற்றுக்கொள்ள இலிசபெது மறுத்தாள். யோக்குசயரிலுள்ள போற்றனுக்கு அவளனுப்பப்பட்டாள். அங்கே நண்பர்களைச் சந்திக்கவும் பச்சுதனுக்குப் பிரயாணஞ் செய்யவும் அவள் அனுமதிக்கப்பட்டாலும், மேற்பார்வையாளர் ஒருவரின் பாதுகாப்பிலே, கைதியாகவே யிருந்தாள். **(குறிப்பு 50).**

4. சூழ்ச்சிக்காலம் (1568—1587)

இலிசபெத்தின் நிலைமையில் முன்னேற்றம்; உத்தேசித்துள்ள பிரெஞ்சு விவாகம்

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவளும், விவாகப் பராயமுள்ளவளும், நிறைந்த அழகுள்ளவளும், இலிசபெத்தின் பின்னர் பட்டத்துக்குரிமையுடையவளும் கொத்துலாந்தின் அரசியாயுள்ளவளும், பகைப்புலத்தவளுமான மேரியால் உண்டாகக்கூடிய திடீராபத்து இவ்வாறு நீங்கிற்று. மேரி சிறையிருந்தாள் ; 1560 இல் கொத்துலாந்துப் பாராளுமன்றத்தால் நிறுவப்பட்ட சீர்திருத்தம் தப்பிப் பிழைத்தது ; சமயச்சீர்திருத்தத்தைச் சாட்டாகக் கொண்டு பிரான்சுமூலமும், சிபெயின் மூலமும் ஏற்படக்கூடிய தாக்குதலுக்கு ஏதுவில்லாமற் போயிற்று. இது பாதுகாப்புக்கு மிக அனுகூலமாயிற்று. ஆனல் 1558 தொடக்கம் 1568 வரையுள்ள பத்துவருடத்தில் இலிசபெத்துக்குத் துணையான பல சம்பவங்கள் நிகழ்ந்தன. இலிசபெத்தின் பலம் வளர்ந்துகொண்டு வந்தது. எதிரிகளின் பலம் குன்றியது. பிரான்சிலே சமயச்சண்டைகள் இளம்பின. திவிர கத்தோலிக்கர் கட்சிக்குக் கீசுக்குடும்பத்தவர் தலைமை தாங்கினர். இவர்கள் பிரெஞ்சு அரசுரிமைக்கும் வாதாடினர். இக்குடும்பத்தவருக்கெதிராகப் பிரெஞ்சு மன்னர்கள் இலிசபெத்தின் நட்பை நாடினர். அந்நட்பு நிலைபெற்றுவந்தது. சென் பத்தோலமியுவின் வதத்தினுற்கூட இந்நட்புக்குப் பங்கமுண்டாகவில்லை. இதற்கு ஓர் ஆதரவாயமைந்தது இலிசபெத்தின் விவாகக் கொள்கை. பிரெஞ்சு அரசகுமாரனுன முதல் அஞ்சு என்பவனை மணப்பதற்கு இலிசபெது " ஆலோசனை " செய்து வந்தாள். பின்னர் அவனுடைய இளைய சகோதரனுன அலென்சனை மணக்க யோசனை செய்தாள். உள்ளத்தில் அவளுக்கு உண்மையான விருப்பமிருக்கவில்லை. அந்தரங்கத்தில் இம்மாப்பிள்ளையை அவள் தனது " தவளை " எனக் குறிப்பிடுவதுண்டு. ஆனல் வெளித்தோற்றமளவில் திருமணப் பேச்சுக்கள் நடந்

[1]மூலமான கடிதங்கள் காணுமற் போய்விட்டன. இருந்தும் விசாரணைக்குழு அவற்றை ஆதாரமாகக் கொண்டது. ஆனல் அவை உண்மையான கடிதங்களாவென்பது நிச்சயிக்கப்படவில்லை.

தன. கொத்துலாந்திலிருந்து பிரிந்துகொண்டும், சமயச்சண்டைகளாலும் சிபெயின் ஆதரவைப்பெற்ற கீசுகுடும்பத்தவரின் பேராசைமுயற்சிகளாலும் அல்லற்பட்டுக் கொண்டுமிருந்த பிரான்சுக்கு இலிசபெத்தின் உதவியைத் தேடவேண்டிய நிர்ப்பந்தமுண்டாயிற்று. **(குறிப்பு 54).**

பிரான்சு சம்பந்தமாக இலிசபெத்து கைக்கொண்ட பூட்கை

இலிசபெத்தின் சிக்கலான வெளிநாட்டுக்கொள்கையிலே ஒரு நிலையான அமிசம் காணப்பட்டது. சிபெயின் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும் பகைநாடு என்றமையால் பின்னவை ஒன்றுக்கொன்று ஆதரவாய் இருக்கவேண்டு மென்பதையுணர்ந்து, இருநாடும் நட்புற்றிருந்தன. தத்தம் நோக்கங் களை நிறைவேற்றுவதற்காக இருநாடும் தமது நட்புறவைப் பலப்படுத்திக் கொண்டன. பார்வையைச் சிறிது எட்டவைத்து நோக்கினால் 1584 இலே வலோய் வமிசத்தைச் சேர்ந்த கடைசி மன்னனான என்றி கொலைசெய்யப் பட்டபொழுது இலிசபெது முன்னிலும் திட்டமான கொள்கையைக் காட்டி னாள். பிரெஞ்சுஅரசுக்கு உரிமை கோரிய புரட்டசுத்தாந்திய உரிமையாள னான நவார் என்றி, முதன்முதல் அரசுரிமைக்குப் போட்டியிட்டபொழுது தன்னாலான பொருளுதவி (35,000 பவுண்) செய்தாள். பின்னர் அவனுக்கும், பிரான்சிய கத்தோலிக்கருக்குமுண்டான சண்டையிலே அவள் 3,00,000 பவுனுக்குநிகமாகப் பொருளுதவினாள். சிபெயின் அவ்விரு நாடுகளுடனும் வெளியாகப் பகைமை சாதித்ததால் அவளும் என்றியும் நெருங்கிய நட்புறவாளராயினர்.

பிரான்சுக்கும் கொத்துலாந்துக்குமுள்ள பரம்பரை நட்புறவை நீக்கும் நோக்கத்துடனும் அவள் பிரான்சின் நட்பை வளர்த்தாள். இந்நோக்கம் ஈற்றில் நிறைவேறிற்று. சுதுவட்டுமேரிக்குப் பிரான்சு அவளுடைய ஆட் சிக்காலம் முழுவதும் எவ்வித உதவியும் செய்யாது இலிசபெத்துடன் நட்பாயிருந்தது.

இலிசபெத்தும் நெதலந்தும்

தேசத்திலுண்டான கொடிய சமயச்சண்டைகள் காரணமாகப் பிரான்சின் பலம் குறைந்தது. சிபெயினிலும் சமயப்பூசல் நிகழ்ந்தபடியால் அதன் பலமும் குன்றிற்று. சிபெயினுக்குரிய வளம் மிக்க இராச்சி யம் பெரும்பாலும் புரட்டசுத்தாந்தியச் சார்புடையதாயிருந்தபடியால், சிபெயினுடன் பகைத்தே வாழ்ந்தது. சமயப்பூசல் ஒருபுறமாக, பிலிப்பு மன்னனின் நிதி பற்றிய பூட்கையை நெதலந்து ஆட்சேபித்து வந்த தது. எனவே 1568 இல் அங்கே பிலிப்புக்கெதிராகக் கலகமுண்டானது. இலிசபெத்தின் ஆட்சிக்காலம் முழுவதும் இந்தப் போராட்டம் நடை பெற்றது. இதில் இலிசபெத்து தன்னாலங்கருதி இடச்சுக்காரருக்கு ஆதர வளித்தாள். முதலில் சிபெயினுடன் சண்டைசெய்வதற்குப் பயந்து

அவள் வெளிவெளியாக ஆதரவளிக்கவில்லை. எனவே தன்னாலான பொருளுதவியை அவள் இடச்சுக்காரருக்குச் செய்து வந்தாள். எனி னும் அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு உதவி கிடைக்கவில்லை. பத்து வருடத்தில் அவள் மௌனவில்லியத்துக்கு 5 இலட்சம் பவுண் உதவி னாள். அக்காலப் பணநிலையை ஆராயுமிடத்து இது பெருந்தொகையெ னவே கருதவேண்டும். மேலும் அல்வாவின் படைகளுக்குக் கொடுக்கப் பணம் கொண்டு சென்ற கப்பலை இலிசபெத்துத் தடைசெய்து, பண த்தையும் கைப்பற்றிக்கொண்டாள். அவ்வகையிலே மறைமுகமாகவும் இடச் சுக்காரருக்கு உதவி செய்தாள். ஈற்றிலே மௌனவில்லியம் கொலை செய் யப்பட்ட பின்னர் 1585 இலே இலிசபெத்து ஒரு படையை அனுப்பினாள். தகுதியற்ற இலீசிற்றர் தலைமையிற் சென்ற படை எதையுஞ் சாதிக்க முடியாமற் போய்விட்டது. ஆனால் இச்சண்டையிலேதான் சட்பென் களத் தில் நடந்த போரிலே (1585) சிபானியர் ஆங்கிலப் படைகளைத் தோற் கடித்த பொழுது உலகப் புகழ் பெற்றதொரு சம்பவம் நிகழ்ந்தது. அது சேர் பிலிப்பு சிட்டினி என்பவரின் அருளாண்மை பற்றியது. முடிந்தவரையில் வெளிப்படையாகப் போரில் இறங்காதவகையில் கரு மங்களைச் செய்யவேண்டுமென்ற கொள்கையே, இலிசபெத்தின் கருமங் களெல்லாவற்றுக்கும் தடையாயிருந்தது. அத்துடன் இங்கிலாந்திலே நிகழ்ந்த இராசத்துரோக முயற்சிகளையுங் கவனிக்கவேண்டியிருந்தது. **(குறிப்பு 53).**

இங்கிலாந்திலே சூழ்ச்சிகள்

இக்காலங்களிலே இலிசபெத்துக்கெதிராகப் பலசூழ்ச்சிகள் நடந்தன. இவை வெளிநாடுகளிலுள்ளவர்களால், ஆங்கிலப் பிரசைகள்மூலம், அர சுக்கெதிராகச் செய்யப்பட்டன.

மேரி சம்பந்தமாக 1569 இலே நடந்த விசாரணையின்போது, இச் சூழ்ச்சிகளைப் பற்றிய செய்திகள் வெளியாயின. இலிசபெத்து நியமித்த விசாரணைச்சபைத் தலைவரான நோபக்கு, மேரி குற்றவாளியென முதற் கண்டார். பின்னர் தமது அபிப்பிராயத்தை மாற்றிக்கொண்டு மேரியை விடுதலை செய்யச் சூழ்ச்சிசெய்தார். ஆங்கிலக் கத்தோலிக்கருள் அவர் முதல்வரானபடியால், அத்தகைய சம்பந்தம் கத்தோலிக்கருக்கு மகி ழ்ச்சியைக் கொடுத்திருக்கும். பட்டத்துக்கு அடுத்தாற்போல் எவருக்கு உரிமையுண்டென்பது நிச்சயப்படுத்தப் படாதபடியால், தமது விவாகத் தின் பயனாகக் கத்தோலிக்கர் ஒருவர் பட்டத்துக்கு வரலாமெனவும் எண்ணினார். இலிசபெத்தின் அமைச்சர் மிகக் கவனமாகவேயிருந்தனர். அவர்கள் எற்படுத்திய ஒற்றர்கள் உளவறிந்து கூறிக்கொண்டே வந்தனர். நிட்டம் வெளியானதும், விசாரணை நிறுத்தப்பட்டது. மேரியை அதிதி யாகவும், கைதியாகவும் கத்துபெரியென்ற இடத்துக்கு அனுப்பினர்.

வடக்கிற் கலகம் (1569)

நோபக்கின் அடுத்த முயற்சி மிகப் பாரதூரமானது. நெதலந்திலேயுள்ள சிபானியப் படைகளின் ஏவுநனாயிருந்த அல்வா கோமகனோடு நோபக்கும் அவருடைய சகாக்களும் சூழ்ச்சிசெய்தனர். கலகமொன்றைத் தொடக்கி இலிசபெத்தின் முதன் மந்திரியான செசிலைக் கைதுசெய்வதாக அவர்கள் வாக்களித்தனர். அல்வா அதற்குப் படைத் துணை தருவற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. மேரியை விடுதலை செய்வதெனவுந் திட்டமிடப்பட்டது. கலகக்காரர் தமது ஆர்வத்தை வெளிப்படையாகக் காட்டும்வரை படைகளை அனுப்புவதில்லையென அல்வா கூறினான். இலிசபெத்தின் மந்திரிகள் சாவதானமாகவும், சுறுசுறுப்பாகவுமிருந்தார்கள். அவர்களுடைய பெயரே அதைத் தெரியப்படுத்தும். வடக்கில் பேசியும், நெஞ்சிலும் சிறந்த போர்வீரர். வடக்கேயுள்ளவர்கள் ஆயுதப்பயிற்சியில் நாட்டமுள்ளவர்கள். போர்ச் சுபாவமுள்ளவர்கள். இவ்விரு பிரபுக்களும் தமது எல்லைப்புறப்படைகளைத் திரட்டி, தறமைக்கப்பற்றி, அங்குள்ள தேவாலயத்திற் கத்தோலிக்கப் பூசை நடத்தினர். பின்னர் மேரியைக் கைது செய்வதற்குத் தெற்குநோக்கி விரைந்தனர். மேரியை உடனே இலிசபெது கொவென்றிக்கு அனுப்பிவிட்டு வெசிற்று இரைடிங்கிலே பிரபுக்களைப் படையேவித் தடுத்தனள். சண்டை நடைபெறவில்லை. தலைவர்கள் கொத்துலாந்துக்குத் தப்பியோடினர். குழப்பக்காரர் கலைந்தனர். தறம், யோக்குசயர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த ஏராமானவர்களிலே கலகக்காரிற் சிலர் தூக்கிலிடப்பட்டனர். இவ்வாறு நல்லதொரு பாடம் படிப்பிக்க வேண்டியது அவசியமாயிற்று. வடக்கே எழும்பிய கலகம் இவ்வாறு ஒய்ந்தது. தமது வெற்றி கத்தோலிக்கமதச் சார்பானதென்றும் அதைப் பாதுகாக்கவே உண்டானதென்றும் பிரபுக்கள் காட்டிக்கொள்ள முயன்றபோதிலும், இலிசபெது அவர்களைக் கலகக்காரரென்று தீர்த்துவிட முயன்றாள். கத்தோலிக்கக் கட்சியே தமது மதத்துக்காகச் சண்டைசெய்ய எழுந்ததென்று மக்கள் நினையாதிருக்கும்வண்ணம் அக்கலகத்தையடக்க சசெற்சு என்ற கத்தோலிக்கப் பிரபுவையே படைத்தலைவராக இலிசபெது அனுப்பினாள்.

மதவிலக்கம்

இலிசபெது உரோமன் கத்தோலிக்கத் திருச்சபைக்கு மாறமாட்டாள் என்பது இதுவரை தெளிவாகவில்லை. "ஆங்கிலப் பாசமயம்" பலகாலம் நிலவிவிட்டதெனக் கத்தோலிக்கர் நினைத்தனர். ஆனால் நாளடைவில் அது மாறுமெனவும் நம்பியிருந்தனர். எனைய ஐரோப்பிய மன்னர் கூட்டதிலிருந்து விலக்கி வைக்கக்கூடிய ஒரு சமயத்தில் இலிசபெது நெடுங்காலம் நிலைத்திருப்பாளென எதிர்பார்க்கப்படவில்லை. அவள் மனம் வருந்தித் தானாக மாறும்வரை அவகாசம் வழங்கிக்கொண்டு போப்பாண்டவர் காத்திருந்து நெடிது கலங்கினர். இனி அவளுடைய மனோபாவத்தை மேலும் பொறுத்துக்கொண்டிருக்க முடியாதென்றும் அவளுக்கு ஞாபகமூட்டவேண்டியது அவசியமென்றும் கருதப்பட்டது. எனவே 1570 இல் ஐந்தாம் பயசு இலிசபெத்தை மதவிலக்கம் செய்ததாக அறிவித்தார். அவளுடைய குடிகள் அவளுக்கு அடங்கி நடக்கவேண்டியதில்லையெனவும் அறிவிக்கப்பட்டது. இதுதான் கடைசியென்பது இதன்பொருளன்று. ஒருமுறை மதவிலக்கஞ் செய்தால் அதை மாற்றுத்தரவு செய்யவும் இடமுண்டு. ஆனால் உரோம் அவளைத் தன் விரோதியென அப்பகல் கருதிற்றென்பது தெளிவாயிற்று. உண்மையான கத்தோலிக்கர் அவருக்கெதிரான நடவடிக்கையிற் பங்குபற்றலாமெனவும் எதிர்பார்க்கப்பட்டது.

இரிடோல்பியின் சூழ்ச்சி (1571)

எனவே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் மறுபடியும் பலசூழ்ச்சிகள் செய்யப்பட்டன. இலிசபெத்தை அரசபதவியிலிருந்து நீக்கிவிடவேண்டியதே தமது கடமையென இங்கிலாந்திலுள்ள ஆர்வம் மிக்க சில கத்தோலிக்கரும், சிபெயின், பிரான்சு, இத்தாலி ஆகிய நேசங்களிலுள்ள கத்தோலிக்கரும் கருதினர். முதலில் இரிடோல்பிச் சூழ்ச்சி உண்டானது (1571). இரிடோல்பி, புளோரன்சில் வங்கித்தொழில் நடத்தும் ஒருவன். போப்பாண்டவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். நோபக்கு, கொத்துலாந்து அரசி மேரி, சிபானிய பிலிப்பு என்பவர்களிடையே தூது செல்பவன். நெதலந்திலிருந்து படைத்துணையனுப்புமாறு அல்வாவைக் கேட்க, இலிசபெத்து இயற்கை மரணமோ "வேறெவ்வித மரணமோ" அடையும்வரை அங்கு இளைச்சி செய்வதிற் பயனில்லையென அவன் சாவதானமாகப் பதில் கொடுத்தான். மேரியின் உளவாளிகள் மூலம் இச்சதியாலோசனை பற்றிச் செய்தி கிடைத்தது. உடனே நோபக்கைக் கைது செய்து தூக்கிலிட்டனர்.

இதன்பின்னர் கொஞ்சக்காலம் அமைதி நிலவிற்று. புளோய் உடன்படிக்கைப்படி கொத்துலாந்தில் மேரிக்கு ஆதரவளிப்பதில்லையெனப் பிரான்சு சம்மதித்தது. சென் பத்தோலமியூ வதத்துக்கு (ஒகத்து 1572) பின்னரும் இலிசபெத்து பிரெஞ்சு அரசினொடு நட்பாயிருந்தாள். நெதலந்திலுள்ள கலகக்காரர் விட்டுக்கொடுக்காமல் சிபெயினுக்குத் தொல்லை விளைத்தனர். பிலிப்பின் ஒருவழிச் சகோதரனான தொன்யோன் கலகக்காரரை அடக்கிவிட்டு இங்கிலாந்தின்மீது படையெடுத்து மேரியை விவாகஞ் செய்யத் திட்டமிட்டபொழுது, பிலிப்பு பெரிதும் அச்சங்கொண்டு, அவனைத் திருப்பியழைத்துவிட்டான்.

ஏசுதர் ; கத்தோலிக்க தூது ; காம்பியனும் பாசன்சும் ; துரெக்கு மோட்டன் சூழ்ச்சி, 1583

அடுத்ததாக ஏசுசபையினரிடமிருந்து தொல்லையுண்டானது. இச் சபையை 1540 இல் நிறுவினவர் இக்நேசியசு உலோயலா. அன்று தொட்டு இச்சபையினர் சீர்திருத்தக் கொள்கையிலகப்பட்டவர்களை மனந் திருப்புவதிலே முயன்றனர். அவ்வியக்கத்தில் முன்னுக்கு நின்ற பல தலைவர்கள் இச்சபை யிலிருந்து தோன்றினர். 1568 இலே தூவே என்ற இடத்தில் ஆங்கில ஏசுசபையினரைப் பயிற்ற ஒரு பாடசாலை தாபிக்கப்பட்டது. 10 வருடத்தின் பின்னர் இது இர்மிசு நகருக்கு மாற்றப் பட்டது. இங்கிலாந்தில் மதமாற்றஞ் செய்வதற்காகவே இக்கல்லூரி நிறுவப் பட்டது. இங்கே மதப் பிரசாரஞ் செய்யும் குருமாருக்குப் பயிற்சியளிக்கப் பட்டது. உயிரை மதியாதவர்களே இதிற் பயிற்சிபெற வந்தார்கள். கத் துபேட்டு மெயின் என்ற ஒருவர் 1577 இல் கிரச்சேதஞ் செய்யப்பட்டார். காம்பியன், பாசன் என்பவர்கள் 1580 இல் வந்ததும் இயக்கம் புதிய உற்சாகத்தையடைந்தது. பெயரளவில் அவர்கள் அரசியல் விடயங்களிலே தலையிடவில்லை. ஆனால் அவர்களுடைய போதனையினால் இங்கிலாந்தெங் கும் கத்தோலிக்க சமயம் அதிசயிக்கத்தக்க விதமாகப் புத்துயிர் பெற் றது. உடனே அரசாங்கம் காம்பியனையும் அவருடைய சகாக்களையும் கைது செய்து, இராசத்துரோகச் சதிசெய்ததாக விசாரணை நடத்தித் தூக்கிலிட் டது. காம்பியனுக்கெதிராகக் குற்றத்தை நிரூபிக்க எதுவில்லாமற் போயி ற்று. அவன் இறக்கும்பொழுது "இலிசபெது உங்கள் அரசி எனக்கும் அரசி, அவள் சமாதானமாக நீண்டநாளாட்சி செய்யவும், எல்லா நன் மைகளையும் பெறவும் நான் பிரார்த்தனை செய்கிறேன்" எனப் பிரார்த் தித்தான். அவனுடைய நண்பனை பாசன்சு தப்பி ஓடினான். அவன் அரசியல் விடயங்களிலே தலையிட்டானென்பது அவனது எதிர்கால நட த்தையிலிருந்து தெரிய வந்தது. மேரி அரசியின் சார்பாக கொத்துலாந் திலே கலகம் மூட்டுமாறு ஏசுசபை அங்கத்தவர் இருவரை அனுப்பி னான். இலண்டனிலுள்ள சிபானிய தூதுவரான மெண்டோசாவுடன் சேர்ந்து சதியாலோசனை செய்தான். பிலிப்புடனும் போப்பாண்டவருட னும் இலிசபெத்தைக் கொல்வதற்குச் சதிசெய்தான். அரசியைக் கொல் வதற்கு 1,00,000 பிராங்கு பரிசு கூறி ஒழுங்குசெய்த ஆங்கிலச் சதிகாரன், பாசன்சு மதிப்பிட்டபடியே, "ஒன்றுஞ்செய்ய முடியாத உதவாக்கரைப் பயல்." செயரிலுள்ள துரெக்கு மோட்டனென்ற உயர்குடி மகனும் மெண்டோசாவுஞ் சேர்ந்து இங்கிலாந்தின் மீது இசுப்பெயின் படையெடுக் கச் சதிசெய்தனர். அதிலும் பாசன்சு சேர்ந்திருந்தான். பேளியும் உவால் சிங்கமும் விடயங்களை நேரத்தோடு அறிந்து கொண்டனர். 1583 ஆம் வருட திசெம்பரில் துரெக்குமோட்டனைக் கைதுசெய்து தூக்கிலிட்டனர். மெண்டோசா பதவியிலிருந்து நீக்கப்பட்டான்.

ஒரேஞ்சு உவில்லியம் கொலைசெய்யப்படல் (1584)

இதுவரை இலிசபெத்தின் வாழ்க்கை அல்லலின்றிச் சுமுகமாக நடை பெற்றதுபோற்றேன்றிற்று. குடிகளிற் பெரும்பாலோர் அரசிக்கு விசுவாச முடையவராயிருந்தனர். சதி செய்தவர்கள் முற்றுல ஊக்கமில்லாதவ ராயும், திறமையற்றவராயுமிருந்தனர். ஆனால் 1584 இல் அரசியற் பேரிடியொன்று விழுந்தது. பேரிடி என்று கூறுவதற்குக் காரணம் சதிச்செயல் எப்பொழுதும் பயனில்லாது போவதில்லையென்பதை வற்புறுத் தற்கே. நெதலந்திலே கலகக்காரரின் இயக்கத்துக்கு உயிர் போன்றிருந்த ஒரேஞ்சு இளவரசனை மௌன உவில்லியத்தைப் பல்தசர் செரட்டு என்ற சதிகாரன் இசுப்பானியப் பணத்துக் காசைப்பட்டுச்[1] சுட்டுக்கொன் றான். அதேசமயம் அஞ்சு இறந்தான். பிரெஞ்சு அரசு மூன்றாம் என்றி யின் பின்னர், புரட்டசுத்தாந்திய சமயத்தைச் சேர்ந்த நவார் என்றி க்கே சேருமென்பது தெளிவாயிற்று. இதைப் பிரான்சிலுள்ள பல கத் தோலிக்கர் விரும்பவில்லை. பரசமயத்தவனை புரட்டசுத்தாந்திய அர சன் கீழ்க் குடிகளாயிருக்க அவர்கள் விரும்பவில்லை. உடனே பிரான்சிலே உள்நாட்டுக் கலகமுண்டானது. இது இலிசபெத்துக்குப் பெரிய கெடுதிக் கேதுவாயிற்று. சிபெயின் இங்கிலாந்து மீது படையெடுக்க நீலைத்தால் பிரான்சின் துணையை இனி எதிர்பார்க்க முடியாது. சிபெயின் இங்கி லாந்துடன் சண்டை செய்வதற்கு இப்பொழுது எற்றநிலைமையிலிருந்தது. ஒரேஞ்சு உவில்லியம் மறைந்தார். நெதலந்திலே பாமாவின் கீழுள்ள பொனியப் படைகள் வெற்றியடைந்தன. அதுதான் ஒருபுறமாக, மற்று மொரு ஆபத்து எதிர்நோக்கிற்று. இயூசெனென்று மன்னன் ஆட்சிக்கு வந்து விடுவானென்று பயந்த பிரெஞ்சுக் கத்தோலிக்கர் சிபெயினின் உதவியை நாடினர். பிரான்சும் சிபெயினும் கத்தோலிக்க சமயப் பிரியர் என்ற வகையில் ஒன்று கூடினால்—அவ்வாறு கூடுவது சாத் தியமாகவே காணப்பட்டது—இலிசபெத்துக்கும் இங்கிலாந்துக்கும் பேரா பத்துண்டாகும்.

சங்கம், கொத்துலாந்தின் ஆரும் சேமிசுடன் நட்புறவு

இங்கிலாந்து தன்னலமான முயற்சியைச் செய்தது. 12 வருடத்துக்கு முன் பாராளுமன்றம் மேரிக்கு அரசகுற்றத்தண்டம் (அற்றெயிண்டர்) விதிக்குமாறு விண்ணப்பஞ் செய்தது. இலிசபெது அதற்கு இணங்கவில்லை. 1584 இல் உண்டான ஆபத்திலே ஒரு சங்கம் நிறுவப்பட்டது. அதன் அங் கத்தவர்கள், இலிசபெத்தின் உயிருக்குச் சதி செய்வோரையும், **எவர் சார்பில்**

---

[1]பாமா சதிகாரனுக்குப் பணங்கொடுப்பதாக **வாக்களித்தான்.** ஆனால் அவனிடம் ஒரு சதமுங்கூட இல்லை. ஆனால் தக்க தருணத்திலே ஒரு புதினச் செய்தியை உவில்லியத்துக்குக் கூறியதன் பயனாக உவில்லியமே அவனுக்குப் பரிசளித்தான். அப்பணத்தைக் கொண்டே குப்பாக்கிகள் வாங்கப்பட்டன.

அச்சநி செய்யப்பட்டதோ அவரையும் மரணதண்டனைக்குள்ளாக்க வேண்டு மென நிச்சயித்தனர். பட்டத்துக்கு உரிமை பூண்டுள்ள ஒருவரின் எவலால் இந்தச் சதிசெய்யப்படுமானுல் அவரை இராசத்துரோகத்துக்கு விசாரணை செய்ய அரசாங்க விசாரணைக் குழுவொன்று ஏற்படுத்த வேண்டுமமன்றும் ஒரு விதியைப் பாராளுமன்றம் நிறைவேற்றியது. இதனுல் இலிசபெத்தின் உயிரைப் பாதுகாக்க முடியாது. ஆனுல் அவ னின் பின்னர் மேரி பட்டத்துக்கு வரமுடியாமல் இது தடுத்தது. எப்படி யும் மேரியின் உயிர் பறிபோகவேண்டியதே. இலிசபெது இதைத் தொடர்ந்து ஆறும் சேமிகுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொண்டாள். அது சமயத்தைப் பாதுகாப்பதற்காக இருபகுதியினருக்கும் உதவுகின்ற உடன்படிக்கை.

பபிந்தனின் சூழ்ச்சி (1586) மேரி உடந்தையாயிருந்தமை

1586 ஆம் ஆண்டினுரம்பத்திலே இத்தகைய நிலைமையிருந்தது. மேரி தனது மகனுக்குரிய உரிமைகளையெல்லாம் நிராகரித்துத் தனது உரிமை யெல்லாவற்றையும் சிபானிய பிலிப்புக்குக் கொடுப்பதாக மெண் டோசாவுக் கெழுதிய கடிதமொன்றை மே மாதத்திலே வால்சிங்கும் இடைமறித்தார். இது தொடக்கமாக மற்றுமொரு சதி நடைபெற்றுக் கொண்டிருந்தது. பாமாவிடத்திலே சேவை செய்த சவிச்சு என்ற ஆங்கிலேயன், இலிசபெத்தைக் கொலை செய்வதாகச் சத்தியஞ் செய் தான். அப்போது பிரான்சிலே தூதமைச்சனுயிருந்த மெண்டோசா செசிலை யும் வால்சிங்கமையும் சேர்த்துக் கொலை செய்துவிட்டால் நல்லதென யோசனை கூறினுன். இச்சதிக்குக் காலாயிருந்தவன் அந்தோனி பபிந் தன் என்ற ஆங்கிலக் கத்தோலிக்கன். இவன் இலிசபெத்தின் அரச சபையினுள்ளவன். வேறும் ஐந்து கொலைகாரரைச் சேர்த்து சவிச்சுக் குத் துணையாக்கினுன். வால்சிங்கமின் பிரதம உளவாளி இந்த இரக சியத்தை அறிந்து கொண்டான். மேரிக்கும் சதிகாரருக்கும் நடந்த கடிதங்களைக் கைப்பற்றினுன். அவற்றில் சங்கேதமுறையிலெழுதப்பட்ட செய்திகளையறிந்து, பிரதி பண்ணி வால்சிங்கமுக்கு அனுப்பினுன். எனவே சதி வால்சிங்கமறியக் கூடியதாகவே நடந்தது. மேரி இதற்கு உடந் தையாயிருந்தாளென்பதை நிச்சயப்படுத்தவே இவ்வாறு செய்யப்பட்டது. அது நிறுவப்பட்டதும் மேரி, ஒருவகையிலும் தப்பிக்கொள்ள இயலாது. கடைசியாக யூலை மாதத்தில் அவள் பின்வருமாறு எழுதினுள் :—" இவ் வாறு விடயங்கள் தயாரானமையால், **அந்த ஆறுகனவான்களையும் வேலியி லீடுபடுத்தத் தருணம் வாய்த்துவிட்டது.**" இவ்வளவும் போதிய சான்று யிற்று. மேரியின் கடிதங்களைக் கைப்பற்றினர். பொதறிங்கேயில் விசா ரணைக் குழு கூடி அவளை விசாரித்தது.

மேரி கொலைசெய்யப்படல் (1587)

அவளைக் குற்றவாளியெனக் கண்டதும், பாராளுமன்றம் அவளை உடனே சிரச்சேதஞ் செய்யுமாறு விண்ணப்பித்தது. இலிசபெது தயங்கி னுள். மேரியைத் தூக்கிட்டால் அரசியற் கோலமே முற்றுய் மாறிவிடும். அதனுற் புதிய பல ஆபத்துக்களுண்டாகும். ஆனுல் பாராளுமன்றமும் கோமறைக்கழகமும் மேரியைச் சிரச்சேதஞ் செய்யவேண்டுமெனத் தீர் மானமாயிருந்தன. கோமறைக்கழகம் அவளைச் சிரச்சேதஞ் செய்வ தற்கான உத்தரவைப் பொதறிங்கேக்கு அனுப்பிற்று. 1587 ஆம் ஆண்டு பெப்புருவரியிலே அவள் தலை வெட்டப்பட்டது.

எவனின் சார்பாகச் சதிகள் செய்யப்பட்டனவோ அந்தத் தூர்ப்பாக்கிய வதியும் இறக்கவே சதிக்காலமும் முடிந்தது. சிபெயின் இனி ஏதா வது செய்வதானுல் இங்கிலாந்தின்மீது படையெடுத்தேயாகவேண்டும். இர கசியமாகவும், சதிகாரர் மூலமும் மறைந்து நின்று போர்புரிந்த எதிரி இனிப் பகிரங்கமாக வரவேண்டியதாயிற்று.

5. ஆமடா

துணிகரச் செயல் செய்வோர் ; மேற்கே செல்ல வியாபாரப் பாதைகாணல் ; பக்கானியர் ; ஒக்கின்சும் அடிமைவியாபாரமும் ; திரேக்கு

ஏழாம் என்றி காலந்தொட்டே ஆங்கிலக் கடலோடிகள் புதுமை காணும் வேகத்தினுலுந்தப்பட்டு அலைகடற் பெருவெள்ளத்திற் பிரயாணஞ் செய் தனர். விசேடமாக மேற்குக் கரையடுத்த பிளிமது, பைட்டுபோட்டு, பிறி த்தல் ஆகிய துறைகளிலிருந்தே புறப்பட்டனர். புதிய தேசங்களைக் கண்டு பிடிப்பதும் பொன்னைத் தேடுவதும், வியாபாரஞ் செய்வதும், கொள்ளை யடிப்பதுமே இவர்களுடைய நோக்கமாயிருந்தது. **சான்செலர்** என்பவன் ஆக்கேஞ்சலுக்குப் போனுன். **விலபி** என்பவன் 1554 இல் வடகிழக்கு வாயிலுக்குச் சென்று மாணவாயிலே யடைந்தான். **புறேபிசர்** என்ப வன் இலபிறதோருக்குப் போனுன் ; **தேவிசு** வடமேற்குத் துருவத்தை நோக்கிப் புறப்பட்டான். கீழ்த்திசை நாடுகளுக்குச் செல்ல ஒரு வழியைக் காண்பதற்காகவே இவ்வடதிசை யாத்திரைகளெல்லாம் நடைபெற்றன. நன்னம்பிக்கை முனையைச் சுற்றியும், ஒணைக்கடந்தும் செல்லும் பாதைக ளெல்லாம் வேறு தேசத்தவராலே கைப்பற்றப்பட்டன. அவை சிபானியராலும் போத்துக்கேயராலும் பற்றப்பட்டன. வடபகுதி இடர் நிறை ந்ததாகவும், போயடைதற்கு முடியாததாகவுமிருந்தது. குளிர் நிறை ந்த அகலக்கோட்டுப் பிரதேசங்களிலே தமது துணிகளை விற்றுப் பொருள் சம்பாதிக்கலாமென ஆங்கிலேயர் எண்ணினர். ஆனுல் அங்கே மக்கள் குடியிருக்கவில்லை. எனவே அவர்கள் வெப்பமுள்ள அகலக்கோட்டுப் பிர தேசங்களையும் விசேடமாக சிபானியக் கடல் சார்ந்த நாடுகளையும் நாடி

னர். ஆங்கிலக் கப்பல்கள் தனது கடலில் வருவதைச் சிபெயின் விரும்ப வில்லை. ஆங்கிலக் கப்பல்கள் கள்ளச்சரக்கு ஏற்றுவனவென்றும், காலாகாலத்திலே கொள்ளைச் சரக்கையும் விற்பனவென்றும் ஐயப்பட் டார்கள். "கோட்டெல்லேலக்கு அப்பால் சமாதானமில்லை"[1] என்ற நியதி ஏற்பட்டது. சிபானியக் கடலிலே இங்கிலாந்துக்கும் சிபெயினுக்கும் சண்டை நடந்தபோதிலும் ஐரோப்பாவில் சிபெயின் மிகமுயன்று இங்கிலாந் துடன் ஒருவாறு சமாதானத்தை நிலைநாட்டி வந்தது. எத்தனையோ வகையில் இங்கிலாந்து ஆத்திரமூட்டியும் அவற்றையெல்லாம் அதிசயிக் கத்தக்க முறையிலே தாங்கிக்கொண்டது. 1568 இலே சான்யுவானில் **சேர் யோன் ஒக்கின்சுடைய** கப்பற் கூட்டத்தைத் துரோகமான முறை யில் சிபெயின் தாக்கியதென ஒருவகையிற் கூறலாம். ஆனால் ஒக்கின் சுக்கு அங்கே அலுவலில்லை. தான் ஏற்றிச் சென்ற அடிமைகளை அங்கே வல்லடி வழக்காக விற்றுவிட அவன் பார்த்தான். இச்சண்டையிலே அவன் நாலுகப்பலை இழந்தான். இவற்றிலொன்று அரசிக்குச் சொந்த மானது. இத்துடன் 100,000 பவுண் பெறுமதியான பொருளையுமிழந் தான். அவனும் அவனுடைய தோழனை **பிரான்சிசு திரேக்கும்** உயி ரோடு தப்பிப் பிழைத்துக் கோபத்துடனும், பழிவாங்கும் சித்தத்துட னும் வீடுதிரும்பினர். 1572 இல் திரேக்கு நொம்பத்தியோவைத் தாக்கி வெள்ளியேற்றி வந்த வணிகச்சாத்தைப் பிடித்தான். முதன் முதல் பசிபிக்குப் பிரதேசத்தை அப்பொழுதே அவன் கண்டான். 1577 இல் **கோல்டின் ஐண்டு** என்ற பெரிய கப்பலுட்பட ஐந்து கப்பலோடு மக லன் நீரிணைக்கூடாகச் சென்று, பசிபிக்குக் கரையிலுள்ள பாதுகாப்பற்ற சிபானிய நகரங்களைக் கொள்ளையடித்துவிட்டு, சாவகத்துக்குச் சென்று உலகைச் சுற்றி வீடுதிரும்பினன். இம்முறை 8,00,000 பெறுமதியான திரவியத்தைக் கொண்டுவந்தான். இவ்வீரச்செயலை முன்னிட்டு இலிசபெது இடெற்றுபோட்டிலே **கோல்டின் ஐண்டுக்** கப்பலில் வைத்து அவனுக்கு நைற்றுப் பட்டம் வழங்கினள். 8,00,000 பவுணை அரசாங்கத்துக்கு வழங் கியதற்கு அவனுக்கு அப்பட்டம் ஏற்புடையதே. சிபெயின் இந்த அநீ தியை எடுத்துக்காட்டிச் சினந்து ஆட்சேபித்தபோதிலும் போர் மூழ வில்லை. சிபானிய கப்பல்கள் மீது இங்கிலாந்தும் ஆங்கிலக் கப்பல்கள் மீது சிபெயினுந்தலட விதித்தன. சிபானிய மேற் இந்தியத் தீவுகளிற் கொள்ளையடிக்குமாறு இலிசபெது திரேக்கை மறு படியும் அனுப்பினள். இம்முறையும் இரண்டேயிரண்டு அரசகப்பல்களே சென்றன. மற்றவர்கள் கூட்டுக் கொள்ளையிடச் சென்றனர். இலண்ட னிலுள்ள சில வியாபாரக் கப்பல்களும், மேற்கு ஐரோப்பிய நாட்டுக் கப்பல்களும் சில சொந்தக் கப்பல்களுமாகச் சேர்ந்து 30 கப்பல்கள்

[1]ஆரும் அலச்சாந்தர் என்ற போப்பாண்டவர் ஒரு எல்லைக்கோட்டை வகுத்திருந்தார். அசோசுக்கு 300 மைல் மேற்கே போத்துக்கல்லின் குடியேற்ற நாடுகளையும் (மொக்கில்) இசுப்பானியக் குடியேற்றங்களையும் (மேற்கு) இக்கோடு பிரித்தது.

இதில் ஈடுபட்டன. இக்கப்பற் கூட்டம் சிபானிய தீவுகளைக் கொள்ளை யடித்தது. வேட்டுமுனையிலுள்ள சந்தியாகோவைச் சூறையாடியது. தொமி ங்கோ, காதசீனு ஆகிய இடங்களைக் கொள்ளையடித்து, எரித்து, மக்க ளைச் சிறைபிடித்து விடுதலை செய்ய நட்டஈடு பெற்றுப் பலவகையின் னல் விளைத்தபின், நட்டமின்றி இனிது வீடுதிரும்பியது. இதில் இலாபம் அதிகமில்லை[1]. ஆனால் உண்டாக்கிய நட்டம் அதிகம். **(குறிப்பு 57).**

மேரியின் மரணத்தின் விளைவு, திரேக்கு கேடிசைத்தாக்குதல்

மேற்கிந்திய தீவுகளில் இக்கப்பற் கூட்டம் நடத்திய கொள்ளையறிந்த பிலிப்பு கடைசியாக ஒரு தீர்மானத்துக்கு வந்தான். இங்கிலாந்தின்மீது படையெடுப்பது இலகுவென்று நெதலந்திலுள்ள பிலிப்பின் தளகர்த்தர் கள் கூறினர். பெரிய கப்பற் கூட்டத்தை சிபெயின் சேர்க்கக்கூடியதா யிருந்தது. 1587 இல் மேரி இறந்தபோது இங்கிலாந்து மீது படையெடுத் தலாற் பிலிப்புக்கே நன்மையுண்டென்பது தெளிவாயிற்று. மேரி தனது மரணசாதனத்தின்படி தனது இராச்சியத்தையும் ஆங்கில அரசுக்குரிய உரிமையையும், பிலிப்புக்கு "வழங்கியிருந்தாள்". பிலிப்பு ஆங்கில அர சுக்குத் தானே உரிமையுள்ளவனென்று எண்ணினான். இதுவரை மட்ட மாகவிருந்த யுத்த ஆயத்தங்கள் இப்பொழுது உற்சாகமாக நடைபெற்றன. 1587 இலே சிபானியக் கடற்படை (ஆமடா) புறப்பட்டிருக்கும். ஆனால் திரேக்கு கேடிசுத்துறையிற் பிரவேசித்து அங்கு நின்ற கப்பல்களைத் தாக்கி விட்டு ("இசுப்பானிய மன்னனின் தாடியைப் பொசுக்கி" விட்டு) வந் தான். அதனால் நடவடிக்கை ஒரு வருடம் பின்போடப்பட்டது. 37 கப் பல்களையும் தளவாடங்களையும் திரேக்கு அழித்தான். இலிசுபன் நக ரைப் பயமுறுத்தினன். பின்னர் ஆறுவாரமாக சென் வின்செண்டு முனை யைச் சுற்றி ஒடி, சிபானியக் கரையில் நின்ற கப்பல்களைப் புறப்படா மற் செய்தான். இத்தீரச் செயல் பயங்கரமான "எல் திரேக்கு" மீது சிபானியருக்கிருந்த அச்சத்தை வளர்த்தது. மேலும் அவனுடைய விரகு எவ்வளவு சிறப்புடையதென்பதையும் எடுத்துக் காட்டிற்று. 1588 இல் மறுபடியும் தனது தீரத்தைக் காட்ட அனுமதி கொடுக்குமாறு திரேக்கு இலிசபெது இராணிக்கு மனுச்செய்தான். அவன் அதற்கு இண ங்கவில்லை. சிபானியக் கடற்படை அவன் கண்ணுக்குத் தென்படாமல் ஆங்கிலக் கால்வாயை அடைந்தால், அதைப் பாதுகாக்கத் திரேக்கு நிற்கமாட்டான் என்றஞ்சினள்.

ஆமடா (இசுப்பானியக்கடற்படை) (1588)

பரசமயத்தலருக் கெதிராகச் செய்யப்பட்ட பெருமுயற்சியான சிபானிய ஆமடாவைப் போப்பாண்டவரும், குருமாரும் ஆசீர்வதித்தனுப்பினர். விலி

[1]50,000 பவுண்வரையில்

லிய வேதசங்கீர்த்தனங்களிலிருந்து எடுக்கப்பட்ட "ஆண்டவன் எழுந்து உமது நோக்கத்தை நிறைவேற்றுவராக" என்ற நெறிக்கோளு டன் சிபானிய ஆமடா 1588 ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் தேதி இலிசுபனிலிருந்து 130 கப்பலோடும் 8,000 மாலுமிகளோடும் 19,000 போர்வீரருடனும் புறப்பட்டது. இத்தனைப் பெரிய கப்பற்படை அது.

பாமாவின் சைனியத்தை ஏற்றிச் செல்லும் சாதனம்

அது "சண்டைக்கப்பற் படையாக" அனுப்பப்படவில்லை; இங்கிலாந்தின் மீது படையெடுப்பதற்குக் காத்திருந்த சேனையை ஏற்றிச் செல்லும் போக்கு வரத்துச் சாதனமாகவே அமைக்கப்பட்ட தென்பது குறிப்பிடத்தக்கது. இக்கப்பற் கூட்டம் ஆங்கிலக் கால்வாய்க்குச் சென்று அங்கே ஆங்கிலக் கடற்படையைத் தேடிப் போருக்குப் போகாமல், மாகேற்றைப் பிடித்துக் கொண்டு பாமாவைச் சந்தித்து அங்கே அவனுல் நிரட்டப்பட்ட சிறந்த 30,000 சிபானியப் படைகளை ஏற்றிக்கொண்டு இங்கிலாந்துக் கரைக்குச் செல்வதெனத் திட்டமிடப்பட்டது. காலநிலை சரியில்லாதபடியால் சிபானிய ஆமடா 19 நாட் பிரயாணஞ் செய்து கொறணுவையடைந்தது. அங்கே தங்கிக் கப்பல்களைப் பழுதுபார்ப்பதிலும், ஒசிவுபொசிவுகளைப் பழுது பார்ப்பதிலும் சிபானிய வியாபாரிகள் வழங்கிய பொருள்களில் அழு கிப்போனவற்றை வீசிவிட்டுப் புதுப்பொருள்களைச் சேகரிப்பதிலும் சில பக லைக் கழித்தது. யூலைமாதம் 12 ஆம் தேதி ஆமடா புறப்பட்டது. காலநிலை ஒரளவு சரியாயிருந்தபடியால் யூலைமாதம் 19 ஆம் தேதி இலிசாட்டையடுத்துத் தோன்றிற்று. கால்வாய்க்கப்பற்படை எபிங்கம் அலே ட்டுப் பிரபுவின் தலைமையில் அப்பொழுதுதான் பிலிமத்துத்துறைக்கு, தேவை யான பொருள்களை யேற்றச் சென்றது. அப்படையிலே திரேக்கு, ஒக் கின்சு, புறேபிசர், பென்னர், இரேமண்டு என்பவர் இருந்தனர். காற்று அனுகூலமாயில்லாதபடியாற் கப்பல்கள் அங்கே தங்கின. பின்னர் கப்பல் களைச் சவுண்டுக்கடலுக்குக் கயிறு போட்டிழுத்து வாங்கிக் கடலில் ஓட விட்டனர். சிபானியக் கப்பல்கள் அதற்கிடையில் தெற்கு நோக்கிச் சென்றுவிட்டன. எவ்வளவு மெதுவாக நகர்ந்தபோதிலும் அவை கால் வாயிற் பிரவேசித்துவிட்டன. இனிப் பாதை தெளிவாயிருந்தது. முன் னுல் செய்மூரும் விந்தரும் நடத்திய சிறிய ஆங்கிலக் கப்பற் படை யொன்று குறுகிய கடலிலே பாமாவுக்குக் காவலாய்க் கிடந்து இடச்சுக்கார ருக்குத் துணைபுரிந்தது.

கணக்குப் பார்த்தால் ஆங்கிலேயரிடம் அதிக கப்பல்கள் காணப்பட்டன. அவர்களுக்கு 197 கப்பலிருந்தன. அவற்றில் 49 கப்பல்களே 200 தொன் னுக்கு அதிகமானவை. சிபானியரிடம் ஏறக்குறைய இரண்டு மடங்கு அதிகதொன் நிறையுள்ள கப்பல்களிருந்தன. ஆட்பலத்திலும் அவர் களிடம் இரண்டுமடங்கு அதிகமானவர்களிருந்தனர். அவர்களிற் பெரும்

பகுதியினர் போர்வீரரேயன்றிக் கப்பற் படைவீரரல்லர். ஆட்பலங்கொண்டு இந்தச் சண்டையை நிச்சயிக்க முடியாது. சிபானியர் தமது படை முழுவதையுமொன்று கூட்டினுல் அது நிருவகிக்க முடியாத படையா யிருந்திருக்கும். ஆனுல் அவர்கள் அவ்வாறு செய்வார்களோ என்பது பின்னுலறியவேண்டிய விடயமாயிருந்தது.

இரண்டு கடற்படைகளையும் ஒப்பிடுதல்

ஆனுல் இவ்விரு தரத்துக் "கப்பற்படை" களுக்கும் அதிக வேற்று மை இருந்தது. இன்று இவ்விடயம் தெளிவாய்த் தெரிந்தபோதிலும் அன்று அது அவ்வளவு வெளிப்படையாகக் காணப்படவில்லை. சிபானியக் கப்பல்கள் பழைய போக்கையுடையன. இங்கிலாந்தின் கப்பல்கள் வருங்காலத்துக்கேற்ற வகையிலமைந்தன. மத்தியதரைக் கடலில், சாந் தமான கடற்பரப்பிலே பெரும்பானுஞ் சண்டை பயின்ற சிபானியக் கப்பல்கள் கடற்கோட்டைபோல விருந்தன. மானுமிகளானும், சிலசமயம், தண்டு வலிக்கும் அடிமைகளானும் செலுத்தப்பட்ட இவை சண்டையிடு வதற்கு, நன்கு பயிற்சி பெற்ற போர்வீரரிலேயே தங்கியிருந்தன. பெரிய உருப்படிகளானுலும் அவற்றில் அதிக துப்பாக்கிகளோ வெடிமருந்துகளோ ஏற்றிச் செல்லப்படுவதில்லை. படைகளை நிறுத்துந் தந்திரமோ, கடலோ டும் சாமர்த்தியமோ குறிபார்த்துச் சுடும் நிறமையோ எல்லாம் இரண்டாந் தரவேலைகள். முதல் நோக்கம் எதிரியின் கப்பலை யணுகி அதற்குட் குதித்து, வாளும் முக்காலித் துப்பாக்கியுங் கொண்டு சண்டை செய்வதே. இலெப்பாந்தோ கடற்சண்டையில் துருக்கியரை இவ்வாறே சிபானியர் முறியடித்தனர். சிபானிய கப்பற்படை, கடலிலியங்கும் தரைப்படையே. ஆனுல் ஆங்கிலக்கடற்படை வீரர், முரட்டுக் கடல்களிற் பயிற்சிபெற்றவர்கள். கடலில் நன்கு நிர்வகிக்கக்கூடிய கப்பல்களையுடையவர். அவை சிறிதாக வும், வலியனவாகவும், திடமானவையாகவும், விரைந்து செல்லக்கூடி யனவாகவும், குறுகிய இலக்குப் பிரதேசமுடையனவாகவும், ஒப்பியல் வகையில் அதிக துப்பாக்கிகளையுடையனவாயும், தூரத்தில் நின்றே சண்டை செய்யுந் தகைமையுடையனவாகவு மிருந்தன. பதினுறும் நூற்றுண்டிலே போங்கிகளை உயர்த்தவோ தாழ்த்தவோ முடியாதிருந்தது. இலக்குப் பார்த்துச் சுடுவது சுககாண்பிடிப்பதிலும் கப்பலை ஒட்டும் சாமர்த்தியத்திலுமே அதிகம் தங்கியிருந்தது. காற்றடித்தால் சிபானியக் கப்பல்கள் சரி யாக அடங்கிச் செல்லாமல், காற்றின் முன்னர் குடைசாய்ந்து பக்கங்களை மேல்நோக்கிக் இளப்பிக்கொண்டு செல்லும். காற்றெதிர்ப்பக்கத்திலுள்ள பீரங்கிகள் வெறுங் கடலிற் குண்டு தீரும். ஆங்கிலக் கப்பல்களோ சம நிலையான அடித்தளமுடையன. நிச்சயமான தொழில் செய்ய வாய்ப்பு டையன. நீர் மட்டத்துக்குக் கீழேயுள்ள சிபானியக் கப்பல்களின் பாதுகாப்பற்ற பக்கங்களைப் பெரும்பானும் தொருக்கித் தள்ளக்கூடியன. சிபானியக் கப்பல்களின் தொகையும், பருமனுங் கூடப் பார்வைக்குத்

தெரிந்த அளவு பிரமாண்டமானவையன்று. அவர்கள் ஒட்டிய 130 கப்பல்களில் 50 மாத்திரமே திறமையுள்ள சண்டைக்கப்பல்கள். மற்றவை சரக்குக் கப்பல்களும் படையேற்றுங் கப்பல்களுமே. கப்பலிற் குதித்துச் சண்டை செய்ய ஏற்றனவேயன்றி வேறு வகையில் உதவாதவை. சிபானியப் பெருங் கப்பல்கள் நிறையில் ஆங்கிலக் கப்பல்களிலும் சுமார் மூன்றிலிருபங்கே அதிகமாயிருந்தன. சிபானியத் தளகர்த்தனான மெடினு-சிடோனியா தரைப்படைவீரன். கடற்படையைக் கொண்டு நடத்தத் தகுதியற்றவன். தன்னைக் கப்பற்றளபதியாக்கவேண்டாமென அவன் பிலிப்புக்குப் பல சிறந்த காரணங்களை எடுத்துக் காட்டியிருந்தான்.[1] காற்று ஆங்கிலேயருக்கு அனுகூலமாயிருந்தபடியால் கால்வாயிலே ஆமடாவைப் பின்தொடர்ந்து அவர்கள் செல்லக்கூடியதாயிற்று. விரும்பிய படி அவர்கள் யுத்தத்தைச் செய்யவும் நிறுத்தவுங் கூடியதாயிருந்தது. சண்டையிற் சேதமுற்றுப் பின்தங்கும் சிபானியக் கப்பல் ஒவ்வொன்றையும் ஆங்கிலர் கைப்பற்றக்கூடியதாயிருந்தது.

கால்வாயில் மேற்செல்லச் செல்லத் தான் இது தெளிவாயது. இதுவரை இத்திட்டம் செயல்முறையில் வரவில்லை. ஆமடா கால்வாயிலிருக்கிறதென்பது மாத்திரமே இதுவரையறியக்கூடியதாயிருந்தது. கலங்கரை விளக்குக்கள் ஆங்காங்கு கொழுத்தப்பட்டன. சேனை திரண்டது. இலண்டனில் 70,000 வீரர் அணிவகுத்தனர். தில்பெரியில் இலிசபெது இராணி அவ்வணிவகுப்பைப் பார்வையிட்டாள்.

தில்பெரியில் இலிசபெது

ஆமடாவின் நோக்கம் பாமாவின் சேனையைக் கொண்டுவந்திறக்குவதே யென்பதை ஆங்கிலேயர் நன்கு அறிந்திருந்தனர். இதற்கு அவர்கள் தேவையான ஆயத்தங்களைச் செய்தனர். சேனைக்கு ஊக்கமளிக்க இலிசபெத்து தானுகவே சென்றாள். அவள் அன்று நிகழ்த்திய பேச்சுப் பிரசித்திபெற்றது. அவளுடைய குணவியல்பையும், மக்கள் அவளிடத்து வைத்த அதிராத நம்பிக்கையையும் அது சுருக்கமாக விளக்கிக் காட்டுகிறது. "இந்நேரம் உங்கள் முன்னிலையில், இந்த யுத்த நெருக்கடியில், உங்களோடு ஒருத்தியாக இருந்து வாழ்வதானுல் வாழவும் இறப்பதானுல் இறக்கவும் முடிவுசெய்து கொண்டு வந்திருக்கிறேன். எனது ஆண்டவனுக்காகவும் என்னிராச்சியத்துக்காகவும் என் மக்களுக்காகவும் எனது கௌரவத்தையும் குருதியையும் மண்ணிலே கூட வீசிவிடத் தயாராக வந்திருக்கிறேன். பெண்ணுருத்தரித்த இந்த உடல் பலமற்றது, உறுதியில்லாதது. ஆனுல் என்னுள்ளம் அரசகுணம் படைத்தது. பாமாவோ,

[1] அவன் காட்டிய காரணங்களுள் தகுதிகுறைந்ததும் கடைசியாகக் குறிக்கப்பட்டதும் எதுவெனில் கடலிற் சென்றுல் தனக்குச் சுகக் குறைவுண்டாகு மென்பதே. ஆனுல் நெல்சனும் அத்தகைய நோயுள்ள ஒருவனே.



ஆமெடா சென்ற பாதை.

சிபெயினே வேறெந்த அரசகுமாரனே எனது மண்டில எல்லையிற் கால்வைக்கத் துணிந்தால் அது ஈனர்கள் செய்யும் எனைச்செய்கை யென்றே நினைக்கிறேன்".

கால்வாயில் ஆமடா

இதற்குப் பின் உள்ளத்துடிப்புடன் ஒருவாரமாக இங்கிலாந்து காத்திருந்தது. ஆமடா மெதுவாக ஆடி ஆடிக் கால்வாயையடைந்து மேலே சென்றது. 21 ஆம் தேதி சண்டைநடந்தது. 23 ஆம் தேதி சென் அல் பன்சு முனையை யடுத்தும், 25 ஆம் தேதி சென்கதரினையடுத்தும் யுத்தம் நடந்தது. ஆமடா சில கப்பல்களையிழந்தது, ஆனால் முறியவில்லை. 27 ஆம் தேதி கலேத்துறையில் நங்கூரம் பாய்ச்சி, பாமாவின் சேனையை ஏற்ற ஆயத்தமாயிருந்தது.

முதற்பெரிய அடி இங்கே விடைத்தது. பாமா ஆயத்தமாயிருக்கவில்லை. இடச்சுக்காரர் அவனை முற்றுகையிட்டு நிறுத்திவைத்தனர். கடலிலுள்ள ஆங்கிலேயரையும் இடச்சுக்காரரையும் கலேத்துலிடுமாறு பாமா மெடினு சிடோனியாவுக்கு எழுதினன். அதைச் செய்துவிட்டால் மற்றவையெல் லாஞ் சரியாகுமெனவுங் குறிப்பிட்டான்.

கலேயில் தீக்கொழுவுங் கப்பல்கள், புயல்

மெடினுசிடோனியாவும் அவனுடைய படைத்தலைவர்களும், பாமாவின் எமாற்றத்துக்கிடமான இந்தப் பதிலைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டி ருக்க, தீமூட்டும் எட்டுக்கப்பல்கள் அலையோடு அலைந்துகொண்டு கலேத் துறைக்குச் செல்லும்பாதைகளில் வந்தன. திகிலடைந்த சிபானியர் நங்கூரவடங்களை வெட்டிவிட்டுக் கிழக்கு நோக்கிச் சிதறினர். பெயரளவில் இச்சண்டையிலீடுபட்ட சிபானியக் கப்பல்களில் 15 கப்பலே அடுத்தநா ளாகிய யூலை 29 ஆம் தேதி சமீபத்தில் வந்து சேரக்கூடியதாயிருந்தன. இவை மெடினுசிடோனியாவைச் சுற்றி நின்றவை. ஆனால் ஆங்கிலே யரிடமிருந்த வெடிமருந்து அளவுகூட அவர்களிடமில்லை. சண்டையிற் பங்கு பற்றிய ஒரு சிபானிய வீரன் கூறியதுபோல, "அவர்கள் பெரிய பீரங்கிகளின் துணையோடு சண்டையிட்டனர். நாங்கள் முக்காலித் துப்பாக்கி களையும் துப்பாக்கிகளையுங் கொண்டு எம்மைப் பாதுகாத்துக்கொண்டோம்." சில கைப்பற்றப்பட்டன. சில கப்பல்கள் கடலில் ஆழ்த்தப்பட்டன. சில தரைதட்டின. காற்றுத் தெற்குநோக்கி வீசாவிட்டால் மற்றக் கப்பல் களும் அதே கதிக்குட்பட்டிருக்கும். "பலமுள்ளதும், அதிசயிக்கத்தக்கது மானது" எனத் திரேக்கினுற் புகழப்பட்ட ஆமடா மாலேவரையில், "சிறிது சிறிதாகச் சிறகொடிக்கப்பட்டது போல" முறியடிக்கப்பட்டதாய் வடக்கே விரைந்து சென்றது. புயலும், கொத்துலாந்துப் பாறைகளும், அயலந்துப் பாறைகளும் எஞ்சியிருந்த வேலையை முடித்தன. அத்திலாந்திக்குச் சமுத்

திரத்திலே வெகுதூரத்திலே[1] அவை செல்லும்பொழுதும், காற்றடங் கிய பக்கத்துக்கு இழுக்கப்பட்டு மல், சயந்து கோசுவே, தொனீகல், ஸ்கில் என்ற இடங்களில் அவற்றுக்குச் சேதமுண்டாயிற்று. சிலிகோ குடா வில் 12 கப்பல்கள் அகப்பட்டன. கரையடைந்த சில கப்பல்களே மேற்கி ருள்ள முரட்டு அயலந்து வாசிகள் தாட்சணியமின்றி நடத்தினர். 53 கப்பல்களே சிபெயினைச் சென்றடைந்தன. புயலில் அடிபட்டு வீடு திரும்பிய போர்வீரரைப் பார்த்துப் பிலிப்பு மன்னன் மிகுந்த தாராள மனோபாவத்துடன் "நான் மக்களோடு சண்டையிடவே உங்களையனுப்பி னேன். பஞ்ச பூதங்களோடு சண்டையிட அனுப்படவில்லையென்று" ஆறுதல் கூறினன். இலிசபெத்தும் பயபக்தியோடு அந்தவிதமான அபிப் பிராயத்தையே தெரிவித்தாள். ஆமடாப் பதக்கத்திலே (**அபிலாவிற்று தெயுசு**) "கடவுள் காற்றையெழுப்பி அவற்றைக் கலைத்துவிட்டார்" என்று பொறிப்பித்தாள். ஆனால் உண்மையதுவன்று. கலேத்துறையில் ஏற்பட்ட நிலைக்கு முன்னர் ஆமடா அனுகூலமான நிலையிலிருந்தது. இருந் தும் அது தோல்வியுற்றது. அத்தோல்வி யெத்தனை பூரணமான தென் பதைச் சில புள்ளிவிபரங்களைக் கொண்டறியலாம். முதலாம் யுத்தத்திலே இரண்டு ஆங்கிலேயரே இறந்தனர். "எங்கள் படையில் இறந்த வீரரிலும் பார்க்க அதிகதொகையான கப்பல்களைச் சிபானியர் இழந்தனர்". கடற் சண்டையிலே சிபானிய கப்பற்படைக்கு உண்டான எதிர்ப்பு அதன் சத்திக்கு அப்பாற்பட்டதாயிருந்தது. கால்வாயில் அதுபோன வழியாகத் திரும்புவதற்கு ஆங்கிலக் கப்பற் படை பெருந்தடையாயிற்று. எனவே வெளியேறுவதற்கு ஒரேயொரு வழியே யிருந்தது. அதுவே வடதிசை. ஆனால் அவ்வழி அழிவுக்கேதுவானதென்பதில் ஐயமில்லை.

சுமார் 40 வருடமாக இங்கிலாந்தை மூடிவந்த பெருமேகம், ஒருவார மாக நெருக்கடியையுண்டுபண்ணிவிட்டுக் கலைந்துசென்றது. (குறிப்பு 55.)

6. இலிசபெத்தும் பாராளுமன்றமும் :
சமூக நலத்துக்கான நடவடிக்கைகள் :
இலிசபெத்தும் எசெக்சும்

போர் முடிவு, கேடிசுமீது இரண்டாம் தாக்குதல் (1596)

ஆமடாயுத்தத்தின்பின் இப்பேரரசியின் வாழ்க்கையில் மேலும், ஏறக் குறைய 15 வருடங்களே எஞ்சியிருந்தன. இப்பதினைந்து வருடமும் கீர்த்தி மிகுந்த ஆட்சிக்காலமாகும். ஒருவகையிற் பார்க்குமிடத்து ஆட்சி 1588

[1]வடக்குக் கொத்துலாந்திலிருந்து மேற்கே 400 மைலுக்கு அப்பால்.

உடன் முடிவடைந்ததெனலாம். சம்பவங்கள் உச்சநிலையடைந்து, வெற்றி கிட்டி. அரசியின் பூட்கையும் அமைச்சரின் நோக்கங்களும் அக்காலத்திலே வெற்றிகரமாக நிறைவேறின. சிறிதுகாலமாக சிபெயினுடன் சண்டை தொடர்ந்து நடந்தது. 1589 இல் போர்த்துக்கல்லுக்கெதிராகத் திரேக்கு ஒரு தாக்குதலே நடத்தினான். 1590 இல் சேர் இரிச்சாட்டு ஹெண்வில் அற்புதமான ஒரு சண்டையை நடத்தினான். "ஒன்றொடு ஐம்பத்து மூவர்" சண்டையில், "தீவகப் பாறைத் தெண்கடலுள் **இரிவெஞ்ச** நாவகம் மீமா நெறியடைந்ததெனினும்," இங்கிலாந்துக் கொடி காற்றிலே பறக்கும்வரை அதன் நிலையும் அத்தளபதி நிலையும் நிலைநிற்கும். 1594 இலே திரேக்கும் ஒக்கின்சும் மேற்கிந்திய தீவுக்குக் கடைசிப் பயணம் செய்தனர். வழியில் இருவரும் இறந்தனர். அதனால் அந்த யாத்திரை பயனளிக்கவில்லை. இரண்டு வருடங்களுக்குப் பின்னர் அலேட்டும், இராலியும், எசெட்சும் கேடிசுத் துறையைத் தாக்கி அங்கே நங்கூரம் பாய்ச்சி நின்ற சிபானியக் கப்பல்களை அழித்தனர். இந்தியத்தீவுகளிலிருந்து திரும்பும் ஒவ்வொரு சிபானியக் கப்பலையும் அத்திலாந்திக்கைக் கடக்கும் ஒவ்வொரு கப்பலையும் நெதலந்துக்குச் செல்லும் தூணைப்படைகளையும் ஆங்கிலக் கொள்ளைக்காரர் தப்பவிட்டதில்லை. அவற்றில் தப்பிச் சென்றன மிகச் சிலவே. இது சிபெயினுக்குப் பெரிய கெடுதியை விளைத்து வந்தது. அத்தேசத்துச் செல்வமும் சத்தியும் இவ்வாறு வீண் விரயமாயின. புதிய உலகத்திலிருந்து வந்த வெள்ளி சூறையாடப்பட்டது. நெதலந்திலுள்ள வளம் மிக்க நாடுகளை அது இழந்தது. அழிவு தொடங்கிற்று. காலப்போக்கில் அது அதிகரித்தது. பிரான்சிலும் அதன் திட்டங்கள் தோல்வியுற்றன. மீசுக் குடும்பத்தவரதும், சிபானியக் கட்சியினதும் சூழ்ச்சிகளுக்கு எதிர் நின்று, இலிசபெத்தின் தூணையுடன் அங்கே இரு சனெற்று நவார் என்றி அரசுரிமையைப் பெற்றான். அரசைப் பெற்றதும் அவன், பிரான்சை முன்னேற்றப்பாதையிலிட்டுச் சென்றான். நெடுங்காலமாக ஐரோப்பாவிலே ஆதிக்கஞ் செலுத்திவந்த அபிசுபேக்கு வமிசத்தவரின் இடத்தைப் பிரான்சு நிரப்பக்கூடியதாயிருந்தது.

இலிசபெத்தும் பாராளுமன்றமும்

வெளிநாட்டாபத்து ஒழியவே இங்கிலாந்து புதியதொரு முன்னேற்றக் கட்டத்தையடைந்தது. தேசம் பாதுகாப்புடையதாய் விளங்கிற்று. எதிர்வரும் மாற்றத்தின் முதலறிகுறிகள் தென்பட்டன. இலிசபெத்தின் புகழ் பரவிற்று. குடிகள் அவளிடத்து அளப்பிலாத பக்தியுடையவராயிருந்தபடியால் அவள் தான் நினைத்தபடியே விடயங்களைப் பெரும்பாலும் செய்யக்கூடியதாயிருந்தது. இருந்தும் சுதுவட்டுமன்னர் காலத்திற் பெரிய தொல்லைக்கேதுவாயிருந்த மதம், பணம் என்ற இரு விடயங்களிலே பாராளுமன்றம் இலிசபெத்துக்கும் எதிர்ப்புக் காட்டிற்று

பியூரித்தானியர் ; "மாபிரிலேற்றுப் பிரசுரங்கள்"

வெளிநாடுகளிலே மிக முன்னேறி வந்த சில கருத்துக்களை இலிசபெத்தின் குடிகள் பலர் கைக்கொண்டனர். இவர்கள் "பியூரித்தானியர்" (அல்லது தூய்மையாளர்) என அழைக்கப்பட்டனர். இவர்கள் திருச்சபையிற் சீர்திருத்தங்கள் செய்து அதனை மாற்றி, அதைப் புரட்டசுத்தாந்திய மயமாக்க நினைத்தனர். இஃதொன்றையும் இலிசபெது விரும்பவில்லை. இவ்விடயங்களைப் பாராளுமன்றம் விவாதிக்க வேண்டியதில்லையெனத் தடைசெய்தாள். தூய்மையாளர்ச் சார்புள்ள குருமாரைத் தக்க முறையிற் றண்டிக்குமாறு கந்தபரி அதிமேற்றிராணியாருக்குக் கட்டளையிட்டாள்.

1583 இல் விற்றுகிற்று அதிமேற்றிராணியானார். அவரிடத்து அரசிக்குப் பூரண நம்பிக்கையிருந்தது[1]. மேலும் அவர் கட்டுப்பாடு, ஒழுங்கு என்பவற்றை நிலைநாட்டுவதில் நிபுணர். அச்சியந்திரசாலைகளுக்கு வாய்ப்பூட்டுப் போடப்பட்டது. இந்த அதிமேற்றிராணியாரின் அனுமதியையோ இலண்டன் விசுப்பாண்டவரின் அனுமதியையோ பெறுமல் எந்த நூலையும் அச்சேற்ற முடியாது. இருந்தும் "மாபிரிலேற்றுப் பிரசுரங்கள்" என்ற கண்டனப் பத்திரங்கள் இரகசியமாக அச்சடிக்கப்பட்டன. இவை விசுப்பாண்டவர்களைப் பற்றி எழுதப்பட்ட காரசாரமான கண்டனங்களாகும். இதன் ஆசிரியர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் தூணைசெய்த வேறுசிலர் கைதுசெய்து தூக்கிலிடப்பட்டனர். உயர் ஆணைக்குழுமன்று, திருச்சபைக் கெதிராகச் செய்யப்படும் குற்றங்களை விசாரித்துத் தண்டனை விதிக்கலாமென அதிகாரம் வழங்கப்பட்டது. எல்லையில்லாத அதிகாரங்களைப் பெற்ற இம்மன்று தூய்மையாளரின் கோட்பாடுகளைத் தீவிரமாக வைத்துக்குவோர்மீது நடவடிக்கையெடுத்தது. உரொபேட்டுப் பிரவுன் என்பவரைத் தலைவராகக் கொண்ட பிரவுன் வாதிகள் அக்காலத்துக்கு மிகத் தீவிரமெனக் கருதப்படுங்கொள்கைகளைக் கொண்டிருந்தனர். திருச்சபையிலிருந்துகூட விலகினர். அவர்கள்மீது நடவடிக்கையெடுக்கப்பட்டது. பெருந்தொகையினர் ஒல்லாந்தைப் புகலிடமாகக் கொண்டனர். அங்கிருந்துதான் அவர்கள் 1620 இல் **மேபிளவர்** என்ற கப்பலில் அமெரிக்காவுக்குத் தமது பிரசித்திபெற்ற யாத்திரையைத் தொடங்கினர்.

முழுவுரிமைகள் ; புதிய அமைச்சர்

பணவிடயமாகவும் இலிசபெது பாராளுமன்றத்துடன் பிணங்கினாள். சில பொருள்களை உற்பத்தி செய்வதற்கான முழுவுரிமையை அவள் பணம் பெற்றுக்கொண்டு சிலருக்கு வழங்கினாள். அப்பொருள்களை விற்று அவர்

[1] அரசி அவரை "எனது கன்னக் கறுவற் கணவன்" என்று கூறுவது வழக்கம். அவளுடைய அந்தரங்க இரகசியமெல்லாம் அவருக்கே தெரிந்திருந்தது. அவரே அவளின் பாபசங்கீர்த்தனத்தைக் கேட்டுவந்தார்.

கள் பொருள் சம்பாதித்தனர். இது சட்டவிரோதமான செயலென்றும், மூடி. இவ்வாறு பணஞ் சேர்க்கக்கூடாதென்றும் பாராளுமன்றம் ஆட் சேபித்தது. இலிசபெது கடைசியாக நிர்ப்பந்தத்தினால் இதை விட்டு விட நேர்ந்தது. அத்துடன் அத்தகைய உரிமைகளை இனி எவருக்கும் வழங்குவதில்லை யெனவும் வாக்குறுதியளித்தாள். (குறிப்பு 58). ஆம் டாச் சண்டையின் பின்னர், இலிசபெத்தின் பழைய அமைச்சரும் நெருக்க டியான காலத்தில் அவளுக்கு அருந்தொண்டாற்றியவர்களுமான இலெ சுற்றர், உவால்சிங்ஙம், அற்றன் என்போர் எல்லாரும் 1591 வரை யில் இறந்துவிட்டனர். பேலி 1598 வரை உயிரோடிருந்தார். இளம் அமைச்சருள் உரொபேட்டு செசில், தந்தையின் குணமான கவனமுடை மையைப் பெற்றிருந்தான் சேர் உவாற்றர் இராலியும், எசெட்சும் முரட்டுச் சுபாவமுடையவர்கள்.

அரசியின் ஆட்சிக்கால ஆரம்பத்திலும் முடிவிலும் வேலையில்லாப் பிரச் சினை சம்பந்தமாக இரண்டு முக்கியமான அலுவல்கள் நிறைவேற்றப் பட்டன.

தொழில்பயில்வோர் பற்றியநியதிச் சட்டம் (1563)

முதலில் தொழில்பயில்வோர் பற்றியநியதிச் சட்டமென ஒரு சட்டத்தைப் பிறப்பித்து மக்களுக்கு வேலையுதவவும், வேலையிலமர்ந்தவர்களுக்குச் சரி யான சம்பளம் உதவவும் வழிசெய்தாள். விவசாயம், கைத்தொழில், பணியாள்வேலை யென்பவற்றுக் கெல்லாம் ஏற்ற சம்பளவிதித்தை வகுக்க ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள நீதிபதிகள் கட்டளையிடப்பட்டனர். இச் சம்பளவிதம் உள்ளூர் வீலவாசிகளையனுசரித்தே அமைக்கப்பட்டது. இதன் நோக்கம் ஒவ்வொரு தொழிலாளியும் தன் சீவியத்தை நடத்துவதற்குப் போதுமான வருவாயைப் பெறுவதேயாகும்.

இலிசபெத்தின் வறிஞர்சகாயச் சட்டம் (1601)

ஏழைகளுக்குச் சகாயமளிக்கும் விடயத்தையும் தொடக்கிவைத்த பெருமை இலிசபெத்தையே சாரும். முதுமையாலோ, நோயினாலோ, வேலையில்லாத் திண்டாட்டத்தினாலோ இன்னற்படுவோருக்கு உதவியளிப்பது அரசாங்கத்தின் கடமையென வறிஞர் சகாயவிதி பிறப்பிக்கப்பட்டது. ஒவ்வொரு கோயிற் பற்றிலுமுள்ள வறியவர்க்கு உதவி புரிவது அவ்வக்கோயிற்பற்றின் பொறு ப்பிலே விடப்பட்டது. இதற்காக ஒவ்வொரு குடும்பத்தவரும் ஒரு வரி கொடுக்க வேண்டியிருந்தது. உள்ளூர்ச் சமாதானநீதிவான்கள் வறி ஞர் சகாயநிதியைப் பரிபாலனஞ் செய்தனர். முதியோர் அறநிலையங் களில் விடப்பட்டனர். சிறுவர் தொழில்நிலையங்களிற் பயிற்சி பெற்ற னர். நோயாளிகள் பராமரிக்கப்பட்டனர். திடகாத்திரமுள்ளவர்களுக்கு

வேலைதேடிக் கொடுக்கப்பட்டது. வேலை தேடமுடியாத பக்குவத்தில் அவர் களுக்கு வறிஞர்சகாய நிதியிலிருந்து படிச்செலவு கொடுக்கப்பட்டது. (குறி ப்பு 51).

இச்சமூகச்சீர்திருத்தங்களோடு நாணயத்தைச் சீர்திருத்தவும் பெருமுயற்சி செய்யப்பட்டது. மதிப்புக் குறைந்த நாணயவகைகள் திருப்பி எடுக்கப்பட்டன. அவற்றுக்குப் பதிலாகப் புதிய, சிறந்த நாணயங்களடிக்கப்பட்டன.

வியாபாரக் கம்பனிகள்

ஆட்சிக் கடைக்கூற்றிலே நாட்டில் வளர்ந்து வந்த பெரிய வியாபாரக் கம்பனிகளுக்கு இலிசபெது உரிமை வழங்கினாள். இரசியாவில் வியா பாரஞ் செய்த மசுக்கவிச் சங்கத்திற்கும், போற்றிக்கில் வியாபாரஞ் செய்த கிழக்குத் தேச சங்கத்திற்கும் சமீப கிழக்கு நாடுகளில் தொழில் செய்த லெவாந்துக் கம்பனிகளுக்கும் அவ்வாறு உரிமைப் பட்டயங்கள் வழங்கப் பட்டன. 1600 இலே புகழ்பெற்ற கிழக்கிந்தியக் கம்பனிக்கு உரிமை வழங் கப்பட்டது. "கூட்டுப்பங்குத்தொகுதிக்" கம்பனிகட்கு இதுவே வழிகாட்டி. இவ்வியாபாரச் சங்கத்திற் சேர்ந்தவர்கள் தமது முதலை ஒன்றுகப் போட் டுத் தொழில் நடத்தி அதில் வரும் இலாபத்தைப் பிரித்து எடுத்தனர். வியாபார வளர்ச்சியில் இது ஒரு புதிய யுகத்தையுண்டாக்கிற்று. இந்தி யப் பேரரசைப் பிரித்தானியா கைப்பற்றுவதற்கு இந்தக் கம்பனி மூல காரணமாயிருந்தது (குறிப்பு 57).

இலிசபெத்தும் எசெட்சும்

இலிசபெத்தின் நண்பனான இலெசுற்றரின் பெறுமகன் எசெட்சு எனும் இளைஞன் இங்கிலாந்தில் இக்காலத்தில் பெரும்புகழோடு விளங்கினான். இலிசபெது அவனிடம் மிக்க அன்பு கொண்டவளாய் அவனைத் தன் மகன்போலப் பேணி வந்தாள். ஊக்கமும் ஒண்மையுமுள்ள இவனை இங்கிலாண்டன் முழுவதும் போற்றியாதரித்தது. ஆனால் இவன் முரட்டுச் சுபாவமும், அகங்காரமுமுடையவனாயிருந்தான். கேடிசைத்தாக்க எபிங்ங காமைச் சேர்ந்த அவேட்டுடன் இவனையும் இலிசபெது அனுப்பினாள். இவன் அவேட்டுடன் பிணங்கினான்; பொனியக் கடற்படையை அழிக்கச் சென்ற முயற்சி வெற்றிபெறவில்லை. அயர்லாந்திலே திரோன் கலகஞ் செய்துகொ ண்டிருந்தான். தன்னை அங்கே அனுப்பவேண்டுமென்று எசெட்சு வாதா டினான். இலிசபெது அதற்குடன்பட்டாள்; அவனுடைய திறமையைச் சோதிப்பதும் அவள் நோக்கமாயிருந்தது. தன்னுடைய திறமையின்மை யைக் காட்டியது மாத்திரமன்றி அவன் இராசத்துரோக வேலையிலும் ஈடுபட் டான். சண்டையிடுவதற்குப் பதிலாக அவன் திரோனுடன் இரகசிய உடன்படிக்கையொன்று செய்துகொண்டு கட்டளைக்கு விரோதமாக அரசி யிடம் விரைந்து சென்றான். அவனோடு சமாதானம் பண்ணிக்கொள்ள

முனைந்தாள். அரசி அவனை அரசசபையிலிருந்து கலைத்துவிட்டாள். சினங் கொண்ட எசெட்சு அரசிக்கெதிராகச் சதிசெய்தான். 1601 இல் சில ஆட்களைச் சேர்த்துக்கொண்டு கலகமுண்டாக்கி, அரசியைக் கைப்பற்ற முயன்றான். இலண்டன் வாசிகள் அவனோடு சேர மறுத்தனர். அரசியின் காவற்படை அவனுடைய ஆட்களை இலேசாகக் கலைத்துவிட்டு எசெட்சைக் கைது செய்தது. அவன்மீது இராசத்துரோகக் குற்றம் சுமத்தப்பட்டு விசாரணையில் குற்றவாளியெனக் காணப்பட்டான். அவனது சிரத்தைக் கொய்தனர்.

இலிசபெத்தின் மரணம்

அவனுடைய முடிவு இலிசபெத்தின் முடிவுக்கு ஆரம்பமாயிற்று. இந்த அதிர்ச்சியிலிருந்து இலிசபெது தப்பிக்கொள்ள முடியவில்லை. நாளடைவில் அவள்பலங்குன்றி, 1603 இல் இறந்தாள். மிகச் சிறந்ததொரு ஆட்சி முடிவுற்றது.

இவ்வாறு இறந்தாள் அப்பேரரசி. உண்மையான தியூடர் குணம்படைத்தவள். அதாவது மக்களை நன்கு அறிந்திருந்தாள் ; அமைச்சரை விட விசேடமாக அறிந்திருந்தாள். சிறிதேனும் நேர்மையில்லாதவளானாலும் வாழ்க்கையிற் பெருவெற்றி கண்டவள் ; அன்புக்குப் பாத்திரமில்லாதவளானாலும், கற்பனை வகுத்த காதற்குப் பாத்திரமானவள் ; ஆட்சிக் காலம் முழுவதும் அற்புதமான விசுவாசத்துடன் பிறர் அவளுக்குத்தொண்டுசெய்தாரெனினும், பணவிடயத்திலெவ்வளவுக்கு இறுக்கமாயிருந்தாளோ அவ்வளவுக்குப் பரிசு வழங்குவதிலும் இறுக்கமாயிருந்தாள். தற்பெருமையும் பொய்மையும், சஞ்சலபுத்தியும், சிலசமயம் சிறுமையுமுடையவள். இத்தகைய குறைவுகளிருந்த போதிலும், உயர்நலமுடையவளென்பதிற் சந்தேகமில்லை. வெளிப்பார்வைக்கு அவளுடைய கொள்கைகள் தடுமாற்றமுடையனவாயிருந்தாலும், அதுவே அவற்றுக்குப் புத்திபூர்வமான சிறப்பை வழங்கிற்று. இடுக்கண் வரும்போது அறிவிலிகள் விரைவான முடிபுகளைச் செய்வர். இங்கிலாந்துக்குத் தேவைப்பட்டது அவகாசம். புதிய திருச்சபை பலம்பெற்று வளர அவகாசம் ; கொத்துலாந்துடன் கொண்ட புதிய சம்பந்தம் வலிமைபெற அவகாசம் ; ஆமடாவை முறியடித்த கடல்வீரர் பரம்பரை பெருக அவகாசம் ; அந்த அவகாசத்தை இங்கிலாந்துக்கு இலிசபெது வழங்கினாள். ஈற்றில் நாடு சமாதானத்திற்றிளைத்தது ; வெளிநாடுகளில் இங்கிலாந்தின் புகழ்பெருகிற்று ; இலிசபெது இங்கிலாந்துக்கு உதவிய பெருங்கொடை அது தன்னிலையிற் பெருமையும் தன்னெதிர்காலத்தில் நம்பிக்கையும் கொள்ளச் செய்தமையே.

7. இலிசபெத்துக்காலத்தில் இலக்கியம்

இலிசபெத்துக்காலத்துக் கல்வியறிஞர், செகப்பிரியர், மற்றும் நாடகஆசிரியர்

அரசியற்றுறையிலே இலிசபெத்தின் ஆட்சிக்காலம் பெருமையுற்று விளங்கியதுபோலவே, இலக்கியத்துறையிலும் புகழ்விரித்ததெனச் சாதாரணமாகக் கூறுவர். ஆங்கிலர் சாதித்துக் காட்டியவற்றுள் மிகச் சிறப்புடையதொன்று "இலிசபெத்துக்கால இலக்கியமே." தொட்டதுறையெங்கும் மட்டிலா உயிர்ப்பும் வனப்பும் கொட்டியது. ஈடுமெடுப்புமில்லாத பெரும் புலவர் **செகப்பிரியர்.** அவர் தனிப்பெருமையுடன் விளங்கினார். அவருடைய அளவில்லாத பெருமையில், அவர்காலத்திருந்த ஏனைய நாடகாசிரியரின் புகழ் மறைந்துவிட்டபடியால், மக்கள் அவர்களுடைய இலக்கிய ஆக்கங்களையதிகம் பயில்வதில்லை. எனினும் அவை தம்மிற் சிறப்புவாய்ந்தனவே. **போமண்டு** என்பவரும் **பிளெச்சர்** என்பவரும் ஒன்று கூடி அழகிய கவிதையுருவிற் பல நாடகங்களை இயற்றினர். **பிளாசிட்டர்** போன்ற நாடகங்களிலே இவர்களின் கதையமைப்பு செகப்பிரியர்மரபை அடியொற்றியுள்ளது. **பென் யோன்சன்** எழுதிய நாடகங்கள் அவருக்குக் கைமேற் புகழைக் கொடுத்தன. மேலும் அவர் ("என்னலம் வாழ்த்தஇங்குன்னிருகணிற் பருகுவாயே" என்பதுபோன்ற) அழகுமிக்க பாடல்களைப் பாடினார். மறுமலர்ச்சிக்காலத்திற் பெருவழக்காயிருந்த சில சிறப்பையும், கொடுமையையும், அச்சச்சுவையையும் வெபிசிற்றர் என்பவர் தாம் எழுதிய "**மால்பிச்சிமாட்டி**" "**வெண்பேய்**" என்ற நாடகங்களின் மூலம் ஆங்கில இலக்கியத்திலே புகுத்தினார். **போசுட்டசு வைத்தியர்** என்ற நாடகத்தில் **கிறித்தபர் மாளோ** பாவனைநவிலும் பெரியதொரு நாடகத்தை இயற்றினார். என்றும் சுவைதரும் பொன்றாமரபு வழிவந்த இவ்விலக்கியப் பொருளிலே அற்புதமான கவிதைப் பண்புண்டு. **இரண்டாம் எட்டுவேட்டென்ற** அவரது சரித்திரநாடகம், அவருடைய வாழ்நாள் முப்பது வயதாகுமுன் ஒரு கள்ளுக்கடைச் சண்டையில் முடிவுறாவிட்டால், அத்துறையில் அவர் எவ்வளவு சிறப்படைந்திருப்பாரென்பதற்கு எடுத்துக்காட்டாகும். இவர்களோடு போட்டு, மெசஞ்சர், கிட்டு, சாப்புமன் என்பவர்களையுஞ் சேர்த்தே திரைடன் என்ற புலவர் "மேலோர்குழு" எனப் பாராட்டினார்[1].

கவிஞர் ; அகப்பாட்டு

இலிசபெத்துக் கால இலக்கிய விளைவுகளில், இவ்வற்புதமான நாடகாசிரியர்குழுவின் நாடகங்கள் ஒருபகுதியே. **எட்மண்டு சிபென்சர்** என்பவர் தமது **மோகினிஇராணி** என்ற கவிதையில் கவிப்பண்பு நிறைந்ததொரு கற்பனைக்கதையை ஆக்கினார். இது புலவர்களால் எப்பொழுதும் போற்றிப் பாராட்டப்படுவது. ஆழ்ந்த கருத்துக்களை உயிர்ப்புள்ள சுருக்கமான வசனங்களில் எழுதும் பேக்கனின் கட்டுரைகளுக்கு உயர்வுடையவை இன்றும்

[1] இலிசபெத்து ஆட்சிக் காலத்திலே பிறந்த சில புலவர்கள் இலிசபெத்துக் காலப் புலவர்களென்வே உபசாரமாக வழங்கப்படுவர். ஆனால் அவர்களுடைய முதிர்ந்த படைப்புக்கள் முதலாம் சேமிசு காலத்திலேயே வெளியாயின. போமண்டு, பிளெச்சர், போட்டு, யோன்சன், தொன் என்போர் இவ்வகையைச் சேர்ந்தவரே.

ஆங்கில இலக்கியத்திற் கிடையா. ஆங்கில "புலன்கடந்த நுண்பொருள்" பற்றிப் பாடும் புலவர்களுள் **யோன் தொன்** சிறந்தவர்; அத்துறையிலு யர்ந்த புலவர்களுள் அவரும் ஒருவர். அகப்பாட்டுத் துறையிலே சிறந்து விளங்கும் புலவருள் அவருமொருவர். முன்னெருபோதுமில்லாத முறை யில் அகப்பாட்டு இக்காலத்திலே மலர்ந்தது. சில நாடகாசிரியர்களும் குறி ப்பாக பிளெச்சரும், உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் அழகிய அகப் பாட்டுக்களைப் பாடினர். **ஏஹூட்டு, தொமசு கம்பியன், சேர் பிலிப்புச் சிட்டினி, பீல், உலொச்சு, தொமசு இடெக்கர், தோமசு நாசு** என்றித் தொடக்கத்தவரெல்லாம் இத்துறையிற் சிறந்து விளங்கினர். கவிவளம் சிறந்திருந்ததென்பதற்கு இது ஒரு சான்று. இவர்களெழுதிய கவிதை கள், ஆங்கிலமொழியிலுள்ள மற்றக் கவிதைக்குரிய அழகையும், புது மையையும் இன்றும் காட்டிக் கொண்டிருக்கின்றன. இப்புலவர்களுடைய பெயர் கள் நமக்கு அவ்வளவு முக்கியமாய்த் தோன்றுவிட்டாலும், அவர்களி யற்றிய கவிதைகளை அடிக்கடி கேட்டிருக்கிறோம். இலிசபெத்துக் காலப் புலவர்கள் எழுதிய பல அரிய பாடல்களிடையே

"செந்திருமலர் வெண்குமுதமலர்
நந்தனவன மலனானனம்" எனவும்
"வறியையாயினு நெடுந்துயில் வாய்த்தனே" எனவும்
"முகில்காள் மூட்டைகட்டுமின் போமின்
பகலே வாழி பலபகல்" எனவும்
"பொழிக பொழிக புன்கண்ணீரே" எனவும்,
"நேரிழை சுந்தரியாமெனின்
ஆருளம் வெதும்பி நானழிதலுமாமோ"? எனவும்
"போந்தென்னுளமவன்கொண்டான் யானும்
காந்தனவனுளம் கவர்ந்து கொண்டேன்" எனவும்,

வரும் புகழ்பெற்ற பாடல்களுக்காக நாம் அவர்க்கு என்றுங் கடப்பாடுடையேம்.

இலிசபெது ஆட்சிக்காலத்துக் கீர்த்திகளே ஆரம்பித்தவர் செகப்பிரியர். அவரே அதை முடிக்கவும் வேண்டும். செகப்பிரியர் தமது சொனெற்றுப் பாட்டுக்களிலே, தம்முடைய நாடகங்களிலுள்ளதுபோல, மக்களினத்தின் உயர்வற உயர்ந்த பெருநிலையைத் தொட்டுவிட்டார்.

இலிசபெதுக்கால இலக்கியத்திலே நிறைந்த உயிர்த்தன்மையும், கற் பனைச் செறிவும், அழகுணர்ச்சியும் உண்டு; இயற்கையழகின் உபாசனை யினால் அவ்விலக்கியம் வளமும், பலபட்ட தன்மையும் பெறுகிறது. இவை யெல்லாவற்றுடனும், எளிமையான தொரு நடையின் அற்புதமான அழ குஞ் சேர்ந்துவிடுகிறது. சந்ததி சந்ததியாக அவ்விலக்கியச் செல்வத்தை மக்கள் நயந்துவந்ததற்கும், இன்றும் அவற்றின் பெருமை விரிந்து ஒளிகாலுவதற்கும் ஒருவகையில் இவையே காரணமெனலாம். (குறிப்பு 52).

8 ஆம் அதிகாரம்

தியூடர் ஆட்சியில் அயலந்து (1485–1603)

அயலந்தின் நிலை (1485) : பேல் : பெரிய குடும்பங்கள்

தியூடராட்சியிலே அயலந்தின் சரித்திரத்தை இனி ஆராய்வோம். 1485 இல் ஏழாம் என்றி ஆங்கில அரசுக்கு வந்தபொழுது அயலந்து இரங்கத் தக்க பிற்போக்கான நிலையிலிருந்தது. மறுமலர்ச்சியும் அதனோடு தொடர் புடைய இயக்கங்களும் அயலந்தைச் சிறிதும் தீண்டவில்லை. கல்வி போக் குறுந்தது. சமயம் மக்கள் மனதில் குடிகொள்ளவில்லை. நாடு முற்றிலும் காடும், சகதியுமாயிருந்தது. அதனுல் போக்குவரத்து இன்னல் நிறைந்த தாயிற்று; வீதிகளில்லை. அங்கு வாழ்ந்த ஏழரை இலட்சம் குடிகளில் மூன்றிலிருபகுதியினர் நாகரிகமற்ற விலங்கு வாழ்க்கை வாழ்ந்து வந்தன ரெனக் கணிக்கலாம். ஆங்கில அரசாட்சி ஆரம்பிக்கப்பட்ட "பேல்" என்ற பிரதேசம், நாளடைவில், எல்லை குறுகி, தண்டாக்கிலிருந்து தபிளின் வரையுள்ள 30 மைல் விரிவுடைய பிரதேசமாக மாறிற்று. இதற்கு வெளியேயுள்ள பிரதேசங்களில் ஐரிசுப் பழக்கவழக்கங்களும், ஐரிசு மொழியும் வழங்கலாயின. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வோர் ஐரிசுப் பிரதானி ஆதிக்கஞ் செலுத்தி வந்தான். இரண்டாவது என்றியின் காலத் திலே அயலந்தைக் கைப்பற்றிய ஆங்கில—நோமானியப் பரம்பரையினர் அயலந்து வாசிகளைக் காட்டிலும் மிக்க ஐரிசுப் பண்பாட்டையுடையவரா யிருந்தனர். இத்தகைய குடும்பத்தவருள் முக்கியமானவர்கள் தென் திசைக்கில் ஒமண்டு எனின் தலைமையில் வாழ்ந்த **பட்டிலர்** குடும்பத்தவரை யும் மன்சுற்றரிலே தெசுமண்டு எனின் தலைமையில் வாழ்ந்த **பிற்சு செரல்து** அல்லது செரல்தின் குடும்பத்தவரையும் இலென்சுற்றரைச் சேர்ந்த **கில்லிடர்** என்களின் குலத்தினரையுங் குறிப்பிடலாம். பழைய ஐரிசுக் குடும்பத்தவருள் மிக முக்கியமானவர்கள் அல்சுற்றரிலுள்ள **ஓநீல்**குடும் பத்தவரும் **ஓதொனல்** குடும்பத்தவருமெனலாம்.

கில்லிடர்களின் ஆட்சி (1485–1534), ஏள்கில்லிடர், போயிலிங்கின் சட்டங்கள் (1494)

ஏழாம் என்றி அரசுகட்டிலேறிய காலந்தொட்டு 1534 வரை ஐரிசுச் சரித்திரத்திலே குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியதிகமில்லை. ஐரிசு விசுப்பாண்ட வர் ஒருவர் ஒருமுறை ஏழாம் என்றியைப் பார்த்துச் சொன்னதாக

ஒரு கதையுண்டு. "அயலந்து முழுவதுஞ் சேர்ந்தாலும் கில்லிடர் பிரபுவை அடக்கியாள முடியாது" என்றார் விசுப்பாண்டவர். அரசன் "அப்படியானால் அயலந்து முழுவதையும் அடக்கியாள்ச் கூடியவன் அவனே" என்று கூறினாராம். இக்கதை உண்மையோ பொய்யோ என்பது ஒரு புறமிருக்க, இக்காலப் பகுதியின் பெரும் பகுதியில் அயலந்தை இரண்டு **கில்லிடர் ஏர்கள்** தொடர்ந்து ஆண்டனர் என்பது உண்மை. இடையிடையே இவர்கள் இலண்டன் கோட்டையிற் சிறையிருக்கவும் நேர்ந்தது.[1] இவ்வாறு இராசத்துரோகக் குறறம் புரிந்தாரென ஐயப்பட்டுச் சிறை புகுந்தகாலத்திலேதான் **ஒரு முறை சேர் எட்டுவேட்டு போயினிங்கு** என்பவர் அயலந்தின் "பிரதிப் பிரபு" வாக அனுப்பப்பட்டார். ஐரிசுப் பாராளுமன்றம் இங்கிலாந்திலே பூரணமாகத் தங்கியிருக்கும்வகையில் போயினிங்கு இரண்டு சட்டங்களை நிறைவேற்றினர். அச்சட்டப்படி ஆங்கில அரசனுடைய அனுமதியையும் அரசனுடைய கோமறைக் கழகத்தின் (பிரிவிக்கவுன்சிலின்) அனுமதியையும் பெறுமல் அயலந்து பாராளுமன்றத்தைக் கூட்டமுடியாது. அதே வகையான அனுமதியைப் பெறுமல் எவ்வித முறியையும் வாதிக்க முடியாது (1494).

கில்லிடர் குடும்பத்தவரின் கலகம்

1534 தொடக்கம் எட்டாம் என்றி அயலந்தின் அலுவல்களிலே முன்னிலுமதிக பங்கெடுத்துக்கொண்டான். கில்லிடர் பிரபுவின் ஆட்சியைப்பற்றி இங்கிலாந்துக்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டதன் பேரில் அவனை இங்கிலாந்துக் கழைத்து விசாரணை நடத்தினர். அவன் கூறிய சமாதானம் திருத்தியற்றதாயிருந்தபடியால், கோட்டையிற் சிறைவைத்தனர். அவன் அவ்வாறு முன்னரும் பலமுறை சிறைசென்றிருந்தான். அவனுடைய மகன் "பட்டுத் தோமசு" என்ற காரணப்பெயர் பெற்றான். அவனுடைய தலைச்சீராவில் பட்டுவிளிம்பு அழுத்தியிருந்தபடியால் அப்பெயரவனுக்கு வழங்கப்பட்டது. தன் தந்தையைச் சிரச்சேதஞ் செய்துவிட்டனர் எனவும், குடும்பத்தை வேரொடு அழிக்க ஆங்கில அரசு திட்டமிட்டிருக்கிறதென்றும் கேள்விப்பட்ட அவன் கலகஞ் செய்தான். இலெண்சுற்றரிலுள்ள செரல்தின் குலத்தின

[1]ஏப்பிரபுக்களில் முதற்பிரபு "பெரியவள்" என வழங்கப்பட்டார். 1513 இல் இவர் இறக்கும் வரை 30 வருடமாக ஆட்சி நடத்தினார். இவர் அறியற்புதமான குணநலம் வாய்ந்தவர். இலத்தின், ஆங்கிலம், பிரெஞ்சு, ஐரிசு ஆகிய மொழிகளிலுள்ள நிறைந்த பல நூல்களைக் கொண்ட புத்தகசாலை யொன்றை இவர் நிறுவினர். அக்காலத்து இத்தாலியப் புலவரான அரியொசுட்டோ இவருடைய புகழைக் கவிதையிற் பாடியுள்ளார்.

ருக்கு நீலைக்களமாயிருந்த மேனூதுக் கோட்டையைப் புதிய ஆங்கிலப் பிரதிப்பிரபு கைப்பற்றினார். "பட்டுத் தோமசின் தந்தை சிறைக்கோட்டத்திலுயிர் துறந்ததால், அவன் கில்லிடர் என்பட்டம் தாங்கி **மேனூதுக்** கோட்டையைப் பிடிக்க ஒரு சேனியத்தை நடத்தினான். அங்கே அவன் எதிரிகளாற் கைதுசெய்யப்பட்டதையறிந்த அவனுடைய சேனியம் பனிப் படலம்போல் மறைந்தது. கடைசியில் பட்டுத்தோமசு ஆங்கில அரசனிடம் சரணுகதியடைந்தான். சில மாதங்கள் சென்றதும் அவனும் அவனுடைய சிறிய தந்தையர் ஐவரும் இராசத்துரோகத்துக்கான தண்டனையைத் தைபேணிற் பெற்று உயிர் நீத்தனர். ஐவர் சிறிய தந்தையரில் மூவரை வஞ்சனையாக ஒரு விருந்துக்கழைத்துக் கைதுசெய்தனர்[1]. கில்லிடர் பெருங் குடும்பம் இவ்வாறு அழிவுற்றது.

அயலந்தில் மாற்றங்கள் (1535–47)

எட்டாம் என்றியின் எஞ்சிய ஆட்சிக்காலத்திலே அரசனுடைய அதிகாரம் படிப்படியாக வளர்ச்சியடைந்தது. பின்னர் அயலந்தில் ஆங்கிலப் பிரதிப் பிரபுக்களே நியமிக்கப்பட்டனர். என்றியை அயலந்து அரசனுக அயலந்துப் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது. இங்கிலாந்திலே என்ன சமயச்சீர்திருத்தங்கள் செய்யப்பட்டனவோ அனவபோன்ற திருத்தங்கள் அயலந்திலுஞ் செய்யப்பட்டன. போப்பாண்டவரின் அதிகாரம் நிராகரிக்கப்பட்டது. "ஐரிசுத் திருசபைத் தலைவன்" என என்றியே பிரகடனஞ் செய்யப்பட்டான். மடங்கள் அழிக்கப்பட்டன. தேவாலயங்களிலுள்ள சில விக்கிரகங்களையுடைத்தனர். அயலந்துத் தலைவர்கள் விடயத்திலே என்றி நிதானமான முறைகளையும், அரசதந்திரமான மாற்றங்களையும் இணக்கமான வார்த்தைகளையுங் கொண்டு வயப்படுத்தினான். தீவிரமான கொள்கைகள் சிலசமயம் கலகத்தையும் பழைய விலங்குச் சுபாவத்தையுமுண்டாக்கலாமென நினைத்தான். தன்னையே திருச்சபைத் தலைவனுகவும் அரசின் தலைவனுகவும் ஒப்புக்கொள்ளச் செய்தான். அவர்களது கீழையினரின் நிலங்களைத் தனக்கு வழங்கச் செய்தான். இவற்றுக்குப் பதிலுபகாரமாக என்றி அவர்களுக்கு ஆங்கிலப் பட்டங்களையும் சில மடங்களின் நிலங்களையும் வழங்கி, அவர்களிடந்

[1]ஆண்சந்ததியிலே "பட்டுத்தோமசின்" தம்பியொருவனே எஞ்சினான். அவனுடைய மாமியார் அவனை அயலந்துக் காடுகளில் ஒளித்திருக்க வைத்தாள். அவள் பின்னர் பிரான்சுக்குத் தப்பியோடி, உரோட்சு நைற்றுக்கள் என்ற கட்சியின் சார்பாக சோனகரோடு சண்டையிலீடுபட்டபின் அயலந்துக்குத் திரும்பினான். மேரியின் ஆட்சிக் காலத்திலே கில்லிடர் குடும்பத்து நிலபுலங்கள் அவனுக்குத் திரும்பிக் கொடுக்கப்பட்டன.

தான்பெற்றசில நிலங்களையுந் திருப்பிக் கொடுத்தான். அவை சந்ததி சந்ததியாக வழங்கப்பட்டன. என்றி உயிரோடிருக்கும்வரை இக்கொள்கை பலனளித்தது. அவனிறப்பதற்குச் சற்று முன்னர் "அயலந்தில் இன்று நிலவும் அமைதி நிலையை, அந்நாட்டில் இன்று வாழும் எவனும்—அவன் நெசிற்றறின் வயதினனுயினும்—முன்னெரு போதுங் கண்டிருக்க மாட்டான்" எனக் கூறினர்.

என்றியின் பின்னர் ஆண்டவருடைய காலத்திலே தொல்லைகள் அதிகம் ஏற்படவில்லை. புரடசுத்தாந்தியச் சீர்திருத்தங்களை அயலந்திற் செய்வதற்கு ஆரும் எட்டுவேட்டு காலத்து ஆலோசகர்கள் அவ்வளவு சிரமப்படவில்லை. மேரியினுட்சிக் காலத்திலே போப்பாண்டவருடைய அதிகாரத்தை மறுபடியும் புகுத்துவதில் அயலந்துப் பாராளுமன்றத்தை இணங்கச் செய்ய அங்கு நிருவாகம் நடத்திய பிரதிப் பிரபுவிற்கு எவ்வித தொல்லையுமிருக்கவில்லை. இலிசபெத்தினுட்சியில் அவ்வதிகாரத்தை மாற்றுவதிலும் இன்னலுண்டாகவில்லை.

சேன் ஒனீலின் புரட்சி (1562)

ஆனால் இலிசபெத்தின் ஆட்சியிலே ஓயாத கலகங்கள் உண்டாயின. அவ்வாட்சியினாரம்ப காலத்திலே **சேன்ஒனீல்** என்பவன் கலகஞ் செய்தான். ஒனீல் கூட்டத்தவருக்குத் தலைமைதாங்கத் தானே உரிமையுடையவனென்றும், தனது தந்தையாருக்கு எட்டாம் என்றி வழங்கிய திரோன் ஆட்சிப் பகுதி தனக்கே உரியதென்றும் வாதாடினன். இதற்குப் போட்டியாகக் கிளம்பிய மற்றெருவனைப் பிரித்தானிய அரசாங்கம் முதலில் ஆதரித்தது. ஆனால் நாளடைவிலே, பல மாற்றங்களின் பின்னர், இலிசபெது சேனின் உரிமையை ஒப்புக்கொண்டான்[1]. ஆனால் சேன் மிகுந்த பேராசை படைத்தவன். அல்சுற்றரில் ஆதிக்கமுடையவனுகவிரும்பினன். அவனிடத்துப் பெரிய சைனியமிருந்தது. கொத்துலாந்து அரசியான மேரியுடனும், பிரான்சின் அரசனை ஒன்பதாவது சான்சுடனும் சதிசெய்தான். கடையில் அவனைத் தேசத்துரோகியாக அரசாங்கம் பிரகடனஞ் செய்தது. சேன் தோற்கடிக்கப்பட்டான். அவனுடைய தலையை வெட்டி "மட்பாண்டத்திலடைத்து"ப் பிரதிப்பிரபுவாயிருந்த ஆங்கில உத்தியோகத்தருக்கு அனுப்பினர் (1567).

[1]சேன் இங்கிலாந்துக்கு வந்து இலிசபெத்தின் அரசவைக்குச் சென்றன். வெறுந்தலையும், குஞ்சத்தாக்கும் முரட்டுத்துவலியாலான மஞ்சளங்கியுமணிந்த பரிவாரஞ் சூழச்சென்றமை இலண்டன் வாசிகளுடையே பெரிய பரபரப்பையுண்டாக்கிற்று.

கத்தோலிக்க மறுமலர்ச்சி, ஏசுசபைக் குருமார் தூதம்

இதற்கிடையில் அயலந்திலே பெரிய சமயப்புனருத்தாரணமுண்டானது. "பேல்" பிரதேசத்துக்குப் புறம்பாயுள்ள பகுதிகளிற் புரட்டசுத்தாந்தியக் கோட்பாடுகளைப் புகுத்த முயற்சி செய்யப்படவில்லை. இலிசபெத்தின் ஆட்சிக் காலத்திலே, ஆங்கிலத் திருச்சபை முறைப்படி ஆராதனை நடத்தவேண்டுமென்றும், வேறுமுறைகளை யனுசரிக்கக்கூடாதென்றும், சட்டம் நிறைவேற்றப்பட்டது உண்மையே. ஆனால் ஒரு தேசம் முழுவதும் அத்தகைய ஆராதனையையே நடத்தவேண்டுமென வற்புறுத்துவது கடினம். எனவே அயலந்திய உரோமன் கத்தோலிக்கர் நமது கோட்பாட்டின்படி சமய அனுட்டானங்களைச் செய்யச் சுதந்திரமுடையவராயிருந்தனர். இலிசபெத்துக் காலத்தில் சீர்திருத்த எதிர்ப்பு இயக்கமென்ற பேரியக்கமுண்டாகிக் கத்தோலிக்கர் இழந்த பல விடயங்களை மீண்டும் பெற்றனர். அயலந்தில் இவ்வியக்கம் கண்ட வெற்றிபோல வேறெத் தேசத்திலும் காணவில்லை. இலிசபெது பட்டத்துக்கு வந்தபின்னர் ஏசுசபைக்குருமார் பலர் அயலந்துக்கு வந்து பெருஞ் செல்வாக்குப் பெற்றனர். இலிசபெது 1570 இல் திருச்சபையிலிருந்து மதவிலக்கஞ் செய்யப்பட்ட பின்னர் அயலந்திலே போப்பாண்டவரே நிலவுமானுர். சிபானிய மன்னனுன இரண்டாம் பிலிப்பும் உதவிபுரிவானென எதிர்பார்க்கப்பட்டது.

தெசுமண்டுக் கலகம் (1579–83)

எனவே மன்சுற்றரிலிருந்த பிற்சுசெரல்து வமிசத்தவர் இரண்டு கலகங்களையுண்டாக்கினர். முதற்கலகம் முக்கியமற்றது. 1579 இல் உண்டான இரண்டாவது கலகம் நாடெங்கும் பெரும் புரட்சியையுண்டாக்கிற்று. **தெசுமண்டு** என்பவன் இதற்குத் தலைமை வகித்தான். புரட்சிக்காரருக்கு ஓரளவு வெற்றியுண்டானது. சிபானியரும், இத்தாலியரும் சேர்ந்த படையொன்று சிமவிக்கிலே[1] வந்திறங்கி அதைக் கைப்பற்றியது. ஆனால் இவ்வன்னியர் விரைவிலே சரணுகதியடைந்தனர். 500 பேரைக் கொண்ட இவர்கள் படை இரண்டாம் பிலிப்பின் அனுமதிப்பத்திரங் காட்டாமையினால், கொள்ளைக்கூட்டமென வாட்கிரையாக்கப்பட்டது. ஈற்றில் நாலு வருடச்

[1] போப்பாண்டவரின், தூதனுன, கலேறிநி நிக்கலசு சாண்டசு என்பவனும் அவர்களோடு வந்து கலகக்காரரை வழிநடத்துவதில் மிகுந்த ஊக்கங்காட்டினன். அவனைக் கைதுசெய்ய எடுத்த முயற்சிகளெல்லாம் பயனிலவாகினன். ஈற்றில் அவன் நிராதரவாய்க் குளிரிற் படுத்து இறந்தான். அவனுடைய உடல் ஒரு காட்டிலே, பிரார்த்தனைக் குறிப்பும் விவிலியநூலும் கையிலிருக்க, கிடந்தது.

சண்டையின் பின்னர் மன்சுற்றர் கலகம் அடக்கப்பட்டது. சண்டை மிகக் கொடிய முறையில் நடந்தது. ஐரிசுப் போர்வீரனெவ்வொருவனும், மற்றொரு வீரனின் தலையைக் கொண்டு வந்தாலொழிய, விடுதி வழங்கப்படவில்லை. மன்சுற்றர் பாலைவனமாக மாறிற்று. கடைசியாறுமாதங்களிலே, பட்டினியால் முப்பதினாயிரம் பேர் இறந்தனரெனக் கணிக்கப்பட்டது[1].

மன்சுற்றரில் ஆங்கிலேயர் குடியேறல்

அப்பொழுதுதான் மன்சுற்றரில் ஆங்கில மக்களைக் குடியேற்ற எண்ணினர் இவ்வெண்ணம் புதியதன்று. 1921 வரை "அரசன் குடியேற்றம்". "அரசி குடியேற்றம்" என்று வழங்கி வந்த பிரதேசங்களில் மக்களைக் குடியேற்ற வேண்டுமென்று மேரிகாலத்திலேயே திட்டம் போடப்பட்டது. இலிசபெது அரசுக்கு வந்த காலத்திலேயே இத்திட்டத்தை நிறைவேற்ற ஒழுங்கு செய்தனர். இப்பொழுது பெருமளவிற் செய்யத் திட்டம் போடப்பட்டது. 5 இலட்சம் எக்கர் நிலம் ஆங்கில மக்களைக் குடியேற்றம் செய்வதற்காகக் "கருமகாரர்" வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்த ஒழுங்கு பல சந்தர்ப்பங்களில் நிறைவேற்றப்படவில்லை.[2]

திரோனின் கலகம் (1595–1603) அயலந்தில் எசெட்சின் தோல்வி, கலகத்தின் முடிவு, ஐரிசுக் கொடுமைகள்.

கடைசிக்கலகமான பெருங் கலகம் வட அயலந்தில் ஏற்பட்டது. இக் கலகத் தலைவர்கள் திரோன் பிரபுவான **இயூ ஒனீலும் ஒதொனல்** குடும்பத்தின் தலைவனான இயூ உரோவுமாகும். 1598 இலே பிளாக்கு வாட்டரில் "இயலோபோட்டுக்" களத்திலே திரோன் வெற்றி பெற்றான். மேலும் முயன்றிருந்தால் அவன் தபினின் நகரைக்கைப்பற்றியிருப் பான். அவனுடைய வெற்றியினால் மன்சுற்றரிலே புதிய கலக

[1]கலகத்தின்பின் நாட்டின் நிலைமைபற்றி சிபென்சர் என்ற கவிஞர் பின்வருமாறு வருணித்துள்ளார். "நாட்டின் ஒவ்வொரு மூலையிலிருந்தும் மலைவிடரிலிருந்தும் காஸ்கன் சோர்ந்ததனால் தவழ்ந்துகொண்டு வந்தார்கள். மரணத்தின் உருவம்போல கல்லறைகளிலிருந்து புலம்பும் பாசாகள்போலப் பேசிகொண்டிருந்தனர். வனம்பெருகி, மக்கள் நிறைந்திருந்த நாடு திடீரென்று மனிதரும், பிராணிகளுமில்லாத வனந்தரமாயிற்று.

[2]இக்கருமகாரரில் சேர் உவாற்றர் இராலியும் கவிஞர் சிபென்சருமிருந்தனர். சிபென்சர் தமது மோஇன் இராணி காவியத்தின் பெரும்பகுதியை அயலந்திலேதான் எழுதினர். இராலி, சிபென்சரின் விருந்தினனாயிருந்தபொழுது சிபென்சர் தமது காவியத்தின் முதன் மூன்று பகுதிகளை அவருக்குக் காட்டினர். இராலி அவற்றை வியந்தார். பின்னர் இருவரு மாக அந்நூலை வெளியிடும் நோக்கத்துடன் 1589 இல் இலண்டனுக்கு வந்தனர்.

முண்டானது. சிபானியர் அவனுடன் நட்புறவு செய்துகொண்டு படைத் தளையும் பணமும் அனுப்பினர். போப்பாண்டவர் அவனுக்கு "மயிற் றோகை"யைப் பரிசாக அனுப்பினர். அத்துடன் திருச்சபை சார்பாகக் கலகம் விளைப்போருக்குப் பாவமன்னிப்பளிப்பதாகவும் வாக்களித்தார்: நிலைமை நெருக்கடியாயிற்று. அத்தனை கூட்டத்தவர் சேர்ந்து கலகஞ் செய்த ஒரு சம்பவம் முன்னெருபொழுதும் நிகழவில்லை. அது தேசம் முழுவதும் பரவிய கலகமாயிற்று. இலிசபெத்தின் நெருங்கிய நண்பனான எசெட்சு 1599 இல் இக்கலகத்தையடக்க அனுப்பப்பட்டான். அவன் திரோனுடன் சண்டைசெய்வதை விட்டுச் சமாதானஞ் செய்துகொண்டு வீடு திரும்பினான். அவனுக்குப் பின் சேனைத் தலைமைதாங்கிய **மௌண்டியோய்** பிரபு 1600 இல் அயலந்து வந்தபொழுது கலகக்காரர் தபினின் நகர மதில்களிலிருந்து நாடுமுழுவதையும் கைப்பற்றியிருந்ததைக் கண்டான். ஆனால் அவன் திறமைமிக்கவன். கின்சேல் வந்திறங்கிய சிபானியப் படையொன்றைச் சரணடையச் செய்தான். பின்னர் திரோனின் படை களுடன் "வாளின்றிப்பாரை"யால் யுத்தம் பூரிந்தான். அதாவது முக்கியமான பாதைகளிலெல்லாம் கோட்டைகளைக் கட்டினான். அதனால் எதிரியின் போக்குவரவைத் தடுக்க எண்ணினான். ஒவ்வொரு மாவட்டத்தை யும் முற்றுகையிட்டு மக்களைப் பட்டினிபோட்டு அடிபணியச் செய்தான். அவனுடைய முறைகள் வெற்றியளித்தன. 1603 இல் இலிசபெத் இறந்த செய்தி அயலந்துக்கு வருமுன்னர் திரோன் அடிபணிந்தான். தனது பட்டத்தையும், நிலங்களையும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டுமென்ற நிபந்தனையில் யுத்தத்தைக் கைவிட்டான். இலிசபெத்தின் மரணத்தோடு அயலந்து முற்றுக முதன்முறையாய்க் கைப்பற்றப்பட்டது. ஆனால் யுத்தம் மிகக் கொடிய முறையில் நடந்தது. "சாம்பலையும் பிணங்களையுமே ஆட்சிபுரிகிறீர்" என இலிசபெத்துக்கு இறக்குந் தறுவாயிற் கூறப்பட்டது. ஆங்கிலச் சேனையம் மாத்திரங் கொடுமைபுரியவில்லை. சிபென்சர் கூறியதுபோல ஐரிசுமக்கள் "மிலேச்சசாதியார்" எனக் கொள்ளப்பட்டனர். இங்கிலாந்தின் கொடிய இருபகைவரான சிபெயினுடனும் போப்பாண்ட வருடனும் அவர்கள் நட்பாயிருந்தனர்; ஐரிசுத் தலைவர்கள் ஆங்கிலப் பிரதிப் பிரபுக்களோடு நடத்திய விவகாரங்களில் இராசத்துரோகமான முறையில் நடந்துகொண்டனர்; இக்காரணங்களால் ஆங்கிலச்சேனையும் கொடுமையான செயல்களைச் செய்ததென்று கூறினாலும், அவர்கள் செய்த வேறு பல நிட்டூரங்களுக்குச் சமாதானங் கூற முடியாது. இலிசபெது மகாராணியார் காலத்திலே நடந்த அட்டூழியங்களுக்காக 1641 இல் ஐரிசுப் புரட்சுத்தாந்தியர் மிக வருந்த நேரிட்டது. (குறிப்பு 56)

ஐந்தாம் பருவக் குறிப்புக்கள் (1485—1603)

ஆங்கில அரசர்கள்

ஏழாம் என்றி	(1485—1509)
எட்டாம் என்றி	(1509—1547)
ஆறும் எட்டுவேட்டு	(1547—1553)
மேரி	(1553—1558)
இலிசபெது	(1558—1603)

கொத்துலாந்து அரசர்கள்

நாலாம் சேமிசு	(1488—1513)
ஐந்தாம் சேமிசு	(1513—1542)
மேரி	(1542—1567)
ஆறும் சேமிசு	(1567—1603)

முக்கியமான வேற்றுநாட்டரசர்கள்

பேரரசு :—	5 ஆம் சார்சு	(1519—1556)
	முதலாம் பேடினந்து	(1556—1564)
போப்பாண்டவர்கள்	இரண்டாம் யூலியசு	(1503—1513)
	ஏழாம் கிளெமெந்து	(1523—1534)
பிரான்சு :—	முதலாம் பிரான்சிசு	(1515—1547)
	நாலாம் என்றி (நவார் என்றி)	(1589—1610)
சிபெயின் :—	பேடினந்தும், இசபெலாவும்	(1479—1516)
	ஐந்தாம் சார்சு	(1516—1556)
	இரண்டாம் பிலிப்பு	(1556—1598)
சுவீடின் :—	கசுத்தாபசு வாசா	(1523—1560)
இரசியா :—	நாலாம் ஐவன் இரசியாவின் முதற்சார்	(1533—1584)

குறிப்பு 38—ஏழாம் என்றியின் ஆட்சியின் முக்கியத்துவம்.

1. பிரபுக்களின் அதிகாரத்தை அடக்குதல்.

உரோசு யுத்தங்களால் **பிரபுக்களிற் பலர் மாண்டனர்.** ஏழாம் என்றி இறுதியாக அவர்களுடைய அதிகாரத்தைக் குறைத்தான்.

(அ) பிரபுக்களின் "பரிவாரங்களையும்" தொண்டர்படையையும் தடை செய்தான்.

(ஆ) வெடிமருந்து வைத்திருப்பதற்குள்ள முழுவுரிமையைத் தனதாக்கிக் கொண்டான். அதனால் பிரபுக்கள் அரசனுக்கெதிராகச் சண்டைசெய்து தமது கோட்டைகளைக் காப்பாற்ற முடியாமற் போனது.

(இ) இசுகார்சேம்பரெனும் **வெள்ளி மன்றத்தைத்** திருத்தியமைத்தான். இதன் பயனாகச் செல்வாக்குள்ள பிரபுக்கள் அரசன் நியமித்த நீதிபதிகளைப் பயமுறுத்தவோ, கைக்கூலி கொடுத்து அவர்களை வசப்படுத்தவோ முடியாதிருந்தது.

(ஈ) தன்னில் முற்றுகத் தங்கியிருக்கக்கூடியவாறு திறமையுள்ள (எம்சன், இடட்டிலிபோன்ற) "நடத்தர வகுப்பாருக்கு" உத்தியோகங்களை வழங்கினான்.

(உ) நிர்ப்பந்தமாகக் கடனும் நன்கொடையும் பெற்றுப் பிரபுக்களின் பணத்தைப் பறித்தான்.

2. என்றியின் பிறநாட்டுப் பூட்கை.

(அ) **கொத்துலாந்துடன்** நட்புறவு செய்துகொண்டு, தனது மகளான மாகரெட்டைக் கொத்துலாந்து அரசனுக்கு மணஞ்செய்து கொடுத்தான். (இந்தச் சம்பந்தத்தின் பயனாகவே ஆங்கில அரசுரிமைக்குச் சதுவட்டு வமிசத்தினர் உரிமை பெற்றனர்).

(ஆ) **சிபெயினுடன்** நட்புறவு செய்துகொண்டு முதலிற்றனது மூத்த மகளை அரகன் மன்னன் மகளான கதரினுக்கு மணஞ் செய்வித்தான். பின்னர் அவன் இறக்கவே இரண்டாவது மகளை என்றியை அவளுக்கு மணஞ் செய்வித்தான். (இதன் பயனாகவே என்றியின் "விவாக நீக்கம்" சம்பந்தமாகப் பின்னர் பிணக்குக்களுண்டாயின).

(இ) வேண்டாவெறுப்பாகப் **பிரான்சுடன்** யுத்தஞ் செய்தான். பின்னர் **எத்தாப்பிள்சுப் பொருத்தனையின்படி** பணத்துக்காகத் தன் கௌரவத்தை விற்றான்.

(ஈ) இங்கிலாந்துக்கு மிகப் பயனுள்ள வியாபாரப் பொருத்தனைகளைப் பிளாண்டேசுடன் செய்து கொண்டான் **(மினுசு இண்டர்கோசசு).**

3. என்றியினுட்சியிலே மறுமலர்ச்சி உதயம்.

அச்சடித்தற்றொழில் ஆரம்பம்; புதிய கல்வி வளர்தல், கிரேக்கக் கல்வி மறுமலர்ச்சி, வெளிநாடுகளிலே சமயச் சீர்திருத்தம் ஆரம்பம். பிரதேச ஆராய்ச்சியாளரின் ஆரம்பக் கண்டுபிடிப்புக்கள். (கபெற்றுச் சகோதரர் அமெரிக்கா செல்லல்) இந்தியாவுக்குப் பாதை காணல்; அமெரிக்காவுக்குப் பாதைகாணல்.

குறிப்பு 39—ஏழாம் என்றிக்கெதிராகப் புரட்சி.

1. சிங்காசனத்துக்கு என்றியின் உரிமை மிக வலியற்றது. அதுவருமாறு :—

(அ) மூன்றும் எட்டுவேட்டின் மூன்றும் மகன் கோன்று யோன் அவனுடைய சந்ததியில் வந்தவள் மாகரெட்டு போபட்டு ; அவளே என்றியின் தாய். அவளுக்கு அரசுரிமையுண்டென்பதைப் பாராளுமன்றம் நிராகரித்தது.

(ஆ) நாலாம் எட்டுவேட்டின் வாரிசே என்றியின் மனைவி.

(இ) பாராளுமன்றம் என்றியை அரசனாக வற்புறுத்தி நீர்மானித்தல். அதனால் பலர் அரசுக்கு உரிமை கொண்டாடி. நாட்டிற் கலகமேற்பட்டது.

2. **இலம்பேட்டு சிமினல்** :—யோக்குச் சந்ததியில் வந்த உரிமைக் காரன் என்றும் நாலாம் எட்டுவேட்டின் சகோதரனான இளாரென்சின் வாரிசு என்றும் தன்னைக் கூறிக்கொண்டான். அவன் போலி உரிமைக் காரனென்பதைக் காட்டுவதற்காக, உண்மையான இளாரன்சை, உலகுக்குக் காட்டினான். சிமினலே தோக்கு என்ற களத்தில் (1487) தோற்கடித்தான்.

3. கோட்டையிலே சிறைவைக்கப்பட்ட இளவரசரில் ஒருவனென (யோக்கு இரிச்சட்டு—இளையவன்) **பேக்கின் உவாபெக்கு** கூறிக்கொண்டான். சிறைவைக்கப்பட்ட இளவரசன் இறந்தமை எவராலும் நிரூபிக்கப்படவில்லை. இவனை ஆதரித்தவர்கள் :—

(அ) இலங்காத்தியர்—மாகரெட்டு அரசி இவனுரிமையை ஆதரித்து இவனுக்கு உதவிசெய்தாள்.

(ஆ) கொத்துலாந்து அரசன் இவ்வுரிமையை ஆதரித்து அரச குடும்பத்திலே மணமுஞ் செய்துவைத்தான்.

(இ) ஐரிசுமக்கள் ஆதரித்தனர்.

தெவனில் அவன் வந்திறங்கியபொழுது அவனைத் தோற்கடித்துச் (1497) சிறையிட்டனர். இளாரன்சு எட்டுவேட்டுடன் சேர்ந்து அவனை சதி செய்தான் என்று குற்றஞ்சாட்டி, என்றி இருவரையும் சிரச்சேதஞ் செய்தான் (1499).

குறிப்பு 40. மறுமலர்ச்சி.

ஏழாம் என்றியின் ஆட்சியோடு "தற்கால ஐரோப்பா" எனும் காலப் பகுதி ஆரம்பிக்கிறது. அக்காலத்திலே செல்வம் மிகுந்து நாகரிகத்தில் மிகச் சிறப்புற்று விளங்கிய இத்தாலியிற்றான் முதல் முதல் **மறுமலர்ச்சி** ஆரம்பமாயிற்று. பின்னர் அது பிரான்சிலும் இங்கிலாந்திலும் பரவிற்று.

1. "**கல்வியில் மறுமலர்ச்சியுண்டானது.**" உயர் தனிச் செம்மொழிகளான இலத்தினும் கிரேக்கமும் பயிலப்பட்டன. கிரேக்க மொழியை மிக உற்சாகத்துடன் கற்றனர். ஒட்சுபோட்டிலே குரோசின், இலினக்கர், கொலெற்று என்போர் அதைப்போதித்தனர்.

2. **கல்வி** சம்பந்தமான புதுக கருத்துக்கள் பரவின. இங்கிலாந்திலே கொலெற்று நிறுவிய சென்போல் பாடசாலை போன்ற பாடசாலைகள் நிறுவப்பட்டன.

3. **அச்சடிக்கும் கலை** கண்டுபிடிக்கப்பட்டதன் காரணமாகக் கல்வி வளர்ந்து பரவிற்று.

4. **கலைகள்** மலர்ச்சியடைந்தன. ஓவியரும், சிற்பிகளும் புதிய முறைகளைப் புகுத்தினர். தேவாலயங்களும் வீடுகளும் அப்புது முறையிற் கட்டப்பட்டன. (துப்பாக்கித் தாக்குதலை எதிர் நிற்க முடியாமையாற் கோட்டைகள் முக்கியத்துவமிழந்தன).

5. சமயத்துறையிலே பழைய கொள்கைகளையும் தாபனங்களையும் மக்கள் கண்டிக்கத் தொடங்கினர். கிரேக்கவிலியநூலைப் புதிதாக இலத்தினில் இராசமசு மொழிபெயர்த்து வெளியிட்டார். அதன்மூலம் மக்கள் விலியநூலைப் புதுமுறையிலாராயவும், கண்டனம் செய்யவும் அவர் வழி காட்டினரன்றி அவர் புரட்டசுத்தாந்திய சமயத்தைச் சேர்ந்தவரல்லர். குருமாரின் கல்விமுறையை அவரும், கொலெற்றும், மூருமே கண்டித்தனர்.

குறிப்பு 41. எட்டாம் என்றியும் உவல்சியும்

உவல்சி நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவன். தன்முயற்சியால் உயர் பதவியடைந்த தியூடர் அமைச்சர் இனத்துக்கு எடுத்துக் காட்டாயுள்ளவன். திருச்சபையிற் சேர்ந்து அரசகுருவாய் விளங்கினன். பிரான்சிற்குப் படையொன்றைத் திரட்டியனுப்பத் (1513) துணைபுரிந்தான். யோக்கு அதிமேற்றிராணியாராகவும், இங்கிலாந்து மண்டிலநாயகனாகவும் பதவி வகித்தான்.

1. ஊல்சியின் பிறநாட்டுப் பூட்கை.

(அ) **பிரெஞ்சு யுத்தத்தை முடிப்பதில் ஆர்வங்காட்டினன்.** பிரான்சுடன் **நட்புறவு** வைத்துக்கொள்ள வேண்டுமென முயன்றான். பன்னிரண்டாம் உலூயி என்றியின் சகோதரியான மேரியை மணஞ் செய்தான். சிபெயினுடன் இங்கிலாந்துக்குப் பகைமை தொடங்கிற்று.

(ஆ) 1515 இல் உலூயி இறந்தபின் சிபானிய அரசனான பேடினந்தும் இறந்தான். ஐரோப்பாவில் மாறுதல்களுண்டாயின.

பேரரசன் சாள்சு மிகுந்த செல்வாக்குடையவனுனுன். **உவல்சி மறு படியும் பிரான்சுடன் நட்புக்கொள்ள விரும்பினுன்.** என்றியின் மகளான மேரி பிரெஞ்சு இளவரசனே மணக்க ஒழுங்கு செய்யப்பட்டது (1516). உவல்சி சர்வதேச சமாதான ஒழுங்கு செய்தான். பேரரசன், இங்கிலாந்து, கொத்துலாந்து, சிபெயின், பிரான்சு என்ற தேசங்களிடையே சமாதானஞ் செய்யப்பட்டது.

(இ) பேரரசன் 1519 இல் இறந்ததும், சிபானிய சாள்சுக்கும், பிரான்சிய பிரான்சிசுக்கும், ஆங்கில என்றிக்கும் போட்டியுண்டானது. இங்கிலாந்து **நடுநிலைமை** வகித்ததால், இரு தேசமும் அதன் உதவியை நாடின. சாள்சு தேர்ந்தெடுக்கப்பட்டான். இங்கிலாந்து "அரசவனுச் சமநிலையை" க் கடைப்பிடித்தது.

(ஈ) பிரான்சுடன் நட்பாயிருக்கவேண்டுமென **உவல்சி கொண்ட கொள்கையை என்றி நிராகரித்துவிட்டு,** பொன்னுடைக் களத்தின் பின்னர் சாள்சை கிரேவிலேனிற் கண்டு பேரரசனுடன் சமாதானஞ்செய்து கொண்டான் (1520). பிரான்சில் நடந்த சண்டையிலே தோல்வி, என்றியின் தாக்குதல் பயனற்றமை.

(உ) முதலாம் பிரான்சிசு பாவியாவிலே தோல்வியுற்ற பின்னர் (1525) சாள்சின் பலப்பெருக்கத்தைக் கண்டு என்றி அஞ்சுதல். **பிரான்சுடன் நட்பாயிருக்கவேண்டுமென்ற உவல்சியின் யூட்கையை ஆதரித்தல்.**

சுருக்கம் :—பிரான்சு, சிபெயின் ஆகிய இரு வல்லரசுகளும் வலுவில் மீறுமல் "அரசவனுச் சமநிலையை" நிலைநாட்ட உவல்சி முயன்றான் எனச் சிலர் கருதுவர். அதற்கு இங்கிலாந்தை நடுநிலையிலிருக்கச் செய்தான் எனவும் கருதுவர். உண்மையில் உவல்சி பிரெஞ்சு நட்புறவை ஆதரித்தான். ஆனுல் அவனுடைய பிரதான நோக்கம் இங்கிலாந்தின் இன்றியமையாமையை நிலைநாட்டி, இரு கட்சியினரும் அதன் உதவியை நாடச் செய்வதே.

2 உவல்சியின் உண்ணுட்டுப் பூட்கை

(அ) திருச்சபைச் சீர்திருத்தம் அவசியமென்பதை உவல்சி உணர்ந்திருந்தான். சிறிய மடங்கள் சிலவற்றை ஒழித்தான். அப்பணத்தைக் கொண்டு பாடசாலைகளையும், கல்லூரிகளையும் நிறுவினன்.

(ஆ) திருச்சபைக் கோட்பாட்டை என்றியும் உவல்சியும் பலமாக ஆதரித்தனர்.

(இ) என்றிக்குப்பின் **அரசுரிமை யாருக்குச் செல்லவேண்டுமென்பதை நிச்சயிப்பதற்கு,** அரகன் அரசி கதரினை "விவாகநீக்கஞ்" செய்வதே ஏற்றதென என்றி எண்ணியிருந்தான். என்றிக்கு ஒரு பிரெஞ்சு இளவரசியை மணஞ் செய்விக்க உவல்சி எண்ணினுன் (1526). கதரினுடைய விவாகம் "வலியற்ற" தெனப் போப்பாண்டவர் கூறுவாரென அவன் நம்பினுன்.

(ஈ) கதரினின் மருமகனன ஐந்தாம் சாள்சு போப்பாண்டவரைக் கைது செய்ததால் (1527) அவர் அந்த மணம் "வெற்றவெறிது" எனக் கூறுவது சங்கடமாயிற்று.

(1) போப்பாண்டவர் கிளெமெந்து சரியான காலம் வரும்வரை பார்த்திருந்தார். உவல்சியுடன் சேர்ந்து இவ்விடயத்தை விசாரணை செய்வதற்காகக் கம்பெசியோ என்பவரை அனுப்பினர். தீர்மானிக்கமுடியாமற் போய்விட்டது. உவல்சி விடயத்தைப் பின் போடவிரும்பினுன். ஆன் பொலினை அவன் விரும்பவில்லை.

(2) போப்பாண்டவரை எதிர்க்க என்றி முடிவு செய்தான். அந்நிய நாட்டு நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்ததாக உவல்சிமீது என்றி குற்றஞ்சாட்டி. அவனைப் பதவியிலிருந்து நீக்கினுன். முதலமைச்சர் பதவியிலிருந்து விலக்கி அவமானப்படுத்தினுன். பின்னர் அவன்மீது அரசத் துரோகக் குற்றஞ் சாட்டப்பட்டது. இலண்டனுக்குப் போகும் வழியில் இறந்தான் (1530).

குறிப்பு 42—என்றியும், உரோமுடன் பிணக்கும்

உரோமன் கத்தோலிக்கக் கோட்பாட்டுக்கு என்றி மாருனவனல்லன் (இள வயதில் அவன் உலூதருக்கெதிராக எழுதினுன்). ஆனுல் அவன் போப்பாண்டவராட்சியை வெறுத்தான். மூர், கொலெற்றுப் போன்ற பத்திமான்கள் கூட அதை வெறுத்தனர்.

1. இங்கிலாந்தின்மீது போப்பாண்டவர்க்குள்ள அதிகாரத்தை என்றி கண்டிப்பதற்கு எதுவாயிருந்தது விவாக நீக்கவிடயம். போப்பாண்டவர் அதிகாரத்துக்கெதிராக முன் செய்த பல செய்கைகளை அவன் உதாரணமாகக் காட்டக் கூடியதாயிருந்தது. ஆங்கிலச் சர்வகலாசாலைகளையும், அதிமேற்றிராணியார் சபையையும், அபிப்பிராயங் கூறுமாறு அவன் கேட்டான். அவர்கள் அவனுடைய பழைய விவாகம் வெற்றவெறிதெனக் கூறினர்.

2. போப்பாண்டவரிடம் மேன்முறையீடு செய்வதை இங்கிலாந்து எப்பொழுதும் எதிர்த்தது. மேன்முறையீட்டுச் சட்டத்தினுல் மேலும் அது தடுக்கப்பட்டது (1533). இதன் பிரகாரம் ஆங்கில நீதிமன்றத்திலிருந்து எவ்வித மேன்முறையீடும் உரோமுக்கு அனுப்பமுடியாது. இதன் பின்னர் ஆன் பொலினுடன் தான் செய்துகொண்ட விவாகத்தை என்றி வெளியிட்டான். (திரான்மரின் தீர்ப்பை அவன் முடிவானதாகக் கொண்டான்.)

3. பணவிடயம் அவனுக்கு ஓர் ஆயுதமாயமைந்தது. இங்கிலாந்து முழுவதும் பின்வரும் விடயங்களை ஆட்சேபித்தது:

(அ) **ஆண்டிறை** கொடுத்தல் ; அதை என்றி தடைசெய்து கட்டீனை பிறப் பித்தான் (1532). ஆண்டிறையென்பது விசுப்பாண்டவரின் கோயிற்பற்றிலி ருந்தும் வேறு திருச்சபை மானியங்களிலிருந்தும் முதல் வருடத்தில் வரும் வருமானம்.

(ஆ) பலவழிமானியம், குருமார் விதிக்கும் வரி, குருமாருக்குவரும் இறை ஆகியவை. இவை தூப்பிரயோகத்தடைச் சட்டத்தினால் (1529) தடுக்கப்பட்டன. பலவழிமானியமென்பது ஒருவரே பல வருவாய்கீன மானியமாகவும், பல விசுப்பாண்டவரின் கோயிற்பற்றுக்களிலுமிருந்து பெறுதல்.

4. **அரசுரிமை விதி** என்றிக்கும் ஆனுக்கும் பிறந்த பிள்ளைகள் சட்டப்படி பட்டத்துக்குரியமையுடையவரென விதித்தது. போப்பாண்டவர் இரான்மரின் தீர்ப்பை (1534) நிராகரித்தார்.

5. **ஆதிக்க விதியின்படி** (1534) என்றி இங்கிலாந்துத் திருச்சபையின் தலைவனாகத் தன்னை ஆக்கிக்கொண்டான்.

இங்கிலாந்திலே போப்பாண்டவருக்குரிய அதிகாரங்களைத் தடுக்கும் சட்டங் களையெல்லாம் மூரும், பிசரும் ஆதரித்தனர் ; அரசுரிமைச் சட்டத்தையும் ஆதரித்தனர். ஆனால் திருச்சபைத் தலைவனாக என்றியை ஒப்புக்கொண்டு சத்தியப் பிரமாணஞ் செய்ய அவர்கள் விரும்பவில்லை.

6. திருச்சபைச் சொத்துக்களை என்றி அபகரித்தான். சிறிய மடங்களை ஒழித்தான். (1536) பெரிய மடங்களையும் ஒழித்தான் (1539).

குறிப்பு : மேலே கூறிய விதிகளெல்லாம் **சீர்திருத்தக் காலப் பாராளு மன்றத்தால்** நிறைவேற்றப்பட்டன, 1529–35.

7. **கத்தோலிக்கக் கோட்பாடுகளை** என்றி ஏற்றான். போப்பாண்டவர் அதிகாரத்தை அவன் ஏற்கவில்லை. **ஆறுகட்டளைச் சட்டங்களின்படி** (1539) திருச்சபையின் பிரதான கோட்பாடுகளை மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டு மென்றும் விதிக்கப்பட்டது. இக்கோட்பாடுகளாவன : சற்பிரசாதம், தனிப் பட்ட பூசை, பாவசங்கீர்த்தனம், குருமார் பிரமசரிய விரதம் பூணல், கற்பு விரதம், ஒரின நற்கருணை. இக்கோட்பாடுகளை மீறுவோர்க்குக் கடுந் தண்டனை விதிக்கப்பட்டது. பாசமயத்துக் கெதிராக, தான் திருச்சபையை ஆதரிப்பதாய் என்றி பாசாங்கு செய்தான்.

குறிப்பு 43. தோமசு குரம்வெல்

முதற் பெரிய பாமர மனைச்சன், திருச்சபை அங்கத்தவனாயிருந்த கடைசிப் பெரியோன் உவுல்சியாவன். குருமாரின் கோடியான குரம்வெல், உவுல்சி போலவே தனது சொந்தத் திறமையால் முன்னேறியவன். உவுல்சியின் கீழ்ச் சேவை புரிந்தவன். அவனுதவியால் முன்னுக்கு

வந்து அவனுக்கு விசுவாசமுள்ளவனாயிருந்தான். இத்தாலியிற் கல்வி பயின்றான். சட்ட அறிஞன் ; திருச்சபையங்கத்தவனல்லன் ; பணவிடயத் தில் வல்லவன் ; வியாபாரத்தில் வெற்றிகண்டவன்.

1. **அரசன் கையில் திருச்சபையின் அதிகாரத்தைக் கையளித்தவன்.**

(அ) அரச அனுமதி பெற்றவரே உபதேசஞ் செய்யலாம்.

(ஆ) ஆதிக்க விதியைக் குருமார் ஏற்றுக் கொள்ளுமாறு நிர்ப்பந்தஞ் செய்தான் (1534).

(இ) இவ்விதிக்கு மாறுனவரும் சத்தியஞ் செய்ய மறுத்தவருமான எல்லாரையும் ஒழித்தவன். மூர், பிசர், சாட்டரவுசுக்குருமார் என்போரைச் சிரச்சேதஞ் செய்வித்தவன்.

2. **மடங்களை ஒழித்தவன்.**

(அ) சிறுமடங்கள் ஒழிக்கப்பட்டன. (இவற்றிற் பல பயனற்றனவாயும் சீர்கேடான நிலையிலுள்ளனவாயுமிருந்தன.)இதனால் வடக்கே கலகமுண் டானது. மடங்களைப் புனருத்தாரணஞ் செய்யுமாறும் குரம்வெல்லை வேலை யிலிருந்து நீக்குமாறும் " அருள்யாத்திரை " கிளர்ச்சி செய்தது. கலகம் கொடியமுறையில் அடக்கப்பட்டது (1536).

(ஆ) **பெரிய மடங்களையும் அழிக்க முற்படல்** (1539).

காட்டியகாரணம் : மடங்கள் சோம்பலுக்கிருப்பிடமாகவும், சீர்கெட்ட செயல்கள் நிறைந்தனவாயும், பயனற்றனவாயிருப்பதாகவுங் காட்டப்பட்டது. மேலும், அவை போப்பாண்டவரின் ஆணையை ஏற்று நடந்தன. **உண் மையில்,** அரசன் மடங்களின் செல்வத்தை விரும்பினான். அவை செல்வம் மிக்கனவாயிருந்தன. அப்பணத்தைப் பிரபுக்களுக்கு வழங்கி அரசன் தன் கொள்கைகளுக்கு அவர்களுடைய ஆதரவைப் பெற்றான்.

விளைவுகள்.

(அ) நியூடர் பிரபுக்களும், மத்திய வகுப்பினரும், போப்பாண்டவருக்கு எதிராக முனைந்து நின்றனர்.

(ஆ) மடங்களால் வறியருக்கு நன்மை ஏற்பட்டது ; எனவே அவை ஒழிக்கப்பட்டமை அவர்களுக்கு இன்னல் விளைத்தது. மடங்கள் கருநாடக முறையில் வாழ்ந்த பிரபுக்களின் வாழ்க்கை முறையைக் கொண்டிருந்த தால் அளவுக்கு அதிகமான மக்களுக்கு வேலை கொடுத்தன. புதிய பிரபுக்களும், புதிய முறைகளும், அவ்வளவு பேருக்கு வேலை கொடுக்க வில்லை. அதனாற்சிறிது காலம் வேலை யில்லாத் தொல்லை பெருகிற்று.

(இ) புதுமுறை "அடைப்பு" ஆரம்பித்ததும், புதுவகைப் பண்ணையாளர் தோன்றினர். இதனால் காலகதியில் விவசாயம் வளர்ந்தது. மேய்ச்சற் றரைகளை அடைத்தமையால் ஆட்டு வளர்ப்பு விருத்தியாகித் கம்பளி வியாபாரம் முன்னேறிற்று.

3. இங்கிலாந்திற் சமயச்சீர்திருத்தம் முன்னேறுதல். திண்டேல்

திண்டேல் விவிலிய நூலை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்தான். குரம்வெல் **மைல்சு கவடேலின்** மொழிபெயர்ப்பை ஊக்கப்படுத்தினான். இவ்விருமொழி பெயர்ப்புக்களும் ஒன்று சேர்க்கப்பட்டுப் பெரிய திருமுறையாகத் திருச் சபையில் வழங்கப்பட்டன. ஆங்கிலத்திலே ஆராதனைசெய்யும் முறையும் அச்சடித்து வெளிப்படுத்தப்பட்டது.

4. குரம்வெலின் பிறநாட்டுப் பூட்கை

சேர்மனியிலுள்ள புரட்டசுத்தாந்திய அரசகுமாரருடன் நட்பைவிருத்தி செய்தான். பேரரசனுக்கும் போப்பாண்டவருக்கும் தொல்லை கொடுக்க எண்ணினான். இளீபிசு ஆனை விவாகஞ் செய்யத் தூண்டினான். இவள் புரட்டசுத்தாந்திய இளவரசி, விவாகம் தோல்வியுற்றது. குரம்வெல்லின் வீழ்ச்சியும், சிரச்சேதமும் (1540).

குறிப்பு 44. பிறநாடுகளிற் சமயச்சீர்திருத்தம்

1. சமயச்சீர்திருத்தத்தின் முன்னோடிகள்.

(அ) **ஏராசுமசு** (1467–1536), நெதலந்துவாசி ; மடத்தைவிட்டு வெளி யேறிக் கல்விமானாகவும், சீர்திருத்தவாதியாகவும் விளங்கினார். பாரிசிலும் ஒட்சுபோட்டிலும் கல்வியின்றார். சேர்மனி, இத்தாலியாகிய தேசங்களிற் பிரயாணஞ் செய்தார். குருமாரின் பழைய சம்பிரதாய முறையைக் கண் டித்தார் **(மடைமையின் மகிமை என்னும்நூலில்)** ; கிரேக்க மொழியி லுள்ள புதிய எற்பாட்டை மறுபடி புதிதாகப் பதிப்பித்தார் (1516). இலத்தினில் அதனை மொழிபெயர்த்து வெளிப்படுத்தினார். போப்பாண்டவர் அதிகாரத்தைக் கண்டித்தார்.

(ஆ) **தோமசு மூர்** (1478–1535) ஒட்சுபோட்டுச் சீர்திருத்தவாதி (இவ ருடன் கொலெற்றும் ஏராசுமசும் சேர்ந்து தொண்டாற்றினர்.) போப் பாட்சியிற் **சீர்திருத்த** முண்டாக வேண்டுமென விரும்பினர். "புதிய கல்வியில்" ஈடுபட்டார். **இலட்சியபுரி** என்ற நூலை (1526) எழுதினார். அக்காலச் சீர்கேடுகளையும், வறியவரின் இன்னல்களையும் எடுத்துக் காட்டி னார். சண்டையில்லாத, வறுமையற்ற, போகவாழ்வில்லாத, அரசாங்க சமயமென ஒரு சமயமற்ற கற்பனை உலகத்தை இந்நூலில் உருவகஞ் செய்தார். இங்கே எல்லாரும் வேலை செய்பவராயும், வேலையில் எல்லாரும் மகிழ்ச்சியடைபவராயுமிருப்பர் என எடுத்துக்காட்டினார்.

அரசனோடு சேர்ந்து உழைத்தார். அவனுடைய விவாக நீக்கத்தையும் மறுமணத்தையும் ஒப்புக்கொள்ளத் தயாராயிருந்தார். உவல்சி வீழ்ந்த பின் (1530) மண்டில நாயகரானார். கத்தோலிக்கக் கோட்பாட்டுக்கு அடங்கியவராய் ஆதிக்க விதியின் கீழ் (1515) சத்தியஞ் செய்ய மறுத்துத் தூக்கிலிடப்பட்டார் (1535).

2. சேர்மனியிலே சமயச்சீர்திருத்தம்.

(அ) **உலூதர்** ஒரு சமயகுரு. 1508 இல் தமது மடத்தைவிட்டு வெளி யேறினார். முதலிலே போப்பாண்டவரின் ஒழுங்கற்ற செயல்களைக் கண்டி தார். விசேடமாகப் பாவமன்னிப்பைத் தாக்கினார். போப்பாண்டவர் அவரைப் பிரசாரஞ் செய்ய வேண்டாமெனக் கட்டளையிட அதற்குப் மறுத்தார். போப்பாண்டவருக்கு மேலாக ஒரு சபையிருக்க வேண்டு எழுதினார். கோட்பாடுகளைக் கண்டித்தார். **வேமிசுச்சபையிலே** (1521) பாசமயத்தவரெனக் கண்டிக்கப்பட்டார்.

(ஆ) சேர்மனியிலுள்ள பல சிற்றரசர்கள் உலூதரின் கருத்துக்களை ஆதரித்துப் புரட்டசுத்தாந்திய சமயத்தை ஏற்றனர். கத்தோலிக்க திருச்சபையை ஆதரித்த பேரரசன் இவர்களைக் கண்டித்தான்.

3. சுவிற்சலாந்திலும் பிரான்சிலும் சமயச்சீர்திருத்தம்.

(அ) சுவிற்சலாந்திலே **சுவிங்கிலி**யென்பவர் தீவிர சீர்திருத்தவாதியாகப் போப்பாண்டவர் கோட்பாடுகளைக் கண்டித்தார்.

(ஆ) 1536 இல் **கல்வின்** என்ற பிரெஞ்சு அறிஞர் சுவிற்சலாந்துக்கு ஒடிப்போய் அங்கே **செனீவா**விற்றமது புதிய திருச்சபையைத் தாபித்தார். "விதி" "அருள்வழித் தெரிதல்" என்ற கொள்கைகளைப் போதித்தார். திருச்சபையைக் குடியாட்சிக்குரிய முறையிலமைத்தார். திருச்சபைஆட்சி, முதியோர் (பிரெசுபித்தர்) கையில் விடப்பட்டது. அதனால் இக்கொள்கை பிரெசுபித்திரியக் கொள்கை யெனப்பட்டது. குருமார் மற்றக் குருமாருக் குப் பட்டங்கட்ட அதிகாரம் வழங்கப்பட்டனர். விசுப்பாண்டவர் முதலிய பதவிகள் ஒழிக்கப்பட்டன. வெளிநாட்டுப் புரட்டசுத்தாந்திய திருச்சப கள் மூன்று பிரிவுடையன. உலூதர் திருச்சபை, சுவிங்கிலி திருச்சபை, கல்வின் திருச்சபை, இவை :

(1) போப்பாண்டவரதிகாரத்தை மறுத்தன.

(2) குருமாரை மாத்திரம் ஏற்படுத்தி பிசப்புமாரை ஒழித்தன.

(3) பூசைக் கோட்பாட்டை மறுத்தன.

(4) இலத்தினில் ஆராதனை நடத்தாமல், மக்களின் தாய் மொழியிலே அதை நடத்தின.

(5) ஒவ்வொரு மனிதனும் விலியிய நூலைக் கற்றுத் தனக்கேற்ற வகையில் அதற்கு விளக்கங் கொடுக்கலாமெனுங் கொள்கையிற்றமது கோட்பாட்டை அமைத்தனர்.

(ஆங்கிலத் திருச்சபை பலவழியில் கத்தோலிக்க மதத்தொடு இணங்கியுள்ளது. பூசைக் கொள்கை முதலியவற்றை அது தள்ளிற்று; ஆனால் விசுப்பாண்டவரை ஏற்றுக்கொண்டது. ஆராதனை ஆங்கிலத்திற் செய்யப்பட்டாலும், உரோமன் ஆராதனையை அடிப்படையாகக் கொண்டது. போப் பாண்டவருக் கெதிராக என்றி நிறைவேற்றிய சட்டங்களை மக்களிற் பெரும் பாலோர் ஆதரித்தனர். ஆனால் பின்னர் நாளடைவிலுண்டான மாற்றங்களை அவர்கள் விரும்பவில்லை.)

குறிப்பு 45. கொத்துலாந்தும் முதல் தியூடர் மன்னரும்

1. இப்பொழுது சுதுவட்டுக் குடும்பத்தவர் கொத்துலாந்தில் ஆட்சி நடத்தினர். **நாலாம் சேமிசு இங்கிலாந்துடன் நட்புப்பூண்டான். அவன் ஏழாம் என்றியின் மகளான மாகரெட்டை மணஞ்செய்தான்.**

2. (அ) எட்டாம் என்றி அரசு கட்டிலேறியதும், நாலாம் சேமிசுடன் பிணங்கினான். சேமிசு பிரான்சுடன் பழைய நட்பை வளர்த்து வந்தான். நாலாம் சேமிசு இங்கிலாந்தைத் தாக்கிப் **புளொடன்** களத்திலே தோல்வியுற்றான் (1513). அவன் மகன் 5 ஆம் சேமிசு பட்டத்துக்கு வந்தான்.

(ஆ) உரோமிலிருந்து என்றி பிரிந்ததும், தனது மருமகனான 5 ஆம் சேமிசையும் அவ்வாறே செய்யுமாறு என்றி கேட்டான். அதற்கு சேமிசு மறுத்தான். என்றி சேமனிய புரட்டசுத்தாந்திய இளவரசரோடு நட்புக் கொண்டதும், சேமிசு பிரான்சுடன் நட்புப் பூண்டு, **கூமேரியை** மணஞ் செய்தான்.

(இ) சேமிசு இங்கிலாந்தின் மீது படையெடுத்துச் **சோல்வே மோசு களத்திலே** (1542) தோற்கடிக்கப்பட்டனன். பின்னர் அவன் விரைவில் இறந்துபோனான்.

சேமிசின் ஒரே மகளான **மேரிக்குத்** தனது ஒரே மகனை **எட்டுவேட்டை** மணஞ்செய்து வைத்து இரு அரசையும் இணைக்க எட்டாம் என்றி விரும்பினான். **கீலிச்சுப்பொருத்தனையின்படி** (1543) கொத்துலாந்துப் பிரபுக்களிற் சிலர் உடன்பட்டனர். என்றி இறக்குமுன் இப்பொருத்தனை நடைமுறையில் வரவில்லை.

குறிப்பு 46. ஆரும் எட்டுவேட்டு

இவனுட்சியில் இரு பிரிவுகள்.
முதற்பிரிவு :—சொமசெற்று.

(அ) **சொமசெற்றுப் புரவலன்** (1547–52) சமயபத்தியுள்ளவன்; சீர்திருத்வாதி; வறியவரிடம் மிகுந்த அன்பு பூண்டவன்.

(1) **சமயப்பூட்கை. முதலாவது பிரார்த்தனைப் புத்தகத்தை** அமைக்குமாறு (1549) கிரான்மரைக் கேட்டான். இதன்படி பலவிடயங்களில் உரோம பிரார்த்தனைமுறை யனுமதிக்கப்பட்டது. தேவாலயங்களில் விக்கிரகங்களை யகற்றினான். அவன், சித்திரங்களையும், ஒளியங்களையும் நீக்கினான். வறியவர்க்கு உதவி புரிந்த சமயக்குழுமங்களின் சொத்துக்களைக் கைப்பற்றினான்.

(2) **பொருளாதாரப்பூட்கை.** மடங்களையொழித்ததாலும், அடைப்புக்களை யுண்டாக்கியதாலும், மதிப்புக்குன்றிய நாணயங்களை அடித்து வழங்கியதாலுமுண்டான இன்னல்கள். இவற்றையகற்றச் சொமசெற்று விரும்பினான். அத்துடன் வறியவர்க்கு உதவி புரியவும் விரும்பினான்.

(ஆ) **சொமசெற்றுக் கெதிராகக்கலகம்.**

(1) இலிசபெத்து அரசியை மணஞ் செய்யவும், அதிகாரத்தைக் கைப்பற்றவும், சொமசெற்றின் சகோதரன் **செய்மூர்** சூழ்ச்சி செய்திருக்கலாம். ஆலோசனைக்கழகம் அவனைச் சிரச்சேதஞ் செய்வித்தது.

(2) புதிய பிரார்த்தனைப் புத்தகத்துக் கெதிராகச் **சமயச்சார்பான** எதிர்ப்பு உண்டாகி **மேற்கிற்** கலக மேற்பட்டது. சொமசெற்று அதனை அடக்குதற்குச் சேர்மன் புரட்டசுத்தாந்திய போர் வீரரைக் கொணர்ந்தான். தெவன் பிரதேசம் முழுவதும் கத்தோலிக்க பூசைப் புனருத்தாரணஞ் செய்த) கலகக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டுப் பெருங்கொடுமைக் குள்ளாயினர் (1549).

(3) **நோபக்கிலே** கடுங்கலகமுண்டானது. **கெற்றின் கலகம்** (1559). இது அடைப்பினாலுண்டான வேலையில்லாத் தொல்லைக்கும் மதிப்புக்குன்றிய நாணயத்தினால் ஏற்பட்டவிலையுயர்வுக்கு மெதிராகத் தொடங்கியது. சொமசெற்று அக்கலகக்காரரிடத்து அனுதாபங் காட்டினான். அவர்களோடு சமதானஞ்செய்ய முயன்றான். அரசனின் ஆலோசனைக்கழகம் அதை எதிர்த்தது; உவரிக்கு (பின்னர் நொதம்பலந்துக் கோமகன்) கலகக்காரரையடக்கி அவர்களுக்குப் பெருங் கொடுமை விளைத்தான்.

(இ) **கொத்துலாந்துப் பூட்கையின் தோல்வி.**

கேதலிக்கப் பதிலாளியாயிருந்து கொத்துலாந்து ஆட்சியை நடத்தினுள். மேரி இராணிக்கு ஆறும் எட்டுவேட்டை மணஞ் செய்யும் பொருத்தனையை அவள் ஒப்புக்கொள்ளவில்லை. சொமசெற்று கொத்துலாந்து மீது படையெடுத்தான். **பிங்கிக் கள**த்தில் கொத்துலாந்தை முறியடித்தான் (1547) ஆனால் கொத்துலாந்தர் மேரியைப் பிரான்சுக்கு அனுப்பினர். சொமசெற்றின் வலோற்காரம், நட்புறவுக்கு முற்றுப்புள்ளியிட்டது.

2. **இரண்டாம் பிரிவு. நொதம்பலந்து** (1551–53). சொமசெற்று எல்லாராலும் திறமையற்றவனென ஒதுக்கப்பட்டான். அவனுடைய பதவிக்கு **நொதம்பலந்து** நியமிக்கப்பட்டான். இவன் சொமசெற்றிலும் பார்க்கத்தீவிரமான சீர்திருத்தவாதி; கொடுமையும் பேராசையுமுரு வெடுத்தவன்.

(அ) **சமயப்பூட்கை.**

(1) **நொதம்பலந்து இரண்டாவது பிரார்த்தனைப் புத்தகத்தை வெளி யிட்டான்.** (1552). இது தீவிரமானதும், புரட்சுத்தாந்தியச் சார்பு அதிக முடையதாயுமிருந்தது.

(2) **புரட்சுத்தாந்திய** அரசன் ஒருவனைப் பட்டத்துக்கு வைக்க வேண்டுமெனவும் நிச்சயித்தான். எட்டாம் என்றியின் இளைய சகோதரியும், அவனது மரண சாதனப்படி அரசுக்குரிமையுள்ளவளுமான மேரியின் வழியில் வந்த **சேன் ஓரே சீமாட்டிக்குத்** தனது மகன் இல்போட்டு இட்டிலியமனைஞ் செய்துவைத்தான. சேன் ஓரே சீமாட்டி புரட்சுத்தாந்திய சமயத்தைச் சேர்ந்தவள். ஆறும் எட்டுவேட்டையும் வசப்படுத்தி அவளுக்கே அரசுரிமையைக் கொடுக்குமாறு மரணசாதனஞ் செய்வித்தான்.

(3) ஆறும் எட்டுவேட்டு இறந்ததும் மேரியைக் கைதுசெய்ய முயன்றான்; ஆனால், முடியவில்லை. சேன அரசியாக விளம்பரஞ் செய்தான். (ஒன்பது நாள் அரசி). தோல்வியுற்றான்; மேரி, அரசுகட்டிலேறியதும், நொதம்பலந்தைத் தூக்கிலிட்டாள் (1553).

(ஆ) **பொருளாதாரப்பூட்கை.**

இவன் சொமசெற்றைப் போல வனைகளிடம் இரக்கம் காட்டவில்லை. அவர்களுடைய இன்னல்களை அறிந்து கொள்ளக்கூட விரும்பவில்லை.

(1) சிறு "தருமங்களை" ஒழித்தான்.

(2) நாணயத்தை மதிப்புக்குன்றச் செய்தான். பொருள் விலையை அதனால் உயர்த்தி வியாபாரத்தைச் சீர்கெடுத்தான்.

(3) அடைப்புக்களை அதிகரிக்கச் செய்தான்.

குறிப்பு: (இ) தியூடர்வமிசத்தின் ஆட்சித் தொடக்கத்திற் **பொருளாதாரப் புரட்சி.**

(1) புதிய உலகைக் கண்டு பிடித்ததால் ஐரோப்பாவில் தங்கமும் வெள்ளியும் நிரம்பின. அதனால் விலைவாசிகளுயர்ந்தன. சம்பளவிதம் மெதுவாகவே உயர்ந்தது. அரசாங்கம் "மதிப்புக்குன்றிய" நாணயங்களை அடித்து விட்டது; அதாவது, பணத்தின் மதிப்புக்குப் பொருத்தமான வெள்ளியை நாணயத்திற் சேர்க்காது நாணயங்களை அடித்தது. அதனாலும் நிலைமை மோசமடைந்தது. எனவே அன்னிய நாட்டவர் இந்த நாணயங்களை வாங்க மறுக்கவே வியாபாரம் குன்றியது.

(2) செம்மறியாட்டு வளர்ப்புக்காக நிலங்கள் அடைக்கப்பட்டன. ஆதியில் இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிற்று. பின்னர் கம்பளி வியாபாரம் விருத்தியடையவே, பட்டினத் தொழிலாளர் நன்மையடைந்தனர். விவசாய வேலை செய்வோருக்கு வேலை கிடைக்கவில்லை.

(3) இதனால் அவர்கள் பட்டினங்களுக்குக் குடிபோயினர். அங்கே தொழிலாளர் தொகை அதிகரிக்கவே, சம்பளமும் விழுந்தது. தொழிலில் விசேட பயிற்சி கொடுக்கும் முறை சீரழிந்தது.

(4) மடங்களும், தொழிற் குழுமங்களும், தருமபீடங்களும் ஒழிக்கப்பட, உதவி அவசியமான தருணத்திலே மக்களுக்குச் சகாயமில்லாது போயிற்று.

குறிப்பு 47. தியூடர் மேரி (1553–1558)

1. **சமயப்பூட்கை.**

(அ) மேரி மறுபடியும் உரோம சம்பிரதாயங்களைப் புனருத்தாரணஞ் செய்யவும், உரோம அதிகாரத்தில் முற்றுகச் சேரவும் திட்டமிட்டாள். கத்தோலிக்க பூசை மறுபடியும் வழக்கத்திற் கொண்டுவரப்பட்டது. எட்டு வேட்டின் சட்டங்கள் நிராகரிக்கப்பட்டன. சீர்திருத்தவாதிகள் நாட்டை விட்டோடினர். வேலை நீக்கப்பட்ட பிசப்புமார் மறுபடியும் வேலைக்கமர்த்தப் பட்டனர் (1554).

(ஆ) பரசமயத்துக்கெதிரான சட்டங்கள் மறுபடியும் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன. ஹூப்பர், இலத்திமர், இரிட்லி, கிரான்மர் என்போர் விசாரணை செய்யப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டனர் (1556).

(இ) போப்பாண்டவர் பிரதிநிதி இங்கிலாந்துக்கு வருதல்; இங்கிலாந்து உரோமுடன் மறுபடியும் பிணைக்கப்பட்டது. (ஆனால், திருச்சபை நிலங்கள் திருச்சபைக்குத் திருப்பிக் கொடுக்கப்படவில்லை).

பிறநாட்டுப் பூட்கை.

மேரியின் சமயப் பூட்கைகள் மக்களை எவ்வாறு பகைக்கச் செய்தனவோ அவ்வாறே அவளுடைய பிறநாட்டுப் பூட்கையும் பகைக்கச்செய்தது.

(அ) யோக்குவமிசத்து வாரிசான கோட்டினியை விவாகஞ்செய்ய மறுத்தாள்.

(ஆ) சிபானிய **பிலிப்பு மன்னனை மணக்கவேண்டுமென்று அவள் பிடிவாதமாயிருந்தாள்.** இதன்பயனாக **வயற்றுக்கலகம்** (1554) உண்டானது. அதனால் சேன்டிறே சிரச்சேதம் செய்யப்பட்டாள். அத்துடன் இலிசபெது அரசியும் சிறைவைக்கப்பட்டாள்.

(இ) சிபானிய நட்புறவின் பயனாகப் பிரான்சுடன் போர் செய்ய நேரிட்டது. அதனால் இங்கிலாந்து கலே நகரை இழந்தது (1558).

குறிப்பு :—பிரான்சுடன் இங்கிலாந்துக்குப் பிணக்குக் கிடையாது. சிபெயின் பலமுற்ற வல்லரசாகக் கிளம்பியதும், இங்கிலாந்து அதன் பகை நாடாயிற்று.

மேரியின் சார்பாகச் சில காரணங்களைக் கூறலாம். சமயச் "சகிப்புத் தன்மை" யென்பது அக்காலத்திலேயில்லை. (மேரி சமயத்தனிப்புறுத்தல்களை எவ்வளவு கடுமையாக நடத்தினளோ அவ்வாறே செனிவாவிற் கல்வினும் செய்தார்). பரசமயத்தவர் மனந்திரும்புவார்களென்றே அவள் எதிர்பார்த்தாள். மூன்று வருடத்தில் 300 பேர் தீக்கிரையாக்கப்பட்டனர். வெளிநாடுகளில் நடந்த கொடுமைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது இது அதிகமென்று கூறமுடியாது. மேரி தவறான பூட்கையை அனுசரிக்கிறாளெனவும் அதன்பயனாக மக்களைப் பகைக்கிறாளெனவும் பிலிப்பு எண்ணினான். எனவே மக்களைத் தன்புறுத்தவேண்டாமென அவன் வேண்டினான். ஆங்கிலேயர் அவள் செய்த கொடுமைகளை மறக்கவுமில்லை; மன்னிக்கவுமில்லை.

குறிப்பு 48. இலிசபெது செய்த சமய ஒழுங்குகள்

(அ) பிறப்பிலேயே இலிசபெது புரட்டசுத்தாந்தியச் சார்புடையவளானாள். அவள் ஆன் பொலினுடைய மகளானபடியால், போப்பாண்டவரோ, கத்தோலிக்கத் திருச்சபையோ அவளை அரசியாக ஒப்புக்கொள்ளவில்லை. என்றிக்கும் கதரினுக்கும் நடந்த விவாகம் சட்டபூர்வமானதெனவே கொண்டனர். எனவே ஆனுடைய விவாகம் சட்டபூர்வமானதென அவர்கள் கொள்ளவில்லை.

(ஆ) மேரியினைத்த சமயத்தனிப்புறுத்தல்களுக்கெதிராக நடந்த கிளர்ச்சியைப் பயன்படுத்த விரும்பினபடியால் அவள் **நடுநிலைக்கொள்கையை அனுசரித்தாள்.**

(1) போப்பாண்டவர் ஆதிக்கத்தை ஒழித்தாள்.

(2) "எல்லாவிடயங்களிலும்" அரசுக்கு ஆதிக்கமுண்டெனச் சட்டஞ் செய்யப்பட்டது. ஆனால் திருச்சபைத் தலைமை அரசுக்குக் கொடுக்கப்படவில்லை. **ஆதிக்கவிதி (1558).**

(3) திருச்சபையை எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டும். **ஒரு சீர்விதி 1558.** இவ்விதிப்படி ஆரும் எட்டுவேட்டின் இரண்டாவது பிரார்த்தனைப் புத்தகத்திலே போப்பாண்டவருக்கெதிராகவுள்ள கண்டனங்கள் நீக்கப்பட்டன.

(இ) சமயத்துன்புறுத்தல் நேரடியாகவில்லை.

தேவாலயத்துக்குச் செல்லாத கத்தோலிக்கர்மீது அபராதம் மாத்திரம் விதிக்கப்பட்டது. அரசிக்கெதிராக இராசத்துரோகஞ் செய்தவர்கள் மாத்திரமே சிரச்சேதஞ் செய்யப்பட்டனர். சமயக்கொள்கைகளுக்காகச் சிரச்சேதம் செய்யப்படவில்லை.

குறிப்பு 49. எதிர்ச்சீர்திருத்தம்

இலிசபெத்தின் இங்கிலாந்துத் திருச்சபை, **சீர்திருத்தப்பட்ட போப்பாண்ட வராட்சியோடு** போட்டியிடவேண்டியிருந்தது. போப்பாண்டவராட்சியிலுள்ள குறைகளை உரோம் திருச்சபையே தீர்த்துக் கொள்ளவில்லை.

(1) திரந்துக் கழகம் (1542—63) உலாதராற் கண்டிக்கப்பட்ட சில சீர்கேடுகளை இச்சபை நிவிர்த்தி செய்தது.

(2) **ஏசுசபை** (ஏசுசபையினர்) : திருச்சபையைச் சீர்திருத்தவும் விசேடமாகச் சிறுவர்க்குக் கல்வி புகட்டவும் இச்சபையங்கத்தவர் முயன்றனர். இச்சபை 1540 இல் போர் வீரனான உலோயலாவினால், திருச்சபைக்காகப் போதனையும், உபதேசமுஞ் செய்ய நிறுவப்பட்டது.

(3) போப்பாண்டவர்களும் உயர்நிலையுடையவராய், சிறந்த இலட்சியங்களையுடையவராயிருந்தனர். திருச்சபையைச் சீர்திருத்தும் இயக்கத்தை அவர்கள் வழிநடத்தினர்.

(ஆ) **கத்தோலிக்க மன்னர்கள்** தம்நாடுகளிலிருந்து, பரசமயத்தை ஒழிக்கமுயன்றனர்.

பொலிய அரசன் இரண்டாம் பிலிப்பு.

(1) சிபெயினிற் பரசமயத்தை ஒழிக்க, இன்குவிசிசன் என்ற மத விசாரணைச் சபையை அமைத்தான்.

(2) நெதலந்திலும் பரசமயத்தை ஒழிக்க முடிவுசெய்தான். (அதுவும் அவனது இராச்சியமே).

(3) அவசியமானால், பரசமயத்தவரான ஆங்கிலேயரோடு போர் தொடுக்கவும் எண்ணினான்.

பிரான்சிலே கத்தோலிக்கருக்கும், இயூசனருக்கும் உண்ணாட்டுப்போர் உண்டானது. சிங்காசனத்திற் கத்தோலிக்க அரசன் இருந்தான். கே குலத்தவர் தலைமையிலிருந்த சபை செல்வாக்குடையதாகவும் கத்தோலிக்கச் சார்புடையதாகவுமிருந்தது.

குறிப்பு.—இலிசபெத்தின் பிறநாட்டுப் பூட்கை எதிர்ச்சீர்திருத்த இயக்கத்துடன் நீண்ட போராட்டமாகவும், சமயந் துன்புறுத்தலைச் செய்து வந்த வல்லரசான கத்தோலிக்க சிபெயினுடன் சண்டையிடுவதாகவுமே யிருந்தது.

குறிப்பு 50. இலிசபெத்தும் கொத்துலாந்து மேரியும்

யோன் நொட்சின் போதனைகளின் பயனுகக் கொத்துலாந்து சமயச்சீர்திருத்தத்தை ஏற்றுக் கொண்டது, ஆனால், கொத்துலாந்து அரசியான மேரி சுதுவட்டு கத்தோலிக்க சமயத்தையே கைக்கொண்டாள்.

1. கேமேரி என்ற பதிலாளிக் கெதிராக நொட்சு கலகம் வினைத்தான் (1559). இதில் பிரான்சு தலையிடமுற்பட்டது. உடனே கொத்துலாந்து இலிசபெத்தின் துணையை நாடினது. அவள் துணையனுப்பினாள். **இலீது பொருத்தனைப்படி** (1560) இலிசபெது சீர்திருத்தவாதிகளோடு சேர்ந்து பிரெஞ்சுக் காரரை வெளியேற்றினாள்.

2. 1561 இல் **சுதுவட்டு மேரி** கொத்துலாந்துக்குத் திரும்பினாள்.

(அ) இலிசபெத்து தன்னைப் பட்டத்துக்குரிமையுள்ளவளாக அங்கீகரிக்க வேண்டுமென்று மேரி விரும்பினாள். ஆனால் இலிசபெத்து அதற்கு மறுத்தான் (தான் கூட விவாகஞ் செய்து கொள்ள வேண்டிவருமென்று நினைத்தாள்; அத்துடன் தான் ஒழுங்குபடுத்திய சமயவிடயங்கள், கத்தோலிக்க அரசி சிங்காசனமேறுவதாற் சீரழியக்கூடுமெனவும் நினைத்தாள்).

(ஆ) இலிசபெத்திற்கு ஆத்திரமூட்டும் நோக்கமாகவும் மேரி இடானிலியை விவாகஞ் செய்தாள். இடானிலி தியூடர் மாகரெட்டின் பேரப் பிள்ளையானபடியால் ஆங்கில அரசுக்கு உரிமைபெற்றிருந்தான். இந்த விவாகம் சரிவர வில்லை. ரிசியோவைக் கொலைசெய்ய இடானிலி உதவி புரிந்தான் (1566). அவனைப் பொதுவெல் (1567) கொலைசெய்தான். மேரி பின்னர் **பொதுவெல்லை** விவாகஞ் செய்தாள்.

(இ) கொத்துலாந்துப் பிரபுக்கள் மேரிக்கும் பொதுவெல்லுக்கும் எதிராகக் கலகஞ் செய்தனர். இலிசபெத்து அவர்களுக்கு ஆதரவளிக்க மறுத்தாள். மேரி **காபெரிக் குன்றிற்** சரணடைந்தாள். உடனே அவள் சிறைவைக்கப் பட்டாள். காவலிலிருந்து தப்பினாள். **இலங்சைட்டில்** அவள் தோற்கடிக்கப்படவே இங்கிலாந்துக்கு ஓடினாள்.

(ஈ) **இங்கிலாந்திலே மேரி : சூழ்ச்சிக்காலம்.**

(1) பேழைக்கடிதங்கள் உண்மையானவை என்பதை ஆணையாளர் குழு நிச்சயித்தபின், இலிசபெது மேரியைக் காவலில் வைத்தாள். மேரியை விடுதலைசெய்து, மணஞ்செய்து கொள்ள **நோபக்குசதி** செய்தான். அது தோல்வியுற்றது. பின்னர் அவன் சிபெயினுடன் சேர்ந்து இங்கிலாந்தின்மீது வெளிநாட்டுப் படைகள் படையெடுக்கச் செய்வதற்குச் சூழ்ச்சி செய்தான். வடக்கே கலகஞ் செய்த **பேசிக்** குடும்பத்தவரும் **நெவில்** குடும்பத்தவரும் தோற்கடிக்கப்பட்டனர். (1569).

(2) போப்பாண்டவர் **இலிசபெத்தை மதவிலக்கஞ் செய்தார்.** ஆங்கிலப் பிரசைகள் அவளுக்கு அடங்கி நடக்க வேண்டியதில்லையெனவும் கட்டளையிட்டார். இரிடோல்பி, சிபெயினுடன் சேர்ந்து சதிசெய்தான். அது தோல்வியுற்றது. (1571). 1580 இல் **ஏசுசபை மிசன்** இங்கிலாந்தில் மதமாற்றஞ் செய்வதற்கு அனுப்பப்பட்டது. **துருெக்குமோட்டன்** என்பவன் ஏசுசபைக் குருமாரோடு இலிசபெத்தைக் கொல்லச் சதி செய்தான். (1584). 1584 ஒரேஞ்சு உவில்லியம் கொலை செய்யப்பட்டான். 1586 இல் இலிசபெத்தைக் கொலை செய்யப் **பபிந்தன் சதி** செய்தான். மேரி இதற்கு உடந்தையாயிருந்தாளெனக் கண்டனர். மேரியை விசாரணைசெய்து, இராசத் துரோகக் குற்றத்துக்காக அவளைச் சிரச்சேதஞ் செய்தனர்.

குறிப்பு : முந்திய சதிகள் மேரியை விடுதலை செய்து அரசுக்குரிமை யுடையவளாக ஏற்கச் செய்வதற்காகச் செய்யப்பட்டன. அடுத்த சதிகள் இலிசபெத்துக்குப் பதிலாக அவளையே அரசுகட்டிலேற்றச் செய்யப்பட்டன. பிந்திய சதிகள் இலிசபெத்தைக் கொலை செய்யும் நோக்கத்துடன் செய்யப் பட்டன. இலிசபெத்துக்குப் பதிலாக மேரியைக் கத்தோலிக்கர் அரியாசனமேற்றக் கூடியதாயிருக்க, மேரி உயிரோடிருக்குமளவில் இலிசபெத்தின் உயிருக்கும் ஆபத்துண்டென்பதை ஒரேஞ்சு உவில்லியத்தின் கொலை உறுதிப்படுத்திற்று.

குறிப்பு 51. இலிசபெத்தின் சமூகச்சீர்திருத்தங்கள்

தியூடர் காலத்திலேற்பட்ட பொருளாதாரப் புரட்சி காரணமாய் உண்டான இன்னல்கள் இலிசபெத்தினுட்சியிற் காணப்பட்டன. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கப் பின்வரும் நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாள்:

1. **தொழில் பயில்வோர் நியதிச் சட்டம் (1563).** நீதிபதிகள் ஒழுங்காகக்கூடி விலைவாசிகளையும் சம்பளங்களையும் விதிக்குமாறு கட்டளை செய்தது. குறைந்த சம்பளம் நிருபணம் செய்வதும், தொழிலாளர் நுண்கலைகளிற் பயிற்சி பெறுவதை மேற்பார்வை செய்வதும் இந்தச் சட்டத்தின் நோக்கங்கள்.

2. **வறியவர் சகாயச்சட்டம் (1601).** இச்சட்டம் பின்வரும் கடமைகளை விதித்தது.

(அ) வறியவர் சகாயநிதிக்காக **வறியவர் வரி**யென ஒருவரியை எல்லாக் கோயிற்பற்றும் கொடுக்கவேண்டும்.

(ஆ) தருமசாலைகளிலும், வைத்தியசாலைகளிலும் வயோதிபரும், நோயாளிகளும் கவனிக்கப்படவேண்டும்.

(இ) சிறுவர்க்குத் தொழிற் பயிற்சியளிக்க வேண்டும்.

(ஈ) வேலையற்றோர்க்கு வேலை தேடிக் கொடுத்தல் வேண்டும. வேலை கிடைக்காவிட்டால் அனுதைகட்குப் படிச்செலவு வழங்கவேண்டும்.

(உ) வேலை செய்யக்கூடியவர்கள் வேலைசெய்யாதிருந்தால் அவர்களுக்குத் தண்டனை விதித்தல்.

குறிப்பு : குடிகள் பட்டினியால் வாடாமல் இருக்க அரசாங்கம் நடவடிக்கை யெடுக்க வேண்டும் என்பதை இலிசபெத்தின் திட்டம் முதல்முதலாக வரையறுத்தது. குடும்பத்தவர் பிரிந்து போகாமல் ஒன்றுயிருக்கவும் அது துணைசெய்தது.

3. **சமாதான நீதிபதி :** வறியவர்க்குச் சகாய மளித்தல், சம்பளம் விலை என்பவற்றை நிச்சயித்தல், சிறுசிறு குற்றங்களை ஒடுக்கல் என்பன இவர்கள் பார்க்க வேண்டிய கடமைகள் (சிறுகுற்றங்களுட் கத்தோலிக்கர் அரசாங்கச் சமயக்கட்டளைகளுக்கு இணங்காமலும், திருச்சபைக்குச் செல்லாமலுமிருப்பதும் அடங்கும்.)

குறிப்பு 52. ஆங்கிலமறுமலர்ச்சி

1. **இலக்கியம் :** இலிசபெத்துக் காலப் புலவர்கள் ; இது பெரிய இலக்கிய காலம்.

நாடகாசிரியர்கள் : செகப்பிரியர், மாலோ, வெபுத்தர், கிட்டு, போமண்ட் பிளெச்சர்.

புலவர்கள் : சிபென்சர், பென் யோன்சன், கிட்டினி முதலியோர்.

வேறு எழுத்தாளர் : அக்குளுட்டு (யாத்திரைக் கட்டுரை), சாப்புமன் (ஒமரின் நால்களை மொழிபெயர்த்தவர்) முதலியோர்.

2. **கலை :** கட்டடக்கலையிற் புதியமுறை ; கைப்பணிகளிற் பெரிய மறுமலர்ச்சி ; உடை : வெள்ளிவேலை ; சித்திர ஆடை நெய்தல் என்பன.

3. **இசை :** பேட்டு, ஒலந்தோ கிபன்போன்ற இசை ஆசிரியர்கள். கதகளி, பொம்மைக்கூத்து முதலியன. இவற்றில் இசையுஞ் சேர்ந்திருக்கும.

4. **கல்வி :** ஆண பெண இருபாலாருக்கும் உயர்தரமான கல்வி. அரசி நன்கு கல்வி பயின்றவள். பிரெஞ்சு, இலத்தின், இத்தாலி ஆகிய மொழிகளைப் பேசும் திறமை வாய்ந்தவள். இசை, ஓவியம் என்பவற்றிலே நிறமையுள்ளவள்.

இலிசபெது ஆட்சிக்காலம் பல துறையிற் பண்பாடுடையதாயிருந்தது. பொதுப்படையாக உயர்ந்த நாகரிகம் வாய்ந்ததாயிருந்தது. அதனால் அது ஆங்கிலச் சரித்திரத்தில் மிகச் சிறப்பு வாய்ந்ததொரு காலமாகும். நாட்டின வுணர்ச்சி தலைநின்றது. தமது நாடு சூட்டிய வெற்றிகளிலும், அதன் எல்லை விரிந்து புகழ் பரந்து கொண்டதிலும் ஆங்கிலர் பெருமையடைந்தனர். பொதுவாக இக்காலத்தில் எல்லா நாடுகளிலும் செல்வமும் பண்பாடும் வளர்ந்தன. அந்தப் பொது இயக்கத்தின் ஒரு அமிசமாகவே இங்கிலாந்திலும் இத்துறைகள் முன்னேற்றமடைந்தன.

குறிப்பு 53. இலிசபெத்தின் பிறநாட்டுப் பூட்கை

எழாம் என்றி, எட்டாம் என்றி, மேரி என்பவரைப் போலன்றி இலிசபெது எப்பொழுதும் சிபெயினை எதிர்த்தேவந்தாள். அவளுடைய பிறநாட்டுப் பூட்கைக்கு இது ஆதாரசுருதியாக இருந்தது.

இலிசபெத்தும் பிரான்சும்.

(அ) **சிபெயினுக்கு எதிராகப் பிரான்சை இலிசபெது பயன்படுத்தி வந்தாள்.** பிரான்சு கத்தோலிக்க நாடாயிருந்தபோதிலும், சிபெயினுக்கெதிராக இங்கிலாந்தின் உதவியை நாடிற்று. அதனால் இங்கிலாந்துடன் நட்புறவு செய்துகொள்ள ஆவலாயிருந்தது. பிரான்சுடன் கற்றே காம் பிரேசியில் உடன்படிக்கை செய்து கொண்டது (1559).

(ஆ) வலோய் அரசரோடு இலிசபெது இணக்கப்பேச்சு நடத்தினாள் ; விவாக சம்பந்தம் வைத்துக் கொள்ளவும் விரும்பினாள். முதலில் அஞ்சுக் கோமானுடனும் பின்னர் அரசனின் தம்பியான அலென்கனுடனும் விவாக ஒப்பந்தஞ் செய்ய விரும்பினாள்.

(இ) சென் பத்தோலமீயூசுக் கொலேக்குப் பின்னரும் அவ்வினைக்கப் பேச்சுக்களே இலிசபெது நிராகரிக்கவில்லே (1572).

(ஈ) வலோய் அரசன் இறந்த பின்னர் நவார் என்றியான நாலாம் என்றிக்கு உதவிபுரிந்தாள். அவனுக்கு ஒருவருடத்திலே 3,00,000 பவுண் அனுப்பினுள் (1589).

(உ) பிரான்சுக்கும் கொத்துலாந்துக்குமுள்ள நட்பின் வேகத்தைக் குறைப்பதற்காகவும் அவள் பிரான்சுடன் நட்புக்கொண்டாள். சுதுவட்டுமேரி ஆட்சியின்போது பிரான்சு மேரிக்கு ஆதரவளிக்கவில்லே ; ஆனுல் இலிசபெத்துடன் நட்பாகவேயிருந்தது.

இலிசபெத்தும் நெதலந்தும்.

சிபானிய அரசனுன இரண்டாம் பிலிப்பின் இராச்சியத்தில் நெதலந்தும் அடங்கிற்று. ஆனுல் அது தீவிரமான புரட்டசுத்தாந்தியச் சார்புடையதாயிருந்தது. சிபெயினிலிருந்து நெதலந்துக்குச் செல்லும் வியாபாரப் பாதை ஆங்கிலக் கால்வாய் வழியாகவே சென்றது. அது இங்கிலாந்தின் ஆதிக்கத்தில் இருந்தது. இலிசபெது நெதலந்தை ஆதரித்தாள். பிலிப்புக் கெதிராக நெதலந்து கலகஞ் செய்த பின்னர் (1568) இலிசபெது "உத்தியோகபூர்வமாக" அதற்கு உதவிசெய்யவில்லே.

(அ) அல்வாவின் படைகள் சீர்திருத்தவாதிகளேக் கொடுமைப்படுத்திய பொழுது நாட்டைவிட்டோடிய நெதலந்து வாசிகளுக்கு இலிசபெது **புகலிடங் கொடுத்தாள்.** இது ஆங்கில நெசவுத் தொழிலே விருத்தி செய்தது. ஏனெனில் பிளெமிங்கு மக்கள் சிறந்த நெசவுத் தொழிலாளராயிருந்தனர்.

(ஆ) வெடிமருந்து வாங்குவதற்காக இலிசபெது ஒரேஞ்சு உவில்லியத்துக்குப் **பணம் அனுப்பினுள்.** (பத்துவருடத்தில் 5 இலட்சம் பவுண் அனுப்பினுள்.).

(இ) அல்வாவின் படைகளுக்குச் சம்பளம் கொண்டு சென்ற சிபானியக் **கப்பல்களே அவள் கைப்பற்றினுள் (1568).**

(ஈ) 1584 இல் மௌனி உவில்லியம் கொலேயுண்ட பின் **இலெசுற்றர்** தலேமையில் ஒரு படையை நெதலந்து வாசிகளுக்குத் துணேயாக அனுப்பினுள். அது சட்பெனில் தோல்வியுற்றது.

குறிப்பு.—அரசனுக்கு மாறுக எழும் கலகக்காரருக்கு உதவி புரியக் கூடாதென்பதே இலிசபெத்தின் கொள்கை. ஏனெனில் குடிகள் அரசனே ஆதரிக்கவேண்டுமென்றும், அவன் கைக்கொள்ளுஞ் சமயத்தை அவர்களும் கைக்கொள்ளவேண்டுமென்றும் நம்பினுள். ஆனுல் பிலிப்புக்குத் தொந்தரவு கொடுக்கவேண்டுமென்ற எண்ணத்தினுல் இடச்சுக்காரருக்கு உதவிபுரிந்தாள்.

இலிசபெதும் போப்பாண்டவராட்சியும்.

இலிசபெத்தின் தாயான ஆன் பொலினுடன் என்றி செய்த விவாகம் சட்ட பூர்வமானதெனப் போப்பாண்டவர் ஏற்றுக் கொள்ளவில்லே.

(அ) இலிசபெத்துக்குப் பதிலாகச் சுதுவட்டுமேரி அரியாசனத்திலிருத்தப் படவேண்டுமெனப் போப்பாண்டவர் எதிர்பார்த்தார். அதனுல் அவர் நோபக்கின் சூழ்ச்சிகளுக்கும், இரிடோல்பியின் சூழ்ச்சிகளுக்கும் ஆதரவளித்தார் (1566–71). 1570 இல் இலிசபெது போப்பாண்டவராலே மதவிலக்கஞ் செய்யப்பட்டாள். குடிகளும் அவளுக்கு அடங்கி நடக்கவேண்டியதில்லே யென்று விதிக்கப்பட்டது.

(ஆ) 1584 இல் கத்தோலிக்க சமயத்தை இங்கிலாந்திலே மறுபடியும் புனருத்தாரணஞ் செய்வதற்காக "இங்கிலாந்துப் பிரயத்தனம்" என்பதைத் தொடக்கினுர்.

(1) கொத்துலாந்திலேயுள்ள சேமிசு என்ற இளவரசனேக் கத்தோலிக்க சமயத்துக்குத் திருப்புவதற்காக எசுமே சுதுவட்டு என்பவன் அனுப்பப்பட்டான். அம்முயற்சி தோல்வியுற்றது.

(2) அயலந்திலே குழப்பமுண்டாக்கப் போப்பாண்டவர் பிரதிநிதி அனுப்பப்பட்டார். அது தோற்றது.

(3) இங்கிலாந்தில் மதமாற்றஞ் செய்வதற்கு எசுபை அங்கத்தவர் முயன்றனர். தோல்வியுற்ற சுதுவட்டு மேரி 1587 இல் சிரச் சேதஞ் செய்யப்பட்டாள். அரசுரிமை சுதுவட்டு சேமிசுக்கு உரியதாயிற்று. அவன் புரட்டசுத்தாந்திய சமயத்தைச் சார்ந்தவன். 1588 இல் சிபானிய ஆமடா தோல்வியுற்றது. இக்காரணங்களால் கத்தோலிக்கர் தாம் வெற்றி பெறலாமென்றிருந்த நம்பிக்கையெல்லாம் தோல்வியடைந்தன.

குறிப்பு 54. இலிசபெது கைக்கொண்ட "தாமதம், இணக்கப்பேச்சு" என்ற பூட்கை

தாமதமும் இணக்கப்பேச்சும் இலிசபெத்தின் பூட்கையாயிருந்தன. அவை விலங்கமுடியாதவையெனக் கண்டிக்கப்படுவதுண்டு. ஆனுல் இலிசபெத்தின் நிலேமை பலமற்றதாயிருந்தது. உள்நாட்டில் சமயப் பிணக்கும் வெளி நாட்டில் பகையும், கொத்துலாந்தில் தொந்தரவும் அவளுடைய ஆட்சியைப் பலங்குன்றச் செய்தன. அத்தொல்லேகளேச் சீர்ப்படுத்தக் காலம் நேரவைப்பட்டது. எனவே அவள்

(அ) சமயவிடயங்களிற் சகிப்புத்தன்மை காட்டினுள். அதனுல் இங்கிலாந்தில் அமைதி நிலவ அவகாசம் அளிக்கப்பட்டது.

(ஆ) சதுவட்டுமேரியுடன் ஒல்லுமளவிற்கு நல்ல நட்பை மேற்கொண்டு வந்தாள். மேரி இங்கிலாந்திலே சரண்புகுந்தபொழுது அவளுக்கெதிராகக் கடும் நடவடிக்கையெடுக்க அவள் விரும்பவில்லை. அத்தியாவசியமென்று கண்டபின்னர்தான் அவ்வாறு செய்தாள். தனது புரட்டசுத்தாந்தியக் குடிகளிடையே குழப்பமுண்டாகும் என்ற காரணத்தால் மேரியைத் தனது வாரிசாக அவள் ஒப்புக்கொள்ளவில்லை.

(இ) இங்கிலாந்து பலம்பெறும்வரை **பிலெயினுக்கு** எதிராக நேரடியான நடவடிக்கையொன்றையும் அவள் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இரகசியமாகப் பிரான்சுக்கும், நெதலந்துக்கும் தூண செய்தாள். உத்தியோக பூர்வமாக அவள் திரேக்கின் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கவில்லை.

(ஈ) **பிரான்சுடன்** திட்டவட்டமான நட்புறவை அவள் செய்து கொள்ளவில்லை. அப்படிச் செய்தால் பிலிப்புத் தனக்குமாறாக நேரடியாய்க் இளம்பிவிடுவானென்று அஞ்சினாள். அதனால் பிரான்சுடன் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்திக்கொண்டே வந்தாள்.

(உ) இலிசபெத்தின் இராச்சியம் சிறியது ; பணமும் அதிகமில்லை ; வலிமைபொருந்திய சுற்றத்தவரோ துணையரசரோ இல்லை. அவளிடம் இருந்த ஒரே ஒரு ஆயுதம் இணக்கப்பேச்சுக்கள் மூலம் தான் விவாக சம்பந்தஞ் செய்யவிரும்புவதாக எமாற்றிக் கொண்டிருப்பதே. இதனால் வல்லரசுகள் நம்பிக்கையுடன் காத்திருந்தன. அவள் விவாகஞ் செய்திருப்பாளானால், அல்லது நிச்சயமாக வாக்களித்திருப்பாளானால், அன்னியநாட்டு இளவரசர்க்கு எவ்வித ஆசையுங்காட்டி அவர்களை அடக்கி வைத்திருக்க முடியாதவளாயிருப்பாள்.

குறிப்பு 55. ஆமடா (1583)

1. பிலிப்பு இங்கிலாந்தின் மீது படையெடுக்க வேண்டிய நிர்ப்பந்த முண்டானது. காரணம் :

(அ) சதுவட்டுமேரி தனக்குப்பின் இங்கிலாந்து அரசு, சபானிய பிலிப்புக்குச் சேரவேண்டுமென மரணசாதனம் எழுதினாள்.

(ஆ) இலிசபெது அப்பொழுது இடச்சுக்காருக்கு நேரடியாக உதவி வழங்கினாள்.

(இ) போப்பாண்டவர் பிலிப்புக்கு ஆதரவளித்தார்.

2. ஆமடா கடலிற் சண்டை செய்வதற்கு அனுப்பப்பட்ட கடற்படையன்று. நெதலந்திலிருந்த பாமாவின் சபானிய படையை இங்கிலாந்திற் கொண்டு வந்து இறக்குவதற்குத் தூண செய்யவே அக்கப்பற் கூட்டம் அனுப்பப்பட்டது.

3. எனவே கால்வாயிற் சண்டை செய்வதை அது தவிர்த்தது ; இடச் சுக்கடற்கரையை யடுத்து நங்கூரம் பாய்ச்சியது.

4. கலேயிலிருந்த நீக்கொழுவுங் கப்பல்கள் ஆமடாவைக் கலைத்து விட்டன ; **இரேவிலினை** அடுத்து நின்ற பிரித்தானியக் கப்பல்கள் அவை இடச்சுத் துறைமுகத்தையடையா வண்ணந்தடுத்தன. புயல் இளம்பி சபானியக் கப்பல்களைக் கடலிற் சிதறச் செய்தது. அவை வடக்கே சென்றன. கடற் சண்டையில் சபானியர் ஒன்பது கப்பல்களையே இழந்தனர். கொத்துலாந்து, அயலந்து கரைகளையடுத்து அறுபதுக்கு மேற்பட்ட கப்பல்கள் புயலிற் சேதமடைந்தன.

5. சபானியப் படைகளின் படையெடுப்பை எதிர்நோக்கிப் பெரியதொரு ஆங்கிலப் படை இடச்சுக்கரைக் கெதிரேயுள்ள **நில்பெரியிற்** காத்திருந்தது. பாமாவின் படைகள் அங்கேதான் வந்திறங்குமென எதிர்பார்த்தனர்.

குறிப்பு 56. இலிசபெதும் அயலந்தும்

1. இங்கிலாந்தும் கொத்துலாந்தும் புரட்டசுத்தாந்திய சமயத்தைக் கைக் கொண்ட காலத்திலே அயலந்து கத்தோலிக்க நாடாக விளங்கிற்று. "ஆங்கிலர்" தபினினைச் சுற்றியுள்ள மேல் பிரதேசத்திலே குடியேறியிருந்தனர். ஐரிசுப் பிரதானிகள் பெரும்பாலும், சுதந்திரமுடையவராயிருந்தனர். இது ஒனில் கலகத்தினால் விளக்கமாயிற்று. இது இலிசபெது ஆட்சியினாரம்பத்தில் (1567) நிகழ்ந்தது.

2. எதிர்ச்சீர்திருத்த இயக்கம் அயலந்திலே மிகவும் வெற்றிபெற்றது. எகசபை முயற்சிகள் பெரும்பயன் அளித்தன. 1579 **தெசுமண்டுக்** கலகமுண்டானது. சபானியரும், இத்தாலியரும், அயலந்திலே போயிறங்கினர். ஆனால் **சிமவிக்கிலே** அவர்கள் தோற்கடிக்கப்பட்டனர். **மன்சுற்றர்** அழிக்கப்பட்டு ஆங்கிலர் குடியேற்றப்பட்டனர்.

3. **திரோன்**கலகம் (1593—1603). இதற்கு சிபெயினும் போப்பாண்டவரும் உடந்தையாயிருந்தனர். இதையடக்க **எசெக்சு** 1599 இல் அனுப்பப்பட்டான். அவன் திரோனுடன் சதியாலோசனை செய்துபோர் நிறுத்தஞ் செய்துகொண்டு திரும்பினான். 1600 இல் மௌண்டு யோய் என்பவனை அனுப்பினர். அவன் சபானியப் படைகளை மின்சேலில் முறியடித்து 1603 இல் திரோனையும் முறியடித்தான்.

அயலந்து இப்பொழுது நசுக்கப்பட்டது.

ஆனால்

(அ) ஆங்கிலரைக் குடியேற்றுங் கொள்கையினால், விரோதத்துக்காளான சிறுச்சிறு குடியிருப்புக்களே தோன்றின.

(ஆ) அயலந்து கத்தோலிக்க சமயத்தையே கைக்கொண்டது. அதனால் இரு தேசத்துக்குமிடையில் நிரந்தரமான பிரிவு இருந்தது.

குறிப்பு 57. இலிசபெத்துகாலக் கடலோடிகளும், யாதிகரும்

கடற்கொள்ளைக்காரர்.

ஒக்கின்சு, நீவிரோ அடிமைகளை சிபானிய தென்னமெரிக்காவுக்குக் கொண்டு சென்று வியாபாரம் நடத்தினான். (1562), திரேக்கு, கவெண்டிசு, இராலி என்போர் அமெரிக்காமீது தாக்குதல் நடத்தினர்.

சிபானியர், **திரேக்கை** முதலிற் சான்யுவான்தவல்லோ என்ற இடத்திலே (1567) தோற்கடித்தனர். அவன் பழிவாங்க நிச்சயித்தான். 1572 பனுமாவில் வெள்ளிப் பொதியேற்றிச் சென்ற கழுதைக் கூட்டத்தைக் கைப்பற்றிய பிரசித்த சம்பவம்.

1577 இல் திரேக்கு பசிபிக்குச் சமுத்திரத்தையடைந்து தென்னமெரிக்காவின் மேற்கரையையடுத்த சிபானிய நகரங்களைக் கொள்ளையடித்தான். பேருவிலுள்ள பொன்னகரான எல்தொராடோவைக் காண்பதற்கு **இராலி** முயன்றான். பிரயாணங்கள் தோல்வியடைந்தன.

குறிப்பு :

(1) திரேக்கும் ஒக்கின்சும் உண்மையிற் கொள்ளைக் கூட்டத்தினரே. சிபானிய வியாபாரக் கப்பல்களையும், சிபானியப் பட்டினங்களையுங் கொள்ளையடித்துவந்தனர். மற்றவர்கள் மேற்திசை நாடுகளோடு வியாபாரஞ் செய்வதற்காக அங்கு போவதற்குப் புதிய மார்க்கங்களைக் காணுவதில் ஈடுபட்டனர்.

(2) சிபெயினுடன் சண்டைசெய்வது நிச்சயமானதும், இலிசபெத்தரசி திரேக்கைக் **கேடிசிலுள்ள** சிபானியக் கடற்படையைத் தாக்க அனுப்பினாள் (1587). "சிபானிய அரசனின் தாடியைப் பொசுக்குதல்" இதன் நோக்கம். ஆமடா படையெடுத்துவந்த பொழுது ஆங்கிலக்கடற் படைக்கு அவேட்டு பிரபு தளகர்த்தனாயிருந்தான். திரேக்கு அவன் கீழ் உள்ள பல தலைவரில் ஒருவனாயிருந்தான். சிபானியக் கப்பல்கள் கலேயை அடுத்து நங்கூரம் பாய்ச்சி நின்றபொழுது அவற்றை நாசஞ் செய்வதற்காக அவன் "நீக்கொழுவுங்கப்பல்களை" அனுப்பினான். 1589 இல் போர்த்துக்கலைத் தாக்குமாறு திரேக்கு அனுப்பப்பட்டான். ஆனால் தோல்வியுற்றான்.

புதியநாடுகளைக் கண்டுபிடித்தவர்கள்.

1577—80 இல் திரேக்கு மகலன் நீரிணையைக் கடந்து பசிபிக்குச் சமுத்திரத்திற் பிரவேசித்தான். பின்னர் **அம்மசர்க்கமாக** உலகைச் சுற்றி வந்தான். இதற்காக அவனுக்கு அவனுடைய கப்பலான **கோல்டின் ஈண்டில்** வைத்து நைற்றுப்பட்டம் வழங்கப்பட்டது.

கவெண்டிசும் உலகைச்சுற்றி வந்தான். கேவி நோய்க்குத் தேசிக்காய் நல்ல மருந்தென்பதை அவன் கண்டுபிடித்தான்.

அம்பிரி இல்பேட்டு நியூபண்ணிலாந்தில் குடியேற்றம் நிறுவ முயற்சிபண்ணினான் (1683).

இராலியின் கப்பல்கள் புளோரிடாவையும் **வேசினியாவையும்** கண்டுபிடித்து அங்கே அவைகள் ஒரு குடியிருப்பையுண்டாக்கின (1576).

புரேபிசர் என்பவர், கிரின்லாந்துக்கும், இலபிறதோருக்கும் சென்று பின்னர் **அட்சன்குடா** வைக் கண்டுபிடித்தான் (1578).

3. யாதிகர்.

பின்வரும் பெயர்வழிகள் இந்தியாவுக்கு நிலமார்க்கமாகச் செல்ல வழி காணமுயன்றனர். **சென்கின்சன்** (1558) இரசியாவூடாகப் பாரசீகஞ் சென்று அங்கிருந்து சீனாவுக்குச் செல்ல மார்க்கம் தேடினான்.

நியூபெரியும், பிச்சும் பாரசீகத்துக்குச் சென்று அங்கிருந்து இந்தியாவுக்கும் சீயத்திற்கும் போயினர்.

4. வியாபாரக் கம்பனிகள்.

இலிசபெது புதிதாக நிறுவப்பட்ட **வியாபாரச் சங்கங்களுக்கு** உரிமைப் பட்டயம் வழங்கி வியாபாரத்தை ஊக்கப் படுத்தினாள். தூரநாடுகளோடு

புதிதாக வியாபாரஞ் செய்யப்பட்டதால் இச்சங்கங்கள் நிறுவப்பட்டன. செலவைச் சமாளிப்பதற்காகக் கம்பனிகள் தமதுபொருளை ஒன்றுசேர்த்து வியாபாரம் நடத்தின.

மசுக்கவிக்கம்பனி (1553) இரசியாவுடன் வியாபாரம் நடத்திற்று, **ஈசுலந்து** கம்பனி (1579) போற்றிக்கு நாடுகளோடு வியாபாரஞ் செய்தது. துருக்கியுடனும் சமீபகிழக்கு நாடுகளுடனும் வியாபாரஞ் செய்ய **இலிவாந்துக்** கம்பனி (1581) நிறுவப்பட்டது. இந்தியாவுடனும் **கிழக்கிந்திய** தீவுகளுடனும் வியாபாரஞ் செய்யக் கிழக்கிந்தியக் கம்பனி நிறுவப்பட்டது (1600).

குறிப்பு 58. இலிசபெதும் பாராளுமன்றங்களும்

1. இலிசபெத்துக்குத் தேசமக்களின் ஆதரவு தேவைப்பட்டது. அம்மக்களின் விருப்பத்தையே பாராளுமன்றம் காட்டிற்று.

2. ஆனால் நாளடைவில் எங்கே தொல்லையுண்டாகும் என்பதையும், அதுவந்தே தீருமென்பதையும் பாராளுமன்றம் காட்டிற்று. பிணக்குண்டாகிய இரு முக்கிய விடயங்கள் சமயமும், பணமுமாகும்.

(அ) **பணப்பிணக்கு.**—விலைவாசிகள் உயர்ந்தன. ஆனால் பாராளுமன்றம் அனுமதித்த வருமானம் உயரவில்லை. அதனால் அரசிக்கு எப்பொழுதும் பணத்தட்டுப்பாடுண்டானது. இலிசபெத்தின் வருட வருமானம் 2,00,000 பவுண். இடச்சுக்காரருக்கும், பிரெஞ்சுக்காரருக்கும் உதவி செய்யவும், கலகங்களையடக்கவும், ஆமடாச் சண்டையிற் செலவு செய்யவும். அயலந்து விடயங்களைக் கவனிக்கவும் ஏராளமாகப் பணம் செலவாயிற்று, அதனால் முழுவுரிமைகள் வழங்கிப்பணம் சேர்க்கப்பட்டது. பாராளுமன்றம் இதனை ஆட்சேபிக்கவே இலிசபெது அதைக் கைவிட்டாள்.

(ஆ) **சமயம். பியூரித்தானியர்** இயக்கம். இலிசபெது பியூரித்தானியக் கோட்பாடுடையவளல்லள். சமயத் துன்புறுத்தலை அவள் விரும்பவில்லை. பிசப்புமார் பதவியை நீக்கவும் **பிரெசுபித்திரிய** சமயத்தை நிறுவவும் பியூரித்தானியர் விரும்பினர். (1587 இல் ஒரு முறி கொண்டுவரப்பட்டது). இவ்விடயத்தைப் பாராளுமன்றம் வாதிக்கக் கூடாதென இலிசபெது கட்டளையிட்டுத் தலைவர்களைக் கைதுசெய்தாள்.

ஐந்தாம் பருவத்தின் கால அட்டவணை (1486—1603)

இறை	பிரித்தானிய நிகழ்ச்சிகள்	காலம்	வெளிநாட்டு நிகழ்ச்சிகள்	காலம்
ஏழாம் என்றி (1485—1509)	என்றி, யோக்கு இலிசபெத்தை மணத்தல், கப்பலோட்டல் விதி	1485		
	இலாம்பேட்டு சிமினல்	1487	நன்னம்பிக்கை-முனையை தயசு சுற்றிச் செல்லல் கொலம்பசு அமெரிக்காவைக் கண்டுபிடித்தல், சோனகரின் கிரனடாவைச் சிபானியர் கைப்பற்றல்	1487
	பேக்கின் உவாபெக்கு : எத்தாபின்சு பொருத்தனை	1492		1492
	போயினிங்கின் சட்டம்	1494	பிரெஞ்சுக்காரர் இத்தாலிமீது படையெடுத்தல்	1494
	மகிறுசு இண்டர்கேசு	1496	உவேமிசு சபை	1495
			வசுக்கொடிகாமா இந்தியா செல்ல மார்க்கம் காணல் ; சமயத்துரோகிகளைத் தண்டிக்க நீதிமன்றம் சிபெயினில் நிறுவல் ; இந்தியத்தீவுகளின் ஆன்பதிப் பதவியிலிருந்து கொலம்பசு நீக்கப்படல்.	1498
	ஆதர் இளவரசன் அரசன் தேசத்துக் கதரினை மணஞ்செய்தல்	1501		
	மாகரெட்டு இளவரசி கொத்துலாந்து நாலாம் சேமிசை மணத்தல்	1502		
	அரசன் தேசத்துக் கதரினை எட்டாம் என்றி மணத்தல்	1509	கல்வின் பிறப்பு	1509
எட்டாம் என்றி (1509—1547)	உவுல்சி அதிகாரம்பெறல் ; புளொடன் யுத்தம் ; நாலாம் சேமிசு கொல்லப்படல்	1513	பரிசுத்த கூட்டவை	1511
	பிரெஞ்சு நட்புறவு	1414	சுப்பேசு யுத்தம்	1513
	உவுல்சி மணடிலநாயகன்	1515		

	மூர் உற்றேப்பியா (அல்லது இலட்சியபுரி) என்னும் நூலே எழுதல்	1516	அரசன் தேசத்துப் பேடினந்து மரணம்	1516
				1517
	இங்கிலாந்தும் 5 ஆம் சார்சுப் பேரரசனும் நட்புறவு செய்தல்	1520	பேரரசன் மட்சிமிலியன் மரணம்; கோட்டேச மெச்சிக்கோ மீது படையெடுத்தல்	1519
	இங்கிலாந்துக்கும் பிரான்சுக்கும்சண்டை	1522	பொன்னுடைக்களம்	1520
	என்றி பிரான்சுமீது படையெடுத்தல்	1525	சேர்மனியில் உழவோர் கலகம்	1524
	என்றியின் விவாக நீக்கப்பிரச்சினை	1527	பாலியாவிலே பிரான்சுக்காரர் தோல்வி	1525
			உரோமாபுரி தாக்கப்படல்	1527
	சார்திருத்தப் பாராளுமன்றம் கூடுதல்	1529	பிரான்சுக்கும் சிபெயினுக்கு மிடையிற் கம்பிரே ய்ச் சமாதானம்	1529
	உவல்சியின் மரணம்: மூர் மண்டிலநாயகனுதல்	1530		
	மேன்முறையீட்டு விதி; என்றி ஆன்பொலினே மணத்தல்	1533	பிசாரே பேருமீது படையெடுத்தல்	1532
	ஆதிக்க விதி	1534	கல்வின் "சட்டங்கள்" பிரசுரித்தல்; உலோயலா எசு சபை நிறுவல்	1534
	தொமசு குரம்வெல்; விக்கார் சொரல்; மூர் சிரச்சேதம்	1535		
	அருள் யாத்திரை; மடங்கள் ஒழிதல்; ஆன பொலின் சிரச்சேதம்; என்றி சேன்செய்மூரை மணத்தல்	1536		

மன்னன்	பிரித்தானிய நிகழ்ச்சிகள்	காலம்	வெளிநாட்டு நிகழ்ச்சிகள்	காலம்
	எட்டுவேட்டு இரவரசன் பிறப்பு	1537		
	பெரிய விலிலியசூல்: ஆறு உறுப்புக்கள்; என்றி, கிளீபிசு ஆனே மணத்தல்.	1539		
	குரம்வெல் சிரச்சேதம்; என்றி கதரின் அவேட்டை மணத்தல்	1540	எசுசபையைப் போப்பாண்டவர் அனுமதித்தல்	1540
			கல்வின் செனீவாவில் சபை நிறுவல்	1541
	ஐந்தாம் சேமிசு சோல்வே மோசகளத்தில் இறத்தல்	1542		
	பிரான்சுடன் போர்	1543		
	காடினல் பீற்றன் கொலே	1545		
	பிரான்சுடன் சமாதானம்	1546	உலூதர் மரணம்	1546
ஆரும் எட்டு வெட்டு (1547—1553)	சொமசெற்றுப் புரவலன் கொத்துலாந்துமீது படை யெடுத்தல்; பிங்கியுத்தம்	1547	கொத்துலாந்து இராணிமேரியைப் பிரான்சுக்கு அனுப்புதல்; ஒட்சுபேக்குச்சபை ஆரம்பம், முத லாம் பிரான்சிசு இறத்தல்	1547
	புறநேறியாளர் சட்டம் விலக்கல்	1548		
	முதலாம் பிரார்த்தனைப் புத்தகம்; ஒரு சீர்விதி; கெற்றுக் கலகம்; மேற்கிற் கலகம்; சொம செற்று கைது; நொதம்பலந்து புரவலன்	1549		
	தொழிற்குழுமங்கள் கலைக்கப்படல்	1550		
	சொமசெற்றுச் சிரச்சேதம்; இரண்டாம் பிரார்த் தனைப் புத்தகம்	1552		
	நொதம்பலந்து சிரச்சேதம்; உரோமுடன் சமாதா னம்; சபாவிய சம்பந்தம்	1553		

மன்னன்	பிரித்தானிய நிகழ்ச்சிகள்	காலம்	வெளிநாட்டு நிகழ்ச்சிகள்	காலம்
மேரி (1553—1558)	வயற்றின் கலகம்; சேன்கிறெசிமாட்டி சிரச்சேதம்; பிலிப்புக்கும் மேரிக்கும் மணம்;	1554		
	இங்கிலாந்தும் உரோமும் நட்பாதல்; புரட்டசத் தாந்திய துன்புறுத்தல்; பிலிப்பு இங்கிலாந்தை விட்டுச் செல்லல்	1555		
	சொன்மோ எரிக்கப்படல்	1556	5 ஆம் சார்ளப் பேரரசன் முடிதுறத்தல்	1556
	பிரான்சுடன் யுத்தம்	1557		
	கலே வீழ்ச்சி	1558	கொத்துலாந்து இராணி மேரி உடோபினே மணத்தல்	1558
இலிசபெத்து (1558—1603)	பிரான்சுடன் கற்றேக்கம்பிரெசி உடன்படிக்கை நொட்சு கொத்துலாந்துக்குத் திரும்புதல்; இங்கிலாந்தில் சமயலிடயங்கள் நீக்கப்படல், ஒரு சீர்லிநி; ஆதிக்கவிதி	1559	சதுவட்டுமேரி பிரெஞ்சு இராணியாதல்; பிரெஞ்சுப்படை இலீதுக்குச் செல்லல்; சென்பின்சன் மொசுக்கோவுக்குச் செல்லல்	1559
	பிரெஞ்சுக்காரர் கொத்துலாந்தைவிட்டு வெளியேறல்	1560	இரண்டாம் என்றி மரணம்	1560
	எடின்பரே உடன்படிக்கை சதுவட்டுமேரி கொத்துலாந்துக்குத் திரும்புதல்	1561		
	நொக்சின்சு அடினம வியாபாரம் ஆரம்பித்தல்	1562	சமயச்சண்டை பிரான்சில் ஆரம்பம். நெதலந்திற் கலகம்	1562
	வேலே பமிறியெலிக்கும் நியதிச் சட்டம்	1563	திரெந்துச்சபை முடிவடைதல்	1563
	செகப்பிரியர் பிறப்பு	1564		
	மேரி இடாளிலியை மணத்தல்	1565		
	இரிசியோ படுகொலை	1566		
	இடாவிலி படுகொலை மேரி பொதுவெல் திருமணம்	1567	நிரேக்கும் ஒக்கிவ்சும் சான்சுவான் தவுல்லோவில்; அல்வா நெதலந்துக்கு அனுப்பப்படல் நெதலந்தில் யுத்தம்	1567
	இலங்சைட்டுக்களச்சண்டை; மேரி இங்கிலாந்துக்குடல்	1568		

	வடக்கே கலகம்	1569	சோனகரின் கலகம் அடக்கப்படல்	1569
			இலிசபெது மதவிலக்கம் செய்யப்பட்டமை	1570
	இரிடோல்பிச்சதி	1571	இலெப்பாந்தோலில துருக்கியருக்கெதிராக வெற்றி	1571
	நோபக்கு சிரச்சேதம்	1572	சென்பாதலோமியூக்கொலே; ஒலெம்முற்றுகை	1572
	புரேபிசர் வடமேற்கே யாத்திரை செய்தல்	1576	அன்துவேப்பு முற்றுகை	1576
	திரேக்கு உலகைச் சுற்றல்	1577—81		
	அயலந்திற் கலகம்	1579		
			போத்துக்கலைச் சிபெயின் கைப்பற்றல்	1580
	கம்பியன் சிரச்சேதம்	1581		
	இல்பேட்டு நியூபண்ணிலாந்துக்குச் செல்லல். துருக்குமோட்டன் சூழ்ச்சி	1583		
			மெனனி உவில்லியம் கொலே	1584
			மேற்இந்தியத்தீவுகளைத் திரேக்கு கொள்ளையடித்தல்; இலீதர் நெதலந்துக்குப் படையெடுத்துச் செல்லல்.	1585
	பபிந்தன் சூழ்ச்சி	1586		
	கொத்துலாந்திய மேரிராணி சிரச்சேதம்	1587	கேடிசில் திரேக்கு	1587
	சிபானிய ஆமடா	1588		
			கதரின் மெடிசி மரணம்; நவார் என்றி பிரான்சின் அரசன்	1589
	இரிவெஞ்சு	1591		
			பாமாக்கோமகன் மரணம்	1592
	திரோன் கலகம்	1595		
	திரேக்கின் மரணம்	1596		
			இரண்டாம் பிலிப்பு மரணம்; நாலாம் என்றி நந்தி சுக்கற்பனே பிறப்பித்தல்	1598
	இழக்கிந்தியக் கம்பனி நிறுவல்	1600		
	வறிஞர் சகாயச் சட்டம்	1601		

ஐந்தாம் பருவத்திற் பரீட்சை வினுக்கள்

(1485—1603)

1. ஏழாம் என்றி முடியாட்சியைப் பலப்படுத்த எடுத்த முக்கியமான நடவடிக்கைகள் எவை ? (L. G. S. 1935).

2. வெளிநாட்டிலிருந்து ஏழாம் என்றிக்கு என்ன ஆபத்துக்கள் உண்டாயின ? அவற்றைத் தவிர்க்க அவன் என்ன நடவடிக்கை எடுத்தான் ? (N. U. J. B. ரு. 1836)

3. 1485 தொடக்கம் 1558 வரை இங்கிலாந்துக்கும் கொத்துலாந்துக்குமிருந்த தொடர்புகளை விளக்குக. (N. U. J. B 1937)

4. ஏழாம் என்றியின் உள்நாட்டுப்பூட்கையை விளக்குக. (N. U. J. B. 1938)

5. 16 ஆம் நூற்றாண்டிலே இங்கிலாந்தில் நிலவிய முக்கிய பொருளாதாரப் பிரச்சினைகளெவை ? அவற்றைச் சமாளிக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ? (135) (L G. S. 1935)

6. எட்டாம் என்றி உரோமிலிருந்து என்ன நோக்கங்களுக்காகப் பிரிந்தான். (O. C. 1938).

7. ஆங்கிலவரலாற்றிலே ஏழாம் என்றியினுட்சி புதிய யுகமொன்றை ஆரம்பித்த தெவ்வாறென்பதை விளக்குக (U. W. 1932)

8. இங்கிலாந்தின் அறிவியல் வாழ்க்கையில் (அ) அச்சுத்தொழில் (ஆ) "ஒட்சுபோட்டுச் சீர்திருத்தவியக்கம்" என்ற இரண்டும் உண்டாக்கிய மாற்றங்களென்ன ? (O. L. 1932)

9. மேற்காணும் பெருமக்கள் புரட்டசுத்தாந்தியச் சீர்திருத்தம் பற்றி எத்தகைய கொள்கை யுடையவராயிருந்தனர் என்பதை விளக்குக (அ) சேர் தோமசுமூர் ; (ஆ) தெசிதேரிசு எராசுமாசு ; (இ) மாட்டின் உலூதர் ; (ஈ) எட்டாம் என்றி (C. W. B 1931)

10. எட்டாம் என்றி இறக்கும்பொழுது சமயச்சீர்திருத்தம் எவ்வளவு தூரம் வளர்ச்சி யடைந்திருந்தது ? (L. G. S 1937)

11. எட்டாம் என்றி போப்பாண்டவராட்சியை (அ) ஏன் (ஆ) எவ்வாறு எதிர்த்தான் என்பதை விளக்குக. (N. U. J. B. 1937)

12. சமயச்சீர்திருத்தத்தில் (அ) பிரான்மர், (ஆ) சொமசெற்று என்பவர்கள் என்ன பங்கு எடுத்தனர் ? (N. U. J. B 1938)

13. (அ) பிரான்சு, (ஆ) சிபெயின், (இ) அயலந்து ஆகியதேசங்களுடன் எட்டாம் என்றிக்குள்ள தொடர்புபற்றிய முக்கிய அமிசங்களைவிளக்குக. (N. U. J. B 1938)

14. உவல்சியின் பிறநாட்டுப்பூட்கையை ஆராய்க. (O. C. 1938)

15. சீர்திருத்தப் பாராளுமன்றம் முடிவுற்ற 1536 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரும் எட்டுவேட்டு இறந்த 1553 ஆம் ஆண்டுவரை இங்கிலாந்திலே சமயச்சீர்திருத்தம் அடைந்தவளர்ச்சியைப்பற்றி விவரிக்க. (L. G. S. 1936)

16. (அ) பிரான்மர் அதிமேற்றிராணியார், (ஆ) புரவலன் சொமசெற்று என்பவர்கள் இங்கிலாந்தின் சமயச்சீர்திருத்தத்துக்கு எவ்வாறு உதவி புரிந்தனர் ? (C. L. 1932)

17. இக்காலப்பகுதியிலே விளைநிலத்தை மேய்ச்சல் நிலமாக மாற்றியதால் சமூகத் துறையிலும், பொருளாதாரத்துறையிலுமுண்டான மாற்றங்களென்ன ? (N. U. J. B. 1931)

18. தியூடர் இங்கிலாந்திலே பொருளாதார நெருக்கடியுண்டாவதற்கு முக்கிய காரணங்களெவை ? அது எவ்வளவு தூரம் நீக்கப்பட்டது ? (O.C. 1938).

19. ஆரும் எட்டுவேட்டுக் காலத்தில் (அ) சமூகத்திலே அல்லல் உண்டாணமை சம்பந்தமாகவுள்ள முக்கியவிடயங்களெவை ? (ஆ) இந்தப் பிரச்சினை சம்பந்தமாக சொமசெற்றின்பூட்கை, நொதம்பலந்தின் பூட்கை என்பவற்றின் முக்கிய போக்கு என்ன ? (N. U. J. B. 1937)

20. தியூடர்காலத்தில் நடந்த தேச ஆராய்ச்சியின் போக்கை வரைக. (L. G. S. 1936)

21. தியூடர்காலத்தில் ஆங்கிலக்கடற்படை வளர்ச்சி, கடலாதிக்கம் என்பவற்றின் முக்கிய அமிசங்களைக் கூறுக. (N.U.J.B. 1938)

22. ஆங்கிலச் சரித்திரத்தில் ஆரும் எட்டுவேட்டின் ஆட்சிக்காலம் அல்லது மேரியின் ஆட்சிக்காலம் எவ்வாறு முக்கியத்துவமுடையது ? (O.C. 1939)

23. "தியூடர்மேரி அரசுகட்டிலேறியபொழுது மக்கள் அதனை வரவேற்றனர். அவள் இறந்தபொழுதும் அவர்கள் மகிழ்ந்தனர்" இக் கூற்றை ஆராய்க. (1935)

24. (அ) முதற் பத்துவருட ஆட்சியில் இலிசபெத்துக்குண்டான இன்னல்களெவை ? (ஆ) அவற்றை அவள் எவ்வாறு நீக்கினள். (N.U.J.B. 1937)

25. கொத்துலாந்துமேரி அரசியை எக்காரணத்தாற் சிரச்சேதஞ் செய்தனர் ? அதனாலுண்டான அரசியல்விளைவுகளென்ன ? (O. C. 1938)

26. சிபெயினுடன் யுத்தஞ் செய்ய இலிசபெத்து ஏன் முதலிற் றயங்கினள் ? பின்னர் யுத்தத்தில் என் ஈடுபட்டாள் ? (O.C. 1939)

27. 1588 வரை இலிசபெது அனுசரித்த பிறநாட்டுப் பூட்கையை விவரிக்க. அது வெற்றிபெற்ற தெனக் கருதுகிறீரா ? (L.G.S. 1936)

28. இலிசபெது சிபெயினுடன் யுத்தஞ்செய்யவேண்டியதற்குக் காரணங்களெவை ? (N.U.J.B. 1936)

29. "இலிசபெது என்னவிடயத்திலும் தீர்மானமானமுடிவு செய்தது குறைவு ; பிரசினைகள் தாமாகவே தீர்ந்துவிடக்கூடியவாறு அவற்றை விட்டுவந்தாள்" இக்கூற்றுக்கேற்ப ஆராய்க. (O.C. 1931)

30. இலிசபெதின் பிறநாட்டுப்பூட்கை அவளுடைய தந்தையின் கொள்கையினும், பேரனின் கொள்கையினும் எவ்வாறு வித்தியாசப்பட்டதென் பதைக் காட்டுக. (L.M. 1919)

31. இலிசபெது அவள் காலத்து அரசர்களுக்கு முன்மாதிரியாக விளங்கினாள். இக்கூற்றை ஆராய்க. அக்காலத்து இங்கிலாந்தின் செல்வவளத்துக்கு அவள் எவ்வளவுதூரம் துணையாயிருந்தாள் ? (L.M. 1920)

32. 1559 தொடக்கம் 1568 வரை இங்கிலாந்துக்கும் கொத்துலாந்துக்கு மிடையிலிருந்த தொடர்பை விளக்குக. இக்காலத்தில் அதி முக்கியமாகக் கருதப்பட்ட கொத்துலாந்துப் பிரச்சினை என்ன ? (O.C. 1931)

33. இலிசபெத்தினாட்சியில் இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையிலிருந்த தொடர்பை விளக்குக. (L.M. 1922)

34. "எதிர்ச்சமயச்சீர்திருத்தம்" என்பதை விளக்குக. இலிசபெத்து ஆட்சியில் எதிர்ச்சமயச்சீர்திருத்தம் எவ்வாறு இங்கிலாந்தைப் பாதித்தது ? (L.M. 1921)

ஆறும் பருவம்

முடிக்கும் பாராளுமன்றத்துக்குமுண்டான போராட்டம் 1603–1688

9 ஆம் அதிகாரம்

முதலாம் சேமிசும் (1603–1625) அவனுடைய பிறநாட்டுப் பூட்கையும்

இங்கிலாந்தின் வளர்ச்சி, ஒவ்வொரு நீலையிலும், அதன் முடியரசினின் குண இயல்பினுறு பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தது. பதினேழாம் நூற்றாண்டின் முதற்பகுதியில், உண்ணாட்டிலும் வெளிநாடுகளிலும், மிக இன்னல் தரக்கூடிய பிரச்சினைகளெழுந்தன. அப்பொழுது அரசரின் குணவியல்பே இங்கிலாந்தைப் பெரிதும் பாதித்தது. இதுபோல வேறு எந்தக்காலத்திலும் அரசனின் குணவியல்பு நாட்டின் வளர்ச்சியைப் பாதிக்கவில்லையெனலாம். ஆங்கில அரியாசனத்திலமர்ந்து ஆண்ட முதலிரு கூறவட்டு அரசரைப்பற்றிச் சிறிது உடனடியாகக் கூறுவது பொருத்தமுடையதாகும். இவர்களில் முதலாம் சேமிசு இலிசபெது இறந்ததும் 1603 இல் அரசுகட்டிலேறி 1625 ஆம்ஆண்டு வரை ஆட்சி நடத்தினான். அவன் மகன் முதலாம் சார்சு 1625 தொடக்கம் 1649 வரை ஆண்டான்.

முதலாம் சேமிசின் குணவியல்பு

பிரித்தானிய அரியாசனத்திலமர்ந்த அரசருள் முதலாம் சேமிசு போலக் கல்வியறிவிற் சிறந்தவனில்லை எனக் கூறப்படுகிறது. அவன் உண்மையிற் கல்வியிற் பெரியவனே. சிறு வயதில் அவன் முதுக்குறை உடையவனே[1]. பிற்காலத்திலே அவன் ஓரளவு சிறந்த பாட்டெழுதினான். அவன் பேச்சும், எழுத்தும் உயிருடையன வாயும், சாமர்த்தியமுடையனவாயுமிருந்தன[2]. விடயங்களைப் பற்றி அபூர்வமான அறிவுடையவனாயிருந்தான். மதவியலிற் சிறந்த அறிவுபடைத்திருந்தான். அன்னியநாட்டு அரசியலைப் பற்றி அறிந்திருந்தான். நூல்கள் பலவற்றை வாசித்தான் ; குதிரையேற்றத்திலே மிகுந்த திறமை பெற்றிருந்தான். எல்லாவிதமான அப்பியாசங்களிலும் விருப்புடையவனாயிருந்தான். வேட்டையாடுவதில் மகாநிபுணன். நகைச்சுவை மலிந்த பேச்சுடையவன் ; தந்திரசாலி. 1621 இல் பாராளுமன்றத்துத் தூதுக்குழுவொன்று அவனைக் காணவந்து நின்றபொழுது, அது

1. பத்துவயதில் முன்னூயத்தாமினறியே அவன் இலத்தின் விவிலியநூலிலிருந்து வாசித்து அதைப் பிரெஞ்சில் மொழிபெயர்க்கவும், பிரெஞ்சிலிருந்து நேரே ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும் நிறமையுடையனாயிருந்தான், எனச் சமகாலத்து வசித்த ஒருவன் எழுதினான்

2. "புகையிலை மறுப்பு" என்ற நூல் கருட்டுப் பிடிக்கும் பழக்கத்தைக் கடுமையாகக் கண்டிப்பது அவனுடைய நூல்களுள் இதுவுமொன்று.

தன்னுடைய அதிகாரத்துக்குப் போட்டியாயிருப்பதையுணர்ந்த முதலாம் சேமிசு "இவ்வரசாங்க தூதருக்கு முக்காலிகளைக் கொண்டுவாருங்கள்" என்று கூறினன். அவனுடைய அமைச்சரில் ஒருவன்மீது பழிமாட்டலுறுதி அனுமதியளிக்குமாறு அவன் மகனை சார்ளசு அவனைக் கேட்டபொழுது "உன்மீது போதும் போதுமெனப் பழிமாட்டறையப்படுவதை நீ உயிரோடிருந்து காண்பாய்" என்று தீர்க்கதரிசனத்துடன் கூறினன். நல்ல நோக்கமுள்ளவன் சேமிசு. தனது கடமையைச் செய்வதிலேயே கண்ணுங் கருத்துமுடையவனாயிருந்தான். "அடைகாக்கும் பிரமாண்டமான கோழியைப் போல, தனது சிறகுகளை விரித்துப் புதிய இராச்சியம் முழுவதையும் அவற்றுள் மகிழ்ச்சியுடன் அடக்கிக் காப்பாற்றினன்" என அவனைப் பற்றி நகைச்சுவையுடன் எழுதப்பட்டது. அவன் விரிந்த கருத்துக்களையுடையவன். யுத்தகாலத்திலே அவன் "சமாதானஞ் செய்வோர் பாக்கியவான்கள்" எனக் கூறிக்கொள்வான். சமயத்துன்புறுத்தல் நடந்த அக்காலத்திலே அவன் சமயச்சகிப்புத்தன்மையை விரும்பினன். போப்பாண்டவருடன் சமாதானஞ் செய்யவிரும்பினன். சமயச்சண்டைகளுக்கு முற்றுப்புள்ளி போடவிழைந்தான். இங்கிலாந்துக்கும் கொத்துலாந்துக்குமிடையில் அரசியலைக்கியம் ஏற்படுவதையும் அதனாலுண்டாகக்கூடிய பெரு நன்மையையும் அவன் தனியாக நின்று உணர்ந்தான். இந்த ஐக்கியம் 1707 வரை உண்டாகவில்லை.

மக்கோலே என்ற ஆசிரியர், "சேமிசு அலங்கோலமான உருவமும், தளர்நடையும், சாற்றுவாய் முடையவனாயிருந்தான்" என எழுதினர். அது உண்மையாயிருக்க முடியாது. உண்மையானாலும், அதற்கு அவன் பாத்திரவாளியல்லன். அவனுடைய தோற்றம் பரிகாசத்துக்கிடமானதாகவோ அருவருப்பானதாகவோ இல்லாவிட்டாலும், கவர்ச்சிகரமானதன்று. அவனுடைய பழக்கவழக்கங்கள் பெரும்பாலும் இனியவையல்ல. ஆனால் இக்குறைகளுக்கெல்லாம் அவனுடைய குணங்கள் ஈடாக அமையவில்லை. சோம்பேறி; கட்டுப்பட்டு வேலைசெய்ய விரும்பாதவன்; விபரங்களைப்பற்றிச் சிந்திக்கும் தன்மை அவனிடமில்லை. அச்சமுள்ளவன்; ஒன்றை நிச்சயித்துக்கொள்ளும் இயல்பில்லாதவன்; இது அவனுடைய பிறநாட்டுப் பூட்கையிலிருந்து தெரியவந்தது. பெரிய திட்டங்களை அவன் போட்டாலும், அவை நிச்சயமற்றவை. திடமான தன்மையில்லாதவை. தற்பெருமை நிறையவுடையவன். அவனுடைய அரசவைச் சுற்றம் அவனை "இங்கிலாந்தின் சொலமன்" என்று கூறியபோதிலும் இத்தகைய முகமன்கூட அவனுக்குப் பரம திருத்தியளிக்கவில்லை. அவன் கற்றறிமோழையாகவும் அதிகப் பிரசங்கியாகவுமிருந்தான். அதனால் எக்காலப் பொதுமக்கள் சபைப் பிரதிநிதிகளையும் சீற்றமடையச் செய்யக்கூடியவனாயினன். சமயோசிதமாகக் காரியம் பார்க்கும்திறமையோ அனுதாபமனோபாவமோ அவனிடமில்லை. கொத்துலாந்திலே பிறந்து அங்கேயே வளர்ந்து வந்தபடியால், சாதாரண ஆங்கிலேயரின் சாதாரண அபிப்பிராயங்களை அறியமுடியாதவனாயிருந்தான். பிரெஞ்சு மன்னன் ஒருமுறை சேமிசை பற்றிக் கூறுமிடத்து "இறித்தவ இராச்சியங்களிலுள்ள மடையர்களுள் இவனே மிக்ஞானம் படைத்தவன்" என்று கூறினன். இது அவனுடைய உண்மையான தன்மையை விளக்கும் கூற்றெனலாம்.

முதலாம் சார்ளின் குணவியல்பு

அவனுடைய மகனும், அவனுக்குப் பின் பட்டத்துக்கு வந்தவனுமான முதலாவது சார்ளசு தந்தையினும் மிக வேறுபட்ட குணம் படைத்தவன். வண்டைக்கு என்ற ஒலியன் தீட்டிய படமும் "உயிர்த்தியாகி" யாக அவன் அடைந்த நிலையும் பல மக்களை அவன்மீது வெறுப்புக்கொள்ளாது செய்தன. உண்மையில் சார்ளிடம் பல நல்லியல்புகள் காணப்பட்டன. இவன் சாந்தசுபாவமுடையவன். மனைவி மக்கள்மீது மிகப் பிரியமுடையவன். கலையில் ஆர்வமுள்ளவன்; (உண்ணூட்டுப்போர் உண்டாவதற்கு முன்னர் இவனிடத்திருந்த சித்திர மண்டபம் ஐரோப்பாவிலேயே முதன்மை பெற்றது[1].) நல்ல இலக்கியத்திற் பிரியமுடையவன்; சேகப்பிரியரியற்றிய நூல்களைப் பெரிதும் பயின்றான். அரசகாரியங்களைச் சிரமம் பாராது ஆற்றிவந்தான். ஆனால் அரசனென்ற முறையில் பல முறைகளைக் கொண்டிருந்தான். மௌனமும் பிடிவாதமும் உடையவன். தன் விடயங்களில் மூழ்கியிருக்கக் காணப்பட்டான். கற்பனையில்லாதவன்; மற்றவர்கள் கருத்தை அறியும் ஆற்றலில்லாதவன்; நம்பிக்கைக்குப் பாத்திரமானவனல்லன். உள்ளொன்று வைத்துப் புறமொன்று வாக்களிக்குமியல்புடையவனாயிருந்த படியால் வாக்குறுதியைக் காப்பாற்ற முடியாதவனானான். உண்ணூட்டு விடயங்களிலும், வெளிநாட்டலுவல்களிலும் அவன் கடைப்பிடித்த தந்திரங்களை விபரமாய் அறியாதவர் அவனைத் தூறுதல் எத்துணை கடினமென்பதை அறியமாட்டார். ஒரே நேரத்தில் அவன் மூன்று நாலு முரணான திட்டங்களை அனுசரிப்பான். எனவே முயற்சிகள் பயனற்றுப் போவது நூதனமன்று. "முயற்பண்ணையில் முயல்பெருகுவதுபோல இவ்வரசன் மூளையிலும் சூழ்ச்சிகள் பெருகும். மற்றவர்கள் காணுமலிருப்பதற்காகவோ எதிரிகளிடமிருந்து ஒளித்துக்கொள்வதற்

1. அரசன் சிரச்சேதஞ் செய்யப்பட்டதும், பொது நலவாயம் அச்சித்திர மண்டபத்திலுள்ள ஓவியங்களிற பெரும்பகுதியை விற்றுவிட்டது. இவை இன்று அயல்நாடுகளிலுள்ள சித்திர கலாமன்றங்களிற் காணப்படுகின்றன. விசேடமாக பரிசு, மத்திரிட்டு, இலெனின்கிராட்டு ஆகிய நகரங்களிற் காணலாம்.

காகவோ முயலினம் மறைந்துவிடுவதுபோல இவனுடைய சூழ்ச்சிகளும் மறையும்" என்று மற்றோர் அரசனைப்பற்றி ஒருவர் கூறியவாக்கியம் இவனுக்கும் ஒக்கும்[2].

1603 இல் இங்கிலாந்தின் நிலைமை

இவ்விரு அரசரின் குணவியல்புகள் இத்தகையவே. இனி முதலாம் சேமிஸ் தன்னையெதிர்த்த பிரச்சினைகளை எவ்வாறு தீர்த்துவைத்தானென்பதை ஆராய்வாம். இவனுடைய பிறநாட்டுப் பூட்கை சம்பந்தமாயெழுந்த பிரச்சினைகளை முதலில் ஆராயவாம். அன்னிய நாட்டு அரசியல் விடயங்களிற் றலையிடுவதற்குப் பாராளுமன்றத்திடம் பணம் பெறச் செய்த முயற்சி சுதுவட்டு மன்னருக்கும் பாராளுமன்றத்துக்குமுள்ள தொடர்பைப் பெரிதும் பாதித்தது (குறிப்பு 59). சில துறையில் முன்னிருந்ததிலும் பார்க்க இங்கிலாந்து **1603** இலே உறுதியான நிலையிலிருந்தது. கொத்துலாந்து மன்னனுயிருந்த ஆரும் சேமிஸ இங்கிலாந்துக்கும் மன்னனாய் இங்கிலாந்தின் முதலாம் சேமிஸ என்ற அபிடேகத்திருநாமம் பெற்று ஆட்சியை ஏற்றபொழுது, பன்னூற்றாண்டாகப் பகைசாதித்து வந்த இவ்விரு நாடுகளும் ஒருமுடிக்கீழ் ஒன்றுபட்டன. ஐரோப்பாவில் உள்ள இங்கிலாந்தின் பகைவர் இதுகாறும் கொத்துலாந்தைத் தமது நட்புநாடாக்கி வந்தனர். அது மிகவசதியாய் விளங்கிற்று. இங்கிலாந்து அன்னிய நாடுகளோடு யுத்தத்திலீடுபட்ட காலங்களிலெல்லாம் கொத்துலாந்து இங்கிலாந்தின்மீது படையெடுக்கத் தவறியதில்லை. ஆனால் இப்போது தொடக்கம் கொத்துலாந்து பெரும்பாலும் இங்கிலாந்தின் நட்புநாடாகவே இருந்து. இங்கிலாந்தின் அன்னியநாட்டு விவகாரங்களில் கொத்துலாந்து பகைமை சாதிக்கவில்லை. மேலும் அரசுரிமைக்குப் போட்டியிருக்கவில்லை. அதனால் அன்னியநாட்டவர் போட்டியிடுவோர்க்குத் துணைபுரியவேண்டிய சந்தர்ப்பமும் எழவில்லை. அதனால் அரசுரிமைப்பிணைக்கொழிந்தது. சிபெயின் முலம் இங்கிலாந்துக்குத் தொல்லையுண்டாகவில்லை. 17 ஆம் நூற்றாண்டின் முற்பாகத்திலும், அதன் பின்னரும் ஆங்கிலேயர் சினியரை வெறுத்தனர். ஆனால் அவர்கள் மாட்டு அச்சங்கொள்ள வில்லை. அதற்குக் காரணமுமிருக்கவில்லை. இலிசபெத்து அரசகாலத்தில் இங்கிலாந்து சிபெயினின் பேராசைக்கும்,

2. இளரண்டன் பிரபுவான எட்டுவேட்டு ஐட்டு என்பன இவ்வரசனின் ஆலோசகரில் ஒருவன். அவன் இவனுடைய இயல்பைச் சுருக்கமாகப் பின்வருமாறு நிரப்டிக் கூறினன்; அது நினைவிலிருத்தத்தக்கது; "முடிவாகக் கூறுவதானால் இவன் சானறேறிற் சான்றோன்; சிறந்த எசமான்; நல்ல நண்பன், சிறந்த கணவன்; சிறந்த தந்தை, இவன் காலத்தில் வாழ்ந்தவரில் இவனே சிறந்த சிறித்தவன். இவன் சிறந்த அரசனல்லன்; சில அரசர் உயர்வும், இன்ப வாழ்வுமடைவதற்கு உதவிய சில குணங்களிவனிடமில்லை. ஆனால் இவனிலும் அரைப்பங்கு குணநலமும் திறமையும் உடைய எந்த இளவரசனும் இவனைப் போலத் துன்பமடையவில்லை. எவ்வித குற்றமுமில்லாதவனுயிருந்தும் இவனைப்போல் அல்லற்படவில்லை.

பின்னர் பிரான்சின் பேராசைக்கும் இலக்காகி அந்நாடுகட்கஞ்சி வாழ்ந்த படியால், ஐரோப்பிய விடயங்களிலே பெரிதும் கவனஞ் செலுத்தி வந்தது. இப்பொழுது அந்நிலைமை மாறியபடியால் ஐரோப்பிய அரசியலிற் கவனஞ் செலுத்தாதிருந்தது.

சேமிசின் அமைதிப்பூட்கை

1618 ஆம் ஆண்டிற்கு முற்பட்டகாலத்திலே முதலாம் சேமிஸ அனுசரித்த பூட்கையைப் பற்றி ஈண்டு ஆராயவேண்டியதில்லை. சேமிசின் அமைச்சனான சோல்சுபெரிபிரபு **1612** இல் இறக்கும்வரை எல்லாவிடயங்களிலும் மேற்பார்வை செய்து வந்தான். அமைதிக்குகந்த விழிப்பான பூட்கையை அவன் பின்பற்றிவந்தான். சோல்சு பெரி பிரபுவின் மரணத்தின்பின்னர் சேமிஸ தனது மக்களிருவருக்கு விவாக ஒழுங்கைச் சித்தஞ் செய்தான். மகனான இலிசபெது மிகுந்த அழகுவாய்ந்தவள். அவள் "இதய ராணி" என எல்லாராலும் புகழப்பட்டவள். இரையின் பிரதேசத்தைச் சேர்ந்த பலற்றைன் தேயத்துத் தேராளியும் ஒரேஞ்சு உவில்லியத்தின் பேரனும் சேர்மனியிலே கல்வின் கட்சிக்குத் தலைவனுமாயிருந்த இளவரசனே **1613** இல் அவள் மணந்தாள். தனது மகனை சாள்சைப் போப்பாட்சிக்குப் பேராதரவு வழங்கிவந்த சினிய மன்னன் மகளுக்கு மணஞ்செய்யத் திட்டமிட்டான். இந்நோக்கத்துடன் **1617** இற் பேச்சுவார்த்தை தொடங்கினன். ஆனால் இது நிறைவேறவில்லை. இம்முயற்சிபற்றிக் குடிகள் ஐயமும், வெறுப்புங் கொண்டனர்.

1618 இல் சேர்மனியின் நிலை

1618 இல் முப்பதாண்டுப்போர் தொடங்கிற்று. இந்தப் போரில் ஐரோப்பிய தேசங்களெல்லாம் பங்குபற்றவேண்டி வந்தது. முக்கியமான ஐரோப்பிய தேசங்களெல்லாம் ஈடுபட்டன. இதனற் பாரதூரமான விளைவுகளுண்டாயின. இந்த யுத்தத்தைப் பற்றியும் பெரியபிரித்தானியா நிலைநாட்டிய பங்கைப்பற்றியும் அறிவதற்கு இக்காலத்துச் சேர்மனியின் நிலைமையை அறிவதவசியமாகும். 17 ஆம் நூற்றாண்டிலே சேர்மனி 300 அரசுகளைக் கொண்ட பரிசுத்த உரோம இராச்சியமாக விளங்கிற்று. அதன் பேரரசன் தெரிவு செய்யப்பட்டு வாழ்நாள் முழுவதும் அரசுரிமையை அநுபவித்து வந்தான். பல்வேறு அரசுகளின் தலைவருக்கு மிடையே மிக்க வேறுபாடிருந்து வந்தது. சில அரசுகளின் தலைவர் நாட்டுக்கூட்டிணைப்பைப் பலப்படுத்திப் பேரரசனுக்கு அதிக அதிகாரங் கொடுக்கவேண்டுமென எண்ணினர். வேறுசிலர் அதற்கு மாறுக இருந்தனர். ஆனால்முக்கியமான பிரிவு கத்தோலிக்கருக்கும் புரட்டசுத்தாந்தியருக்குமிருந்த மதப்பிரிவே. வடபகுதியிற் புரட்டசுத்தாந்தியர் அதிகமாயிருந்தனர். தெற்கிற் கத்தோலிக்கர் அதிகமாயிருந்தனர்.

பொகீமியத் தேர்தல் (1619)

1619 இல் நெருக்கடியையுண்டாக்கக்கூடியதொரு சம்பவம் நிகழ்ந்தது. சேர்மனியில் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்தவன் அபிசுபேக்குக்குலத் தலைவன். அவனே எப்பொழுதும் பேரரசனுகத் தெரிவுசெய்யப்பட்டான்[1]. இப்பேரரசன் ஒசுத்திரிய இராச்சியங்களிற் பெரும்பகுதியையும் அங்கேரியையும் ஆண்டுவந்தான். அவற்றுடன் இவனே பொகீமிய அரசனுகவுமிருந்தான். அங்கேரியைப்போலவே பொகீமியாவிலுள்ள பிரபுக்கள் புரட்டசுத்தாந்தியராயிருந்தனர். ஆயின், அபிசுபேக்குக் குடும்பமோ கத்தோலிக்க மதத்தில் உறுதிப்பற்றுடையது. எனவே 1619 இல், பொகீமியப் பிரபுக்கள் பேரரசனின் மரணத்தைத் தருணமாகக்கொண்டு ஆளுங்குலத்தில் மாற்றமுண்டாக்க விரும்பினர். சேமிசின் மருமகனும் பலற்றைனின் நேராளியும், புரட்டசுத்தாந்திய சமயத்தைச் சேர்ந்தவனுமாகிய பிரடரிக்கிற்கு முடியை வழங்கினர். முடியை ஏற்பது பற்றிப் பிரடரிக்கு சேமிசின் யோசனையைக் கேட்டான். சேமிசு அதைப்பற்றி நிச்சயஞ் செய்யக் காலதாமதமானபடியால்[2] அவன் முடிவுக்கு வரும்வரை காத்திராமல் முடியைப்பிரடரிக்கு ஏற்றுக்கொண்டான்.

மூப்பது ஆண்டுப்போரின் ஆரம்பம் (1619–22)

பிரடரிக்கு அரசனைப் பற்றிப் போப்பாண்டவர் கூறியபொழுது "அவனை வரசன் சிக்கலானதொரு பாதையிற் செல்லுகிறான்" எனக் குறிப்பிட்டார். போப்பாண்டவர் கூறியது உண்மையே. ஒசுத்திரிய இராச்சியங்களின் தலைவனும் புதிய பேரரசனுமான பேடினந்தே, பொகீமிய அரசுக்கு உரிமையுடையவனென்று சேர்மனியிலுள்ள கத்தோலிக்கரெல்லாரும் ஒன்றுசேர்ந்தனர். ஆனால் புரட்செத்தாந்திய இளவரசர்கள் பிரடரிக்கை ஆர்வமாக ஆதரிக்கவில்லை; **பிரேக்கு** நகருக்கு வெளியேயுள்ள **வைற்றுமில்** களத்திலே பிரடரிக்கின் படை ஒரு மணநேரத்திலே தோற்கடிக்கப்பட்டது. பிரடரிக்கு பொகீமியாவிலிருந்து துரத்தப்பட்டான் (1620). அவ்வளவில் விடயம் முடியவில்லை. பவேரியக் கோமகன் தனது எல்லையையடுத்துள்ள மேற்பலற்றினேற்றுப் பிரதேசத்தின்மீது படையெடுத்து அதைக் கைப்பற்றிக் கொண்டான் (1621). இது பிரடரிக்கின் இராச்சியத்தைச் சேர்ந்த ஒரு பகுதியாகும். சிபானிய அரசன் கத்தோலிக்க சமயியாயிருந்தபடியாலும், பேடினந்துக்குச் சகோதரன் முறையானவனுய் இருந்தபடியாலும், இந்தப் பிணக்கிலே தலையிட்டான்; நெதலந்திலிருந்த தனது

1. 1438 ஆம் ஆண்டு தொடக்கம் பகிரத்த உரோம இராச்சியம் வீழ்ச்சியுற்ற 1806 ஆம் ஆண்டு வரை எப்பொழுதும் அபிசுபேக்கு வமிசத்தவரே பேரரசாகத் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். 18 ஆம் நூற்றாண்டிற் சொற்ப காலம் மாத்திரம் ஒசுத்திரிய இராச்சியத்தை ஓர் அரசி ஆண்ட காலத்தில் அவ்வாறு தெரிவு செய்யப்படவில்லை.

2. விடயம் மிக அவசரமாய்த் தீர்மானிக்கப்படலிருந்தபோதிலும் சேமிசு "நான் அதை ஆலோசிக்கிறேன்" என்று மாத்திரம் பிரடரிக்கின் தூதுவனிடம் கூறினான்.

படையிலொன்றை இரைன் நதியையடுத்திருந்த கீழ்ப்பலற்றினேற்றுப் பிரதேசத்தைக் கைப்பற்றுமாறு அனுப்பினான் (1622). இவ்வாறு யுத்த ஆரம்பத்திலே பலற்றைன் நாட்டுத்தேராளி புதிதாகத் தனக்குக் கிடைத்த இராச்சியத்தை மாத்திரமன்றித் தனக்குச் சொந்தமாயிருந்த பரம்பரைச் சொத்தையுமிழந்தான்.

இங்கிலாந்தின் பூட்கை

பெரிய பிரித்தானியா இச்சண்டையில் என்ன பங்கெடுத்ததென்பதை இனிக் கவனிப்போம். ஆங்கில இளவரசியின் புரட்டசுத்தாந்தியக் கணவனுன பிரடரிக்கிற்கு ஆதரவளிக்கவேண்டுமென்று பிரித்தானிய மக்கள் கூறினர்[1]. அரசாங்கம் புரட்டசுத்தாந்திய பூட்கையை மேற்கொள்ளவேண்டுமென விரும்பி உடனே பிரித்தானியா சிபெயின் மீது போர் தொடுக்கவேண்டுமென அவர்கள் விரும்பினர். இவ்விடயத்திற் பொது மக்கள் கொண்ட அபிப்பிராயம் சரியே. பலற்றினேற்றைத் தான் கைப்பற்றினுல் இங்கிலாந்து தன்னுடன் போருக்கெழும் என்பதைச் சிபானிய மன்னன் அறிந்திருந்தால், அவ்வாறு செய்திருக்கமாட்டான். ஆனுல் இலண்டனிலிருந்த சிபானிய அரசாங்க தூதனுன கொண்டோமார், சேமிசு மன்னன் பயந்தவனென்பதையும், விடயங்களை விரைவில் நிச்சயிக்குமியல்பில்லாதவனென்பதையும், சேமிசிலும் பார்க்க நன்முக அறிந்திருந்தான். முகத்துதியினுலும், கண்டிப்பான வார்த்தைகளினுலும் அரசனை நன்முகச் சமாளித்து வந்தான். ஆங்கிலப் போர் வீரர் ஐரோப்பாவுக்குச் சென்று யுத்தஞ் செய்தபோதிலும், பிரடரிக்கின் சார்பாகப் பிரித்தானிய பாராளுமன்றம் பல தீர்மானங்களை நிறைவேற்றிய போதிலும்,[2] வேறெவ்வித உருப்படியான அலுவலும் நடைபெறவில்லை. ஐரோப்பாவில் அமைதியை யுண்டாக்கச் சேமிசு விரும்பினுன். அதனுல் ஐரோப்பிய நாடுகளெங்கும் தனது தூதரை அனுப்பினுன். ஆயுத பலமில்லாத அரசியலுபாயம் பலன்தராது என்பதை அவன் உணரவில்லை. கத்தோலிக்கருக்கும், புரட்டசுத்தாந்தியருக்குமுள்ள அபிப்பிராயபேதங்கள் மிக ஆழமானவையென்பதையும் அவற்றை வெறும் பேச்சினுலும், சமாளிப்பாலும் தீர்த்துவிட முடியாதென்பதையும் அவன் அறிந்துகொள்ளவில்லை.

1. வழக்கறிஞர்கூட இவ்விடயத்திலே மிக உற்சாகங் காட்டினர். பிரேக்கிற்கு வெளியே எற்பட்ட தோல்வியின் பின்னர் மிடில் தெம்பிளைச் சேர்ந்த 30 வழக்கறிஞர் வாளே இழுத்து இலிசபெத்து இராணிக்காகத் தாம் தமது உயிரையும் அர்ப்பணஞ் செய்வதாகச் சத்தியம் செய்தனர். தனது சகோதரியிடம் மிக்க அன்பு பூண்டிருந்த சார்சு, இச்சண்டையின் முடிவைக்கேட்டு மனமுடைந்தவனுய் இரண்டுநாள் ஒருவரோடும் பேசாது தன்னறையில் ஒதுங்கியிருந்தான்.

2. ஒரு தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது பாராளுமன்ற அங்கத்தவர் தமது தொப்பிகளை "உயர்த்தக்கூடிய அளவுக்கு உயரமாக உயர்த்தினர்".

ஸ்பெயினுடன் மணத்தொடர்பும் மத்திரிட்டுக்குச் செல்லலும் (1623)

ஸ்பானியர் பலற்றினேற்றைக் கைப்பற்றினர். அதைத் தடுக்கச் சேமிக தவறினான்; ஆனால் ஸ்பானிய இளவரசியைத் தனது மகன் சார்ளசுக்கு மணஞ் செய்துவிட்டால், ஸ்பானியர் பலற்றினேற்றைத் திருப்பிக் கொடுத்துவிடுவரென எண்ணினான். 1617 இல் ஆரம்பித்த பேச்சுவார்தையை மறுபடியும் மன்னன் தொடக்கினான். ஈற்றில், சார்சு தான் முன்னெருபோதும் கண்ணுற்கூடக் காணாத ஸ்பானிய இளவரசி மீது காதல் கொண்டவன்போலக் கற்பனை செய்துகொண்டான். சேமியின் அனுக்கத்தொண்டனை பக்கிங்ஙம் தானும் சார்சும் ஸ்பானியத்தலை நகருக்குச் சென்று வரவும் சார்சு அங்கே இளவரசியிடம் காதல் பேசி வரவும் அனுமதியளிக்குமாறு கேட்டான் (1623). இருவரும் "தொம், யோன்சிமிது" என்ற போலிப்பெயரோடு ஐரோப்பா சென்று ஒருநாள் இரவு 8 மணிக்கு மத்திரிட்டில் வந்திறங்கினர். மணத்துக்குப் பிரதியுபகாரமாகப் பலற்றினேற்றைக் கொடுக்கச் ஸ்பானிய அரசறிஞர் விரும்பாது, இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்கருக்குச்[1] சலுகைகள் வழங்குமாறு சார்சிடம் வாக்குப்பெறமுயன்றனர். சார்சு பலவகையான வாக்குறுதிகளை அளித்தான். அவற்றை நிறைவேற்றுவது முடியாத காரியமென்பதை மற்றவர்களிலும் பார்க்க அவனே நன்கு அறிந்திருந்தான். பின்னர் மனமடிவோடு வீடுதிரும்பினான். வரவேற்பு மிகச் சிறப்பாக நடைபெற்றது; எத்தனையோ நீப்பிழம்புகளேற்றப்பட்டன[2]. இவ்வாவேற்பு அவன் திரும்பிவந்ததற்காகவன்று; ஸ்பானிய இளவரசியைக் கொண்டு வராமற் திரும்பியதற்கேயாம். பலற்றினேற்றைத் திருப்பியெடுப்பதற்காக யுத்தஞ் செய்யவேண்டுமெனச் சார்சும் பக்கிங்ஙமும் துடித்தனர். சேமிக இணங்கினான்.

பலற்றினேற்றுமீது படையெடுத்தல், 1624

பாராளுமன்றம் பணம் ஒதுக்கிற்று. ஒரு படைதிரட்டப்பட்டது (1624) ஆனால் அப்படை "பயிற்சியில்லாத முரட்டுப்பாமரரையும், வறிய பிண்டர்களையுங்" கொண்டிருந்ததென அக்காலச் சரித்திராசிரியர் ஒருவர் எழுதினர். அது போய்ச் சேரவேண்டிய இடத்துக்குப் போகவில்லை. 1625 இல் வேறொரு முற்றுகைக்கு அனுப்பப்பட்டது. அதேவருடத்திலே சேமிக இறந்தான். பலற்றினேற்று மீட்கப்படவில்லை.

---

1. சார்சு இளவரசியைக் காண்பதற்கு ஒரேயொரு முறைதான் அனுமதிக்கப்பட்டாள். முனனெழுங்கு செய்யாமல், மறுபடியும் ஒருமுறை அவளைக் காண்பதற்காக அவன், அவள் நந்தவனத்திலே உலாவிக்கொண்டிருக்கும்பொழுது, அவள் முன் குதித்தான். அவனிடத்துப் பிரியமில்லாத அவள் அவனைக் கண்டதும் குழறிக்கொண்டு ஓடிவிட்டாள்.

2. சென்போலிலும், இலண்டன் பாலத்திலும் மாத்திரம் 108 நீப்பிழம்புகளேற்றப்பட்டன.

1603 இன்பின் ஆண்ட பிரித்தானிய அரசர்



1603 இன் பின் ஆண்ட அயல்நாட்டரசர்



10 ஆம் அதிகாரம்

முதலாம் சேமிசும் உண்ணாட்டு அலுவல்களும்

1. அரசனுக்கெதிராகச் சதி

முதலாம் சேமிசு : உப சதியும், பிரதான சதியும் (1603)

முதலாம் சுதுவட்டு மன்னன் காலத்தில் இங்கிலாந்தில் நடந்த உண்ணாட்டுச் சம்பவங்களைப்பற்றி இப்பொழுது ஆராய்வாம். இலிசபெது உயிரோடிருக்கும் பொழுது இங்கிலாந்தில் அரசுக்குப் பலர் உரிமையுடையவராயிருந்தனர். ஆனால் சேமிசு அரியணையேறிய பொழுது, எல்லாரும் ஏகோபித்து அவனை வரவேற்றனர். இருந்தும், இவனுக்கு எதிராக மூன்று சதிகள் செய்யப்பட்டன. ஆனால் அவை யொன்றும் வெற்றி பெறவில்லை. முதலாவது சதி உபசதியெனப்பட்டது. மடைத்தனமான சதி அது. அரசனைக் கிளர்ச்சல் வைத்துக்கடத்திச் செல்வதும், இலண்டன் கோபுரத்தைக்கைப்பற்றுவதுமே அதன் நோக்கமாகும். இச்சதியை உருவாக்கியவன் உரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த ஒருவன். அதே சமயத்தைச் சேர்ந்த மற்றொருவன் இந்த இரகசியத்தை அரசாங்கத்துக்கு வெளிப்படுத்தினன். இச்சதியாலோசனையில்லாடபட்ட ஒருவர் கொடுத்த வாக்குமூலத்தின் மூலமாக இரண்டாவது சதியாலோசனை யொன்று நடந்துவருவதை அரசாங்கம் அறிந்தது. இது பிரதான சதி என வழங்கும். சிபானியர் உதவியுடன் அரபெலா சுதுவட்டுச்சீமாட்டியை அரியாசனத்திலிருத்துவதே இதன் நோக்கமகக் கருதப்பட்டது. ஆனால் இதைப்பற்றிய விவரங்கள் தெளிவின்றியும், நிச்சயமற்றனவாயுமிருக்கின்றன. அத்தகைய தொரு சதியாலோசனை இருந்ததென்பதே சந்தேகத்துக்கிடமானதாகும் (1603).

சேர் உவாற்றர் இராலி

சதியாலோசனையிற் சேர் உவாற்றர் இராலி சம்பந்தப்பட்டானெனக்குற்றஞ் சாட்டப்பட்டமையே இந்தச் சதியாலோசனைக்கு முக்கியத்துவமளித்தது. சேர் உவாற்றர் இராலி சிறந்த போர்வீரனும், மாலுமியும், உளநடை யாசிரியனும், புலவனுமாவன் ; புதிய நாடுகளைக் கண்டுபிடிப்பதிற் புகழ் பெற்றவன். இலிசபெத்து இராணியின் அவைக்களத்தில் விளங்கிய பிரபுக்களில் ஒருவன். இராலியை நியாயமற்றமுறையில் விசாரணை செய்த பின்னர் மரணதண்டனை விதித்தனர். எனினும், அத்தண்டனையை நிறை

---

1. சேமிசைப் போலவே அரபெல்லாச் சீமாட்டியும் ஏழாம் என்றியின் மூத்த மகனான மாகெரெட்டு வழியில் வந்தவள். ஆனால் சேமிசைப் போலன்றி அரபெல்லா இங்கிலாந்திலேயே பிறந்தவள். சில நியாயவாதிகள், இக்காரணத்தால் அவளுக்கே இங்கிலாந்தின அரசரிமைக்கு அதிக தகுதியுண்டெனக் கருதினர்.

வேற்றது அவனைக் கோட்டையிற் சிறைவைத்தனர். சிறையிலே இராலி **உலக வரலாறு** எனும்நூலை எழுதுவானுயினன். அத்துடன் இரசாயனப் பரீட்சைகளும் நடத்தினன்[1]. பதின்மூன்றுவருடங்களின் பின்னர் 1616 இல் தான் செய்தயாத்திரைகளின் போது கேள்விப்பட்ட **ஒரினோக்கோ ஆற்றுத் தங்கச்சுரங்கங்களைத்** தேடிப்பிடிப்பதற்காகச் சிறையிலிருந்து விடுதலை பெற்றனன். ஆனால் அவனுடைய யாத்திரை படுதோல்வியடைந்தது. அவனுடன்சென்ற மாலுமிகள் திறமையற்றவராயிருந்தனர். நோய் காரணமாக அவனுடைய உத்தியோகத்தரிற் பலர் இறந்தனர். அவனுக்கே நோய்கண்டதால் அவன் ஆற்றில் எதிரேறிச்செல்லமுடியவில்லை. அன்றியும் கடைசியாக அவன் செய்த யாத்திரையின் போது சுரங்கத்துக்கு அப்பாலிருந்த சிபானிய நகரம், இந்தயாத்திரையின் போது சுரங்கத்துக்கு இப்பால் மாற்றப்பட்டது. அதனால் அந்த நகரைக் கடந்தே சுரங்கத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. சிபானியர் ஆங்கிலரின் படையைத் தாக்கினர். அல்லது ஆங்கிலரே சிபானியரைத் தாக்கியிருக்கலாம். இரண்டில் ஒன்று நடைபெற வேண்டியது அவசியமாயிற்று. அதனால் சிபானியர் இரத்தஞ் சிந்தநேரிட்டது. இராலி நாடு திரும்பியதும், அவனைத்தண்டிக்க வேண்டுமென சிபானிய தூதமைச்சன் வாதாடினன். இக்காலத்திலே முதலாம் சேமிசு தனது மகனை சார்ள்சுக்கும் சிபானிய இளவரசிக்கும் திருமணம் பேசிக் கொண்டிருந்தான். எனவே, தூதமைச்சனின் வேண்டுகோளுக்கிணங்கி சேமிசு இராலியைப்பழைய இராசத்துரோகக் குற்றச் சாட்டின் பேரிற் சிரச்சேதஞ் செய்தான். இவ்வாறு செய்ததனால் எதிர்காலமக்கள் என்றும் மன்னிக்கமுடியாத குற்றத்துக்கு அவன் ஆளானான் (1618)[2].

வெடிமருந்துச் சதி (1606)

மூன்றுவது சதி வெடி மருந்துச் சதியெனப் பேர்பெற்றது. கொத்து லாந்து மேரிஇராணியின் மகனை சேமிடமிருந்து உரோமன் கத்தோலிக்கர் பெரிய நன்மைகளை எதிர்பார்த்தனர். சேமிசும் அரசுரிமைபெற்றதும் அவர்களிடம் சலிப்புத் தன்மை காட்டினன்.

அவர்கள் தங்கள் கோயிற்பற்றுக்களிலிருந்த தேவாலயங்களுக்குப் போகாததற்கு விதிக்கப்படும் அபராதத்தை அறவிடுதல் செய்யாதுவிட்டான். இத்தகைய சலுகையின் பயனாக வெளிநாடுகளிலிருந்து ஏராளமான

1. ஒளடதங்களைப் பாகஞ் செய்வதிலும் அவன் ஈடுபட்டான். அவன் கண்டுபிடித்த சீவாமிருதம் அக்காலத்தில் மிகப்புகழ் பெற்றது.

2. சிபானியருக்குக் கெதிராக நடவடிக்கை யெடுத்தால் இராலி உயிரிழக்க நேரிடுமென்று சேமிசு அவனுக்கு எச்சரிக்கை செய்திருந்தான். கோட்டைச் சிறையிலிருந்து விடுதலை பெற விரும்பிய இராலி பொய்யான கூற்றைக் கூறினன். அதாவது, தங்கச் சுரங்கம் சிபானிய மன்னனின் பிரதேசத்திலோ, அதற்குச் சமீபத்திலோ இருப்பதன்றென உறுதியாகக் கூறினன்.

உரோமன் கத்தோலிக்கர் குருமார் வந்து சேர்ந்தனர். ஆறு மாதத்திலே 140 பேர் வந்தார்கள். இதைக்கண்டஞ்சிய சேமிசு அவ்வபராதத்தை மறுபடியும் அவர்கள்மீது விதித்துக் குருமாரையும் நாட்டைவிட்டுக் கலைத்தான்[1]. வெடி மருந்துச்சதிக்கு இதுவே காரணம் (1605). இதற்குத் தலைவனுயிருந்தவன் உரொபெட்டு கேற்சுபி. இவன் ஒரு வீரனெனச் சுதந்தத்தக்கவன். மிகுந்தபலம் பொருந்தியவன்; மனதைக் கவர்ச்சி செய்யக்கூடிய நடத்தை உடையவன், மக்களின் தலைவனுதற்குரிய நிறைந்த குணம் வாய்ந்தவன். மக்களை வசியப்படுத்தத்தக்க இயல்புடையவன். ஆனால் தெளிவான புத்தியில்லாவதன். உரோமன் கத்தோலிக்கர் அடைந்ததுன்புறுத்தல்களைக்கண்டு, பைத்தியக்காரனைப்போலக் கலங்கி நிறைதப்பினன். சதிகாரருள் மற்றொருவன் கை போக்குசு; இவன் பழைய யோக்குசயர்க்குடும்பத்தைச் சேர்ந்தவன். நெதலந்திலே பல யுத்தங்களில் சண்டை செய்தவன். பிரபுக்கள் சபையும் பாராளுமன்றமும் அரசனும் கூடிக் கூட்டத்தை ஆரம்பிக்கவிருக்குஞ் சமயம் பார்த்து, அவர்கள் கூடியுள்ளபிரபுக்கள் சபைக்கட்டடத்தை வெடிகுண்டு வைத்துத் தகர்த்து விட ஆலோசனை செய்யப்பட்டது. பின்னர் சேமிசின் மகனை சார்ள்சைக்கைதுசெய்து அவனை அரசனுகப்பிரகடனஞ் செய்ய எண்ணினர். பின்னர் மிதுலந்தில் ஒழுங்கு செய்யப்பட்ட வேட்டைப்போட்டியில், முன்னேற்பாடு செய்யப்பட்டபடி திரளும் கத்தோலிக்கருக்கு விடயங்களை அறிவித்து, அவர்களின் உதவியோடு உரோமன் கத்தோலிக்க ஆட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டனர்.

பிரபுக்கள் சபைக்கு அடுத்துள்ள ஒரு வீட்டிலிருந்து அச்சபையின் அத்திவாரத்துக்கூடாக ஒரு சுரங்கத்தை முதலில் வெட்டச்சதிகாரர் முயன்றனர். பின்னர் பிரபுக்கள் சபைத் கட்டடத்தின் தரைமாடியில், ஒரு நிலவறையை வாடகைக்கெடுத்தனர். அதற்குள் இரண்டு தொன் வெடிமருந்தைப் பீப்பாக்களிற் போட்டு வைத்தனர். ஈற்றிலே சதிகாரரில் ஒருவன் இக்கொடுஞ் செயலின் அநியாயவினைவுகளைச் சிந்தித்துவிட்டுப் பிரபுக்கள் சபையங்கத்தவராயிருந்த தனது சகோதரன் (மொந்தீகில் பிரபு) ஒருவனுக்கு ஓர் எச்சரிக்கைக்கடிதம் எழுதினன். அவன் அக்கடிதத்தை அரசாங்கத்திடம் வழங்கினன். அதன் பயனுகப்பாராளுமன்றம் கூடுவதற்கு முதனாளிரவு பீப்பாக்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அங்கே கைபோக்குசும் கண்டுபிடிக்கப்பட்டான். அவனும் அவனுடைய சகாக்களான ஏனைச் சதிகாரரும் சண்டையிலே இறந்தனர். சிலர் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர். இதன் விளைவாக உரோமன் கத்தோலிக்கருக்கு மாறுக மிகக் கடுமையான சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. அவர்கள் உத்தியோகங்களில் ஈடுபடக்கூடாதெனவும், அரசவைக்குட் புகக்கூடாதெனவும்

1. இவ்வபராதம் மிகக் கொடியது. ஒரு மாதத்துக்கு 20 பவுண், அல்லது சொத்தில் மூன்றிலொரு பகுதி கொள்ளைப்பட்டது.

விபாபார அனுவல்களிருந்தாலன்றி இலண்டனுக்குப் பத்துமைல் எல்லைக்குள் வரக்கூடாதெனவும், இச்சட்டங்கள் விதித்தன. மேலும், அவர்கள் மீது விதிக்கப்பட்ட வரி அதிகரிக்கப்பட்டது. இச்சட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவரவேண்டுமென்று பாராளுமன்றம் எப்பொழுதும் வாதாடிற்று; சேமிசு அவ்வப்பொழுது இவற்றை நிறைவேற்றத்தவறினான். சாள்சு அடிக்கடி இவற்றை நடைமுறைக்குக் கொண்டுவரத் தவறினான்[1].

2. அரசனின் அமைச்சர்

சோல்சுபெரி பிரபுவின் அமைச்சு (1603–12)

சேமிசின் ஆட்சியில் அவனுக்கு அமைச்சராயிருந்தவர்களைப்பற்றிச் சிறிது கூறுவாம். அரசன் ஆட்சிக்கு வந்ததும், இலிசபெத்து அரசியின் முதல் அமைச்சனுயிருந்து புகழ்பெற்ற பேலிப்பிரபுவின் மகனை உரொபெட்டு செசிலை முதல் அமைச்சனுக்கி அவனுக்கு **ஏள் சோல்சுபெரி**[2] என்றபட்டத்தையுஞ்சூட்டினான் "நிலைமை மோசமடையாமற் பார்த்துக் கொள்வதற்குத் தகுதியுடையவன். ஆனால் அதைச் சீராக்கத்திறமையற்றவன்" என்று சோல்சுபெரியின் உறவினனை பேக்கன் அவனைப்பற்றிக் கூறினான். இக் கூற்று உறவினனொருவனுற் கூறத்தகாததுமன்றி, சிறிது நீதியற்றதுமாகும். சோல்சுபெரி மிகுந்த உழைப்பாளி; நிறைந்த பகுத்தறிவுள்ளவன். பணவிடயங்களில் நிபுணன்; பாராளுமன்றத்திலே அரசனுடைய கருமங்களைச் செவ்வனே புரியுந்திறமைவாய்ந்தவன். அத்தகைய சோல்சுபெரி, 1612 இல் இறக்கும்வரை இங்கிலாந்தில் நல்லாட்சி நடத்தியதோடு அதன் பிறநாட்டும் பூட்கையை நிருவகிப்பதிலும் பெரிய பங்கெடுத்துக் கொண்டான்.

சேமிசும் அவன் அன்புக்குரியவரும்—காரும் பக்கிங்ஙமும் (1612–25)

1612 இன் பின்னர் தனது அரசியற் கருமங்களைக் கவனிக்கச் சேமிசு தனக்குப்பிரியமான சிலரை நியமித்தான். ஓயவு நேரங்களிலே உற்சாகமான ஒரு தோழனைத் தன்னோடு வைத்திருக்கவேண்டுமென்பதற்காக மாத்திரம் அவன் தன் பிரிய சகாக்களை அமைச்சராக நியமிக்கவில்லை. அவனையே எல்லாவற்றுக்கும் நம்பியிருக்கக் கூடியவர்களாயும், தனது கருத்துக்களில் ஊறி, அவற்றையே நிறைவேற்றக் கூடியவர்களாயும் அவர்களிருப்பார்களென்று கருதியே அவ்வாறு செய்தான். பிரியமான நண்பர்களை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தினால் தான் தொல்லையின்றித் தனியாட்சியாளனாக

1. வெடிமருந்துச் சதியென ஒன்றிருக்கவில்லை யென்றும், கத்தோலிக்கர் மீது பழிசுமத்துவதற்காக முதலாம் சேமிசின் அமைச்சனை சோல்சு பெரிப்பிரபு இந்தக் கதையைக் கட்டினான் என்றும் சிலர்கூற முற்பட்டனர். ஆனால் இது உண்மையன்று.

2. சோல்சு பெரிப்பிரபு குட்டையனை படியால் சேமிசு அவனை ஆதரவினால் தனது "குறுகன்" என்றும் "குதன்தாய்" என்றும் கூறிக்கொள்வான்.

இருக்கலாமென்று எண்ணினான். சேமிசு முதலாவதாகக் கொத்துலாந்து வாசியான கார் என்பவனைத் தேர்ந்தெடுத்தமை துரதிட்டமே. சேமிசு இவனை முதலில் உரோசெற்றர் பிரபுவாகவும் பின்னர் சொமசெற்றுக் கோமகனுகவும் நியமித்தான். எசெட்சுச்சீமாட்டி காரைவிவாகஞ் செய்வதற்காகத் தனது முதற் கணவனை விவாகநீக்கஞ் செய்தாள். இருவருமாகச் சேர்ந்து எசெட்சுச் சீமாட்டியின் விரோதியான ஒரு பெரிய கனவானைக் கொலை செய்வித்தனர்[1]. அதனால் காரை வேலையிலிருந்து நீக்கி (1616) ஆறுவருடம் கோபுரத்திற்சிறைவைத்தான்.

சேமிசு தெரிந்தெடுத்த அடுத்த அமைச்சன் காரிலும் சிறந்தவன். இவன் பெயர் **யோட்சு விலசு**. இவன் பின்னர் **பக்கிங்ஙம் கோமகனுனான்**. அழகிய தோற்றமும், விரும்பத்தக்க போக்கும், கலகல வென்றும் நகைக்கும் இயல்புமுடையவன்; பல பெரிய மனிதருடைய நட்பை இவன் பெற்றான். கந்தபெரி அதிமேற்றிராணியார்களான உலோட்டும், அபொட்டும் இவனுடைய நண்பர்; பேக்கன் மற்றொருநண்பர். பேக்கன் தமது அரசியற் கருத்துக்களை விலசு மூலம் நடைமுறைக்குக் கொண்டு வரலாமென நம்பினர். கடைசிக்காலத்திலே அவன்மீது பழிமாட்டறைந்த சேர்யோன் எலியற்றுக்கும் அவன் நண்பனுயிருந்தான். நீதி மிக்க போர் வீரனுகவும், உற்சாகம் நிறைந்த கடற்படைத்தளபதியாகவும் இவன் விளங்கினான். விரைவிற் பதவி உயர்ச்சியடைந்தமையால் இவனுடைய நற்குணம் மாறிற்று. தூதுதடிப்பும், ஆத்திர புத்தியுமுடையவனை படியாற் சிறந்த அரசறிஞனுக விருக்க முடியவில்லை. "அரசனுடைய அன்புக்குரியவர்களுள் ஒருவனென்று மதிப்பிடாமல் அமைச்சரில் ஒருவனுகக்கொண்டு மதிப்பிடுவதானுல் இவனைப் போலத்தகுதியற்ற ஓர் அமைச்சனை அந்நூற்றாண்டில் மாத்திரமன்றி எந்நூற்றாண்டிலுங் காணமுடியாது" என்று கூறப்பட்டது. மற்றவர்க்கு ஆதரிப்பளிக்கும் விடயங்களிலேதான் விலசு முதலில் ஈடுபட்டான். அரசனின் ஆட்சிக்கால இறுதியிலேதான் அவனுடைய பூட்கையை மாற்றக்கூடிய அளவிற்குச் செல்வாக்குப்பெற்றான்.

பிரான்சிசு பேக்கன் (1561—1626)

இக்காலத்தில் வாழ்ந்த அறிஞருட் பிரான்சிசுபேக்கன் போலப்பரந்த அறிவுஞ் சிறந்த திறமையுமுள்ளவர்களில்லை யெனலாம். இவர்சரித்திர ஆசிரியர்; கட்டுரை ஆசிரியர்; தத்துவஞானி. முடியாட்சியைமிக ஆதரிப்பவர்; அந்த ஆட்சி முலம் பெரும் பயன் விளையுமென எதிர்பார்த்ததாலேதான் அதை ஆதரித்தார் என்ப. அரசனுக்கும், பாராளுமன்றத்துக்குமிடையிற் பிணக்கிருக்கக் கூடாதென அவர் கருதி

1. அவனுடைய பெயர் ஒவபெரி. அவன் ஒரு புலவன். காரின் பெரிய நண்பன். கார் எசெட்சு சீமாட்டியை மணஞ்செய்வதைத் தடுக்க முயன்றான். அவன் வஞ்சந் தீர்ப்பதற்காக ஒவபெரியின் உணவில் ஆசனிக்கு நஞ்சிட்டாள்.

னர். மக்களின் விருப்பங்களை அரசனுக்கு அறிவிப்பதே பாராளுமன்றத்தின் கடமை. தனது பூட்கையை அரசன் அப்பாராளுமன்றத்தின் மூலம் மக்களுக்கு அறிவிக்கவேண்டும். முதலாம் சேமிசின் ஆட்சிக்காலம் ஆரம்பத்திலே, பேக்கன் செல்வாக்குப் பெறவிடாமல் அவருடைய உதவினரான எள்சோல்சுபெரி அழுக்காற்றினாலும், அவன் மீதுள்ள வெறுப்பினாலும் தடைசெய்தான். சோல்சுபெரி இறந்தபின்னர், பேக்கன் 1613 இற் சட்டத்துறை நாயகனாகவும், 1618–21 வரை பிரபு நாயகனாகவும் பதவிவகித்தார். நீதிபதிகள் அரசனை ஆதரிக்கவேண்டுமென்ற கொள்கையை அவர் மேற்கொண்டு, சட்டத்துறையிலே அரசனுக்குச் சார்பாக அவர் பெரிதும் வாதாடினர். "நீதிபதிகள் சிங்கங்களே; ஆனால் அவர்கள் அரியாசனத்தின் கீழுள்ள சிங்கங்கள்" என அவர் கருதினர்.

3. மன்னனும் புரட்சுத்தாந்தக் கட்சிகளும்

சமயம் : அங்கிலிக்கன் கட்சி

அரசனுடைய அமைச்சர்களொருபுறமாக, அரசனின் பூட்கைகளை இனி ஆராய்வாம். சமயவிடயங்களிலேதான் மக்கள் அக்காலத்தில் மிக்க சிரத்தையுடையவராயிருந்தனர். எனவே சேமிசு அரசுகட்டிலேறியதும், முதல் முதலாகச் சமயவிவகாரங்களில் ஈடுபட்டான் (குறிப்பு 60). உரோமன் கத்தோலிக்கர் மாட்டுச் சலிப்புத்தன்மை காட்டியதன் விளைவாக உண்டான பலாபலன்களை அறிந்தோம். இப்பொழுது அரசன் புரட்டசுத்தாந்தியர் விடயத்திலெவ்வாறு நடந்து கொண்டான் என்பதை ஆராய்வாம். 17 ஆம் நூற்றாண்டிலே இங்கிலாந்திலே யிருந்த புரட்டசுத்தாந்தியக் கட்சிகளைப் பற்றிச் சிறிது கூறுவது பொருத்தமாகும். **ஆமீனியக் கட்சி**[1] அல்லது **அங்கிலிக்கன்** கட்சியென வழங்கப்பட்ட கட்சியை முதலிற் கவனிக்கலாம். இதுவே இங்கிலாந்துத் திருச்சபையினுள்ள பலம் மிகுந்த கட்சி. இக் கட்சியின் தலைவராகப் பிற்காலத்தே உலோட்டு மேற்றிராணியார் விளங்கினர். அரசியல் துறையிலே இக்கட்சியினர் மன்னன் "தெய்வ உரிமை" உடையவனெனக் கொண்டனர். திருச்சபை ஆட்சியில் விசுப்பாண்டவரின் அதிகாரத்தைப் பெரிதும் ஆதரித்தனர். சமயக் கொள்கை பரப்புவோரின் வாரிசு விசுப்பாண்டவரென்றும், இவர்களால் ஆசாரியாபிடேகஞ் செய்யப்பட்ட குருமாருக்கு விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டனவென்றும் நம்பினர். பொதுப் பூசை ஒருமுறையிலே அருளுக்கு வழி காட்டுமெனவும் கொண்டனர். உலோட்டு மற்றமதத்தவர் மீது விரோதங்காட்டிய படியால் அங்கிலிக்கன் கட்சியின் தரத்தைப் பெரிதும் குறைத்தார். அங்கி அணிவதிலும் விரிவான இசையை அனுட்டிப்பதிலும் இவர்களுக்கிருந்த விருப்

1. இடச்சுக் குருவான கலேதிசு ஆமீனியசு என்பவர் பெயரால் இது வழங்கிற்று. இவர் 1609 இல் இறந்தார்.

பத்தினாலும் தீவிரவாதிகளிற் சிலர் கொண்ட சில கோட்பாடுகளினாலும், இவர்கள் உரோமன் கத்தோலிக்கச் சார்புடையவர்களென இவர்களின் எதிரிகள் குற்றஞ் சாட்டினர். ஆனால் யோட்சு எபேட்டு என்ற புலவர், விசுச்செசிற்றர் விசுப்பாண்டவரும், அதிகாரம் பெற்ற விவிலிய நூல் மொழி பெயர்ப்பை வெளியிட்டவருமொருவருமான இலான்சுலெற்று அண்டுருசு என்பவர் போன்ற 17 ஆம் நூற்றாண்டுப் பெரியார் பலர் இக்கட்சியிற் சேர்ந்திருந்தனர். மேலும் ஆங்கிலத்திருச்சபையின் சரித்திரத்திலே இக் கட்சி பற்றுடையதாயும் ஆதித்திருச்சபையிலிருந்து வழிவழி வளர்ந்துவரும் திருச்சபை மரபை இடையறாது காப்பாற்றுவதாயும் விளங்கிற்று; திருச்சபைக் கிரியைகளின் அழகையும், ஒழுங்கையும், இங்கிலாந்து முழுவதிலும் நிர்ணயித்துவதிலும் ஈடுபட்டது.

பியூரித்தானியரும் பிரெசுபித்திரியரும், சுயேச்சையாளரும்

இரண்டாவதாகப் பியூரித்தானியர் என்ற பெயரில் அடங்கக்கூடிய பல கூட்டத்தைச் சேர்ந்த மக்களிருந்தனர். (குறிப்பு 63)[1] பியூரித்தானியரைப் பற்றிக் கூறுமிடத்து மூன்று விடயங்களை மனத்திலே பதித்துக் கொள்ள வேண்டும். சாதாரணமாக மக்கள் பியூரித்தானியரைப்பற்றிக் கொண்டுள்ள அபிப்பிராயத்துக்கள் தவறுனவை. 1660 இல் நிகழ்ந்த மீட்சிக்குப் பின்னர், மக்கள் அவர்களுடைய கொள்கைகளைக் கேலிபண்ணி உருவாக்கிய கருத்தை. வைத்தே சாதாரண மக்கள் இத்தகைய தவறான அபிப்பிராயத்தைக் கொண்டனர். பியூரித்தானியர் எல்லாரும் சமூகத்திலே குறைந்த வகுப்பிலிருந்து வந்தவர்களல்லர். அக்காலத்து ஆங்கிலேச்சான்றோரிற் பலர் பியூரித்தானியக் கொள்கையுடையவராகவேயிருந்தனர். விநோதங்களிலும் வீண் வேட்டுக் களியாட்டுக்களிலும் அவர்கள் வெறுப்புக்கொண்டவர்களல்லர். தலைமை முண்டிதஞ் செய்துகொண்டு, மூக்கினாற் பேசிக் கொண்டிருந்தவரு மல்லர். இரண்டாவதாக, பியூரித்தானியரிலே பெரும்பாலோர் இங்கிலாந்துத் திருச்சபையைச் சேர்ந்தவராயிருந்தனர்; திருச்சபையினர்க்கும் இணங்காதார்க்குமிடையில் ஏற்பட்ட முடிவான வேற்றுமை இரண்டாம் சேமிசு காலத்திலேயே உண்டானது. மூன்றாவதாக, பியூரித்தானியர் என்றும் பலவகையான பிரிவுகளையுள்ளடக்கியிருந்தது—உண்ணாட்டுப்போர் முடிந்தவுடன் அவர்களுள் 170 பிரிவினர் இருந்ததாகக் கணக்கெடுக்கப் பட்டது. இவர்களெல்லாரும் பியூரித்தானிய மதத்தில் அடங்கியவர்களே. இவர்களிற் சிலர் விசுப்பாண்டவரதிகாரத்தை ஓரளவுக்கு விரும்பியவர்கள். வேறு சிலர் அவ்வதிகாரத்தை வெறுத்துக் கண்டித்தனர். உண்ணாட்டுப்போரின் போதும் அதன் பின்னரும் பிரெசுபித்திரியர் மிகுந்த செல்வாக்குப் பெற்றனர். (208 ஆம் பக்கத்தைப் பார்க்க) தாம் கொண்ட கொள்கை

1 17 ஆம் நூற்றாண்டினாரம்பத்திலே இக்கூட்டத்தினர் தமக்கு இப்பெயர் வழங்கப்படுவதை விரும்பியிருக்கமாட்டார். இது வசைப்பெயராகவும், நிந்தைக்குரிய பெயராகவும் கருதப்பட்டது.

கீனியும், திருச்சபை ஆட்சி முறையையும் எல்லாரும் ஒப்புக்கொள்ளவேண்டுமென விரும்பினர். சுயேச்சையாளர்கள், ஒவ்வொரு மனிதனும் சொந்தச் சிந்தனையால் எது எற்றதென்பதை ஆராய்ந்தறியவேண்டுமென்றும், "மென்மையான மனச்சாட்சி" க்குச் சுதந்திரமளிக்க வேண்டுமென்றும் கூறினர். ஆனால் இம்மனச் சாட்சி விடயத்திற் கத்தோலிக்கர் புறக்கணிக்கப்பட்டனர். ஈற்றிலே, எந்த இயக்கத்திலும் எதிர்பார்க்கக் கூடிய தீவிரவாதிகளின் கும்பலும்இங்கே காணப்பட்டது. பொதுநலவாயத்தில் இந்தத் தீவிரவாதிகள், தீமைக்கேதுவானவராயிருந்தனர்.

உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பற்றிய கருத்து

பியூரித்தானியரில் எல்லாக் கட்சியினரும் சில விடயங்களைப் பொதுவாக எற்றுக்கொண்டனர். உதாரணமாக உரோமன் கத்தோலிக்கரை வெறுப்பதில் அவர்கள் ஒன்றுபட்டனர். பெருந்தொகையான ஆங்கிலேயர் உரோமன் கத்தோலிக்கரை எதிர்த்தனர்; அவர்களுக்கெதிராகக் கடுமையான சட்டங்களை நிறைவேற்றினர். அவர்கள் இவ்வாறு ஆத்திரத்தோடு நடந்ததற்கு இன்று காரணங்காண்பது சுலபமன்று. மேரி இராணி காலத்தில் நடந்த சமயத் துன்புறுத்தல்கள் மக்கள் மனதிலே பதிந்திருந்தன[1]. அன்றியும் உரோமன் கத்தோலிக்கர்பலர் இலிசபெத்து இராணிக் கெதிராகச் சதி செய்தமையும் மக்கள் நினைவைவிட்டு நீங்கலில்லை. அத்துடன் பொனிய ஆமடா, போப்பாண்டவர் ஏவலால் வந்ததெனக் கருதப்பட்டது. வெடிமருந்துச் சதியானது போப்பாண்டவராலும், ஆங்கில உரோமன் கத்தோலிக்கராலும் சூழ்ண்டப்பட்டதெனத் தவருயுணரப்பட்டது. உரோமன் கத்தோலிக்கர் தங்களைச் சகிப்புத்தன்மையுடன் நடத்துமாறு கேட்டுக் கொள்வதோடு நின்றுவிடவில்லை. தொகையிற் பெருகிக்கொண்டுவந்த அவர்கள் இங்கிலாந்து உரோமன் கத்தோலிக்க நாடாயிருக்கவேண்டுமெனவும் விரும்பினர். இனி போப்பாண்டவர் கிறித்துவுக்கு மாறுனவரென்றும் கத்தோலிக்கத் திருச்சபைச்சங்கு விக்கிரகாராதனை யென்றும் போப்பாண்டவருடைய கோட்பாடுகள் "சாத்தான் சார்பான கோட்பாடுகள்" என்றும், அவர்களுடைய குருமார் மக்களைச் சமயநெறிக்குப் புறம்பாகவும் அரசனுக்கு மாறுகவும் வழிநடத்துபவ ரென்றும் பியூரித்தானியர் நினைத்தனர். மக்கள் மறுபடியும் உரோமன் கத்தோலிக்க சமயத்துக்குத் திரும்பினால் அது சமயவாழ்வுக்கும், ஒழுக்கத்துக்கும் பெரிய கேட்டை விளைக்குமென்றும் நம்பினர்.

[1] பொக்குக எழுதிய "வேத சாட்சிகள் வரலாறு" என்ற நூல் 1563 இல் முதன் முதலாகப் பிரசுரிக்கப்பட்டது. இக்காலத்திலே அது இரண்டாவது விவிலிய வேதமாக மதிக்கப்பட்டது. தேவாலயங்களில் எல்லாம் இந்நூல் மேசையில் கொளுவிவிடப்பட்டது. இதிற் கூறப்பட்ட விபரங்கள் மேரிராணி காலத்துச் சமயத் துன்புறுத்தல்களே மக்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதியச் செய்தன.

போப்பாட்சியை அவர்களெல்லாரும் எகோபித்து வெறுத்தது போலவே வேறு விடயங்களிலும் எகோபித்த கருத்துடையவராயிருந்தனர். விசுப் பாண்டவரும் குருமாரும் விசேட அதிகாரங்கள் பெறுவதை அவர்கள் எதிர்த்தனர். தேவாலயப் பூசைகளில் நீண்ட சடங்குகளைச் செய்வதையும், ஆபரணங்களையும், கோலாகலமான அங்கியை அணிவதையும் வெறுத்தனர். இவர்கள் பெரும்பாலும் கல்வினின் சீடராயிருந்தனர்; அதாவது சிலர் மோட்சம்பெறுவதற்கு முன்னேறிய விதியுடையவராயிருப்பர். மற்றவர்க்கு அத்தகைய விதிகிடையாதென்ற கொள்கையில் இவர்கள் நம்பிக்கையுடையவராயிருந்தனர். சற்பிரசாதமென்பது எசுநாதரின் மரணத்தை ஞாபகப் படுத்திக்கொள்ளக்கொண்டாடும் விருந்து எனவும் அது அவர் அருளைப்பெற எற்பட்ட ஒரு விசேட வழியன்றெனவும் அவர்கள் கொண்டனர். ஒழுக்கத்துக்கும் மேலான பிரமாணமாக விவிலிய நூலையே அவர்கள் கொண்டனர். தாம் செய்வதெல்லாவற்றுக்கும் கடவுளுக்குப் பொறுப்புக் கொடுக்க வேண்டுமென்ற ஆழ்ந்த உணர்ச்சியுடையவராயிருந்தனர். மறமெனத்தாம் கருதுவதை எதிர்த்துப் போராடுவதிற் கடவுளுந் தம்பக்கமேயென்ற நம்பிக்கையில் உருவாய மனவலியும் அவர்க்கு மிக்கிருந்தது.

சகிப்புத்தன்மையை விரும்பாமை

ஆங்கிலச் சமயக்கட்சிகளைப்பற்றியும், கொத்துலாந்துச் சமயக் கட்சிகளைப்பற்றியும் குறிப்பிடும் பொழுது மற்று மொரு விடயத்தைக் கவனத்திலிருத்த வேண்டியிருக்கிறது. எந்தக் கட்சியும்—அது உரோமன் கத்தோலிக்கமானாலென்ன, ஆயீனியமானாலென்ன, பிரெசுபித்தியமானாலென்ன — தன்னைப்பொறுத்தவரையில் சகிப்புத்தன்மையிருக்கவேண்டுமென்று மாத்திரம் விரும்பியது. சுயேச்சையாளர் மட்டும் எல்லார்க்கும் சகிப்புத்தன்மையிருக்கவேண்டுமென விரும்பினர். மற்றவர்களெல்லாரும் தமக்கு மாறுனவர்களைத் துன்புறுத்த விரும்பினர். சகிப்புத்தன்மை, ஒரு கொத்துலாந்துக்குருவானவர் கூறியதுபோல, "நரகத்துச் சகிப்புத்தன்மை" ஒரு கிலருக்கே திருத்தியளிக்கும்; ஒவ்வொரு சமயத்தவரும் தமது கோட்பாடுகளையும் அனுட்டானங்களையுமே மற்றைச்சமயத்தவரும் பின்பற்ற வேண்டுமெனவும், அவ்வாறு பின்பற்றவிட்டால் அந்தச் சமயம் நசுக்கப்பட வேண்டுமெனவும் விரும்பினர்.

இலிசபெத்தும் பியூரித்தானியரும்

பியூரித்தானியர் கொண்ட கொள்கைகளிற் சில, அரசன் கொண்ட கொள்கைகளுக்கு மாறுயிருந்தது வியப்பன்று. இலிசபெத்து அரசிகாலத்திலும், ஒரோவழிப் பெரும் பிணக்குக்களுண்டாயின. அவளுடைய ஆட்சிக் காலத்தின் ஆரம்பத்திலே **அங்கிவாதம்** என்ற பிணக்குண்டானது. பியூரித்தானியச் சார்புள்ள குருமார், சேபளிசு என்ற இடுப்பு வரை தொங்கும்

வெண்ணிற மேலங்கி தரிப்பதையும், பிரார்த்தனைப் புத்தகத்திற் கூறப் பட்ட சில சடங்குகளையும் ஆட்சேபித்தனர். பின்னர் தீவிர போக்குடைய பியூரித்தானியர்—பிரதானமாக ஒட்சுபோட்டிலும் கேம்பிரிச்சிலும் உள்ள வர்கள்,—ஆட்சி பிரெசுபித்திரியப் போக்குடையதாயிருக்க வேண்டுமென்று வாதாடி விசுப்பாண்டவரைக் கண்டித்தனர். இதன் பயனாகப் பன்னி ருவர் சிறைவாசஞ் செய்ய நேர்ந்தது. வேறுசிலர் **தீர்க்க தரிசனங்கள்** என்ற பெயருடன் கூட்டங்களைக் கூட்டிச் சமயசம்பந்தமான பல விடயங் களை வாதித்தனர். குருமார் உபதேசஞ் செய்யவும் கற்றுக் கொண்ட னர். சாத்திரசம்பந்தமான வாதங்களிலுலே எண்ணச் சுதந்திரம் எல்லை கடந்து போய்விடுமென இலிசபெது எண்ணினாள். பிரார்த்தனைப் புத்த கம் வெளியான அதே காலத்திலே "போதனைப் புத்தகம்" என்றொரு நூலும் வெளியிடப்பட்டது. குருமார் தேவாராதனையின் போது சொந்தத் திலே உபதேசஞ் செய்யாமல், இந்தப் புத்தகத்திலிருந்து ஒரு பகுதியை வாசித்தாற்போதுமென இலிசபெது எண்ணினாள். ஒவ்வொரு பிரதேசத் திலும் இரண்டொரு போதகர் இருந்தாற் போதுமென அவள் கருதினாள். எனவே, குருமாரின் கூட்டத்தை அவள் விரும்பவில்லை. அதனால் அவற் றைக்கடுமையாகத்தடை செய்தாள். பியூரித்தானியச்சார்பு அதிகமுள்ள பிரதிநிதிகள் சபையில், திருச்சபை நிருவாகம் பற்றியும், கோட்பாடுகள் பற்றியும் விவாதிக்க முயன்றபொழுது அவற்றைத் தயவுதாட்சணியமின்றி அவள் அடக்கினாள்.

சேமிசு ஆட்சிக்கு வந்ததும், பியூரித்தானியர் அவ்வளவாட்டுப் பரிவு டையவராயிருந்தனர். ஏனெனில் அரசன் தமது மதத்துக்குப் பெரிதும் ஆதரவளிப்பான் என எண்ணினர். சேமிசு, பிரெசுபித்திரிய மதம் பரவியகொத்துலாந்திலே வளர்ந்தவனைபடியால், தம்மீது அரசன் ஆதரவு காட்டுவானென அவர்கள் நம்பினர்.

அமித்தன் கோட்டு மாநாடு (1604)

எனவே அவர்கள் காலந்தாழ்த்தாது "ஆயிரவர் மனு" எனும் ஓர் விண்ணப்பத்தை அரசன் பாற் சமர்ப்பித்தனர். ஆயிரம் குருமாரின் ஒப்பமுடையதெனக்கருதப்பட்டதால் இதற்கு இப்பெயர் வழங்கப்பட்டது[1]. சில சீர்திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென இம்மனுவிற் கேட்டனர். இரண்டு அதிமேற்றிராணியாரையும் ஆறு விசுப்பாண்டவரையும் ஒரு பக்கத்தி லும் நானூபியூரித்தானியரை மறு பக்கத்திலும் கொண்ட ஒரு மாநாடு **அமித்தன்கோடு** எனும் இடத்திலே கூடி விடயங்களை ஆலோசனை செய்தது (1604)

[1] இதில் எவருமே ஒப்பமிடவில்லை. 800 குருமார் இதற்கு ஆதரவளித்தது உண்மையே.

இம்மாநாட்டுக்கு அரசனே தலைமைதாங்கி, முதலில் வியத்தகு நடு நிலைமையுடன் விடயங்களை நடத்தினான். இரண்டாம் நாள் முடிவிலே ஒரு பியூரித்தானியன் "பிரெசுபித்திரி" என்ற சொல்லைக் குறிப்பிட்டான். பிரெசுபித்திரியர் மதத்தையும் அம்மதத்தவரின் ஒளிப்புமறைப்பில்லாத பேச்சையும் குடியாட்சியையும் சேமிசு கொத்துலாந்திலே கண்டு அறிந் துள்ளான். அவன் அம்மதத்தை வெறுத்தான் என்பதைப் பியூரித் தானியர் அறியவில்லை. "கொத்துலாந்துப் பிரெசுபித்திரிக்கும் முடியாட் சிக்குமுள்ள ஒற்றுமை கடவுளுக்கும் சாத்தானுக்கு முள்ளதொரு ஒற்று மைபோன்றது. அப்படியானால் கானன் கோனன் எல்லாரும் கூடி என்னை யும் எனது அமைச்சுக்கழகத்தையும் நிந்திக்கக்கூடும்" என்று அரசன் கூறினான்[1]. மாநாடு உடனே முடிவுற்றது. அதன் பயனாக ஒரு முக்கிய மான பயனுண்டாயிற்று. அதாவது அதிகாரபூர்வமான விவிலிய மொழி பெயர்ப்புயாக்கப்பட்டதே.

அதிகாரபூர்வமான விவிலிய மொழிபெயர்ப்பு (1611)

இது 1611 இல் வெளியிடப்பட்டது. பியூரித்தானியர் வெறுங்கையோடு வீடு திரும்பினர்.சேமிசு தீவிர ஆங்கிலத்திருச்சபைக் கோட்பாடுடையவனானான். "விசுப்பாண்டவர் இல்லையானால் அரசனுமில்லை" என்னும் மூதுரையில் அதிராத நம்பிக்கையுடையவனானான். விசுப்பாண்டவரின் அதிகாரம் வீழ்ச்சி யடையுமானால் முடியாட்சியும் வீழும் என அவன் கருதினான் (குறிப்பு 61).

4. அரசனும் பாராளுமன்றமும்

பியூரித்தானியரும் பாராளுமன்றமும்

அரசன் பியூரித்தானியருக்கு ஆதரவளிக்காவிட்டாலும் பாராளுமன்றத் திலே அவர்களுக்குப் பெரிதும் ஆதரவு கிடைத்தது. முதலாம் சேமிசு, முதலாம் சார்சு ஆகியோரின் காலத்திலே கூடிய ஒவ்வொரு பாராளுமன் றத்திலும் பலம்பொருந்திய பியூரித்தானியர் கட்சியொன்று மேற்சபையிலே இயங்கிவந்தது; நாளடைவில் அக்கட்சி வளர்ந்து முதன்மைபெற்றது. முதலி ரண்டு சுதுவட்டு மன்னருக்கும் அவர்களுடைய பாராளுமன்றங்களுக்கும் பிணக்கம் ஏற்பட்டதற்கு முக்கிய காரணமாயுள்ளது இதுவே. பிரதிநிதிகள் சபையானது கத்தோலிக்கருக்குப் பெரிதும் மாறுகவினங்கிற்று. ஆனால் அரசிருவருட்சேமிசு இயல்பாகவே சகிப்புத்தன்மையுடையவனைபடியாற் கத்தோலிக்கர்மாட்டுச் சகிப்புத்தன்மை காட்டினான்; சார்சு கத்தோலிக்கப்

[1] "தயவுசெய்து பொறுங்கள், ஒரேமூலருட்துக்கு; அதன்பின் நான் பருத்தும் கொழுத்து விருப்பேனால், எனது மூச்சுக்குழாய் அடைத்திருக்குமானால் நான் ஒரு சமயம் உமது ஆலோசனைக்குச் செவிமடுப்பேன். அந்த ஆட்சி வரட்டும் அதுவரை நான் உயிருடனிருப்பேன்" எனறு சேமிசு மேலும் கூறினான்.

பெண்ணே விவாகஞ் செய்தபடியாற் சகிப்புத்தன்மை யுடையவனனுன். முடி., ஆமீனிய அல்லது அங்கிலிக்கன் கோட்பாட்டை அதாவது ஆங்கிலத் திருச்சபைக் கோட்பாட்டை ஆதரித்தது. பொதுமக்கள் சபையிலிருந்தவர்களிற் பெரும்பாலோர் ஆமீனியக்கோட் பாட்டைப் பெரிதும் எதிர்த்தனர். அரசன் ஆங்கிலத்திருச்சபைக்குச் செய்த நியமனங்களெல்லாவற்றையும் சமூசயத்துடன் அவர்கள் நோக்கினர்.

அரசனுக்கும் பாராளுமன்றத்துக்கும் பிணக்குண்டாதற்குக் காரணங்கள்

அரசனுக்கும் பாராளுமன்றத்துக்குமிடையிலுண்டான பிணக்கே பதினேழாம் நூற்றாண்டுச் சரித்திரத்தில் மக்கள் மனதைக் கவரும் முக்கிய சம்பவமாகும். (குறிப்பு 62). இதற்குச் சமயமுரண்பாடுமாத்திரம் காரணமன்று. வேறுபல காரணங்களுமுண்டு. இப்பிணக்கின்வரலாற்றை விவரமாகக் கூறு முன்னர் இவற்றைப் பற்றிச்சிறிது ஆராய்வாம். பிணக்குக்கு ஒரு காரணம் வெளிநாட்டுத் தொல்லையில்லாதிருந்தமையே. சென்ற அத்தியாயத்திலே இதைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளோம். ஆங்கிலேயன் ஒரு தருணத்தில் ஒரு விடயத்தைத்தான் கவனிப்பான் என்று சாதாரணமாகக் கூறிக் கொள்வதுண்டு. இலிசபெது ஆட்சிக்காலத்தின் பெரும் பகுதியில் வெளிநாடுகளிலிருந்துண்டான தொல்லைகளில் அவன் கவனத்தைச் செலுத்தினுன். நாட்டிலே கலகமோ, வெளிநாட்டிலிருந்து ஆபத்தோ உண்டானால், மக்களின் சலுகைகளைப் பற்றியும் உரிமைகளைப்பற்றியும் வாதிப்பதற்கு அது தருணமன்று. ஆனால் 1603 வரையில் இத்தகைய ஆபத்துக்களெல்லாம் நீங்கிவிட்டன. 1588 இல் சொனிய கடற்படை தோற்கடிக்கப்பட்டதுடன் பிலிப் மன்னனின் பேராசைக்குமுற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. அதனோடு தியூடர் வம்சாட்சிக்கும் முற்றுப்புள்ளி வைத்தாகிவிட்டது. எனவே தனது அரசாட்சி முறையைக் கண்டிக்கவும் சீர்திருத்தவும் அவனுக்கு அவகாசமுண்டாயிற்று.

பொதுமக்கள் சபையின் தன்மை.

பதினுறும் நூற்றாண்டிலே உருவான நாட்டினப் பண்பின் வளர்ச்சியும் மற்றொரு காரணமாகும். தற்கால ஆங்கில புருடன் தோற்றிய காலம் அந்த நூற்றாண்டெனவே கூறப்படுகிறது. முயற்சியினுல் முன்னேறுவதிலும் கடலோடுவதிலும், இலக்கியத்துறையிலும் அவன் தனது பலத்தைக் கண்டு கொண்டான். சமயச் சீர்திருத்தமும், மறுமலர்ச்சியும், தானுகவே நினைக்கவும் தருக்கிக்கவும் அவனுக்குப்பழக்கிவிட்டன. தன் கையே தனக்குத்துணையென்பதை உணரவும் தன்திறமையில் நம்பிக்கைகொள்ளவும், தன்னெண்ணப்படி செய்யவும் அவன் ஆற்றல் பெற்றுன். சருங்கக் கூறுவதானுல் தனது அரசாங்கத்தில் அதிக பங்கெடுத்துக் கொள்ள அவன் தயாராயிருந்தான். அத்துடன் விசேடமாக மத்திய

வகுப்பினர் அபிவிருத்தியடைந்தனர். 17 ஆம் நூற்றுண்டிலே நடைபெற்ற ஆங்கிலர் உரிமைப்போரில் பிரபுக்களோ பாமரமக்களோ அதிகம் பங்கெடுத்துக்கொள்ளவில்லே. பண்ணேயாரும், வியாபாரிகளும் நியாயவாதிகளுமே பெரிதும் பங்கெடுத்தனர். தியூடர் காலத்திலே அபிவிருத்தியடைந்தவர்கள் இந்த வகுப்பினரே. இவ்வகுப்பிலிருந்தே பொதுமக்கள் சபைப் பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்கு அன்னியநாட்டுவிவகாரங்களைப்பற்றிப் பெரும்பாலுந்தெரியாது. சில சமயம் இவர்களுக்கு அரசாங்கத்தின் சங்கடங்களைப்பற்றித் தெரியாது. சில வேளை இவர்கள் அர்த்தமற்ற முறையில் அமைச்சர் மீது குற்றச்சாட்டுக் கொண்டுவந்தனர். ஆனுல் இவர்கள் பெரும்பாலும் ஒழுக்கமுள்ளவர்களை; தீய வழியிற் செல்லாதவர்கள். சுதந்திரமுள்ளவர்கள்; மிதமான கொள்கையுடையவர்கள்; அமைதியுடையவர்கள். ஆனுல் கொண்டது விடாதவர்கள். உரிமைப் போராட்டத்தின் ஆரம்பக்கட்டத்திலே நியாயவாதிகளே பாராளுமன்றத்திற் சொற்போர் தொடுத்தனர். பேக்கன் கூறியாங்கு "உயிர் எழுத்துக்கள்" போல இவர்கள் விளங்கினர். எனையோர் "மெய் யெழுத்துக்களாக" விளங்கினர். வாட்போர் ஆரம்பித்ததும், பண்ணேயாரே முன்வந்து வாள்வீசினர்.

பிறநாட்டுத் தொல்லைகளொன்றும் இங்கிலாந்துக்கு ஏற்படவில்லே. தாமாகவே நினைத்துத் தொழில்புரியக்கூடிய ஒரு வகுப்புக் குடிமக்கள் அங்குத் தோன்றினர். இலிசபெத்து இராணியின் ஆட்சிக் காலத்திலே தானும் அவளுக்கும் பாராளுமன்றத்துக்குமிடையில் அன்னியோன்னியமான தொடர்பு எப்பொழுதும் இருக்கவில்லே. இக்காலத்தில் 11 முறைதான் பாராளுமன்றம் கூடிற்று. எந்தப் பாராளுமன்றமும் ஆறு வாரத்தைக் கொண்ட ஒரு வைகற்காலத்துக்கு மேற்கூடவில்லே. "புதிய சட்டங்களே நிறைவேற்றவோ[1] வினுபேச்சுக்கள் பேசி அருமையான நேரத்தை வீணுக்கவோ" பாராளுமன்றத்தைத் தான் கூட்டவில்லேயென்றும், அரசாங்கத்தின் செலவுக்கான பணத்தை அனுமதிப்பதற்கே அதைக் கூட்டுவித்ததாகவும் இலிசபெத்து அரசி ஒரு முறை வெளிப்படையாகக் கூறியது உண்மையே. சிலசமயங்களிலே பாராளுமன்றம், சுதந்திரமும் முரண்பாடுமுள்ள சுபாவத்தைக் காட்டியதுண்டு. அரசனும், அமைச்சரும் தாம் நினைத்தபடி ஆட்சி நடந்த மக்கள் பேசாமற் பார்த்துக் கொண்டிருக்க முடியாதென்பதையும் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய கடமை உரிமை என்பவற்றைப்புனராலோசனை செய்வதற்குக் காலம் வந்துவிட்டதென்பதையுமே இது காட்டிற்று. முதலாம் சேமிசின் ஆட்சியில் இப்புனராலோசனைக்குச் சமயம் வந்தது. அவன் கூட்டிய முதற் பாராளுமன்றத்துக்கு முன்னெருபோதுமில்லாதவகையில் அங்கத்தவர் பெருந்தொகையாக வந்து கூடினர். சேமி

[1] புதிய சட்டங்களில் இலிசபெதுக்கு நம்பிக்கை யிடையாது. ஒரு வருடத்திலே இரண்டு சபையுமாகச் சேர்ந்து 91 மறிகளே நிறைவேற்ற அதில் 48 மறிகளே அரசி வீட்டதல் செய்தான்.

சின் ஆட்சிக்காலத்து முதல் ஆண்டிலேயே, இலிசபெத்தினாட்சியிற் கவனியாது விடப்பட்ட கருமங்களைத் "தீர்த்துப் புனருத்தாரணஞ் செய்து, ஒழுங்குபடுத்தத்" தருணம் வந்துவிட்டதெனப் பாராளுமன்றங்கேட்டுக் கொண்டது. ஆட்சிமுறை சம்பந்தமான நேரடியான பெரியபிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியிருந்தன.

(அ) தெய்வ உரிமை

ஆட்சிப்பீடத்தின் அத்திவாரத்தையே தகர்க்கக் கூடிய கருத்துக்கள் எழுந்தன. அரசனுக்கு அரியாசன உரிமை எவ்வாறுண்டானது? அரசனும் விசுப்பாண்டவரும் வேறுபலரும் கருதியவாறு, பரம்பரையான தெய்விக உரிமையினாலா? அல்லது பாராளுமன்றம் நிறைவேற்றிய விதிப்படியா? அரசன் தெய்விகவுரிமைகொண்டு ஆட்சிநடத்துகிறானென்றால் அவன் வார்த்தைகளையோ செயலையோ கண்டிப்பது தவறு.

(ஆ) தற்பேறுமை

அரசனுடைய தற்பேறுமையென்பதென்ன? அரசன் இறுதியாகத்தான் நினைத்தபடி செய்வதற்குத்தன்னிடம் வைத்திருக்கும் ஒதுக்க அதிகாரம் அது என அரசன் கட்சியைச் சேர்ந்தவர் கூறினர். நாட்டின் நலத்தை உத்தேசித்து நாட்டின் சாதாரணச் சட்டங்களையெல்லாம் நிராகரித்து விடுவதற்கு உண்டான அதிகாரம் அது என்றனர் அக்கட்சியினர். சட்டத்திலிருந்துதான் அதிகாரம் பிறக்கிறதென்றும் சட்டப்படியே அரசனுக்கு அதிகாரம் வழங்கப்படுகிறதென்றும், சட்டப்படியே அது எப்பொழுதும் இயங்க வேண்டுமென்றும் பாராளுமன்றக் கட்சி அபிப்பிராயப்பட்டது. இறைமையின் தோற்றுவாய் எது? அரசனா? அல்லது அரசனும் பாராளுமன்றமுமா?

காரிய பூர்வமான பிரச்சினைகள்

பாராளுமன்றத்தின் அனுமதியின்றி அரசன் பணந்திரட்டலாமா? விசாரணையின்றி மக்களை அரசன் சிறைவைக்கலாமா? அமைச்சர் செய்யும் செய்கைகளுக்குப் பாராளுமன்றம் அவர்களிடம் விளக்கங் கேட்க அதிகாரமுண்டா? என்ற கேள்விகளுக்கெல்லாம் விடை, மேலே கூறிய கேள்விகளின் விடையிலேயே தங்கியிருக்கிறது. அவற்றுக்குக் கொடுக்கப்பட்டவிடைகள் தாமும் தெளிவாயிருக்கவுமில்லை. முடியின் அதிகாரங்கள் தெளிவாக வரையறுக்கப்படவில்லை. ஆங்கிலேயரின் அரசியல் யாப்பு அந்தக்காலத்தில் மாத்திரமன்றி, எந்தக் காலத்திலுமே, திட்டவட்டமான இறுக்கமான வகையினதாய் இருக்கவில்லை. அரசனுடைய கட்சி எவ்வளவு தீவிரமான அபிப்பிராயங்களையுடையதாயிருந்ததோ அவ்வாறே பாராளுமன்றக் கட்சியும் தீர்மானமான அபிப்பிராயங்களைக் கொண்டிருந்தது.

தத்தம் கருத்துக்களை வலியுறுத்துவதற்கு ஆதாரமாக இருகட்சியினரும் பலமான நியாயங்களைக் கூறினர். நாளடைவில் இவ்விரு கட்சிக்குமுள்ள வேற்றுமைகள் வளர்ந்தன. சமாதானத்துக்கு இடமில்லாமற் போயிற்று; கடைசியில் வாளினாலேயே தீர்க்க வேண்டியதாயிற்று.

"நான் இங்கே வந்தபொழுது பாராளுமன்றமும் இருந்தது. எனவே அதனோடு இணங்கிப் போக வேண்டிய நிலை எனக்குண்டானது" எனச் சேமிசு கூறினான். அரசனிடம் அனுதாபங் கொள்வதற்கு இடமிருக்கிறது. எனினும் பாராளுமன்ற விடயத்திலே சதுவட்டு மன்னர்கள் மிகவும் சங்கடமான தொரு கட்டத்தில் அரசு நடத்தினர். சேமிசு நெருக்கடியைத்தீர்ப்பதற்குப் பதிலாக மேலும் அதனை மோசமாக்கினான். அரசனுடைய உரிமைகளையும் மக்களுரிமைகளையும் பேசித்தீர்க்கமுடியாது; மௌனத்திலேதான் அவை இணங்குவன என்று ஓர் அறிஞர் ஒருமுறை கூறினார். சேமிசு அதிகப் பிரசங்கித்தனமும், பண்டிதரைப்போலப் பேசும் சுபாவமுமுடையவன். திட்டமாக வரையறுக்கப்படாது விட்டாலே நன்மையளக்கக்கூடிய பல நிருவாக விடயங்களை வரையறுத்துக் கூறிவிட வேண்டும் என அவன் எப்பொழுதும் விரும்பினான். மற்றவர்களுடைய கவனத்தைப் கவராமலே சில அதிகாரங்களை அவன் அனுபவித்திருக்கலாம். ஆனால் அவற்றைக் கருத்தளவிலே வரையறுத்துக்கொள்ள வேண்டுமென அவன் ஆசைப்பட்டான். இவ்வாறு கண்டிப்பான வரைவிலக்கணம் கூறியதால் மக்களின் எதிர்ப்பை அவன் பெற நேரிட்டது.

சேமிசு, கொட்டுவின் ஆகியோரின் வழக்கு (1604)

சேமிசுக்கும் அவனுடைய பாராளுமன்றத்துக்குமுள்ள தொடர்புகளின் விவரங்களை ஆராய இங்கு இடமில்லை. ஆனால் **முதலாம் பாராளுமன்றக்** கூட்டம் நடைபெற்ற பொழுது நடந்த ஒரு சம்பவம் சேமிசின் சமயோசித புத்தியற்ற தன்மையைக் காட்டுகிறது[1]. கொட்டுவினென்பான் சட்டப்பிரட்டஞ் செய்யப்பட்டவன். அவனைப் பாராளுமன்றத்துக்கு அங்கத்தவனாகத் தெரிவு செய்யக்கூடாதென அரசனின் ஆலோசனைச்சபை தீர்மானித்தது. அத்துடன் சட்டப்பிரட்டஞ் செய்யப்பட்டவர்களைப் பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யக் கூடாதென அரசன் பிரகடனமொன்றையும் வெளியிட்டான். தேர்தல் சம்பந்தமான விடயங்களைத் தீர்க்கும் உரிமை தங்களுக்கேயுண்டெனப் பொதுமக்கள் சபையினர் சாதித்தனர். பாராளு

---

[1] "முடியாட்சியே உலகில் மிகமேலானது." அரசன் உலகிற் கடவுளின் பிரதிநிதி; கடவுளின் அரியாசனத்திலே அவன் அமருகிறான். கடவுள்கூட அரசனைப் பூலோகத் தேவன் என்றே அழைக்கிறார். எனவே பூலோகத் தேவர்களுக்கு மனிதர் கட்டுப்பட்டிருப்பது தவிர்க்கமுடியாதது. அரசன் தனது அதிகாரத்தைப் பயன்படுத்திச் செய்யும் செயல்களைக் குடிகள் ஆட்சேபிப்பது இராசத்துரோகமாகும்," என்று 1611 இல் பாராளுமன்றத்துக்குச் சேமிசு கூறினான். சேமிசு சமயோசிதமற்றவர் அதிகப்பிரசங்கியென்பதற்கு இதுவுமொரு எடுத்துக்காட்டு.

மன்றத்துக்கு அவ்வுரிமையை வழங்கினவன் அரசனே; எனவே தான் வழங்கிய அதிகாரத்தைத் தனக் கெதிராகப் பயன்படுத்தக் கூடாதென அரசன் வாதாடினான். பாராளுமன்றச் சிறப்புரிமைகளின் தோற்றம் பற்றியும் அவற்றை நிராகரிக்க அரசனுக்கு அதிகாரமுண்டா என்பதைப்பற்றியும் ஒரு வாக்குவாதமுண்டாயிற்று. ஈற்றில், தேர்தற் பிணக்கைப் பொதுமக்கள்சபை தீர்த்துக் கொள்ளலாமென அரசன் அனுமதி வழங்கினான். ஆனால் இது ஒரு மங்களகரமான ஆரம்ப மன்று.

முதலாம் சேமிசின் முதற் பாராளுமன்றத்திலே வரிவிதித்தல் சம்பந்தமான மிக முக்கிய பிரச்சினை யொன்று கொண்டுவரப்பட்டது. அரசனின் சாதாரண இறையானது முடிக்குரிய காணிகள், சேவைமானிய வருமானங்கள் முதலியவற்றின் மூலமும் இறக்குமதிவரிமூலமுங் கிடைத்தது. முந்திய தன் பயனுக வருடாவருடம் 250,000 பவுண் கிடைத்தது. இறக்குமதி வரியானது மிடா வரி, இருத்தல் வரி[1] என இருவகைப்பட்டது. இது அரசன் உரிமை பெற்ற நாள் தொடக்கம் அவன் இறக்கும் வரை, நாட்டில் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள்மீது விதிக்கப்பட்ட வரிமூலம் பெறும் வருமானம். அது அரசனுக்கே உரியது. இவ்வரிமூலம் அரசனுக்கு வருடா வருடம் 150,000 பவுண் கிடைத்தது. சேமிசு அரியாசனம் ஏறிய இரண்டு மூன்று வருடங்களின் பின்னர், இறக்குமதியாகுஞ் சில பொருள்கள் மீது அவன் மிடா வரி, இருத்தல்வரிக்கு மேலதிகமாக, சில விசேடவரிகளும் விதித்தான்.

பேற்றின் வழக்கு (1606)

முந்திரிகை வற்றல் மீது விதிக்கப்பட்ட மேலதிக வரியைப் பேற்று என்ற வியாபாரி கொடுக்கமறுத்தான். துறைமுகங்கள் அரசனுடைய சொத்தென்றும், நாட்டின் நன்மைக் கேற்றவாறு (1606) வியாபாரத்தை ஒழுங்கு செய்வது அரசனின் உரிமையென்றும், இக்காரணங்களால் அவன் அந்த வரியைக் கொடுக்கவேண்டியது நீதியென்றும், நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். இந்தத்தீர்ப்பின் பயனுக அரசாங்கம் வேறும் பல பொருள்கள் மீது விசேடவரிகளை விதித்தது. இதனால் அரசனுடைய வருமானம் அதிகரித்தது. இந்த விசேட வரிகள் **விதிப்புக்கள்** என வழங்கப்பட்டன. இவற்றால் அரசனுக்கும் பாராளுமன்றத்துக்கும், அடிக்கடி பிணக்குண்டானது. முதற் பாராளுமன்றமும் வேறைய பாராளுமன்றங்களும் இவற்றை எதிர்த்தன. 1611 இல் அரசன் தனது முதற் பாராளுமன்றத்தைக் கலைத்தான். அடுத்து 10 வருடங்களுக்குப் பாராளுமன்றங்கூடவில்லை. 1614 இல் மாத்திரம இரண்டு மாதத்துக்கு ஒரு பாராளுமன்றங் கூடிற்று.

[1] இறக்குமதியாகும் ஒவ்வொரு மிடா குடிவகைமீதும், ஒவ்வொரு இருத்தல் வண்டி பொருள் மீதும் விதிக்கப்பட்ட வரியாகும்.

அதில் எவ்வித சட்டங்களுஞ் செய்யப்படாதபடியால் அது "வெறுமையான பாராளுமன்றம்" என வழங்கலாயிற்று. 1621 இல் பிரடரிக்கு பலற்றினேற்றை இழந்தான். அதைத்திரும்பப் பெறுவதற்காக இங்கிலாந்து போரில் ஈடுபடலாமென்ற காரணத்தாற் சேமிசு மூன்றாவது பாராளுமன்றத்தைக் கூட்டினான். இது மிக முக்கியமான பாராளுமன்றம். பழி மாட்டறைதல் செய்யும் உரிமையைப் பொதுமக்கள் சபை மறுபடியும் பெற்றது. எனின் அரசனின் அமைச்சரையும் உத்தியோகத்தரையும் பிரபுக்கள் சபைமுன் குற்றஞ்சாட்டி விசாரிக்கும் உரிமை அதற்குக் கிடைத்தது. இது மிக்கபலம் பொருந்திய ஆயுதம்போனற ஓர் உரிமையாகும். 1459 தொடக்கம் இது வரை இவ்வுரிமை பயன்படுத்தப்படவில்லை. காலப்போக்கில் இந்த உரிமை அடிக்கடி பயன்படுத்தப்பட்டது. முழுவுரிமையுடையவர்களைப் பாராளுமன்றம் குற்றஞ் சாட்டத் தொடங்கிற்று. பிரபு நாயகன் பிரான்சிசு பேக்கனும் வெருலம் பிரபுவின் மீதுங் கைக்கூலி வாங்கியதாக இந்தப் பாராளுமன்றக் குற்றஞ்சாட்டிற்று. வழக்காளிகள் அந்தக் காலத்திலே நீதிபதிகளுக்குப் பரிசுகள் கொடுப்பது வழக்கம். பேக்கன் அசிரத்தை காரணமாக இத்தகைய பரிசு வாங்கினார் என்பதில் ஐயமில்லை. வழக்கிலே தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்னரே இப்பரிசுகளை அவர் ஏற்றார். இப்பரிசுகளும் கெட்டநோக்கத்துடனேயே கொடுக்கப்பட்டன. பேக்கன் இவற்றை இலஞ்சமாகப் பெற்றார் என்பதற்கோ இவை அவருடைய தீர்ப்பைப் பாதித்தன என்பதற்கோ சான்றுகளில்லை[1]. பேக்கன் தன்னைப் பற்றிக் கூறிய கூற்றுக்கள் பொருத்தமானவையே. "கடந்த 50 வருடத்திலிருந்த நீதிவான்களுள் நானே மிக்க நீதியுள்ளவன். கடந்த இரு நூறு வருடங்களாகப் பாராளுமன்றத்தால் விடுக்கப்பட்ட கண்டனங்களுள் இதுவே மிக நேர்மையானது" என அவர் குறிப்பிட்டார். பேக்கன் பதவியிலிருந்து நீக்கப்பட்ட சில காலத்தில் இறந்து போனார்.

பேச்சுச் சுதந்திரம்

இரண்டாவதாக இந்தப் பாராளுமன்றம் பேச்சுச் சுதந்திரத்தைப் பாதுகாத்தது. இப்பாராளுமன்றம் கத்தோலிக்கருக்கு எதிராகவும், சபானிய ருக்கு மாறுகவுமிருந்தது. பலற்றினேற்றைத் திருப்பிப் பெறும் நோக்கமாகச் சபானிய அரசினங்குமரிக்குச் சான்சைத்திருமணஞ் செய்யச் சேமிசு நினைத்தான். எனவே பொதுமக்கள் சபை சார்சு "நமது சமயத்தைச்

[1] பேக்கனுக்கு முன்னால் விசாரணை செய்யப்பட்ட பல வழக்குகளையுடைய ஒரு சீமாட்டி, ஒரு வழக்கிலே பேக்கனின் இல்லமான யோக்கு வீட்டுக்குக் கையிலே 100 பவுண்கொண்ட ஒரு பேழையுடன் சென்றாள். "உங்கள் கையிலிருப்பதென்ன" என்று பேக்கன் கேட்டார். "இது நானுக எண்கையால் தைத்த ஒரு சிறு இதைத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று" கேட்டாள். இத்தகைய அழகிய ஒரு பெண் தன்கையாற் செய்த சிறுபையை எவரே ஏற்றுக்கொள்ள மாட்டார் எனப் பேக்கன் பதில் கொடுத்தார். பேக்கன் அச்சிறுபையை ஏற்றுக்கொண்டபோதிலும் தீர்ப்பு அந்தச் சீமாட்டிக்குச் சாதகமானதாயிருக்கவில்லை.

சேர்ந்த ஒருவரை" மணஞ் செய்யவேண்டுமென்று கூறி ஒரு மனுவை வரைந்து அரசனுக்குச் சமர்ப்பித்தது. அத்துடன் போப்பாண்டவரைப் பற்றியும் அவரது "அருமையான" ஸ்பானிய மன்னனைப்பற்றியும் தனது அபிப்பிராயத்தைக்குறிப்பிட்டது. ஸ்பெயினுடன் இணக்கப்பேச்சு நடத்திக் கொண்டிருந்த நெருக்கடியான சமயத்திலே இப்படியானதொரு மனு சமர்ப்பிக்கப்பட்டது மிக நிர்ப்பந்தமானதென அரசன் எண்ணினான். தங்களுடைய அறிவுக்குந் திறமைக்கும் அப்பாற்பட்டவிடயங்கள்பற்றி விவாதிக்கவும் பிரசங்கமாகப் பேசவும் தலைப்பட்ட பொதுமக்கள் சபைக்கும் ஆவேசப் பேச்சுக்காரருக்கும் எதிராகக் கோபம் மிகுந்த கடிதம் ஒன்றை எழுதினான். நமது அரசாங்கத்தைப் பற்றியோ, அரசு சம்பந்தமான பெரிய விடயங்களைப்பற்றியோ, இனிமேற் பொது மக்கள் சபை தலையிடக்கூடாதெனவும் கேட்டுக்கொண்டான். பொதுமக்கள் சபை தனது மனத்தைரியத்தை இழக்கவில்லை. திசெம்பரில் ஓரிரவிலே மெழுகு வர்த்தி ஒளியில் அச்சபை தனக்குப் பேச்சுச் சுதந்திரமுண்டென்பதை எடுத்துக்காட்டி மன்னனின் கடிதத்துக்கு ஆட்சேபந் தெரிவித்தது. உடனே அரசன் சபையைக் கலைத்தான். அங்கத்தவரிற்சிலரைச் சிறைவைத்தான். பொது மக்கள் சபையின் நாட்குறிப்பேட்டை எடுப்பித்து அதில் எழுதப்பட்ட மறுப்புரையைத் தனது கையாலேயே கிழித்தெறிந்தான் (1622). ஆங்கில இராச்சியத்திலே, ஆங்கிலேயனொருவன் தான் விரும்பியதைக் கூறக் கூடியதோர் இடம் பொது மக்கள் சபை என்பதை இது தெளிவாகக் காட்டிற்று.

நாலாவது பாராளுமன்றம் (1624) எவ்வித பிணக்குமின்றித் தனது கருமங்களைச் சுமுகமாக நடத்திற்று. பாராளுமன்றம் விரும்பியவாறு ஸ்பெயினெதி யுத்தந் தொடங்கிற்று. மேலும், பொருளாளர் பிரபுவாயிருந்த மிடில்செற்சுமீது பழிமாட்டறைந்து விசாரணை செய்வதற்குப் பக்கிங்காமும், சாள்சும் ஆதரவளித்தனர். இதன்பின்னர் சிறிது காலத்திலே சேமிசு (1625) இறந்தான்.

முடிக்கும் பாராளுமன்றத்துக்கும் உண்டான பிணக்கு சேமிசு ஆட்சியிலேயே ஆரம்பித்துவிட்டதென்பதையும், பொதுமக்கள் சபை இங்குத் திட்டமான முன்னேற்றமடைந்ததென்பதையும் பழிமாட்டறைவு செய்யும் உரிமையை அது புனருத்தாரணஞ் செய்ததென்பதையும், தனது சிறப்புரிமைகளை நிலைநாட்டிற்றென்பதையும், புதுவரிகளை அரசன் நிலைத்தபடி விதிப்பதை எதிர்த்த தென்பதையும் ஈண்டுச்சுருக்கமாகக் கூறினோம். ஆபத்தான பிரச்சினைகளைப்பும் தன்மை சேமிசின் சுபாவத்தில் இயல்பாகவே யமைந்திருந்தது என்பது வெளிப்படை. அப்பிரச்சினைகள் அடுத்த அரசன் காலத்திலே தீர்க்கப்படவேண்டியிருந்தன.

11 ஆம் அதிகாரம்

முதலாம் சாள்சு (1625—1649)

1. முதலாம் சாள்சின் பிறநாட்டுப் பூட்கை (1625—1649)

முதலாம் சாள்சும் போரும் (1625–6)

முதலாம் சாள்சு அரசகட்டிலேறியபோது சேர்மனியிலே புரட்டசுத்தாந்தியர் தமது உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தனர். ஆனால் புரட்டசுத்தாந்தியர் உரிமைகளுக்காகப் போராடுவதற்கு ஒரு புதியதலைவன் தோன்றினான். அவனே தென்மார்க்கு அரசன். சேர்மனியில் யுத்தத்தை நடத்துவதற்குச் சாள்சு வருடமொன்றுக்கு அவனுக்கு 3,60,000 பவுண் கொடுக்க உடன்பட்டான். ஆனால் முதற்றவணைக் கட்டணமான 46,000 பவுண்கொடுத்துவிட்டு அத்துடன் நிறுத்திவிட்டான். இதற்கு ஒரு காரணம் என்னவெனில், சாள்சு பாராளுமன்றத்திடமிருந்து தேவைக்குப் போதிய பணத்தைப் பெறத் தவறியதே. அது அவனுடைய குற்றமே. மற்றொரு காரணம் தென்மார்க்கு அரசனோடு உடன்படிக்கை செய்து கொண்ட பின்பு சாள்சு, தனது பூட்கையைப் பெரிதும் உருவாக்கிவந்த பக்கிங்காம் அமைச்சனுடன் சேர்ந்து ஸ்பானியத் துறைமுகங்களைத் தாக்கவேண்டுமென்றும் அவ்வாறு செய்தாற்றான் சேர்மனியிலுள்ள புரட்டசுத்தாந்தியருக்குத் துணைபுரியலாமென்றும், அவ்வாறு செய்தால் பலற்றினேற்றலையும் மீட்கலாமென்றும் எண்ணினான். பிரடரிக்கை மறுபடியும் அரசிலிருத்துவதற்குப் போரானே நிர்ப்பந்திக்கும் நோக்கமொடு ஸ்பானிய அரசன்மீது தாக்குதல் நடத்துவது நேரடியான வழியன்று. எனினும் ஸ்பெயினுடன் கடற் சண்டைசெய்வது எல்லாராலும் வரவேற்கப்படத்தக்கதொன்று. அத்துடன் சேர்மனியிலே சண்டை நடத்துவதிலும் பார்க்க இது இலகுவானதொன்றுகவுங் கருதப்பட்டது. எனவே திரேக்கு முன்னுள் நடத்தியதுபோலக் கேடிசு துறைமுகத்தைத் தாக்கவும், பட்டினத்தை அழிக்கவும், அமெரிக்காவிருந்து வரும் திரவியங்களைக் கைப்பற்றவும் கடற்படையொன்று நிரப்பப்பட்டது. ஆனால் இப்படையெழுச்சி தோல்வியடைந்தது. கேடிசு கைப்பற்றப்படவில்லை. திரவியக் கப்பல் கைப்பற்றப்படவுமில்லை (1625)[1]. அடுத்த வருடம் தென்மார்க்கு அரசன், தானே முந்துற்றுத் தாக்கவேண்டிய நிர்ப்பந்தமுண்டாயிற்று. சாள்சு அனுப்பவேண்டிய கட்டணம் அனுப்பப்படாத

[1] புயற்காலமான ஒற்றோபரில் இந்தக் கடற்படையெழுச்சி ஆரம்பிக்கப்பட்டது. கப்பலோட்டிகளும் போர் வீரரும் பலவந்தமாகச் சேர்க்கப்பட்டார்கள். கப்பல்களும் அடித்தளம் உடையவையாயிருந்தன. உணவு மிக மோசமானதாயிருந்தது. "பாரிசிலுள்ள தோட்டத்திற் காணப்படும் நாய்கள்கூட அந்த உணவை உண்ணமாட்டா" என்று அக்காலத்து ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார் கேடிசத்தறையிலிருந்து கப்பல்களை ஓட்டுவதற்குத்தானும் போதிய ஆட்களின்றியே அவை தமதுதேசத்துக்குப்போய்ச் சேர்ந்தன.

தால் வேதனம் பெறுத போர்வீரர் ஆரவாரஞ்செய்தனர். இந்த யுத்தத்திலே தோல்விவிட்டவே தென்மாக்கு அரசன் தன்தேசந் திரும்பினன் (1626). மூப் பதாண்டும் போரிலே சாள்சின் ஆரம்ப முயற்சி படுதோல்வியடைந்தது.

பிரான்சுடன் பிணக்கு (1625–6)

இதற்கிடையிற் பிரான்சுடன் சாள்சு பிணக்குற்றான். தந்தையின் ஆட்சி முடிவிலே, சாள்சுக்கு, என்றியெற்ற மரியா என்ற பிரெஞ்சு இராச குமாரியைத் திருமணஞ் செய்ய நிச்சயிக்கப்பட்டது. சாள்சு அரசுரிமை பெற்றதும், திருமணம் நிறைவேறிற்று. மணவொப்பந்தப்படி இங்கிலாந்தி லுள்ள கத்தோலிக்கருக்குச் சில சலுகைகள் வழங்குவதாக உறுதிகூறப் பட்டது. சேமிசு இறப்பதற்கு முன்னர் பிரெஞ்சு அரசனுக்குச் சில கப்பல்களைக் கடனுய் உதவுவதாக வாக்களித்திருந்தான். இந்தக் கப்பல்களைக் கொண்டு பிரான்சிலுள்ள இயூசெனருக் கெதிராய் யுத்தஞ் செய்யப் பிரெஞ்சு மன்ன னும் அவனுடைய அமைச்சனன கீர்த்திவாய்ந்த இரிசிலுவும் திட்டமிட்ட னர். தனது தந்தையின் வாக்குறுதிகளை மீறுவதற்குச் சாள்சு பல தந்திரங் களையும் பயனற்ற யுத்திகளையும் கையாண்டபின்[1], கப்பல்களைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. இது இங்கிலாந்து மக்களுக்குப் பெரிய ஆத்திரத்தை உண்டாக்கிற்று.

இரீ படையெழுச்சி (1627) பக்கிங்கம் படுகொலைசெய்யப்படல் (1628)

இங்கிலாந்திலுள்ள கத்தோலிக்கருக்கு வாக்களிக்கப்பட்ட சலுகைகளைக் கொடுத்துவிடவேண்டுமென பிரெஞ்சு மன்னன் கேட்டான். 1627 இல் இரண்டு தேசங்களும் யுத்தத்திலிறங்கின. பிரான்சின் மேற்குக் கரையி லுள்ளதும், இயூசெனரின் பெரிய கோட்டையும், பிரெஞ்சு மன்னர் படை களினல் முற்றுகையிடப்பட்டதுமான **இலாஉரொசெல்** என்ற அரணுக்குத் துணை செய்யும் நோக்கமாக **இரீத்தீவிலு**ள்ள தொரு கோட்டையைக் கைப் பற்றுமாறு பக்கிங்கம் அனுப்பப்பட்டான். அப்பொழுது இங்கிலாந்திடம் நிலையான சைனிய மிருக்கவில்லை. எனவே நாட்டிலுள்ள "மக்கட் பதரை"யெல்லாம் படையிற் சேர்த்ததால் இப்படையெழுச்சி வெற்றி பெற வில்லை[2]. பக்கிங்கம் தனது படைகளுக்குத் தைரிய மூட்டினன். ஆயின் உற்சாக

[1] கப்பல்களைக்கொடாமல் தடை செய்வதற்காக வேறுபல உபாயங்களோடு இராணுவக் கலகமும் உண்டாக்கப்பட்டது.

2. ஒருபடையைத் திரட்டும் பொழுது ஒவ்வொரு குறிச்சியும் ஒரு தொகை ஆடவரை அனுப்ப வேண்டியிருந்தது. சேவைத் தலைவர்கள் இந்தத் கருணத்தைப் பயன்படுத்தி நாட்டின் நன்மைக்குக் குந்தகம் விளைக்கும் ஆடவரை "நாட்டின் நன்மைக்காகச் சேவையிற சேருமாறு" கேட்டுக்கொண்டனர். பக்கிங்ஙமின் படையாட்கள் இலக்கு வைத்துச்சுடத் தெரியாதவராயும் கட்டுப்பாடற்றவராயுமிருந்தனர். கடற்கரையில் அவர்களுக்கு இரண்டுவாரம் பயிற்சியளித்த பின் யுத்தகளத்துக்கனுப்பப்பட்டனர்.

முண்டாக்க முடியவில்லை. பிரெஞ்சுக்காரர் தமது கோட்டைக்கு உணவு கொண்டுவந்து குவிக்கக்கூடிய நிலையில் இருந்தனர். காற்று பாதகமாமாயிருந்தபடியால் இங்கிலாந்திலிருந்து வரவேண்டிய உதவி வந்துசேரவில்லை. அவ்வாறு வந்து சேர்ந்திருக்குமானல் பக்கிங்கம் வெற்றி யடைந்திருப்பான். ஆனல் இந்த நிலைமையில் அவன் தோல்வியுடன் திரும்ப வேண்டியதாயிற்று. அதனல் மக்கள் அவன்மீது பழிசுமத்தினர். மற்றொரு படையெழுச்சிக்கு அவன் ஆயத்தஞ் செய்தான். ஆனல் அவனுடைய படை யைச் சேர்ந்த வேறுபலர் எண்ணியதுபோலவே பெற்றன் என்ற ஓர் உத்தி யோகத்தன், பக்கிங்ஙமைக் கொல்வது புண்ணியமென்றெண்ணி, அவனை ஒரு சிறிய கத்தியினற் குத்திக் கொன்றன். அவ்வளவிற் பக்கிங்ஙமின் வாழ்க்கைநெறி முடிவுற்றது (1628).

சாள்சு வாளாவிருத்தல் (1629—49)

பக்கிங்ஙமின் மரணத்துடன் அரசியற் பூட்கையில் மாற்றமுண்டானது. "துணிகரமான முயற்சி நீங்கி வாளாமைக் கொள்கை" தலையெடுத்தது. சிபெயினுக்கெதிராகப் பிரான்சுடனும், பிரான்சுக்கெதிராகச் சிபெயினுடனும் சாள்சு ஒரே சமயத்தில் நட்புறவு செய்யத்தொடங்கினன். சேர்மனியி லுள்ள புரட்சுத்தாந்தியருக்குத் துணைபுரிவதற்கு இப்பொழுது சுவீடன் அரசனன **கசுத்தாவசு அடொல்பசு** தோன்றினன். சாள்சு இவனுக்கு உதவிபுரிய முற்பட்டான். தென்மாக்கு அரசனைக் கைவிட்டான். பின்னர் தென்மாக்கு அரசனுக்குத் துணைசெய்து சுவிடன் மன்னனைக் கைவிட்டான். "ஒரு கையாற் கட்டியெழுப்பியதை மற்றக் கையினல் உடைத்து விடுகிறாய்" என்று சாள்சிற்கு ஓர் அந்நிய நாட்டுத் தூதமைச்சன் கூறினன். இது உண்மையே. முற்போக்கான தொரு அரசியற் பூட்கையை அனுசரிப்பதற்கு நிலைமை சரியாக இருக்கவில்லை. தனது திட்டங்களை நிறைவேற்றச் சாள்சிடம் முதலிற் பணமில்லை. பின்னர் தனது குடி மக்களோடேயே அவன் பிணங்கிக் கொண்டதால் ஒன்றுஞ் செய்யமுடிய வில்லை. பிறநாட்டலுவற்களிற் பெரிய பிரித்தானியாவின் செல்வாக்கு மிகக் குறைந்தது. சாள்சின் ஆட்சிக்காலம் முடியும்வரை இந்த நிலைமையே இருந்தது வந்தது.

முப்பதாண்டுப்போரின் கடைசிக்காலம்

எனவே முப்பதாண்டுப்போர் பிரித்தானியாவைப் பாதிக்கவில்லை. பிரித் தானியாவும் அதைப் பாதிக்க முடியவில்லை. அதன் கடைசிக்கால நிலையைப்பற்றிச் சுருக்கமாக ஈண்டுக் குறிப்பிடுவோம். **கசுத்தாவசு அடோல் பசு** சிறிது காலமாகப் பெருவெற்றி ஈட்டிவந்தபின் **உலுற்சன்களத்திலே** உயிர்நீத்தான் (1632)[1]. புரட்சுத்தாந்தியர் கட்சி தோல்வியடைந்தது.

[1] சமர் நெருக்கடியான நிலைமை அடைந்தபொழுது நவம்பர் மாதத்துப் பனிப்படலம் சூழ்ய வெளிச்சத்தை மறைக்க, கசுத்தாவசு வழிமாறிச் சென்று பகைவராற் கொல்லப்பட்டான்.

இரிசிலு பிரான்சிலே புரட்சுத்தாந்தியரை அடக்கினபோதிலும், அபிசு பேக்கு வமிசத்தின் வலிதொலைப்பதற்காக, சேர்மனியிலுள்ள புரட்சுத்தாந்தியருக்குப் படைத்துணை உதவினன். யுத்தத்தின் கடைசிக் கட்டத்திலே பிரெஞ்சுப் படைகள் வெற்றிக்குமேல் வெற்றியீட்டின. 1648 இல் யுத்தம் முடிவடைந்தது. சேர்மனிக்குச் சொந்தமான பெரும் பகுதிகளைப் பிரான்சும் சுவீடனும் பெற்றன. சேர்மன் அரசுகள் முன்னிலையிலும் பார்க்க ஒற்றுமையற்றவையாகவும், தனித்தனி சுதந்திரமுடையனவாகவுமிருந்தன. பொருட்டுறையிலும் ஒழுக்கத்துறையிலும், இந்தயுத்தமானது சேர்மனிமீதும், சேர்மன் சனங்கள் மீதும் பெருத்த சேதத்தை உண்டாக்கினது. பிரசிய அரசதிஞனை பிசுமாக்கின் அபிப்பிராயப்படி, 1880 இலே கூட முப்பதாண்டுப்போரின் விளைவுகள் காணப்பட்டன.

ஆங்கில அரசியற் பூட்கையின் தோல்வி: அதற்குக் காரணம்

பதினேழாம் நூற்றண்டின் முற்பாதியில் இங்கிலாந்து கையாண்டு வந்த பிறநாட்டுப் பூட்கை பயனற்றதாகவும் அவமானத்துக்குரியதாகவுமிருந்தது. இதற்குப் பல காரணங்களைக் கூறலாம். நிலையான இராணுவம் இல்லாதபடியால் அரசியற் சூழியல் வலியற்றதாயிற்று. இங்கிலாந்து யுத்தத்திலீடுபட நேர்ந்தபோது சண்டைக்குச் சென்ற போர்வீரர் அனுபவம் பெற்ற சேனியங்களோடு எதிர்நின்று யுத்தஞ்செய்ய முடியாதிருந்தனர். யுத்தத்திலீடுபடுவதிற் பாராளுமன்றம் ஊக்கங் காட்டியபோதிலும், சேமிசுக்கோ, சார்ள்சுக்கோ அது போதிய பணத்தைப் கொடுக்கவில்லை. சார்ளைப் பொறுத்தவரை அவன், தான் செய்ய எண்ணியிருந்ததைப் பாராளுமன்றத்துக்கு எடுத்து விளக்காதது பெருங்குற்றமே. மேலும் ஆங்கிலேயருக்கும் காலம் நல்லதாயிருக்கவில்லை. அவர்களெவ்வித முயற்சிசெய்த போதிலும் நல்ல பலனிட்டவில்லை. ஆங்கிலர் திட்டங்கள் தோல்வியுற்றதற்கு முக்கிய காரணர் சேமிசும் சார்சுமே. அவர்களுடைய குணம் இங்கிலாந்திலை தோல்விக்கு மூலகாரணமாயிருந்தது. இவருள் ஒருவன் ஒருவிடயத்தைத் தீர்மானிக்கச் சத்தியற்றவனுயும் அச்சமுடையவனுயுமிருந்தான். மற்றவன் திருகல் முறுகலான, ஒன்றுக்கொன்று முரணை கொள்கையுடையனுயிருந்தான் இவை ஈற்றில் கெடுதியையுண்டாக்கின. இங்கிலாந்து தோல்வியுற்றதுறையில் பிரான்சு ஈடுபட்டது. சேர்மன் புரட்சுத்தாந்தியருக்கு அது துணை புரிந்தது. அதனுல் மிகுந்த செல்வாக்கைப் பெற்று ஐரோப்பாவிலுள்ள எல்லாத் தேசங்களினதும் சுதந்திரத்துக்கு ஆபத்தையுண்டாக்கக்கூடிய நிலையிற் பதினேழாம் நூற்றண்டினிறுதியில் விளங்கிற்று.

முதலாம் சார்சும் உண்ணுட்டு அலுவல்களும், (1625—1642)

முதலாம் சார்சும், என்றியெற்றுமரியாவும்

சார்சு அரசரினமை எற்றபொழுது உண்ணுட்டு அலுவல்கள் சுமுகமாயிருக்கவில்லை யென்பதை இதுவரை கூறியவற்றுல் அறியலாம். அவனுடைய அமைச்சனை பக்கிங்கும் படபடத்தவன்; திறமையற்றவன். சேமிசு மன்னனின் கடைசிக் காலத்திற் பக்கிங்கமுக்கிருந்த செல்வாக்கிலும் பார்க்க அதிகமான செல்வாக்கை அவன் சார்சு மன்னன் காலத்திற் பெற்றுன். இறைசேரியிற் பணமில்லாதிருந்தது; பாராளுமன்றம் அதிகாரமுடையதாயிற்று. வெளிநாடுகளிலே, முப்பதாண்டுப்போரிற் புரட்டகத்தாந்தியருக்குத் தோல்வியே விளைந்தது. மேலும் சார்சின் மனைவி அவனுக்கு எவ்வித உதவியுஞ் செய்யமுடியாதிருந்தாள். என்றியெற்றுமரியா உல்லாசத்தன்மையுள்ள அழகி. ஆனுற் காலஞ் செல்லச் செல்ல அவள் அரசியல் விடயங்களிலே தலையிட்டுத் தன் கணவனை வசப்படுத்திக்கொண்டாள். ஆங்கிலேயர் பழக்க வழக்கங்கள் அவளுக்குத்தெரியா. ஆங்கிலேயருடைய குணசுபாவங்களையும் அவள் அறியமாட்டாள். தீவிரமான புரட்டகத்தாநதிய மதம் பரவிய நாட்டிலே அவள் உரோமக் கத்தோலிக்க சமயத்தவளாயிருந்தாள். தன் சமயத்தவர்க்குச் சலுகைகள் பெற்றுக்கொடுப்பதில் அவள் முனைந்திருந்தாள். உண்ணுட்டிலே தொல்லையுண்டாகுங் காலங்களிலெல்லாம் வெளிநாடுகளிலிருந்து துணை பெறுவதற்குச் சூழ்ச்சிகள் செய்தாள். அரசனுடைய அதிகாரம் பற்றி அவள் மிகத்தீவிரமான கொள்கையுடையவளாயும், அரசன் அதிகாரத்தை எதிர்ப்போர் கொடியவர் என்ற நம்பிக்கையுடையவளாயுமிருந்தாள்.

சார்சுக்கும் அவனது பாராளுமன்றத்துக்குமுள்ள பிணக்கிற்குக்காரணங்கள்

சார்சு தனது முதலனுக்கு வருட ஆட்சிக்காலத்தில் மூன்று முறை பாராளுமன்றத்தைக்கூட்டி, ஒவ்வொருமுறையும் அதனேடு பிணக்குற்றுன். பின்னர் பதினுறுவருடம் பாராளுமன்றமின்றியே ஆட்சி நடத்தினன். பின்னர் 1640 இற் கொத்துலாந்துடன் சண்டையிட நேரிட்டது. இதற்குப் பணம்வேண்டியிருந்தபடியாற் பாராளுமன்றத்தை இருமுறை கூட்டினன். இரண்டாவது பாராளுமன்றம் அவனுடைய அதிகாரங்களைக் குறைத்தது. பின்னர் 1642 இல் உண்ணுட்டுப்போர் உண்டானது. பாராளுமன்றத்துடன் சார்சுக்கிருந்த தொடர்பின் சுருக்கம் இதுவே. பிணக்கிற்குப் பலவிடயங்கள் ஏதுவாயின. சேமிசு காலத்திலிருந்த சமயச் சிக்கல் இவன் காலத்திலுமிருந்தது. சார்சு ஆங்கில உயர்திருச் சபையைச் சேர்ந்தவன். மனைவி

[1] ஒல்லோப்பத்திரா அல்லது சீபா ராணி தொட்டு இதுவரை அரசியல் விடயங்களிலே தலையிட்ட அரசிகளுள், குணத்திலோ பயிற்சியிலோ முதலாம் சார்லின் அரசியைப் போலப் பொருத்தமற்றவராகவில்லை. அவளிருந்த காலத்து அரசியல் நிலைக்கு அவன் செய்கை மிகப் பொருத்தமற்றதெனக் கூறப்பட்டது.

உரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவளானபடியால் அச்சமயத்தைப் பொறுத்தவரையிற் சகிப்புத்தன்மை காட்டினன். பாராளுமன்றம் பியூரித்தானியச் சார்புடையதானபடியால் உரோமன் கத்தோலிக்கத்தை வெறுத்தது. அரசனின் அமைச்சர் மீது பாராளுமன்றத்துக்கு நம்பிக்கையில்லை. முதல் நான்கு வருடத்திலே பக்கிங்ஙம் அமைச்சனாயிருந்தான். பின்னர் திரு போட்டும் அதன் பின்னர் 1640 இல் உலோட்டும் அமைச்சராயிருந்தனர். அவர்களிடத்து அது நம்பிக்கை வைக்கவில்லை. ஆனால் இவ்வமைச்சர் திறமையுடையவர்களென்றும், சாமர்த்தியம் வாய்ந்தவர்களென்றும் அரசன் கருதினன். அவர்களைப் பாராளுமன்றம் கண்டித்தபோது அக் கண்டனம் கட்சிச் சார்பினாலுண்டானதெனவும் அது அவமதிப்பானதென்றும் நினைத்தான். சார்ளின் ஆரம்ப ஆட்சிக் காலத்தில் ஆங்கிலப் பிறநாட்டுப் பூட்கை தோல்வியுற்றது பற்றிப் பாராளுமன்றம் ஆத்திரமடைந்தது. இறுதிக் காலத்திலே பிறநாட்டு வல்லரசுகளுடன் சார்ளு செய்த சூழ்ச்சி பாராளுமன்றத்துக்கு ஆத்திரத்தையுண்டாக்கிற்று.

ஆனால் இவற்றுக்கெல்லாம் அடிப்படையாக, சென்ற அதிகாரத்திலே எடுத்துக்காட்டப்பட்ட பிரச்சினைகள் நின்றன. இறைமைக்குப் பிறப்பிடம் எது? நாட்டின் ஆட்சிக்குப் பொறுப்பு எவர்கையது? ஆட்சியிலே தான் அதிக பங்கெடுக்க வேண்டுமென்று பாராளுமன்றம் நினைத்தது. சரியாகவோ பிழையாகவோ சார்ளோ அதற்கு உடன்படமறுத்தான். இவ்விரு பாலாருள் எவர்பால் நியாயமுண்டென்பது ஒருபுறமிருக்க, பிணக்கெல்லாவற்றுக்கும் இப்பிரச்சினையே மூலகாரணமாயிற்று. அரசன் அதிகாரத்தையும், பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் சமரசத்துக்குக்கொண்டு வருவது இலகுவான விடயம்போல இன்று தோற்றலாம். சச்சரவின்றி இந்தச் சமரசத்தைக்கொண்டு வருவது முடியாதகாரியம். இந்த இரட்டை ஆட்சியைச் சச்சரவின்றிச் சமரசப்படுத்த முடியாது. 1642 இல் இவ்விடயங்காரணமாக ஓர் உண்ணாட்டுப்போர் உண்டானது. பின்னர் 1688 இல் ஒரு புரட்சியுமுண்டானது. அதன் பின்னர்தான் இப்பிரச்சினை ஒழுங்குக்கு வந்தது. அதுவும் நிரந்தரமான ஒழுங்காயிருக்கவில்லை. (குறிப்பு 64).

சார்ளின் முதலாவது பாராளுமன்றம், 1625

தென்மாக்கு அரசனுக்குப் பெருந்தொகைப் பணத்தைச் சகாயமாகக் கொடுக்கவும் சிபெயினைத் தாக்கக் கப்பல் படையை அனுப்பவும் ஒழுங்கு செய்த பின்னர் சார்ளு மன்னன் 1625[1] இல் **முதலாவது பாராளுமன்றத்தைக்** கூட்டினன். பெருந்தொகைப் பணம் தேவையாயிருந்தும்

[1] சார்ளு மன்னனின் முதலாம் பாராளுமன்றம் கூட்டப்பட்டபொழுது இலண்டனிலே கொள்ளை நோய் பரவியிருந்தது. அதையும் பொருட்படுத்தாது கூட்டத்துக்குப் பெருந்தொகையான அங்கத்தவர் வந்தனர். சேமிக முதலாம் அரசுக்கு வந்த காலத்திற் கூடிய கூட்டத்திலும் பெருந் தொகையானோர் இதற்கு வந்தனர்.

சார்ளின் மௌனமும், வெளியாகப் பேசாத குணமும் பணம் பெருதற்குப் பெரிய இடையூறுகளின. அந்தக் காலத்திலே நீல எடோ, வெள்ளை எடோ தினசரிப்பத்திரிகையோ இல்லாதபடியால், பாராளுமன்ற அங்கத்தவர், என்ன நடக்கிறதென்பதை அறிந்து கொள்ளமுடியாதிருந்தனர். சேர்மனியில் ஒரு பெரிய சமயச் சண்டை நடக்கிறதென்று அறிந்தோராய், புரட்டசுத்தாந்தியருக்கு இங்கிலாந்து உதவிபுரிய வேண்டுமென்று பாராளுமன்ற அங்கத்தவர் அபிப்பிராயப்பட்ட போதிலும், சமீபகாலத்தில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி அவர்கள் அறிந்துகொள்ள முடியாதிருந்தனர். சார்சுதனது பூட்கையை விளக்கவில்லை. வேறெவரிடமாவது சொல்லி விளக்கவுமில்லை. எனவே, பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவர் கூறியது போல "அவர்களுக்குப் பகைவர் யாரென்பதே தெரியவில்லை". இது உண்மையே. சார்சு தனது தேவைகளையும் எடுத்துக் கூறவில்லை. கடற்படைக்குப் பணம் அவசியமென்று அவன் எடுத்துக்கூறினன். தனக்குப் பெருந் தொகைப் பணம் வேண்டுமென்பதையே குறிப்பால் உணர்த்தினன். எனவே அவனுக்குத் தேவையான பணத்தில் ஏழில் ஒரு பங்கே அவனுக்குக் கிடைத்தது.

மிடாவரியும் இருத்தல்வரியும் ஓர் ஆண்டுக்கே அனுமதிக்கப்பட்டன

அத்துடன் மிடா வரியும் இருத்தல் வரியும் ஓர் ஆண்டுக்கு மட்டுமே அரசனுக்கு வழங்கப்பட்டன. கடந்த இரண்டு நூற்றாண்டாக அவ்வரிகள் அரசனுக்கு வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வந்தன. பாராளுமன்றம் இவ்விடயத்திலே நவறிழைத்தது. பணமின்றி அரசன் கருமங்களை எவ்வாறு நடத்துவான்? அரசாங்கத்தின் சாதாரணச் செலவுகளை அரசன் கவனிக்க வேண்டும். எலிசபெத்தின் காலத்திலும் பார்க்க அதிகமாகப் பணஞ் செலவு செய்யவேண்டியேற்பட்டது. புதிய உலகத்திலிருந்து ஏராளமாக வந்து குவிந்த வெள்ளி காரணமாக விலைவாசிகள் பெரிதுமுயர்ந்தன. அதனால் அரசனுடைய வருமானத்தின் மதிப்புப் பெரிதும் குறைந்தது. பாராளுமன்றத்தின் அனுமதியின்றியே சுங்கத்தீர்வை விதிக்க அரசனுக்குரிமையுண்டெனப் பேற்றுவழக்கிலே தீர்ப்பளிக்கப்பட்டது (190 ஆம் பக்கம் பார்க்க). எனவே அரசன் அவ்வாறு செய்துவந்தான். இப் பாராளுமன்றத்திலும் அடுத்த பாராளுமன்றங்களிலும் பியூரித்தானியப் பெரும்பான்மையினர் சமயம்பற்றி அச்சங்கொண்டனர். அரசன் ஆங்கில உயர் திருச்சபையைச் சேர்ந்த உலோட்டுப் போன்றவர்களை ஆதரித்து வந்ததோடு,[1] உரோமன் கத்தோலிக்கருக்கெதிராக இருந்த சட்டங்களைப் பலனளு செய்வதில் அலட்சியமுங் காட்டினன்.

[1] குருமாரில் வைதிகராயிருப்பவர் பெயருக்கு முன்னால் "வை" என்றும் பியூரித்தானியச் சார்புடையவர் பெயருக்கு முன்னால் "பி" என்றும் குறியீடிட்ட குருமார் அட்டவணையொன்றை உலோட்டு அரசனுக்கு அனுப்பினன். தான்வைதிகனென்று மதித்தவருக்கே பதவியுயர்ச்சி கொடுக்கவேண்டுமென உலோட்டு கருதி இவ்வாறு செய்தான.

இரண்டாம் பாராளுமன்றம் (1626) : பக்கிங்ஙம் மீது பழிமாட்டறைவு

சார்ளின் இரண்டாவது பாராளுமன்றம் 1626 இற் கூடிற்று. பிரெஞ்சு மன்னனுக்குப் கப்பல்கள் கடன் கொடுத்த பின்னர், கேடிசுக் கப்பற் படைக்குச் சேதம் உண்டான பின்னர் இது நிகழ்ந்தது (ப. 191). பணம் ஒதுக்கு முன்னர் கேடிசுத் தோல்விபற்றி விசாரணை நடத்தப்பட வேண்டுமென்றும் விசேடமாகப் பக்கிங்ஙமின் நடத்தைபற்றி விசாரிக்கப்பட வேண்டுமென்றும் பாராளுமன்றம் முதலிற் கேட்டது. தனது அமைச்சரின் தகுதியைப்பற்றிப் பாராளுமன்றம் மதிப்புக் கூறமுடியாதென்றும் அதற்குத் தானே பொறுப்புடையவனென்றும் சார்ளு எடுத்துக் காட்டினான். "எனது ஊழியர்களைப் பாராளுமன்றம் விசாரிக்க வேண்டியதில்லை. எனது அனுக் கத்தொண்டரைப்பற்றி விசாரிக்க அதற்கு என்ன உரிமையுண்டு?" எனச் சார்ளு கேட்டான். ஆனால் பாராளுமன்றம் ஒருபடி உயரச் சென்றது. எலியற்று என்பவன் தலைமையில் பக்கிங்ஙம் மீது பழிமாட்டறைந்தது. **சேர்யோன் எலியற்று** கோன்வாலைச்சேர்ந்தவன்; உயர் குணம் வாய்ந்த வன்; வாக்குவன்மை படைத்தவன்; வாக்குச் சாதுரியமுடையவர்க்கு இயல்பாகவேயுள்ள சுபாவம்–உள்ளதைப் பெரிதாக்கிக்கூறும் சுபாவம்— இவனிடமிருந்தது. ஒருவரைப் பற்றிய உண்மையான இயல்பை எடுத்துக் காட்டாது அவரைச் சிறந்தவராகவோ, கெட்டவராகவோ காட்டுவது இத்தகை யோரியல்பு; நான் பக்கிங்ஙமின் சிறந்த குணங்களை மட்டுமே சிந்திக்கப் போவதாக 1625 இல் எலியற்று அவனுக்குக் கூறினான். ஆனால் அடுத்த ஆண்டில் "நமது மானமழிந்தது, கப்பல்கள் ஆழ்ந்தன, வீரர் இறந்த னர். வானிலுலன்று, பகைவரால்று, துரதிட்டத்தினுலன்று, நாம் எவரில் நம்பிக்கைவைத்தோமோ அவரால்" என அவனகண்டான். உடனே எல்லே யற்ற கோபங்கொண்டான். தசிற்றசு என்ற ஆசிரியர் செயனசு என்ப வரைப்பற்றிக் கூறிய "ஒரு குற்றவாளி மற்றெரு குற்றவாளியிடம் அக ந்தையுடனும், இறுமாப்புடனும் பாதுகாப்புக்கோருதல்" என்ற வார்த் தைகளை மேற்கோளாகக் காட்டி, ஆற்றல் மிகுந்த ஓர் அருமையான சொற்பொழிவில், பக்கிங்ஙமைக் கண்டித்தான். அதற்குச் சார்ளு "அவன் செயனசு ஆனுல் நான் தைபீரியசு" என்று இந்தக் கண்டனத்தைப் பற்றிக் குறிப்பிட்டான்[1]. எலியற்று இவ்வாறு கூறியதை அரசன் ஒரு போதும் மன்னிக்கவில்லை. பக்கிங்ஙம் மீது பழிமாட்டறைந்த பாராளுமன் றத்தைச் சார்ளு கலைத்துவிட்டான்.

நைற்றுப் பட்டவர்த்தனர் ஐவர்

இரண்டு வருடத்துக்குப் பின்னர் 1628 இல் **மூன்றுவது பாராளுமன் றம்** கூடிற்று. சார்ளு தனது முதற் பேச்சிலே அவசரமில்லாமல் முரட்டுத்தனங் காட்டினான். "தனது தேவைகளைப் பாராளுமன்றம் நிறை

[1] செயனசு உரோமன் மெய்க்காவற் படைக்கு அதிபதி. தைபீரியசுச் சக்கரவர்த்தி யின் கொள்கைகளே அவனே பல ஆண்டு உருவாக்கினான்.

வேற்றுதலிட்டால் கடவுள் கொடுத்த அதிகாரங்களையெல்லாம் பயன்படு த்தவேண்டிவருமென்று அவன் கூறினான். "இது பயமுறுத்தலன்று" என அவன் கூறினான். இது நன்மை பயக்கக்கூடிய தொடக்கமன்று. பாராளுமன்றம் அதிருத்தியடைவதற்கு அரசனது பேச்சைவிட வேறு பல காரணங்களுமிருந்தன. இரீப்படையெழுச்சி தோல்வியடைந்தது (194 ஆம் பக்கம் பார்க்க). சமயவிடயமாகப் பாராளுமன்றம் ஐயங்கொண்டிருந்தது. மேலும் அரசன் நிர்ப்பந்தக்கடனைப்பெற்றிருந்தான். இம் மட்டன்று. இக்கடனைக் கொடுக்க ஐந்து நைற்றுப் பட்டவர்த்தனர் மறுத் தனர். அவர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். அவர்களை நீதி மன்றத்தில் விசாரணைக்குக் கொண்டுவந்த பொழுது, "அரசனின் விசேட ஆணைப்படி" அவர்கள் சிறைவைக்கப்பட்டனரெனத் தெரிவிக்கப்பட்டது. நாட்டின் நன்மை யைக் கருதி அரசன் தான் விரும்பியவரை விசாரணையின்றிச் சிறையி டைக்க அவனுக்கு உரிமையுண்டென அரசாங்க நியாயவாதிகள் நீதி பதிகள் முன் எடுத்துக் காட்டினர். அது உண்மையே. ஆனால் அரசன், பருந்துபோற் பயன்படுத்த வேண்டிய அதிகாரத்தை நாளும் உண் ணும் உலைவப்போல் பயன்படுத்தி வந்தமையே பெரிய ஆபத்து என விடயத்தை ஒருவர் நன்முக விளக்கினர். நைற்றுக்களின் நியாயவாதிகள், அரசன் கோரிய அதிகாரம் ஆங்கிலேயரின் சுதந் திரத்துக்கும் மகாபட்டயத்திற்கும் நேர்விரோதமானதென வாதாடினர். இத்தகைய தொல்லை நிறைந்தவிடயத்திலே நீதிபதிகள் திட்டமானதொரு தீர்ப்பை அளிக்கமுடியாமற் போய்விட்டது. ஆனால் நைற்றுகளை விடுதலை செய்ய அவர்கள் ஒருப்படவில்லை.

உரிமை மனு. 1628

அரசன் தனது அதிகாரத்தைத் தவருகக் கையாளுகிறனென்றறிந்த மூன்றுவது பாராளுமன்றம் அதைத் தடுக்க விரைந்து நடவடிக்கையெடு த்ததோடு, **உரிமைமனு** வொன்றையும் தயார் செய்தது. பாராளுமன்றத் தின் அனுமதியின்றி லிதிக்கப்பட்டவரிகளும், கடன்களும் சட்டவிரோத மானவையென்று இம்மனுவில் முதற்கூறு குறிப்பிட்டது. காரணங் காட்டாது, ஒருவரைச் சிறைவைப்பது சட்ட விரோதமானதென்று இரண்டா வது கூறு குறிப்பிட்டது. தனிப்பட்டவர் வீடுகளிலே போர் வீரரைத் தங்க விடுதல் கூடாதென மூன்றுவது கூறு குறிப்பிட்டது[1]. அமைதிக் காலத் தில் இராணுவச் சட்டம் பெரும்பாலும் நாட்டில் ஒழுங்கீனத்தையுண்டாக்

[1] வெளிநாடுகளில் யுத்தஞ் செய்வதற்காகத் திரட்டப்பட்ட போர்வீரர் சமயம் தனிப் பட்டவரின் வீடுகளில் இருக்கவிடப்பட்டனர். இது பெரும்பாலும் தொல்லைகளையுண்டாக்கிறது. உதாரணமாக எலிசெத்திலுள்ள சில வீட்டுக்காரர், அங்கு வந்தும் அயலந்து வீரர் வீட்டுத்தள வாடங்களை உடைப்பதாகவும், தமக்கு விருப்பமில்லாத உணவை நெருப்பில் வீசிவிடுவதாகவும் முறைப்பாடு செய்தனர்.

குவதாகையால் அதனை அக்காலத்தே பிரயோகிக்கப்படாதென நாலாவது கூறு குறிப்பிட்டது. அரசன் இம் மனுவை எவ்வாற்றானுந் தட்டிக்கழிக்க முயன்றான். கடைசியாக ஏற்றுக்கொண்டான். அதிலுள்ள கூறுகளொவ்வொன்றையும் அவன் மீறினபோதிலும், அரசியலுரிமைப் போராட்டத்தில் அது ஒரு பெரிய சம்பவமாக விளங்குகின்றது.

பாராளுமன்றங் குலைக்கப்படல் 1629 : எலியற்றின் மூன்று தீர்மானங்கள்

இந்த மனு சபையில் நிறைவேறிய பின்னர்தான், பாராளுமன்றத்துப் பெருந் தலைவர்களிலொருவனை வெந்துவேது என்பவன் அரசனுடைய கட்சியிற் சேர்ந்தான். மூன்றாவது பாராளுமன்றத்தின் இரண்டாம் வைகல் 1629 இல் கூடிற்று. உரிமை மனுபற்றி அரசன் செய்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லையென்று பாராளுமன்றங் கூறிற்று. அரசனுக்கும் பாராளுமன்றத்துக்குமுள்ள பிணக்கு வலுப்பெற்றது. சார்ள்ஸ் பாராளுமன்றத்தைக் குலைக்க முயன்றான். அதற்கிடையிற் சரித்திரப் பிரசித்திபெற்ற சம்பவமொன்று நிகழ்ந்தது. சபாநாயகரைக் கதிரையிற் பலவந்தமாக அமர்த்தி, சபையின் கதவுகளையெல்லாம் அடைத்துப் பூட்டியபின், எலியற்று என்பவன் பிரேரித்த மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இவைதாம் பின்னால் எலியற்றின் மூன்று தீர்மானங்களென வழங்கப்பட்டன. சமயச்சீர்திருத்தஞ் செய்வோரும், பாராளுமன்றத்தின் அனுமதியின்றி வரிவிதிப்போரும், வரி கொடுப்போரும் நாட்டின் எதிரிகளென்றும் சுதந்திரத்தின் விரோதிகளென்றும் இத்தீர்மானங்கள் எடுத்துக் கூறின. சமயம், அரசியல் என்ற விடயங்கள் சம்பந்தமாகப் பொதுமக்கள் சபை தெரிவித்த குறைகளை இம் மூன்று தீர்மானங்களும் உள்ளடக்கின. மூன்றாவது பாராளுமன்றம் (1629) நிறைவேற்றிய கடைசித் தீர்மானங்கள் இவையே. அவ்வளவில் அது குலைக்கப்பட்டது. இப்போராட்டத்தில் ஈடுபட்ட பெருந்தலைவனை எலியற்றைக் கோபுரத்திற் சிறை வைத்தனர். அவன் அங்கே இறந்தான்[1]. போராட்டத்தின் முதற்கட்டம் இவ்வளவில் முடிவடைகிறது. பாராளுமன்றம் நிலை சமயம் நியாயன்றி ஐயமுற்றது; பணம் ஒதுக்கும் விடயத்தில் உலோ

[1] எலியற்றின் சொந்த ஊரிலுள்ள போட்டு எலியற்று என்ற வீட்டில் எலியற்றின் பிரேதத்தை அடக்கஞ் செய்யத் தருமாறு எலியற்றின் மகன் அரசாங்கத்துக்கு மனுச் செய்தான். சார்ள்ஸ் அதற்குச் சம்மதிக்கவில்லை. மனுவிலே "சேர் யோன எலியற்று எந்தக் கோயிற் பற்றிலே செத்தானோ அங்கேயே அவன அடக்கஞ் செய்யப்படலாம்" என்று சார்ள்ஸ் எழுதினான். அவ்வாறே கோபுரத்திற் பிரேதம் அடக்கஞ் செய்யப்பட்டது.

பத்தனமாயிருந்தது; சமயவிடயத்தில் ஒரு பொழுதும் சகிப்புத்தன்மை காட்டவில்லை. எனினும், அது பொறுமையுடையதாயிருந்தது; காரியவாதியாயிருந்தது; அரசனையும் அவனது ஆலோசகரையும் விடத்தெளிவான சிந்தனையுடையதாயிருந்தது. எனவே அது சரியான வழியிற் சென்றதென்ற முடிபுக்கே வரவேண்டியிருக்கிறது. தியூடர் அரசருடைய காலத்திலே பாராளுமன்றம் அரசன் மீதும் ஆவனுடைய ஆலோசகர் மீதும் செலுத்தாத ஒரு அதிகாரத்தை இப்பொழுது செலுத்த முயன்றதால் அம்முயற்சியை அரசன் எதிர்த்ததில் வியப்பில்லை.

3 எதேச்சை அரசாங்கம் (1629—1640)

இங்கிலாந்திலும் கொத்துலாந்திலும் அதிருப்தி

நன்வயமான அரசாங்கம் (1629–40)

அடுத்த பதினொரு வருடமாக இங்கிலந்திலே பாராளுமன்றம் கூடவில்லை. பாராளுமன்ற முறைமை ஆரம்பித்த காலந்தொட்டு அன்றுவரை இங்கிலாந்தின் சரித்திரத்திலே இத்தனை நீண்டகாலம் பாராளுமன்றம் கூடாதிருந்ததில்லை (குறிப்பு 65). இக்கால ஆட்சி **பதினொராண்டுக் கொடுங்கோலாட்சி** என வழங்கப்படும். பாராளுமன்றம் ஒரு வருடத்துக்குக் கூடாமலிருக்குமானால் அது வழக்கத்துக்குமாறானதென நினைக்கக் கூடாது. உதாரணமாக இலிசபெத்தின் காலத்திற் சராசரி மூன்று வருடத்துக்கு ஒரு முறையே பாராளுமன்றம் கூடிற்று. சார்ள்ஸ் கொடிய வல்லாளன்; அவன் உரிமைகளை ஒழித்து, பொருள்பண்டங்களை அழித்துக் குடிகளை நாசமாக்கினனென்றுங் கருதக்கூடாது. அவனுடைய ஆட்சிக் காலத்தில் நாடு வளம் மிகுந்திருந்தது. அரசியற் காரணங்களுக்காக எலியற்றைத் தவிர வேறெவரும் உயிரிழக்கவில்லை. நீதிபதிகள் கொடுத்த சட்டவிளக்கப்படி அரசன் நடந்தான்; அதில் அட்சாங்கூட அவன் தவறவில்லை. நீதிபதிகளும் அரசனுக்கு ஒரளவு விட்டுக்கொடுத்தே வந்தனர்[1]. இருந்தும், இக்காலம் இங்கிலாந்துக்கு ஆபத்தும் நெருக்கடியும் நிறைந்த காலமாயிற்று. ஆபத்து நீங்கியதும், அத்தகைய தனியாட்சி இனிமேல் நடக்கவிடக்கூடாதெனும் உறுதியை ஆங்கிலக் குடிகள் காட்டினர்.

[1] சட்ட அறிஞர்கள், கடையாகக் கொடுத்த தீர்ப்புக்களே யொட்டியே சட்டத்துக்கு விளக்கங் கொடுப்பர். எனவே நீதிபதிகளும் அரசன் கட்சியையே ஆதரிக்கமுயல்வர். தியூடர் அரசர்கள் நடத்த முறையிலே சதவீதம் அரசர்களும் நடக்கலாமென அவர்கள் கருதியிருப்பர்.

தொமசு வெந்துவேது (திரபோட்டு ஏள்.)

இக்காலத்திலே சாள்சின் ஆலோசகராயிருந்தவர்களைப் பற்றிச் சிறிது கூறவேண்டும். பக்கிங்ஙமைப் போலச் செல்வாக்குள்ள வேறெவரும் சாள்சின் ஆலோசகர் கழகத்தில் இருக்கவில்லை. ஆனால் விசேடமாக இருவரைக் குறிக்கலாம். இவர்களில் ஒருவன் **தொமசு வெந்துவேது** (குறிப்பு 66). இவன் திரபோட்டு எளாகப் பதவிபெற்றான். மற்றவன் உவில்லியம் உலோட்டு (குறிப்பு 66). வெந்துவேது பழைய குடும்பத்தைச் சேர்ந்தவன். இவனுக்கு யோக்குசயரிற் பெரிய தோட்டங்களிருந்தன. பொது மக்கள் சபையில் இவன் முதன்முதலங்கம் வகித்தபொழுது அரசன் கட்சியைச் சேர்ந்தான். ஆனால், சாள்சின் ஆரம்பப்பாராளுமன்றக் கூட்டங்களில், அரசன் பூட்கையைக் கண்டித்தவருள் முக்கியமான ஒருவனாயிருந்தான். உரிமைமனு பெரும்பாலும் இவனுடைய முயற்சியினாலேயே வரையப்பட்டது. மூன்றாவது பாராளுமன்றத்தின் இரு வைகற்காலங்களுக் கிடையில் இவன் அரசன் கட்சியிற் சேர்ந்து கொண்டான். 1628 இல் பிரபுப்பட்டம் வழங்கப்பட்டான். இதற்காக இவனே அரசியற் பதிதன் என்றும், முதற்பெருச்சாளியென்றும், சைத்தான் என்றும் மக்கள் கண்டித்தனர்[1]. வெந்துவேது முன்பின் முரணான காரியங்களைச் செய்தான் என்பது உண்மையே. அதிகாரத்திலிருக்கும் பொழுது அவன் செய்த செயல்களை எதிர்க்கட்சியிலிருந்தால் அவனே முதலிற் கண்டித்திருப்பான். சுயநலங்கருதியே அவற்றைச் செய்தான் என்று சொல்லுவதும் பொருத்தமுடையதே.

வெந்துவேது தைரியமுள்ளவன்; மற்றவர்களை ஆளுந்தகைமைவாய்ந்தவன்; திறமை நிறைந்தவன். தனது திறமையில் அளவிறந்த நம்பிக்கையும் மற்றவர்கள் திறமை எம்மாத்திரமென்று நினைக்குஞ் சுபாவமுமுடையவன். பக்கிங்ஙமை அவன் நம்பவில்லை; அவனுடைய பிறநாட்டுக் கொள்கையை வெறுத்தான். அரசாங்கம் செய்துவந்த தன்வயமான செய்கைகளை வெறுத்தான். அதனால் அவன் எதிர்க்கட்சியிற் சேர்ந்தான். ஆனால் அவன் உண்மையாக எதிர்க்கட்சிக்கு உரியவனல்லன். பெரும்பான்மை அங்கத்தவரின் பியூரித்தானியச் சார்பு அவனுக்குப் பிடிக்கவில்லை. தனது சகாக்கள் பலரை அவன் மதிக்கவில்லை. பாராளுமன்ற ஆட்சிமுறையில் அவனுக்கு நம்பிக்கையில்லை. அரசாங்கம் மக்களுக்காகவே நடக்கவேண்டும்; ஆனால் அது அவர்களால் நடத்தப்படவேண்டிய தில்லையென்பதே அவனது கொள்கை. அரசர், மக்களுக்கு "விட்டுக்கொடுக்கும் சுபாவமுள்ள வளர்ப்புத் தந்தை போன்றவர்" "ஒழுங்கு, ஆட்சி என்ற தோரணத்தில் அரசனுடைய அதிகாரமே நெற்றிக்கல்போன்றது" என்பது அவனுடைய கருத்து. தனது ஆட்சித்

[1] அல்லம் எழுதிய சரித்திரத்தைப் பற்றிய மக்கோலே பிரபுவின் கட்டுரையைப் பார்க்க.

திறமையைக் காட்டுவதற்கு அவன் அரசனோடு சேர்வது அவசியமாயிற்று. சேர்வதே அதற்கு ஒருவழி. எனவே அவன் அரசன் கட்சியிற் சேர்ந்தான். 1628 இல் அவன் வடபகுதித் தலைவனாக நியமிக்கப்பட்டான். வடக்கேயுள்ள குறிச்சிகளெல்லாம் அவன் ஆணைக்குட்பட்டன. 1632 இல் அவன் அயலந்தின் பிரதியாளர்ப் பிரபுவானான். அங்கேதான் அவன் தன்னுடைய அரசறிவின் நிறையையும், குறையையுங் காட்டக்கூடியதாயிருந்தது (281 ஆம் பக்கம் பார்க்க). 1639 ஆம் ஆண்டின் கோடைகாலத்திலே முதலாம் சாள்சின் பிரதான ஆலோசகனானான். விரைவில் ஆங்கில மக்களாற் பெரிதும் வெறுக்கப்பட்ட ஒருவனாக அவன் விளங்கினான்.

உலோட்டு

வெந்துவேதின் நண்பன் **உலோட்டு**. அரசனுக்குப் பணிசெய்ய வேண்டுமென்ற விடயத்தில் இவ்விருவரும் ஊக்கமும், உள்ளம் நிறைந்த பற்றியும் உடையவராயிருந்தனர். கருமங்களை நிறைவேற்றிவைக்கவேண்டுமென்ற விடயத்திலும் இட சித்தமுடையவராயிருந்தனர். அவர்கள் ஒருவர்க்கொருவர் எழுதிய கடிதங்களில் "செய்வன திருந்தச்செய்" என்ற முது மொழி அடிக்கடி காணப்படுவதிலிருந்து அதையறியலாம். உலோட்டு இரீடிங்கு நகரத்திலிருந்த ஒரு புடைவை வியாபாரியின் மகன். அவன் இரீடிங்குப்பாடசாலையிலும் பின்னர் ஒட்சுபோட்டுச் சருவகலாசாலையைச் சேர்ந்த சென்யோன் கல்லூரியிலும் கல்வி பயின்றான். பின்னர் சென்யோன் கல்லூரி அதிபனாகிப் பியூரித்தானியர்க்கு மாறானவனென்று பெயர் பெற்றான். பின்னர் சென் தேவலிட்டு விசுப்பாண்டவராக நியமனம் பெற்றான். 1628 இல் இலண்டன் விசுப்பாண்டவரானான். ஐந்து வருடத்தின் பின்னர் கந்தபரி அதிமேற்றிராணியரானான். அரசாங்கத்தின் திருச்சபைக்குரிய பூட்கைகளுக்கு அவனே பொறுப்புள்ளவனாயிருந்தான். அப்பூட்கைகளிற் சில போற்றுதற்குரியன. புதிய தேவாலயங்களைக் கட்டுவதிலும் பழையவற்றைப் புதுப்பித்தலிலும் ஏராளமான பணஞ் செலவு செய்யப்பட்டது. தேவாலய ஆராதனைகளில் ஒழுங்கும் செம்மையும் எற்படுத்தப்பட்டன. தனது அருளாட்சிக்குட்பட்ட குருத்தானங்களெங்கணும் பிரதிநிதிகளை அனுப்பிப் பார்வையிடுவித்துப் பல குறைகளைக்கண்டான். ஒரு தேவாலயத்தின் குரவர் சங்கம் உபதேசம் நடத்தாமலும், வராமலுமிருந்தது. ஒரு தேவாலயத்திலே கூரையிலிருந்து விழுங்கிய ஈயத்தை உள்ளூர்ப் பிரபு ஒருவரின் கட்டளைக்காரன், அத்தேவாலயத்தின் உட்பாதையில் வைத்து உருக்கினான். மற்றொரு தேவாலயத்தின் உட்பாதையில், விக்காரின் முன்னிலையிலேயே கோழிச்சண்டை நடைபெற்றது[1]. பெரிய இடத்து மக்கள் குற்றஞ் செய்தாலும் உலோட்டு வேற்றுமை பாராட்டாது அவர்களையுந் தண்டித்தான்.

[1] செஸ்போல் தேவாலயத்திலே நாகரிகபுருடர்கள் கூடி வம்பளப்பதை உலோட்டு நிறுத்தினான். இளம் வாலிபர் அங்கே விளையாட்டுக்கள் நடத்துவதையும் மறித்தான். தொப்பியணிந்து கொண்டு தேவாலயத்துள் ஒருவரும் பிரவேசிக்கக்கூடாதெனவும் கட்டளையிட்டான்.

எவ்வளவோ ஊக்கமும் நல்லியல்பும் உடையவனுயிருந்தபோதிலும், உலோட்டு மற்றவர்கள் அபிப்பிராயத்தைப் பொருட்படுத்தாதவனுகவும், குறுகிய மனப்பான்மை உடையவனுகவுமிருந்தான். ஆங்கிலேயராகவோ, அயலந்தியராகவோ, கொத்துலாந்தியராகவோ, பிரான்சியராகவோ, ஸ்பானியராகவோ எந்தச் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ இருந்தாலும் தன்னைப் போலவே எல்லாரும் உயர் திருச் சபைக்கோட்பாட்டில் நம்பிக்கை உடையவராக இருக்கவேண்டுமென எண்ணினன். தனது அபிப்பிராயத்துக்குமாருன கருத்துக்களைப் பரவ விடாமற்றடுப்பதற்கு, அச்சுப்பிரசுரங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைத்தானே ஏற்றுக்கொண்டான். வெள்ளிமன்றம், உயராணைமன்றம் என்ற நீதிமன்றங்களிலேதான் விசேடமாக இவனுக்குப் பெரிய அபகீர்த்தி உண்டானது[1]. உலோட்டு கொடுமொழி கூறுவோன்; விரைவிற் கோபங்கொள்ளுமியல்புடையவன். சமயக் குற்றங்கள் செய்வோருக்கு அவன் பெருந் தண்டனை விதிக்க வாக்களித்தான். கசையடி, சூடுபோடுதல், காதைக்கொய்தல் போன்ற அநாகரிகமான தண்டனைகள் விதிப்பதற்கு மூலகாரணமாயிருந்தவன் இவனே. மக்கள் கட்டாயமாகச் சில நம்பிக்கைகளைக் கொள்ள வேண்டுமென்றும், கல்வின் கொள்கையை ஆதரிக்கவேண்டுமென்றும் விதிக்கக் கூடிய இரும்புத்தலையிலிருந்து திருச்சபையைக் காப்பாற்றியவன் இவனேயெனக் கிளாசுதன் அபிப்பிராயப்பட்டான். அவ்வளவுக்கு உலோட்டு போற்றத்தக்கவனே. ஆனல் புரட்டசுத்தாந்திய மிதவாதிகளைக் கூடப் பியூரித்தானியரைச் சரணடையச் செய்தவனும் இவனே.

நிதிநிலை. நைற்றுப்பட்டம் : கப்பல்வரி (1634.)

சார்ள்சுக்குண்டான தொல்லைகளுட் பண நெருக்கடியே மிகமுக்கியமானது. முடிநிலங்களாலும், சேவைமானியத்திறைகளாலும் மிடாவரி, இறுத்தல்வரிகளாலும் வந்தவருமானம் போதாதிருந்தது. எனவே பணஞ் சேர்க்க வேறு வழிகளைப் பார்க்கவேண்டியிருந்தது. எனவே சேவைமானிய நிலம் உள்ளவர்களையும், குறித்தவருமானங் கொடுக்கும் நிலமுள்ளவர்களையும், அதாவது வருடமொன்றுக்கு 40 பவுணுக்கு மேற்பட்டவருமானங்கொடுக்கும் நிலமுள்ளவர்களையும், நைற்றுப்பட்டவர்த்தனராக வருமாறும், அப்பட்டத்துக்குப் பிரதியுபகாரமாக ஒரு தொகைப் பணத்தைத் தனக்குக் கொடுக்குமாறும், அதற்கு மறுப்போருக்கு அபராதம் விதிக்குமாறும் சார்ள்சு விதித்தான். நூறு வருடங்களுக்கு முன்னர் முடிக்குரிய காடுகளின் எல்லைகளை மாற்றித் தமதாக்கிவந்த பிரபுக்களின் சந்ததியார்கள் மீதும் ஏனையோர் மீதும் அபராதம் விதிதான்.

1- இந்நீதி மன்றங்களில் முன்னையது ஏழாம் என்றியின் காலத்திலும், மற்றையது இலிசபெத்தின் காலத்திலும் தாபிக்கப்பட்டன. இம்மன்றங்களில் குற்றவாளிகள் நடுவரின்றி இரகசியமாக விசாரணை செய்யப்பட்டனர். கைதிகளைத் தமக்கெதிராகவே சாட்சியங்கூறத் செய்தனர்.

செங்கல், உப்பு, சவர்க்காரம்[1] போன்ற சாதாரணப் பொருள்களை வியாபாரஞ் செய்யும் கம்பனிகளுக்கு வியாபார முழுவுரிமை அளித்து அதற்குப் பிரதியுபகாரமாக வருடாவருடம் ஒரு தொகைப் பணத்தைப் பெற்றனன். கடற்படைபெரிதும் பலமற்றிருந்து. 1624–25 மாரிகாலத்திலே பாபெரியிலிருந்து வந்த கடற்கொள்ளைக்காரர் தோசெற்றில் நங்கூரமிட்டுத் தங்கியிற்றனர். எனவே 1643 இல், சார்ள்சு புதிய கப்பல்களைக் கட்டுவதற்கும் பழையவற்றைத் திருத்துவதற்கும் கடற்கரைப் பட்டினங்கள்மீதும், இராமங்கள் மீதும், கப்பற் பணமென ஒரு வரியை விதித்தான். யுத்தகாலத்திலே இத்தகைய வரியை விதிப்பது வழக்கமே. ஆனல் சார்ள்சு அமைதிக் காலத்திலே இவ்வரியை விதித்தான். ஒரு வருடத்தின் பின்னர் முழுத் தேசத்துக்கும் பொதுவான "இரண்டாம் கப்பல் வரியை விதித்தான்". இது மக்களால் வெறுக்கப்பட்டது.

நெருக்கடியின் ஆரம்பம் (1637) : யோன் அமிடென்.

1637 வரை நாட்டிலே பெரிய அதிருத்தியிருந்தபோதிலும், அரசனை எதிர்த்தவர் வெகுசிலரே. ஆனல் இந்த ஆண்டிலே போராட்டம் தொடங்கிற்று. புரட்சியுகத்தின் முதல் வருடமென இது வழங்கப்பட்டது. யூன் மாதத்திலே மக்கள் ஆர்ப்பாட்டஞ் செய்யத் தொடங்கினர். பிரின் என்ற நியாயவாதியும், பேட்டன் என்றபாதிரியும் பாற்றுவிக்கு என்ற வைத்தியனும் விசுப்பாண்டவரைக் கண்டித்ததற்காகக்[2] காது கொய்யப்பட்டு, 5000 பவுண் அபராதம் விதிக்கப்பட்டுச் சீவியகாலச் சிறைத்தண்டனைபெற்றனர். இத் தண்டனைகளின் முதற் பகுதி கோவில் முற்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நாலு வருடத்துக்கு முன்னர், நாடக அரங்கைக் கண்டித்ததற்காகப் பிரின் காதில் ஒரு பகுதியை இழந்தவன்[3]. மக்கள் அதைப்பற்றி அதிகம்

1 நியூடர் காலத்திலே அரசாங்கமே வியாபாரத்தைக் கட்டுப்படுத்தி வந்தது. முதலாம் சார்சும் அம் முறையையே பின்பற்றினன். தானிய வியாபாரத்தில் ஏகபோக உரிமை பராட்டுவோர்மீது வெள்ளிமன்றம் நடவடிக்கை யெடுத்தது. வேலையற்றோர்க்கு நியாயமான வேலை தேடிக்கொடுக்க உண்மையான முயற்சி செய்யப்பட்டது. அரச பொருளாதார விடயத்திற் குடிகளைத் தனயர் போலப் பாவித்து வியாபார ஒழுங்கு செய்து வந்ததால் தனியுரிமை முறையும் அதில் அடங்கிய ஒன்முயிற்று. உண்மையான தொல்லையுண்டானதற்குக் காரணம் சார்சு பண நெருக்கடியினுல், வழக்கிலிருந்த முறைகளைத் தவருகக் கையாண்டமையும் ஆங்கிலேயர் காலப்போக்கிலே தவிப்போக்கை விரும்பியமையுமே.

2 விசுப்பாண்டவர்கள் கடவுளுக்கும் அரசனுக்கும் விரோதிகள். அவர்களாட்சி செய்யும் திருச்சபைகளில் நிலவும் சடங்குகள் "நாயினுள்ள உண்ணியைப்போல அதிகம்;" என்று பாதிரிக்கு எழுதினன்.

3 இவன் தனது வாழ்நாளிலே துண்டுப் பிரசுரமாகவும் நூலாகவும் நானூறு உருப்படிகளை எழுதினன். நாள் முழுவதுமிருந்து எழுதுவான், பணியாளன் மூன்று மணிக்கொருதரம் நிறுத்துடியும் எல் மதுவும் கொண்டுவந்து கொடுப்பான். இவ்வாறு இமைந்த உற்சாகத்தை மீட்டுக் கொள்வான்.

அக்கறை கொள்ளவில்லை. இப்பொழுது இலண்டன் முழுவதும் திரண்டு வந்து தனது அனுதாபத்தைக்காட்டிற்று. அவனும் அவனதுசகாக்களும் நடந்து சென்ற பாதையெங்கும் மக்கள் மலர் தூவினர். பலர் கண்ணீர் சொரிந்தனர். பிரினின் எஞ்சிய காதைத் துண்டித்தபொழுது மக்கள் கோபங்கொண்டு சீறினர். 1637 ஆம் ஆண்டு **நவம்பரிலே யோன் அமிடெனின்** விசாரணை நிகழ்ந்தது. மூன்றாவது கப்பல் வரியொன்றை அரசன் விதித்தான். பாராளுமன்றத்தின் அங்கீகாரமில்லாமலே இந்த வரியை நிரந்தர வரியாக்குவானென்ற அச்சம் நிலவிற்று. பிணக்குண்டாவதற்கு மூலகாரணமிதுவே. பக்கிங்ஙஞ் சயரிலுள்ள முக்கியத்தன் ஒருவன் அமிடென் என்பான் இந்த வரியைக் கொடுக்க மறுத்தான். வழக்கு விசாரணைசெய்யப்பட்டது. நீதிபதிகளில் எழுவர் இவ்வரி சட்டபூர்வமானதென்றும் ஐவர் சட்டவிரோதமானதென்றும் வாக்களித்தனர். சனங்கள் இவ்வழக்கில் பெரிதும் அக்கறை காட்டினர். அமிடெனின் நியாயவாதிகள் கூறிய நியாயங்கள் நாடெங்கும் பரப்பப்பட்டன. அதே ஆண்டிலே உலோட்டின் ஆட்சியைப்பற்றி அக்காலத்து இலக்கிய மேதையான மிலிற்றன் தனது அபிப்பிராயங்களை இலிசிடசு என்ற நூலில் விளக்கினான்.

கொத்துலாந்துத் திருச்சபை : பிரெசுபித்திரியன் மன்றுகள்

1637 ஆம் ஆண்டு இங்கிலாந்திலும் பார்க்கக் கொத்துலாந்திலேயே மிக முக்கியம் வாய்ந்த சம்பவங்கள் நிறைந்ததாயிற்று. யோன் நொட்சு காலத்திலே (இவன் 1572 இல் இறந்தான்) கொத்துலாந்துத் திருச்சபை கடைசியாக நிதானமான தொரு குரு பரிபாலனமுறையை மேற்கொள்ளுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், கொத்துலாந்துத் திருச்சபைத் தலைமையை நொட்சின் பின்னர் **அந்துறு மெல்வில்** என்பவன் ஏற்றான். அவனாட்சியில் எல்லாக் குருமாருக்கும் சமநிலை உண்டென்ற கருத்து நிலவிற்று. முன்னர் விசுப்பாண்டவர்களால் நடத்தப்பட்ட பாலனத்திற்குரிய கடமைகளை நிறைவேற்றப் பிரெசுபித்திரிகள் தாபிக்கப்பட்டன. எனவே கொத்துலாந்துத் திருச்சபை, ஆட்சியைப் பொறுத்தவரை பிரெசுபித்திரியச் சார்புடையதாயிற்று. இம்முறையின் கீழ் நாலு திருச்சபை மன்றுகளுண்டு. ஒவ்வொரு திருச்சபையும் குருமாரையும், முதியோரையுங் கொண்ட திருச்சபைச்சங்கத்தை உடையதாயிருந்தது. திருச்சபை அங்கத்தவரே இவர்களைத் தெரிவு செய்தனர். திருச்சபைகள் அறுபது பிரெசுபித்திரிகளாக்கப்பட்டன. ஒவ்வொரு சபையும் பிரெசுபித்திரிய மன்றுக்கு ஓர் புரோகிதரையும், ஒருமுதியவரையும் பிரதிநிதியாக அனுப்பவேண்டியிருந்தது. மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட **பிரெசுபித்திரிகள் ஒருங்கே**

மாகாணசினொட்டு எனப்பட்டன. இவ்வாறு பன்னிருசினொட்டுகள் வருடமிருமுறை கூடின. திருச்சபையின் உச்ச நீதிமன்று பொதுமன்றம் எனப்படுவதாய் வருடத்துக்கொருமுறைகூடும். இதன் அங்கத்தவர் குருமாரும் முதியோருமே. இவர்களைப் பிரெசுபித்திரிகள் தேர்ந்தனுப்பின.

ஆறும் சேமிசின் பூட்கை : திருச்சபையும் அரசும் : பேதுநகரத்து ஐங் கட்டளைகள் (1618)

இந்தப் பிரெசுபித்திரிய முறையோடு கொத்துலாந்தின் ஆறும் சேமிசு மன்னன் (இங்கிலாந்தின் முதலாம் சேமிசு) விசுப்பாண்டவர்களைச் சேர்க்க முயன்றான்[1]. அவனும் முதலாம் சாள்சும் மன்னரின் தெய்விகவுரிமையில் நம்பிக்கையுடையவராயிருந்தனர். கொத்துலாந்தரும் அவ்வாறே பொதுமன்றத்துக்குந் தெய்விக உரிமையுண்டென நம்பினர். திருச்சபைவிடயங்களிலே குடியதிகாரிகள் தலையிட உரிமையில்லையெனவுங் கருதினர். பொதுமன்றத்தின் செல்வாக்குச் சமய விடயங்களுக்கு அப்பாலுஞ் சென்றது. மன்னரின் வல்லாண்மைக்கு உண்டான எதிர்ப்பு இந்தப் பிரதிநிதித்துவம் வாய்ந்த தாபனத்திலிருந்தே தோன்றிற்று. கொத்துலாந்துப் பாராளுமன்றமானது சேவைமானிய முறையிலுள்ள தொரு சங்கமாகும். அதன் அலுவல்கள் " கட்டளைப்பிரபுக்களால் " நடத்தப்பட்டன. இக்கட்டளைப் பிரபுக்களை நியமிப்பதில் அரசனுக்குப் பெரிய பங்குண்டு. எனவேமுடிக்கும் பாராளுமன்றத்துக்கும் பிணக்குண்டாவது இயற்கையே. சேமிசு கருதியது முடிக்கும் திடசித்தத்துடன், 1612 இற் கொத்துலாந்திலே குருபரிபாலன முறையை முற்றாக நிலைநாட்டினான். எனினும் பிரெசுபித்திரிய மன்றங்களை அவன் ஒழிக்கவில்லை. வழிபாட்டுமுறையில் சில மாற்றங்களையுண்டாக்க அவன் முயன்றான். சூழியல்முறைகளாலும் பயமுறுத்தலினாலும் அவன் 1618 இல், " பேதுநகரத்து ஐங் கட்டளைகள் " என்ற பிரமாணங்களைப் பொதுமன்றத்தைக்கொண்டு நிறைவேற்றச் செய்தான். பூசையின் போது எல்லாரும் முழந்தாளிட்டு நிற்க வேண்டுமென்பது இவற்றுளொரு கட்டளையாகும். இதனைக் கொத்துலாந்து மக்கள் விரும்பவில்லை. இது விக்கிரக ஆராதனையை ஆதரிப்பதாக அவர்கள் விளக்கஞ் செய்தனர்.

---

[1] விசுப்பாண்டவர்களைக் கொத்துலாந்து மக்கள் விரும்பவில்லை. ஆங்கிலரும் விரும்பவில்லை. ஆங்கில எழுத்தாளர் ஒருவர் "விசுப்பாண்டவர் திருச்சபையின் தூண்களல்லர், அவிர்க்குட்டிகளெனக் " கூறினார். தேவ ஆராதனையில் வரும் சொற்களை வைத்தே ஒருவர் பின்வருமாறு அவர்களைக் கேலி செய்தார் " ஆண்டவனே ! வாந்திபேதி, கொள்ளைநோய், பசி, என்பவற்றிலிருந்தும் விசுப்பாண்டவர், குருமார், அத்தியட்சகர் என்பவரிலிருந்தும் எம்மைக் காப்பாற்றும் "என்றார் அவர். கொத்துலாந்தரும் பின்னிற்கவில்லை. அவர்களில் ஒருவர் விசுப்பாண்டவர்கள் " மிருகசுபாவமுள்ள வயிற்றுச்சாமிகள் " என்று கூறினர். இருந்தும் அவர்களிற் சிலர் தூயவாழ்வுடையவராயும், மெலிந்த உடலமைப்புடையவராயுமிருந்தனரென்பதுங் குறிப்பிடத்தக்கது. சிலர் அவர்களை " திரண்டு உருண்டு கொழுத்து போப்பாண்டவர் மாமிசப் பிண்டமாயிருந்தனர் " எனவும் வைதனர்.

முதலாம் சார்ளசும் புதிய பூசைப்புத்தகமும் (1637)

1625 இற் சார்ளசு அரசுகட்டிலேறினான். பன்னிரண்டு வருடத்துள் அவன் கொத்துலாந்து முழுவதையும் தனக்கெதிராக எழுமாறு செய்துவிட்டான். முதலாவது அவன் கத்தோலிக்க இளவரசியை விவாகஞ்செய்தது மக்களிடையே வெறுப்பையுண்டாக்கிற்று. அன்றியும் சமயச்சீர்திருத்தக் காலத்திலே திருச்சபைகளிடமிருந்து பிரபுக்கள் பெற்ற நிலங்களைத் திருப்பித் தான் பெற்றுக் கொள்ள முயன்றதால் அப்பிரபுக்கள் அஞ்சினர். கடைசியாக ஆங்கிலத் திருச்சபையைப் போலவே கொத்துலாந்துத் திருச்சபையையும் மாற்றி விடவேண்டுமென்றும் இரண்டு நாட்டிலும் ஒரேவகையான திருச்சபையிருக்கவேண்டுமென்றும், பிரெசுபித்திரிய மன்றங்களை நீக்கிவிடவேண்டுமென்றும், இங்கிலாந்தில் வழங்கப்பட்டது போன்ற புதியதொரு பிரார்த்தனைப் புத்தகத்தை கொத்துலாந்திலும் புகுத்தவேண்டுமென்றும் தீர்மானித்தமை மக்களெல்லாரையும் ஆத்திரமடையச் செய்தது. ஆங்கிலப் பிரார்த்தனைப் புத்தகத்திலும் இது சற்று வேறுபட்டது. அவ்வேற்றுமை உலோட்டு அதிமேற்றிராணியாரின் முயற்சியென்றும், அதுவும் போப்பாண்டவர் சார்புடையதாயிருந்ததென்றும் எல்லாரும் கருதினர். அக்கால விமரிசகர் ஒருவர் இதைக் குறித்து "இதுபோப்பாண்டவர் சார்புள்ள ஆங்கில கொத்துலாந்துப் பூசைப் புத்தகம்" என்று குறிப்பிட்டார்.

சென்கைல்சிற் கலம்பகம் (1637) : நாட்டின ஏற்பாடு (1638)

உலோட்டின் பிரார்த்தனைநூல் முதன் முதலாக எடின்பரோவிலுள்ள சென்கைல்சுத் தேவாலயத்தில் 1637 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாசிக்கப்பட்டது. உடனும் கலகமுண்டாயிற்று. சென்னிகெடிசு என்ற ஒரு பெண்ணே இக்கலகத்தை உண்டாக்கினளெனப் பாம்பரை கூறும். இது ஒரு புரட்சிக்குக் காலாயிற்று. அந்தப் பிரார்த்தனைப் புத்தகத்தைப் பயன்படுத்த வேண்டாமென்று சார்ளசு கட்டளையிட்டிருந்தால் எல்லாம் தீர்ந்திருக்கும். ஆனால் அவன் அவ்வாறு செய்யமறுத்தான். குரு பரிபாலனத்தை ஒழிக்குமாறு மக்கள் ஆர்ப்பரித்தனர். பிரார்த்தனைப் புத்தகத்துக்குண்டான எதிர்ப்பின் பயனே இது. "நேபில்" என்ற ஆர்வம் மிக்க பிரெசுபித்திரியத் தாபனம் உருவாகி அரசனையும் அவனது அமைச்சரையும் எதிர்த்து ஆட்சி நடத்தத் தொடங்கிற்று. சார்சுவிட்டுக் கொடுக்கவில்லை. எதிர்ப்பு முற்றி 1638 இல், **நாட்டின ஏற்பாடு** என்றபத்திரமாக உருப்பட்டது. எடின்பரோவிலுள்ள ஈரேபிரயசு மயானத்திலே அதற்கு முதலில் ஒப்பமிடப்பட்டது. இது 1638 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முதலாந்தேதி நிகழ்ந்தது. ஏற்பாட்டுப் பிரதிகள் கொத்துலாந்தெங்கும் பரப்பப்பட்டன. எங்கும் எல்லாரும் மிகுந்த உற்சாகத்துடன் அதில் ஒப்பமிட்டனர். "உண்மையான சமயத்தைக்" கடைபிடித்துக் காப்பாற்ற நாம் உறுதி கூறுகிறோமென்று எல்லாரும் வாக்களித்தனர். உண்மைச் சமயமென்றது பொதுவாகப் புரட்சுத்தாந்த மதத்தையும் விசேடமாகப் பிரெசுபித்திரியத் திருச்சபையையுங் குறிக்கும்.

கிளாசுக்கோ மன்றம் (1638)

நிலைமை மோசமாகிவிட்டதென்பதை இப்பொழுதுதான் சார்சு உணர்ந்தான். பூசைப் புத்தகத்தை அகற்றிவிடுவதாகவும் சுதந்திரமான பொதுமன்றங் கூடுவதற்கு அனுமதிப்பதாகவும், சுதந்திரமான பாராளுமன்றத்தையும் அனுமதிப்பதாகவும் சார்சு வாக்களித்தான். ஆனால் நிலைமை கைகடந்துவிட்டது. நவம்பரிலே பொதுமன்றங் கிளாசுக்கோவிற் கூடிய பொழுது ஏற்பாட்டில் ஒப்பமிட்டவர்களே உறுப்பினராக அனுமதிக்கப்பட்டனர். குருபரிபாலனத்தை ஒழிக்குமாறு சபை தன்னைக் கேட்கும் என்ற நிந்த அரச ஆணையாளனை அமிற்றன் அரசன் பெயராற் பாராளுமன்றத்தைக் குலைப்பதாகப் பிரகடனஞ் செய்தான். யாப்புமுறைக் கையந்த சபையன்றுயினும் அது கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தி, மிகுந்த உற்சாகத்துடன், பேது நகரத்து ஐங்கட்டளைகளை நிராகரித்தது. பூசைப் புத்தகத்தைவிலக்கிற்று; விசுப்பாண்டவர்களைப் பதவியிலிருந்து நீக்கிற்று. குருபரிபாலனமுறையை ஒழித்தது; கலப்பற்ற பிரெசுபித்திரிய மதத்தை மறுபடியும் புகுத்தியது.

விசுப்பாண்டவர்களின் முதற்போர் (1639) : இரண்டாவது விசுப்பாண்டவர் போர் (1640) : கொத்துலாந்திற் சார்சு (1641)

இச்சபை நிறைவேற்றிய விதிகளை அரசன் அனுமதிக்க மறுத்தான். யுத்தம் நடக்குமென்பது தெளிவாயிற்று. அவ்வாறே 1639 இல் யுத்தம் மூண்டது. இது விசுப்பாண்டவர் முதற் போர் என வழங்கப்பட்டது. எற்பாட்டுக்காரர், ஐரோப்பாக்கண்டத்திற் பல போர்களில் அனுபவம் பெற்றவனும் "முதிர்ந்த குறுகிய குடிலனுமான" அலெச்சாந்தர் இலெலி என்பவன் தலைமையில், பேவிக்குக்குச் சமீபத்திலுள்ள தன்சு உலோக்களத்தில் தாக்கினர். போதிய படைக்கலமின்றி, தேவையான வீரர்தொகையின்றி மன்னன் வடக்கே ஒரு சைனியத்துடன் வந்தான். கடைசியாக கொத்துலாந்தியர் கோரிக்கைகளுக்கு அடிபணிய வேண்டியதாயிற்று. **பேவிக்குச் சாந்தி உடன்படிக்கை** வரையப்பட்டது. கொத்துலாந்தியருடைய கோரிக்கைகளில் முக்கியமானது மற்றெரு பொதுமன்றங் கூடவேண்டுமென்பதே. இது ஒகத்து மாதத்திலே கூடி கிளாசுக்கோச் சபை நிறைவேற்றிய தீர்மானங்களை மறுபடியும் அங்கீகரித்தது. ஏற்பாட்டிலே நாட்டு மக்களெல்லாரும் கட்டாயம் கையொப்பமிடவேண்டுமென்று புதியதொரு விதியையும் நிறைவேற்றியது. அரசன் இவ்விதிகளெல்லாவற்றுக்கும் தனது சம்மதத்தைக் கொடுத்தான். ஆனால் சட்டபூர்வமாக அவற்றை நடை

முறைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான பாராளுமன்ற நடவடிக்கை களொன்றையும் எடுத்துக் கொள்ளாமல், தான் நினைத்தபடி செய்யும் அவனது வழக்கமான சுபாவத்தைக் காட்டத் தொடங்கினான். எனவே நிலை மையில் மாறுதலுண்டாகவில்லை. 1640 இல் இரண்டாவது விசுப்பாண்டவர் யுத்தம் தொடங்கிற்று. இங்கிலாந்திற் குறுகியகாலப் பாராளுமன்றங் கூடிற்று. ஆங்கிலேயர் சாள்சை ஆதரிக்கமாட்டார்களென்றவிடயம் அதிலிருந்து கொத்துலாந்தருக்குத் தெரியவந்தது. எனவே அவர்கள் இங்கிலாந்தின் மீது படையெடுத்து நியூகாசில்-ஒன்-தைன் என்ற இடத்தை நோக்கிச் சென்றனர். சாள்சு கொத்துலாந்துப் பிரதிநிதிகளை இரப்பணிற் சந்தித்தான். பிணக்கிற் சமாதானம் உண்டாகும் வரை கொத்துலாந்தர் நியூக்காசிலில் இடங்கொள்ளவிடுவதைத் தவிரவேறு வழி சாள்சுக்கு இருக்கவில்லை. 1641-ஆம் ஆண்டு ஒகத்துமாதம், கொத்துலாந்தரின் கோரிக்கை எல்லாவற்றையும் சாள்சு வழங்கினான். தினமொன்றுக்கு 850 பவுண் வீதம் கொத்துலாந்துச் சைனியம் நியூகாசிலிலே தங்கிய நாட்களில் உண்டான செலவையும் அரசன் கொடுத்தான். கொத்துலாந்தர் தம்மூர்திரும்பினர். இதற்கிடையிற் பிரித் தானியப் பாராளுமன்றம் அரசனுக்கு எதிர்ப்புக்காட்டிக் கொண்டே வந்தது. இவ்வாறு வளர்ந்து வரும் எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு கொத்துலாந்தர் தூணையைப் பெறுவதற்காகச் சாள்சு செத்தெம்பரில் எடின்பரோவுக்குச் சென்றான். மிகுந்த தயவுடன் அவன் கொத்துலாந்தரின் கோரிக்கைகளெல் லாவற்றையும் வழங்கினான். பிரதான எற்பாட்டுக்காரருக்குத் தாராளமாகப் பட்டம் பதவிகளையும் வேறு சலுகைகளையும் வழங்கினான். ஆனால், தனது நோக்கத்தை நிறைவேற்ற அவனால் முடியவில்லை. உண்ணாட்டுப்போர் உண்டான காலத்தில், கொத்துலாந்து, மன்னனுடன் சண்டையிடாமல் நடுநிலைமை வகித்தமை சாள்சின் இந்தச் செயலாலுண்டான நன்மை யெனலாம். இதற்கிடையில் எற்பாட்டுக்காரர் புதிய கனவொன்று கண்டு வந்தனர். சாள்சு விரும்பியவாறு பிசப்பாட்சிமுறையிலமையாது பிரெசபித் தீரிய முறையிலமைந்த திருச்சபையாட்சிமுறை இங்கிலாந்திலும் கொத்து லாந்திலும் ஒக்க நிலவ வகை செய்யவேண்டுமென்பதே அக்கனவு. இக் கனவை நனவாக்க அவர்கள் முயன்றனர்.

4. குறுகிய பாராளுமன்றமும் நெடிய பாராளுமன்றமும் (1640—1642)

ஆங்கிலேயர் அலுவல்கள் : குறுகிய பாராளுமன்றம் (1640)

கொத்துலாந்திய விடயங்கள் ஆங்கிலேயர் அரசியலே எவ்வாறு பாதித்த வென்பதை இனி ஆராய்வோம். கொத்துலாந்திய கலகம் இங்கிலாந் துக்கு அதன் பாராளுமன்ற முறையாட்சியை மீட்டுக் கொடுத்தது எனக் கூறுவர். பதினொரு வருடமாகச் சாள்சு பாராளுமன்றமின்றியே ஆட்சி

நடத்தினான். அரசனிடமிருந்த பணம் நாளாந்தச் செலவுகளுக்கே போதிய தாயிருந்தது. சற்று அதிக செலவுண்டாகுமானால், சாள்சின் ஆட்சி யொழுங்கு குலைவுற்றுப் பாராளுமன்றத்தைக் கூட்டவேண்டிய நிர்ப்பந்த முண்டாகும். முதலாவது விசுப்பாண்டவர் சண்டையின் பின்னர், திர போட்டு, இங்கிலாந்து திரும்பினான். கொத்துலாந்துடன் சண்டையை மறு படியும் தொடக்குவதற்குப் பணந் தேவைப்பட்டபடியாற் பாராளுமன் றத்தைக் கூட்டவேண்டுமென்று அவன் யோசனை கூறினான். இப்பாராளு மன்றம் குறுகிய பாராளுமன்றமெனப்பட்டது. அது 1640 எப்பிரிலிற் கூடிற்று. மூன்று வாரமே இது நிலைத்திருந்தது. கப்பல் வரியை நிறுத்துவ தானாற் சகாயநிதி உதவவேண்டுமென மன்னன் கேட்டான். அது நிறைவேறவில்லை ; கொத்துலாந்துடன் சமாதானஞ் செய்து கொள்ளுமாறு பாராளுமன்றம் மனுவிடுக்கமுயன்றபோது அதைக் குலைத்துவிட்டான். இப்பாராளுமன்றத்திலே சொமசெற்றுசயரிலிருந்து வந்த ஒரு துரைமகன் பிரசித்தமடைந்தான். இவன் பாராளுமன்றவிடயங்களிற் சாமர்த்தியம் உடையவனாக விளங்கினான். இவன் தெளிவும் உறுதியுமுள்ள பேச்சாளன் ; களுகுகளில் வல்லவன் ; எல்லையற்ற உற்சாகமுடையவன். இரண்டு மணிநேரம் அவன் பேசினான். அக்காலத்தில் இது மிக நீண்ட பேச்சாகவே மதிக்கப்பட்டது. அரசனுடைய சீர்கெட்ட ஆட்சியை அவன் இப்பேச்சிலே கண்டித்துவிட்டுத் தனது அரசியற் கோட்பாட்டைக் கடைசியாக " மனிதனுக் குப் பகுத்தறிவு எப்படியோ அதுபோன்றதே மக்களுக்குப் பாராளுமன்றம் " எனத் தொகுத்துக் கூறினான். விரைவில் அவன் தனக்கு ஒரு சிறப்பான இடத்தை வகுத்துக் கொண்டான். அதனால் அவனுடைய எதிரிகள் அவனை அடுத்த பாராளுமன்றத்திலே " பிம் மன்னன் " என்று அழைத்தனர்.

நெடிய பாராளுமன்றம் கூடுதல் (நவ. 1640).

குறுகிய பாராளுமன்றம் குலைக்கப்பட்ட பின்னர் இரண்டாவது விசுப்பாண் டவர் போர் உண்டானது. இப்போர் முடிவதற்கேதுவாயிருந்த சமாதான உடன்படிக்கையிற் கொத்துலாந்து சைனியத்துக்குத் தினமொன்றுக்கு 850 பவுண் வழங்குவதாகச் சாள்சு சம்மதித்திருந்தான். இப்பெருந் தொகைப் பணத்தைப் பெறுவதற்காக அவன் பாராளுமன்றத்தைக் கூட்டவேண் டியிருந்தது. அத்துடன் அதன் கோரிக்கைகளுக்குஞ் செவிசாய்க்கவேண்டியி ருந்தது[1]. அக்காலத்திற் பொது மக்கள் சபையானது உயர்குடி மக்கள் சபையா கவேயிருந்தது. இக்காலத்திற் போலக் குடியாட்சிக்குரிய சபையாயிருக்க

[1] நிலைமையைச் சமாளிப்பதற்காகச் சாள்சு 130,000 பவுண் பெறுமதியான தங்கக் கட்டியை அக்காலலண்டனிலிருந்து கைப்பற்ற வேண்டியிருந்தது. வியாபாரிகள் மாற்றுண்டியலைத் தீர்க்க முடியாது வருந்தினர். இதனால் வியாபாரம் சீர்குலைந்தது. வியாபார வகுப்பினர் சாள்சுக்கு மாறுக எழுந்ததற்கு ஒரு காரணம் இதுவே.

வில்லை. 1640 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலே கூடியதும், சரித்திரத்தில் நெடிய பாராளுமன்றமெனப் பெயர்பெற்றதுமான அச்சபையில் ஆங்கிலப் பெருமக்களிற் சிறந்தவர்களும் அறிவுமிக்கோரும் அங்கம் வகித்தனர்.

அது ஆற்றியவேலை : தன்வயமான அதிகாரத்தை ஒழித்தல் : தற்சிறுமை மன்றம் : சட்டவிரோதமான வரிகள்.

இப்பாராளுமன்றம் கூடிய 9 மாதங்களில் அரசனுடைய தன்வயமான அதிகார உரிமையை ஒழித்தது (குறிப்பு 67). ஏறக்குறைய நாற்பதுவருடங்களின்பின்னால் இப்பொழுது அரசனுக்கும் பாராளுமன்றத்துக்குமுள்ள பிணக்குக்கேதுவான பிரச்சினைகளைத் திட்டமாகத் தீர்த்தற்கு வசதியுண்டானது. இந்த ஒன்பது மாதமும் பொது மக்கள் சபை ஒற்றுமையுடன் கருமமாற்றியது. அரசனிடம் மக்களுக்குமிருந்த அதிருத்தியிருந்ததென்பதற்கு இது ஒரு சான்றாகும். இந்தப் பாராளுமன்றத்தை அதனுடைய அனுமதியின்றிக் குலைக்கக் கூடாதென்றும் வருங்காலத்தில் மூன்று வருடத்துக் கொருமுறை பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டுமென்றும் (மூவாட்டை விதி) பிம்மின் தலைமையிற் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. வெள்ளி மன்றம், உயர்விசாரணை மன்றம் போன்ற தன்வயமான நீதிமன்றங்கள் ஒழிக்கப்பட்டன. கப்பல்வரி போன்ற வரிகள் சட்ட விரோதமானவையென்று பிரகடனஞ் செய்யப்பட்டது. பாராளுமன்றத்தின் அனுமதி பெறுத மிடாவரி, இருத்தல் வரி என்பனவும் அவ்வாறே நிராகரிக்கப்பட்டன. போப்பாட்சி ஒழிப்பு முறி (வோர்க்கிலை முறி) பற்றித்தான் அதிக அபிப்பிராய பேதமிருந்தது.

அமைச்சர்மீது பழிமாட்டறைவு : திரபோட்டின் விசாரணை (1641).

அரசனின் ஆலோசகரைத் தண்டிக்கும் விடயமும் இச்சட்டங்களோடு தொடர்ந்து வந்தது. சிலர் நாட்டைவிட்டு ஓடினர். சிலரைக் கைதுசெய்து சிறைவைத்த பின்னர் பழிமாட்டறைந்தனர் [1]. இவர்களுள் உலோட்டு, திரபோட்டு என்பவர்கள் முக்கியமானவர்கள். உலோட்டு 1645 இல் சிரச்சேதஞ் செய்யப்பட்டான். திரபோட்டை மக்கள் "கறுத்தக் கொடுங்கோலன் தொம்" என்று அழைத்தனர். அவனே அரசனின் தன்வயமான அதிகாரம் உருவெடுத்தாற் போன்றவன் எனமக்கள் கருதினர். "நாடு முழுவதும் அவனைக் குற்றஞ் சாட்டிற்று" என அக்காலத்தவர் ஒருவர் கூறினார். இராச துரோகக் குற்றத்தின் பேரில் அவன் விசாரணை செய்யப்பட்டான். அந்த விசாரணையின் தீர்ப்பைக் கொண்டு இனிமேலும் அரசன் தன்வயமான அதிகாரப்படி ஆட்சி நடத்துவானு அல்லது பாராளுமன்றத்தையுங் கலந்து ஆட்சி நடத்துவானு என்பது தீர்

[1] ஆங்கிலச் சரித்திரத்திலே மொத்தம் 70 பழிமாட்டறைவுகள் நடைபெற்றன. இவற்றுள் நாலிலொன்று 1640 இற்கும் 1642 இற்கு மிடையில் நிகழ்ந்தன.

மானிக்கப்படுமென மக்கள் எண்ணினர். ஆனால் திரபோட்டு இராசத்துரோகி என்பதை உறுதிப்படுத்துவது முடியாத காரியமாயிருந்தது. நாட்டுக்கு நன்மையில்லாத கருமங்களே அவன் செய்திருக்கலாம். ஆனால் அரசனுக்கெதிராக அவன் எதுவுஞ் செய்யவில்லை. அயலந்தில் அவன் நடத்திய ஆட்சிபற்றியும் குற்றஞ் சாட்டப்பட்டது. ஆனால் அவன் திறம்பட எதுக்கள் காட்டி மறுத்தான். ஆங்கில மக்களிடையேயிருந்த எதிர்ப்பைப் பயமுறுத்தி நீக்குவதற்கு அயலந்துப் படைகளைப் பயன்படுத்துமாறு திரபோட்டு அரசனுக்கு ஆலோசனை கூறியதாக மக்கள் எல்லாரும் நம்பினர். இது பெரும் பாலும் உண்மையாயிருக்கலாம். கோமறைக் கழகக் கூட்டமொன்றிலே எடுக்கப்பட்ட குறிப்புக்களடங்கிய ஒரு பிரதியிற் காணப்பட்ட சான்றைக் கொண்டே இதனை முடிவு செய்யவேண்டியிருந்தது. அக் குறிப்புக்களை அக்கூட்டத்திலிருந்து அங்கத்தவர் ஒருவர் எழுதினர். அவற்றில் "இங்கே உங்கள் வசம் ஒரு சைனிய மிருக்கிறது. அதைக்கொண்டு இந்த இராச்சியத்தை அடக்கலாம்" என்று திரபோட்டுக் கூறியதாகக் காணப்பட்டது. ஆனால் "இந்த இராச்சியம்" என்றது எதைக் குறித்ததென்பதை உறுதியாகக் கூறமுடியவில்லை. அது இங்கிலாந்தைக் குறிக்கலாம், அல்லது கொத்துலாந்தைக் குறிக்கலாம்.

நிரபோட்டின் சிரச்சேதம் (மே, 1641).

கடைசியாகப் பொது மக்கள்சபை திரபோட்டு மீது பழிமாட்டறைவதைக்கைவிட்டுக் கொலைத் தண்டமுறியை நிறைவேற்றி அவனை இராசத் துரோகக் குற்றவாளியாகத் தீர்த்தது[1]. அம்முறி மேற்சபைக்கனுப்பப்பட்டது. பிரபுக்கள் சிறிது தயங்கிய பின்னர் அதற்குச் சம்மதமளித்தனர். அவன் உயிர் இப்பொழுது அரசன் கையிலிருந்தது. இரண்டுநாளாகச் சார்சு மன்னன் மனவேதனையோடு செய்வதறியாது சஞ்சலப்பட்டான். மேலும் தாமதித்தால் தனது அரசியீதே[2] மக்கள் பழிமாட்டறையக்கூடுமென அஞ்சிய அரசன் தன் அமைச்சர் கருத்துப்படியும், நீதிபதிகள் அபிப்பிராயப்படியும் விசுப்பாண்டவர் சிலர் ஆலோசனைப்படியும் திரபோட்டின் யோசனைப்படியும் முறிக்குச் சம்மதமளித்தான். கடைசிக் காலம்வரை தைரியமும் உயர் பண்பும் நிறைந்திருந்த திரபோட்டு தவர்

[1] இதனால் அவன் குற்றவாளியென நிரூபிக்கப்பட்டதாகவில்லை. அவன் குற்றவாளியெனத் தீர்த்து, அவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டுமென வாதித்து வாக்களித்தனர்.

[2] இம்முறிக்குச் சம்மதமளிக்க மறுத்தால் அயல்நாட்டாருடனுடன் அரசி சூழ்ச்சி செய்தாளென்று மக்கள் சபையினர் குற்றஞ் சாட்டத் தயாராயிருந்தனர்.

குன்றிலே சிரச்தேசஞ் செய்யப்பட்டான் (மே, 1641)[1]. இங்கிலாந்தின் பாதுகாப்புக்கு அவனுடைய சிரச்தேசம் அவசியமென அன்று கூடி நின்ற 2,00,000 மக்களும், ஆங்கிலேயரிற் பெரும்பாலோரும் கருதினர்.

பாராளுமன்றத்திற் பிளவு :

1641 ஆம் ஆண்டின் கோடை கால முடிவில் ஆங்கிலேயர் இருகட்சியாகப் பிரிந்துகொண்டனர். நெடிய பாராளுமன்றத்து வேலை தொடர்ந்து ஒற்றுமையுடன் நடக்கவில்லை. பெருமன்றாட்டு விவாதங்களின் போது (நவம்பர் மாதம்) இரு கட்சிகளிடையிலும் கடைசியான பிளவுண்டானது. கொத்துலாந்திலே தனக்குச் சாதகமான ஒரு கட்சியை அமைக்கச் செத்தெம்பரிற் சாள்சு கொத்துலாந்துக்குப் பிரயாணமானான். ஆனால் அதில் அவன் வெற்றிபெறவில்லை. அந்நாட்டிலே ஒற்றோபரிற் கொல்பு விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது அயலந்திலுள்ள கத்தோலிக்கர் கலகஞ் செய்த செய்தி[2] அவனுக்கு எட்டிற்று. இக்கலகம் இங்கிலாந்திலே பல விளைவுகளை உண்டாக்கிற்று. அங்கு நடந்த கொடுமைகளை அதிகப்படுத்திய செய்திகள் இங்கிலாந்துக்கு வந்து சேர்ந்தன. அதன்பயனாகப் புரட்டசுத்தாந்தியர் ஆத்திரமடைந்தனர். இக்கலகத்திற் சாள்சும் சம்பந்தப்பட்டுள்ளான் என அவர்கள் ஐயப்பட்டனர். கலகத்தையடக்கச் சைனியந் தேவைப்பட்டது. இந்தச் சைனியம் யாருடைய அதிகாரத்திலிருக்கவேண்டும் ? அரசனுடைய அதிகாரத்திலா ? பாராளுமன்றத்தின் அதிகாரத்திலா ? இது பெரும்விளைவுகளை உண்டாக்கக் கூடிய பிரச்சினையாயிருந்தது. இக்கேள்விகளுக்கு இறுக்கும் விடை இங்கிலாந்தின் சுதந்திரத்தை நிச்சயிப்பதாயிருந்தது.

பெரு மன்றாட்டு

இக்காலத்திலேதான் பிம் என்பவன் பெருமன்றாட்டு என்ற ஆவணத்தை வெளியிட்டான். பிம்மும் பியூரித்தானியரும் சாள்சு மன்னன் செய்தானெனக் கருதிய குற்றங்களெல்லாம் இந்த ஆவணத்திற் காட்டப்பட்டன. வருங்காலத்திலே எத்தகைய சீர்திருத்தங்களிருக்கவேண்டுமென்பதும் இதிலே திட்டமிடப்பட்டது, இத்திட்டம் மிகத்தீவிரமானதென்று பலர் அப்பொழுது நினைத்தனர். பொதுமக்கள் சபை அங்கீகரித்தவர்களையே அமைச்சராக நியமிக்க வேண்டுமென்றும், சமயச் சீர்திருத்தங்கள்

[1] "கடவுளுக்கு நன்றி தெரிவிக்கிறேன். சாவுக்கு நான் அஞ்சவில்லை. அச்சத்தினாலுண்டான மனச்சோர்வு என்னை நலிக்க மாட்டாது. எனது உட்சட்டையை நித்திரைக்குப் போகும்போது எவ்வாறு கழற்றி வீசுவேனோ அவ்வாறே இப்பொழுதும் மகிழ்ச்சியோடு கழற்றி வீசுகிறேன்" என்று சொல்லித் திரபோட்டுத் தனது உட்சட்டையைக் கழுமரத்தடியில் நின்று கழற்றினான்.

[2] எனினும் சாள்சு விளையாட்டை முடித்ததானெனக் கன்னபரம்பரை கூறும்.

செய்வதற்குச் சமய குரவர்களைக் கொண்டவொரு சங்கம் அமைக்க வேண்டுமென்றும் அதிற் காணப்பட்டது. அத்தகைய சீர்திருத்தங்கள் அரசனுடைய அதிகாரத்தையும், விசுப்பாண்டவர் அதிகாரத்தையும் ஒழித்து விடுமெனப் பலர் கருதினர். இத்திருத்தங்கள் பற்றி நீண்ட விவாதங்கள் மிக்க ஊக்கத்துடன் நடைபெற்றன. பியூரித்தானியருக்கு எதிராகத் திருச்சபை வாதிகள் கிளம்பினர். அரசனே அரசியல் நிருவாகத்துக்குப் பொறுப்பாயிருக்கவேண்டுமென்று வாதாடிய அரசியற் சட்டமேதைகளான, மன்னன் கட்சியைச் சேர்ந்த போக்குலந்து ஐட்டு போன்றவர்களுக்கு எதிராக அமைச்சர் பாராளுமன்றத்தின் எண்ணப்படியே நடக்கவேண்டுமென்றகொள்கையராய், அதிகாரத்தைக் கைப்பற்ற விரும்பிய பிம் போன்றவர்கள்கிளம்பினர். ஈற்றில் பெருமன்றாட்டு நவம்பர் மாதம் 23-ஆம் தேதி அதிகாலையில், இரவு முழுவதும் வாதாடியபின்னர், நிறைவேறிற்று. ஆனால் பதினொரு மேலதிகவாக்குக்களே கிடைத்தன. அதனாலுண்டான ஆர்ப்பாட்டத்திற் பாராளுமன்ற அங்கத்தவரிற் சிலர் வாளை உறையிலிருந்து உருவவும் நேரிட்டது. "நாம் மரணத்தின் வாயிலில் இது காறும் தங்கியிருந்தோம்" என ஒருவர் கூறினார். உண்ணாட்டுப்போர் உண்டாவதற்கான உற்பாதங்களிவை. அப்போர் வெகு தொலையிலிருக்கவில்லை.

ஐந்து அங்கத்தவரைக் கைதுசெய்ய முயலல் (சனவரி 1642). உண்ணாட்டுப்போர் (1642 ஓகத்து).

ஆட்சிப்புரட்டுசெய்ய முயன்று தோல்வியடைவது கேட்டுக்கேதுவாகும். சாள்சுக்கு இக்கதியே நேர்ந்தது. 1642-ஆம் ஆண்டு சனவரி மாதம் நாலாந்தேதி பொது மக்கள் சபை, அரசி மீது பழிமாட்டறையப் போவதாகச் சாள்சு அறிந்தான். உடனே அவன் அதற்கு முன்னேற்பாடாகப் பாராளுமன்றத்தின் பிரதான அங்கத்தவர் ஐந்துபேர் மீது இராசத்துரோகக் குற்றஞ் சாட்டத்துணிந்தான். அவர்கள் அரசுக்கெதிராகக் கொத்துலாந்து மக்களுடன் சூழ்ச்சி செய்ததாகக் குற்றஞ் சாட்டினான். இந்த ஐவரிற் பிம்மும் அமிடெனும் இருவராவர். 400 காவற் படைவீரருடன் சாள்சு தானாகவே இந்த ஐவரையுங் கைது செய்யப் பொது மக்கள் சபைக்குச் சென்றான்[1]. ஆனால் அரசனின் நோக்கத்தை, அரசியோடு சம்பந்தப்பட்ட ஒரு கூட்டாளி அறிந்து அந்த ஐவருக்குமறியச் செய்தான். சாள்சு பொது மக்கள் சபையுட் பிரவேசித்தபோது அவர்களைக்காணாது "பறவைகள் பறந்துவிட்டன" என்று கூறினான். அரசன் இவ்வாறு

[1] 4 ஆம் தேதி காலை சாள்சு தனது திட்டத்தை நிறைவேற்றத் தயங்கினானென்றும் அரசி அதைக்கண்டு "கோழையே ! அந்தக் கள்ளரைப் போய்க் காதிற் பிடித்து இழுத்துவா, இல்லையேல் நீ என் முகத்தில் விழிக்க வேண்டாம்" என்று சொன்னாளென்றுங் கூறப்படுகிறது.

சபையிற் பிரவேசித்தமை, அதன் சிறப்புரிமைக்குப் பெரும் பங்கம் உண்டாக்கியது போலாகும். அரசன் சபையைவிட்டு வெளியேறியதும் மக்கள் ஆத்திரமடைந்து உரத்த சத்தமிட்டு "சிறப்புரிமை! சிறப்புரிமை!" என்று கத்தினார்கள். அடுத்த எழுமாதங்களில் நடந்த நிகழ்ச்சிகளை இங்கு விரித்துக் கூறவேண்டா. இரு கட்சியினரும் இராணுவத்தைத் தமது கையில் வைத்திருக்க முயன்றனர். இந்த நோக்கத்துடன் பாராளுமன்றம் ஒரு முறியையும் நிறைவேற்றியது. சார்ள்ஸ அதனை வீட்டோ செய்தான். இரண்டு கட்சியும் சண்டைக்கு ஆயத்தஞ் செய்தன. எப்பிரில் மாதத்தில் அல் என்ற இடத்துக்கு மன்னன் செல்வதை அந்நகரின் ஆள்பதியான ஒதாம் என்பவன் தடுத்தான். ஒகத்துமாதம் 22 ஆம் தேதி நொற்றிங்ஹமில், அரசனுடைய கொடி ஏற்றப்பட்டது[1]. பெரிய உண்ணாட்டுப்போர் ஆரம்பித்தது.

[1]அதே இரவு பெரிய புயற்காற்றினால் அக்கொடி அடிபட்டுக்கீழே விழுந்ததெனக் கொன்ஸ்டன் ஆசிரியர் கூறுகிறார். இது அமங்கலமான ஓர் உற்பாதமாகும்.

12 ஆம் அதிகாரம்

உண்ணாட்டுப்போர் (1642—1645)

இரு கட்சிகளின் ஆதரவாளர்

இவ்வாறு உண்டான உண்ணாட்டுப்போரிலே விழுமியோர் பெரும் பாலோரும் துரைமக்களும் அவரது வாரக்குடிகளும் அரசன் கட்சியிற் சேர்ந்தனர். பட்டின மக்கள், பண்ணையாளர் ஆகியோரிற் பெரும்பாலோர் பாராளுமன்றக் கட்சியிற் சேர்ந்தனர் (குறிப்பு 68). இது வகுப்பு யுத்த மென்று கருதுவது தவறு. அரசன் சார்பாகப் பிரபுக்கள்சபையங்கத்த வர் 80 பேர் சண்டையிட்டனர். மூப்பது பேர் எதிராகப் போர்புரிந்தனர். பொதுமக்கள் சபையங் கத்தவரில் 175 பேர் அரச கட்சியிற் சேர்ந்தனர். புவியியல் முறையில் நாட்டைப் பிரிப்பதானால் அம்பரிலிருந்து சதாம் டன் வரை ஒரு கோட்டைக் கீறின் அக் கோட்டுக்குக் கிழக்கேயுள்ள பகுதி பெரும்பாலும் பாராளுமன்றக் கட்சியைச் சேர்ந்ததெனலாம். கோட் டுக்கு மேற்கே, பிறித்தல், குளோசுற்றர், பிளிமது போன்றமுக்கிய பட்டினங்கள் நீங்கலாக, மற்றப்பிரதேசம் முழுவதும் அரச கட்சியைச் சேர்ந்தது. ஆனால், உண்மையான வேற்றுமை அரசியல் சம்பந்தமானது. யார் அதிகாரி? அரசனா, பாராளுமன்றமா என்பதே அது. இதிலும் பார்க்க மேலானதொரு வேற்றுமையும் இருந்ததெனலாம். அது சமய சம் பந்தமானது. அங்கிலிக்கனுக்கும் பிரித்தானியனுக்குமிடையே பிளவை யுண்டாக்கிய சமயவேற்றுமை அது.

கட்சிகளின் பலம்

கட்சிகளின் பலத்தைத் தொகுத்துக் கூறுமிடத்து, சில விடயங்களைக் குறித்துக்கொள்வது நன்று. பாராளுமன்றக் கட்சிக்கு இலண்டன் நகர மக்கள் சார்பாயிருந்தனர். நாட்டிலுள்ள குடிகளில் மூன்றிலிரு பகுதி யினர் அதை ஆதரித்தனர் எனலாம். நாட்டின் வளத்தில் முக்காற் பங்கு அதற்குச் சேர்ந்ததாயிருந்தது. ஆங்காங்கு சிதறிக் கிடந்த சிறிய கோட்டைகளையும் அரண் செய்த பெரிய வீடுகளையும் பாதுகாப்பதற்குப் பாராளுமன்றக் கட்சி அதிக சைனியத்தைப் பயன்படுத்தவில்லை. மேலும் கடற்படை பாராளுமன்றத்தை ஆதரித்தது. அந்நிய நாடுகள் அரசனுக்குப் படைத்துணை அனுப்புவதை நிறுத்தவும் கடற்கரைப் பட்டினங் களுக்குப் படைகளை ஏற்றிச் சென்று அவற்றைக் காப்பாற்றவும் இது பெருந் துணையாயிருந்தது. பாராளுமன்றப் படையிலேயே சிறந்த காலாட் படைகளிருந்தன. அக்காலத்திலே துப்பாக்கி முனையீட்டி கண்டுபிடிக்கப் படவில்லை. எனவே, காலாட்படையிற் பாதிப்பேர் ஈட்டிக்காரராகவும் மீன யவர் சிறு துப்பாக்கி ஏந்துவோராகவுமிருந்தனர். கைச்சண்டை செய்

வதற்கு அவர்கள் தகுதியற்றவராயினர். சிறு துப்பாக்கி வீரர் தமது துப்பாக்கியில் வெடி தீருவதற்கு அதிக நேரம் பிடித்தது[1]. அது இடர் நிறைந்த நீண்ட வேலையாயிற்று. எனவே, காலாட்படைக்குப் பல தடைகளிருந்தன. அதனால் உண்ணுட்டுப் போரிலே குதிரைப் படையே பல யுத்தங்களில் வெற்றிபெற்றதை நாம் காண்கிறோம்.

அரசப்படைகளில் யுத்த ஆரம்பத்திலே நல்ல குதிரைகளையும் குதிரை வீரரையுமுடைய குதிரைப் படையிருந்தது. அது அவர்களுக்குப் பெரிய நன்மையைப் பயந்தது (குறிப்பு 69). மேலும், அவர்களுக்கு அரசனே தலைமை வகித்ததால் இலட்சிய ஒற்றுமையும் தனித்தலைமையுமிருந்தன. அனுபவம் வாய்ந்த திறமை மிக்க தலைவர்களும் அவர்கள் பக்கமிருந்தனர். முதலிரண்டு வருட யுத்தத்தில் யுத்த தந்திரம் அவர்களிடத்து நிறையக் காணப்பட்டது. மேலும், சார்ளின் மருகனான இருபத்து மூன்று பராயம் நிரம்பாத உருப்பேட்டு[2] இளவரசன் பிறப்பிலேயே சிறந்த குதிரை வீரனாக விளங்கியதுடன், தைரியமும் ஆவேசமூட்டுந் தலைமையும் நிரம்பிய ஊக்கமுமுடையவனாயிருந்தான். நிச்சயமான முடிவைக் கொடுக்கக் கூடிய யுத்த திட்டங்களை வகுக்கக் கூடிய திறமையும் வாய்ந்தவனவன். சுவீடிய யுத்த தந்திர முறையில் அனுபவமுடையவனாயுமிருந்தான். முதலில் தன் குதிரைப் படைகளை எதிரி மீது கடுமையாகத் தாக்கச் செய்தல்; கடைசியாகக் கைத்துப்பாக்கியினால் அவர்களைச் சுடுதல்[3]; இவையே அவன் முறை. இத்தந்திரத்தில் உருப்பேட்டு திறமை பெற்றிருந்தான். பாராளுமன்றக் கட்சியின் முதற் சேனாபதி எசெட்சுப் பிரபு. இவனிடம் தானாக முனைந்து ஆரம்பிக்குஞ் சுபாவமில்லை. மாஞ்செத்தர் பிரபு மற்றொரு தலைவன். அவன் "இனிமையும் எளிமையும்" உடையவன். இவ்விருவரும் "அரைகுறைத் திட்டம்" போடுவர். "அரசனை நன்றாக நையப் புடைக்கும்" விருப்பமில்லாதவர்கள். எனவே, உருப்பேட்டனும் ஏனைய அரசகட்சித் தலைவர்களுடனும் மேற்கூறிய இரு

[1]சிறு துப்பாக்கி சுடுவோர் முதலில் ஒரு பெட்டியிலிருந்து வெடி மருந்தை யெடுப்பர். எடுத்துத் துப்பாக்கியின் வாயிலிடுவர். பின்னர் தமது வாயிற்கௌவி வைத்திருந்த துப்பாக்கிக் குண்டைத் துப்பாக்கி வாயிலிட்டு அடைப்பர். பின்னர் பாரம் மிக்கதும் நீண்டதுமான அத்துப்பாக்கியை ஒரு முக்காலியில்வைப்பர். வைத்தபின்னர் நெருப்புத்திரியினால் வெடிமருந்துக்கு நெருப்புவைப்பர். இந்நெருப்புத்திரி முத்திப் பலமுறை பயன்படுத்தப்பட்டபொழு தெல்லாம் அவருடைய புறங்கையைப் பொசுக்கிவிட்டிருக்கும்.

[2]உருப்பேட்டின் தாய் பலற்றைன் இளவரசனை மணந்த இலிசபெத்து இளவரசி. இவள் தாய்மை நிரம்பியவளென்று புகழ்பெற்றவள். ஆனால், அவளுடைய மகனொருத்தியின் கூற்றுப்படி, அவள் மக்கள் குழந்தைகளாயிருந்த காலத்திலே அவர்களை விட நாய்கள் மீதும் குரங்குகள் மீதும் அதிக பிரியமுடையவளாயிருந்தாளெனக் காண்கிறோம்.

[3]குதிரை வீரரின் பழைய தந்திரம் காலாட்படை மீது மெதுவாகச் சென்று உடனே கைத்துப் பாக்கியாற் சுட்டுவிட்டுத் திரும்புதல்.

வரும் நிருவகிக்க முடியாதிருந்தமை வியப்பன்று. மந்திராலோசனைக் கூட்டங்களில் உருப்பேட்டு ஆத்திரமும் கோபமும் காட்டினான். அதனால் அவனோடு ஒத்துழைப்பது கடினமாயிற்று. சண்டையிலும் அவன் உக்கிரமுடையவனாயிருந்தபடியால் அரசனுடைய கட்சிக்கொள்கை பலவீனமடைந்தது.

1642 ஆம் ஆண்டுப் போர் எழுச்சி

முதல் வருட யுத்தத்திலே (1642) இலண்டன்மீது ஒரு படையுடன் முன்னேறவேண்டுமென்பதே அரசனுடைய நோக்கமாயிருந்தது. அவனுடைய படை சுரூசுபெரியிலிருந்து கிளம்பிற்று. எசெட்சு மத்திய பிரதேசமான மிதுலந்திலிருந்து முன்னேறினான். அரசன் படை எசெட்சின் படைக்கு முந்திச்சென்றது. ஆனால், எட்சில் என்ற இடத்தில் அரசன் படைதிரும்பி எதிரியைச் சந்தித்தது. (ஒற்றேபர் மாதம்)[1]. அரச கட்சியைச் சேர்ந்த குதிரைப் படையிரண்டும் வெற்றிபெற்றன. ஆனால், உருப்பேட்டு எதிரியை வெகுதூரம் துரத்தினான். அதில் உண்டான ஆரவாரத்தினால் சார்ளின் சேமக் குதிரைப்படையும் எதிரியைக் கலைத்துச் செல்ல முற்பட்டது. இச் சேமப்படையில் நல்ல அங்கி அணிந்த நிலச் சொந்தக்காரிருந்தனர். இப்படை "காட்சிப்படை" யென அழைக்கப்பட்டது. குதிரைப்படை இம்முயற்சியிலீடுபட்டதால் அரசனின் காலாட்படை பாதுகாப்பின்றியல்லற்பட்டது. மிகக்காலம் கழிந்த பின்னர் உருப்பேட்டு நல்ல நேரத்தில் வந்து சேர்ந்து யுத்தத்தை வெற்றி தோல்வியின்றி முடித்தான். அரசன் மேலும் முன்னேறி இலண்டனை நோக்கிச் செல்லுகையில் தேணும் என்ற இடத்தில் 24,000 இலண்டன் வாசிகள் குழுமியிருப்பதையறிந்து ஒட்சுபோட்டுக்குத் திரும்பினான். சார்ளசு நேரே இலண்டனை நோக்கிப் போயிருக்கவேண்டுமென்று சில இராணுவ நிபுணர் கருதுகின்றனர். வேறு சிலர் அவ்வாறு செய்திருக்கக் கூடாதெனக் கருதுகின்றனர். சார்ளின் படை இதன்பின்னர் இலண்டனை இவ்வளவு சமீபமாக அணுகியது கிடையாது.

1643 ஆம் ஆண்டுப் போராட்டம்: இலண்டன் மீது முத்திசையிலிருந்து முன்னேறத்திட்டம்.

யுத்தத்தின் இரண்டாவது ஆண்டிலே (1643) மூன்று திசையிலிருந்து இலண்டன் மீது முன்னேற அரசன் திட்டம் போட்டான். நியூக்காசில்

[1]உண்ணுட்டுப் போரிலே படைகள் "கணக்குறி" களோ குடுவது வழக்கம். படைகளைச் சுட்டி அறிவதற்கு இது உதவியாயிருந்தது. எனவே, எட்சிற்கனத்தில் பாராளுமன்றக்கட்சி செம்பீதச்சால்வை அணிந்தது. நியூபெரிக்களத்திலே பச்சைக்கிளை அணிந்தது. மாசுற்றன் முக் கனத்தில் வெள்ளைக்கைக்குட்டையையோ, வெள்ளைக் கடதாசியையோ, தொப்பியில் அணிந்தது. பின்னர் புதுமாதிரிப்படையில் வெத்த அங்கி அணியப்பட்டது. இதனாற்றான் பிரித்தானியப்படையின் நிறம் சிவப்பானது.

பிரபு[1] வடக்கிலுள்ள எதிரிகளை வென்றபின்னர் தெற்கு நோக்கி முன்னேற வேண்டுமென்றும், வடமேற்கிலே சண்டைசெய்த ஒபுதன் அதை முடித்துக் கொண்டு கிழக்கு நோக்கி முன்னேறவேண்டுமென்றும், சார்ள்சு எசெட்சுக்கு வேலை கொடுத்துக்கொண்டு மற்றப்படைகள் தயாரானதும் இலண்டனை நோக்கி வரவேண்டுமென்றும் திட்டமிடப்பட்டது. வசந்த காலத்திலும் கோடை காலத்திலும் பாராளுமன்றக் கட்சியின் நிலைமை மோசமாயிருந்தது. நியூக்காசில்யூன் மாதம் முதலாந்தேதி **அதுவாற்றன் மூர்க்** களத்திலே வெற்றிபெற்று அதன் பயனாக யோக்குசயரிற் பெரும்பகுதியைப் பிடித்துக் கொண்டான். மேற்கே உருப்பேட்டு பிறித்தலைக் கைப்பற்றினான். யூலையில் **இரவுண்டெவேதவுண்** களத்திற் பாராளுமன்றப் படைகளின் தலைவனையிருந்து வெற்றிகளைப் பெற்று வந்த உவாலரை ஒபுதன் முறியடித்தான். இந்த யுத்த முடிவினால் மனமுடைந்தே பிம் கொத்துலாந்தியரிடம் படைத்துணை கேட்க நடவடிக்கை யெடுத்தான். இதன் பயனாகவே இலண்டனில் எஞ்சியிருந்த பிரபுக்கள் அரசனுடன் மிக இழிவானதொரு சமாதான உடன்படிக்கையைச் செய்யுமாறு பொதுமக்கள் சபைக்கு விண்ணப்பஞ் செய்தனர். இவ்வுடன்படிக்கையைப் பொதுமக்கள் சபை எழு வாக்குகளால் நிராகரித்தது. மத்திய பகுதியில் அரசன் இரீடிங்கு நகரத்தை இழந்தான். ஒட்சுபோட்டுக்குச் சமீபத்திலுள்ள **சால்குரோவு** என்ற இடத்திலே பாராளுமன்றப் படைகள் சிறு சண்டையிற்றோற்கடிக்கப்பட்டன. இச்சண்டையிலேதான் அமிடென் இறந்தான்.

இலண்டன் முக்கியத்துவம் : நியூபெரிச்சண்டை (1643)

1643 ஆம் ஆண்டு செத்தெம்பரில் நிலைமை மாறியது. "**அல்** நகரும் **பிளிமது** நகரும் பாராளுமன்றக் கட்சியைக் காப்பாற்றின," என்று கூறப்பட்டது. வடக்கே நியூக்காசிலின் தலைமையிற் சண்டைசெய்த வடவர் அல் நகரைக் கைப்பற்ற முடியாதுவிட்டதால், எதிரிகள் தமது வீடு வாசல்களையும் பொருள் பண்டங்களையும் கைப்பற்றி விடுவர் என்ற பயத்தினால் தெற்கே செல்ல மறுத்தனர். ஒபுதன் கிழக்குநோக்கி முன்னேறிய போதிலும், அவனுடைய படைகள் பிளிமதைக் கைப்பற்ற முடியாமற் சைனியத்திலிருந்து நழுவத் தொடங்கின. அதனால், ஒபுதனுக்கு ஆட்பலங்குறைந்தது. இதற்கிடையில் தக்கதுணையின்றி இலண்டன் மீது படையெடுக்க விரும்பாத சார்ள்சு ஒகத்து ஆரம்பத்திலே குளோசுற்றரை முற்றுகையிட முன்னேறினான். ஆனால், செத்தெம்பரில் எசெட்சு முற்றுகையிடப்பட்ட படைக்கு நல்ல உதவி செய்தான். எசெட்சின் படை இலண்

[1]முதலாம் சேமிசுக்கு உவெல்லுபெக்கிலே விருந்தளித்து உபசாரஞ் செய்வதற்காக நியூக்காசில் ஒருமுறை 20,000 பவுண் செலவு செய்தான். அந்தக் கனியாட்டத்தில் ஆடுவதற்கு பென் சோன்சன் நாடகங்களெழுதினார். பின்னர் நியூக்காசில் வேல்சு இளவரசராயிருந்த இரண்டாம் சார்ள்சுக்கு ஆசானுமிருந்தான்.

டனுக்குத் திரும்பும் வழியில் **நியூபெரியிலே** சார்ள்சு அப்படையை மறித்துச் சண்டை செய்தான். ஆனால், படையைத் தடைசெய்ய முடியவில்லை. இச் சண்டையிலே மகானுபாவனான போக்குலந்துப் பிரபு இறந்தான். ஒற்றேபரில் நியூக்காசிலின் படையினால் முற்றப்பட்ட அல் நகர் வின்சிபிக் களத்தில் பாராளுமன்றப் படைக்குக் கிடைத்த வெற்றியினால் விடுதலை பெற்றது. இக்களத்திலேதான் வருங்காலத்திற் பியூரித்தானியப் பெருந்தலைவனாய் விளங்கிய குரம்வெல் தனது திறமையைக் காட்டினான். தெற்கிலே மாத்திரம் ஒபுதன் வெற்றியுடன் முன்னேறிக்கொண்டு வந்தான்.

பாராளுமன்றமும் கொத்துலாந்து நட்புறவும் : நிடசங்கமும் ஏற்பாடும் (1643)

வருடக் கடைசியில் பிம் இறந்தான். இது பாராளுமன்றக் கட்சிக்குப் பெரிய நட்டமாயிற்று. இவன் இறப்பதற்குமுன்னர் கொத்துலாந்தருடன் படைத்துணை வேண்டி ஓர் உடன்படிக்கையைச் செய்து கொண்டான். இரு கட்சியினரும் கொத்துலாந்திடம் படைத்துணை வேண்டினர். அரசன் வெற்றி பெற்றால் தம்மை அடக்கிவிடுவானென்று பயந்த கொத்துலாந்துப் பிரெசுபித்திரியர் பாராளுமன்றக் கட்சிக்குத் துணைசெய்வதென முடிவு கட்டினர். கொத்துலாந்தர் நிபந்தனைகள் கண்டிப்பானவையாயிருந்தன. இங்கிலாந்தில் வருங்காலத்திலே பிரெசுபித்திரிய மதமே நிலவவேண்டுமென அவர்கள் விரும்பினர். இந்த உடன்படிக்கையைச் சில நிபந்தனைகளுடன் பாராளுமன்றம் ஏற்றுக்கொண்டது[1]. இதற்குத் திடசங்கமும் ஏற்பாடும் எனப் பெயர். இதற்குப் பிரதியுபகாரமாக 20,000 படைவீரர் பொருந்திய சைனியமொன்றைக் கொத்துலாந்திடம் படைத்துணையாகப் பெற்றது. இப் படையே அதன் வெற்றிக்குக் காரணமாயிருந்தது.

1644 ஆம் ஆண்டுப்போராட்டம்

1644 இல் யுத்தப்போக்கில் மாற்றமுண்டானது. இரு பக்கத்தினரும் படைத்துணை பெற்றனர். கொத்துலாந்தர் பாராளுமன்றக் கட்சியைச் சேர்ந்தனர். இதற்கு ஈடாகச் சார்ள்சு அயலந்திலிருந்து தனக்குப் படைத்துணையைப் பெற்றான். ஆனால், பாராளுமன்றக் கட்சிக்குச் சார்பாகவே எல்லாம் நிகழ்ந்தன. கொத்துலாந்துப் படை நல்ல துணை செய்தது. அரசனுக்கு வாய்த்த ஐரிசுப் படையினர் திறமையற்றவர்கள். கத்தோலிக்க

[1]இங்கிலாந்துத் திருச்சபை சீர்திருத்தப்படவேண்டும். அதுவும் "கடவுளின் திருவாக்கின் படியும் சீர்திருத்தப்பட்ட சிறந்த திருச்சபைக் கிணங்கவும்" சீர்திருத்தப்படவேண்டும். இவ் வசனத்தின் இரண்டாம் பகுதி கொத்துலாந்துத் திருச்சபையையே உதாரணமாகக் குறிக்கும். முதற்பகுதியைக் கொத்துலாந்தர் ஒருவிதமாகவும் ஆங்கிலர் வேறொருவிதமாகவும் விளக்கினர்.

மதத்தைச் சேர்ந்தபடியால் அவர்களே அரச கட்சிப் படையினர் வெறுத்தனர். அதனால் அரசனின் ஆதரவாளர் பலரை அவன் இழக்க நேர்ந்தது[1]. கிழக்குச் சங்கத்தவர் படையென ஒன்று தற்பாதுகாப்புக்காகக் கிழக்குப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாற் கூட்டப்பட்டது. இப்படை தன் சொந்த ஊரை விட்டுக் இளம்பி மாஞ்செத்தர் பிரபு தலைமையில் யுத்தத்தில் மும்முரமாக ஈடுபட ஆயத்தஞ் செய்தது. மார்ச்சு மாதத்திலே ஒபுதன் தோற்கடிக்கப்பட்டான். சசெட்சு, கெந்து ஆகிய இடங்களே அரச கட்சியினர் கைப்பற்றும் நம்பிக்கை அவ்வளவில் முடிந்தது.

மாசுற்றன்மூர்க்களம் (யூலை 1644)

1644 ஆம் ஆண்டு யூலை மாதத்திலே அரசக் கட்சிக்கு மாசுற்றன் மூர்க்களத்திற் பெரிய தோல்வியுண்டானது. கொத்துலாந்தியரும் பெயர் பாக்குசும் மாஞ்செத்தருமாக யோக்கு நகரில் நியூக்காசிலே முற்றுகையிட்டனர். அம்முற்றுகையை உருப்பேட்டு விலக்கினான். பின்னர் அரசப்படைகளெல்லாம் ஒன்றுகூடி, எதிர்த்துப் பாராளுமன்றக் கட்சியுடன் பெரியதொரு சண்டை நடத்தின. இது மாசுற்றன்மூர்க் களத்தில் நடந்தது. இங்கே பெருந்தொகைவீரர் சண்டை செய்ததால் இப்போர் முக்கியம் வாய்ந்தது. அரச கட்சியில் பதினேழாயிரம் வீரரும் பாராளுமன்றக் கட்சியில் இருபத்து மூவாயிரம் வீரரும் சண்டையிட்டனர். இங்கேதான் உருப்பேட்டு அரசகுமாரன் தன்னோடு ஒத்த எதிரிகளைச் சந்திக்க நேர்ந்தது. அதனாலும் இச்சண்டை முக்கியமானதே. அந்திந்தன்சயரைச் சேர்ந்த ஒலிவர் குரம்வெல் என்ற துரைமகன் கிழக்குச் சங்கத்துக்காக ஒரு குதிரைப் படையைப் பயிற்றினான். இப்படையிலுள்ளவர்கள் "சமய பத்தியுடையவர்க" ளென்றும் அரச கட்சியிலுள்ள கௌரவம் மிக்கவர்களோடு சரிநிகராக நின்று அவர்கள் சண்டை செய்யக்கூடியவர்களென்றும் அவன் கூறினான். உருப்பேட்டு இளவரசனைப்போலவே குரம்வெலும் தனது குதிரைப்படையைக் கொண்டு கடுமையாகத் தாக்கச் செய்யுந் திறமைவாந்தவன். ஆனால், உருப்பேட்டு இளவரசன் தன் படையை அடக்கி வைத்திருக்கத் தெரியாதவன். குரம்வெல் அவ்வாறு அடக்கிவைத்திருந்து மற்றொரு தாக்குதலுக்கு அவர்களை அனுப்பும் திறமை வாய்ந்தவன். மாலை ஏழு மணிக்குக் குரம்வெல் தாக்குதலைத் தொடங்கினான். கொத்துலாந்துக் குதிரைப் படையின் துணையோடு குரம்வெல் உருப்பேட்டின் குதிரைப்படையை முறியடித்துவிட்டு மற்றப் பக்கத்திலே வெற்றி யீட்டிக்கொண்டு நின்ற அரசக் கட்சியின் குதிரைப் படையையும் வென்



உள்நாட்டுப் போர்.

[1] அயலந்துப் புரட்சிக்காரரை ஆங்கிலேயர் பெரிதும் வெறுத்தனர். 1857 இல் நடந்த கலகத்தில் ஈடுபட்ட சிப்பாய்களே இங்கிலாந்தில் அதே காலத்தில் நடந்த ஒரு கலகத்தை அடக்கப் பயன்படுத்தினால் ஆங்கிலேயர் எவ்வாறு வெறுப்பார்களோ அத்தகைய வெறுப்பு ஆங்கிலேயரிடையிலும் அயலந்துப் படைகளுக்கெதிராயுண்டானதெனக் கூறப்பட்டது பொருந்தும்.

ந்துவந்து கலைத்துவிட்டான்[1]. இதற்கிடையில் நடுவில் நின்ற கொத்துலாந்துக் காலாட்படையை எதிரி நெருக்கினான். குரம்வெல் அநாயாசமாக அவர்களுக்கு உதவி செய்ய வந்து, நியூக்காசிலின் "வெள்ளைக்கவச"க் காலாட்படைகளை நிர்மூலமாக்கினான். சண்டையில் குரம்வெல் வெற்றி பெற்றான். அவன் பக்கத்திலே தலைமைதாங்கிய முக்கியமான மூன்று தளபதிகளும் ஒருகாலத்தில் களத்திலிருந்து புறங்காட்டி ஓடினவர்களே. இந்த யுத்தத்தின் பயனாக நியூக்காசில் வேறு இடத்துக்குப் பின் வாங்கினான். வடக்கே அரசன் கையிலிருந்த ஆறு குதிச்சகளை அவன் இழக்க நேரிட்டது[2].

பாராளுமன்றத்தவரின் குறைபாடுகள் : இரண்டாம் நியூபெரிச்சண்டை (1644)

இந்த வெற்றி கிடைத்தபோதிலும் பாராளுமன்றக் கட்சி முன்னேறவில்லை. ஒகத்து மாத முடிவில் கோண்வாலிலுள்ள உலசுவிதியல் களத்திற் சாள்சு எசெட்சின் படையைச் சூழ்ந்தான். எசெட்சு கடல் மார்க்கமாகத் தப்பினான். அவனுடைய குதிரை எதிரியின் சைனியத்துக் கூடாக ஓடிற்று. எசெட்சின் காலாட்படை அடிபணிந்தது. ஒற்றேபரிற் சாள்சு திரும்பும் பொழுது நியூபெரியில் அவனுடைய படையை மாஞ்செத்தரும் எசெட்சும் தலைமைதாங்கிய படை எதிர்த்தது. இந்தச் சண்டையிலும் ஒரு பக்கமும் வெற்றியீட்டவில்லை. மாஞ்செத்தரின் ஊக்கக் குறைவால் சாள்சு ஒட்சுபோட்டுக்குத் தப்பியோடினான்.

தன்னெறுப்புக் கட்டளைச் சட்டமும் புது மாதிரிப் படையும்

இரண்டாவது நியூபெரி யுத்தத்தின் போக்கைப் பார்த்த குரம்வெலும் அவனுடைய கட்சியினரும் "அரைகுறைத் திட்டக்" காரர் மீதும் உற்சாகமற்றவர் மீதும் நம்பிக்கையிழந்தனர். இதன்பயனாகப் பாராளுமன்றத்திலே தன்னெறுப்புக் கட்டளைச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதன்பிரகாரம் படையிலே பதவி வகிக்கும் பாராளுமன்ற அங்கத்தவர் தமது பதவிகளைக் கைவிடவேண்டியதாயிற்று. மாஞ்செத்தரும் எசெட்சும் ஒய்வு

[1]அன்று சண்டை நடவாதென அரசகட்சியினர் எண்ணினர். நியூக்காசில் தனது இரதத்துக்குப் போய் அங்கே சுங்காவிற் புகையிழுத்துக்கொண்டு அந்த நாள் வேலைமுடிந்ததென ஆறுதலாயிருந்தான்.

[2]சண்டையைப்பற்றிக் குரம்வெல் கூறிய விபரம் பின்வருமாறு : "நாம் எதிரியைத் தாக்கவில்லை. அவர்களே நிர்மூலமாக்கினோம். இடது சாரிப்படை எனது தலைமையிலிருந்தது. அதில், பின்னால் நின்ற சில கொத்துலாந்தரை விட மற்றவீரர் எல்லாரும் நம்மவரே. இப் படை இளவரசனின் குதிரைப்படைகளைத் தாக்கிற்று. ஆண்டவனருளால் அவ்வீரர் நமது வாளுக்கிரையானார். அவர்களுடைய காலாட்படையையும் தாக்கி எல்லாவற்றையும் நீர் மூலமாக்கினோம்."

பெற்றனர். அவ்வாறே குரம்வெலும் தனது பதவியினின்றும் விலகினான். ஆனால், அவன் மறுபடியும் நியமனஞ் செய்யப்பட்டான். பாராளுமன்றம் இதன்பயனாகத் தனது எண்ணத்தை நிறைவேற்றியது. புதிய மாதிரிப் படையொன்று அமைக்கப்பட்டது. இதிற் போதிய உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டார்கள்[1]. படைக்கு ஒழுங்காகச் சம்பளம் கொடுக்கப்பட்டது. குதிரைப் படையும் பீரங்கிப் படையும் போதிய அளவு இருந்தன. உள்ளூர்ச் சார்பில்லாததாய் எங்கேயும் சென்று என்ன வேலையுஞ் செய்யும் திறமை பெற்றிருந்தது. இப்படைக்கு பெயர்பாக்குசு[2] சேனைத் தலைவனாக நியமிக்கப்பட்டான். இவனுக்கு எல்லாவதிகாரமும் வழங்கப்பட்டது. பாராளுமன்றம் இவனுடைய வேலைகளிற் றலையிடவில்லை.

நேசுபி யுத்தம் (யூன் 1645) : கொத்துலாந்தில் மொன்ரேசின் வெற்றிகள் (செத்தெம்பர் 1644—ஒகத்து 1645)

புது மாதிரிப் படையின் பலன் 1645 இல் நேசுபி யுத்தத்தில் (யூன் மாதம்) விளங்கிற்று. உரூப்பேட்டு தனக்கு எதிரேயுள்ள படைகளை முறியடித்தது உண்மையே. ஆனால், வெகுதூரம் எதிரியைத் துரத்தினான். மற்றைப் பக்கத்திலே குரம்வெல் வெற்றிபெற்றான். தனது குதிரைப் படையைப் புதிதாக வியூகம் வகுத்து மாசுற்றன்மூர்க் களத்துச் சண்டையிற் காலாட்படையைத் தாக்கினான். திரும்பிவந்துகொண்டிருந்த உரூப்பேட்டின் குதிரைப் படையை மறுபடியும் குரம்வெல் தாக்கினான். வெற்றி அவனுக்குக் கிட்டிற்று. அது நிடமான வெற்றி. இச்சண்டையிற் சாள்சு தனது குதிரைப் படையிற் பாதியையும் காலாட்படை முழுவதையும் பீரங்கிப் படையையும் சிறந்த உத்தியோகத்தர் பலரையுமிழந்தான். அவன் அயல்நாட்டரசுகளுக்கு எழுதிய கடிதங்கள் கொண்ட பேழையையும் பாராளுமன்றக் கட்சி கைப்பற்றியது. அக்கடிதங்களிலிருந்து அவன் பிற நாடுகளோடு செய்த சூழ்ச்சி வெளியாயிற்று. அரச கட்சியைச் சேர்ந்த சரித்திராசிரியரான கிளாரண்டன் என்பவர் எழுதும்பொழுது "நேசுபி யுத்தத்திலே அரசனையுமிழந்தோம், இராச்சியத்தையுமிழந்தோம்" எனக் குறிப்பிட்டார். நேசுபிச் சண்டையின் பின்னர் யுத்தம் முடிவிற்கு வந்தது. தென்மேற்கிலே இலாங்குபோட்டுக் களத்திற் பெயர்பாக்குசு வெற்றி பெற்றான். செத்தெம்பரிற் பெயர்பாக்குசு பிறித்தல் நகரைத் திரும்பப்

[1]இந்த உத்தியோகத்தர் நற்குடிமக்களல்லரெனக் கூறப்பட்டது தவறு. 37 உத்தியோகத்தரில் 30 பேர் நல்ல குடிப்பிறப்புடையவர்கள்.

[2]பெயர்பாக்குசு தைரியம் நிறைந்தவன். உற்சாகமான சேனாபதி. ஒழுக்கவிடயங்களிற் கண்டிப்பானவன். எதிரிக்கும் உதார குணங் காட்டுபவன். கல்வி நிரம்பியவன். 1646 இல் ஒட்சுபோட்டைக் கைப்பற்றியதும் அவன் உடனே அங்குள்ள பிரித்தானியப் பொட்டிலியன் நூல் நிலையத்தைக் காப்பாற்றப் பலம்பொருந்திய காவற்படையை முதலில் அனுப்பிவிட்டே மறுவிடயங்களைக் கவனித்தான்.

பிடித்துக்கொண்டான். இதற்கிடையிற் கொத்துலாந்திலே அரசனுடைய நட்டங்களை ஈடுசெய்வதற்கான சிறந்த முயற்சியொன்று நடைபெற்றது. 1644 இல் நடந்த மாசுற்றன்மூர்ச் சண்டையின் பின், இரண்டு மாதங்கழித்து மொன்ரோசு மாக்குவிசு என்ற கொத்துலாந்துப் பிரபு ஒருவன் (இவன் பெரிய மாக்குவிசு எனவு வழங்கப்படுவன்) சார்ளசு மன்னன் சார்பாக ஒரு படையெழுச்சியைத் தொடங்கினன். இவன் நாட்டின ஏற்பாட்டில் 1638 இல் கையொப்பமிட்டவன். ஏற்பாட்டினருக்காகச் சண்டையுஞ் செய்தவன். ஆனால், அரசுக்குத்தான் எப்பொழுதும் விசுவாசமுள்ளவனென்பதை இவன் தெரியப்படுத்திவந்தான். ஏற்பாட்டினர் பாராளுமன்றக் கட்சியைச் சேர்ந்தமை அரசனுக்குத் துரோகஞ் செய்தமையாகுமென இவன் எண்ணி, இராசவிசுவாசமும் கௌரவமுமுள்ள ஒரு மனிதனுக்குச் செய்யக்கூடியது ஒன்றேயொன்றுதானென்றும் அது அரசனுக்குப் படைத்துணை செய்வதென்றும் கூறினன். 4000 காலாட்படைஞரும் 200 குதிரை வீரருங் கொண்ட ஒரு படையைக் கொண்டு 12 மாதங்களில் ஆறு சண்டைகளில் வெற்றியீட்டினன். இவனிடத்து நீரந்தரப் படையாக அயலந்திலிருந்து வந்த 1600 வீரரிருந்தனர். இவர்களிற் பலர் அயலந்துச் சண்டையில் போர்புரிந்த கொத்துலாந்து வீரராவர். உள்ளூர்ப் பெருங்குடிமக்களுடைய உதவியும் இவனுக்குக் கிடைத்தது.

1644 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் முதலாந் திகதி பேதுநகருக்கு அண்மையிலுள்ள திப்பர்மூர்க் களத்தில் முதல் வெற்றி கிடைத்தது. புதிதாகக் கூட்டப்பட்ட ஒரு படையின் மீது வேகமாகத் தாக்கியதால் இவ்வெற்றி கிட்டிற்று[1]. அபதீனிலும் வெற்றி கிடைத்தது. ஆனால், வெற்றிபெற்ற படைகள் நகரிற் பெருங்குழப்பஞ் செய்தன. பின்னர் மொன்ரோசு ஆகைலை நோக்கிச் சென்றான். கம்பெல் வகுப்பினரின் விரோதிகளான மகுடொனல் வகுப்பினர் அவனை ஆதரித்தனர். கம்பெல் வகுப்பினர் வதியும் நாட்டில் இப்படை சென்று இன்வலொக்கி என்ற இடத்திலே வெற்றி பெற்றது[2]. இச்சண்டையில் இரண்டு மடங்கு எதிரி பலமிருந்தது. பின்னரும் இரு வெற்றிகளீட்டினன். கடைசியாக இளாசுக்கோவுக்கு அண்மையிலுள்ள கிலிசித்துக்களத்திலே ஒகத்து மாதம் 15 ஆம் தேதி நடந்த யுத்தத்தில் வெற்றி கிடைத்தது. எதிரி செய்த தவறுகள் இங்கே மிக அதிகமானபடியால் எதிரிக்கு இத்தோல்வியேற்படாதிருக்கக் காரணமில்லையெனவுஞ் சுட்டிக்காட்டப்பட்டது.

[1]யுத்தத்தின் பின்னர் ஓடிய ஒட்டத்தில் பேது நகரத்தைச் சோந்த பத்துக்குடிமக்கள் " வயிறு வெடிக்க ஓடினர் " எனக் கூறப்பட்டது.

[2]ஆகைல் யுத்தம் நடக்கும்பொழுது ஒரு வள்ளத்திலே எரியில் இருந்தான். மூன்று வாரத்துக்கு முன் அவன் தோள்மூட்டிற் குழைச்ச விலிங்கு காய மடைந்தமையே இதற்குக் காரணமாகலாம். ஆனால், அவனுடைய எதிரிகள் அதற்கு வேறு விளக்கங் கொடுத்தனர்.

மொன்ரோசின் தோல்வி (செத்தெம்பர் 1645)

கிலிசித்து யுத்தத்தின்பின்னர் இளாசுக்கோ அடிபணிந்தது. கொத்துலாந்து முழுவதும் அரசனுக்கு அடிபணிந்து விடுமெனத் தோற்றியது. 20,000 வீரருடன் எல்லையைத் தாண்டி முன்னேறவும் மொன்ரோசு திட்டமிட்டான். ஆனால், அவன் வெற்றிபெற்ற காலமெல்லாம் மறைந்தன. அவனுக்குத் துணைபுரிந்த மகுடொனல் குழுவினர் அவனைக் கைவிட்டுவிட்டுத் தமது விரோதிகளான கம்பெல் கூட்டத்தவருடன் சண்டையிடப் போய்விட்டனர். கோடன் கூட்டத்தவர் சொந்தக் கோபங்காரணமாக மொன்ரோசைக் கைவிட்டனர். மொன்ரோசு இப்பொழுது தாழ்நிலத்திலிருந்தான். அங்கேயும் அவனுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. பொதுமன்றம் அவனை மதவிலக்கஞ் செய்துவிட்டது. அவனுக்கு உதவிபுரிந்த அயலந்துப் படை " சைத்தானின் கருவிகள் " என வருணிக்கப்பட்டது. கிலிசித்திற் கிடைத்த கடைசி வெற்றிக்கு இரண்டு மாதத்துக்கு முன்னர் நேசுபியில் அரச கட்சிக்குக் கிடைத்த படுதோல்வியினால் மொன்ரோசுக்கு ஆபத்துண்டானது. இங்கிலாந்திலுள்ள கொத்துலாந்துப் படைகள் நேசுபி வெற்றியின் பின்னர் மொன்ரோசுக் கெதிராக யுத்தஞ் செய்யக் கிளம்பின. அவை அந்நோக்கத்துடன் வடக்குநோக்கி வந்தன. 1645 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் செல்கேக்குக்கு அணித்தாயுள்ள பிலிப்போ என்ற இடத்தில் மொன்ரோசின் படைகள் முறியடிக்கப்பட்டன. சண்டையின் பின் மொன்ரோசு, அரசன் கட்டளைப்படி ஐரோப்பாக் கண்டத்துக்குச் சென்றுவிட்டான். உண்ணுட்டுப்போர் கொத்துலாந்திலும் இங்கிலாந்திலும் ஒரு முடிவுக்கு வந்தது[1]. 1646 ஆம் ஆண்டு மே மாதத்திற் சார்ளசு மன்னன் கொத்துலாந்துப் படையிடம் சரணாகதியடைந்தான். யூன் மாதத்திலே ஒட்சுபோட்டு நகரும் அடிபணிந்தது.

[1]நீண்ட தனது குஞ்சியைக் கொய்து தாடியை மாற்றிக்கொண்டு ஒட்சுபோட்டு நகரைவிட்டு அரோவுக்குப் புறப்பட்டான். அங்கிருந்து இலண்டனைப் பார்வையிட்டான். பின்னர் சுற்றுப்பாதை மொன்றினூற் சென்று நொற்றிங்கம் சயரிலுள்ள கொத்துலாந்துப் படையை அடைந்தான்.

13 ஆம் அதிகாரம்

பொதுநலவாயமும் (1649–1653) புரப்பகமும் (1653–1659)

1 உண்ணாட்டு அலுவல்கள்

போரின்பின்னர் கட்சிகளின் நிலை : அரசன்

இப்பெரிய உண்ணாட்டுப்போர் முடிந்தது. ஆனால், பெரிய பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டியிருந்தன. இங்கிலாந்தை வருங்காலத்திலே எவ்வாறு ஆட்சி செய்வது? அரசாங்கம் இறித்து சமயப் பிரிவுகளில் எந்தச் சமயத்தைத் தனது சமயமாக அனுசரிக்க வேண்டும்? அதனோடு சம்மதியாதவர்களுக்கு எவ்வளவு தூரம் சகிப்புத்தன்மை காட்டவேண்டும்? இவை சிக்கலான பிரச்சினைகளே; தீர்க்கச் சங்கடமானவையே. தீர்த்து வைப்பதிற் பல கட்சிகள் தாமும் பங்கெடுக்கவேண்டுமென்று முன் வந்ததாற் பிரச்சினை மேலும் சிக்கலாயிற்று. **முதலிற்** கருதவேண்டியவன் **சார்ள்சுமன்னன்**; அவனுடைய கட்சி தோல்வியுற்றது. ஆனால், முடியாட்சியை ஒழிக்கவேண்டுமென்று ஆதியில் எவரும் விரும்பவில்லை. அவன் என்னவிதமாக நடக்கவேண்டுமென்று விரும்பப்பட்டானே, அவ்வாறே அவன் நடந்தான். ஆங்கிலத் திருச்சபையையோ, விசுப்பாண்டவரையோ கைவிட அவன் விரும்பவில்லை. அமைச்சர் மீதும் சைனியத்தின் மீதும் தனக்கிருக்கும் அதிகாரத்தைக் கைவிடவும் அவன் விரும்பவில்லை. பெருமையும் அகங்காரமும் பெருந்தன்மையும் அவனை அல்வாறு செய்ய விடவில்லையெனினும், அது போலி நிலையே. அந்த வேடத்தைக் கலைந்து உண்மையைக் கூறுவதற்குரிய பெருந்தன்மை அவனிடமிருக்கவில்லை. தனக்கு எதிரிகளாயுள்ளவர்களையே ஒருவருக்குமாறுக மற்றவரைத் தூண்டிவிட்டான்; ஒவ்வொரு கட்சியுடனும் மாறி மாறியோ, ஒரே நேரத்திலோ சூழ்ச்சி செய்தான். அயலந்திலுள்ள கத்தோலிக்கருடனும் பிரான்சிலுள்ள பெரிய அமைச்சனை மசரினுடனும் சூழ்ச்சி செய்தான்.

கொத்துலாந்துப் படையும் பாராளுமன்றமும்

இரண்டாவதாக கொத்துலாந்துப் படை. "திடசங்கமும் எற்பாடும்" எனுமிவற்றின் பிரகாரம் இங்கிலாந்திலே பிரெசுபித்திரிய மதத்தை நிரந்தரமாகத் தாபித்துவிடுவதாய்ப் பாராளுமன்றம் வாக்களித்திருந்தபடியால், அதை நிறைவேற்றவேண்டுமென்றும் மனச்சாட்சிக்கு அதுவே உகந்ததென்றும் எண்ணிற்று. **மூன்றுவதாக, நெடிய பாராளுமன்றம்**; அதிலிருந்த அங்கத்தவரில் அரசகட்சியைச் சேர்ந்த 175 பேர் உண்ணாட்டுப் போரில் அரசனுக்குத் துணைபுரியச் சென்றவர்கள் திரும்பவில்லை. எஞ்சியவர்களிற் பெரும்பாலானோர் சார்ள்சு அரசனுயிருக்க வேண்டுமென்றும், ஆட்சி அவன் கையிலிருக்கக்கூடாதென்றும் எண்ணினர். ஆனால், புது மாதிரிப் படையையிட்டு அவர்கள் அச்சங்கொண்டனர். சமய விடயத்திலே இப்பாராளுமன்றம் இங்கிலந்து முழுவதிலும் பிரெசுபித்திரிய மதத்தைத் தாபிக்கவேண்டுமென்று நினைத்தது. அதற்காகக் கொத்துலாந்து ஆணையாளரின் உதவியொடும் உவெசுமினித்தர் குருசிரேட்டர் மன்றத்தின் உதவியொடுஞ் சில நடவடிக்கைகளையுமெடுத்தது. அதனால், பிரெசுபித்திரியத்தைத் தாபிக்கப்பட்ட மதமாக்கவுமுனைந்தது.

தீவிரவாதிகளும் புது மாதிரிப் படையும்

நாலாவதாகத் தீவிரவாதிகள் கூட்டம் பல, மெதுவாகத் தலைகாட்டத் தொடங்கின. பெரிய இயக்கங்களிலெல்லாம் இவ்வாறு தீவிர வாதிகள் தோற்றுவது இயல்பே. இத் தீவிரவாதிகளிற் குடியாட்சி வாதிகள் ஓர் இனம். இவர்கள் பாராளுமன்றம் வருடாவருடம் கூட வேண்டுமென்றும், சருவசன வாக்குரிமை வேண்டுமென்றும் விழைந்தனர். மற்றோர் இனம் சமநிலை வாதிகள். மக்களெல்லாரும் சமநிலை உயையராயிருக்க வேண்டுமென இவர்கள் கூறினர். இலட்சிய வாதிகள் விவிலிய வேதத்திலே கூறிய ஐந்தாம் முடியாட்சி[1] தமது அருளாட்சியில் வந்தெய்தப் போகிறதென வாதித்தனர். எல்லாவற்றுக்கும் மேலாகப் புதுமாதிரிப் படையிருந்தது. இதிற் சுயேச்சையாளர் பெரும்பாலோராயிருந்தனர். இவர்கள் எத்தகைய மதம் தாபிக்கப்படவேண்டுமென்பதைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. "மனச்சாட்சிப்படி" சமயமனுட்டிக்க விரும்புவோருக்குச் சகிப்புக் காட்டவேண்டுமென்றும், ஆங்கிலத் திருச்சபை மேற்றிராணிமாரோ, பிரெசுபித்தியரோ மட்டற்ற அதிகாரஞ் செலுத்தக்கூடாதென்றும் விரும்பினர். இப்படையிலே நாற்பதாயிரம் - ஐம்பதாயிரம் வீரரிருந்தனர். இவர்கள் நன்முகப் பயிற்சி பெற்றவர்கள். போதிய உத்தியோகத்தர் இப்படையிலிருந்தனர். அதுசிறந்த கட்டுப்பாடுடைய படையாயிருந்தது. அரசியலிலே தலையிட இப்படை விரும்பினால் அதை எவரும் தடுக்க முடியாது[2]. மேலும், அப்படையின் தலைவனை ஒலிவர் குரம்வெல் அக் காலத்து மக்களிலே தலைசிறந்தவனுயிருந்தான்.

ஒலிவர் குரம்வெல்

குரம்வெல் 1559 இல் அந்திந்தன் என்ற ஊரில் நல்ல குடியிற் பிறந்தான். 29 ஆவது வயதிலே பாராளுமன்ற அங்கத்தவனானான். 1642 இலே அவன் 43 வயதினனுயிருக்கும்பொழுது அவனுடைய இராணுவ வாழ்

[1] தானியெலின் தீர்க்கதரிசனத்திலே குறிக்கப்பட்ட கவடிசிப் பெரும்முடியாட்சி (தானியெல் 44).

[2] இப்படையின் கட்டுப்பாட்டுக்கு விரோதிகளும் நன்பரும் சான்றுபகர்வர். விதிக்கப்படும் தண்டனைகளோ கொடுமையானவை. தெய்வ நிந்தை செய்தாலோ, திட்டினாலோ போர்வீரரின் நாக்கு பழுக்கக்காய்ச்சிய இரும்புக்கோலால்துளைக்கப் படுதலுண்டு.

க்கை ஆரம்பமாயிற்று. 52 வயதில் அது முடிவடைந்தது. உள்நாட்டு யுத்தத்திலே குதிரைப் படையில் அவன் பெரும் புகழ் பெற்றான். உருப்பேட்டு அரச குமாரனின் குதிரைப் படைக்கு ஒப்பானதொரு படையை உருவாக்கிப் பயிற்றிய பெருமை முக்கியமாக அவனுக்கே உரியது. எதிரிப் படையைத் தாக்குவதற்குமுன் சுடுவது உருப்பேட்டின் யுத்தமுறை. குதிரைச் சண்டையிற் குரம்வெல் அத்தகைய தந்திரத்தைக் கைக் கொள்ளவில்லை. குதிரைகளை வேகமாக ஒட்டிச்செல்வதே உருப்பேட்டின் முறை. குரம்வெல் இதை அனுசரிக்கவில்லை. ஒன்றுதிரண்டு உக்கிரமாகத் தாக்குவதையே குரம்வெல் விரும்பினான்[1]. உள்நாட்டு யுத்தத்திலும் பின்னர் உண்டான போர்களிலும் குரம்வெல் பெரிய தந்திரசாலியெனக் காட்டிக் கொள்ளாவிட்டாலும், யுத்தத்தில் நெருக்கடியான கட்டங்களை உணர்ந்து அவைக்கேற்ற நடவடிக்கையெடுப்பதிலும், வெற்றி கிட்டியதும் அதைத் தொடர்ந்து நடவடிக்கையெடுப்பதிலும் மிகுந்த நிபுணனாயிருந்தான்.

அரசியலில் இதுவரை அவன் அதிகம் ஈடுபடவில்லை. நெடிய பாராளுமன்ற அங்கத்தவனென்ற முறையிற் சமய விடயங்களில் அவன் அக்கறை காட்டினான். தீவிரமான கட்சி வாதியாயிருந்தான். பெரும் மன்னருட்டு நிறைவேறியிராவிட்டால் அடுத்த நாட் காலையிலேயே எனது உடைமையெல்லாவற்றையும் விற்றுக்கொண்டு வெளியேறியிருப்பேன். பின்னர் இங்கிலாந்துக்குத் திரும்பியிருக்க மாட்டேன்" என்று கூறினான். உள்நாட்டு யுத்தம் முடிந்த பின்னர் அவன் சிறப்பாக அரசனோடும் பாராளுமன்றத்தோடும் வைத்துக் கொண்ட தொடர்புகளிலும் மற்றை விடயங்களிலும் தீர்மானஞ் செய்வதில் தாமதமும் தயக்கமுங் காட்டினான். ஒரு கால் முடிவாகத் தீர்மானிக்கப்பட்ட விடயத்தை அவன் விரைந்து விரைந்து செய்து முடிப்பான். "விரைவாகவும் தைரியமாகவும் சம்மட்டியால் அடிப்பதுபோல்" அனுவலை முற்றுவிப்பான்.

ஒரு காலத்திலே குரம்வெல் பாசாங்குக் காரனென்றும் அரை மடையனென்றும் அரைவெறியனென்றும் கூறப்பட்டான். ஆனால் அக்காலம் மலையேறிவிட்டது. குரம்வெல் நிரம்பிய சமய பத்தியுடையவன். தன் செயலெல்லாம் கடவுள் செயலென்று நினைப்பவன். காரிய பூர்வமான சாதாரணப் பகுத்தறிவு நிரம்பியவன். "கடவுளில் நம்பிக்கைகொண்டு உங்கள் துப்பாக்கி மருந்தை ஆயத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்" என்பதே அவன் தனது போர்வீரருக்குச் சொன்ன புத்திமதியாகும். இந்தப் புத்திமதியிலிருந்து குரம்வெல்லின் இரட்டைக்

[1]குரம்வெல்லின் குதிரைப் படை துள்ளிப்பாய்வதில்லை. நெருக்கமாக, மெதுவாய்ச் சென்று தாக்கும். "அழகான மெல்லிய வட்டக்கெச்சை நடை" என்று குரம்வெல் இதை வருணித்தான்.

குணசுபாவம் தெரியவரும். அவனுடைய பேச்சு ஓரளவு கருகலானதாகவும் சில சமயம் மயங்கவைக்குந் தன்மையுடையதாகவுமிருக்கும். ஆனால், அவனிடம் தலையாய ஊக்கமும் இலட்சியங்களிலிருந்து வழுவாத தன்மையுமுண்டு. உரோமன் கத்தோலிக்கர் மாட்டு அவன் வெறுப்புடையவனேனும், ஆங்கிலத்திருச்சபை விசுப்பாண்டவரை ஆதரிப்போரிடம் அவன் சகிப்புக் காட்டியது கிடையாது. எனினும் உதாரகுணமுடையவனாயிருந்தான். அவன் காட்டிய சகிப்புத் தன்மை இக்காலத்துக்குப் போதியதாகக் காணப்படாவிட்டாலும் அக்காலத்துக்கு அது மிகுந்த தாராளமுடையதாகவே காணப்பட்டது. அவன் சருவ அதிகாரமுமுடையவனாயிருந்த காலத்தில், விரும்பத்தகாத களியாட்டங்களுக்கு முற்றுப்புள்ளியிட்டு, இங்கிலாந்தில் மக்கள் வாழ்வைப் பயபத்தியுடையதாக்கியது உண்மையானாலும், களியாட்டங்களெல்லாவற்றையும் அவன் தடைசெய்ததில்லை. அவன் சங்கீதத்திலும் கவிதை எழுதுவதிலும் விருப்புடையவனாயிருந்தான். நல்ல குதிரைகளிடத்து விருப்புடையவனாயும் திறமை மிக்க குதிரை வீரனாயுமிருந்ததுடன் தைரியமாகப் பாயும்சாமர்த்தியமும் பெற்றிருந்தான்[1].

யுத்தத்தினாலுண்டான பண நெருக்கடியைத் தீர்ப்பதற்காக அரசனுடைய சித்திரக் களஞ்சியத்தை விற்குமாறு பாராளுமன்றம் கட்டளையிட்ட போதிலும் குரம்வெல் தலையிட்டுச் சில சித்திரங்களை விற்காமற்றடை செய்தான். அமிற்றன் கோட்டினுள்ள புகழ்பெற்ற மந்தெனுசு ஓவியம் இவ்வாறுதான் காப்பாற்றப்பட்டது.

1646–60 வரையான காலம்

உள்நாட்டு யுத்தத்தையடுத்துவந்த 14 வருடங்களின் சரித்திரத்தைச் சுருக்கமாகக் கூறுவாம். புது மாதிரிப்படை அரசியலிற்றலையிட்டுக் கடைசியாகச் சருவாதிகாரமும் பெற்றது. அதற்குக் குரம்வெல் தலைவனானான். பின்னர் ஆங்கில மக்களின் சம்மதத்தின் அடிப்படையிலே பாராளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டு அதிகாரம் வகிக்க அது திட்டமிட்டது. ஆனால், இதில் அது தோற்கவே, இராணுவச் சருவாதிகார ஆட்சி இங்கிலாந்தில் நிலவிற்று. ஆனால், படிப்படியாக விபரங்களை ஆராய்தல் நன்று.

[1]அவன் புரவலனாயிருந்த காலத்திலே ஐட்டுப் பாகிலே ஆறு குதிரைகளைக்கொண்ட ஒரு பந்தி அவன் கட்டுக்கு அடங்காது ஓடிற்று. அதை அவனுடைய எதிரிகள் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். அன்றியும் பல அங்கதப் பாட்டுக்களுமெழுதினர்.

2 அரசன் சிரச்சேதம் (1646–1649)

முதற்பருவம் : யூன் 1646–சனவரி 1649 : (அ) சார்சும் கொத்துலாந்தரும்

இப்பதினான்கு வருடத்திலே ஒட்சுபோட்டு நகர் வீழ்ச்சியடைந்த காலந் தொட்டு அரசன் சிரச்சேதஞ் செய்யப்பட்ட காலம் வரையுள்ள இரண்டரை வருடத்தை (1646 யூன்–1649 சனவரி) முதலில் முதற் பருவமாக ஆராய் வாம். இது இணக்கப் பேச்சுக்களும் அரசியற் சூழ்ச்சிகளும் நிறைந்த காலம். இவற்றின் சுருக்கத்தை எடுத்துக்காட்டுவது போதுமானதே. அர சன், நியூக்காசிலுக்குச் சென்று கொத்துலாந்துச் சைனியத்துடனிருந்தான். திடசங்கமும் எற்பாடும் என்ற திட்டத்தை அங்கீகரிக்குமாறு கொத்துலாந்தர் அரசனை நெருக்கினர். அதற்கு அவன் மறுத்தான். அரசனுடைய அதி காரமெல்லாவற்றையும் அகற்றிவிடக்கூடிய பாராளுமன்றத்தின் நிபந்தனை களையும் அவன் நிராகரித்தான். அதனால், கொத்துலாந்துப்படை அவனைத் தங்கள் தேசத்துக்குக் கூட்டிச்செல்ல முடியாதிருந்தது. பாராளுமன்றம் அப்படையின் செலவுக்கு 4,00,000 பவுண் கொடுப்பதாக வாக்களிக்கவே அரசனை அதனிடம் ஒப்படைத்துவிட்டுத் துலீட்டு நிதியைக் கடந்து தன் தேசம் சென்றது[1] (பெப்புருவரி 1627).

(ஆ) பாராளுமன்றமும் சைனியமும் : சைனியம் அரசனைப் பிடித்தல்

அடுத்ததாகப் பாராளுமன்றம் சைனியத்துடன் பிணக்குற்றது. இதற் குக் காரணம் சமய விடயமும் பிறவுமாகும். பாராளுமன்றம் பிரெசு பித்திரிய சமயத்தை ஆதரித்தது. சைனியத்திலே பெரும்பாலும் சுயேச் சையாளர் இருந்தனர். இவர்கள் குருமாரின் ஆதிக்கத்தையும் குரு கிரேட்டரின் (பிரெசுபித்தர்) ஆதிக்கத்தையும் வெறுத்தனர். "மனச்சாட் சிக்கு" இடமளிக்க வேண்டுமென வாதாடினர். உண்ணாட்டு யுத்தமொழி ந்தபடியால் சைனியத்தை மூன்றிலொரு பங்காகக் குறைக்கப் பாராளு மன்றம் விரும்பிற்று. இது நியாயமானதே. எஞ்சிய சைனியத்தை அய லந்தில் நடக்கும் சண்டையை முடிப்பதற்கு அனுப்புவதாகவும் முடிவு செய்தது. மேலும், சைனியத்தின் பழைய அமைப்பை ஒழித்துவிடவும் திட்டமிட்டது. இதனாற் பாராளுமன்றம் சைனியத்துக்குப் பயந்துவிட்ட தென்பது வெளியாயிற்று. காலாட்படைக்கு 18 வாரச் சம்பளமும் குதி ரைப்படைக்கு 43 வாரச் சம்பளமும்கொடுக்கவேண்டியதாயிருக்கையில், ஆறு வாரச் சம்பளம் கொடுத்தாற் போதுமென அது தீர்மானித்தமை புத்தி

[1] "யூதாசு தனது தலைவனை விற்றதுபோலக் கொத்துலாந்துப்படையும் அரசனை விற்றுப் பணம் வாங்கிற்று. இது இரத்தக்காசு. அதற்கு நீங்கா வடு இதனாலுண்டானது" என்பர். ஆனால், அச்சைவியம் வேறென்ன செய்திருக்குமெனக்கூற முடியாது.

யில்லாத செய்கையாகும். இதைச் சைனியம் ஆட்சேபித்தது. "இளர்ச்சி யாளர்" (அதாவது முகவர்) என்ற வகையிற் சிலரைச் சைனியம் தெரிவுசெய்து, தனது குறைகளை வெளியரங்கப்படுத்தச் செய்தது. கடைசி யாக, கோனெற்று சொயிசு என்பவனும் சில படை வீரருமாக நோதந்தன் சயரிலுள்ள ஒம்பி அவுசில் வைத்து[1] அரசனைப் பிடித்து நியூ மாக்கெற்றிலுள்ள சேனைத் தலைமைக் காரியாலயத்துக்குக் கொண்டு சென் றனர். (யூன் 1647)[2]. இதற்கிடையிற் சைனியம் இலண்டனை நோக்கிச் சென்று தனக்கு விரோதமாயிருந்த பதினாறு அங்கத்தவரையும் உடனே பதவியை விட்டேகுமாறு கேட்டுக்கொண்டது. பாராளுமன்றத்துடன் சைனி யம் நேரடியாகத் தலையிட்டது இதுவே முதன்முறையாகும். இது கடைசி முறையுமன்று. குரம்வெல் சமாதானம் பேசினான். கடைசியில் அவ னும் சைனியத்துடன் சேர்ந்துகொண்டான்.

சார்சும் இணக்கப் பேச்சுக்களும் : (இ) சைனியமும் அரசனும்

பிற்காலத்திலாண்ட பிரெஞ்சு அரசனை பதினாறும் உலூயிபோலச் சார்சுக்கும் உடன்படிக்கை நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு அரசு ஒச்ச வாய்ப்பளிக்கப்பட்டது. முதலிற் சைனியம் அவனை அணுகித் தன் னுடன் இணக்கஞ் செய்துகொள்ளுமாறு வேண்டிற்று. இந் நிபந்தனைகள் குரம்வெல்லின் மருகனை அயற்றன் என்பவனால் வரையப்பட்டன. இந்நிபந்தனைகள் **பிரேரணைத் தலைப்புக்களென** வழங்கப்பட்டன. இவற்றின் பிரகாரம் குருபரிபாலனம் அரசாங்க மதமாகக் கொள்ளப்பட்டது. மற்றச் சமயத்தவர் சகிக்கப்பட்டனர். அயல் நாட்டு விடயங்களையும் இராணுவ விடயங்களையும் பரிபாலிப்பதற்கு ஓர் அரசுக் கழகம் நிறுவப்பட்டது. 100 வருடத்துக்கு அமைச்சரின் நியமனம் பாராளுமன்றத்தின்[3] கையில் விடப்பட்டது. அரசன் இந் நிபந்தனைகளை ஏற்க மறுத்தான். இது புத்தியீன மான செய்கையாகும்.

(ஈ) மறுபடியும் அரசனும் கொத்துலாந்தரும்

ஆனால், சார்சு கொத்துலாந்தரோடு சமாதானம் பேச விரும்பினான். இச்சிக்கலான சூழ்ச்சிகளில் இது புதியதொரு கட்டமாகும். அரசனுக்குச்

[1] ஒம்பியில் அரசனிருக்கையில், காவற்படைவீரனொருவனிற் குதிரைச்சவாரி செய்யும் அயல் வீடுகளிற் சென்று "குஸ்டு" லினையாடவும் அனுமதிக்கப்பட்டான்.

[2] சார்சு வந்திறங்கியதும் சொயிசைப் பார்த்து, "உன்னுடைய கட்டளை எங்கே"? யென்று கேட்டான். சோயிசு, படைவீரரைக் காட்டினான். "என் வாழ்க்கையில் இதுபோல் எழுதப் பட்ட கட்டளையை நான் காணவில்லை; இது மிக நல்ல கட்டளை" என்று சார்சு கூறினான்.

[3] தானங்கள் திருத்தியமைத்தற்கும் தேர்தல் முறையைச் சீர்திருத்தற்கும் ஒழுங்குசெய்யப் பட்டது. இது 1832 ஆம் ஆண்டுச் சீர்திருத்த முறியிற் காணப்பட்ட முறையை ஒத்திருந்தது.



உண்ணாட்டுப் போரின் போது இங்கிலாந்து மீது கொத்துலாந்தர் படையெடுப்பு.

சார்பாகக் கொத்துலாந்திலே, விசேடமாகப் பிரபுக்களிடம், ஒரு இளர்ச்சி உண்டானது. சுயேச்சையாளரின் வெற்றி கொத்துலாந்தருக்கு ஆத்திரத்தை யூட்டிற்று. இங்கிலாந்திலே பிரெசுபித்திரிய மதம் நிறுவப்படலாமென அவர்கள் அப்பொழுதும் எதிர்பார்த்தனர். கொத்துலாந்து ஆணையாளரின் ஆலோசனைப்படி. அரசன் 1647 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சிறையிலிருந்து தப்பியோடி. வைற்றுத் தீவிலுள்ள கரிசுப்புருக்குக் கோட்டையிற் சரண் புகுந்தான். ஆனால், அத்தீவின் ஆள்பதி சைனியத்துக்குச் சார்பானவனுயிருந்ததால், அரசனின் எண்ணம் நிறைவேறவில்லே. எனவே, அங்கேயும் அவன் கைதியாகவேயிருந்தான். ஆனால், அங்கிருந்தே அவன் கொத்துலாந்தரோடு தனது இணக்கப்பேச்சுக்களே நடத்தி வந்தான். 1647 ஆம் ஆண்டு நத்தாருக்கு இரண்டு நாட்களித்து சாள்சு "ஒப்பந்தம்" என்ற ஒரு பொருத்தனேக்குக் கையொப்பமிட்டான்[1]. இதன் படி அரசனே மறுபடியும் இங்கிலாந்துச் சிங்காசனத்தில் அரசனுக அமர்த்தினுல் மூன்று வருடத்துக்கு இங்கிலாந்திற் பிரெசுபித்திரியசமயத்தை நிலேநாட்டுவதாகவும் மற்ற மதங்களே அழித்துவிடுவதாகவும் வாக்களிக்கப்பட்டது.

இரண்டாவது உண்ணாட்டு யுத்தம் (1648) : கொத்துலாந்தர் இங்கிலாந்து மீது படையெடுத்தல்

இவ் "ஒப்பந்தத்தின்" பயனுக 1648 இல் அமிற்றன் கோமகனும் கொத்துலாந்துச் சைனியமொன்றும் இங்கிலாந்தின் மீது படையெடுத்தனர். வேல்சிலும் இங்கிலாந்தின் தென்கிழக்கிலும் அரசகட்சிகள் கலகம் தொடங்கின. ஆனால், இந்த இரண்டாவது உண்ணாட்டு யுத்தம் முழு மனத்துடன் தொடக்கப்பட்டதன்று. கொத்துலாந்தில் இங்கிலாந்து மீது படையெடுக்கும் விடயமாக அபிப்பிராயபேதமிருந்தது. பிரெசுபித்திரிய குருமார் மிகுந்த செல்வாக் குடையவராயிருந்தனர். அவர்கள் இங்கிலாந்தின் மீது படையெடுப்பதை விரும்பவில்லே. கொத்துலாந்துச் சைனியத்திடம் உற்சாகம் குறைவாக இருந்தது. மேலும், அதனிடம் போதிய ஆயுதங்களிருக்கவில்லே. ஐந்து வீரரில் ஒருவருக்குத்தான் பெருந்துப்பாக்கி சுடவோ, ஈட்டி வீசவோ தெரிந்திருந்தது. பிரங்கி ஒன்றுவது படையிலில்லே. எனவே, பெயபாக்குசு தென்கிழக்கில் வெற்றிபெற்றனன். அதன் பயனுக கொல்செற்றரைப் பிடித்தான். குரம்வெல் மிகுந்த ஊக்கத்துடன் நடத்திய சண்டையின் பயனுகத்தனது சைனியத்தை அமிற்றனின் சைனியத்துக்கும் கொத்துலாந்து எல்லேக்குமிடையிற் கொண்டுவந்து நிறுத்தினன். கொத்துலாந்துச் சைனியத்துடன் நின்ற ஆங்கில அரச கட்சிச் சைனியமொன்றை பிரெசுற்றனில் முறியடித்தான். பின்னர் கொத்துலாந்துச் சைனியத்தை முப்பது மைலுக்கு

[1]இவ்வொப்பந்தத்தை ஈயத்திலே சுற்றிக் கோட்டைத் தோட்டத்தில் ஒற்றர் வந்து எடுத்துக்கொண்டு போகும்படி புதைத்து வைத்தனர்.

ஓயாமற் கலேத்துச்சென்று முறியடித்தான். இதில் 10,000 வீரர் சிறைபிடிக் கப்பட்டனர் (ஒகத்து 1648). கடைசியாகக் குரம்வெல் கொத்துலாந்திற் பிர வேசித்துப் பிரெசுபித்திரியக் கட்சியைச் சேர்ந்த ஆகைலின் செல்வாக்கை நிலேநாட்டினன்.

இச்சண்டை நடந்துகொண்டிருக்கையில் அரசன் மறுபடியும் பாராளுமன் றத்துடன் இணக்கப்பேச்சு நடத்தினன். சில சலுகைகளேச்செய்ய முற்பட் டான். ஆனால், அவற்றை நிறைவேற்றி வைக்க அவன் உள்ளத்தில் விரும்பவில்லே. எனினும், முடிவு நெருங்கிற்று. அரசன் "இரத்த வெறியன்." அவனுடன் "கணக்குத் தீர்த்துவிடுவதென்ற" தீர்மானத் துடன் தான் குரொம்வெல்லும் அவனுடைய சைனியமும் சண்டைக்குப் புறப்பட்டனர். திரும்பிய பொழுது பாராளுமன்றம் அரசனுடன் இணக்கப் பேச்சு நடத்துவதைக் கண்டு ஆத்திரமடைந்து பலாற்காரத்திலிறங்கினர். 1648 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் ஆருந் தேதி கேணல் பிரைட்டும் சிவப்புச் சட்டையணிந்த துப்பாக்கி வீரர் சிலரும் பொதுமக்கள் சபையின் வாசலில் நின்றுகொண்டு 143 அங்கத்தவரை உள்ளே புகவிடாது தடுத்தனர். "பிரைட்டின் கழிப்பு" இவ்வாறு முற்றுப்பெற்றது. எஞ்சிய 90 அங்கத்தவர் அரசனே விளங்குவதற்காக முறைமன்று ஒன்றை அமைத்தனர்[1].

அரசன் சிரச்சேதஞ் செய்யப்படல் (சனவரி 1649)

விசாரணேயின் முடிபு எல்லாரும் எதிர்பார்த்ததே[2]. 1649 ஆம் ஆண்டு சனவரி மாதம் 30 ஆந் தேதி, இரண்டு மணி நாலு நிமிடமளவில் அரசன் உவைற்ரேல் உண்டாட்டு மண்டபத்துக்கு வெளியே நிறுத்தப்பட்ட தூக்கு மேடையிற் சிரச்சேதஞ் செய்யப்பட்டான். கடைசி நாட்களில் அரசன் பெருமிதமும் இராச குணமும் நிறைந்த வகையில் நடந்து கொண்டான். அடுத்த நாள் நள்ளிரவில் குரம்வெல் அரசனுடைய பிரேதத்தைப் போய்ப்பார்வையிட்டதாகவும் அதைத் துக்கத்துடன் பார்த்துவிட்டு,

[1]இவ்விசாரணே உவெசுமினித்தர் மண்டபத்தில் நிகழ்ந்தது. சாள்க நிற்ற இடம் பித்தளேப் பீடத்தினுல் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. களரிகளில் பெண்களுட்பட மக்கள் நெருங்கியிருந்த படியால் நீதிபதி துப்பாக்கிச் சூட்டைக் காக்கக்கூடிய தலேயணி அணிந்திருந்தார். அதை இன்றும் ஒட்கபோட்டிற் காணலாம்.

[2]குளிரதிகமாயிருந்தபடியால் அரசன் இரண்டு சேட்டு அணிந்திருந்தான். குளிரால் நடுங்குவதை மக்கள் தான் பயந்து நடுங்குவதாகக் கருதாதவாறு அங்ஙனஞ் செய்தான். சென் சேமிலிலிருந்து அரசன் மிக வேகமாக உவைற்ரேல் உண்டாட்டுமண்டபத்துக்கு நடந்து சென்றனன். அதனுல் அவனேடு சென்ற காவற்காரர் கூட அவனேடு சேர்ந்து நடந்துகொள்ள முடியாதிருந்தனர்.

"இன்றியமையாக் கொடுமை"[1] என்று தனக்குட் சொன்ன தாகவும் ஒரு கதையுண்டு. இச்சிரச்சேதம் மிகக் கொடுமை வாய்ந்ததே. ஆனுல், அது அவசியமானதா என்பதைப் பற்றி அன்றுதொட்டு இன்று வரை வாதம் நடக்கிறது. ஆனுல், அச்செயல் அக்கால மக்களே அதிரச் செய்தது[2].

3. இங்கிலாந்து குடியரசாதல்

இரண்டாம் பருவம் (சனவரி 1649—ஏப்பிரில் 1653) "எச்சப்" பாராளு மன்றம்

பொதுநலவாயம் இவ்வாறு ஆரம்பித்தது (குறிப்பு 70). 1649 சனவரி தொடக்கம் 1653 ஏப்பிரில் வரையுள்ள நான்கு ஆண்டுகளேயும் இரண்டாம் பருவமாகக் கொள்ளலாம். இக்காலத்தில் அரசாங்கம் பொது மக்கள் சபையினதிகாரத்திலிருந்தது. இச்சபை 1640 இல் ஏற்பட்ட நெடிய பாராளுமன்றத்தின் அங்கமாயமைந்தது. ஆனுல், அடிக்கடி நடைபெற்ற கழிப்புக் காரணமாய் ஆதியில் 490 அங்கத்தவரைக் கொண்டிருந்த சபை "அரித்துத் தெளித்துக்"[3] கடைசியாய் 90 அங்கத்தவரையுள்ளடக் கிற்று. இந்த "எச்சப்" பாராளுமன்றம் முன்னெருபோதுமில்லாத அதிகாரத்துடன் ஆட்சி நடத்திற்று. இங்கிலாந்திலே இத்தகைய ஒரு மன்றத்துக்கு இவ்வளவு அதிகாரம் முன்னுமில்லே; பின்னுமில்லே. இவ்வாட்சி ஒரே ஒரு சபையைக்கொண்ட ஆட்சியாதலால் மிகத் தீவிரமான குடியாட்சியாய் விளங்கிற்று. அரசனே, பிரபுக்கள் சபையோ அதன் அலுவல்களேக் கட்டுப்படுத்த இருக்கவில்லே. அரசன் சிரச்சேதஞ் செய்யப்பட் டதும் முடியாட்சியும் பிரபுக்கள் சபையும் ஒழிக்கப்பட்டன. எனவே, இவ்வொற்றைச் சபையானது தனக்கு விருப்பமான சட்டங்களே நிறைவேற் றியது. தனக்கு விருப்பமான கொள்கைகளே அனுசரித்தது. தான் விரும்பினு லன்றி மற்றும்படி பிறரெவருஞ் சபையைக் கலேக்க முடியாத நிலேயிலிருந் தது. நாட்டின் பாலனம் 41 அங்கத்தவரைக் கொண்ட அரசுக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இவர்களிற் பெரும் பாலோர் "எச்சப்" பாராளுமன்ற அங்கத்தவர். பாலனப் பிரிவுகள் சம்பந்தமான விசேட அறிவுள்ளவர்களேக் கொண்ட நிருவாக குழுக்களும் நாட்டின் நிருவாகத் துறைகளே மேற்பார்வை செய்தன.

[1]பிரேதத்தை அவதானிக்க காவல்செய்ய உத்தரவு பெற்ற சவுதாம்பிதன் பிரபுவே இக்கதையைச் சொன்னன். போர்த்துமூடியிருந்த ஓர் உருவமே பிரேதத்தைப் பார்த்துச் சென்றது. ஆனுல், குரலிலிருந்தும் நடையிலிருந்தும், வந்துசென்றவன் குரம்வெல்லெனவே தான் அனு மானித்ததாய்ச் சவுதாம்பிதன் கூறினன்.

[2]உவைற்ரேலில் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு அரசனின்தலே காட்டப்பட்ட பொழுது "முன்னெருபோதும் கேட்டறியாத, இனிமேலுங் கேட்கலிருக்காத ஓர் முனகல் எழுந் தது" என அக்காலத்துக் கண்கண்ட சாட்சி ஒருவன் கூறினன்.

[3]இவ்வார்த்தைகள் குரம்வெல் கூறியவை.

குரம்வெல்லும் சமநிலை வாதிகளும் அயலந்தும்

"எச்சப்" பாராளுமன்றத்தின் அதிகாரம், பெயபாக்குசு, குரம்வெல் என்பவரிடத்தும் புது மாதிரிச் சைனியத்தின் கையிலும் தங்கியிருந்தது[1] பிரதானமாக இக்காரணத்தினுலேதான் அது எதிரிகளை வெற்றிகரமாக அடக்க முடிந்தது. அரசனின் சிரச்சேதத்தின் பின்னர், தீவிரவாதிகளின் பலம் அதிகரித்ததாகத் தோன்றிற்று. குரம்வெல் சமநிலை வாதியல்லன், ஐந்தாம் முடியரசு வாதியுமல்லன். அத்தகைய வாதங்களாலுண்டாகும் ஆபத்தையும் அவன் அறிந்திருந்தான். "அவர்களை முறிக்காவிட்டால் அவர்கள் நம்மை முறித்துவிடுவார்கள்" என்று குரம்வெல் கூறினன். புது மாதிரிச் சைனியத்திலுண்டான கலகமொன்றை மிகுந்த ஊக்கத்துடன் அடக்கினன். அடுத்ததாகக் குரம்வெல் அயலந்து அலுவல்களில் ஈடுபட்டான். அரசன் சிரச்சேதஞ் செய்யப்பட்டபின் அயலந்திலுள்ள கட்சிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து அவன்மகனை ஆதரிக்கமுயன்றன. குரம்வெல் அயலந்தை அடக்கி வெற்றி கொண்ட விபரம்பின்னர் கூறுவாம் (குறிப்பு 74).

கொத்துலாந்தும் இரண்டாம் சாள்சும் : மொன்ரேசின் சிரச்சேதம்

தன்னுடைய நிலைமை மோசமானதையறிந்ததும் முதலாம் சாளசு தனது மனைவி என்றியெற்ரு மரியாவையும் நாலு குழந்தைகளையும் பிரான்சுக்கு அனுப்பினன். அவர்கள் அங்கே நாடு புறம்போகிகளாக வாழ்ந்து வந்தனர். மூத்த மகனை அரச கட்சியினர் இரண்டாம் சாள்சனவற்றுக்கொண்டனர். ஆனுல், இங்கிலாந்தில் அக்கட்சிக்கு ஆதரவு மிகக்குறைவாயிருந்தது. எனவே, கொத்துலாந்து மீதே அவன் நம்பிக்கை வைத்தான். ஆதலின், ஆங்கு அவனை அரியணையேற்ற முயற்சிகள் தொடங்கின. இக்காலத்திற் கொத்துலாந்திலே இரண்டு கட்சிகளிருந்தன. மொன்ரேசு சுத்தமான அரச கட்சியைச் சேர்ந்தவர்கள் மலைநாட்டிற் கலகத்தைத் தொடக்கவேண்டுமென விரும்பினுன். இரண்டாம் சாள்சு ஏற்பாட்டை அங்கீகரிக்க வேண்டுமென்றும் பிரெசுபித்திரிய சமயத்தை மூன்று இராச்சியங்களிலும் அவன் தாபிக்கவேண்டுமென்றும் ஆகைல் விரும்பினுள். சாள்சு மொன்ரேசைப் பிரங்கமாகக் கண்டித்தான். அந்தரங்கமாக மலைநாட்டில் கலகத்தையுண்டாக்குமாறு தூண்டினுன். அவன் முறியடித்துக்கைதுசெய்யப்பட்டு "சிவப்புச் சட்டையுடன்" எடின்பரோவிலுள்ள இராசமாக்கெற்றில்

[1]இந்த "எச்சப்" பாராளுமன்றம் நாட்டின் முழுப் பிரதிநிதித்துவம் கொண்டிருந்ததென்று கூற முடியாது. நகரங்களுக்கோ நாவகு மாகாணப்பிரிவுகளுக்கோ பிரதிநிதிகளில்லை. இவற்றுள் இலங்காசயருமொன்று. வேல்சுக்கு மூன்றுபிரதிநிதிகளேயிருந்தனர். இலண்டனுக்கு ஒரேயொரு பிரதிநிதியிருந்தார்.

(மே, 1650) தூக்கிலிடப்பட்டான்[1]. மொன்ரேசு சிரச்சேதஞ் செய்யப்பட்ட அதே மாதத்தில் சாள்சு ஆகைலின் நிபந்தனைகளுக்கு உடன்பட்டான். அரசனின் ஆணிலங்களில் எங்கும் பிரெசுபித்திரிய மதத்தைப் பரப்ப வேண்டும். கொத்துலாந்தர் அலுவல்கள் கவனிக்கப்படும் பொழுதெல்லாம் அவன் பொதுமன்றத்தையும் கொத்துலாந்தர் பாராளுமன்றத்தையும் கலந்தாலோசிக்க வேண்டும்.—இந்த நிபந்தனைகளின் படி நடக்கச் சித்தமான சாள்சு கடிதே கொத்துலாந்து வந்து சேர்ந்தான்.

தன்பார்ப் போர் (1650 செத்தெம்பர் 3 ஆம் தேதி)

இங்கிலாந்துக்கும் கொத்துலாந்துக்கும் போர் மூண்டது (குறிப்பு 74). அயலந்திலிருந்து திரும்பிய குரம்வெல் கொத்துலாந்து மீது படையெடுத்தான்[2]. கொத்துலாந்துச் சேனைத் தலைவனுன இலெசிலியின் தந்திரத்தால் அவன் தன்பார் நீபகற்பத்திலே, கப்பல்களல்லாது பிறிதொருதளமுமின்றி ஒதுக்கப்பட்டான். குரம்வெல்லின் வருணனைப்படி அவனுடைய சைனியம் "பலமற்று, அடிபட்டு, பசியுற்ற, உற்சாகமிழந்து" காணப்பட்டது. இலெசிலி குன்றுகளில் அணிவகுத்துக் கொண்டு குரம்வெல்லைத் தப்பவிடாமற் பார்த்துக் கொண்டிருந்தான். குரம்வெல்லின் நிலைமை மோசமாயிற்று. இலெசிலி அவ்வாறே காத்திராமல் நகரத் தொடங்கினன். அவனுடைய வலவணி தாழ்நிலமியில் வலது பக்கம் பெரிதும் பிரிந்து நின்றது. குரம்வெல் தப்பியோடக்கூடிய பாதையை மறிப்பதற்கு அது முயன்றது. இவ்வாறு செய்ததால் இலெசிலியின் இடது அணி தனித்தது. நடுப் பகுதி மலையில் நின்றுகொண்டு இலேசாக அசைய முடியாதிருந்தது. குரம்வெல் இதைக்கண்டான். அடுத்த நாட் காலையிலே வலது அணியைத் தாக்கி நிலைகுலையச் செய்தான். எஞ்சிய கொத்துலாந்துப் படை ஒரு குன்றுக்கும் கணவாய்க்குமிடையில் அகப்பட்டு விழித்தது. குரம்வெல் இருபது வீரரையே இழந்தான். கொத்துலாந்தர் மூவாயிரம் வீரரை இழந்தனர். பத்தாயிரம் பேர் கைதுசெய்யப்பட்டனர்[3] (1650 ஆம் ஆண்டு செத்தெம்பர் 3 ஆம் தேதி).

[1]"போர்வீரர் தலைவன்; சண்டையில் வேகமாகவும் இரகசியமாகவும் தாக்குதல் செய்வோன்; கவிஞன்; குதிரை வீரன். காற்றும் நெருப்புங் கலந்தாற்போன்ற உயிர்ப்புடையவன். நம்பிக்கையற்ற ஓர் இயக்கத்துக்குத்தலைமை வகித்தவன்; கைகடந்த ஒரு கொள்கைக்காகக் கைலிடப்பட்ட தீரன். மொன்ரேசு நிந்தனைக்கு இனியவன்," என்று பாராட்டப்பட்டான்.

[2]கொத்துலாந்தருக்கெதிராகச் சேனை அனுப்பவும் தலைமை தாங்கவும் பெயபாக்குசு மறுத்தான்.

[3]கொத்துலாந்தர் தோல்வியடைந்தபோது "சேனைநிப் பிசபு" (குரம்வெல்) குதிரையை நிறுத்தி 117 ஆம் தேவ சங்கீர்த்தனத்தைப் பாடினன். குதிரை இசைபாறியது. குரம்வெல்லின் சேனைத் தலைவனெருவனால் இது கூறப்பட்டது. குரம்வெல்லின் காரிய பூர்வமான பத்திக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

உசுற்றர் போர் (1651 செத்தெம்பர் 3 ஆந் தேதி)

குரம்வெல் பின்னர் எடின்பரேவுக்குச் சென்று 1651 இற் பேது நகரைக் கைப்பற்றினான். அவன் வட கொத்துலாந்துக்குச் செல்ல, சார்ள்சு கொத்துலாந்திய சைனியமொன்றோடு காலில் மார்க்கமாக இங்கிலாந்திற் பிரவேசித்து உசுற்றரை அடைந்தான். தெற்குநோக்கி வந்த குரம்வெல் அரசனுடைய படையை அங்கே சந்தித்து அதனை இலண்டனுக்குப் போகாதாவறு தடுத்தான். தன்பார்ப் போரின் வருடாந்த பூர்த்தியன்று ஆற்றின் இரு கரையிலுமிருந்து குரம்வெல் சார்ளின் சைனியத்தைத் தாக்கினான். குரம்வெல் கூறியபடி "நாலேந்து மணி நேரமாக, நான் இதுவரை கண்டிராத பெருஞ் சண்டையின் பின்னர்" சார்ளைத் தோற்கடித்தனன். சார்ளு தப்பியோடிக் கடைசியாக ஐரோப்பாக் கண்டத்துக்குச் சென்றான்[1]. ஆனால், அவனுடைய குதிரைப்படையில் ஒன்றுவது, காலாட்படையிலொன்றுவது அவனுடைய முன்மாதிரியைப்பின்பற்ற முடியாமற் போய்விட்டது. 1660 இல் உண்டான மீட்சி வரை அரச கட்சியின் கதி யாதாகுமென்பது உசுற்றரிலே முடிவாயிற்று. அரச கட்சி பல சதியாலோசனை செய்த போதிலும் ஒன்றுவது பாரியதாயிருக்கவில்லை. உசுற்றர் சண்டை கொத்துலாந்தின் சுதந்திரத்தை யழித்தது. ஆங்கிலப் படையொன்று மொங்கு என்பவன் தலைமையிற் கொத்துலாந்துக்குச் சென்று அங்குள்ள முக்கியமான இடங்களைக் கைப்பற்றியது. மொங்கு அந்நாட்டைப் பொதுநலவாயத்தின் சார்பாக ஆட்சிசெய்தான்.[2] இங்கிலந்துடன் கொத்துலாந்தை ஐக்கியப் படுத்துவதற்காக கொத்துலாந்தர் சம்மதத்தைக் கேட்பதற்குப் பல ஆணையாளர் அனுப்பப்பட்டனர். நாட்டவரிற் பெரும்பாலோர் ஐக்கியத்துக்கு விரோதமாயிருந்தபோதிலும் அதிகாரத்துக்குப் பணிய வேண்டியதாயிற்று.

குரம்வெல்லும் (எச்சப்) பாராளுமன்றமும்

குரம்வெல்லும் வெற்றியீட்டிய அவனுடைய சைனியமும் அரசியல் விடயங்களில் ஈடுபட இப்பொழுது அவகாசமுண்டாயிற்று. "எச்சப்" பாராளுமன்றம் மெதுவாகச் சீர்திருத்தங்களைச் செய்தமை சைனியத்துக்குப் பிடிக்கவில்லை. எனவே, பாராளுமன்றத்தைக் கூலைத்துவிட எண்ணிற்று. இருந்தும் சில மாதம் அதனைத் தொடர்ந்து நடைபெறவிட்டது. ஆனால், எச்சப் பாராளுமன்றம் புதியதொரு பாராளுமன்றத்துக்கு ஒழுங்கு செய்கிறதென்றும், அதிலே தற்போதிருக்கும் அங்கத்தவ ரெல்லாம் இருக்க ஒழுங்கு செய்யப்படுவதுமல்லாமல் மற்றை அங்கத்தவரை அதிற் சேராமற் செய்ய அதிகாரத்தைப் பெறவும் முயற்சி நடக்கிற தென்றுங் கேள்விப்பட்ட குரம்வெல் பொறுமையிழந்தான். ஒருநாள் அவன் சாதாரணக் கறுப்புடை அணிந்து சாம்பனிறக் கம்பளிக் கால்மேசு போட்டுக்கொண்டு பாராளுமன்றத்துக்கு வந்து, அங்கத்தவருக்கு உபந்நியாசஞ் செய்தான். பின்னர் தனது படைவீரர் துணையுடன் சபாநாயகரைப் இருக்கையிலிருந்து இறக்கி, "தடி" என்று அவன் ஏளனமாகச் சொன்ன கனமத்தையும் எடுத்துக்கொண்டு அங்கத்தவரெல்லாரையும் வெளியே கூலத்துவிட்டுக் கதவைப் பூட்டிக்கொண்டு போய்விட்டான். குரம்வெல்லின் கூற்றுப்படி "வலோற்காரமாக வெளியேற்றியதையிட்டு ஒரு நாய்கூடக் குரைக்கவில்லை." "எச்சப் பாராளுமன்ற" ஆட்சியையிட்டு எல்லாரும் அலுத்துப் போனார்கள்.

[1]சார்ளு ஆறு வாரமாக வீரம் நிறைந்த சம்பவங்களுக்கு ஆளாகி இங்கிலாந்திலே சுற்றித்திரிந்துவிட்டுப் பிறைற்றலிலிருந்து கால்வாயைத் தாண்டி அக்கரை சேர்ந்தான். இடத்தில் ஒக்குமாப் பொந்தில் ஒளித்திருந்தான். வேறோர் சமயம் ஒரு "குருவானவரின் குழியில்" புகைபோக்கிக்குள் மறைந்திருந்தான். தான் இறந்துவிட்டதாக வந்த புனைதத்தைக் கேட்டு ஒரு கிராமத்து மக்கள் கொண்டாடுவதையும் பார்த்தான். மற்றொரு கிராமத்திலே கொல்லனொருவன் "அந்தக் கள்ளச்சார்ள சுதுவாட்டைக் கைதுசெய்ததாக தான்கேள்விப்படவில்லை" யென்றான். அதற்குச் சார்ளு, "அவனைக் கைது செய்தால் கொத்துலாந்துப் படையை இங்கிலாந்துக்குக் கொண்டுவந்ததற்காக அவனை இரண்டுமுறை தூக்கினாலும் போதாது" என்று கூறினான்.

[2]கொத்துலாந்தின் பிற்கிய சரித்திரம் பின்னுற் கூறப்படும். (282 பக்கம் பார்க்க.)

4. குரம்வெல்லின் ஆதிக்கம்

மூன்றும் பருவம் : ஏப்பிரில் 1653—செத்தெம்பர் 1658

இனி மூன்றுவது பருவத்தை ஆராய்வோம். "எச்சப்" பாராளுமன்றம் கூலைக்கப்பட்ட 1653 ஆம் ஆண்டு ஏப்பிரில் மாதந் தொடங்கி குரம்வெல் இறந்த 1658 ஆம் ஆண்டு செத்தெம்பர் வரை கழிந்த ஐந்தரை வருடமும் மூன்றும் பருவமாகும். முடியாட்சியும் தீவிரவாதிகளும் ஐரிசுமக்களும் கொத்துலரந்துச் சைனியமும் நீண்ட பாராளுமன்றத்தின் எச்சமும் ஒன்றன் பின்னொன்றுய் அடக்கப்பட்டன. குரம்வெல்லும் சைனியமும் ஈற்றில் ஆதிக்கம் பெற்றனர். குரம்வெல் மிகக்கடினமானதொரு பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டியிருந்தது. அது அத்தனை கடினமானதால் அவன் அதைத் தீர்க்க முடியவில்லை (குறிப்பு 70). சுதந்திரமான தேர்தல் மூலம் தாபிக்கப்பட்ட அரசு நிலவவேண்டுமென்றும், திறமை மிக்க சட்ட முறைமை இருக்க வேண்டுமென்றும் தற்காலக் கருத்துப்படியுள்ள குடியாட்சி முறையில்லாவிடினும் மத்திய வகுப்பாரின் ஆட்சிநடக்கவேண்டுமென்றும் அவன்விரும்பினான். இந்த அரசாங்கம் தெய்வச் சார்புடையதாகவும் தனது கருத்துப்படி மக்களை நல்லொழுக்கத்திற் செலுத்தக்கூடியதாகவும் இருக்கவேண்டுமென்றும் அவன் விரும்பினான். தெய்வீக அரசாங்கம் இப்படித்தானிருக்கவேண்டுமென்று குரம்வெல் விரும்பினால் அதற்கு மக்கள் சம்மதம் வேண்டுமே? அவன் கருத்துக்களுக்கு மக்கள் இசையாவிடின், அவன் தன் அபிலாட்சைகளை ஒருங்கே நிறைவேற்றுமா றெவ்வாறு?. குரம்வெல்லும் அவனுடைய சைனியமும் நிறைவேற்ற

நீனைத்த திட்டம், கூரிய வாளுக்குச் சட்டமெனும் உறைபோட விரும்பியது போலாகுமென நகைச்சுவையுடன் கூறப்பட்டது. அவர்களின் ஆட்சி பொதுசன ஆதரவைப் பெறவில்லை. எனவே, உறை விழுந்துவிட வாள் மாத்திரமே எஞ்சியது. பாராளுமன்றம் அடிக்கடி கூடியது. ஆனால், அங்கத்தவரைச் சேனைத்தலைவர்கள் நியமித்தோ, விரோத மனப்பான்மையுள்ளவர்களை அகற்றியோ விட்டாலன்றி அவர்களை சமாளிக்க வழியில்லை.

பெரிய பிரித்தானியாவின் முதலாவது ஐக்கியப் பாராளுமன்றம்

ஆரம்பத்திலே சாதாரணத் தேர்தல் மூலம் அங்கத்தவரைத்தெரிவது முடியாத காரியமாயிற்று. எனவே, படை உத்தியோகத்தர் கழக மூலம் சைனியமானது தான் அங்கீகரித்த ஆட்களைக்கொண்ட மன்றமொன்றைத் தெரிவுசெய்து நிறுவியது. இவர்களில் கொத்துலாந்துப் பிரதிநிதிகளும் ஐரிசுப் பிரதிநிதிகளும் சேர்க்கப்பட்டனர். இங்கிலாந்துடன் ஐக்கியப்பட கொத்துலாந்து சம்மதித்தால் அதற்கு ஈடாகக் கொத்துலாந்துக்குச் சட்டமியற்றும் அதிகாரத்தில் ஓரளவு வழங்கப்படுமென வாக்களிக்கப்பட்டது. எனவே, கொத்துலாந்து பிரித்தானியப் பாராளுமன்றத்துக்கு முப்பது அங்கத்தவரை அனுப்பிற்று. இதுவே முதன்முதற் கூடிய ஐக்கிய பாராளுமன்றமாகும். சில சமயம் இப்பாராளுமன்றம் அதன் அங்கத்தவருள் ஒருவனை பெயர்போன்[1] என்பவனின் பேரால் "பெயர்போன் பாராளுமன்றம்" என வழங்கப்பட்டது. இதன் சபாநாயகர் ஈற்றன் பாடசாலை அதிபதி. கீர்த்திவாய்ந்த வேறு பல சிரேட்டரும் இப்பாராளுமன்றத்தில் அங்கத்தவராயிருந்தனர். ஆனால், இப் பாராளுமன்றம் இலட்சியப் போக்குடையதாயும் காரிய பூர்வமான விடயங்களைச் செய்ய முடியாததாயும் இருந்தது. சட்டங்களெல்லாவற்றையும் ஒருசிறு நூலில் அடக்க எண்ணிற்று. அதனால் சட்டவாணர்கள் ஆத்திரமடைந்தனர். சைனியத்துக்குச் சம்பளம் கொடுப்பதற்குப் பணம் திரட்ட அது காட்டிய வழி, நிச்சயமற்ற தாயிருந்தபடியால், சைனியத்துக்குச் சம்பளம் கிடைப்பதே சந்தேகத்துக்கிடமாயிருந்தது. சமய விடயங்களைத் தீர்ப்பதற்கு அது எடுத்த நடவடிக்கைகள் மக்களிடையே கிளர்ச்சியை உண்டாக்கின. அதனால் பாராளுமன்றத்திலுள்ள மிதவாதிகள் ஒரு நாட் காலையெழுந்து, எதிர்க்கட்சியினர் ஆயத்தமில்லாத சமயம் பார்த்து சபை தனது அதிகாரத்தைக் குரம்வெல்லுக்கு வழங்கிவிட்டுக் கலைய வேண்டுமென ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிற்று. குரம்வெல் இதனை வரவேற்றான். 1653 ஆம் ஆண்டு திசெம்பரிலே இது நடந்தது.

[1]இவன் பிளீற்று வீதியிலே தோல் வியாபாரம் நடத்தினான்.

அரசாட்சிச் சாதனம் : புரப்பகம் : சருவாதிகாரம்

இலாம்பெட்டின் தலைமையிற் சேனையைச் சேர்ந்த உத்தியோகத்தர் சிலர் ஒன்று கூடிப் புதியதொரு யாப்பை வகுத்தனர். இதுவே அடுத்த பரிசோதனையாகும். இத்திட்டம் **அரசாட்சிச்சாதனம்** எனப் பெயரிடப்பட்டது. இதன்படி குரம்வெல் புரவலனாக நியமிக்கப்பட்டான். அவனிடம் திருவாகப் பொறுப்பெல்லாம் ஒப்படைக்கப்பட்டது. ஆட்சி நடத்துவதற்கும் ஒரு தொகைப்பணம் அவனுக்கு ஒதுக்கப்பட்டது. ஒற்றைச் சபையுள்ள பாராளுமன்றத்திடம் சட்டஞ் செய்யும் அதிகாரம் முழுவதும் வழங்கப்பட்டது. பாராளுமன்றம் புரவலன் மேற்பார்வையிலிருந்தது. அதைக்கூட்டுவதற்கு அவனுக்கே அதிகாரம் வழங்கப்பட்டது. புதிய யாப்பிற்கு மாறான பாராளுமன்றத் தீர்மானங்களையெல்லாம் விட்டுதல்செய்ய அவனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது. ஐந்து மாதம் கூடிய பின் பாராளுமன்றத்தைக் கலைக்கவும் அவனுக்கு உரிமையளிக்கப்பட்டது. அவ்வாறு கலைக்கப்படாவிட்டால் அது மூன்று வருடத்துக்குத் தொடர்ந்திருக்கலாம். பின்னர் புதியதொரு பாராளுமன்றத்தைத் தெரிந்தெடுக்கவேண்டும். இச்சாதனத்தின் பிரகாரம் குரொம்வெல்லும் ஓரளவுக்கு ஓர் அரசக் கழகத்தின் அதிகாரத்துக்குட்பட்டவனே. ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக அவனுக்குப் பணந்தேவைப்பட்டால் அப்பணத்தை ஒதுக்கப் பாராளுமன்றத்துக்கு மாத்திரமே உரிமை வழங்கப்பட்டது[1].

இக்காலக் கருத்துக்களின் படி சருவாதிகார ஆட்சியென மதிப்பிடக்கூடிய ஓராட்சி இப்பொழுது ஆரம்பித்தது. அரசுக்குக் குரம்வெல் தலைவனானான். அவனுடைய ஆட்சிக்கு அடிப்படை சேனை. எனவே, அவன் முறையான இராணுவச் சருவாதிகாரியாய் விளங்கினான். அடுத்த ஆறு வருடத்துக்கு அவன் ஆட்சி நடத்தினான். சருவாதிகார ஆட்சியினாலுண்டாகும் நன்மை தீமைகளை இவ்வாட்சி விளக்கியபடியால் இது வரலாற்றுச் சிறப்பு வாய்ந்ததொரு விடயமாகும். வெளிநாடுகளிற் குரம்வெல் பெரிய விடயங்களைச் சாதித்தான். இங்கிலாந்தின் பீடு மிக உயர்ந்தது. அவனுடைய சைனியமும் கடற்படையும் பல வெற்றிகளையீட்டின. உண்ணாட்டிலே அடக்குமுறைகளால் அவனுடைய புகழ் குன்றியது. எதிரிகளுக்கு அவன் சுதந்திரம் வழங்காதிருந்தமை எதிர்பார்க்கப்பட்டதே. அயலந்தை அவன் அடிப்படுத்திப் பணியச் செய்தான். எனினும் ஆங்கிலப் பாராளுமன்றத்தில் அயலந்துக்குப் பிரதிநிதித்துவம் வழங்க எண்ணினானல்.

குரம்வெல் பாராளுமன்ற ஆட்சியில் நம்பிக்கை கொண்டவன். முடியாட்சிக்கு மாறான விடயமெல்லாம் பாராளுமன்றவாட்சியொடு பிணைந்து

[1]இன்று ஐக்கிய அமெரிக்கக் குடிப்பதிகளுள்ள உரிமைகளே சில விடயங்களில் குரம்வெல்லுக்கும் இருந்தன. இச்சாதனம் பிரித்தானியாவுக்கு வகுத்த யாப்பு முறையை வழங்கிற்று. அமெரிக்க அரசியலுக்கும் இதற்கும் இவ்வகையிலும் ஒற்றுமையுண்டு.

இருந்தும், அவன் "பாராளுமன்றத்தை வைத்துக்கொண்டு ஆளவும் முடியாதிருந்தான்; பாராளுமன்றம் இல்லாமல் ஆளவும் முடியாதிருந்தான்." சமயச் சகிப்புத்தன்மையில் அவன் நம்பிக்கையுடையவன். சகிப்புத்தன்மை காட்ட விரும்பியதைப் பியூரித்தானியர் ஆட்சேபித்தபடியாற்றான் அவன் பாராளுமன்றத்தோடு பிணங்க நேர்ந்தது.

முதலாவது புரப்பகப் பாராளுமன்றம் (1654)

முதலாவது புரப்பகப் பாராளுமன்றம் 1654 இற் கூடிற்று. புதிய யாப்பை அது விவாதித்தது. பொதுநலவாயத்திற்கும் புரவலனுக்கும் விசுவாசந் தெரிவித்து ஒப்பமிட நூறு அங்கத்தவர் மறுத்தபடியால் அவர்கள் விலக்கப்பட்டனர். எஞ்சியவர்கள் சேனையையும் அதன்செலவையுங் குறைக்கவேண்டுமென விரும்பினர். "இழிந்த சமயப்புரட்டுக்கள்" என்று சில விடயங்களை அட்டவணைப் படுத்தி அவற்றை ஒருவரும் ஒப்புக்கொள்ளக் கூடாதெனவும் அவ்வாறுசகிப்புத்தன்மையை நீக்கிவிடலாமெனவும் நீர்மானித்தனர். மேலும் "சிரத்தைக் கருமங்கள்" என இருபது விடயங்களை அட்டவணைப் படுத்தி அவற்றை எவரும் ஆட்சேபிக்கக் கூடாதெனவும் விதித்தனர். உயர்தர நீதிமன்றம், குற்றச் சட்டம் முதலியவை சம்பந்தமான காரியசாத்தியமான சீர்திருத்தங்களிற் பாராளுமன்றம் ஈடுபடவேண்டுமெனக் குரம்வெல் விரும்பினான். ஆனால், அது யாப்புச்சம்பந்தமாக முடிவில்லாத வாக்கு வாதங்களிலே ஈடுபடுவதையே விரும்பிற்று. குரம்வெல் அவ்வங்கத்தவரை வேறு வழியிற்றிருப்ப முடியாது போயினன். யாப்புப்படி. அவன் ஐந்து மாதந் தாமதிக்க வேண்டியிருந்தது. அவன் "சந்திர" மாதத்தையே கணக்கில் வைத்தான்; "பஞ்சாங்க" மாதத்தைக் கொள்ளவில்லை. வெகு விரைவில், சகிக்கும் இயல்பிலாத இந்தப் பாராளுமன்றத்தை அவன் கலைத்துவிட்டான்.

இவ்வாறு கலைத்த பின்னர் அவன் உள்ளூராட்சியில் புதியதொரு முறையைப் பரீட்சித்துப் பார்த்தான். இங்கிலாந்து இக்காலத்திலே பதினொரு மாவட்டமாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு மேசர் சேனதிபதியின் (சேனபதியின்) மேற்பார்வையில் இருந்தது. இத்தளபதிகள் குடிப்படையைக் கண்காணிப்பதுடன் அரச கட்சிச் சதிகளைத் தடுக்கவும் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டப்படி மக்கள் ஒழுக்கத்தையும் நன்னடத்தையையும் கடைப்பிடிக்கிறார்களா என்று பார்க்கவும் ஆணையிடப்பட்டனர். "இச் சிறியபலமற்ற புதுமுறை" எனக் குரம்வெல் வருணித்த இவ்வுள்ளூராட்சி முறை பியூரித்தானியரின் ஆளுகைக்குப் பெரிய அபகீர்த்தியையுண்டாக்கிற்று. அது இராணுவ வல்லாட்சியேயென மக்கள் ஆத்திரமடைந்தனர்.

பாராளுமன்றத் துணையுடன் ஆட்சிசெய்ய இரண்டாவது முயற்சி. இரண்டாவது புரப்பகப் பாராளுமன்றம் (1656–8)

பாராளுமன்றமின்றி ஆட்சி செய்வதிலும் அதனோடு ஆட்சி செய்வதே நன்றெனக் குரம்வெல் கருதினான். 1656 ஆம் ஆண்டுக் கோடையில் இரண்டாவது புரப்பகப் பாராளுமன்றத்தைக் கூட்டினான். உள்ளூராட்சி செய்த "மேசர் சேனரல்கள்" மக்களால் வெறுக்கப்பட்டனர். அதனால் புதிய தேர்தலில் அரசாங்கத்துக்கு விரோதமான பெருந்தொகை அங்கத்தவர் தெரிந்தனுப்பப் பட்டனர். இவர்களில் நூறு அங்கத்தவரைத் தானம் வகிக்கவிடாது முற்காப்பாகத் தடைசெய்தனர். எஞ்சிய அங்கத்தவர் குரம்வெல் மீது மிகுந்த நம்பிக்கை காட்டினர். புதியதொரு யாப்பு அமைக்கப்பட்டது. **பணிமனுவும் ஆய்வுரையும்**என்று இந்த யாப்பு முறைக்குப் பெயர் கொடுக்கப்பட்டது. இதன்படி அரசுக்கழகம் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் குரம்வெல் மன்னனுக்கப்படவேண்டுமென்றும் அவனுக்கு மேலும் அதிக அதிகாரங்கள் வழங்கப்படவேண்டுமென்றும் இரண்டாவது சபையொன்று தாபிக்கப்படவேண்டுமென்றுங் காணப்பட்டது. தனக்கு வழங்கவிருந்த பதிய பட்டம் பற்றிக் குரம்வெல் நெடிது தயங்கினான். "எனது கழுத்தில் விழுந்த சிறு மாலையே இது" என்று குரம்வெல் கூறினான். "எக்கர் நிலத்துக்கு எல்லையிருப்பது போல" இந்த முடியாட்சியும் வரையறைக்குட்பட்டதாதலின், அதன் அதிகாரங்களை மக்கள் விலங்கி அதனை ஏற்கச் சித்தமாயிருப்பரெனக் கருதப்பட்டது—எனவே, இப்பட்டத்தை ஏற்பதிற் காரியபூர்வமான நன்மைகள் உண்டே. குரம்வெல் இப்பட்டத்தை ஏற்பதை இராணுவம் ஆட்சேபிக்கவே அவனும் அதனை நிராகரித்துவிட்டு ஏனைய சீர்திருத்தங்களை அங்கிகரித்தான்.

குரம்வெல்லின் மரணம் (1658 செத்தெம்பர் 3 ஆம் தேதி)

இரண்டாவது புரப்பகப் பாராளுமன்றம் சீர்திருத்தப்பட்ட நிலைமையிற் கூடிற்று. கீழ்ச்சபையிலிருந்து குரம்வெல்லின் ஆதரவாளரிற் பலர் புதிய மேற்சபைக்கு மாற்றப்பட்டனர். தடுக்கப்பட்ட நூறு அங்கத்தவரும் கீழ்ச்சபையிலே தானம் வகிக்க அனுமதிக்கப்பட்டனர். எனவே, பழைய பிரச்சினைகள் மறுபடியுந் தோன்றின. கீழ்ச்சபை, மேற்சபையின் அமைப்பு கடமை முதலியவற்றை விவாதித்தது. புரவலனின் அதிகாரங்களைப் பற்றியும் ஆராய்ச்சி செய்தது. 1658 ஆம் ஆண்டு பெப்பிரவரியிற் பாராளுமன்றங் கலைக்கப்பட்டது. எழுதிங்களின் பின்னர், செத்தெம்பர் மாதம் மூன்றாந் தேதி குரம்வெல் இறந்தான். தனது ஆட்சியுடன் பொது மக்களாட்சியை எவ்வாறு இணைப்பதென்ற பிரச்சினையைத் தீர்க்காமலே அவன் இறந்தான்.

5. பொதுநலவாயத்தின் பிறநாட்டுப்பூட்கை

பிரான்சுடன் நடத்திய நூறுண்டுப்போர்க் காலந்தொட்டு இதுவரை இங்கிலாந்து எந்தக் காலத்திலாவது, இப்பொதுநலவாயக் காலத்திலிருந்ததுபோல யுத்தப்பிரியமுடையதாயிருக்கவில்லை. 1651 ஆம் ஆண்டு முடியும் வரை பொதுநலவாயத்தின் இராணுவ முயற்சியெல்லாம் அரசகட்சியைச் சேர்ந்த விரோதிகளை அடக்குவதிலே விரயமாயிற்று என்பதை மேலே கண்டோம். தரை யுத்தத்திலே குரம்வெல் தன்பார்க் களத்திலும் உசுற்றிலும் வெற்றியீட்டினான். கால்வாயிலும் மத்தியதரைக் கடலிலும் நடமாடிய, அரசகட்சியைச்சேர்ந்த தனிப்பட்ட சண்டைக் கப்பல்களைப் பிளேக்கு நிர்மூலமாக்கி குடியரசின் அதிகாரத்தைக் குடியேற்றநாடுகள் ஏற்கச் செய்தான். 1652 இல் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள அயல் நாடுகளின் விடயங்களிலே தலையிடப் பொதுநலவாயத்திற்கு அவகாசமுண்டானது. அதன் சைனியத்தில் நாற்பதாயிரம் வீரரிருந்தனர். கடற்படையில் இருநூற்றேழு புதிய கப்பல்கள் சேர்க்கப்பட்டன. ஐரோப்பாவில் இத்தகைய சிறந்ததொரு சைனியமிருக்கவில்லை. எனவே, இவ்வளவு பலம் பொருந்திய அரசின் தலையீடு தீர்மானமான பலனைக் கொடுக்கக் கூடியதாயிருந்தது (குறிப்பு 71).

இடச்சுப்போர்க்குக் காரணம் (1652) : கப்பலோட்டல் விதி (1651)

இங்கிலாந்தின் முதல் எதிரி ஒல்லாந்து. இவ்விரு நாடுகளும் குடியரசு நாடுகளாயும் புரட்சுத்தாந்திய மதம்விளங்கும் நாடுகளாயும் இருந்தபடியால் ஒற்றுமைப்பட்டிருக்கலாமென எதிர்பார்த்தனர்.[1] ஆனால், இங்கிலாந்தும் ஒல்லாந்தும் வியாபாரப் போட்டியில் மும்முரமாக முனைந்துநின்றன. நெடிய பாராளுமன்ற அங்கத்தவரொருவர் "நாம் வியாபாரம் என்ற மிக அழகிய தலைவிக்காகவே சண்டையிடுகிறோம்" என்று கூறினர். இதுவரை ஒல்லாந்து வெற்றிபெற்று வந்தது. கிழக்கிந்திய வியாபாரத்திலிருந்து இங்கிலாந்தை இடச்சுக்காரர் தடைசெய்தனர். பொருள்களை எடுத்துச் செல்லும் வியாபாரத்துறையில் அவர்களுக்கு முழுவுரிமை ஏறளவுக்கிருந்தது. "எல்லாக் கடலிலும் அவர்களே ஏற்றியிறக்குந் தொழிலைச் செய்தனர்" எனக்கூறப்பட்டது. 1651 ஆம் ஆண்டு இலையுதிர்காலத்திலே எச்சப்பாராளுமன்றம் **கப்பலோட்டல் விதி** யொன்றை நிறைவேற்றியது. அதன்படி இங்கிலாந்திலிறக்குமதியாகும் பொருள்களை ஆங்கிலக்கப்பல்களே கொண்டுவரவேண்டுமென்றும், இல்லையேல் எந்த நாட்டுப் பொருள் கொண்டுவரப்பட்டதோ அந்த நாட்டுக் கப்பலே அதைக் கொண்டு வரவேண்டுமென்றும், விதிக்கப்பட்டது[2]. எக்காலத்திலாவது

[1]அரசியற்றுறையில் ஐக்கியப்படவேண்டுமென ஓர் ஆலோசனையை இங்கிலாந்து தெரிவித்தது. ஆனால் அது பயன்கொடுக்கவில்லை.

[2]இப்பூட்கை புதியதன்று. இரண்டாம் இரிச்சட்டு காலந்தொட்டே கப்பலோட்டல் விதிகள் நிறைவேற்றப்பட்டன. அவை பலனிதமானவை. ஆனால் அவை செவ்வனே நடைமுறையிற் கொண்டுவரப்படவில்லை.

எந்த ஒரு விதியாவது ஒரு நாட்டுக்கு உயர்ச்சியைக் கொடுத்ததென்றால் அது இவ்விதியேயாம். இவ்விதி நிறைவேற்றப்பட்டபின் அடுத்துத் தொடர்ந்த வருடங்களில் ஆங்கிலக் கப்பற்றொழில் பெரிதும் முன்னேற்றமடைந்தது இவ்விதியின் பயனுகவேயாம். ஆங்கிலக்கடற்றொழிலே விருத்திசெய்ததோடு இடச்சுக் கப்பற்றொழிலுக்குப் பெருத்த நட்டத்தையும் விளைத்தது. இனி வேறு பல பிணக்குக்களும் இரு நாடுகளுக்கு மிடையில் உண்டாயின. கடலில் ஆங்கிலருக்கும் பிரெஞ்சுக் காரருக்குமிடையே, பிரகடனஞ் செய்யப்படாத யுத்தமொன்று நடந்தது. இடச்சுக் கப்பல்களேற்றிச் செல்லும் பிரெஞ்சுச் சரக்குக்களை இங்கிலாந்து பிடித்துவிடப் போவதாகக் கூறிற்று. இதை இடச்சுக்காரர் ஆட்சேபித்தனர். கால்வாயிற் செல்லும்பொழுது இடச்சுக்கப்பல்கள் ஆங்கிலச் சண்டைக் கப்பல்களுக்குக் கொடியிறக்கி மரியாதை செய்யவேண்டுமென்று இங்கிலாந்து கோரிக்கைவிடுத்தது. இடச்சுக்காரர் இத்தகைய கோரிக்கையை விரும்பவில்லை. இப்பிணக்குக் காரணமாக தோவருக்குச் சமீபத்தில் இரு கடற்படைகளுக்குமிடையில் மோதலேற்பட்டது; அடுத்து யுத்தம் மூண்டது. (1652 மே மாதம்).

கடற்போர் நிகழ்ச்சிகள் (1652–54)

இச்சண்டையில் ஆங்கிலர்க்குச் சில வசதிகளிருந்தன. அவர்களிடம் திடகாத்திரமாகக் கட்டப்பட்டு நல்ல ஆயுதங்கள் பொருந்திய சண்டைக் கப்பல்கள் இருந்தன. இடச்சுத் தளபதி தரொம்பு, போர்ச்சூழுக்கு நன்கு அறிந்தவன்; ஆனால் ஆங்கிலத்தளபதியான **பிளேக்கு** கடற்படையைச் செவ்வனே ஒழுங்கு செய்வதில் மிக்ககவனமுடையவன். அன்றியும் யுத்தத்திலே தைரியமாக முன்னேறித் தாக்கும் திறமைவாய்ந்தவன். யுத்தம் 1652–54 வரை நடைபெற்றது. கடற் சண்டைகள் பற்பல நிகழ்ந்தன. 1652 ஆம் ஆண்டு நவம்பரில் தஞ்சென்சுக்கு அப்பால் தரொம்பு பிளேக்கைத் தோற்கடித்துக் கால்வாயை ஆட்சிகொண்டான்[1]. ஆனால் 1653–ஆம் ஆண்டு பெப்பிரவரியிற் போத்துலாந்துக்கு அப்பால் நடத்திய மூன்றுநாட் கடல் யுத்தத்தின் பயனுக இழந்த அதிகாரத்தைப் பிளேக்கு பெற்றான். ஒல்லாந்தின் பெரிய வியாபாரத்துக்கு ஆங்கிலக் கப்பல்கள் பெருஞ் சேதம் விளைத்தன. யுத்தத்திலே 1400 இடச்சுக்கப்பல்களை ஆங்கிலர் கைப்பற்றினர். இவற்றில் போர்க்கப்பல்கள் 120. யுத்தமுடிவில் ஆங்கிலக் கால்வாயில் இடச்சுக் கப்பல்கள் தலைகாட்டவேயில்லை (குறிப்பு 72, 269 ஆம் பக்கத்திலுள்ள நாட்டுப்படத்தைப் பார்க்க).

[1]இந்தச் சண்டையின் பின்னர்தான் தரொம்புதனது கப்பற்பாய்மரத்திலே ஒரு துடைப்பக்கட்டையைத் தூக்கிவிட்டான் என்றும், கடலிலிருந்து ஆங்கிலரைத் துடைத்துவிட்டதற்கு அறிகுறியாகவே அவ்வாறுசெய்தான் என்றும் கூறப்பட்டது. அடக்கசுபாவமுடைய தரொம்பு அப்படிச் செய்திருக்கமாட்டானுதலால் இக்கதை பொய்க்கதையாயிருக்கலாம்.

குரம்வெல்லின் வெற்றிகள் : குரம்வெல்லின் நட்புறவுகள் (1654)

குரம்வெல்லின் பிரதானமான வெற்றிகள் வெளிநாடுகளிலேதான் ஈட்டப்பட்டன. ஆங்காங்கு இங்கிலாந்தின் பெயரைக் கேட்டுப்பிறர் அஞ்சவும், நட்புக்கொள்ள விழையவுஞ் செய்தான். வெளிநாட்டவர் துணையுடன் சதுவட்டு மன்னர் மறுபடியும் ஆங்கில அரசுரிமையைப் பெறுது தடுப்பதே குரம்வெலின் பிறநாட்டுப் பூட்கையின் முக்கியமான தொரு நோக்கமாகும். புரட்சுத்தாந்திய மதத்தையும், ஆங்கிலவியா பாரத்தையும் நிலை நிறுத்திப் பரப்புவதே மற்றிரு நோக்கங்களாயின. இவற்றை நிறைவேற்றுவதில், குரம்வெல் நாம் முன்னே குறிப்பிட்ட அதிராத சமய பத்தியையும், காரிய பூர்வமான பொது அறிவையுங் காட்டினான். ஆரம்பத்தில் அவன் அமைதிப் பூட்கையை அனுசரித்தான். புரட்சுத்தாந்திய வல்லரசுகளுடன் நட்புறவு செய்ய விரும்பினான். 1654 இல் இடச்சு யுத்தம் முடிவுக்கு வந்தது. பிரித்தானியக் கடல்களில் ஆங்கிலக் கப்பல்களுக்கு மரியாதை செய்ய இடச்சு அரசாங்கம் சம்மதித்தது. தம் நாட்டிலிருந்து அரச கட்சியைச் சேர்ந்தவர்களைக் கலைக்கவும் கப்பலோட்டல் விதியை மெல்ல ஒப்புக்கொள்ளவும் அது உடன்பட்டது. தென்மாக்கு, சுவீடின், போத்துக்கல் ஆகிய தேசங்களுடன் செய்த நட்புறவுப் பொருத் தலைகளின் பயனாக முக்கியமான வியாபாரச் சலுகைகள் இங்கிலாந் துக்குக் கிடைத்தன.

மேற்கிந்திய தீவுகட்குப் படையெடுப்பு (1655)

குரம்வெல்லின் தணியாத ஊக்கம் புதிய முயற்சிகளில் ஈடுபட வாய்ப்புண்டானது. 1648 இல் முப்பதாண்டுப்போர் சேர்மனியில் முற்றுப் பெற்றது. ஆனால் சிபெயினுக்கும் பிரான்சுக்குமிடையில் மேலுஞ் சண்டை நடைபெற்றது. இவ்விரு நாடுகளும் குரம்வெலின் துணையைப் பெற விரும்பின. ஆனால் குரம்வெல் கடுமையான நிபந்தனைகளை விதித்தான். சிபானிய ஆணிலங்களிலுள்ள ஆங்கிலேயர் தமது மதத்தை அனுட்டிக்கச் சுதந்திரமளிக்கப்பட வேண்டுமென்றும் சிபானிய மேற்கிந்தியத் தீவுகளில் வியாபாரஞ் செய்யச் சுதந்திரமளிக்கப்பட வேண்டுமென்றும் சிபெயினுக்குக் குரம்வெல் கூறினான். இதைக் கேட்ட சிபானிய தூதமைச்சன் "எனது அரசனின் இரு கண்களையும் கேட்டமாதிரியிருக்கிறதெனப்" பதிலளித்தான். பின்னர் குரம்வெல் சிபெயினுடன் குடியேற்றநாடுகள் சம்பந்தமான சண்டைசெய்ய நிச்சயித்தான். சிபானிய மேற்கிந்தியத் தீவுகளிலுள்ள சிபானியோ லாவைக் கைப்பற்றுவதற்கு ஒரு படை அனுப்பப்பட்டது (1655)[1]. ஆனால்

[1]இத்தகையதொரு படையெழுச்சி காரணமாக ஐரோப்பாவில் இவ்விரு நாடுகளுக்குமிடையே முறைமையான போரொன்று மூண்டே தீரும் என்ற நிலை அக்காலத்திலிருக்கவில்லை.

அப்படையெடுப்பின் வழி அத்தீவின் மீது நடத்தியதாக்குதல் படுதோல் வியை அளித்தது. ஆனால் யமேக்கா கைப்பற்றப்பட்டது. குரம்வெல் தனக்கு இயல்பாயுள்ள ஊக்கத்துடன் அத்தீவிற் குடியேற்றமுயற்சிகளைச் செய்தான்.

நியூனிசுமீது தாக்குதல் (1655)

1655 இற் குரம்வெல் எடுத்த முயற்சிகள் மேற்கிந்தியப் படையெடுப் புடன் முடியவில்லை. பிளேக்கு மத்திய தரைக்கடலுக்குக் கப்பலூர்ந்து சென்று தியூனிசைத்தாக்கினான். தியூனிசிலுள்ள பெய் என்ற ஆள்பதி பிரித்தானியர் சிலரைக் கைதுசெய்து சிறை வைத்தான். அவர்களை விடுதலை செய்யமறுத்ததால் இத்தாக்குதல் நடைபெற்றது. இச்சம்பவம், பிரித்தானியா மத்தியதரைக் கடற்பகுதியில் முதன்முதல் நடவடிக்கை எடுக்கத் தொடங்கியதைக் குறிப்பதால் சரித்திரமுக்கியத்துவம் வாய்ந்ததெனலாம். அதே வருடத்தில் சவோய்க் கோமகன் பிரெஞ்சுக்காரரின் துணையுடன் சவோயைச் சேர்ந்த வோடுவாப்பள்ளத்தாக்கிலுள்ள புரட்சுத்தாந்தியருக்குப் பல கொடுமையிழைத்தான். குரம்வெல் இதை அறிந்து ஆத்திரமடைந்து பலத்த ஆட்சேபந் தெரிவித்தான்[1]. குரம் வெல்லின் நட்பைப் பெறவிரும்பிய பிரெஞ்சுமன்னன், கொலைகளை நிறுத்துமாறு சவோய்க் கோமகனை நெருக்கினான். இதனால் குரம்வெல் புரட்சுத்தாந்திய இரட்சகனென ஐரோப்பாவெங்கும் புகழ்பெற்றான்.

சாந்தாகுரூசு மீது தாக்குதல் (1657) தங்கேக்கைக் கைப்பற்றல் (1658)

குரம்வெல்லின் வெற்றிகரமான இத்தலையீட்டுக்குச் சிறிது காலத்தின் பின்னர் அவன் பிரான்சுடன் ஓர் பொருத்தனை செய்தான். அதன்பயனாக இங்கிலாந்து 1656 ஆம் ஆண்டின் ஆரம்பத்திற் சிபெயின்மீது போர்ப் பிரகடனஞ் செய்தது. 1657 இல் கடற்போரிற் பெருவெற்றி கிடைத்தது. பிளேக்கின் தலைமையிலிருந்த கடற்படை, சிபானியத் திரவியக் கப்பல்கள் சாந்தாகுரூசுத்துறைமுகத்திற் கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டிருந்ததைக் கண்டது. கடற் பெருக்குடன் பிரித்தானியக் கப்பல்கள் அத்துறைமுகத்தில் நுழைந்து அங்குள்ள கப்பலொன்றையுந் தப்பவிடாமல் ஆழ்த்தியோ வெடி தீர்த்தோ, தீமூட்டியோ சேதப்படுத்திவிட்ட வற்றுடன் வெளியேறிவிட்டன[2]. அடுத்த ஆண்டில் (1658) தரைப்படை வீரர் பிரெஞ்சுப்படைகளுடன் சேர்ந்து தங்கேக்கு நகரை முற்றத்துணிந்தனர். ஆங்கிலேயர் கையிலே

[1]" சமீபத்தில் நிகழ்ந்த பீடுமைந்துக் கொலை " என மிலிற்றன் எழுதிய சொனெற்றுக் கவிதையைப் பார்க்க.

[2]தாய்நாடுதிரும்புகையில் பிளிமதுசவுண்டில் அவனுடைய கப்பல் பிரவேசித்த அன்று, அதாவது 1657-ஆம் ஆண்டு ஒகத்துமாதம் 7-ஆம் தேதி, பிளேக்கு இறந்தான்.

தங்கேக்கு இருந்தால் அது இடச்சுக்காரரை மீறவிடாது அடக்கிவைத் திருக்க உதவும். அத்துடன் ஐரோப்பாக் கண்டத்திற் பிரவேசிக்க அது வாயில் போலவும் உதவும். புதுமாதிரிச் சைனியத்தைச்சேர்ந்த ஆருயிரம் வீரர், பிரெஞ்சுச் சைனியத்துடன் சேர்ந்து கோட்டைக்கயலே நடந்த ஒரு சண்டையில் முக்கிய பங்கெடுத்தனர். இதனால் அவர்கள் "அமரர்" என்ற பட்டப் பெயரையும் பெற்றனர். இப்போருக்குச் சிறிதுநாட்களின் பின் தங்கேக்கு வீழ்ந்தது. ஆனால் குரம்வெல்லும் இறந்தான். அதையொட்டி உண்டான குழம்பிய நிலைமையில் மேலதிகமாயொன்றுஞ் செய்துகொள்ளமுடியவில்லே. இளாரெண்டன் என்ற சரித்திராசிரியன் "குரம்வெல் நாட்டில் ஈட்டிய புகழ், வெளிநாட்டிலவனுக்கு இருந்த கீர்த்தியின் வெறுஞ் சாயலே" என்று எழுதினன். அரச கட்சியைச் சேர்ந்த இச்சரித்திராசிரியரின் இந்தப்புகழுரையுடன் குரம்வெலின் பிறநாட்டுப் பூட்கைபற்றிய ஆராய்ச்சியை நிறுத்துவாம். முதலிரண்டு சதுவட்டுமன்னர் காலத்திலும் இங்கிலாந்து வெளிநாடுகளில் இழந்த பெருமையை நிலைநிறுத்த இப்பொதுநலவாயம் முயன்று வெற்றி கண்டது.

6. மீட்சிக்கு இட்டுச் சென்ற நிகழ்ச்சிகள் (1658–1660)

நாலாம் பருவம் (செத்தெம்பர் 1658–1660) சைனியமும் பாராளுமன்றமும்

1658 தொடக்கம் 1660 வரையுள்ள சிக்கல் நிறைந்த ஒன்றரை வருடம் நாலாவது பருவமாகும். குரம்வெல்லின் மகனுடை இரிச்சட்டு புரவலனாக நியமிக்கப்பட்டபொழுது "ஒரு நாய்கூடக் குரைக்கவில்லே; பெரிய அமைதி குடிகொண்டிருந்தது" என ஒருவர் எழுதினர். இந்த அமைதி நெடுநாள் நிலைத்திருக்கவில்லே. புதிய பாராளுமன்றம் கூடிற்று. சைனியத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர் பாராளுமன்றத்துடன் பிணங்கினர். மத்தியஸ்தம் செய்யவந்த இரிச்சட்டு உத்தியோகத்தருடன் சேர்ந்து பாராளுமன்றத்தைக் குலேத்தான். இரண்டுவாரஞ் சென்றபின் அவன் தனது பதவியிலிருந்து விலகினன்[1]. "எச்சப்" பாராளுமன்றத்தைத் திருப்பியழைக்கவேண்டுமெனச் சைனியம் தீர்மானித்தது. "எச்சப்" பாராளுமன்றத்திலே அப்போது அறுபது–எழுபது அங்கத்தவரே எஞ்சியிருந்தனர். இவர்கள் புதிய ஏவுநர் முதல்வனின் அதிகாரத்தை மட்டுப்படுத்த விரும்பினர். அன்றியும் சேனையிற் சேரும் உத்தியோகத்தருக்குச் சபாநாயகர் ஒப்பமிட்டே ஆணைப்பத்திரம் வழங்கவேண்டுமெனவும் ஒழுங்குசெய்தனர்.

[1]மீட்சியின்பொழுது இரிச்சட்டு ஐரோப்பாவுக்கு ஓடினன். 20 வருடங் கழித்து அவன் இங்கிலாந்துக்குத் திரும்பிவந்து 1712 இல் இறந்தான். "மென்மையும் ஒழுக்கமும் உள்ளவன், ஆனால் இக்குணங்கள் அவனைப் பெரியவனாக்கவில்லே" என அக்காலத் தொருவர் இவனைப் பற்றிக் குறிப்பிட்டார். இக்குணசுபாவத்தையே மரியாதையற்றவகையில் "இடறி விழுந்த இடிக்கர்" என்று வருணித்தனர்.

இதனால், புதிய அதிகாரிகள் நியமனத்தில் சபைத் தலைவர் ஓரளவு அதிகாரஞ் செலுத்த முடியுமெனக் கருதப்பட்டது. மனச்சாட்சிச் சுதந்திரம் சைனியத்துக்கு மிக அருமையானவிடயம். இப்பாராளுமன்றம் அதற்கு உலேவைக்கமுயன்றது. ஈற்றில், "நேர்மையுள்ள யோன்" என்ற இலம்பேட்டு சபையை முற்றுகையிட்டு அங்கத்தவரைப் புகவிடாது மறித்தான். இவன் சேனை வீரரால் நன்கு மதிக்கப்பட்டவன்; தைரியசாலி; உதாரகுணமுள்ளவன்; ஆனால் நிலையிற்றிரியும் குணம்படைத்தவன். மறுபடியும் சைனியம் வெற்றிபெற்றது.

மொங்கும் மீட்சியும்: பிரெடா பிரகடனம் (1660)

"பொறுக்கமுடியாத வாளாட்சியை" ஒழித்துவிடுவதற்கு நிச்சயித்தான் மற்றொரு தளபதி. இவனிடம் பெரிய சைனியமும் இறைசேரியில் 70,000 பவுணுமிருந்தன. சுதந்திரமுள்ள பாராளுமன்றத்தை அமைக்கவும் இவன் விரும்பினன். இவனே கொத்துலாந்திற் சேனைத் தலைவனுயிருந்த **யோட்சு மொங்கு**. 1659–ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 8–ஆம் தேதி இவன் கோல்சிரீம் என்ற இடத்தை அடைந்தான். இவனே எதிர்த்து வடக்கே சென்ற இலம்பேட்டின் போர்வீரர் பையவே நழுவ அவனால் ஒன்றுஞ் செய்யமுடியவில்லே. மொங்கு இலண்டனுக்குச் சென்று நெடிய பாராளுமன்றத்தை அழைத்தான். பிரைட்டு என்பவராற் கழித்து வைக்கப்பட்ட அங்கத்தவரையும் அழைத்தான். புதிய சுதந்திரமான ஒரு பாராளுமன்றங் கூடுதற்கு அவர்கள் ஒழுங்குசெய்யவேண்டுமென்ற நோக்கத்துடனேயே இவ்வாறு செய்தான். இவ்வொழுங்குகள் முற்றுனவுடன் மிகுந்த பரபரப்புடன் தேர்தல்கள் நடைபெற்றன. சதுவட்டுமன்னரை மறுபடி அரியாசனத்திலிருத்த வேண்டுமென்ற கொள்கையுடைய அங்கத்தவர் பெருந்தொகையாக இப்பாராளுமன்றத்திற் காணப்பட்டனர். எத்தகைய பூட்கைகளே அனுசரிக்கவேண்டுமென மொங்கு முன்னரே சார்ளசுக்குக் கூறியிருந்தான். **பிரெடா** என்ற இடத்திலிருந்து சார்ளசு இப்பூட்கைகளடங்கிய பிரகடனமொன்றை வெளியிட்டான். மக்கள் இப்பிரகடனத்தை உற்சாகமாக வரவேற்றனர். 1660–ஆம் ஆண்டு மே மாதம் 29–ஆந் தேதி சார்ளசு மறுபடியும் இலண்டனிற் பிரவேசித்தான். "வழியெங்கும் பூமாரி; மணிகள் ஒலித்தன; தெருவெங்குந் தோரணங்கள்; சனியெங்கும் மதுவோட்டம்." இவ்வாறு சார்ளசை வரவேற்றனர். பொது நலவாயம் ஒழிந்தது (குறிப்பு 70).

பொதுநலவாயத்தின் ஆட்சி

குரம்வெல் ஆட்சியும் பொது நலவாய ஆட்சியும் மக்களாற் கணடிக்கப் படாது போகவில்லே. முதலாம் சார்ளசு ஆட்சியிலும் பார்க்கப் பொது

நலவாய ஆட்சிக் காலத்திலேதான் தனி மனிதனின் சுதந்திரமும், பேச்சுரிமையும் அதிகமாக ஆபத்துக்குள்ளாயின. முதலாம் சார்ள காலத்திலும் பார்க்கப் பொது நலவாய ஆட்சிக் காலத்திலே வரிப்பளு மும்மடங்காகக் கூடியிருந்தபொழுதிலும், வரவுசெலவில் 5 இலட்சம் வரை வருடா வருடம் விழுக்காடு உண்டானது. யூதர், குவேக்கர், அங்கிலிக்கர் ஆகியோர் விடயத்தில் பொதுநலவாயம் சகிப்புத்தன்மை காட்டிய போதிலும் உரோமன் கத்தோலிக்கர் விடயத்திற் கடுமையாயிருந்தது. "வாள்கொண்ட சாதுக்களின் ஆட்சி" நகைப்புக்கிடமான தெனக் கூறுவது சுலபமே. வஞ்சினமுரைத்தல், வான் யுத்தஞ்செய்தல், குதிரைப்பந்தயம், கோழிச்சண்டை, கரடிவேட்டை என்பவற்றைச் சட்ட மூலம் தடை செய்து மக்களே நல்லொழுக்கமுள்ளவராக்க முயன்றதை எளிதில் ஏளனஞ் செய்யலாம். ஒய்வு நாளொழுங்கை மக்கள் கண்டிப்பாக அனுசரிக்கச் செய்யச் சட்டமியற்றுவதும் அத்தகையதே. ஆனால், பொது நலவாயத்தில் வியத்தற்குரிய பல அமிசங்களையுங் காணலாம். சமயச்சீர் திருத்தக் காலந்தொட்டு அன்றுவரை இதுபோலச் சகிப்புத்தன்மை மிக்க ஆட்சி இருந்ததில்லையென எடுத்துக் காட்டப்பட்டது. நாட்டில் ஒழுங்கை அது நிலைநாட்டியது. விரும்பத்தகாத பல களியாட்டங்களை ஒழிக்க முயன்று வெற்றிபெற்றது. அதனுடைய யாப்பு சம்பந்தமான பரிசோதனைகள் விவேகம் நிறைந்தவை. அத்துடன் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தவை. சான்செரிமன்றைத் திருத்தவும், வழக்குச் செலவுகளைக் குறைக்கவும் செய்த முயற்சிகள் பாராட்டத்தக்கவை. அக்காலத்தில் நடைமுறையிற் கொண்டுவர முயன்ற பல விடயங்கள் இக்காலத்துக்கே ஏற்றவை. ஆகவே தான் அவை வெற்றிபெறமுடியவில்லை. சுதுவட்டு அரசர்காலத்தில் இங்கிலாந்து வெளிநாடுகளில் மதிப்பிழந்திருந்தது. ஆனால் பொது நலவாய ஆட்சிக் காலத்துப் பிறநாட்டுப்பூட்கை இங்கிலாந்தின் மதிப்பை வெளிநாடுகளில் உயர்த்தியது. குரம்வெல்லின் அரசாங்கம் போல, பேரரசு விழைவால் உந்தப்பட்ட அரசாங்கம் முன்னிருந்ததில்லை எனவும் கூறப்பட்டது.

14 ஆம் அதிகாரம்

பிரித்தானியப் பேரரசின் தொடக்கம்

பேரரசின் தொடக்கம் (1603–88)

1603 இல் முதலாம் சேமிசு அரசுகட்டிலேறியபொழுது பிரித்தானியப் பேரரசு இருக்கவில்லை. வேசினியாவிற் குடியேற்றம் நிறுவ எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. கீழைத் திசைநாடுகளோடு வியாபாரம் நடத்துவதற்காக 1600 இற் கிழக்கிந்திய வியாபாரக் கம்பனி தொடக்கப்பட்டது. முதற் சென்ற கப்பற் கூட்டம் கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து திரும்பு முன் இலிசபெத்தரசி இறந்துவிட்டாள்[1]. சுதுவட்டு மன்னர்களோடு பேரரசு ஆரம்பித்தது. எனவே உண்ணாட்டுக் கருமங்களைப் பொறுத்தவரையிலும் வெளிநாட்டு விடயங்களைப் பொறுத்தவரையிலும் பதினேழாம் நூற்றாண்டு முக்கியம் வாய்ந்தது. இப்பேரரசின் வெற்றிகரமான வளர்ச்சிக்குத் தனிப்பட்டவர்களே பதினேழாம் நூற்றாண்டிற் பெரிதும் பொறுப்புடையவராயிருந்தனர் (குறிப்பு 83).

தூரகிழக்கில் இடச்சு ஆதிக்கம்

முதலிற் கீழைத்தேச அலுவல்களை ஆராய்வோம். இந்தியாவுக்கும் தூரகீழ்த்திசை நாடுகட்கும் செல்வதற்கு நன்னம்பிக்கை முனைவழியாகச் செல்லும் மார்க்கத்தை முதலிற் கண்டறிந்தவர்கள்[2] போர்த்துக் கேயரே. பதினாறும் நூற்றாண்டிலே இடச்சுக்காரரும், ஆங்கிலேயரும் இந்த வியாபாரத்திலே பங்கு கொள்ளத் தீர்மானித்தனர். தூரகிழக்கிலே இடச்சுக்காரர் ஏனையது முனைந்துநின்று துணிவொடு வர்த்தகத்திலீடுபட்டனர். இடச்சுக் கிழக்கிந்தியக் கம்பனி போர்த்துக்கேயரிடமிருந்து வாசனைத் தீவுகளைக் கைப்பற்றி அங்கே தனது ஆதிக்கத்தை நிறுவிற்று. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனியும் தூரகிழக்கிலே வியாபாரம் நடத்த முயன்றது. ஆனால் இடச்சுக் கம்பனி பலம் கூடியதாகவும் செல்வம் மிக்கதாகவுமிருந்தது. இடச்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்குமிடையில் அடிக்கடி பிணக்குண்டானது. அம்பொயினாவிலுள்ள இடச்சு ஆளுநர்க்கெதிராகச் சில யப்பானியரோடு சேர்ந்து சதிசெய்ததாகப் பத்து ஆங்கிலேயர் மீது பொய்க் குற்றஞ் சாட்டி[3]

---

[1]சேமிசு அரசுகட்டிலேறி ஆறு மாதத்தின் பின்னர் அது 10 இலட்சம் இறுத்தல் மிளகுடன் திரும்பிற்று.

[2]இலிசபெது ஆட்சிக்காலத்திலே சில ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வந்தனர். இந்தியாவுக்கு வந்த முதல் ஆங்கிலேயர் எசுசபையைச் சேர்ந்த பீற்சு என்ற பாதிரியாவர். இவர் 1579 இல் அங்குச் சென்றார்.

[3]இத்தகைய கொடுமைக்கு இடச்சுஅரசாங்கத்திடமிருந்து நட்டஈடு 30 வருடமாகக் கோரவில்லை. பின்னர் குரம்வெல், ஆங்கிலக்கம்பனிக்கும் கொலைசெய்யப்பட்டவர்களின் சொந்தக்காரருக்கும் பெருந்தொகைப் பணம் கொடுக்குமாறு வற்புறுத்தினான்.

இடச்சு அரசாங்கம் அவர்களே அம்பொயினுவிற் சிரச்சேதஞ்செய்தது (1623). இதன்பின்னர் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனி தூரகிழக்கில் இடச்சுக்காரருடன் வியாபாரப் போட்டியிடுவதை நிறுத்திவிட்டது. 18-ஆம் நூற்றாண்டு முடியும் வரை இந்த வியாபாரப் போட்டியில் அது இறங்கவில்லை.

இந்தியப் பெருநிலத்தில் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பனிக்குப் பெரும் வெற்றி கிடைத்தது. ஆனால் போத்துக்கேயரின் எதிர்ப்பை நிருவகிக்க வேண்டியிருந்தது. இருந்தும் அது முன்னேறியது. 1612 இல் முதன் முதல் அது இந்தியாவின் மேற்கரையிலுள்ள சூரத்திற் பண்டசாலையை ஏற்படுத்திற்று[1]. அதன் பின்னர் சென்னையிலும் (1639) பம்பாயிலும் (1661) கல்கத்தாவிலும் (1690) பண்டசாலைகள் அமைக்கப்பட்டன. 17-ஆம் நூற்றாண்டின் முடிவிற் கிழக்கிந்தியக்கம்பனிக்குப் போட்டியாக இங்கிலாந்தில் ஒரு கம்பனி நிறுவப்பட்டது. இவ்விருகம்பனிகளும் 1790 இல் இணைந்தன. இக்கம்பனி விரைவில் வியாபாரத்தை விருத்திசெய்தது. இதுவரை இந்தியாவிற்கு வந்த ஆங்கிலேயர் வியாபாரத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தனர். கன்னியாகுமரி தொட்டு இமாலயம்வரை பரந்த தொரு பேரரசைக் கிழக்கிந்தியக் கம்பனி எவ்வாறு அமைத்ததென்பதை மேல்வரும் அதிகாரமொன்றில் விளக்குவாம்.

வேசினியாக் குடியேற்றத்துக்கு அத்திவாரம் (1607)

ஆங்கில வியாபாரிகள் கிழக்கில் இவ்வாறு நல்ல வியாபாரத்தைவிருத்தி செய்துவர, மேற்கில் ஆங்கிலக்குடியேறிகள் பற்பல குடியேற்றங்களைத் தாபித்தனர். முதல் வெற்றிகரமான முயற்சி வேசினியாவில் நடைபெற்றது. 1607 ஆம் ஆண்டு மே மாதத்திலே 100 குடியேறிகள் செப்பீக்கு என்ற இடத்திலிறங்கி சேமிசுதவுன் என்ற குடியேற்றத்தை அமைத்தனர். முதலிற் சில தொல்லைகளுண்டாயின. 1608 இல், சிறிது காலம் வீரம் நிறைந்த தளபதி யோன்சிமிது[2] தலைமையில் முன்னேற்றமுண்டாயிற்று. 1601 இல் தலாவர் பிரபு வரும் வரை

[1]உள்ளூர் அரசன் இந்தப் பண்டகசாலை அமைப்பதற்கு அனுமதி கொடுத்திருக்கமாட்டான். ஆனால் அதே வருடத்தில் தளபதி தொமசுபெற்று என்பவன், பெருந்தொகையான போத்துக்கேயக் கப்பல்களை நானுமுறை சண்டையிட்டுத் தோற்கடித்தான். இதனால் அவனுக்குப் பெரும் புகழ் கிடைத்தது. பண்டகசாலை அமைக்க அனுமதியும் கிடைத்தது.

[2]யோன்சிமிதின் சுயசரிதம் நம்பத்தகுந்ததானால் அவன் நெதலாந்திலே சொனியருக் கெதிராயும் அங்கேயில் துருக்கியருக்கெதிராயும் சண்டை செய்திருப்பதாகக் காணகிறோம். பிரெஞ்சுக் கப்பலில் அவன் செல்லும் பொழுது புயலிலே அவனை இயூசனற்றென்று கருதிக் கப்பற்காரர் வெளியே தூக்கிவீசினர். வேறொரு கப்பல் அவனைக் காப்பாற்றியது. பின்னரும் துருக்கியரைமூவலைத் தோற்கடித்தான். பின்னர் கைதுசெய்யப்பட்டு அடிமையாக விற்கப்பட்டான். அவனது எசமானனுன துருக்கிய பாசாவை அவன் கொன்றுவிட்டு இங்கிலாந்துக்குத் தப்பியோடினான். அமெரிக்காவில் அவன் இந்திய அரசகுமாரியான பொகோவொன்தாசை என்பவளை மணந்ததாற் பிரசித்தமடைந்தான்.

இக்குடியேற்றத்தில் அதிக முன்னேற்றம் உண்டாகவில்லை. வேசினியாவின் ஆரம்பச் சரித்திரத்தில் இவன் ஆள்பதியாயிருந்த காலத்தில் ஒரு திருப்பமுண்டாயிற்று. பின்னர் தாய் நாட்டிலிருந்து ஏராளமான மக்கள் வேசினியாவிற்குச் சென்று குடியேறினர்.

யாத்திரைப் பெரியார்கள் (1620)

1620 இல் இன்னும் வடக்கே பியூரித்தானியக் குடியேற்றங்களுக்கு அத்திவாரமிடப்பட்டது. இலிசபெத்தரசி காலத்தில் இங்கிலாந்திலே நடந்த சமயக்கொடுமை காரணமாகப் பல பியூரித்தானியர் நாட்டைவிட்டு வெளியேறி ஒல்லாந்திற் குடியேறினர். இவர்களில் நூறு பேர் அமெரிக்காவில் ஒரு குடியேற்றத்தை நிறுவச் சேமிடம் அனுமதி பெற்றனர். இவர்கள் ஒல்லாந்திலிருந்து மறுபடியும் இங்கிலாந்துக்கு வந்து பிளிமதிலிருந்து **மேபிளவர்** என்ற கப்பலிற்சென்று கொட்டுமுனைத் துறைமுகத்திற் போயிறங்கினர். அங்கே நியூ பிளிமது எனும் குடியேற்றத்தை நிறுவினர். இவர்கள் "**யாத்திரைப்பெரியார்**" என வழங்கப்பட்டனர். சார்ள்சின் கொடுங் கோலாட்சியினாலும், சகிப்புத்தன்மையில்லாமையாலும், விரைவில் ஏராளமான மக்கள் இப்புதிய குடியேற்றங்களுக்கு வந்து சேர்ந்தனர். முதலாம் சார்ள்சு அரசுகட்டிலேறிய காலந்தொட்டு நெடிய பாராளுமன்றம் 1640 இற் கூடிய காலம் வரை இங்கிலாந்திலிருந்து நியூ இங்கிலாந்துக்கு ஏறக்குறைய இருபதினாயிரம் மக்கள் சென்று குடியேறினர் எனக் கூறப்படுகிறது[1]. நியூ இங்கிலாந்தென்ற பெயர் வடக்கேயுள்ள குடியேற்றங்களுக்கு வழங்கப் பட்டது. இக் குடியேற்றங்களில் முக்கியமானது **மசச்சுசெற்சு**. இவை நாளடைவில் விருத்தியடைந்தன.

இரண்டாம் சார்ளின் கீழ்க் குடியேற்றங்கள் விருத்தியடைதல்

அமெரிக்கக் குடியேற்றங்களின் சரித்திரத்தில் இரண்டாவது சார்ளின் ஆட்சிக்காலம் மிகமுக்கியமானதாகும். அரசன் பெயராலேயே **வடக்குக் கரோலினுவும் தெற்குக்கரோலினுவும்** தாபிக்கப்பட்டுப் பெயரிடப்பட்டன. அமெரிக்காவிலுள்ள ஆங்கிலேயரின் ஆள்புலங்கள் ஒன்றோடொன்று தொடர்ச்சியாயிருந்தன. முன்னர், ஆங்கிலேயர் குடியேறிய வடபகுதிக்கும் தென்பகுதிக்குமிடையிலுள்ள பகுதிகளில் இடச்சுக்காரர் குடியேறியிருந்

[1]1636 இல் குரம்வெல்லும் அமிடெனும், தங்கள் நாட்டின் நிலையை எண்ணி விசனப்பட்டு அமெரிக்கா செல்ல அனுமதிச் சீட்டுப் பெற்றனரென்றும், அரச கட்டளைப்படி அவர்களுடைய பிரயாணந்தடைசெய்யப்பட்டதென்றுமொரு கதையுண்டு. இதற்குப் போதிய ஆதாரமில்லை.

தனர். 1665 இல் நடந்த இடச்சு யுத்தத்தின் போது இந்தக்குடியேற்றங்கள் கைப்பற்றப்பட்டன. பின்னர் ஏற்பட்ட சமாதானத்தின் பயனாக இப்பகுதிகளை இடச்சுக்காரர் கைவிட்டனர். நியூ அமித்தடாம் என்ற நகரம் யோக்குக் கோமகனான சேமிசின் பெயரால் **நியூயோக்கென** மாற்றப்பட்டது. தலவார் பிரபுவினால் தாபிக்கப்பட்ட **நியூசேசியும் தெலாவேயரும்** புதிய குடியேற்றங்களாகும். குவேக்கர்தலைவனான உவில்லியம் பென் என்பவர் **பென்சில்வேனியாவைத்** தாபித்தார்.

அமெரிக்கக் குடியேற்றங்களின் நிலைமை

இங்கிலாந்துக்கும் அதன் அமெரிக்கக் குடியேற்றங்களுக்கு முள்ள தொடர்பைப்பற்றி பிற்பாடு சிறிது கூறுவாம். இக்குடியேற்றங்களொவ்வொன்றுக்கும் ஓர் ஆங்கில ஆள்பதி அனுப்பப்பட்டார். ஒவ்வொரு குடியேற்றமும் அனுபவித்து வந்த சுதந்திரம் பல படித்தாயது. குடியேற்றங்கள் செல்வவருவாய்க்கு நிலைக்களமென்று அக்காலத்திலே தாய்நாடுகள் கருதியது போலவே, இங்கிலாந்தும் கருதி அவற்றின் வியாபாரமுறையை ஆங்கில வியாபாரிகளின் நன்மைக்கேற்றவாறு அமைத்துக்கொண்டது. இக்குடியேற்றங்களிடையே குறிப்பிடத்தக்க பலவிதமான ஏற்றத்தாழ்வுகளிருந்தன. நியூ இங்கிலந்துக் குடியேற்றவாசிகள்[1] குடியாட்சியை நாடும் பெற்றியராய் பியூரித்தானிய மதத்தினராய் இருந்தனர். அவர்கள் கடினமான உழைப்பாளிகள்; உற்சாகம் நிறைந்தவர்கள்; ஆனால் ஒறுத்தவாழ்க்கையர். தெற்குக் குடியேற்றங்களிலுள்ளவர்கள்[2] உயர்குடி மரபினர். ஆங்கிலத்திருச்சபையைப் பின்பற்றுபவர்—இது சட்டப்படி தாபிக்கப்பட்டது. இங்கே காலநிலை சூடாயிருந்தது. அதனால் நெல்லும் புகையிலையுஞ் செய்கைபண்ணப்பட்டன. பண்ணை வேலையை அடிமைகள் செய்தனர். குடியேற்றவாசிகளிடம் மிகப் பெரிய பண்ணைகளிருந்தன. மத்தியகுடியேற்றங்களிலே[3] பல்வின மக்கள், பலசாதியையுஞ் சமயத்தையும் சேர்ந்தவர், காணப்பட்டனர். இத்தகைய பேதங்களினாலே இக்குடியேற்றங்களிடையில் ஒற்றுமை காணப்படவில்லை. எல்லைகள் பற்றியும் வேறு காரணங்கள் பற்றியும் அடிக்கடி பிணக்குக்களுண்டாயின. 1775 இல்

[1] நியூஇங்கிலாந்திலே, மசச்சுசெற்சு, கொனெற்றிக்கட்டு, நியூஅமிசயர், உரோடுத்தீவு என்பன சேர்ந்திருந்தன.

[2] இவை வேசீனியா, மேரிலாந்து, வடக்குக் கரோலினு, தெற்குக் கரோலினு என்பனவும் 1732 இல் தாபிக்கப்பட்ட யோட்சியாவுமாம்.

[3] நியூயோக்கு, நியூசேசி, பெல்சில்வேனியா, தெலாவேயர் என்பன.

தாய்நாடு அடக்குமுறையை அனுசரித்த பின்னர்தான்–குடியேற்றவாசிகள் தாய்நாட்டின் செய்கைகளே அடக்குமுறையென்றே கருதினர்—ஒற்றுமை உண்டானது. இதற்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குள்ளே, இந்த ஒற்றுமையினாலே காரணமாக வட பகுதியும் தென் பகுதியும் பிணங்கியதால் 1861 இல் அமெரிக்க உள்ளுட்டுயுத்தமுண்டானது.

பேரரசின் ஏனைய பகுதிகள்

17–ஆம் நூற்றாண்டிலே தோன்றி வளர்ந்த பேரரசின் ஏனைய பகுதிகளைப்பற்றிச் சிறிது கூறுவாம். 1626 இற் **பாபதோசுத்தீவு** வெற்றிகரமாகக் குடியேற்றப்பட்டது[1]. 1655 இல் குரம்வெல் கைப்பற்றிய **யமேக்காவின்** வளம் விரைவாக விருத்தி செய்யப்பட்டது. இத்தீவிலேதான், கரிபியன் கடலில் வியாபாரம் நடத்திய பிரெஞ்சுக் கடற்கொள்ளைக்காரர்[2] காணப்பட்டனர். நியூபண்ணிலாந்திலும் பகாமாசிலும் சில குடியேற்றங்கள் இளம்பின. மேற்கு ஆபிரிக்கக் கரையிலும் பல இடங்கள் கைப்பற்றப்பட்டன. 1651 இற் கிழக்கிந்தியக் கம்பனி சென் எலினாவைக் கைப்பற்றியது. 1609 இற் பேமுடாவில் சேர் யோட்சு சொமேசு குடியேறினார் அதன் ஆட்சி 1684 அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

[1] இத்தீவில் அரசகட்சியினரே காணப்பட்டனர். இவர்கள் பொதுநலவாய ஆட்சியை 1652 வரை எதிர்த்தனர்.

[2] இவர்களுட்பேர் போலவன் தனபதி தாம்பியர் எனலாம்.

15 ஆம் அதிகாரம்

இரண்டாம் சார்ள்சு (1660–1685)

1. முதற் கட்டம் : உண்ணாட்டு அலுவல்கள்

1660 ஆம் ஆண்டு நிகழ்ந்த அரச மீட்சி தொடக்கம் 1688 இல் நிகழ்ந்த புரட்சி வரையுள்ள இருபத்தெட்டுவருடத்து உண்ணாட்டு நிகழ்ச்சிகளை இனி ஆராய்வாம்.

இரண்டாம் சார்ளினதும் இரண்டாம் சேமிசினதும் குணவியல்பு.

அரச மீட்சியுடன் தேசத்தின் இலட்சியங்களில் விழுக்காடு உண்டானதை உணர்கிறோம். முன்னர் நிகழ்ந்த குழப்பங்களிடையே இரண்டு கட்சிகளிலும், உயர்ந்த நோக்கமும், விழுமிய குணநலமுமுடைய பெருமக்கள் தோன்றினர். அரச மீட்சிக்காலத்தோடு, தற்கால இங்கிலாந்து ஆரம்பமாகிறதென்பர். வீரர்காலம் மாறிப் பொது அறிவுயுகம் உதயமாகிறது. சார்ளசு அக்காலத்துக் கேற்ற குணம் வாய்ந்தவன். 15 வயது தொடக்கம் 1651 ஆம் ஆண்டுப் படையெழுச்சி நடந்த சிறு காலந்தவிர, எனைய நாட்களையெல்லாம் அரசன் அன்னிய நாடுகளில் நாடுபுறம்போகியாகக் கழித்தான். முப்பதாவது பிறந்தினத்தன்று 1660 இல் அவன் மன்னனாக இலண்டனிற் பிரவேசித்தான். விளையாட்டில் ஆங்கிலேயருக் கிருந்த பிரியம் இம்மன்னனிடத்துங் காணப்பட்டது. தெனிசு ஆடுவதில் ஆர்வங் கொண்டிருந்தான்.[1] வேட்டையாடுவதில் வேட்கை கொண்டிருந்தான். வைற்ரேலிலிருந்து அமிடென் கோட்டுக்கு அடிக்கடி நடந்து செல்வான். விவகாரங்களிற் சோம்பலுடையவனாயிருந்தான். அவனுடைய சிறு பின்னேத்தனம் மாற்றமுடியாத தொன்றாகும். "இயல்பிலே நான் சோம்பல்மிக்கவன்தான்; அவ்வாறிருப்பது நல்லதன்று" என்று அவனே ஒளிப்பு மறைப்பின்றிக் கூறினான். இடச்சு எதிரிகளின் பீரங்கிகள் தேமிசு நதிக்கப்பால் முழங்கிக் கொண்டிருக்கும் பொழுது அற்ப விட்டிற் பூச்சியை அவன் கலைத்துக்கொண்டிருந்தானென்பர். அவன் மிகத்தன்னலம் வாய்ந்தவன்; திடமான கொள்கையில்லாதவன். தன்னலத்துக்கு உகந்ததானால் தன்மதத்தையும், நண்பரையும் அமைச்சரையும் தியாகஞ் செய்யக்கூடியவன். நாடுகடத்தப் பட்டவனாயிருந்த காலத்திலே அவன் ஒழுக்கங்குன்றியது. இங்கிலாந்து வந்ததும் அவனுடைய அரசவையில் தியொழுக்கமும், கட்டுப்பாடில்லாத நெறியும் தாண்டவமாடின. காசில்மேன் சீமாட்டி, போட்சுமதக் கோமாட்டி போன்ற ஒழுக்கமற்ற பெண்களின் செல்வாக்கு அங்கு மேலோங்கிற்று. அரசன் கத்தோலிக்க சமயத்தவனாயிருந்தானும், அரசியலைப் பொறுத்தவரையில் மிகச் சாவதானமாகவோ மதக் கொள்கையைப் பொறுத்தமட்டில் நொதுமலாகவோ இருந்தனமயாற் போலும் தனது மதத்தை அவன் வாய்விட்டுக் கூறத் தயங்கினான்.

[1]காலையில் 5 மணிக்கே விளையாடத் தொடங்கிவிடுவான்.

அவனுக்குப்பின், இரண்டாம் சேமிசு எனும் பெயரொடு அரசுரிமை எய்தியவனும், அவன் தம்பியுமான சேமிசு சார்ளிலும் பார்க்கச் சில விடயங்களிற் சிறந்தவனாயிருந்தான். எனினும் அவனுடைய வாழ்க்கையும் பழிப்புடையதாகவே யிருந்தது. தமையனது ஆட்சிக் காலத்தில் இவன் சிறந்த போர் வீரனென்று பிரெஞ்சுச் சேனாபதியாற் புகழப்பட்டவன். கடற் படைவீரனாகக் கடலில் நன்கு சண்டை செய்தான். பின்னர் வைற்ரேலிலிருந்து கடற் படையைப் போதியதிறமையுடன் நிருவகித்து வந்தான். இவனிடம் ஊக்கமும், நேர்மையுங் காணப்பட்டன. அன்புள்ள எசமானாகவும் தந்தையாகவும் விளங்கினான். என்றாலும் இயற்கை, விஞ்ஞானம், கலை ஆகிய விடயங்களிலே[1] சார்ளசுக்கு சேமிசிலும் பார்க்க அதிக பற்று இருந்தது. மேலும் சேமிசிலும் பார்க்க அவன் இனிமையான சுபாவமும், சாதுரியமான புத்தியுமுடையவன். சேமிசிடம் இவை கிடையா. மேலும் அவன் சேமிசிலும் பன் மடங்கு திறமையுடையவன். "முயன்றால் விடயங்களை விளங்கக்கூடியவன் அரசன்; முயன்றாலும் விடயங்களை விளங்கக் கூடாதவன் கோமகன்" (அந்நாளில் யோக்குக் கோமகனாயிருந்த சேமிசே கோமகனென்க). இவ்வாறு ஒரு விமரிசகர் கூறினர். சேமிசு பிடிவாதக்காரன்; எல்லாவிடயங்களிலும் நிலைவாதி. சமயத்துறையில் அவன் உரோமன் கத்தோலிக்கன். அவனோடு உடன்படாதவர்கள் பரதெறியாளர் எனக் கொள்வான். வரம்பில்லாத உரிமையுடைய முடியாட்சியே சிறந்ததென அவன் நம்பினான். அதற்கு மாறானவரெல்லாரும் புரட்சிக்காரரென எண்ணினான். சார்ளசும் அவ்வபிப்பிராயங்களையுடையவனாயும் அவற்றை ஆதரிப்பதில் உறுதி உடையவனாயுமிருந்த போதிலும், விட்டுக் கொடுக்கும் சுபாவமும், தந்திரமும், காலம் வரும் வரை காத்திருக்கும் தன்மையும், "பழைய யாத்திரைகளிற் செல்லாதிருக்கவேண்டும்" என்ற நிடமும் உடையவனாயிருந்தான். சேமிசை எதிர்த்துவந்த பிரச்சினைகள் மிகச்சிக்கலானவையெனலாம். எனினும் சார்ளசு இருபத்தைந்து ஆண்டு அரசாண்டபின், ஆட்சியின் ஆரம்பத்திலிருந்ததிலும் பார்க்க முடிவில் மிகப் பலம் பொருந்தியவனாகக் காணப்பட்டான். சேமிசின் ஆட்சி நாலு வருடத்துக் கிடையில் திடீரென முடிவுக்கு வந்தது. இதற்கு முக்கிய காரணம், இவ்விருவருடைய குணங்களிலும் காணப்பட்ட வேற்றுமையேயாம். இங்கிலந்துக்குத் திரும்புமுன் **பிரெடாவிற் சார்ளசு ஒப்பமிட்ட ஒப்பந்தப்படி நாலு வாக்குறுதிகளை** அளித்திருந்தான். இவ்வாக்குறுதிகளை நிறைவேற்றுவது பாராளுமன்றத்

[1]அரச சங்கம் இரண்டாம் சார்ள்சு காலத்தில் நிறுவப்பட்டது.

தின் சம்மதத்தைப் பொறுத்திருந்தது. முதலாவதாகப் போர்வீரருக்குச் செல்மதியான பாக்கிச் சம்பளத்தைக் கொடுத்து விடுவதாக உறுதி கூறினன். இப்பாக்கி வழங்கப்பட்டது. அத்துடன் புதுமாதிரிச் சைனியத்திலே கோல் சிறீம் காவற் படையைத் தவிர வேறிய சேனைப் பகுதிகளெல்லாம் ஒழிக்கப் பட்டன. இரண்டாவதாகச் சார்ள்சு பொது மன்னிப்புவழங்குவதாக வாக்களித் தான். வஞ்சந்தீர்க்கும் குணம் சார்ள்சிடமில்லை. அவள் மன்னிப்பளித்து, நடந்ததை மறந்துவிட விருப்புடையவனுயிருந்தான். நட்டாடு மறதிவிதி என ஒரு விதியைப் பாராளுமன்றம் பல விதி விலக்குக்களுடன் நிறைவேற்றியது. முதலாம் சார்ள்சின் மரண ஆணையில் ஒப்பமிட்ட பதின் மூன்று கோக்கொலேஞர் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர். இருபத்தைந்து பேர் ஆயுட்காலச் சிறைத்தண்டனை பெற்றனர். உவெசு மினித்தரில் அடக்கஞ் செய்திருந்த குரம்வெல்லின் பிரேதத்தை மீலேச்சத்தனமாகக் கிண்டியெடுத்துத் தைபேணிலே தூக்கிலிட்டபின், தூக்குமரத்தடியிலே அடக்கஞ் செய்தனர்.[1]

நிலப்பிரச்சினை

மூன்றுவது, பொதுநலவாயத்தின் கீழ் நிலம் பெற்றவர்களுக்கு ஆட்சி யுரிமைக்காப்பு வழங்குவதாக சார்ள்சு வாக்களித்திருந்தான். நிலப்பிரச்சினை சிக்கலானதாய்க் காணப்பட்டது. திருச்சபைகட்கும், முடிக்குஞ் சேர்ந்த நிலங்களும், பொது நலவாயத்தினுற் பறிமுதல் செய்யப்பட்ட காணிகளும் அவ்வவற்றின் பழைய சொந்தக்காரருக்குத் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டுமென்று ஒழுங்காயிற்று. தனிப்பட்ட முறையிலே மக்கள் விற்றதனுற் கைமாறிய நிலங்களே இப்புதிய வொழுங்கு பாதிக்கமாட்டாதெனவும் விதிக்கப்பட்டது—எனினும், பொது நல வாயத்துக்குப் பணியாது நின்ற அரசகட்சியினர் மீது, அப்பொதுநல வாயம் பெருந்தொகையான அபராதம் விதிக்க, அதனை இறுத்தற்கா கவே பெருவாரியான நிலங்கள் விற்கப்பட்டனவென்பதை இங்குக் குறிப் பிடல் வேண்டும். இந்த இணக்கம் எந்தக் கட்சியினரையும் திருத்திப் படுத்தவில்லை. இரு கட்சியினருக்கும் இடர் விளைத்தது ஆனால் இது தவிர்க்க முடியாததொன்றே யெனலாம்.

சமயம்

இது வரை விடயங்களெல்லாம் மரபுப் பாராளுமன்றத்தால் தீர்த் துவைக்கப்பட்டன. ஆனால் இந்தப்பாராளுமன்றம் சார்ள்சின் **நாலாவது** வாக்குறுதியை நிறைவேற்றி வைக்கும் விடயத்தில் ஓர் உடன்பாட்டுக்கு வர முடியாமற்போய்விட்டது. இந்த வாக்குறுதி **மனச்சாட்சிச் சுதந்திர மளிக்கும் வாக்குறுதியாகும்.** பிரதானமான மதகுருமார் மூலம் ஒரு இணக்கத் திற்கு வரச் சார்ள்சு முயன்றான். ஆனால் அம்முயற்சி தோல்வியடைந்தது.

[1]இது கொலோற்றுச் சதுக்கத்தில் உள்ளது.

எனவே புதிய பாராளுமன்றம் அவ்விடயத்தைத் தீர்த்து வைக்க வேண்டிய தாயிற்று. இந்தப் பாராளுமன்றம் சரித்திரத்திலே **கவலியர் பாராளுமன்றம்** என வழங்கப்படும். இது 1661 தொடக்கம் 1679 வரை நிலவிற்று. இப்பாராளுமன்றத்தின் ஆரம்பகாலத்தில் அரசனிலும் பார்க்க இப்பாராளு மன்றமே அரசகட்சியில் ஆர்வமுடையதாகக் காணப்பட்டதெனக் கூறுவர்.

கவலியர் பாராளுமன்றம் (1661–79)

சமயவிடயத்திற் கவலியர் பாராளுமன்றம் உயர் திருச்சபையினரிலும் பார்க்க அங்கிலிக்க நெறியிற் பற்றுள்ளங் காட்டிற்று. 1661 இற்கும் 1665 இற் கும் இடையில் பியூரித்தானியருக் கெதிராக நாலு விதிகள் நிறைவேற் றப்பட்டன. மறுபடியும் சமயத் துன்புறுத்தல் தொடங்கிற்று (குறிப்பு 77).

கிளாரண்டன் கோவை (1661–5) : சமயத் துன்புறுத்தல்

இவற்றில் முதலாவதுவிதி **தொகுப்பக விதி** யெனப்படும். அரசனுக்கு எதிராக எச்சந்தர்ப்பத்திலும் தண்டெடுக்கும் முறையை ஆதரிக்கும் எவரும் இவ்விதிப்படி நகர சபை அலுவல்களே நடத்தும் நகராண்மைக் கழகங்களில் அங்கத்தவராயிருக்கமுடியாது. இக்கழகங்களே பாராளுமன்ற அங்கத்தவ ரைத் தெரிவு செய்வன என்பதை நினைவிற்கொள்ளல்வேண்டும். மேலும் இக்கழகங்களில், ஆங்கிலத்திருச்சபைப்படியன்றி வேறு முறைப்படி சற்பிரசா தம் பெற்றேரும் அங்கத்தவராக முடியாது. பியூரித்தானியர், நகர சபைகளிலும், பாராளுமன்றத்திலும் பெற்றிருந்த ஆதிக்கத்தை இவ்விதி ஒழிக்க முயன்றது. ஒரு சீர்மை விதியின்படி ஒவ் வொரு குருவானவரும், பாடசாலே ஆசிரியரும், அரசனே எதிர்க்க மாட்டேனென்று சத்தியஞ் செய்யவேண்டியிருந்தது. அத்துடன் பொதுப் பிரார்த்தனைப்புத்தகத்திற் கூறப்பட்ட எல்லாவற்றையும் ஒப்புக்கொள்வ தாக " உண்மையுடன் உடன்பாடும் இசைவும் " கூறவேண்டும். இப் புத்தகத்திலே சமீபத்தில் 600 மாற்றங்கள் செய்யப்பட்டன. இவைபெரும் பாலும் அற்பவிடயங்களைப் பற்றியவாயிருந்தபோதிலும் பியூரித்தானிய ருக்கே மாறுனவை. குறைந்தது 2000 குருமார் **இவ்விதிக்கு இணங் கமறுத்தனர்.** அதனால் அவர்களுக்கு ஊதியமில்லாமற்போனது. இந்த இரண்டாயிரம் குருமாரும் தமது பழைய வாசத்தலங்களுக்கோ நகரங்களுக் கோ ஐந்து மைல் எல்லைக்கு இப்பால் வரக்கூடாதென **ஐந்து மைல்விதி** யொன்று நிறைவேற்றப்பட்டது. அப்படிவருவதானால் தொகுப்பக விதி விதித்தவாறு எதிர்ப்புச் செய்யோமென்ற சத்தியத்தைச் செய்து, " திருச்சபையிலோ அரசிலோ எவ்வித மாற்றத்தையுஞ் செய்ய எக்காலத் திலும் முயலமாட்டோம் " என்று வாக்குறுதியளிக்க வேண்டும். **இரகசிய சமயக் கூட்டவிதிப்படி** ஆங்கிலத் திருச்சபைக் கூட்டங்களல்லாத மற்றச்

சமயக் கூட்டங்க ளெல்லாம் தடுக்கப்பட்டன. முதல் முறை இச்சட்டத்தை மீறினுற் சிறைத்தண்டனையும் மூன்றாம்முறை மீறினால் நாடுகடத்தலும் விதிக்கப்பட்டன. ஆங்கிலத் திருச்சபையினர்க்கும், பியூரித்தானியருளே தீவிரவாதிகளாயுள்ளவர்க்குமிடையிலிருந்த பிளவை இது முற்றுக்கி விட்டது. இவ்விதிகள் சில சமயம் **கிளாரண்டன் கோவை** எனவும் படும். அக்காலத்தில் முதல் அமைச்சனுயிருந்தவன் கிளாரண்டன். ஆனல் அவனே, அரசனே இப்பிரமாணங்களுக்குப் பொறுப்பாளிகளல்லர். எனவே கிளாரண்டன பெயரால் இவற்றை வழங்குவது முறையற்றதாகும். அரச னும் சமயத்துன்புறுத்தலில் எவ்வித பங்குமெடுக்கவில்லே.

1660 இன்பின்னர் முடிக்கிருந்த அதிகாரம்

மன்னிப்பு, நிலம், சமயம் ஆகியனபற்றிய பிரச்சினைகள் தற்காலிகமாக வாவது தீர்த்துவைக்கப்பட்டன. ஆனல் நாட்டில் உள்ள எந்தக் கட்சியினரும் தீர்த்துவைக்காத ஒரு பிரச்சினே எஞ்சிநின்றது. அதாவது அரசனுடைய அதிகாரத்தையும் பாராளுமன்றத்தின் அதிகாரத்தையும் எவ்வாறு ஒற்றுமைப்படுத்துவதென்பதேயாம். அரசமீட்சிக் காலத்திலே அரசன் தனது பழைய அதிகாரங்களே யெல்லாம் மீண்டும் பெற்று விட்டானென்று முதலிலே தோன்றலாம். முன்போலவே அரசன் தனது அமைச்சரை நியமித்து உண்ணுட்டுப்பூட்கையையும் பிறநாட்டுப் பூட்கையையும் நடத்திவந் தான். சேவை மானியவரிகள் ஒழிக்கப்பட்டனவேனும், சுங்கவரிமூலமும், உண்ணுட்டிறை மூலமும் கிடைக்கும் வருமானத்திலிருந்து, அரசன் வாழ்நாள் முழுவதும் வருவாய்பெறப் பாராளுமன்றம் அனுமதித்தது. சாள்சுவசம் நிலையான படையொன்றிருந்தது. அதில் 5000 போர்வீரர் இருந்தனர். அப்படையின் பலம் நாளடைவிற் பெருகிற்று. இந்த வகையில் சாள்சு அவனுக்கு முன்னுண்ட அரசரிலும் பார்க்க அதிகார முடையவனுயிருந்தான் [1].

ஆனல் உண்மையில் அரசனுக்குப் பழைய அதிகாரங்கள் கிடைக்கவில்லே. வெள்ளிமன்றம் போன்ற தற்போக்கான மன்றுகள் மறைந்துவிட்டன. மீட்சியென்றது முடியாட்சியின் மீட்சிமாத்திரமன்று ; பாராளுமன்றத்தின் மீட்சியுமே. அப்பாராளுமன்றத்தின் விருப்பங்களே அலட்சியஞ்செய்ய முடியா

[1] புது மாதிரிச் சைனியத்திலிருந்து காலாட்படையொன்றும் (கோல்டிரீம்) குதிரைப்படை யொன்றும் (நீலப்படை—அவர்கள் அணிந்த கோலவுடைபற்றி இவ்வாறு வழங்கப்பட்டது) அமைக்கப்பட்டன. குதிரைவீரரும், உயிர்காவற்படையெனும் சார் அலுவலரும் சேர்ந்த கிரனடியர் என்ற படையுமிருந்தது. இவற்றைவிடத் தஞ்சியரைப் பாதுகாப்பதற்காக ஒரு குதிரைப்படையும், காலாட்படையுமிருந்தன. இவை உரோயல் கிரகூன்கள் என்றும் இராணியின் பேரணியென்றும் பெயரிடப்பட்டன. பிரெஞ்சு மன்னன் சார்பிற் சண்டைசெய்த கொத்துலாந்துப் போர்வீரரைக் கொண்ட உரோயல் கொத்துலாந்தர் என்ற படையும் ஒல்லாந்திலே சண்டை செய்த வீரரைக் கொண்ட பவுகள் என்றபடையும் சாள்சு காலத்தில் தாபிக்கப்பட்டன. கொத்துலாந்துக் கிரேயர் என்ற படையும் இவன் காலத்திலேயே நிறுவப்பட்டது.

திருந்தது. மனிதரியல்பை நன்கறிந்த ஒருவர் " பிரெஞ்சு அரசன் தனது குடிகளேத் தான்நினைத்தபடி இட்டுச் செல்வான் ; ஆனல் ஆங்கில அரசன் தன் குடிகளோடு உடன் செல்லவேண்டியிருந்தது " என்று கூறினர். மேலும் 1667 இல் பாராளுமன்றம் பெரிதும் வலுப்பெற்றிருந் தது. குறித்த சில விடயங்களுக்காகவே அரசனுக்கு மேலதிகமான பணம் ஒதுக்கப்படலாமென்றும், அத்தகைய பணம் குறித்த அவ்விடயங்களுக்காகச் செலவு செய்யப்பட்டதா என்பதைப் பார்ப்பதற்குப் பாராளுமன்றத்தின் சார்பாகக் கணக்குப் பரிசோதனைசெய்தல் வேண்டுமென்றும் தீர்மானித்து அவற்றுக்கான ஒழுங்கையுஞ் செய்தது. பாராளுமன்றம் பணம் ஒதுக்கவும், ஒதுக்கிய பணம் செலவு செய்யப்படும் முறையைக் கண்காணிக்கவும் இதன் மூலம் உரிமைபெற்றது.

கிளாரண்டனின் அமைச்சு (1660–7)

சாள்சின் முதல் ஏழு வருட ஆட்சியில் (1660–67), **கலகத்தின் வரலாறு** என்ற பிரசித்தி பெற்ற நூலை எழுதிய **கிளாரண்டன் பிரபு** முதலமைச்சனு யிருந்தான். இவனுக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. இதனுல், கிளாரண் டன் அதிகாரத்திலிருந்த பொழுது சாள்சு "நாதி" அரசனுயிருந்தான், என்று அக்காலத்தவர் ஒருவர் குறிப்பிட்டார். கிளாரண்டன் நெடிய பாராளு மன்றத்திலே எட்டுவெட்டு ஓட்டு என்ற பெயருடன் ஓரங்கத்தவனுயிருந்தவன். அது கொண்டுவந்த சட்டங்களேயெல்லாம் இவன் ஆதரித்தான். பெரு மன் முட்டு கொண்டுவரப்படும் வரை இவ்வாறிருந்தான். கிளாரண்டன் கோவைக்கு இவன் பொறுப்பாளியல்லன். ஆனல் உயர்திருச்சபையைச் சேர்ந்த இவன் சமிப்புத்தன்மை யற்றவனுயிருந்தான். அரசியலில் மிதவாதியாயிருந்தான். நேர்மையும் அயரா உழைப்புமுடையவன் அவன். அரசனுக்கும் பாராளு மன்றத்துக்குமிடையில் ஆட்சிவலுச் சமநிலேயையுண்டாக்க வேண்டுமென் பதே இவனுடைய இலட்சியமாயிருந்தது. மிதவாதியாயிருந்த காரணத்தால் இவன் நாளடைவில் எல்லாவகுப்பாராலும் வெறுக்கப்பட்டான். இவனுடைய "பிரசங்கங்களேக்" கேட்டு அரசனுடைய காது புளித்துப்போய்விட்டது. ஒழுக்கம் பற்றி இவன் கடுமையாயிருந்ததால் அரசவைப் பிரபுக்கள் இகழ்ச்சி செய்தனர். பியூரித்தானியர் மாட்டுப் பொறுமையும், நிலப்பிரச்சினே, பொது மன்னிப்பு என்பன சம்பந்தமாக அவர்களுக்குப் பொறுதியுங்காட்டியதைக் கண்ட அரச கட்சியினர் வெறுப்புக்கொண்டனர். இணங்காதார் கிளாரண்டன் கோவையையிட்டு இவன் மீது வைரம் கொண்டனர். தனது மகளான ஆன் ஐட்டு என்பவளுக்கு அரசன் தம்பியான யோக்குக் கோமகனே மணஞ் செய்து வைத்தான். அது சுயநலமான செய்கையென்றும், அத

னுல் அவன் சுயநலவாதியென்றும் மக்கள் குறைகூறினர். தங்கேக்கு என்ற நகரத்தைப் பிரான்சுக்கு விற்றதின் பயனுகப் பதினுன்காம் உலூயி யென்ற பிரெஞ்சு மன்னன் அவனுக்கு இலஞ்சம் வழங்கினன் எனவும் குற்றஞ் சாட்டப்பட்டது[1].

இளாரண்டன் காலத்தில் இரு பெரிய அனர்த்தங்கள் நிகழ்ந்தன. அவற்றுக்கு அவன் பொறுப்பாளியல்லாவிட்டாலும், அவனுடைய பெயருக்கு மேலும் இழுக்குண்டானது. 1665 இல் உண்டான பெரிய கொள்ளை நோயினுல்[2] இலண்டன் நகரிலுள்ள குடித்தொகையில் ஐந்திலொரு பகுதியினர் மாண்டனர். அந்நோய் மாகாணங்களிலும் பரவிற்று. அடுத்த வருடமுண்டான பெருந்தீ நகரிலுள்ள வீடுகளில் மூன்றிலிருபங்கை அழித்தது. செண்போல் தேவாலயமுட்பட ஏறக்குறைய நூறு தேவாலயங் களையுமழித்தது. சேர்கிறித்தோபர் இறென் என்பவர் இவற்றுட் பலவற்றை மறுபடியும் கட்டினர்[3]. 1667 இல் இடச்சுக் கடற்படை தேமிசு நதியிற் காணப்பட்டது. அதற்குக் இளாரண்டனே பாத்திரவாளியென மக்கள் குறைகூறினர். எனவே பாராளுமன்றம் அவன் மீது பழிமாட்டறைந்தது. அரசன் அவனே வேலையிலிருந்து நீக்கினன். இளாரண்டன் தேசத்தை விட்டு வெளியேறினன்[4].

இரண்டாம் கட்டம் : இரண்டாம் சார்ளின் பிற நாட்டுப் பூட்கை

14 ஆம் உலூயி காலத்திற் பிரான்சின் நிலை (1643—1715)

பொது நலவாய ஆட்சிக்காலத்திலே இங்கிலாந்துக்கு ஐரோப்பாவெங்கும் செல்வாக்கு மலிந்திருந்தது. 1660 இற் சுதுவாட்டு அரசர் மீண்டதும் அந்தச் செல்வாக்கு மறையுந்தறுவாயிலிருந்தது. 1660 இல் இரண்டாவது சார்ளு ஆட்சி எய்திய காலந்தொடக்கம் இரண்டாவது சேமிசு மூன்றுவருட ஆட்சியின் பின்னர் தேடிக்கொண்ட புரட்சிவரையுமுள்ள இருபத்தெட்டு வருடத்தில் ஐரோப்பிய அரசியலில் பதினுன்காம் உலூயியென்ற பிரெஞ்சு மன்னனே நடுநாயகமாக விளங்கினன். இவன் 1643 தொடக்கம் 1715

[1] இனசரிக்குறிப்பு ஆசிரியரான பெப்பிசு என்பவர் எழுதிய குறிப்புக்களின்படி, பிக்கடிலியிலே இளாரண்டன் கட்டிய பெரிய வீட்டுக்குப் பொதுமக்கள் "தங்கேக்கு வீடு" என்று பெயரிட்டனர். தங்கேக்குப் பட்டினத்தை விற்றதாற் கிடைத்த இலஞ்சப் பணத்தினுற் கட்டப்பட்டதென்பது அவர்களுடைய அபிப்பிராயம்.

[2] கொள்ளை நோய் வருதற்கு நாலு மாதங்களுக்கு முன்னர் மழையில்லாத படியால், நகரின் சுகாதாரநிலை மோசமாயிற்று.

[3] செண்போல் தேவாலயத்தையும் வேறு 52 தேவாலயங்களையும் இறென் கட்டுவித்தார்.

[4] இளாரண்டன் கட்டிய புதிய வீட்டைச் சுற்றிய தோட்டத்தைக் கொண்டே ஐட்டுப்பார்க்கு அமைக்கப்பட்டது. இவ்வீட்டை அவன் வீழ்ச்சியடைந்ததும் அரசாங்கம் பறிமுதல் செய்தது.

வரை ஆண்டான். மிகுந்த வருவாயினுலும் திறமைமிக்க அமைச்சராலும் அற்புதமான சேனைத் தலைவர்களாலும், மீட்சிக்கு முன்னரே, அரசுக்கு உண்ணுட்டிலே தனியதிகாரமும் வெளிநாடுகளில் உயர்ந்த மதிப்பும் உலூயி பெற்று விட்டான். 1688 ஆம் ஆண்டுப்புரட்சி நடந்த காலத்தில் அவனுடைய பேராசையும் செல்வங்களும், ஐரோப்பாவிலுள்ள எல்லாத் தேசங்களுக்குமே ஆபத்துக் கேது வாயின.

பிரான்சு மாட்டு இரண்டாம் சார்ளு கொண்ட பூட்கை

அன்னிய நாடுகளின் உதவியின்றியே சார்ளு 1660 இல் இங்கிலாந்துக்குத் திரும்பினன். ஆனுல் முதலிலிருந்தே அவன் பிரான்சிடம் பற்றுடைய வனுனன் (குறிப்பு 78). அவனுடைய தாய் பிரெஞ்சுமாது. அவனுடைய சகோதரன் முறையான 14 ஆம் உலூயி, பிரான்சிலே பீடுமிக்க அரசனுயிருந்தான். அதேவகையிற் சார்ளும் இங்கிலாந்தில் அரசனுயிருக்க எண்ணியிருக்கலாம். இங்கிலாந்தின் வியாபாரத்தை விருத்திசெய்யச் சார்ளு விரும்பினன். இங்கிலாந்தின் வியாபாரவிருத்திக்குப் போட்டியாயிருந்தது பிரான்சன்று ; ஒல்லாந்தே என்பது அவன் கருத்து. அவன் அன்பு பாராட்டிய ஒரே ஒரு பேர் வழியான தன்சகோதரி என்றியெற்றுவை 14 ஆம் உலூயியின் சகோதரனை ஒலியன்சுக் கோமகனுக்கு வதுவை செய்துவைத்தான். 14 ஆம் உலூயியு டன் நட்புறவுகொண்டிருந்த போத்துக்கல் அரசனின் மகளான பிரகன்சா கதரீனுவைக் கலியாணஞ் செய்தான். கதரீனு சீதனமாகப் பம்பாய்த் துறைமுகத்தையும், மத்திய தரைக்கடலிற் கேந்திரத்தானமாயிருந்த தஞ்சியரையும் பெற்றுள். இவை இங்கிலாந்துக்கு மிகப்பயனுள்ள பிரதேசங் களாயின. பம்பாயைச் சார்ளு கிழக்கிந்தியக் கம்பனிக்கு வருடமொன்றுக்கு 10 பவுண்வீதம் குத்தகையாகக் கொடுத்தான். தஞ்சியர் மிக முக்கியமான துறையாயிருந்தபடியால் அங்கிருந்து கொண்டு மத்திய தரைக்கடல் வியாபாரம் முழுவதையும் கட்டியாளலாமென இங்கிலாந்து நினைத்தது. மேலும் சார்ளு தங்கேக்கைப் பிரான்சுக்குவிற்றுன்.

தங்கேக்கு விலைப்படல் (1662)

இது மக்களிடையே அதிருத்தியையுண்டாக்கினுலும் புத்தியான செய்கையேயாகும். தங்கேக்கு முக்கியத்துவம் வாய்ந்ததுறையன்று ; அங்கே படைகளை வைத்து அதைப்பரிபாலிப்பது செலவுமிக்க விடயமாயிற்று. தஞ்சியரிலும் தங்கேக்கிலும் படைகளை வைத்திருப்பது சார்ளுக்கு முடியாத காரியமாயிற்று.

இரண்டாவது இடச்சுப் போர் (1665–7)

இதற்கிடையில் இங்கிலாந்துக்கும் ஒல்லாந்துக்குமிடையில் வியாபாரப் போட்டிவலுத்தது. விசேடமாக இது ஆபிரிக்காவிலும் கிழக்கிந்தியத்

தீவுகளிலுமே அதிகமாயிற்று. இதனால் இரு நாட்டுக்கப்பல்களுக்குமிடையே அடிக்கடி பிணக்குண்டானது. ஒவ்வொருநாடும் மற்றையதன் வியாபாரத்தைக் கெடுக்கச் சண்டையிட்டது.[1] இவ்விருநாடுகளுக்குமிடையே வியாபாரப் போட்டி உச்சநிலையடைந்தது. இடச்சுக்காரருக்கெதிராகப் பல மனுக்கள் சாள்சின் அரசாங்கத்துக்கு வந்து குவிந்தன. கடைசியாக 1665 இல் ஒல்லாந்துக் கெதிராக யுத்தப்பிரகடனஞ் செய்யப்பட்டது. இது வியாபாரத்திலே போட்டியிடும் ஒரு தேசத்தை நசுக்குவதற்காக உண்டான போராகும் (குறிப்பு 79).

இந்தப் போரிற் பிரான்சு பேரளவில் ஒல்லாந்தை ஆதரித்தது. ஆனால் பெரும்பாலும்கடலிலே நடந்த சண்டைகளில் அது முக்கிய பங்கு பற்றவில்லே. கடும் போர் நடந்தது. அக்காலத்துத் தோப்பிடோக் கப்பல்கள் என்று கருதத் தக்க நீளகப்பல்களே இச் சண்டைகளில் முக்கிய பங்கெடுத்தன. அரசனுடைய தம்பியானயோக்குக் கோமகன் **உலோந்தவுத்து** என்ற இடத்தையடுத்துப் பெரியவெற்றியீட்டினன். தானிழந்த ஒரு கப்பலுக்கு ஈடாக அவன் பன்னிரு இடச்சுக்கப்பல்களே அழித்தான்[2]. அடுத்த வருடம் (1666) தரைப்படைத் தலேவர்களாயிராது கடற்படைத்தலேவராயிருந்த மொங்கு, ரூப்பேட்டு என்ற இருவர் தமது கப்பற்படைகளேப் பிரித்து விட்டனர். அதனால் நாலு நாள் நீடித்தசண்டையில் மொங்கு தோற்கடிக்கப்பட்டான். இச்சண்டை நாலுநாள் நடந்ததால் **நாலுநாட்சண்டை**யெனப்பட்டது. இது தங்கேக்கிற்கும், வடபோர்லந்துக்குமிடையில் நடந்தது. ஒழுங்காகச் செலுத்திய குதிரைப்படை போலச் சண்டைசெய்த மொங்கின் கப்பல்கள் நன்றாக நடத்தப்பட்டன. 1667 இல் இங்கிலாந்துக்கு நீங்காத வடுவையுண்டாக்கும் ஒரு சம்பவம் நிகழ்ந்தது. பணமின்மையாற் சாள்சு மன்னன் தனது கப்பல்களே ஒரிடத்தில் மறித்துவைத்தான்[3]. இடச்சுக்காரர் இதைப்பயன்படுத்தி **மெதுவேக்** கூடாகச் சதம்வரை சென்று 16 கப்பல்களேக் கைப்பற்றியோ அழித்தோவிட்டனர். ஆறு வாரத்துக்குப்பின் இங்கிலாந்து பிரெடாவில் ஒரு சமாதான உடன்படிக்கை செய்தது. இவ்வளவிலே தப்பியது இங்கிலாந்தின் நல்லதிட்டமே. இதன் படி வட அமெரிக்காவில் அதற்கு நியூசேசியும் நியூ அமித்தடாம் என்ற நியூயோக்கும் கிடைத்தன. கோமகன் பெயராலேயே நியூஅமித்தடாம் நியூயோக்கு எனப்பெயர் பெற்றது.

---

[1]துருக்கியக் கம்பனி, கிழக்கிந்தியக் கம்பனி என்ற இரு வியாபாரக் கம்பனிகள் இடச்சுக் கொன்னியால் தாமடைந்த நட்டத்தை 7,00,000 பவுணென மதிப்பிட்டன.

[2]சண்டையின் பின்னர் சேமிச நித்திரைக்குச் சென்றுவிட்டான் அவனல் கொடுத்த கட்டளையை விளங்கிக் கொள்ளாத காரணத்தால் இடச்சுக்கப்பல்களேத் தூரந்து செல்லத்தவறினர்.

[3]சாள்சின் இடாம்பீகமான வாழ்க்கையே பணமுடைக்கு ஒரு காரணமாகும். முக்கியமான காரணம், எதிர்பார்த்ததற்கு மிக அதிகமான யுத்தச் செலவே. பாராளுமன்றம் அனுமதித்த வரிகளால் எதிர்பார்த்ததற்குக் குறைவான வருமானமே கிடைத்தது.



பூட்கையில் மாற்றம். மூவர் நட்புறவு

பாராளுமன்றம் தனது பூட்கையை மாற்றத்தலைப்பட்டது. ஐரோப்பாவின் மாபெரும் மன்னன் எனப் பெயர் பெற்ற 14 ஆம் உலூயியைப்பற்றி மக்கள் அச்சம் கொண்டனர். உலூயி மீச்செல்லுமியல்பினன். பிரித்தானியப் பாராளு மன்றம் பிரான்சின் தாக்குதலைச் சமாளிக்க இடச்சு தேசத்தைப் பலப் படுத்த விரும்பிற்று. மேலும் உலூயி தன்னுட்டிலுள்ள புரட்டசுத்தாந்தியரை இம்சைபண்ணத் தொடங்கினன். எனவே முக்கியமான புரட்டசுத்தாந்திய தேசங்களான இங்கிலாந்தும், ஒல்லாந்தும், சுவீடனும் பிரான்சுக் கெதி ராக மூவர் நட்புறவொன்றை உருவாக்கின.

இந்த நட்புறவை இங்கிலாந்தில் எல்லாரும் வரவேற்றனர். சார்ள்சு பிரெஞ்சு அரசனின் கோபத்தை இடச்சுக்காரர் மீது[1] திருப்பி விடுவதற் காகவே இந்த உடன்படிக்கையை ஏற்றுக்கொண்டான் எனக் கொள்ளுதற்கு நியாயம் உண்டு.

தோவர்ப் பொருத்தனை (1670)

மூன்றாவது இடச்சுப் போர் (1672–74)

இந்த உடன்படிக்கை நடந்து ஒரு வாரத்துக்குள்ளே சார்ள்சு 14 ஆம் உலூயியுடன் சூழ்ச்சி செய்தான். பின்னர் இணக்கப் பேச்சுக்கள் நெடிது நடந்தன. இவற்றில் ஒளியன்சுக் கோமகள் பெரும் பங்கெடுத்தாள். கடைசியாகத் தோவர்ப் பொருத்தனை என்ற மாளாக்கேடான உடன்படிக்கை செய்யப்பட்டது (1670). இதன்படி ஒல்லாந்தைப் பிரிவினைசெய்யத் திட்ட மிடப்பட்டது. சார்ள்சுசெய்த இராணுவ உதவிக்காக அவனுக்கு உதவிப்பணம் வழங்க ஒழுங்கு செய்யப்பட்டது. இரண்டாவதாக, சார்ள்சு தனக்கு வசதியான தருணத்தில் உரோமன் கத்தோலிக்க சமயத்தைத்தழுவவும் அவ்வாறு பிரகடனஞ் செய்யவும், அதற்காகப் பணம் பெறவும், அதனால் நாட்டிலே குழப்பமுண்டானால் அதை அடக்க ஒரு படையை உதவியாகப் பெறவும் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்தப் பொருத்தனையின் கடைசிப்பகுதி இங்கிலாந்திலே இரண்டு அமைச்சருக்கே அறிவிக்கப்பட்டது[2]. மற்றை அமைச்சரையும் நாட்டவரையும் ஏமாற்றுவதற்காகப் "போலிப் பொருத்தனை" யொன்று எழுதப்பட்டது. இதில் இடச்சுக்காரரோடு செய்யும் யுத்தம் பற்றி மாத்திரமே கூறப்பட்டது. தோவர் உடன்படிக்கையுடன் சார்ளின் பிறநாட்டுப்பூட்கையிலுள்ள நயமான பகுதி முடிவடைந்தது. 1672 இல் நிகழ்ந்த இடச்சுப் போரில் இடச்சுக்காரர் வீரம் மிக்க முறையில்

[1]சார்ள்சு இடச்சுக்காரரை வெறுத்தான். ஒரு முறை அவன் "நாற்றமலித்த இடச்சுக்காரர்" என்று குறிப்பிட்டான்.

[2]இவர்கள் இலிப் போட்டும், ஆளித்தனும் ஆவர். இவ்விருவரும் உரோமன் கத்தோலிக்கர். இருவரும் கெபல் மந்திரி சபையைச் சேர்ந்தவர்கள்

எதிர்த்துப் போராடினர். கடல் மதில்களை அவர்கள் உடைத்துத் தமது நாட்டின் ஒரு பகுதியைக் கடல் கொள்ளவிட்டனர். பிரெஞ்சுக் காரரிடமிருந்து தப்புவதற்காகவேஇந்த யுத்தியை அனுசரித்தனர். இடச்சுக் கப்பல்கள் **சவுதுவோல்குடாக்கடலையடுத்துத்** தோற்கடிக்கப்பட்டாலும், யுத்தக் கடைக்கூற்றிலே சளைக்காது போர் புரிந்தன. 1674 இல் இங்கிலாந்து மிகுந்த மனஸ்தாபத்துடன் சமாதானஞ் செய்து கொண்டது. ஒல்லாந்தின் ஆதிக்கம் துண்டிக்கப்பட்டது. நாளடைவில் அதன் வியாபாரத் திலே பெரும் பகுதி ஆங்கிலேயர் கையிற் சிக்கியது.

பிற நாட்டுப் பூட்கை (1674–88)

1674 தொடக்கம் 1688 வரை பிறநாட்டு அலுவல்களில் இங்கிலாந்தின் முக்கியத்துவம் குறைந்து போயிற்று. ஒரோவழி அரசன் பிரான்சின் ஆதிக்கத்தை மதியாது சுதந்திரப்பான்மையை ஓரளவு காட்டினன். உதாரண மாக 1677 இல் யோக்குக் கோமகனின் மகளான மேரி அரசகுமாரி ஒல்லாந் தரசனை உவில்லியத்தை மணஞ் செய்த பொழுது அவ்வாறு நடந்தான். ஆனால், பெரும்பாலும் ஆங்கில அரசர்கள் 14 ஆம் உலூயியிடம் ஒய்வுச்சம் பளம் பெற்றவராகவே கருமமாற்றினர்.

ஆங்கிலேயர் மதிப்புக் குறைதல்

பாராளுமன்றத்துக்குத் தரிப்பிடும்பொருட்டு உலூயி இரண்டாம் சார்ளுக்கு ஏராளமான பணம் உதவினன். அவன் ஓரளவு சுதந்திரசுபாவம் காட்டி மறுத்தால், பாராளுமன்ற எதிர்த்திறத்துக்குப் பணம் கொடுத்துத் தான் நினைத்ததைச் செய்வித்தான். கடைசியாகச் சார்ளு இறப்பதற்கு ஒரு வருடத்திற்கு முன்னர் 14 ஆம் உலூயியை மகிழ்விப்பதற்காக தஞ்சியரைக் கைவிட்டான். 1685 இல் இரண்டாம் சேமிசு அரசுக்கு வந்த பொழுது அவனது கெடுதிநிறைந்த பூட்கையைப் பிரெஞ்சுத்தூதமைச் சனே முக்கியமாக ஆதரித்தான். இதற்கிடையில் 14 ஆம் உலூயியின் அதிகாரமும் பேராசையும் பெருகின. 1688 இற் புரட்சி உண்டான பொழுது அவனுடைய ஆதிக்கம் ஐரோப்பா முழுவதற்குமே ஆபத்தை உண்டாக்கக் கூடியதாயிருந்தது.

3. இரண்டாம் சார்ளும் சொந்த ஆட்சி நடத்த அவன் செய்த முயற்சியும்

இளாரண்டனின் வீழ்ச்சிக்குப்பின்னர் சார்ளு தனது பூட்கைப்படியே விடயங்களை நடத்தினன். அடுத்த ஐந்து வருடங்களில் (1667–73) 5 பேர் முதல்அமைச்சராயிருந்தனர். அவர் பெயரின் முதலெழுத்துக்களைக் கொண்டு அவ்வைவரின் அமைச்சு **கெபல்** அமைச்செனப்பட்டது. இவர்களிற்

கிளிபோட்டும் ஆளிந்தனும் உரோமன் கத்தோலிக்கர். மூன்றுவது முதலமைச்சனான பக்கிங்ஙம் ஆரம்ப சூரத்துவமுடையவன். அபிப்பிராயங் களை அடிக்கடிமாற்றினான். அவ்வாறே மாறிமாறிப்பல தொழில்களைச் செய்தான். ஒழுக்கத்திலும் கெட்டவனாயினான். இவையெல்லாம் அக்காலத்து இயல்பையே பிரதிபலித்தன. அடுத்த அமைச்சன் **ஆஷிலி கூப்பர்**. இவன் பின்னர் சாபிற்சுபெரிப் பிரபுவானான். தனக்கு வசதிபார்த்து கட்சிமாறுவது அவன் இயல்புனைக்குற்றஞ் சாட்டப்பட்டான் (குறிப்பு 80). ஆனால் இவன் மிகத்திறமைவாய்ந்த அரசறிஞன். சமயவிடயங்களிலே சகிப்புத்தன்மை வேண்டுமென்ற கொள்கையுடையவன். குடியேற்றமும் வியாபாரமும் விருத்தியடைய வேண்டுமெனவிரும்பினவன். அதனால் இடச்சுப்போரை அவன் ஆதரித்தான். தற்காலக்கருத்துப்படி மூதன் முதற்றேன்றிய கட்சித்தலைவன் இவனேயெனச் சில சரித்திராசிரியர் கருதுகின்றனர். தற்காலப்பாராளுமன்றப்பிரசங்க மரபுக்கு வித்திட்டவனு மிவனே. **உலோடேல்** என்பவன் கடைசியாக நியமிக்கப்பட்ட அமைச்சன். எல்லாரிலும் இவனே கொடுமைமிக்கவனெனலாம். இவன் கொத்துலாந்தை ஆட்சி செய்தான்.

மன்னிப்பு அறிக்கைப்பிரகடனமும் (1672) சோதனைவிதியும் (1673)

இந்தக் கெபல் அமைச்சு இக்கால மந்திரம் போன்றதன்று. இதன் அங்கத்தவர் எகோபித்த அபிப்பிராயமுடையவரல்லர். இவர்களுக்குத் தலைவரில்லை. இவர்கள் ஒன்றுசேர்ந்து ஆலோசனை கூறியதுமில்லை. இந்தக் கெபல் அமைச்சு இருந்தபொழுதுதான் மூவரசு நட்புறவும், இரகசியமான தோவர்ப் பொருத்தனையும் உருவாயின. இந்தப் பொருத்தன யைப்பற்றிக் கிளிபோட்டுக்கும் ஆளிந்தனுக்குமே தெரியும். மூன்றுவது இடச்சுப் போரும் இக்காலத்திலேயே நிகழ்ந்தது. (270 ஆம் பக்கம் பார்க்க). இடச்சுப்போர் தொடங்குவதற்கு முன்னர் 14 ஆம் உலூயியோடு செய்த உடன்படிக்கைப்பிரகாரம் சார்ளு **பாவமன்னிப்பு அறிக்கையென** ஒரு கட்டளையைப் பிரகடனஞ் செய்தான். இதன்படி உரோமன்கத்தோலிக்கருக் கும், இணங்காதாருக்கும் பொறுதிவழங்கப்பட்டது. அவர்களுக்கு எதிராக நிலவிய தண்டசட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன (1672). ஆனால் பாராளுமன்றம் இதை ஆட்சேபித்தது. எனவே பாவமன்னிப்பு அறிக்கையைச் சார்ளு நீக்கியதோடு **சோதனை விதி** என ஒரு சட்டத்தை நிறைவேற்றினான். இதன் படி ஆங்கிலத்திருச்சபைக் கிணங்கச் சற்பிரசாதம் பெறாத எவரும் அரசாங்க உத்தியோகம் வகிக்க முடியாதென விதிக்கப்பட்டது (1673). இதன் பயனாக யோக்குக் கோமகன் கடற்படைப் பகுதியிலிருந்து ஓய்வு பெற்றான். கிளிப்போட்டும் ஆளிந்தனும் அமைச்சி லிருந்து நீங்கினர். சார்ளு பின்னர் சாபிற்சுபெரியைப் பதவியிலிருந்து நீக்கினான். இத்துடன் கெபல் அமைச்சு முடிவுற்றது (1673) (குறிப்பு 482).

தன்பியின் அமைச்சு (1672–78)

அடுத்த ஐந்து வருடத்துக்குத் **தன்பி** என்பவன் சார்சின் முதலமைச் சனானான். இவன் ஆங்கிலத்திருச்சபையைச் சேர்ந்தவன். இங்கிலாந்தில் உரோமன் கத்தோலிக்கமதத்தை மீளநிறுவுதலாகிய முயற்சியைச் சார்ளு தற்காலிகமாக நிறுத்தினான். இக்காலம் அரசியற் சூழ்ச்சிகள் மலிந்த காலம். கவலியர் பாராளுமன்றம் துடித்துக் கொண்டிருந்தது. வேலையிலிருந்து நீக்கப்பட்ட சாபிற்சுபெரி இருசபைகளிலும் எதிர்ப்புக் கட்சியைப் பலப்படுத்தினான். அது விரைவில் மிக்கபலம் பெற்றது. இதற்கிடையில், பிரெஞ்சு மன்னன் பாராளுமன்றத்துக்குத் தரிப்பிடுமாறு சார்ளுக்குக் கைக்கூலி கொடுத்து வந்தான். பின்னர் எதிர்க்கட்சிகளுக்கு இலஞ்சம் வழங்கி அரசனை எதிர்ப்பதற்கு ஊக்கமளித்தான். நாட்டில் அச்சமும் பரபரப்புமுண்டாயின. பின்னர் நடந்த ஒரு நிகழ்ச்சி நேசத்தைத் திடமுறச் செய்தது.

போப்பாண்டவர் சார்பான சதி (1678)

1678 ஆம் ஆண்டின் இலையுதிர் காலத்திலே தைற்றசு ஒற்சு என்பவன் இலண்டனிலுள்ள ஒரு நீதிபதி[1] முன்னர் போப்பாண்டவர் சார்பான ஒரு சதி நடைபெற்றுவருவதாயும், அந்தச் சதியின் நோக்கம் அரசனைக் கொன்று, யோக்குக் கோமகனை அரசனுக்குவதென்றும், பின்னர் பிரெஞ்சுப்படை யொன்றை இங்கிலாந்துக்குக் கொண்டுவருவதென்றும் அறிவித்தான். இதன் பின்னர் அந்த நீதிபதி இறந்து கிடக்கக் காணப்பட்டார். இது கொலையென்பது தெளிவாயிற்று. உடனே போப்பாண்டவர் சார்பான சதிச் செயல்களைப் பற்றி எப்பொழுதுமே அச்சங் கொண்டிருந்த மக்கள் திகி லுற்று எக்கந்தலே நின்றனர். தைற்றசு ஒற்சு[2] தறுகுறும்புக்காரனாயிருந்த போதிலும், மக்கள் அவன் கூறியதை முற்றுகநம்பினர். வேறும் பலர் நாட் டின் பல பகுதியிலும், விடயமறிவிக்க முற்பட்டனர். சில்லறைச் சாட்சியங்கள் மீது உரோமன் கத்தோலிக்கர் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டுச் சிரச்சேதஞ் செய்யப்பட்டனர். உரோமன் கத்தோலிக்கர் தம்மைத்தாக்குவர் என்று கற்பனை செய்து கொண்டு புரட்டசுத்தாந்தியர் கையிலே தண்டுடன் நடமாடினர். பாராளுமன்றச் சபைகளிரண்டும் எகோபித்து, "அழிவுக்கேதுவான மிகவிழிந்தசதி" இருந்துவருவதாய்க் கூறின. சதி யொன்று இருந்ததென்பது ஒருவகையில் மெய்யே. தோவர்ப் பொருத்தனை பயனுகச் சார்ளும் அந்தச் சதியிற் சம்பந்தப்பட்டிருந்தான். இதன்படி சார்ளு இங்கிலாந்திலே கத்தோலிக்க சமயத்துக்குப் புத்துயிரளிக்கக் கடமைப்

[1]சேர் எடுமண்டு பெரிகொட்பிரி.

[2]பாடசாலையிலிருந்தும், இயேசுசபைக் கல்லூரிகளிரண்டிலிருந்தும் அவன் கலைக்கப்பட்டான். பொய்ச்சாட்சியம் கூறியதற்காக இருமுறை அவன் மீது கட்டளை வரைவு பிறப்பிக்கப்பட்டது.

பட்டிருந்தான். ஆனால் இச்சதியைப் பற்றிக் கூறப்பட்டவிவரங்கள் கற்பனைக் கதைகளே. சாபிற்சுபெரியும் எதிர்க்கட்சியும், இச்சதியைத் தமக்கு வேண்டிய வகையிலே நிரித்துப் பயன்படுத்தித் கொண்டனர். இரண்டாம் சார்ளின் பின்னர் அரசுரிமை சேமிசுக்குப் போகாது தடுத்து, அரசனின் சோரமகனை மொன்மதுக்கோமகனுக்கு அதை வழங்கவே இந்த முயற்சியிலீடுபட்டனர். இச்சதியினால் எற்பட்ட பரபரப்பு இப்புதிய திட்டத் துக்கு ஆதரவளிக்குமென அவர்கள் கருதினர்.

குறுகிய பாராளுமன்றம் மூன்று (1679—81)

ஆளுரிமை விதி

1678 ஆம் ஆண்டு இலையுதிர்காலத்தில் சார்ளின் கட்டளைப்படி. தன்பி பிரெஞ்சு அரசனிடமிருந்து பணம் பெற நடத்திய இணக்கப் பேச்சுக்கள் அம்பலமாயின. உடனே தன்பிமீது பழிமாட்டறைந்தனர். அவனைக் காப்பாற்றுவதற்காகச் சார்ளு கவலியர் பாராளுமன்றத்தைக்கூலைத்தான். இது 1661 இலிருந்து அமர்ந்துவந்தது (சனவரி 1679). பின் இரண்டு வருடத்துக்கிடையில் மூன்று குறுகியபாராளுமன்றங்கள் கூட்டப்பட்டன (1679–81). தன்பியை அரசன் மன்னித்து விட்டான். அப்படியிருந்தும் அவனைக் கோட்டையிற் சிறைவைக்குமாறு முதற் பாராளுமன்றம் நெருக் கிற்று. இதன் விளைவாக அமைச்சர் அரசாங்கச் செய்கைகளுக்குப் பொறுப் புடையவர் என்ற தத்துவம் வலுப்பெற்றது. சாபிற்சு பெரியின் செல் வாக்கினால் மிகமுக்கியம் வாய்ந்த **ஆளுரிமை விதி** (அபியசுக்கோப் பசுச் சட்டம்) நிறைவேற்றப்பட்டது. இதன் பிரகாரம் காவலில் வைக்கப்பட்ட ஒருவரைத்தாமதமின்றி விசாரணைசெய்ய வெண்டுமென்பது உறுதியாயிற்று.

விலக்குமுறி : புரட்சுத்தாந்திய அரசுரிமை

இம் மூன்று குறுகிய பாராளுமன்றங்களிலும் முக்கியமாக விவாதிக்கப் பட்டவிடயம் சேமிசை அரசுரிமை பெறவிடாமற்றடைசெய்வதே. சேமிசு கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவனாதலால் அவனை அரசுரிமை பெற விடாமற்றடுப்பதற்கு எதிர்க்கட்சிமுயன்றது. எனவே சாபிற்சுபெரியும் எதிர்க்கட்சியும், புரட்சுத்தாந்திய மதத்தைச் சேர்ந்த மொன்மதுக் கோமகனை அரசனுக்க முயன்றனர். மொன்மது சார்ளின் சட்ட பூர்வமான மகனென்றும், சார்ளுக்கும் மொன்மதின் தாய்க்கும் நடந்த மணம் சட்டபூர்வமான தென்றும் அதற்குரிய விவாகச் சான்றிதழ் "கறுத்தப் பெட்டி" யொன்றில் ஒளித்துவைக்கப்பட்டுள்ள தென்றும் எடுத்துக் காட்டப்பட்டது. தன் மகனைச் சட்ட பூர்வமானவனென்று காண்பதிலும் அவனைத்தூக்கிலிடுவது பொருத்தமானதென்று சார்ளு கூறினான். இக்காலத்திலேதான் அரசியற் கட்சிகள் முதன் முதலாக நிறுவப்பட்டன. முதலில் இக்கட்சியினர், **மனுவாளர்** எனவும் **வெறுப்பாளரெனவும்** பெயர் பெற்றனர். மனுவாளர் பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டு மென மனுச் செய்தனர். வெறுப்பாளர் அரசனுடைய தற்சிழமை களைக் குறைப்பதை வெறுத்தனர். ஒரு கட்சியினர் மற்றக்கட்சியினரை வெறுத்துக் கொடுத்த பெயர்கள் **உவிக்கு** என்பதும் **தோரியென்பது** மாகும். உவிக்கு என்பது கொத்துலாந்தர் மொழியிலே தளர்நடை என்று பொருள்படும். இப்பெயர் சில தீவிரவாதிகளான கொத்துலாந்து எற்பாட்டாள ருக்கு வழங்கப்பட்ட பட்டப்பெயர். உரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த, அடங்கா ஐரிசுக்கலகக்காரர் சிலரின் வழி, தோரி எனும் பெயர் உண்டாயிற்று (286 ஆம் பக்கம் பார்க்க). இப்பெயர்கள் இன்று வரை நிலவிவருகின்றன. மூன்றுவது குறுகிய பாராளுமன்றத்தின் கூட்டம் இலண்டனில் நடைபெறவில்லை. அரசசபைக்கெதிராக மக்கள் இலண்டனில் மிகுந்த ஆர்ப்பாட்டஞ் செய்தனர். எனவே இக்கூட்டம் ஒட்சு போட்டில், பட்டமளிப்பு மண்டபத்திற் கூடியது. அங்கத்தவர் ஆயுதபா ணிகளாய் வந்தனர். மிகுந்த பரபரப்பு அவர்களிடையே காணப்பட்டமையே இதற்குக் காரணம். ஒருவாரம் மட்டுமே இப்பாராளுமன்றம் நிலைத்திருந் தது. பின்னர் சார்ளு அதைக் கலைத்து விட்டான். விலக்குமுறி நிறைவேற் றப்படவில்லை. (1681).

சார்ளின் ஆதிக்கம் (1681—85)

சார்ளு தான் நினைத்தபடி கருமங்களைச் செய்யக்கூடிய நிலை எற்பட்டது போலத் தோன்றிற்று. போப்பாட்சிச் சார்புடைய சதியாலுண்டான திகில் அடங்கியிருந்தது. நடந்த கருமங்கள் யெண்ணி மக்கள் வெட்கமடைந்தனர். 70 வயதுக்கு மேற்பட்டவனும், தூயவாழ்க்கை நடத்தியவனுமான திரபட் டுப்பிரபு, சதியி லீடுபட்டானென்ற உண்மையற்ற செய்தியை நம்பி, அவனைத் தூக்கிலிட்டனர். இச்செய்திகள் வெறும் கட்டுக்கதை யென்பதை இக்கொடுஞ் செயலால் மக்கள் இப்பொழுது உணர்ந்தனர். எதிர்க்கட்சியின் செல்வாக்கு இதனால் குறைந்தது.

இரைமனைச்சதி (1683)

எனவே சாபிற்சுபெரி பரதேசஞ் சென்றான். அங்கே அகதியாயிருந்து இறந்தான். மொன்மது நாடுகடத்தப்பட்டான். பின்னர் நியூமாக்கெற்றில்

குதிரைப்பந்தயம் பார்த்துவிட்டுத்திரும்பி வருகையில் அரசனைக் கொல்லச் சதிசெய்யப்பட்டது. ஒளித்திருந்து கொல்வதற்கு நியமிக்கப்பட்ட பதுங்கிடம் இரைமனை ஆதலால் இச்சதி **இரைமனைச் சதி**யென வழங்கப்பட்டது. இதைச் சாட்டாகக் கொண்டு சார்ள்சு அநியாயமாக முக்கிய உலிக்குத் தலைவர்களான இரசல், சிட்னி என்னுமிருவரைச் சிரச்சேதஞ் செய்வித்தான் (1683).

இவ்வாறு தன் எதிரிகளை அடக்கியபின் சார்ள்சு மிகைபடச்சென்றான். சோதனைவிதியை மீறி அவன் தனது தம்பியான சேமிசை மறுபடியும் உத்தியோகத்திலமர்த்தினான். 1681 தொடக்கம் 1684 வரை அவன் 14 ஆம் உலூயி இரகசியமாக அனுப்பிய உபகாரப்பணத்தைப் பெற்றுக் கொண்டு பாராளுமன்றம் இல்லாமலே ஆட்சி நடத்தினான். இப்போது பாராளுமன்றத்தேர்தல்களைத் தான் நினைத்தவாறு நடத்தத் துணிந்தான். இலண்டன்நகரப் பட்டயத்தையும் அறுபத்தைந்து பெரிய நகரங்களின் பட்டயங்களையும் மாற்றினான்[1]. இவை முன்னர் உலிக்குக்கட்சி அங்கத்தவரை அனுப்பிவந்தன. இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பிரோக்களின் ஆட்சித் தாபனங்களை அரசனே நியமித்தான். இதன் பயனுகத் தான் விரும்பிய பாராளுமன்ற அங்கத்தவரையே இவை அனுப்பக்கூடியவாறு அரசன் ஒழுங்கு செய்தான். இந்த முயற்சியில் அரசன் எவ்வளவுதூரம் வெற்றி பெற்றிருப்பான், பாராளுமன்ற அமைப்பை எவ்வளவு தூரம் அவன் ஒழுங்கு செய்திருப்பான் என்பவற்றை அறிந்து கொள்வதற்குமுன் அவனுக்குத் திடீரென நோய்கண்டது. தான் மரணத்தறுவாயிலிருப்பதை அறிந்த அரசன், பல ஆண்டுகட்குமுன் உசுற்றாலிருந்து தான் தப்பியோடத்துணைபுரிந்த முதிய குருவானவரிடம் இரகசியமாக ஆளனுப்பி, உரோமன் கத்தோலிக்க சம்பிரதாயப்படி அவரிடம் சற்பிரசாதம் பெற்ற பின்னர் இறந்தான்.

[1] "யாதுரிமைக் கட்டளை" ப்படி இப் பட்டயங்களை மாற்றினான்.

16 ஆம் அதிகாரம்

இரண்டாம் சேமிசு (1685—1688)

இரண்டாம் சேமிசு அரசெய்தல் (1685)

தமையன் இறந்ததும் **இரண்டாவது சேமிசு** தொல்லேயின்றி அரசுரிமை பெற்றான் **(பெப்பிரவரி 1685)**. விலக்கு முறி சம்பந்தமாகச் சேமிசு கடினமாக நடத்தப்பட்டானென மக்கள் நினைத்தனர். மிதமான கொள்கையுடைய மக்களெல்லாரும் அவனை ஆதரித்தனர். ஆர்வம் மிக்க பற்றைக் காட்டிய பாராளுமன்றம், அரசனுக்கு எராளமான பணத்தை ஒதுக்கிற்று. போப்பாட்சிச் சார்புடைய சதிபற்றிக் கதைகட்டியவர்களுக்கு அநாகரிகமான கொடுந்தண்டனை விதிக்கப்பட்டபோதிலும்—ஒற்சுக்கு மூன்றுநாளில் 3400 சவுக்கடி வழங்கப்பட்டது—அவர்களுக்கு வழங்கப்பட்ட தண்டனை பொருத்தமானதேயென மக்கள் கருதினர்[1].

மொன்மது மூட்டிய கலகம் (1685)

இரண்டு கலகங்களை அரசன் அடக்கியதால் அவனுடைய நிலை வலுப்பெற்றது. கொத்துலாந்திலே **ஆகைலென்**பவன் மொன்மதை ஆதரித்துக் கலகஞ் செய்தான். அவனுக்கு அவனுடைய சொந்த இனத்தவரான கம்பெல் வகுப்பினரே துணைபுரிந்தனர். அவன் கைதுசெய்யப்பட்டுச் சிரச்சேதஞ் செய்யப்பட்டான். **மொன்மது** தானுகத் தோசெற்றில் வந்திறங்கி அங்குள்ள இராமவாசிகளையும் சொமசெற்றுவாசிகளையும் பெருந் தொகையாகச் சேர்த்துத் தனக்குத் துணைபுரியுமாறு வேண்டினான். **செட்சுமூரிலே** தங்கியிருந்த அரசன் படைகளை இரவிற் சென்றுதாக்க மொன்மது திட்டமிட்டான். அவனுடைய முயற்சி வெற்றிபெற்றிருக்கும். ஆனால் எதிர்பாராதவிதமாகக் குறுக்கே கிடந்த கடத்தற்கரிய அகழொன்று அவனுடைய முன்னேற்றத்துக்குத் தடையாயிருந்தது. எனவே அவனுடைய தாக்குதல் தோல்வியுற்றது. அவன் பின்னர் கைது செய்யப்பட்டுச் சிரச்சேதம்செய்யப்பட்டான் (யூலை, 1685). பிரதம நீதிபதியான செபிரிசும், வேறும் நாலு நீதிபதிகளும் மேற்கே கலகக்காரரை விசாரணை செய்யுமாறு அனுப்பப்பட்டனர். அவர்கள் "**இரத்தப் பருவமன்று**" என்ற நீதி மன்றத்தில் விசாரணை செய்து மூந்நூறு பேருக்குதிகமானவரைத்

[1] ஒற்சு பின்னர் பயிற்றுமுதத்தைச்சோந்து உவப்பிங்குதேவாலயத்தில் அடிக்கடி போதனை செய்தான். அங்கும் அவனை "ஒழுக்கமற்ற பாசாங்குக்காரனென"த் தூற்றி விட்டனர்.

தூக்கிலிட்டனர்; எறக்குறைய 800 பேர் நாடுகடத்தப்பட்டனர்[1]. இவ்வாறு செபிரிசு செய்த கொடுமை சரித்திரமிருக்கும்வரை அவனுக்கு அபகீர்த்தியையுண்டாக்குமென்பதில் ஐயமில்லை.

சேமிசின் கடுங்கோன்மை (1686—88)

சேமிசு தனது ஆட்சியில் முதலொன்பதுமாதம், அதாவது 1685 ஆம் ஆண்டு முடியும்வரை, மிதமாக நடந்துகொண்டான். இரண்டு கலகங்களை இலேசாக அடக்கியதால் உற்சாகமடைந்த அரசன் தீவிரப் பூட்கையை மேற்கொள்ளத் தலைப்பட்டான். நிலையான சைனியத்தின் தொகையை முப்பதினாயிரமாக அதிகரித்தான். இந்தச் சைனியத்தை மக்கள் விரும்பவில்லை. உரோமன் கத்தோலிக்கருக்கெதிராக நிறைவேற்றப்பட்ட சட்டங்களை அரசன் தான் விரும்பியவர்களைப் பொறுத்த வகையிலே தளர்த்த உரிமை கொடுக்கப்பட்டது. இந்த அதிகாரம் **விலக்கு அதிகாரம்** எனப்பட்டது. அரசன் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தலாமென்று நீதிபதிகள் கருதினர். எனவே அவன் அவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி நிலையான சைனியத்திற் பல உரோமன் கத்தோலிக்க உத்தியோகத்தரை நியமித்தான். அமைச்சரை மாற்றினான். அலிபாக்குக, உரோசெற்றர் போன்ற மிதவாதிகளுக்குப் பதிலாக உரோமன் கத்தோலிக்கரை நியமித்தான். சமீபத்தில் மதம் மாறிய சண்டலந்து போன்றவர் அமைச்சராளர்கள். அயலந்திலே, இறுமாப்புக்கொண்ட உரோமன் கத்தோலிக்கனை தயக்கொனல் என்பவன் பதிலரையனாக நியமிக்கப்பட்டான். ஒட்சுபோட்டுப் பல்கலைக்கழகத்தை உரோமன் கத்தோலிக்க மதத்துக்கு மாற்றும் நோக்கத்தோடு அவன் கிறித்துச் சேர்சுக்கலாசாலையின் தலைவனாக ஓர் உரோமன் கத்தோலிக்கனை நியமித்தான். மோட்டிலின் கல்லூரியிலும் புரட்சுத்தாந்திய ஆசிரியராயுள்ளவர்க்குப் பதிலாக உரோமன் கத்தோலிக்கரை நியமித்தான். சதுவாட்டு குலத்தவரை எப்பொழுதும் ஆதரித்துவந்த அச்சருவகலாசாலையின் விரோதத்தையும் இதனாற் சம்பாதித்துக்கொண்டான். உயராணை நீதிமன்றத்தை மறுபடியும் நிறுவினான். நிறுவி உரோமன் கத்தோலிக்கருக்கும் இணங்காதாருக்கும் மாறுகவிருந்த தண்டச் சட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கும் நோக்கத்துடன் **மன்னிப்பு அறிக்கையொன்றை** வெளியிட்டான். பாராளுமன்றத்துக்கு முதலிலே தாழ்ப்பிட்டுப் பின்னர் அதைக் கூட்டினான் (யூலை, 1687). பின்னர் தான் நினைத்த அங்கத்தவரைக் கொண்ட பாராளுமன்றத்தை அமைக்கும் நோக்கமாக உரோமன் கத்தோலிக்கருடைய அட்டவணையொன்றைத் தனக்குக் கொடுக்குமாறு பதிற் பிரபுக்களைக் கேட்டுக்கொண்டான். இதனால் அவர்களிற் பெரும்பாலோர் தமது பதவிகளினின்றும் விலகினர்.

[1]இவ்வெண்ணூறுபேரும் அரசசபையிலுள்ளவர்களுக்குப் பணியாட்களாகத் தாளஞ் செய்யப்பட்டனர். அவர்கள் இவர்களை மேற்கிந்தியத் தோட்டங்களில் வேலைசெய்வதற்கு அடிமைகளாக விற்றனர்.

நெருக்கடி (மே-யூன் 30, 1688); ஏழு விசுப்பாண்டவர்கள்; அரசனுக்கு மகன் பிறத்தல்.

இத்தகைய செய்கைகளினாற் சேமிசு தன் தந்தையாருக்கெதிராகச் சண்டையிட்டவர்களையும் பகைத்து அவன் பக்கம் நின்று சண்டையிட்டவர்களின் நல்லெண்ணத்தையுமிழந்தான். இவர்கள் நாட்டு உயர்வகுப்பினரும் குருமாரும் ஆவர். 1688 ஆம் ஆண்டின் கோடையாரம்பத்திலே நெருக்கடியுண்டானது. மே மாதத்தில் அரசன் **இரண்டாவது மன்னிப்பு அறிக்கையொன்றைப்** பிரகடனஞ் செய்து அதைத் தேவாலயங்களெங்கும் வாசிக்கவேண்டுமெனக் கட்டளையிட்டான். கந்தபரி அதிமேற்றிராணியாரும் வேறு ஆறு பிசப்புமாரும் அரசனுடைய செய்கையை எதிர்த்துக் கடிதமெழுதினர். சேமிசு அவர்கள்மீது அவதூறுக்குற்றஞ் சாட்டி விசாரணை செய்யத்தீர்மானித்தான். யூன் மாதம் 10 ஆம் தேதி, மொடினா மேரிக்கு, அரசனின் இரண்டாம் மனைவிக்கு, ஒரு மகன் பிறந்தான். புதியதோர் அரச ஆட்சி வரும்வரை பொறுத்திருக்கவேண்டுமென இதுவரை மக்கள் கருதினர். சேமிசின் மகள், புரட்ட சுத்தாந்திய மதத்தினள், மேரியென்பாளும் அவளுடைய கணவன், ஒல்லாந்து மன்னன், வலுத்த புரட்டசுத்தாந்திய நெறியினன், ஒரேஞ்சு உவிலியம் என்பானும் சேமிசின் பின்னர் அரசுரிமை எய்துவாரென மக்கள் நம்பியிருந்தனர். இப்பொழுது அந்த நம்பிக்கையிலிடிவிழுந்தது. சேமிசுக்குப் பிறந்த மகன் கத்தோலிக்க சம்பிரதாயப்படி வளர்க்கப்படுவான். அவனே அரசுக்கும் வருவானென்ற நிலைமையுண்டாயிற்று. ஆனால் இந்தக் குழந்தை அரசனுக்கும் அவன் மனைவிக்கும் பிறந்தவனல்லனென்றும், கள்ளமாக அங்கே தீச்சட்டியொன்றிலிட்டுக் கொண்டுவரப்பட்டவனென்றும் ஒரு செய்தி நாடெங்கும் பரவியிருந்தது. யூன் மாதம் 30 ஆம் தேதி ஏழு பிசப்புமாரும் விடுதலை செய்யப்பட்டனர். அன்றிரவு இலண்டனிற் சொல்லொணாப் பேராரவாரமும் கொண்டாட்டமும் நடந்தன. அதே இரவு பலதரக் கட்சியைச் சேர்ந்த ஏழு பிரமுகர்கள் கூடி, இங்கிலாந்துக்கு ஒரு சைனியத்துடன் வந்திறங்கி மக்களின் சுதந்திரத்தை மீட்டுத்தருமாறு உவில்லியத்துக்கு ஒரு நிருபம் எழுதினர்[1].

1688 ஆம் ஆண்டுப் புரட்சி

இத்தருணத்திலே பதினாலாம் உலூயி சேமிசுக்குத் துணைபுரிய முன்வந்தான் ஆனால் சேமிசோ எதிர்நின்ற ஆபத்தை உணராதவனாய் அவனுடைய

[1]இக்கடிதம் சங்கேத எழுத்துக்களில் ஒப்பமிடப்பட்டு எபேட்டு என்ற தளபதியால் (இவன் பின்னர் தொறின்றன் பிரபுவானான்) மாலுமி வேடத்தில் இடச்சுக் கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

தூணையை ஏற்க மறுத்தான். எனவே சேர்மனியுடன் யுத்தஞ் செய்வதற் காக உலுயி நெதலந்து எல்லேயிலிருந்து தனது சைனியத்தை வேறிடத் துக்கு மாற்றினான். இது உவில்லியத்துக்கு வாய்ப்பாயிற்று. பிரெஞ்சுச் சைனியத்தினால் ஆபத்தில்லேயென அறிந்த உவில்லியம் இங்கிலாந்துக்குச் செல்வது ஏற்றதேயென எண்ணினான். மேலும் ஆங்கிலச் சைனியத்தின் தலேவர்களும் கடற்படைத் தலேவர்களும் அவனுக்கு உதவிசெய்வதாக வாக்களித்திருந்தனர். 1688 ஆம் ஆண்டு **நவம்பர் மாதம் 5 ஆம் தேதி** அவன் தோபேயில் வந்திறங்கியதும் எதிர்பார்த்த ஆதரவு உடனே கிட்டிற்று. பின்னர் யோன் சேச்சில் அவன் பக்கஞ் சேர்ந்தான். (இவனே பின்னர் பிரசித்திபெற்ற மால்பரோப்பிரபுவாகத திகழ்ந்தான்). சைனியத் தில் இவனே முக்கியமானவன். சேமிசின் இரண்டாவது மகளான ஆன் யோக்குசயரில் கலகம் விளேவித்தாள். சேமிசு சமாதானத்துக்கு முயன் ருன். ஆனால் அது காலந்தவறிப்போய்விட்டது. பின்னர் ஒளித்தோட முயன்ருன். ஆனால் அவன் கைதுசெய்யப்பட்டு அவமானத்துடன் மறு படியும் இலண்டனுக்குக் கொண்டுவரப்பட்டான். கடைசியாக, இலண்டன் வந்து சேர்ந்த உவில்லியம் சேமிசை உரொசேற்றருக்கு அனுப்பினான். அங்கு அவனைக் காவல்செய்த வீரர் கண்டிப்பற்று இருந்தபடியால் அவன் மறுபடியும் தப்பியோடினான். இது உவில்லியத்துக்கு மகிழ்ச்சியைக் கொடுத் தது. சேமிசு 1688 ஆம் ஆண்டு நத்தார்தினத்தன்று காலே மூன்று மணிக்கு பிரான்சுக் கரையை அடைந்தான். சேமிசின் ஆட்சி முடிவடைந்தது[1]. அரசனுக்கும் பாராமன்றத்துக்குமிடையில் நடந்து வந்த நீண்ட பிணக்கும் அத்துடன் முடிவடைந்தது (குறிப்பு 84). 1688 ஆம் ஆண்டுப் புரட்சி ஆங்கில அரசியல் முறையில் மிகப் பாரதூரமான மாற்றங்களே யுண்டாக்கிற்று.

[1]சேமிசு முதல் தப்பியோடியபொழுது நிசெம்பர்மாதம் 11 ஆம் தேதி தனது அரசமுத்திரையை வொட்சோலில், தேமிசுநதியில் வீசினான். இம்முத்திரையே அரச அதிகாரத்துக்குச் சின் னம். இம்முத்திரையிடப்படாத அரசாங்க சாசனமொன்றுஞ் செல்லுபடியாகாது. இத் தேதியே சேமிசு அரசு துறந்த தேதியாகச் சட்டபூர்வமாயேற்றுக்கொள்ளப்பட்டது.

17 ஆம் அதிகாரம்

சுதுவட்டு மன்னராட்சியில் அயலந்தும் கொத்துலாந்தும்

1. அயலந்து

அல்சுற்றர் குடியேற்றம், 1608

இனி சுதுவட்டு அரசர் காலத்தில் அயலந்தில் நடந்த வரலாறுகளேக் கவனிப்போம். முதலாம் சேமிசு அரசகட்டிலேறியதும், இலிசபெத்து ஆட்சிக் காலத்திலாரம்பிக்கப்பட்ட "குடியேற்றத் திட்டத்தை" மேலும் அபிவிருத்தி செய்ய ஒரு வாய்ப்புண்டானது. அல்சுற்றரிலுள்ள இரண்டு பெரிய இனத் தைச் சேர்ந்த **திரோன்** எனும், **தயக்கொனல்** எனும், 1607 இல் தம்மீது இராசத்துரோகக் குற்றம் சுமத்தப்படுமெனப் பயந்து நாட்டை விட்டோடினர். எனவே அரசாங்கம் இவ்விரு இனத்தவருக்குஞ் சொந்த மான நிலங்களேயெல்லாம் கைப்பற்றியது. இந்நிலங்கள் அவ்விரு எள் களுக்குமே சொந்தமானவையென அரசாங்கம் கருதிற்று. ஆனால் அய லந்தின் தேசவழக்கப்படியும், உரிமைக் கொள்கைப்படியும் இந்நிலங்கள் அவ்விரு இனத்து மக்களுக்குஞ் சொந்தமானவையெனக் கருதப்பட்டன. எனவே அரசாங்கம் அனுசரித்த கொள்கைக்குச் சமாதானங் கூறுவது கடினமாகும். வளமற்ற சில நிலப்பகுதிகளே அரசாங்கம் அந்த இனத்த வருக்கே கொடுத்தது. ஆனால் 5 இலட்சத்துக்கு மேலான ஏக்கரை அரசாங்கம் இங்கிலாந்திலும் கொத்துலாந்திலும், இலண்டன் நகரிலும், அதைச் சேர்ந்த பன்னிரு நகரக் கம்பனிகளிலுமிருந்தும் வந்து குடியேறிய வர்க்கு வழங்கிற்று. அல்சுற்றருக்கு மாத்திரம் இக்கதியுண்டாகவில்லே. புதிய புதிய ஆட்களெல்லாம் அயலந்துக்கு வந்தனர். பல மாவட்டங்களுக்குஞ் சென்று சென்று அங்குள்ள நிலங்களின் உரித்துறுதிகளே ஆராய்ச்சி செய்தனர். அத்தகைய உரிமைச்சாசனங்கள் இல்லாத காணிகளேயோ குறை பாடான உரிமைச் சாசனமுள்ள காணிகளேயோ அரசாங்கத்திடமிருந்து மானியமாகப் பெற்றனர்.

அயலந்திலே நிரபோட்டு (1633—40)

அயலந்தின் சரித்திரத்தில் அடுத்த முக்கியமான கட்டம் நிரபோட்டின் ஆட்சியாகும். இவன் 1633 தொடக்கம் 1640 வரை அயலந்தின் பிரதி யாளர் பிரபுவாக இருந்தான். இவனுடைய ஆட்சி பலவகையில் வியக்கத் தக்கதே. உத்தியோகத்தர் தமது கருமங்களிற் கண்ணுங் கருத்துமாயிருக் கச் செய்தான். வேலே "தேடிக் காக்காய்பிடிக்கும்" வழக்கத்தை நிறுத்த முயன்று, ஓரளவு வெற்றி கண்டான். அங்குள்ள படைவீரர் அரைகுறை யாக அங்கியும் ஆயுதமுந் தரித்துப் போதிய பயிற்சியின்றிச் சம்பளம் பெருதிருந்தனர். நிரபோட்டு அச்சைனியத்தைச் சீர்திருத்தினான்; உயர்ந்த



1603 இல் பின் அயலந்து.

கட்டுப்பாடுடையதாக்கினன். நல்ல உத்தியோகத்தரை அமைத்தான். சம்பளம் செவ்வனே கொடுத்தான். இக்காரணங்களால் அச்சனியம் திறமையுள்ள சனியமாயிற்று. அயலந்துக் கடலில் முன்னெல்லாம் கடற் கொள்ளைக் காரர் மண்டிக்கிடந்தனர். இவனுட்சியில் அவர்கள் கலைக்கப்பட்டு அவர்களது அட்டகாசம் வெற்றிகரமாகத் தடுக்கப்பட்டது[1]. அயலந்திலே சனற்றெழுதலே திரபோட்டு தன்னுடைய பணத்தையும் பங்காகக் கொடுத்து ஆரம்பித்தான். புரட்டசுத்தாந்தியத் திருச்சபையைச் சீர்திருத்தினன். சடங்கு சம்பிரதாயங்களில் ஒழுங்கையுண்டாக்கினன். இங்கிலாந்திலுள்ள திறமை மிக்க குருமாரை அயலந்துக்கு வந்து குருத் தொழில் நடத்த ஊக்கமளித்தான்[2]. ஈற்றில் அயலந்துப் பாராளுமன்றத்தைக் கூட்டிச் சில சிறந்த சட்டங்களை நிறைவேற்றச் செய்தான்.

கொனேற்றிற் குடியேற்றமுண்டாக்கத் திட்டம்

திரபோட்டின் ஆட்சி இவ்வாறு பல வகையிற் புகழத்தக்கதாகும். வேறு வகைகளிலே திரபோட்டின் நடைமுறை மிகவுந் தான் தோன்றித் தனமுள்ளதாயிருந்தது. தனிப்பட்டவர்களை அவன் சகிக்கத்தகாத முறையில் நடத்தினன். கொனேற்று விடயமாக அவன் நடந்து கொண்ட முறை அவனுடைய குணத்தின் மிக இழிந்த தன்மையைக் காட்டிற்று. சில காலத்துக்கு முன்னர் அல்சுற்றரிற் குடியேற்றியது போலக் கொனேற்று மாகாணத்திலும் குடியேற்றமுண்டாக்க விரும்பினன்.

இந்நோக்கத்துடன் அம்மாகாணத்திலே நில முடையவர்களின் உரிமைச் சாதனங்களை ஆராயுமாறு கட்டளையிட்டான். அந்நிலங்களைப் பறிமுதல் செய்வதற்கு அனுசரணையாக நடுவர் தீர்ப்புக்கூறக் கூடியவாறு அவர்களைப் பயமுறுத்தி அதட்டிக்காரியம் பார்த்தான். புதியவர்களை அங்கே குடியேற்றுவதற்கு வரவழைக்கு முன்னர் இங்கிலாந்திலுள்ள நிலைமை காரணமாக அவன் 1640 இல் அயலந்தை விட்டுப் போக வேண்டியேற்பட்டது.

திரபோட்டு மிகுந்த ஊக்கம் வாய்ந்தவன். அது அவன் நாட்டுப் பணியிற் பெரிதும் பயன்பட்டது என்பதை எவரும் மறுக்க மாட்டார். ஆனால் அயலந்தி

---

[1] திரபோட்டுக்குச் சொந்தமானதும், 500 பவுண் மதிப்புள்ளதுமான இலினன் துணியைத் தோவரைச் சேர்ந்த "பிகபொக்கெற்று" என்ற ஒரு கொள்ளைக் கப்பல் சூறையாடியது. அதனால் அவனுக்கே இவ்விடயங்களில் நேரடியான அனுபவமுண்டு.

[2] அயலந்திலுள்ள புரட்டசுத்தாந்திய திருச்சபையின் நிலைமை இரங்கத்தக்கதாயிருந்தது. திரபோட்டு அயலந்துக்கு வருதற்குச் சில ஆண்டுகளுக்கு முன் கசெல் அதிமேற்றிராணியார் தமது பதவியோடு வேறு மூன்று மேற்றிராணிப்பதவியையும் எழுபத்தியேழு குருமானியங்களையும் பெற்றிருந்தார். கோக்கு பிரபு 20 பவுன்வாடகைகொடுத்து ஒரு மேற்றிராசன வருமானமாக 1000 பவுனைப் பெற்று வந்ததை திரபோட்டு வந்ததும் கவனித்தார். திரபோட்டு அறிந்துவிட்டதை உணர்ந்த அப்பிரபு அதைக் கைவிட்டார்.

யரின் விருப்பங்களிடத்து அவன் அனுதாபங் காட்டவில்லே. அவர்களுடைய பழக்கவழக்கங்களை, பற்றுக்கள் என்பவற்றை அவன் வெறுத்தான். எனனஞ் செய்தான். எனவே அவனுடைய ஆட்சியை எல்லாரும் வெறுத்தார்கள். "மக்கள் கற்பனைச் சுதந்திரங்களை நினைத்து மனப்பால் குடித்துக் கொண்டிருக்கக் கூடாது. அரசனுடைய கட்டளைக்கிணங்கி நடக்கவேண்டும். அரசனே பிதா மாதா என்பதை அவர்கள் நம்ப வேண்டும்" என்பதே திரபோட்டின் கொள்கை. ஆனால் அத்தகைய மனோபாவம் இருந்த காலம் அயலந்திலும் இங்கிலாந்திலும் மலையேறிவிட்டது. தங்கள் நன்மைக்காக மற்றவர் தம்மை ஆட்சி செய்வதை மக்கள் விரும்பவில்லே. தாமே தம்மை ஆட்சி செய்வதையே அவர்கள் விரும்பினர். அத்தகைய ஆட்சி கெட்ட ஆட்சியாயிருந்தாலும் அதையவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள்.

அயலந்துக் கலகம் (1641)

திரபோட்டு சிரச்சேதஞ் செய்யப்பட்டு ஐந்து மாதங்களிந்த பின்னர் அயலந்துக்கலகம் உண்டானது (ஒற்றேபர் 1641). அயலந்து மக்கள் கலகஞ் செய்ததில் ஆச்சரியமொன்றுமில்லே. முன்னர் தமக்கு நேர்ந்த தீமைகளை எண்ணி அவர்கள் ஆத்திரமடைந்தனர். இலிசபெத்து ஆட்சிக் காலத்திலே ஐரிசுமக்கள் மிகக் கொடுமையாக அடக்கப்பட்டனர். துருக்கியருடைய இரத்த வெள்ளம் நிறைந்த சரித்திரத்திலே காணப்பட்ட கொடுமையோடு இந்த அடக்குமுறை கையாளப்பட்டது. முதலாம் சேமிசின் ஆட்சிக்காலத்திலே அல்சுற்றரிலுள்ள அவர்களுடைய நிலங்களெல்லாம் பறிமுதல் செய்யப்பட்டதோடு கொனேற்றிலும் அது நிகழுமென மக்கள் அச்சுறுத்தப்பட்டனர். இது பெருத்த அநீதியாக அயலந்து மக்களுக்குத் தோன்றிற்று. பழைய காலச் சம்பவங்களை நினைத்து அவர்கள் பயந்தது ஒருபுறமிருக்க வருங்காலத்தை யெண்ணி அவர்கள் அச்சமுற்றனர். கொத்துலாந்து எற்பாட்டினரும், நெடும் பாராளுமன்றத்திலே பெரும் பான்மையினராயிருந்தனர். பியூரித்தானியரும், இப்பொழுது ஆதிக்கம் பெற்றிருந்தனர். அவர்கள் அயலந்திலுள்ள உரோமன் கத்தோலிக்கரை நிர்மூலமாக்கிவிடுவாரென நம்பப்பட்டது[1] இந்நம்பிக்கைக்கு ஆதாரமும் இருந்தது.

அயலந்துக் கத்தோலிக்கரைத் துன்புறுத்தல்

1641 ஆம் ஆண்டு ஒற்றேபர் மாதம் 22 ஆந் தேதி கலகம் ஆரம்பித்தது. பத்தரை வருடம் அயலந்து ஓயாத யுத்தங்களினுல் அல்லலுற்றது. கலகம்

[1]நெடிய பாராளுமன்ற அங்கத்தவன் ஒருவன், அயலந்துக் கத்தோலிக்கரை மதம் மாற்றுவதானுல் ஒரு கையில் விவிலிய வேதத்தையும் மற்றக் கையில் வாளையுங் கொண்டுதான் செய்யலாமெனக் கூறியதாய் அயலந்தில் ஒரு செய்தி பரவிற்று. பாராளுமன்றம் அயலந்தில் கத்தோலிக்க பாதிரியெவரையும் விட்டுவையாதெனப் பிம் என்பவன் தீர்க்கதரிசனம் கூறினன்.

முதலில் அல்சுற்றரிலே தொடங்கிற்று. இங்கே கொத்துலாந்தரும் ஆங்கிலேயரும் தத்தம் வீடுகளை விட்டு ஓடவேண்டியேற்பட்டது. அத்துடன் அவர்கள் பெருமல்லல்களுக்காளாயினர். அல்சுற்றரிலிருந்து கலகம் உவிக்குலோவுக்குப் பரவிற்று. அக்காலத்தில் அத்தகைய கலகமுண்டானதால் மக்களிற் பலர் படுகொலேக்காளானமை எதிர்பார்க்கக் கூடியதே. நாலாயிரம் புரட்டசுத்தாந்தியர் கொலேசெய்யப்பட்டனரென்றும், 8000 பேர் பஞ்சத்தினுலும் நோயினுலும் இறந்தனரென்றும் இக்காலச் சரித்திராசிரியர் குறிப்பிடுகின்றனர். இத்தொகை பயங்கரமானதே. ஆனால் இங்கிலந்திலுள்ள பியூரித்தானியர் கற்பனையில் இத்தொகை மிகைப்படுத்தப்பட்டது. சிலர் இரண்டு இலட்சமெனவுங் கணக்கிட்டனர்[1]. எனவே பாராளுமன்றம் வஞ்சம் தீர்க்கும் சினத்தினுல் அயலந்துக் கத்தோலிக்கருக்கெதிராக இரண்டு சட்டங்களை நிறைவேற்றியது. ஒன்று அயலந்துக் கத்தோலிக்கருக்குப்பொறுதி அளிக்கக் கூடாதென விதித்தது. மற்றச் சட்டப்படி கலகத்தை யடக்குவதற்கு உதவி செய்தவர்க்கு வழங்குவதற்காக இருபத்தைந்து இலட்சம் ஏக்கர் நிலம் பறிமுதல் செய்யப்பட்டது. இச்சட்டங்களின் பயனுக அயலந்திலே அரசாங்கத்துக் கெதிராக மேலும் வைரம் வளர்ந்தது. பல கத்தோலிக்கக் கனவான்கள் கலகக்காரரோடு சேர்ந்தனர்.

அயலந்து அலுவல்கள் (1642—49)

இங்கிலாந்திலே உண்ணாட்டு யுத்தம் மூண்டதால் 1642 இல் நிலேமை சிக்கலாயிற்று. அயலந்திற் பலவித கட்சிகளிருந்தபடியால அயலந்து அலுவல்கள் சிக்கலடைந்தன. எனவே சுருக்கமாக அவற்றைக் குறிப்பிடுவது முடியாத காரியம். உண்ணாட்டு யுத்தம் நடந்து கொண்டிருக்கையிற் சாள்சு அயலந்திலிருந்து துணைபெற முயன்றான். சிலர் துணைசெய்ய வந்தது முண்டு. மற்றும்படி திட்டமாக ஒன்றும் நடக்கவில்லே. 1649 இற் சாள்சு சிரச்சேதஞ் செய்யப்பட்டபின்னர் அயலந்திலுள்ள கட்சிகளெல்லாம் சிறிது காலம் ஒன்று சேர்ந்து, சாள்சின் மகனை அரசனுக்க முயன்றன. "எச்சப்" பாராளுமன்றத்தின் ஆட்சியை ஒருவரும் விரும்பாமையே இம்முயற்சிக்குக் காரணம்.

அயலந்திலே குரம்வெல் (1649—50)

ஆகவே அயலந்தை அடக்குவதற்குக் குரம்வெல் அனுப்பப்பட்டான். அவன் வந்து சேருவதற்கிடையில் இரதுமைன்சு என்ற இடத்தில் கேணல் யோன்சு என்பவர் அயலந்துப் படையை முறியடித்தார். எனவே அப்படை தனது கோட்டைகளில் ஆனமட்டும் புதுப்படை திரளும்வரை நிருவகிக்க

[1]அயலந்திலுள்ள புரட்டசுத்தாந்தியரின் மொத்தத் தொகையிலும் பார்க்க இத்தொகை மூன்றிலொரு பங்கு அதிகமாகும்.

வேண்டியதாயிற்று. குரம்வெல் துரோயிடா, வெட்சுபோட்டு என்ற கோட்டைகளை விரைவில் முற்றுகையிட்டான்[1]. அவன் அயலந்தை விட்டு வெளியேறுமுன்னர் வாட்டர்போட்டைத் தவிர ஏனைய கரைப்பகுதிகளையெல்லாம் கைப்பற்றினன். குரம்வெல் இவ்வாறு ஆரம்பித்த வெற்றிப் போரை அவனுடைய மருகனான அயட்டன் தொடர்ந்து நடத்தி 1652 ஆம் ஆண்டு ஏப்பிரில் வரையில் அயலந்து முழுவதையும் அடிபணியச் செய்தான்.

இந்நீண்டகால யுத்தங்களின் பின்னர் அயலந்தின் நிலைமை பரிதாபத் துக்கிடமாயிருந்தது. பத்துவருடமாக நடந்த இந்த யுத்தத்தினாலும் துன் பங்களினாலும் மக்களில் மூன்றிலொரு பகுதிக்கதிகமானோர் இறந்தனரென் பர். நிலத்திற் பெரும் பகுதி பயிர்ச் செய்கையின்றிக் கிடந்தது. பல பகுதிகள் குடிசனமில்லாதிருந்தன. பிறதேசப் படைகளில் அயலந்து வாசிகள் பலர் சேர்ந்ததாலும் குடித்தொகை குறைந்தது. பல நூற்றுக் கணக்கான சிறு வரும் சிறுமியரும் பாபதோசுக்குக் கப்பலிலேற்றியனுப்பப்பட்டனர். அங்கே அவர்கள் தோட்ட முதலாளிகளுக்கு விற்கப்பட்டனர்.

பொதுநலவாயத்தின் ஆட்சி

யுத்தத்தின் பின்னர் புதிய குடியேற்றங்களுண்டாயின[2]. குரம்வெல்லின் போர் வீரருக்கும் ஏனைய புரட்சுகத்தாந்தியருக்கும் ஏராளமான காணி கள் வழங்கப்பட்டன. கொலோற்றில், முன்னர் நிலம் வைத்திருந்தவர்

[1]துரோயிடாவிலுள்ள காவற்படை முழுவதையும் குரம்வெல் நிர்மூலமாக்கினான். "முப்பது பேர் கூட உயிர்பிழைத்தோடியிருப்பார்களென்ன நான் நினைக்கவில்லை" என்று அவன் எழுதினான். ஆனால் அக்கால யுத்தமுறைப்படி, சரணடைய மறுத்த காவற் படைகளை இவ்வாறு நிர்மூலமாக்குவதே மாபு. 1641 இல் நடந்த படுகொலைகள் இந்தக் காவற்சேனையினாலேதான் நிகழ்ந்தனவென்றும், இந்தக் காவற்சேனையைக் கொடுமையாக நடத்தினால் இதை முன் மாதிரியாகக் கொண்டு மற்றக் காவற்சேனைகள் உடனே அடிபணிந்திடுமென்றும் குரம்வெல் தனது செயல் சரியானதெனக் காட்ட நியாயங் கூறினான். ஆனால் இத்தகைய பயனை இத்தகைய கொடுமைகளுண்டாகியிருக்குமோ என்பது ஐயத்துக்கிடமானதாகும். மேலும் முன்னர் நடந்த படுகொலைகளில் இக்காவற்சேனை வீரர் ஒருவரும் சம்பந்தப்பட வில்லை. துரோயிடாவிலும் வெட்சு போட்டிலும் காணப்பட்ட கத்தோலிக்கப் பாதிரிமாரை எல்லாம் குரம்வெல் தலையிலடித்துக் கொன்றேனெனக் கூறினான்.

[2]ஒநாய்களும் தோகிகளும் இரண்டு பீடைகளாகக் கருதப்பட்டன. இவ்விரண்டு பீடைகளையும் ஒழிக்க நடவடிக்கைகளெடுக்கப்பட்டன. யுத்த காலத்தில் ஒநாய்கள் பெருகின. தபிளினுக்கு 9 மைல் தூரத்திலேயே ஒரு தோட்டம் மீக மலிவாக ஒருவருக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் ஒரு நிபந்தனை விதிக்கப்பட்டது. ஒநாய் வேட்டை தெரிந்த ஒருவனையும் அதற்கனுசரனையான வேட்டை நாய்களையும் அவன் வைத்திருக்க வேண்டு மென்பதே அந்நிபந்தனை. தோகிக்கட்சியினர் (கேலிக்கு மொழியில் அதன் பொருள் கொள்ளைக்காரர் என்பது) அதிருத்தி கொண்ட ஐரிசுப் போர்வீரர். குரம்வெல் குடியேற்றத் நிட்டத்தின் பயனைத் தமது நிலங்களை இழந்தவர். எனவே புதிய குடியேற்றக்காரரைக் கொலைசெய்து அவர்களுடைய கால்நடையைக் களவாடினர். ஒரு ஒநாயின் தலைக்கு 5 பவுனும் உண்மையாகக் கெட்ட தோகியின் தலைக்கு 20 பவுனும் பரிசாக வழங்கப்பட்டன.

களுக்கு நட்ட ஈடு வழங்கப்பட்டது. அத்துடன் கத்தோலிக்க சமயம் கடுமையாகத் தடை செய்யப்பட்டது. கொத்துலாந்திற் போலவே அயலந்தி லும் குரம்வெல்லின் ஆட்சியாற் சில நன்மைகளுண்டாயின. பொதுவாகப் பார்க்குமிடத்து ஓரளவு ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது. பிரித்தானியப் பாராளு மன்றத்தில் அயலந்துக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. இங்கிலாந் துடன் சுதந்திரமான வியாபாரஞ் செய்யும் உரிமைகளெல்லாவற்றையும் அயலந்து பெற்றது.

இரண்டாம் சாள்சின் கீழ் அயலந்து; நில உடைமையாளர்

1660 இல் நிகழ்ந்த மீட்சியினால், இங்கிலாந்திலே குரம்வெல்லினாற் குடியேற்றப்பட்ட குடியேற்றவாசிகளால் உண்டான நிலப்பிரச்சினை அயலந்திலுமேற்பட்டது. கடைசியாக இப்பிரச்சினை பின்வருமாறு தீர்த்து வைக்கப்பட்டது. 1641 ஆம் ஆண்டுக் கலகத்திற் பங்கு பற்றாதவர் களென உறுதிப்படுத்தக் கூடிய நிலவுடைமையாளர்க்கு அவர்கள் முன் உரிமைகொண்ட நிலங்கள் திருப்பி வழங்கப்பட்டன. குரம்வெல்லின் குடியேற்ற வாசிகளுக்கு வேறு இடங்களில் ஈடாக நிலம் வழங்கப்பட்டது. ஆனால் இவ்வொழுங்கு திருத்தியளிக்கவில்லை. ஒரு பாவமுமறியாத பல கத் தோலிக்கர் தமது நிலங்கள் முழுவதையும் திருப்பிப் பெற முடியாது போயினர். சிலர் சிறிதளவும் பெறமுடியவில்லை. 1660 இல் நிலச் சொந்தக் காரில் மூன்றிலிரு பகுதியினர் கத்தோலிக்கர். 1665 இன் பின்னர் மூன்றிலொரு பகுதி சுதேசிகளுக்குச் சொந்தமாயிற்று. இவர்களில் ஆங் கில நோமன் குலத்தைச் சேர்ந்தவர்களுமிருந்தனர்; பெரும்பாலும் அவர் கள் உரோமன்கத்தோலிக்கர். மூன்றிலொரு பகுதி ஐரிசுச்சார்பினர்க்குச் சொந்தமானது. இலிசபெது, முதலாஞ் சேமிசு எனுமிவரின் காலத்தே குடியேறியவரும் அவர் சந்ததியாருமே இவ்வகையுள் அடங்குவர்; இவர் கள் பெரும்பான்மையும் புரட்சுத்தாந்தியர். மூன்றிலொரு பகுதி ஆங்கி லேயருக்குச் சென்றது. அவர்களே குரம்வெல்லினாற் குடியேற்றப்பட்டவர். பொது நிலைமை இவ்வாறேயிருந்தது.

இரண்டாம் சாள்சின் ஆட்சிக்காலம் அயலந்தின் சமாதான காலமாகும். இக்காலத்தின் பெரும் பகுதியில் ஒமண்டு என்பவன் ஆட்சி நடத்தினன். இவன் உசிதம் போலச் சமயப் பொறுதி காட்டினன். நாட்டில் அமைதி நில விற்று. எனினும் இரண்டாம் சாள்சு ஆட்சியில் இங்கிலாந்துடன் அயலந்து செய்து வந்த சுதந்திர வியாபாரம் நிறுத்தப்பட்டது. பொறுமையற்ற ஆங்கில வியாபாரிகளும், கமக்காரரும் ஆங்கிலப் பாராளுமன்றத்திலே தமது செல் வாக்கைப் பயன்படுத்திச் சில சட்டங்களை இயற்றுவித்தனர். அதன் பய னாகவும் அயலந்து அல்லலுற்றது. இதைப்பற்றிப் பின்னர் கூறுவோம் (குறிப்பு 75).

2. பொதுநலவாய ஆட்சியிலும் பிற்காலச் சுதுவட்டு மன்னராட்சியிலும் கொத்துலாந்து (1651—1688)

பொது நலவாயத்திற் கொத்துலாந்து (1651—60)

1651 இல் நடந்த உசுற்றர் யுத்தத்திலே கொத்துலாந்துச் சைனியம் பல மிழந்தது. கொத்துலாந்தை ஆங்கிலச் சைனியம் கைப்பற்றி அத்தேசத்தை அடக்கிவிட்டது. 1660 இல் நிகழ்ந்த மீட்சிவரை யோட்சு மொங்கு என் பவரும் வேறு ஆங்கில ஆணையாளரும் பொதுவாக வெற்றிகரமாகவே அந்நாட்டை ஆண்டு வந்தனர். வரிப்பளு அதிகமாயிருந்தது உண்மையே. ஆனல், குடியியல் வழக்குக்களிலும் குற்றவழக்குக்களிலும் முன்னில்லாத வகையிலே நிறம்பட நீதி வழங்கப்பட்டது. பிரெசுபித்திரிய திருச்சபை யின் கொடுமை அடங்கிற்று. மற்றச் சமயங்கள்மாட்டுப் பொறுதி காட்டுவதற்கான முயற்சிகள் செய்யப்பட்டன. மலைநாட்டவரோடு சமாதானஞ் செய்யப்பட்டது. கொத்துலாந்து முழுமையும் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது[1]. கொத்துலாந்துப் பிரதிநிதிகள் பிரித்தானியப் பாராளுமன்றத்திலே அங்கம் வகித்தனர். இங்கிலாந்துடன் கட்டுப்பாடற்ற வியாபாரஞ் செய்யுமுரிமையும் கொத்துலாந்துக்குக் கிடைத்தது. இதனல் அத்தேசம் பெரிதும் வளர்ச்சி யடைந்தது.

கொத்துலாந்தும் மீட்சியும்

பின்னர் மீட்சி வந்தது. இங்கிலாந்தோடு கொத்துலாந்தின் கட்டில்லா வியாபாரம் நின்றது; ஆனல் நாடு சுதந்திரம் பெற்றது. அரசனுடைய சருவா திகாரம் மறுபடியும் தாபிக்கப்பட்டது. அரசியல் விடயங்களில் அதிகாரம் பெற் றமை போலவே சார்சு அரசன் சமய விடயங்களிலும் அதிகாரம் பெறவிழைந் தான். எனவே கொத்துலாந்திற் குருபரிபாலனத்தை மறுபடியும் புனருத் தாரணஞ் செய்து அதை எவ்வாற்றனும் நிலைநாட்ட முயன்றன். 1638 தொடக்கம் 1651 வரை தாம் நினைத்தபடி கருமங்களைச் செய்து வந்த பிரெசு பித்திரியர், திடசங்கமும் ஏற்பாடும் என்ற உடன்படிக்கையைச் செயற் படுத்தவேண்டுமென்று நெருக்கினர் (பக்கம் 223 ஐப் பார்க்க). ஆனல் குருபாலனத்தையே நிலைநாட்ட விரும்பிய மன்னன் விட்டுக் கொடுக்க வில்லை. பிரெசுபித்திரியர் தமது கொள்கையில் எவ்வாறு தீவிரமாகவும் விட்டுக் கொடாமலும் நின்றார்களோ அவ்வாறே அரசனும் நின்றன். மானியம் அனுபவித்து வந்தவர்களெல்லாரும், மறுபடியும் விசுப்பாண்டவர் களாற் புனர்த்தாபனஞ் செய்யப்பட வேண்டியவராயிருந்தனர். அத்துடன் ஏற் பாட்டினைக் கைவிடவேண்டியவராயுமிருந்தனர். பல குருமார், விசேடமாகத்

[1] "கையிலே வளாரும், பையிலே 100 பவுணும் கொண்டு கொத்துலாந்திலெந்த மூலை முடுக்குக்கும் ஒருவன் சவாரி செய்யலாம். கடந்த 500 வருடமாகச் செய்யமுடியாத இக் காரியம் இன்று செய்யத் தக்கதாயிருக்கிறது" என அக்கால ஆங்கிலேயர் ஒருவர் குறிப்பிட்டார்.

தென் மேற்குப் பகுதியில் அவ்வாறு செய்ய மறுத்தனர். அதன் பயனக அவர்களைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு அவர்கட்குப் பதிலாகப் பிறரை நியமிக்க வேண்டியிருந்தது. இவர்கள் பெரும்பாலும், கல்வியற்றவராயும் ஒழுக்கங்கெட்டவராயுமிருந்தனர். தேவாலயத்துக்குச் செல்லாதவர்க்குத் தண்டனை விதிக்கப்பட்டது. திருச்சபைக்குப் புறம்பாக நடக்கும் ஆராதனை களிலே கலந்துகொள்வோருக்கெதிராக மிகக் கடுமையான சட்டங்கள் பிறப் பிக்கப்பட்டன. பலர் சமயத் துன்புறுத்தலுக்காளாயினர். விசேடமாக 1666 இல் உண்டான பென்னிலந்துக் கலகத்துக்குப் பின்னர் இச்சமயத் துன்புறுத்தல்தீவிரித்தது. 1667 இல் உலோடர்டேல் என்பவன் ஆணையாள னனன். அவன் இவர்களோடு சமாதானஞ் செய்ய முயன்றன். ஆனல் எற்பாட்டினர் இடங்கொடுக்கவில்லை. எனவே அவர்கள் தமது கூட்டங்களை ஒதுக்கமான, மக்கள் எளிதிற் கண்டுபிடிக்கமுடியாத தரிசு நிலங் களிற் கூட்டினர். எனவே அவர்களை அடக்குவதற்காக அரசாங்கம் மிகக் கடுமையான அடக்குமுறைகளைக் கையாண்டது. இராணுவத்தை ஏவி மிக அநீதியானமுறையில் எற்பாட்டினர் வேட்டையாடப்பட்டனர். 1687 இல், 8000 மலைநாட்டவரைத் தென்மேற்குப் பகுதிக்குக் கொண்டுவந்து கொலை செய்து சூறையாடி நாசஞ் செய்தனர்.

சாப்பு கொலை செய்யப்படல் : திரங்குளோக்கும் பொதுவெல் பாலமும் (1679)

1679 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலே சென் அண்டுறூசு அதிமேற்றி ராணியாரான சேமிசுசாப்பு என்பவன் எற்பாட்டினரைக் கைவிட்டு, அவர் களைத் துன்புறுத்துபவர்களில் முதலாளாக மாறினன்.[1] மதவெறியர்கள்

[1] சாப்பைக் கொலைசெய்த ஒன்பது பேரில் ஒருவன் குறிப்பிட்ட விபரங்களின்படி, அதிமேற்றி ராணியாரைக் கொலைசெய்யும் விடயம் நிச்சயிக்கப்பட்டபோதிலும், சென் அண்டுறூசுக் கணித்தாயுள்ள மாருகூரில் அவனைச் சந்தித்தமை தற்செயலாக நிகழ்ந்ததெனத் தெரிகிறது. சாப்பு அருவருக்கத்தக்க குணமுடையவனேனும் அவனைக் கொலைசெய்த முறை கொடுமையானது. எற்பாட்டினர் "கடவுள் நீதியைச் செய்கிறோம்" என்ற நம்பிக்கை யினலேயே இக்கொலையைச் செய்தனர். "யோன்பனூபர் என்பவன் முகத்தில் வெட்டினன். அண்டுறூசு என்பசன் கையை வெட்டி விழுத்தினன். யோன்பனூபர் அவனைக் குப்புற விழுத்தினன். அவ்வாறு விழுந்து இறந்தவன் போலக் கிடந்தவனைச் சேமிசு இரசலின் மகள் பார்த்துவிட்டு, அவனுயிருடனிருப்பதாகக் கூறவே, உடனே அவனையணுகித் தொப்பியை எடுத்து வீசிவிட்டு, தலையைத் துண்டு துண்டாக வெட்டினன். பின்னர் சேமிசு இரசல் அந்தக் குருவைத் தூக்குமாறு சேவகர்க்குச் சொன்னன். தமது தொன்டைக் கருதி அதைச் செய்தபின் அவர்கள் முதலில் ஒன்றுகவும் பின்னர் தனித்தனியாகவும் சித்த சமாதானத்துடனும் மனவிலாசத்துடனும் தேவனைத் துதித்து, இப்பெருந் தொண்டைச் செய்ததை தெரியமும் அவகாசமும் கொடுத்ததற்காக நன்றிதெரிவித்துப் பிரார்த்தித்தனர். இந்நிகழ்ச்சியும், மேற்கோள்களும் எற்பாட்டினரின் குறைநிறைகளை எடுத்துக் காட்டப் போதிய சான்றகும்.

சிலர் அவனைக் கொலைசெய்தனர். இதற்குச் சில வாரங்களுக்குப் பின்னர் எற்பாட்டினர் ஆட்சிக்கெதிராகக் கிளம்பினர். இரகசிய சங்கங்களை அடக்குவதற்காக இவர்அவுசுக் பிரகாம் என்பவன் அனுப்பப்பட்டான். எற்பாட்டினர் அவனை இலனுக்குசயரிலுள்ள திரங்குலோக்கு என்ற இடத்திலே தோற்கடித்தனர். இச்சிறிய வெற்றியினால் தூண்டப்பட்ட அவர்கள் கிளாசுக்கோமீது படையெடுத்துச் சென்றனர். அங்கே கிளோட்டு ஆற்றிலுள்ள பொதுவெல்பாலத்தில் மொன்மதின் படை அவர்களைத் தோற்கடித்தது[1].

கொலைக் காலம் (1681–87)
ஏழாம் சேமிசும் இரண்டாம் சேமிசும் (1685–88)

பொதுவெல்பாலத் தோல்வியின் பின்னர் சிறிதுகாலம் கொத்துலாந்தைப் பிரித்தானிய அரசாங்கம் சிறிது கருணையுடன் ஆண்டது. ஆனால் யோக்குக் கோமகனான சேமிசு (பின்னர் ஏழாம் சேமிசு) 1681 இல் கொத்துலாந்தின் அரச ஆணையாளனானதும் " கொலைக்காலம் " ஆரம்பித்தது. பிரெசுபித்திரியத்தீவிரவாதிகளான கமிரோனியரைத் துன்புறுத்தினர். இவர்களுக்கு இரிச் சட்டுகமரோன் என்பவன் தலைவனானான். அவன் பெயரினாலேயே இவர் களும் வழங்கப்பட்டனர். 1685 இற் சேமிசு அரசுகட்டிலேறியதும் துன்புறுத்தல் உச்சநிலையடைந்தது. மொன்மொத்தை ஆதரித்து ஆகைல் பிரபு கலகத்தையுண்டாக்கினான். இது தோல்வியடைந்தது. அதன்பின்னரே துன்புறுத்தல் அதிகரித்தது (பக்கம் 277). ஆனால் 1687 இற் சேமிசு பிரெசுபித்திரியருக்கும் உரோமன் கத்தோலிக்கருக்கும் மன்னிப்பளித்தான். இதன்பயனாகத் துன்புறுத்தல் நிறுத்தப்பட்டது. " ஆண்டவனைத் தாம் விரும்பியபடி வழிபட இது பிரெசுபித்திரியருக்குச் சுதந்திரமளித்தது". சேமிசு விரும்பியதுபோல உரோமன் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பவும் இது வழிவகுத்தது. இதன் விளைவாகப் புரட்சுத்தாந்தியர் அரசுப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டனர். அவ்விடங்களில் கத்தோலிக்கர் நியமிக்கப்பட்டனர். ஒலிறூட்டவுசும் கத்தோலிக்கருக்கு வழங்கப்பட்டது. எனவே 1688 இற் புரட்சி ஏற்பட்டபொழுது கொத்துலாந்திலே அதிருத்திநிலவிற்று.

[1]எதிர்ப்படைக்குமுன்னால் நின்றுகொண்டு எற்பாட்டினர் யுத்த ஆயத்தஞ் செய்வதற்குப் பதிலாக, கலகத்தின் நோக்கமென்னவென்பதைப்பற்றி ஆராய்ச்சி நடத்தினர். தீவிர வாதிகள் மற்றத் திருச்சபையாட்சிகளெல்லாவற்றுக்கும் மேலாகப் பிரெசுபித்திரிய மதத்தையே தாபிக்க வேண்டுமென்றனர். மிதவாதிகள் கூறிய சாத்தியமான விடயங்களிலே கருத்திற் கொள்ள வேண்டுமென வாதாடினர். அத்தகைய கூறிய சாத்தியமான இலட்சியம் தமது வழிபாட்டு முறையைச் சுதந்திரமாகக் கைக்கொள்வதேயெனக் கொண்டனர். இவ்விடயங்களைப் பின்னால் தீர்த்துக்கொள்ளலாமென்றும், இப்பொழுது மொன்மதைத் தோற்கடிக்க வழி பார்க்க வேண்டுமென்றும் அவர்கள் எடுத்துக்காட்டினர். இவ்வாறு வாக்குவாதம் தொடர்ந்தது. வேற்றுமைகளைச் சமாளித்துப் போரளவில் ஒர் உடன்பாடுண்டானபோதும், உள்ளே பிணக்கிருந்து வந்தது. எற்பாட்டினர் படை தேய்ந்தது. யுத்தத்துக்கு எவ்வித ஆயத்தமுஞ் செய்யப்படவில்லை ; தலைவர்களிற் பலர் செய்ய வேண்டியதைச் செய்யாது விட்டனர். மிதவாதிகளில் ஒருவன் " ஆண்டவன் நமது தைரியத்தையும் ஞானத்தையும் எடுத்துக் கொண்டான் " எனக் கூறினான்.

ஆரும் பருவம் பற்றிய குறிப்புக்கள் (1603—1688)

இங்கிலாந்து அரசரும் கொத்துலாந்து அரசரும்

முதலாம் சேமிசு (1603—1625)
முதலாம் சார்சு (1625—1649)
பொதுநலவாயம் (1649—1653)
புரப்பகம் (1653—1658)
இரண்டாம் சார்சு (1660—1685)
இரண்டாம் சேமிசு (1685—1688)

முக்கியமான அயல்நாட்டரசர்

பிரான்சு : 13 ஆம் உலூயி (1610—1643)
14 ஆம் உலூயி (1643—1715)
சிபெயின் : 4 ஆம் பிலிப்பு (1621—1665)
பேரரசு : இரண்டாம் பேடினந்து (1619—1637)
சுவீடன் : கசுத்தாபசு அடோல்பசு (1611—1632)
கிறித்தினு : (1632—1654)
பிரண்டன்பேக்கு : பிரெடிரிக்கு உவில்லியம் (1644—1688)

குறிப்பு 59 :

முதலாம் சேமிசு : பிறநாட்டுப் பூட்கை

அமைதியை இலக்காகக் கொண்டான். அரசகுல முறை விவாகத்தால் அதை அடைய முயன்றான்.

1. **புரட்சுத்தாந்திய நட்புறவை** முதலில் நோக்கமாகக் கொண்டான். எனவே 1613 இல் தனது மகளான இலிசபெத்தை **பலற்றினேற்றுப்** பிரடரிக்கிற்கு விவாகஞ் செய்வித்தான்.

சேர்மனியில் முப்பதாண்டுப் போர் மூளல்.—புரட்சுத்தாந்திய மதத்தைச்சேர்ந்த பிரடரிக்கைப் புரட்சுத்தாந்தியர் **பொகீமிய** அரசனாகத் தெரிந்தனர் (1619) பேரரசன் அவனை எதிர்த்தான். புரட்சுத்தாந்திய அரசனை அவன் விரும்பவில்லை. பிரடரிக்கிற்கு ஆதரவளிப்பதாகச் சேமிசு வாக்களித்த போதிலும் அதை நிறைவேற்றவில்லை. பிரடரிக்குத் தோல்வியடைந்து தனது ஆணிலங்களையெல்லாமிழந்தான்.

2. **கத்தோலிக்க நட்புறவை** நோக்கமாகக் கொண்டு **சிபானிய மன்னன்** மகளுக்குத் தனது மகனை சார்சைத் திருமணஞ் செய்விக்கத் திட்டமிட்டான் (1617). ஆனால் " சிபானிய " திருமணத்துக்குப் பெரும் எதிர்ப்புண்டானது. (1618 இல் சிபானியரைத் திருத்திப் படுத்துவதற்காகச் சேமிசு இராவியைச் சிரச்சேதஞ் செய்தான்) இத்திருமணம்

நிறைவேறுதபடியால், **பிரெஞ்சு** மன்னனின் மகளுக்குச் சார்ள்சை மணம் முடிக்கச் சேமிசு திட்டமிட்டான். (இதனால் இங்கிலாந்து கத்தோலிக்க இராணியைப் பெற்றது. அந்த அரசியின் மக்களான இரண்டாம் சார்ள்சும், இரண்டாம் சேமிசும் பின்னர் கத்தோலிக்கராயினர்).

குறிப்பு 60—முதலாம் சேமிசு : சமயபூட்கை

1. கொத்துலாந்திலே பிரெசுபித்திரிய ஆட்சி நடப்பதை வெறுத்ததனாற் **பியூரித்தானியருக்குப்** பலத்த எதிர்ப்புக் காட்டினான். பியூரித்தானியரிற் பல பிரிவினர். சமயச்சபிப்பிலே எவரும் விருப்புக் காட்டவில்லை.

அமிற்றன் கோட்டு மாநாட்டிலே (1604) சேமிசு பிரெசுபித்திரியருக்கு மாறுக நின்றான். விசுப்பாண்டவரை ஆதரித்தான்.

2. சேமிசு சமிப்புத்தன்மையுடையவன். உரோமன் கத்தோலிக்கருக்குச் சகாயமுதலினான். கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்த சிபெயினுடன் அவன் நட்புறவு கொண்டதும், கத்தோலிக்கரை ஆதரித்ததும் ஆங்கிலக் குடிகளுக்கு மிகுந்த கோபமூட்டிற்று. ஆனால் 1605 இல் உரோமன் கத்தோலிக்கரின் **வெடிமருந்துச் சதியினால்**, சேமிசு அவர்களுக்கெதிராகச் சட்டங்களை இயற்றிக் கடுமையாக நடைமுறையிற்கொண்டுவரச் செய்தான்.

3. "அதிகாரம் பெற்ற" விவிலிய வேதநூல் பிரசுரிக்கப்பட்டது. இது அரசன் செய்த பெரிய முயற்சியாகும்.

குறிப்பு 51—முதலாம் சேமிசு : சொந்தப்பூட்கை

1. "அரசரின் தெய்வீக உரிமை"யில் நம்பிக்கை வைத்தான். இக் கொள்கைப்படி எல்லா அதிகாரத்துக்கும் "நீலேக்களன் அரசன்". பின்னர் பாராளுமன்றத்தோடு பிணங்குவதற்கு எதுவானது இதுவே.

2. முதலில் இலிசபெத்தின் அரசறிஞரைத் துணையாக் கொண்டான். பின்னர் அவர்களை நீக்கிவிட்டுத் தனக்கு இட்டமானவரான **சொமசெற்று ஏள், பக்கிங்கம் கோமகனான வில்லியசு** என்பவர்களை நியமித்தான்.

3. நீதிபதிகளின் ஆதரவைத்தேடினான். அவர்கள் தனக்குச் சார்பாகத் தீர்ப்பளிக்காதபோது பதவி நீக்கஞ் செய்தான். இதனால் நீதி பாதிக்கப் பட்டது.

4. அமைதியை விரும்பினான். புரட்சுத்தாந்திய இங்கிலாந்துடன் கத்தோலிக்க சிபெயின் நட்புறவு செய்தால் அமைதியுண்டாகுமென நினைத்தான்.

5. பியூரித்தானியரைப் பகைத்ததால் அவர்கள் அரசனை எதிர்த்தனர். உரோமன் கத்தோலிக்கருக்குப் பொறுதி காட்டியதால், இங்கிலாந்திலே போப்பாண்டவருக்கெதிராக மக்களைக் கிளம்பச் செய்தான்.

முதலாம்சேமிசின் ஆட்சியினது முக்கியத்துவம்

அரசன் கல்வி நிரம்பியவனுகவும், சமிப்புத்தன்மையுடையவனுகவும் சமாதானப்பிரியனுகவும் இருந்த போதிலும் **பியூரித்தானியரை விரோதிகளாக்கியும், அரசனின் அதிகாரத்தை மிகைப்படுத்தியும்,** தனது இட்ட சகாக்களின் புத்தியைக் கேட்டு **முடி யாட்சியை மக்கள் வெறுக்கச் செய்தும்** வந்ததால் அவனுடைய பூட்கை பிற்காலத்தில் உண்டான உண்ணாட்டு யுத்தத்துக்கு விதையிட்டது.

கல்வி நிரம்பியவனுயிருந்தும், பொதுஅறிவு குறைந்தவனுயிருந்தபடியால் இவன் "இறித்தவராச்சியங்களெங்கும் கிடையாத படித்த மடையன்" என்ற பட்டத்தைப் பெற்றான். கெட்ட சுபாவமுள்ளவர்களின் ஆலோசனைக்குச் செவிசாய்த்தான். அதனால் அவனுடைய செய்கைகள் எவரையும் திருத்திப்படுத்தாது எல்லாரையும் பகைக்கச் செய்தன.

குறிப்பு 62—முதலாம் சேமிசும் பாராளுமன்றமும்

(அ) **அரசரின் தெய்வீக உரிமை** பற்றிப் பிணங்கினான். "இறைமை" அரசனிடமும் பாராளுமன்றத்திடமுமுண்டெனப் பாராளுமன்றம் கருதியது. அரசனின் "தற்பிழமை" பாராளுமன்றத்தின் உரிமைக்கு மேலானதென்ற கொள்கையை அரசன் கொண்டிருந்தான்.

(ஆ) **பாராளுமன்றத்துக்கு அங்கத்தவரைத் தெரிவு செய்வது பற்றிப் பிணங்கினான்.** பாராளுமன்றத்துக்குத் தெரியப்பட்ட அங்கத்தவரை நீக்கிவிடத் தனக்கு உரிமையுண்டெனச் சேமிசு கூறினான் (கொட்வின் விடயம்) (1604).

(இ) **வரிமுறை.** பாராளுமன்றத்தினால் அனுமதிக்கப்படாத "**வரி முறையை**" அரசன் விதித்தான் (பேட்சுவிடயம்) (1606).

(ஈ) **அரசனின் அமைச்சர்.** பாராளுமன்றம் அரசனுடைய அமைச்சர் மீது பழிமாட்டறைந்தது (1621).

(உ) **பேச்சுச் சுதந்திரம்.** பேச்சுச் சுதந்திரத்தைப் பாராளுமன்றம் வற்புறுத்தியது (1622).

குறிப்பு 63—பியூரித்தானிய மதம்

இது இலிசபெத்து ஆட்சிக்காலத்திலே தோன்றியது ; முதலாம் சேமிசு காலத்தில் அரசனால் எதிர்க்கப்பட்டது. முதலாம் சார்ள்சை எதிர்த்தது. இரண்டாம் சார்ள்சு காலத்தில் திருச்சபையிலிருந்து வேறுகப்பிரிந்தது.

பியூரித்தானியர் முதலில் ஆங்கிலத் திருச்சபையைச் சேர்ந்திருத்தனர். செல்வராயுள்ள மத்திய வகுப்பாரிடையிலிருந்தும் பின்னர் சில பிரபுக் களிடையிலிருந்தும் இம்மதக் கோட்பாடுடையவர் தோன்றினர்.

பியூரித்தானியரிடையே பல பிரிவுகளுண்டாயின. சிலர் விசுப்பாண்டவரை ஆதரித்தனர். எல்லாரும் உரோமன் கத்தோலிக்கரையும் அவர்களுடைய சமயச் சடங்குகளையும் எதிர்த்தனர். பின்னர் உலோட்டின் முயற்சியால் சமயச்சடங்குகள் புனருத்தாரணஞ் செய்யப்பட்டன. எல்லாரும் விவிலிய வேதத்தை அடிப்படையாகக் கொண்டே தமது மதத்தை வகுத்தனர். **சகிப்புத்தன்மையிற் சிலரே நம்பினர்.** (சுயேச்சையாளர் அதை ஆதரித்தனர்; குரம்வெல் இவர்களைச் சேர்ந்தவனே) தமது கொள்கைகளை மற்றவர்கள் மீது திணிக்கவே எல்லாரும் முயன்றனர்.

மீட்சியின் பின்னர் பியூரித்தானியரைப் பற்றிப் பிழையான கொள்கைகள் பரப்பப்பட்டன. அதனால் அவர்கள் பெரிய இன்னல்களுக்காளாயினர். எருதுச் சண்டை, கரடிச்சண்டை முதலிய கொடிய விளையாட்டுகளை எதிர்த்தனர். நாடக அரங்குகளிலும், கிராம விளையாட்டுக்களிலும் காட்டப்படும் ஆபாசமான காட்சிகளை வெறுத்தனர். கலை, அழகியல் ஆகியவற்றை அவர்கள் வெறுக்க வில்லை. கோமசு என்ற நாடகத்தை மிலிற்றன் சங்கீதத்தோடு நடத்துதற்கே எழுதினர். குரம்வெல் சங்கீதத்தை விரும்பினன். மண்டக்கினுவின் ஓவியங் களை அழியாமற் காப்பாற்றியவன் அவனே.

உலோட்டின் உயர்திருச்சபைக் கொள்கைகளுக்கு எதிராக எழுந்த இணங் காதார் கூட்டத்தை முதலாம் சார்ளசு தூண்புரித்தியதாலும், பாராளு மன்றத்தின் தீர்மானங்களை அரசன் நிராகரித்த பொழுது, மக்களின் சுதந்திரத்துக்காக அவர்கள் வாதாடியதாலும், **அரசனுக் கெதிராக அவர் கள் எழுந்தனர்.**

குறிப்பு 64—முதலாம் சார்ளசு தனது பாராளுமன்றத்துடன் பிணங்கு வதற்கான காரணங்கள்

1. சமயம். சார்ளசு உயர்திருச்சபை அங்கிலிக்கமதத்தைச் சேர்ந்தவன். பாராளுமன்றம் தீவிர புரட்டசுத்தாந்தியக் கொள்கையுடையது. சார் லின் மனைவி உரோமன் கத்தோலிக்கச் சமயத்தைச் சேர்ந்தபடியால் சார்ளசு கத்தோலிக்க சமயத்துக்குப் பொறுதி காட்டினன். பாராளுமன்றம் கத்தோலிக்க சமயத்துக்கு மாறுயிருந்தது. உலோட்டும் சார்ளசும் உயர் திருச்சபைக் கருத்துக்களைப் பியூரித்தானியர் மீது திணிக்கப்பார்த்தனர்.

2. அரசனுடைய அமைச்சர்

அரசன் எத்தகைய அமைச்சரை நியமிக்கவேண்டு மென்பதைப் பாராளு மன்றமே நிருணயிக்கவிரும்பிற்று. அத்துடன் அமைச்சரின் பூட்கையை

யும் தானே வகுக்கவேண்டுமென விரும்பிற்று. அமைச்சர்மீது பாராளு மன்றம் அவநம்பிக்கை கொண்டதால் பணம் ஒதுக்க மறுத்தது. பக்கிங் ஹம் பணத்தை நல்ல முறையிற் செலவு செய்ய மாட்டான் எனப் பாராளுமன்றம் எண்ணிற்று (கேடிசுத்தாக்குதலிற்போல). பின்னர் பாரா ளுமன்றம் திரபோட்டையும் உலோட்டையும் கண்டித்தது.

3. பிறநாட்டுப் பூட்கை

பாராளுமன்றம் மன்னனின் பிறநாட்டுப் பூட்கையை ஆதரிக்கவில்லை. பின்னர் அரசனும் அரசியும் அயல் நாட்டு அரசுகளும் நடத்திய சதிகளை யறிந்து அவர்கள்மீது அவநம்பிக்கை கொண்டது.

4. வரிமுறை

தனது அனுமதியின்றி அரசன் வரி விதித்துப்பணஞ் சேர்ப்பதைப் பாராளுமன்றம் தடுக்கத் தீர்மானித்தது. பல வழிகளிற் பணந்திரட்ட அரசன் முயன்றான்.

(அ) **மிடாவரி, இருத்தல் வரி.** தனது வாழ்நாள் முழுவதும் இவ் வரியைப் பாராளுமன்றம் தனக்கு வழங்கவேண்டுமென அரசன் எதிர் பார்த்தான். ஆனால் ஒருவருடத்துக்கு மாத்திரமே பாராளுமன்றம் அதை அனுமதித்தது.

(ஆ) நிர்ப்பந்தமாக அரசன் கடன் கொடுக்கச் சில பிரபுக்களைத் தூண் டினன். மறுத்த ஐந்து நைற்றுமாரைச் சிறையிலிட்டான் (1628).

(இ) **கப்பற்பணம்.** எல்லாப் பிரதேசங்களிடத்திருந்தும் இவ்வரி அறவிடப் பட்டது. கடற்கரையடுத்த பகுதிகள், உள்ளூர்ப் பகுதிகள் என்ற வித்தி யாசம் பாராட்டப்படவில்லை (1634).

குறிப்பு 65—பாராளுமன்றமின்றி ஆட்சிநடத்தச் சார்ளசு செய்த முயற்சி

1. பாராளுமன்றமின்றியே ஆட்சி நடத்த அரசன் முயன்றான். எனவே பணம் கோராமற் காரியங்களை நடத்தினன்.

(அ) சண்டையிலீடுபடாதிருந்தான்.

(ஆ) சிக்கனமாக விடயங்களை நடத்தினன்.

2. வேறு வழிகளிற் பணம் சேர்க்க முயன்றான்.
நைற்றுப்பட்டத்தைப் பறிமுதல் செய்தல், கப்பற்பணம், முழுவுரிமைவிற்றல்.

3. "தற்பிழமையைப் பயன்படுத்தல்" அரசனுக்கு மாறுனவர்களை விசாரணைசெய்யத் "தற்பிழமைமன்றுகளை" ஏற்படுத்தல்; **வெள்ளிமன்றம், உயராணைமன்று.**

சார்ளசுக்கு அனுகூலமான நில விடயங்கள் வருமாறு :—

(அ) நாடு செல்வமுடையதாயிற்று.

(ஆ) எவரும் கொலைத்தண்டனையால் மரணமடையவில்லை.

(இ) அரசனுக்கு அனுசரணையாக நீதிபதிகளிருந்தபடியால் அவனுடைய செய்கைகள் சட்டபூர்வமானவையெனக் கருதப்பட்டன.

(ஈ) பூட்கையை உருவாக்கும் பொறுப்புப் பாராளுமன்றத்துக்கிருக்க வேண்டுமென்ற கருத்துப் புதியதாகையால் மக்கள் எல்லாரும் அதை ஆதரிக்கவில்லை.

குறிப்பு 66. திரபோட்டும் உலோட்டும்.

இருவரும் அரசாங்கத்தைப் பலமுள்ளதாக்க (" செப்பமுள்ளதாக்க ") முயன்றனர்

1. **திரபோட்டு** (1593—1641) பக்கிங்கமின் கொடுங்கோலாட்சியை முதலில் எதிர்த்தான். அவன் இறந்தபின் அரசன் இனி நல்லாட்சி நடத்துவானென எண்ணினான். பாராளுமன்றம் அமைச்சரை மேற்பார்வை செய்வதை அவன் விரும்பவில்லை.

(அ) சார்ளின் கட்சியிற் சேர்ந்தான். **வடபகுதியை** நன்கு ஆட்சி புரிந்தான (1628).

(ஆ) அரசப்பிரதிநிதியாக **அயலந்துக்கு** அனுப்பப்பட்டான். அங்கே நல்லாட்சி நடத்தினான். எனினும் ஆட்சி கடுமையானதாயிருந்தது. சணல் வளர்த்தல் போன்ற தொழில்களைத் தொடக்கினான். அரசனுக்கென ஒரு படையைப் பயிற்றுவித்தான் (1633).

(இ) விசுப்பாண்டவர் யுத்தத்திலே தனக்கு உதவிபுரியுமாறு அரசன் அழைப்பித்தான் (1639). பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டுமென்று சார்ளசுக்கு ஆலோசனை கூறினான். பாராளுமன்றம் கூடி **உரிமை நீக்கும் விதியொன்றைக்** கொண்டுவந்தது. இதனால் அவன் பாராளுமன்றத்தாற் குற்றவாளியெனத் தீர்க்கப்பட்டான். பின்னர் சிரச்சேதஞ் செய்யப்பட்டான் (1641).

2. **உலோட்டு** (1573—1645) திரபோட்டுடன் கருமமாற்றினான்.

(அ) சமயச் சடங்குகள் சம்பந்தமாகத் தான் கொண்ட கருத்துக்களை மக்களிடம் திணிக்குமாறு அரசனை ஊக்கப்படுத்தினான்.

(ஆ) சமயச் சார்பான வழக்குக்களை விசாரணைசெய்ய **உயராணை மன்றைப்** பயன்படுத்தினான். இங்கிலாந்திலே கல்வின் சமயம் பரவாது தடைசெய்தான்.

(இ) பியூரித்தானியரைக் கலகஞ் செய்யுமளவுக்கு ஆத்திரமூட்டினான். விசுப்பாண்டவர்களை எதிர்த்தவர்கள் மிகக் கொடுமையாகத் தண்டிக்கப் பட்டனர் **(பிறின்).**

(ஈ) ஈற்றிலே ஆங்கிலப் பிராரத்தனை நூலையும், பூசை நூலையும், கொத்து லாந்திலே திணித்தான். இதனால் விசுப்பாண்டவர் சண்டையுண்டானது. அதன் பயனாகப் பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டியேற்பட்டது. பாராளுமன்றம் கூடிய பின் உலோட்டு விசாரணை செய்து சிரச்சேதஞ்செய்யப் பட்டான்.

குறிப்பு. அரசனை, பாராளுமன்றமோ **ஆதிக்கமுடையதென்பதை** நிச்சயிப்பதே உண்மையான பிரச்சினையாயிற்று. சார்ளசு நாளடைவில் இதனை எல்லாருமறியச் செய்தான். **அவனுடைய முயற்சிகள் தோல்வியடைந்தன.** எனெனில் அவன் தனக்கெதிராகப் பல வகை மக்களை ஒற்றுமையடையச் செய்தான். சிலர் சமயங்காரணமாகவுஞ் சிலர் அரசியல் காரணமாகவும் ஐக்கியம் பூண்டனர். அவனுடைய மதப்பூட்கை கொத்துலாந்தரை யுத்தத்திலிறங்கச் செய்வதில் முடிவுற்றது. யுத்தத்திலிறங்கியதும் சார்ளசு பாராளுமன்றத்தைக் கூட்ட வேண்டியேற்பட்டது. எனெனில் அவன் தனது பலவகைப் படையெழுச்சிகளுக்கும் போதிய பணம் பெறமுடியாதிருந்தான்.

குறிப்பு 67. நெடிய பாராளுமன்றம். (1640—1660)

1. முடியின் தன்வயமான அதிகாரங்கள் ஒழிக்கப்பட்டன.

(அ) பலவித வரிகளும் (கப்பற்பணம் முதலியன) பாராளுமன்றத்தின் அனுமதியுடனேயே விதிக்க வேண்டியேற்பட்டது (1641).

(ஆ) மூன்று வருடத்துக் கொருமுறை பாராளுமன்றத்தை கூட்டல் **(மூவருடவிதி)** (1641).

(இ) தற்கிழமை நீதிமன்றங்கள் (வெள்ளிமன்றம், உயராணைமன்று) ஒழிக்கப்படல். நடுவருடன் விசாரணை நடத்தும் முறை தொடங்கிற்று (1641).

2. மன்னனின் ஆலோசகர் கண்டிக்கப்படல்

(அ) திரபோட்டு விசாரணை செய்து சிரச்சேதஞ் செய்யப்படல் (164?).

(ஆ) உலோட்டுக் கைது செய்யப்படல். பின்னர் சிரச்சேதஞ் செய்யப்படல். (1645).

3. பிரான்சுடன் அரசியும் அரசனும் **நடத்திய சூழ்ச்சிகளைக் கண்டித்தல்.** அயலந்துக் கலகத்தின் பயனாக, அரசன் கத்தோலிக்கருடன் சூழ்ச்சி செய்வதாகவும் அயலந்துப் படைகளைப் பயன்படுத்த அவன் விரும்புவதாகவும் மக்கள் ஒரு நம்பிக்கையைக் கொண்டனர் (1641).

4. யுத்தம் தொடங்குமென நம்பிப் பாராளுமன்றம் **குடிப்படையைத் தன்னுடைய அதிகாரத்தின் கீழ்க் கொண்டுவருதற்காக** ஒரு முறியைக் கொண்டு வந்தது. சார்ளசு இம்முறியை வீட்டுதல் செய்தான். யுத்தத்துக்கு இதுவே அறிகுறி (1642).

குறிப்பு 68. உள்ளூட்டு யுத்தத்தில் எதிர்க்கட்சிகள்

1. (அ) பாராளுமன்றக் கட்சிக்குள்ள சில அனுகூலங்கள்.

(1) இலண்டன் நகரமும், அல், பிளிமது போன்ற முக்கிய துறைகளும் அதன் கையிலிருந்தன. மூன்றில் இரு பங்குக் குடித்தொகையினர் ஆதரித் தனர். நாட்டின் செல்வத்தில் நான்கில் மூன்று பங்கு இக்கட்சிக் குரியதாயிற்று.

(2) உள்ளூர்க் கோட்டைகளைக் காவல் செய்வதிற் பாராளுமன்றக் கட்சி தனது படைகளை வீணுக்கவில்லை.

(3) கடற்படை பாராளுமன்றக் கட்சியைச் சேர்ந்திருந்தது.

(ஆ) அரச கட்சிக்குள்ள சில அனுகூலங்கள்.

(1) இராணுவத்திற் குதிரைப்படை அதிகமிருந்தது. இதுவே யுத்தப் போக்கை முதலில் நிச்சயிக்கக் கூடியதாயிருந்தது. அரச கட்சியில் நல்ல குதிரை வீரர் இருந்தனர். ஆரம்பத்தில் நல்ல சேனைத் தலைவரிருந் தனர்.

(2) சேனைத் தலைமை அரசனின் கீழ் ஒருமைப்பட்டிருந்தது.

(3) முடிக்குரிய மதிப்பிருந்தது.

(4) வரி அறவிடவும், இறக்குமதித் தீர்வை சேர்க்கவும் உரிமையிருந்தது.

2. கட்சிகளின் எதிரிடையான கொள்கைகள்

(அ) (1) வரி கட்டுப்படுத்தும் அதிகாரம் தனக்கிருக்கவேண்டுமென்றும், குடிகளுக்குச் சுதந்திரமிருக்க வேண்டுமென்றும், நடுவர் மூலம் விசாரணை நடக்க வேண்டுமென்றும், மகாபட்டயத்திற் காட்டப்பட்ட (மகிஞ காட்டா) "புராதனசுதந்திரங்கள்" இருக்க வேண்டுமென்றும் பாராளு மன்றங்கருதிற்று.

(2) அரசனின் **சமயப் பூட்கையைப்** பாராளுமன்றம் எதிர்த்தது. புரட் டஸ்தாந்திய மதத்துக்கு அரசன் துரோகஞ்செய்யப் பார்க்கிறானெனப் பாராளுமன்றம் எண்ணிற்று.

(3) நாட்டு மக்களே இறைமையுடையவர்கள்; அவர்களுடைய விருப்பப் படியே அரசன் ஆட்சி நடத்த வேண்டுமென்று பாராளுமன்றம் கருதிற்று.

(ஆ) (1) தானே யாப்பின் பாதுகாவலனென்றும் பாராளுமன்றம் அன் றென்றும் மிடாவரி, இறுத்தல் வரிக்குத் தனக்கே சீவியகாலம் முழு வதும் உரிமையுண்டென்றும் மன்னன் கருதினன்.

(2) திருச்சபைக்குத் தானே தலைவனென்றும், விசுப்பாண்டவரின் கீழ் அதைத் திருத்தியமைக்கும் விடயத்திலே தான் உறுதியாயிருக்க வேண்டு மென்றும் அரசன் கருதினன்.

(3) தனது அதிகாரம் தெய்வீக உரிமை மூலமே தனக்குக் கிடைத்த தென்றும் மக்களிடமிருந்து கிடைக்கவில்லையென்றும் அவன் கருதினன்.

எனவே இந்த யுத்தம் சமயத்துக்காகவும், யாப்பியல் விடயங்களுக்காகவும் நடத்தப்பட்டது.

குறிப்பு 69. உள்ளூட்டு யுத்தத்தின் பல கட்டங்கள். (1642—1651).

1. இலண்டனைப் பிடிப்பதே அரசனின் நோக்கம்.

(அ) முதல் வருடத்தில் தேனும் கிரீனில் தோல்வி (1642).

(ஆ) இரண்டாம் வருடத்தில் (1643) மூன்று திசைகளிலிருந்து இலண்டனை நோக்கி முன்னேறுதல்.

(1) வடக்கில் அரசன் வெற்றி பெற்றான்.

(2) மேற்கில் உருப்பே வெற்றி பெற்றான்.

(3) கிழக்கில், அரசன் வெற்றிபெறமுடியவில்லை. வடக்கே அல்லும் மேற் கிற் பிளிமத்தும் தாக்குதலை நிருவகித்தபடியால் இலண்டன் வீழவில்லை. அரச கட்சிப் படைகள் இவ்விரு நகரங்களையும் கைவிட்டு முன்னேறவும் முடியா திருந்தது.

2. இருகட்சியும் **கொத்துலாந்தின்** துணையை நாடின. கொத்துலாந்தர் பாராளுமன்றத்தை ஆதரிக்கத் தீர்மானித்தனர். **திடசங்கமும் ஏற்பாடுமென்ற** உடன்படிக்கையைப் பாராளுமன்றம் ஒப்புக் கொண்டது (1643). சார்ள்சு அயலந்துப் படைகளைத் தருவித்தான். கொத்துலாந்தரோடு ஒப்பிடும்பொழுது அப்படைகள் பயனற்றனவாயின.

3. **"கிழக்குச்சங்கம்"** என்ற படை குரம்வெல்லின் கீழ்ப் பூரணமாகப் பயிற்சி பெற்றது. அது தனது மாவட்டத்தை விட்டுக் கிளம்பி வடக்கே சென்று யுத்தஞ் செய்தது. **மாசுற்றன் மூரிற் பெருவெற்றி** (1644).

4. இதனால், புது மாதிரிச் சைனியம் நல்ல குதிரைப் படையும் சிறந்த உத்தியோகத்தருமுடையதாய் "எங்கும் போய்ச்" சண்டை செய்யத் தயாராயிருந்தது. **நேசுபி** யுத்தத்தில் வெற்றி (1645). "அரசனும் இராச சியமும் இழந்தன"

புதிய மாதிரிச் சைனியம்:

(அ) நல்ல சம்பளம் பெற்றது; பாராளுமன்றத்திடம் நிறையப் பண மிருந்ததே காரணம்.

(ஆ) இதில் 50,000 போர் வீரர் இருந்தனர்.

(இ) நான்கு வாரத்திலே இரண்டாவது உண்ணாட்டு யுத்தத்தில் வெற்றி பெற்றது.

(ஈ) உசுற்றரில் இரண்டாவது சாள்சு தோற்றான். (1651)

குறிப்பு 70. பொதுநலவாயம்: குடியரசுக் கொள்கைப் பரிசோதனை (1649—1659)

1. பொதுநல வாயம்.

(அ) **பல கட்சிகள்.** அரச கட்சியினர் இன்னும் பெருந்தொகையின ராயிருத்தல். பிரெசுபித்திரியருக்குக் கொதுலாந்தர் உதவிபுரிதல். சமநிலை வாதிகள் (தீவிரக் குடியரசு வாதிகள்), சகிப்புத்தன்மை பெரிதுமுள்ள சுயேச்சையாளர் போன்ற தீவிரவாதிகள். நிலைமையை அடக்கிக் கொண்டிருந்த சனியம்.

(ஆ) குரம்வெல்லுக்கு மிகுந்த செல்வாக்கிருந்தது. அதை அவன் மிதமான குடியரசுக் கொள்கையை நிலைநாட்டப் பயன்படுத்தினன். அதனால்:

(1) தீவிரவாதிகள் வெறுக்க, அரசனோடு இணக்கப் பேச்சு நடத்தினன். கொத்துலாந்தரும் பிரெசுபித்திரியரும் இப்பொழுது அரசனை ஆதரித்தனர். இதனால் இரண்டாவது உண்ணாட்டு யுத்தமுண்டானது. அதன் பயனாக அரசன் சிரச்சேதஞ் செய்யப்படல் (1649).

(2) சனியம் சுயேச்சையாளரை ஆதரித்ததை எதிர்த்த கொத்துலாந்தருடன் பிணங்கினன். இங்கிலாந்திலே பிரெசுபித்திரிய சமயத்தைப்பரப்ப அவர்கள் விரும்பினர். அதைக் குரம்வெல் எதிர்த்தான். எனவே மூன்றாவது யுத்தம் உண்டானது. (1648) தன்பாரிற் கொத்துலாந்தர் தோற்கடிக்கப்பட்டனர். (1650) இரண்டாம் சாள்சு உசுற்றரிலே தோற்கடிக்கப்பட்டான். (1651).

(இ) **ஒற்றைமன்ற ஆட்சி. எச்சப் பாராளுமன்றம் உருவான முறை:**

(1) **பிரைட்டின் கழிப்பு** (திசெ. 1648) 90 அங்கத்தவர் எஞ்சினர். ஒற்றைமன்ற ஆட்சி ஏற்படல். அரசுக் கழகம்; இராணுவக் கழகம்; எச்சப்பாராளுமன்றம்.

"பாராளுமன்றத்தோடு ஆட்சி நடத்தவோ அன்றி இல்லாமல் ஆட்சி நடத்தவோ குரம்வெல்லால் முடியவில்லை". அவனும் சனியமும் எச்சப் பாராளுமன்றத்துடன் பிணங்கிக் கொண்டு அதைக் கலைத்தல் (1653).

(2) **பெயபோனின் பாராளுமன்றம்.** (1653) அயலந்துப் பிரதிநிதிகளும் கொத்துலாந்துப் பிரதிநிதிகளும் இதில் இடம் பெற்றனர். ஐக்கிய பிரித்தானியப் பிரதிநிதிகளிவ்வாறு இதில் இடம்பெற்றனர். இது காரியசாத்திய மற்ற சபை. 1653 இற் கூலைக்கப்பட்டது.

2. **முதற் புரப்பகம் (1653—56).**

புதிய யாப்பு. **அரசாங்க சாதனத்தின் மூலம் புரப்பகம் ஏற்படுத்தப்படல்** (1653). **ஒற்றைமன்றப்** பாராளுமன்றம். அரசியல் யாப்பிற்கு மாறான விதிகளை வீட்டுதல் செய்யப் புரப்பாளருக்கு அதிகாரம். ஐந்து மாதத்தின் பின்னர் சபையைக் கூலைக்கவும் அதிகாரம். வரிவிதிப்பை மேற்பார்வை செய்யப் பாராளுமன்றத்துக்கு உதவிபுரிய **அரசுக் கழகம்** ஏற்படுத்தல்.

சனியத்தைக் குறைக்கவும், பிரெசுபித்திரியரல்லாதாரைக் துன்புறுத்தவும் இப்பாராளுமன்றம் விரும்பியது. **குரம்வெல் சகிப்புத்தன்மையை விரும்பினன்.** எனவே பாராளுமன்றத்தைக் கூலைத்தான். (1655). சனியத்தின் உதவியையும் ஆலோசனையையும் நாடினன்.

3. **இரண்டாவது (திருந்திய) புரப்பகம். (1656—59)**

பதினொரு மாவட்டங்களில் **மேசர் சனரல்** அதிகாரிகளை ஏற்படுத்தி நாட்டில் ஒழுங்கான ஆட்சியை நடத்தக் குரம்வெல் முயன்றான். பாராளுமன்றம் பணிமனுவும் ஆலோசனையும் (1656) என்ற சாசனத்தை வரைந்தளித்தது. இதன்படி பழைய முறையிற் பொதுமக்கள் சபையும் பிரபுக்கள் சபையும் இருக்க வேண்டுமென்றும், குரம்வெல் அரசனாயிருக்க வேண்டுமென்றும் விரும்பியது. குரம்வெல் அரசனாகவிரும்பவில்லை. **திருந்திய புரப்பகத்தை** நிறுவினன். நியமிக்கப்பட்ட மேற்சபையையும் விசாலிக்கப்பட்ட கீழ்ச் சபையையும் ஏற்படுத்தினன். தமது அதிகாரங்களைப் பற்றி இருசபைகளும் உடனே பிணங்கின. குரம்வெல் அவற்றைக் கூலைத்தான். குரம்வெல் மரணம் (1658).

குறிப்பு: இப்பரீட்சைகள் மூன்று காரணங்களால் **தோல்வியுற்றன:**

(அ) தேர்தல்கள் சுதந்திரமாக நடைபெறுதபடியாற் பாராளுமன்றம் நாட்டின் **பிரதிநிதிகளைக் கொண்டிருக்கவில்லை.** அரச கட்சியைச் சேர்ந்வர்களிற் பெருந்தொகையினருக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை.

(ஆ) மற்றச் சமயத்தவரைத் துன்புறுத்த விரும்பிய சகிப்புத்தன்மையற்ற அங்கத்தவர் பலர் பாராளுமன்றத்திலிருந்தனர். இதைக் குரம்வெல்லும் சனியமும் விரும்பவில்லை.

(இ) அரசாங்கத்தின் மற்றிரு கட்சிகளில் எதனோடும் சனியம் உடன்படமுடியவில்லை. "அரசாங்க சாதனமும்" "பணிமனுவும்" எழுத்தில் வந்த யாப்புக்களாகும். இரு சபைகளின் அதிகாரங்களையும் நிருணயிப்பதில் உள்ள இடர்களை இவை காட்டின.

குறிப்பு 71. குரம்வெல்லின் பிறநாட்டுப் பூட்கை.

அவனுடைய பூட்கை உறுதிப்பாட்டை அடிப்படையாகக் கொண்டது.

(அ) சுதுவட்டு மன்னர்களே மறுபடியும் அரசுரிமை பெறவிடாது தடுத்தல். இது சாத்தியமானதற்குக் காரணம்—அக்காலத்திற் பிரான்சும் சிபெயினும் சண்டையிட்டன. இரு நாடுகளும் இங்கிலாந்தின் துணையை வேண்டின. எனவே சுதுவட்டு மன்னரை இரு நாடுகளும் ஆதரிக்க மறுத்தன.

(ஆ) புரட்டசுத்தாந்திய சமயத்தைப் பாதுகாத்தல்.

(1) சிபெயினுடன் இணக்கப் பேச்சு. யுத்தச் செலவைச் சிபெயின் பொறுக்க வேண்டும். கலே நகரைப் பிரித்தானியாவுக்குக் கொடுத்து விடவேண்டும். வியாபாரம் சிபானியக் குடியேற்றங்களோடு அனுமதிக்கப் படவேண்டும். ஆங்கிலேயரைச் சமயவிசாரணைமன்று தொந்தரவுக்குட் படுத்தக் கூடாது. சிபானியர் இந்த நிபந்தனைகளை நிராகரித்தனர் (1654).

(2) பிரான்சுடன் இணக்கப்பேச்சு. யுத்தச் செலவைப் பிரான்சு பொறுக்க வேண்டும். தங்கேக்கு பிரித்தானியருக்குச் சேரவேண்டும். வோடுவாலினுள்ள வர்களைத் துன்புறுத்தல் நிறுத்தப்பட வேண்டும். இந்நிபந்தனைகளின் படி பிரான்சுடன் இராணுவ நட்புறவு செய்யப்பட்டது, (1657). புரட்டசுத் தாந்தியருக்குச் சலுகை பெறப்பட்டது. மூடத் தனமாகச் சகிப்புத்தன் மையின்றி நடந்து கொண்ட சிபெயினுக் கெதிராக யுத்தந் தொட ரப்பட்டது.

(இ) ஆங்கிலேயர் வியாபாரத்தை விருத்தி செய்வதற்காக இடச்சுக் கார ருடன் யுத்தம் தொடரப்பட்டது. இடச்சுக்காரரே ஆங்கிலேயரோடு வியாபாரத் துறையிற் போட்டியிட்டனர்.

1. **1652–53, முதல் இடச்சுப்போர். வியாபார நோக்கமாகச்** செய்யப் பட்டது. **கப்பலோட்டல் விதி.** (1651). எச்சப்பாராளுமன்றத்தால் நிறை வேற்றப்பட்டது. இதன்படி இங்கிலாந்துக்கு வரும் சரக்குக்கள் இங்கிலாந்துக் குரிய கப்பலிலேயே வரவேண்டுமென்று விதிக்கப்பட்டது.

2. புரப்பாளனென்ற முறையிற் குரம்வெல் **சமாதானம்** செய்தல் (1654). இதைத் தொடர்ந்து ஒல்லாந்து தென்மாக்கு சுவீடன், இங்கிலாந்து ஆகிய தேசங்கள் புரட்டசுத்தாந்திய நட்புறவொன்று செய்தல்.

3. **சிபானியப்போர்.** சிபெயினும் பிரான்சும் போர் செய்தல். **குரம் வெல் பிரான்சை ஆதரித்தல். (1655–57).**

(அ) சிபெயினுக்கெதிராக மேற்கிந்திய தீவுகளிற் குடியேற்ற யுத்தம் நடத்திச் சிபெயினுக்குச் சொந்தமான பல தீவுகளைக் கைப்பற்றல். (1655–58).

(ஆ) மத்தியதரைக் கடற்படையெழுச்சியிற் பெருவெற்றி, (1655). மத்திய தரைக்கடலில் ஆங்கிலேயர் ஆதிக்கம்பெறல்.

(இ) பிரான்சு இங்கிலாந்தின் துணைபெற, சவோய் புரட்டசுத் தாந்தியரைத் துன்புறுத்தலை நிறுத்துமாறு செய்தல். (மில்டன் எழுதிய கவிதை "வஞ்சந்தீர்த்திடையனே! கொலைக்களப்பட்ட கோதில் தவத்தினர்") (1655).

(இ) சிபானிய உடைமையாகிய தங்கேக்குமீது தாக்குதல். திபூன்சு யுத்தத்தின் பின்னர் அது கைப்பற்றப்படல் (1658),

குறிப்பு : பிரான்சுடன் குரம்வெல் நட்புறவு செய்தமை கண்டிக்கப்படல்; சிபெயினின் அதிகாரம் குறைவதாயும், பிரான்சு மீச்செல்லுமியல்பின தாயும் இருந்தாலும், சமயக் காரணம் பற்றியே குரம்வெல் அம் முடிபுக்கு வந்தான்.

குறிப்பு 72—குரம்வெலாட்சியில் ஆங்கிலேயர் கடலாதிக்கம்

கடற்படைக்குச் சிறப்பும் வெற்றியும். பிளேக்கு ஆங்கிலேயக் கடல் வீரரிற் சிறந்தோருள் ஒருவன். கடற்படைப்பலமே இங்கிலாந்தின் பலத்துக்கு முக்கிய காரணமாயிற்று. பிளேக்கு (1599—1657) சாதாரணக் குடிமகப் பேர்வழி. உண்ணாட்டு யுத்தத்திலே சண்டை செய்தவன். கடற்படையிற் சேர்ந்ததும் (குரம்வெல் இராணுவமேதையானமைபோல) கடல் யுத்தத் திற் சிறந்த மேதாவியானான். இங்கிலாந்திடம் சிறந்த கப்பல்களிருந்தன. பலமாகக் கட்டப்பட்டவை; நன்கு ஆயுதம் பூண்டவை.

1. **உண்ணாட்டு யுத்தத்திலே** பிளேக்கு **உருப்பேட்டைத்** தோற்கடித்தான். இலிசுபனில் அவன் படையை முற்றுகையிட்டான். போத்துக்கேயக் கடற்படையைத் தோற்கடித்தான். மத்தியதரைக் கடலிலே உருப்பேட்டின் கப்பற்படையைப் பின்னர் நிர்மூலமாக்கினான் (1651).

2. **முதலாவது இடச்சுப்போரில் வான் துரொம்பின்** தலைமையிலிருந்த வலிமைமிக்க கடற்படையுடன் பிளேக்கு எதிர்த்துப் போர்புரிய நேரிட்டது.

(அ) 1652, **மே மாதத்திலே** பிளேக்கு வான்துரொம்பைத் தோவர்த் தொடுகடலிலே தோற்கடித்தான். கால்வாயில் இடச்சுக்காரர் ஆதிக்கஞ் செலுத்தினர். செத்தெம்பரில், தவுன்சிலே பிளேக்கு இடச்சுக்காரரை முறியடித்தான். **நவம்பரில்** தஞ்சனசிலே வான்துரொம்பு பிளேக்கைத் தோற்கடித்தான். ஆங்கிலேயர் தேமிசுநதியிற்புகலடைந்தனர்.

1653 **பெப்புருவரியில்** பிளேக்கு **போத்துலாந்துக்கு** அப்பால் மூன்று நாள் யுத்தம் நடத்தி வெற்றி பெற்றான். கால்வாய் ஆதிக்கம் ஆங்கிலேயர் கைக்கு வந்தது. **யூன்** மாதத்தில் நடந்த சண்டையில் ஒரு பக்கமும் வெற்றி பெறவில்லை. **நவம்பரில்** ஆங்கிலர் வெற்றிபெற்றனர். வான்துரொம்பு கொலையுண்டான்.

(ஆ) இடச்சு வியாபாரம் சேதமடைந்தது. 1400 இடச்சுக் கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. இடச்சுவியாபாரக் கப்பல்கள் கடலிலிருந்து விரட்டப்பட்டன. சமாதானத்தினால் (1654) இங்கிலாந்து வியாபாரத்தில் வெற்றிபெற்றது.

3. சிபெயினுடன் போர்.

(அ) தளபதி பென் தலைமையிலிருந்த கடற்படை மேற்கிந்திய தீவுகளைத் தாக்கிற்று. வெனேபிள் தலைமையிற் சென்ற சைனியம் இசுப்பானியோலாவைக் கைப்பற்றத் தவறியது. (1655) ஆனால் **யமேக்காவைக் கைப்பற்றியது.** (1655).

(ஆ) மத்தியதரைக்கடற்குக் கப்பற்படை யெழுச்சி. **தியூனிசுப்பெய்யைப்** பிளேக்குத் தாக்கினான். மத்தியதரைக் கடலில் ஆங்கிலக் கப்பற் படையின் முதற்றேற்றம் (1655).

(இ) சிப்பானியத் திரவியக் கப்பலைச் **சாந்தாகுரூசுக்கு** (தெனெரீப்பு) அப்பால் தாக்குதல். முழுக்கடற் படையையும் **அழித்தல்.** கோட்டையிலிருந்து வந்த பீரங்கி எதிர்ப்பையும் நிருவகித்தல். திரும்பி வருகையிற் பிளேக்கு இறத்தல் (1657).

குறிப்பு 73.—குரம்வெலின் வாழ்க்கை வரலாறு (1599—1658).

பண்ணேயார் பரம்பரையிற் பிறந்தவன். 40 வயது செல்லும்வரை சிறு பண்ணைக்காரனாக மிதுலந்தில் வாழ்க்கை நடத்தினான். மிகுந்த சமய பத்தியுள்ளவன்; சிக்கிப்புத்தன்மை வாய்ந்தவன். முதலாம் சாள்சு தன்வயமான ஆட்சி நடத்துகிறானென உணர்ந்து அதை அடக்க நிச்சயித்தான். உண்ணாட்டு யுத்தத்திலே போர் வீரனாயிருந்து பலரை விண்ணுலகேற்றினான். ஆங்கில மக்களுக் கெதிராகப் பிரெஞ்சுப்படைகளைச் சாள்சு பயன்படுத்தத் திட்டமிட்டானென்ற காரணத்தால் அவனைக் கொல்வது தகுதியென எண்ணினான். அண்டிந்தன் தொகுதிப் பிரதிநிதியாகப் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்தான் (1628). நெடிய பாராளுமன்ற அங்கத்தவனாயிருந்தான். **வேரோடுகளையும் மனு, பெரு மன்றாட்டு** என்பவற்றையும் வரையத் துணைபுரிந்தான் (1641).

1. சிறந்த சேனைத்தலைவன்.

(அ) இழக்குச் சங்கத்தை அமைத்தான் (1643). புது மாதிரிச் சைனியத்தை அமைத்தான் (1644). கட்டுப்பாட்டிற் கண்டிப்பாயிருந்தான். ஆரம்பத்திலே குதிரைப்படையின்றி இயங்கின பாராளுமன்றப் படைக்குக் குதிரைவீரரைப் பயிற்றிக்கொடுத்தான்.

(ஆ) ஒரு யுத்தத்திலும் தோல்வியடையவில்லை. பலயுத்தங்களிலே எதிரிவிட்ட பிழையாற் பாதுகாக்கப்பட்டான் என்பதைக் குறித்துக் கொள்க. நேசுபியில் உரூபட்டு (1645), **தன்பாரிற்** கொத்துலாந்தர் (1650).

3. அரசறிஞன்—

(அ) சமயத்துறையிலே சிக்கிப்புத்தன்மையை எப்பொழுதுமே மேற்கொண்டான். அதனாற் பாராளுமன்றங்களுடன் அடிக்கடி பிணங்க நேரிட்டது.

(ஆ) வெளிநாடுகளில் இங்கிலாந்து உயர்ந்த நிலையிலிருக்க வேண்டுமெனவும் விரும்பினான். தனியாட்சி நடத்திய பிரான்சு மன்னனும், சிபானிய மன்னனும் இவனுடைய உதவியை நாடிப் போட்டியிடும் அளவுக்கு இவனுடைய பிறநாட்டுப் பூட்கை சிறப்புடையதாயிருந்தது.

(இ) கடற்படையின் முக்கியத்தை உணர்ந்தான்.

நாட்டிலே நிலையான ஆட்சியை நிறுவத்தவறினான். அவனது அரசியல் யாப்புப் பரீட்சைகளெல்லாம் தோல்வியடைந்தன. அவனது ஆட்சி இராணுவத்தையே அடிப்படையாகக் கொண்டது. பொது சன ஆதரவைப் பெறவில்லை. அதனால் சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தினுதவியோடாயினும் நியமன அங்கத்தவரைக் கொண்ட பாராளுமன்றத்தினுதவியோடாயினும் ஆட்சி நடத்த முடியாதவனானான்.

மீட்சியின் பின் அவனுடைய பிரேதம் உவெசுமினித்தர் கல்லறையிலிருந்து தோண்டியெடுக்கப்பட்டுப் பின்னர் தைபேணில் தூக்கப்பட்டது.

குறிப்பு 74. கொத்துலாந்துடனும் அயலந்துடனும் குரம்வெலின் தொடர்பு.

1. கொத்துலாந்து

(அ) முதலாம் உண்ணாட்டு யுத்தத்தின் பின்னர் இங்கிலாந்து பிரெசுபித்திரிய சமயத்தைத் தழுவுமாறு கொத்துலாந்து நிர்ப்பந்தஞ் செய்தது. குரம்வெலும் அவனுடைய ஆதரவாளரும் இதை எதிர்த்தனர். ஆனால் முதலாம் சாள்சு இங்கிலாந்தில் குரு பரிபாலனத்தை மேற்கொள்ளலாமெனக் கூறினர் **(பிரேரணைத் தலைப்புக்கள், 1647).** சாள்சு கொத்துலாந்தர் நட்பை விரும்பினான். எனவே சாள்சின் சார்பாக 1648 இற் கொத்து

லாந்தர் இங்கிலாந்தின்மீது படையெடுத்தனர். குரம்வெல் அவர்களை வீகானிலும், உவரிந்தனிலும், பிரெசுற்றனிலும் (1648) தோற்கடித்தான். கொத்துலாந்திற் பிரவேசித்து ஆகைலே அதிகாரத்திலிருத்தினன்.

(ஆ) முதலாம் சாள்சின் மரணத்தின் பின்னர் கொத்துலாந்தர் இரண்டாம் சாள்சை ஆதரித்தனர். சாள்சு இங்கிலாந்திலே பிரெசுபித்திரிய சமயத்தை நிறுவுவதாக வாக்களித்தான் (1650).

குரம்வெல் கொதுதுலாந்துக்குப் படையெடுத்துத் **தன்பார்** யுத்தத்தில் வெற்றிபெற்றான் (1650). எடின்பரேவையும் பேதையும் கைப்பற்றினன். சமாதானத்துக்கு வருமாறு கொத்துலாந்தரை வற்புறுத்தினன். சேனாதிபதி மொங்கை அவர்களின் ஆள்பதியாக ஏற்குமாறும் நெருக்கினன்.

2. அயலந்து

(அ) 1649 இல் அயலந்தர் முதலாம் சாள்சை ஆதரித்தனர். **குரம்வெல்** அங்கு படையெடுத்துச் சென்று **துரோயிடாவையும், வெட்சுபோட்டையும்** கைப்பற்றினன். மிகுந்த கொடுமைகள் புரிந்தான். துரோயிடாவிலிருந்த காவற்படையைப் படுகொலை செய்தான். " கண்ணிற் கண்ட குருமாரைப் " பரலோகத்துக்கனுப்பினன்.

(ஆ) பின்னர் எஞ்சிய பகுதிகளை **அயட்டன்** கைப்பற்றினன்.

(இ) நிலங்களைப்பறித்து ஆங்கிலேயர் குடியேற்றப்பட்டனர். (அயலந்துப் பாமர மக்கள் நிலத்தில் வேலையாட்களாக விடப்பட்டனர். ஆங்கில நிலக் கிழார்கள் அதிகாரிகளாயிருந்தனர். அயலந்தின் முக்காற்பகுதியில் இவ் வாறு நடந்தது). வெளியாராதனையைப் பொறுத்த மட்டில், கத்தோலிக்க சமயம் நசுக்கப்பட்டது.

(ஈ) " பெயபோன்சுப் " பாராளுமன்றத்தில் **அயலந்துப் பிரதிநிதி களுக்கு** இடம் கொடுக்கப்பட்டது. கட்டுப்பாடற்ற வியாபாரம் நடத்தவும் உரிமை வழங்கப்பட்டது.

குரம்வெல் சாதாரணமாக மதச்சகிப்புடையவன். ஆனால் அயலந்து விடயத்தில் அவன் கொள்கை மாறியது. சுதுவட்டு மன்னருக்கு அயலந்து படைத்துணை செய்யுமென அவன் எண்ணினன். இவ்வாறு அவர்களிடம் கடுமையாயிருந்தால் அத்துணையை அவர்கள் மறுக்கக் கூடுமென எண்ணி னன். ஆனால் அவன் கொள்கை தோல்வியுற்றது. அதனால் அயலந்து மக்கள் மிக்க துன்பத்துக்கும் நாசத்துக்குமாளாயினர். குடித்தொகை மூன்றிலொரு பகுதிக்கு மேலாகக் குறைந்தது.

குறிப்பு 75—சுதுவட்டுமன்னரின் கீழ் அயலந்தின் நிலைபற்றிய சுருக்கம்.

1. **முதலாம் சேமிசு அல்சுற்றரில் நடந்த திரோன் கலகத்தை (1607)** அடக்கினன். திரோனுடைய நிலங்களையும் தயகொனலுடைய நிலங் களையும் பறிமுதல் செய்தான். அல்சிற்றரில் குடியேற்றஞ் செய்யப்பட்டது. அங்கே பெரும்பாலும் கொத்துலாந்துப் பிரெசுபித்திரியரே குடியேறினர். (1610).

2. **முதலாம் சாள்சு நிரபோட்டை** அங்கு அனுப்பினன் (1633—40). அவன் அங்கே ஒழுங்கை நிலைநாட்டினன். வியாபாரத்தை விருத்திசெய் தான்.

சலாற்கைத் தொழிலை அபிவிருத்தி செய்தான்; சைனியத்தை அமைத் தான். புரட்டசுத்தாந்தியச் திருச்சபையைச் சீர்திருத்தினன். அயலந்திற் **பாராளுமன்றத்தைக்** கூட்டிப் பயனுள்ள விடயங்களை அதன்மூலம் செய் வித்தான்.

கொளேற்றிலுள்ள நிலக்கிழார்களின் நிலங்களைப்பறித்து அவர்களைக் கலேத்துவிட்டு வேறு மக்களைக் கொண்டுவந்து குடியிருத்தினன். **நெடிய பாராளுமன்றம் கூடியபொழுது, அயலந்து மக்கள் கலகஞ் செய்தனர்.** பியூரித்தானியர் தம்மை நிர்ப்பந்தப் படுத்தக் கூடுமென அவர்கள் அஞ் சினர் (1641). அல்சுற்றரிலுள்ள கொத்துலாந்துப் பிரெசுபித்திரியர் மீது தாக்குதல் நடந்தது. (3000 பேர் கொல்லப்பட்டனர்). அயலந்திலே கத் தோலிக்கருக்குச் சலுகை இடையாதென நெடிய பாராளுமன்றம் பிரகடனஞ் செய்தது. கலகக்காரருக்குரிய நிலங்களையும் பறிமுதல் செய்வதாகப் பிர கடனஞ் செய்தது.

3. பியூரித்தானியராட்சியை வெறுத்த அயலந்து **இரண்டாம் சாள்சை** ஆதரித்தது. சாள்சுக்காகக் கலகஞ் செய்தது. **குரம்வெல்** அக்கலகத்தை யடக்கி அயலந்தை நசுக்கினன். துரோயிடாவிலுள்ள காவற்படை நிர்மூலமாக்கப்பட்டது (1649). அயலந்துப் பிரெசுபித்திரியர் பெயபோன் பாராளுமன்றத்துக்கு அழைக்கப்பட்டனர் (1653). அயலந்து இங்கிலாந்துடன் கட்டுப்பாடற்ற வியாபாரஞ் செய்ய அனுமதிக்கப்பட்டது.

4. இரண்டாம் சாள்சு ஆட்சிக்கு மீளல்

(அ) 1641 இல் கலகஞ் செய்யாத நிலச் சொந்தக்காரர் குடியேறிய நிலம் பற்றிய தொல்லையை அவர்க்கு நிலம் வழங்கிச் சமாளித்தல். குரம்வெலின் குடியேற்றக் காரருக்கு வேறு நிலம் வழங்கல். விளைவு : 1665 இன் பின்னர் மூன்றிலொரு பங்கு நிலச் சொந்தக்காரர் அயலந்துக் கத் தோலிக்கர். மூன்றிலொரு பங்கினர் இலிசபெத்து காலத்திலும் முதலாம் சேமிசு காலத்திலும் குடியேறியவர். எஞ்சிய மூன்றிலொரு பங்கினர் குரம்வெலாற் குடியேற்றப்பட்டவர்.

(ஆ) ஒமண்டு **அயலந்து** நிருவாகத்தை நடத்தினன். கத்தோலிக் கருக்குப் பொறுதி **வழங்கினன்** (1661—1665).

(இ) கட்டுப்பாடற்ற வியாபாரம் நிறுத்தப்பட்டது. **அதனல்** அயலந்தின் வியாபாரங் குன்ற **அது** இன்னலுற்றது.

5. இரண்டாம் சேமிசு

(அ) உரோமன் கத்தோலிக்க அதிகாரி, தயக்கொனல் பிரபு. அயலந்தை வேறுவகையில் ஆட்சி செய்தல்.

(ஆ) 1688 புரட்சியின் பின்னர் அயலந்து சேமிசை ஆதரித்தல். புரட்சுத்தாந்தியர் எதிர்த்தல். இலண்டண்டெரி முற்றுகை. எனிசுக்கில் லென்யுத்தம் (1689). போயின் யுத்தத்திலே சேமிசு தோல்வி யடைதல் (1690).

(இ) மூன்றுவது உவில்லியத்தின் சார்பில் அயலந்து சேச்சிலாலும் பின் கெலாலும் வெற்றி கொள்ளப்படல். இலிமெரிக்கு வீழ்ச்சியை ஒப்புக் கொண்டு அயலந்து ஒப்பமிடல். இதன்படி இரண்டாம் சாள்சின் காலத் திலிருந்த சலுகைகள் உரோமன் கத்தோலிக்கருக்குத் தொடர்ந்திருக்க ஒழுங்காதல். இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாமை. உரோமன் கத்தோலிக்கருக் கெதிரான குற்றச் சட்டங்கள் நிறைவேறுதல்.

குறிப்பு 76—மீட்சி

மீட்சி உடன்படிக்கை. "வானாட்சியின் அடிமைத்தனத்தை" நீக்கு வதற்காக மொங்கின்மூள்ள இராணுவத்தாற் செய்யப்பட்டது. மொங்கின் ஆலோசனையை இரண்டாம் சாள்சு ஏற்றுக்கொண்டு பிரெடாப் பிரகடனத்தை வெளியிட்டான் (1660).

1. **பிரெடாப்பிரகடனம்** பின்வரும் நிபந்தனைகளை வெளியிட்டது.

(அ) "சுதந்திரமான" பாராளுமன்றத்தைத் தெரிதல். அரசன் அதன் துணையுடன் ஆட்சி புரிதல்.

(ஆ) பொதுநலவாயத்தில் வாங்கப்பட்ட நிலங்களைப் பறிமுதல் செய்யா திருத்தல்; அதாவது அரசகட்சியினரிடமிருந்து பறிக்கப்பட்ட நிலங்கள் திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

(இ) சமயச் சகிப்புத்தன்மை வாக்களிக்கப்பட்டது (ஆனல் நிறைவேற்றப் படவில்லை).

2. **முடியாட்சி மீளல்.** முடிக்கெதிராகப் படையெடுத்தல் இராசத் துரோகமெனக் கொள்ளப்பட்டது. ஆனல் அரசன் தன்வயமான ஆட்சி நடத்தினல் பாராளுமன்றமும், நாட்டுமக்களும் அதை எதிர்ப்பார்களென் பதை எல்லாருமுணர்ந்தனர்.

3. அரசன், பிரபுக்கள் சபை, பொதுமக்கள் சபை என்பவற்றைக் கொண்ட **பாராளுமன்றம் நிறுவப்பட்டது.** எல்லா வரிவிதிப்புக்களும் பாராளு மன்றத்தின் அனுமதியுடனேயே நடைபெற வேண்டியிருந்தது. அதனல் அரசனும் அதற்குக் கட்டுப்பட்டான்.

4. **இங்கிலந்துச் திருச்சபை மீண்டும் அமைக்கப்பட்டது.** சமயத்துக்காக எந்த மனிதனும் குற்றஞ் சாட்டப்படமாட்டான் என்று விதியிருந்தது. ஆனல், கூடிய பாராளுமன்றம் தீவிர ஆங்கிலத்திருச்சபையங்கத்தவரைப் பெரும்பான்மையாகக் கொண்டிருந்தது. அதனற் பியூரித்தானியரைத் துன்புறுத்திற்று.

5. **பொது மன்னிப்பு** : முதலாம் சாள்சின் சிரச்சேதத்துக்கு உடன் பட்டுக் கையொப்பமிட்டவர்களைத் தவிர்ந்த மற்றவர்களெல்லார்க்கும் அளிக் கப்பட்டது. இவர்களில் 13 பேர் தலை கொய்யப்பட்டனர். 25 பேர் சீவிய கால மறியல் பெற்றனர். (25 வருடத்துக்குப் பின்னர் இரண்டாம் சேமிசு, அரசனைக் கொலை செய்வித்தவர்களில் ஒருவனுடைய கைம்பெண் ணன அலிசு என்பவளுக்கு எதிராகத் தீர்ப்பளிக்குமாறு செப்பிரிசு என்ற நீதிபதிக்கு உத்தரவிட்டதிலிருந்து அவனுடைய வஞ்சந் தீர்க்கும் சுபாவம் வெளியாயிற்று. இரண்டாம் சாள்சு கருணையுள்ள வனயிருந்தான். அவன் சிரச்சேதஞ் செய்வதை விரும்பியிருக்கமாட்டான்).

குறிப்பு 77—திருச்சபையும் இணங்காமையின் தொடக்கமும்.

பொதுநலவாயத்தின் ஆட்சியிற் பியூரித்தானியர் சகிப்புத்தன்மையை விரும்பவில்லை. இரண்டாவது சாள்சு ஆட்சியில் ஆங்கிலத் திருச்சபை யினரும் அதை விரும்பவில்லை. எனவே (அ) துன்புறுத்தலும் (ஆ) இணங் காதார் மதமும் (இ) உரோமன் கத்தோலிக்கருக்குச் சகிப்புத்தன்மை வழங்கச் சாள்சு முயற்சியெடுத்தமையும், அது தோல்வியுற்றமையும் காணப்படுகின்றன.

1. அங்கிலிக்கரால் துன்புறுத்தப்படல்.

பாராளுமன்றம் இளாரண்டன் கோவையை நிறைவேற்றியது. (இக் கோவை மண்டில நாயகன் இளாரண்டன் பிரபுவின் பெயரால் வழங்கப் பட்டது). இது இணங்காதாரைத் துன்புறுத்தும் நோக்கத்துடன் செய்யப்பட்டது. இக்கோவையிற் பின்வரும் விடயங்கள் அடங்கின.

(அ) **தொகுப்பகவிதி** (1661) நகராண்மைக் கழகங்களின் அங்கத்த வரெல்லாரும், ஆங்கிலத் திருச்சபை மரபுப்படி சற்பிரசாதம் பெற வேண்டும். பாராளுமன்ற அங்கத்தவரைத் தெரியும் விடயத்திற் பல பகுராக்களிலே நகராண்மைக் கழகங்கள் ஆதிக்கஞ் செலுத்தின. இதனல் இணங்காதார் பலர் வாக்குரிமை பெற முடியாதிருந்தனர்.

(ஆ) **ஒருசீர்மை விதி** (1662). பாதிரிமார் எல்லாரும் விசுப்பாண்டவர்பாற் குருஅபிடேகம் பெறவேண்டும். அவர்கள் பொதுப்பிரார்த்தனை நூலைப் பயன்படுத்த வேண்டும். பாடசாலை ஆசிரியருக்குத் தொழில் புரிய விசப்பு மார் அனுமதி வழங்கவேண்டும். இதனால் 2000 குருமார் தமது பதவி களை விட்டு " இணங்காதாராயினர் ".

(இ) **சமயக் கூட்டவிதி** (1664) ஆங்கிலத் திருச்சபை ஆராதனை யொழிந்த ஏனைய ஆராதனைகளில் எவரும் கலந்து கொள்ளக் கூடாது.

(ஈ) **ஐந்துமைல்விதி** (1665). இணங்காதார் கூட்டத்தைச் சேர்ந்த குரு வானவரோ, ஆசிரியரோ ஒரு நகரின் 5 மைல் சுற்றெல்லைக்குள் வரக் கூடாது.

பட்டினங்களிலுள்ள இணங்காதாரை விழுத்துவதற்காகவே இவ்விதி இயற்றப்பட்டது. இணங்காதார் பெரும்பாலும் நகரங்களிலேயே காணப் பட்டனர். இவ்விதியால் அவர்கள் தமது பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்க முடியாதிருப்பதுடன் அவர்களுடைய குருவானவருடனும் தொடர்பு வைத்துக் கொள்ள முடியாத நிலையிலிருப்பார்கள்.

குறிப்பு : இக்" கோவையால் " எல்லாரும் ஆங்கிலத் திருச்சபையங் கத்தவராகிவிடவில்லை. சிலரை அது " இணங்காதார் " ஆக்கியது. அவர் கள் ஒதுக்கப்பட்டனர். அது தொட்டு அவர்கள் தமது குழந்தைகளுக்குக் கல்வியறிவூட்ட முடியாதிருந்தனர்.

குறிப்பு 78—இரண்டாம் சார்ளும் பிரான்சும்

பிறநாட்டுக் கொள்கை, சார்ளு பிரான்சுடன் கொண்ட தொடர்பைப் பொறுத்ததாயிருந்தது.

1. அரசனுடைய அமைச்சனை இளாரண்டனின் முதல் வேலை தங் கேக்கைப் பிரான்சுக்கு விற்றமை (1662). 14 ஆம் உலூயி முக்கிய மாக இடச்சுக்காரரை அடிப்படுத்த விரும்பினன். அதனால் ஆங்கிலக் கடற்படையின் உதவி அவனுக்குத் தேவைப்பட்டது. மேலும் இங்கிலாந்து கத்தோலிக்க நாடாக வேண்டுமெனவும் அவன் விரும்பினன். எனவே சார்ளும் அவனுமாகச் சேர்ந்து ஆங்கிலப் பாராளுமன்றத்தைத் தந்திரமாக வெல்ல நினைத்தனர். பிரெஞ்சுத் திட்டங்களுக்கு இங்கிலாந்தை உடன் படுத்த முயன்றனர். இடச்சு ஆதிக்கத்தை அடக்கினால் இங்கிலாந்தின் நலவுரிமைகள் பாதுகாக்கப்படுமென எண்ணியே சார்ளு இக்கொள்கையை அனுசரித்தான் எனச் சார்ளின் சார்பாக நியாயங்கூறப்பட்டது.

2. **சார்ளு பிரான்சுடன் நட்புறவு செய்தான்.** அவனுடைய சகோதரி யான என்றியெற்று 14 ஆம் உலூயியின் சகோதரனை மணந்தாள். போத்துக்கல் பிரான்சின் நட்புறவாளியாயிருந்தபடியால், சார்ளு பிரகன் சாக் கதரீனுவை மணந்தான் (1665).

3. இதனைத் தொடர்ந்து சார்ளு இடச்சுக்காரரோடு போர் தொடுத்தான் (1665—7). இக்கொள்கையை மக்கள் ஆதரிக்கவில்லை. 1667 இற் பிரெடாச் சமாதானஞ் செய்யப்பட்டது. இங்கிலாந்து பிரான்சுக் கெதிராக ஒல்லாந் துடனும் சவீடினுடனும் சேர்ந்தது.

4. இங்கிலாந்து பிரான்சுக் கெதிராக ஒல்லாந்துடனும் சுவீடினுடனுஞ் சேர்ந்த மூவர் நட்புறவு (1668).

இங்கிலாந்தைப் பிரித்துவிட உலூயி நிச்சயித்தான். எனவே 1670 இல் அவன் சார்ளுடன் இரகசியமான தோவர்ப்பொருத்தனையைச் செய்தான். இதன்படி ஒல்லாந்து பிரிவினைசெய்யபட வேண்டும். உலூயி சார்ளுக்குப் பணஉதவி செய்ய வேண்டும். சார்ளு உரோமன் கத்தோலிக்க சமயத்தனுகப் பிரகடனஞ் செய்ய வேண்டும். தருந்த தருணத்திலே பிரெஞ்சுப்படைத் துணையைப் பெற்று இங்கிலாந்தை உரோமன் கத்தோலிக்க நாடாக்க வேண்டும்.

இந்தப் பொருத்தனைப்படி சார்ளு **இடச்சுக்காரரோடு மறுபடியும் போர் தொடுத்தான்.** ஆனால் அந்நாட்டை அடிப்படுத்த இரு நாடுந்தவறின.

5. பாராளுமன்றத்தின் தூண்டுதலின் படி சார்ளு பிரான்சுடனிருந்த நட்புறவை வெளித் தோற்றமளவிலே துறந்தான்.

ஒல்லாந்துடன் **விவாக ஒப்பந்தஞ்** செய்தான் (1677). அவனுடைய மருமியும் பட்டத்துக்குரிமையுடையவனுமான மேரி ஒரேஞ்சு உவில்லியத்தை மணந்தாள்.

6. பாராளுமன்றம் சார்ளைப் பற்றியும் உலூயியைப் பற்றியும் மிகவும் ஐயங்கொண்டது. **போப்புச்சதி** (1668). பிரான்சினுதவியுடன் சார்ளைக் கவிழ்த்துவிட்டுக் கத்தோலிக்க சேமிசை அரியாசனத்திலிருத்தவே தொடக் கப் பட்டதெனக் கருதப்பட்டது. சதியைப் பாராளுமன்றம் அறிந்து அதிற் சம்பந்தப்பட்டவர்கள்மீது எடுத்துக்கொண்ட கொடுமையான நடவடிக்கை களைக் கண்டு அஞ்சிய சார்ளு **பிரான்சிடம் பணஉதவி பெற்றுக் கொண்டு 1685 இல்** இறக்கும் வரை பாராளுமன்றமின்றியே ஆட்சி நடத்தினன்.

குறிப்பு 79—இரண்டாம் சார்ளின் இடச்சு யுத்தங்கள்.

வியாபார நன்மைகள் பெறுவதற்காகவே குரம்வெல் முதலாவது இடச்சு யுத்தத்திலீடுபட்டான் (1652—53). இரண்டாம் சார்ளு இரண்டாம் மூன்றும் இடச்சு யுத்தங்களை முக்கியமாகப் பிரான்சின் உதவியுடனேயே நடத்தினன். பிரான்சிடம் போதிய கடற்படையில்லாதபடியால் அதற்கு இச்சண்டையால் நன்மையுண்டானது.

1. இரண்டாவது இடச்சுப்போர் (1665—67). இங்கிலாந்தும் பிரான்சும் இடச்சுக்காரருக் கெதிராகச் சண்டை செய்தன இடச்சுத் தளபதி இரைட்டர். ஆங்கிலத் தளபதிகள் உருப்பேட்டு இளவரசனும், அல்பமாள் என்ற பெயருடன் விளங்கிய மொங்கும்.

(அ) ஆங்கிலர் உலோத்தவுத்துச் சண்டையில் வெற்றிபெற்றனர் (1665). **தவுன்சுச் சண்டை** மூன்று நாள் நடைபெற்றது. இரு பகுதிக்கும் வெற்றி கிடைக்கவில்லை (1666).

(ஆ) சாள்சு கடற்படையைக் கவனிக்கவில்லை. சிக்கனத்தை உத்தேசித்துக் கப்பல்களை ஒதுக்கிவிட்டான். எனவே 1667 இல் இடச்சுக்காரர் **மெது வேயில்** எதிரேறி நங்கூரமிட்டிருந்த கப்பல்களை எரித்தனர். பின்னர் **பிரெடாச் சமாதானம்** ஏற்பட்டது. இழக்கிந்திய தீவுகளிலுள்ள வியாபாரத் தலங்களை இங்கிலாந்து கைவிட்டது. "நியூ இங்கிலாந்தின்" பகுதிகளான நியூயோக்கு, தெலாவேயர், நியூசேசி என்பவற்றைப் பெற்றது. அக் காலத்தில் இவை பயனற்றவையாகக் கருதப்பட்டன.

2. பாராளுமன்றமும் தேச மக்களும் சாள்சுக்கெதிராகி அவனுடைய பூட்கையை எதிர்த்தனர். புரட்டசுத்தாந்திய ஒல்லாந்தை நசுக்க முற்பட்ட கத்தோலிக்க பிரான்சுக்கு உதவிபுரிய மறுத்தனர். இங்கிலாந்து ஒல்லாந்து, சுவீடன் ஆகிய மூவர் நட்புறவை உறுதிப்படுத்த முற்பட்டனர் (1668).

3. வசதி கிடைத்ததும் சாள்சு இந்த நட்புறவை நிராகரித்துவிட்டு மூன்றாவது இடச்சு யுத்தத்தைத் தொடக்கினான் (1672—74). (இரகசிய தோவர்ப் பொருத்தனையின் விளைவு).

ஆங்கிலேயர் சோல்பேயிற்கு அப்பால் நிச்சயமற்ற அமர்வினைத்தனர். (இது இரண்டாவது சவுதுவோல் யுத்தம்). தெட்செலைத் தாக்கியதும் அவர்கள் தோற்கடிக்கப்பட்டுத் துரத்தப்பட்டனர். பணந் தேவைப்பட்டதால் சாள்சு பாராளுமன்றத்தைக் கூட்டவேண்டிய நிர்ப்பந்த முண்டானது. பாராளுமன்றம் **அமைதியை** விரும்பியது (1674). பின்னர் **ஒல்லாந்துடன் விவாக உடன்படிக்கை** செய்யப்பட்டது (1677).

குறிப்பு 80—சாபிற்சுபெரியின் முக்கியத்துவம் (அந்தனி ஆசிலி கூப்பர்) (1621—1683).

1. நெடிய பாராளுமன்றத்திலே மூடிக் கெதிராக இருந்தான் (1641). பெயபோன்சுப் பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்தான் (1653) மீட்சியை ஆதரித்தான். இரண்டாவது சாள்சால் அமைச்சனுக்கப்பட்டான். (1660).

2. பிரசித்தி பெற்ற "கெபல்" அமைச்சில் ஒருவனுமிருந்தான். (இவ் வமைச்சில் கிளிபோட்டு, ஆளிந்தன், பக்கிங்கம், ஆசிலி கூப்பர், உலோட டேல் என்போர் இருந்தனர்). அவர்களுடைய பெயர்களின் முதலெழுத் துக்களால் இவ்வமைச்சு கெபல் என வழங்கப்பட்டது (1669).

ஆசிலி சனிப்புக் காட்டுவதில் நம்பிக்கையுடையவன்.

3. இரண்டாம் சாள்சு நயவஞ்சகமுடையவனென்பதை விரைவில் உணர்ந்து கொண்டு **தோவர்ப் பொருத்தனையின்** பின்னர் (1670) எதிர்க் கட்சித் தலைவனானான். இவனே கட்சியாட்சியின் முதற்றலைவன்.

இவன் தனது கட்சியை "நாட்டுக்கட்சி" யென அழைத்தான். மற்றது "அரசவைக்" கட்சி. பட்டப் பெயர்கள் "உலிக்குகள்" கட்சி, "தோரிகள்" கட்சி.

4. சாள்சு மன்னிப்புப் பிரகடனஞ் செய்ய எத்தனித்த பொழுது (1672) சாபிற்சுபெரி எதிர்த்துச் சோதனை விதியைக் கொண்டு வந்தான் (1673). சாள்சு உடனே அவனைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டான் (1673).

5. **போப்புச்சதி** சம்பந்தமாகச் சாபிற்சுபெரி மக்களை உணர்ச்சி கொள்ளச் செய்தான் (1678). சாள்சும் 14 உலாயியும் இங்கிலாந்தை உரோமன் கத்தோலிக்க நாடாக்கச் சூழ்ச்சி செய்கிறார்களென அவன் எண்ணினான். (தோவர்ப் பொருத்தனையிலுள்ள இரகசிய அமிசங்கள் சமீபகாலத்திலேயே வெளியாயின. சாபிற்சுபெரி அவற்றைப்பற்றி முன்னரே ஐயங்கொண் டிருந்தான். இரு அரசர்களின் நோக்கங்களைப்பற்றி அவன் கொண்ட கருத்துச் சரியென்பதை அவை வற்புறுத்துகின்றன.)

6. பிரான்சுடன் தன்பி நடத்திய இணக்கப்பேச்சுக்கள் வெளியாயின (1679). சாபிற்சுபெரி ஆளுரிமை விதியை நிறைவேற்றச் செய்தான் (1679). அது மிக முக்கியம் வாய்ந்தது. எனெனில் இவ்விதிப்படி விசாரணை யின்றி ஒருவரைச் சிறைவைக்கக் கூடாதெனக் காணப்பட்டது.

7. இரண்டாம் சேமிசு கத்தோலிக்கனென்ற காரணத்தால் அரசுரிமை பெறுமற்றடுப்பதற்கு **விலக்கு முறியைக்** கொண்டுவரச் சாபிற்சுபெரி இப் பொழுது முயன்றான்.

(அ) முதலாவது முறி (1679) ஒரேஞ்சு உவில்லியத்தை மணந்தவளும், புரட்டசுத்தாந்திய மதத்தைச் சேர்ந்தவளும் சேமிசின் மகளுமான மேரியே அரசுக்குரிமையுடைய வளென்று விதித்தது. இம்முறியைத் தடுப்பதற்காகச் சாள்சு பாராளுமன்றத்தைக் கலைத்தான்.

(ஆ) அரசுரிமையாருக்குரியதென்பதைக் குறிப்பிடாமலே இரண்டாவது முறி கொண்டு வரப்பட்டது. சார்ள்சின் சோர புத்திரனுயுள்ளவன் மொன்மது என்பான். சாபிற்சுபெரி இவனுக்கே அரசுரிமை வழங்கப்பட வேண்டுமென எண்ணினுன். சார்ள்சு மொன்மத்தின் தாயைச் சட்டபூர்வ மாக மணந்தானென்பதை உறுதிப்படுத்த ஒரு வகைச் சான்றைக்கொண்டு வாலாமென்று சாபிற்சுபெரி கருதினுன். சார்ள்சு உடனே பாராளுமன்றத் தைக் கூலைத்தான்.

(இ) மூன்றுவது முறி ஒட்சுபோட்டிற் கூடிய பாராளுமன்றத்திலே கொண்டு வரப்பட்டது (1681). இம்முறியில் அரசுரிமை மொன்மதுக்குச் செல்ல வேண்டுமென விதிக்கப்பட்டது. சார்ள்சு பாராளுமன்றத்தைக் கூலைத்து விட்டுப் பின்னர் ஒரு போதும் அதைக் கூட்டாமல் 14 ஆம் உலூயியிடம் பணம் பெற்றுத் தன்னிலைமையைச் சீர்படுத்திக்கொண்டு ஆட்சி நடத்தினுன்.

குறிப்பு : ஆளுரிமை விதி மக்கள் சுதந்திரத்தைக் காப்பாற்றுவதற்குப் பெரிய பாதுகாப்பாகக் கருதப்படுகிறது. இவ்விதிப்படி கைது செய்யப்பட்ட எவரும் நீதிமன்றின் அடுத்த தவணையிலே விசாரணை செய்யப்படுமாறு கேட்கலாம். அவ்வாறு விசாரணை செய்யப்படாவிட்டால் நீதிபதி, கைதியை உடனே விடுதலை செய்யுமாறு காவலதிகாரிக்குக் கட்டளையிட வேண்டும். எவ்வித காரணமுமின்றி எவரையும் சிறைவைக்க முடியாது. குற்றஞ் செய்யாத அளவில், அரசியல் நியாயங்களுக்காக எவரையுங் காவலில் வைக்கமுடியாது. நெருக்கடி காலங்களில் இந்த விதி நிறுத்திவைக்கப் பட்டதுண்டு. உதாரணமாக புரட்சிப் போர்க் காலத்திற் பிற்று தற்காலிக மாக இச்சட்டத்தை நிறுத்தினுன். 1914—18 ஆம் உலகப் போர்க்காலத் திலே, குற்றஞ் செய்ததாக நிரூபிக்கமுடியாதவர் களாலுலும் ஆபத்தான பேர்வழிகளெனக் கருதப்பட்டால் அவர்களைக் காவலில் வைக்க வேண்டு மென்ற காரணத்தால் இது நிறுத்தி வைக்கப்பட்டது. மக்கள் இதனை ஆட்சேபித்தபடியால் ஒரு வருடத்திலே இச்சட்டம் மறுபடியும் நடைமுறை யிற் கொண்டு வரப்பட்டது.

குறிப்பு 81—இரண்டாம் சார்ள்சு சொந்த ஆட்சி நடத்த முயலல்.

1. பாராளுமன்றத்தின் உதவியின்றித் தான் தனித்து நின்று ஆட்சி நடத்துவதற்காகச் சார்ள்சு முதலிற் பிரெஞ்சு அரசாங்கத்தின் உதவியைப் பெறமுயன்றுன். **தோவர் இரகசியப் பொருத்தனை** (1670).

2. **மன்னிப்புப் பிரகடனத்தின்** மூலம் (1672) உரோமன் கத்தோ லிக்கருக்குப் பொறுதியளிக்க முயன்றுன். எனவே கத்தோலிக்கர், இணங்காதார் ஆகியோருக் கெதிராயுள்ள சட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்திவைத்தான். பாராளுமன்றம் உடன்படாது **சோதனை விதியை** நிறை வேற்றியது (1673). இதன்படி. உத்தியோகம் வகிப்போரெல்லாம் இங் கிலாந்துத் திருச்சபையின் சற்பிரசாதிகளாயினர்.

3. தன்பி மூலம் பிரான்சிடமிருந்து மேலும் பணம்பெறச் சார்ள்சு முயன்றுன். இது கண்டு பிடிக்கப்பட்டது. தன்பி மீது பாராளுமன்றம் பழிமாட்டறைந்தது. இரண்டாம் சேமிசு அரசுரிமையைப் பெறுமற்றடுப் பதற்காக **விலக்கு முறி** கொண்டு வரப்பட்டது. இம்முறியை நிறை வேறுது தடுப்பதற்காகச் சார்ள்சு ஒட்சுபோட்டிற் (1681) பாராளுமன்றத்தைக் கூலைத்தான்.

4. பிரெஞ்சு மன்னனின் பணத்தைப் பெற்றுக்கொண்டு பாராளு மன்றமின்றியே அரசன் ஆட்சி நடத்தினுன்.

(அ) எதிர்க்கட்சித்தலைவனுயிருந்த சாபிற்சுபெரி நாட்டை விட்டோடினுன்.

(ஆ) சோதனை விதியைச் சார்ள்சு நிறுத்திவிட்டு. சேமிசை மறுபடியும் உத்தியோகத்திலமர்த்தினுன் (1681).

(இ) பாராளுமன்றத்துக்கு அங்கத்தவரைத் தெரிந்தனுப்பிய நகரான் மைக் கழங்களுக்களித்த பட்டயங்களை மாற்றி (1683) பாராளுமன்றத்தைத் தன்கையில் அகப்படுத்த அவன் முயன்றுன்.

குறிப்பு 82—சமயப்பொறுதி வழங்க இரண்டாம் சார்ள்சும், இரண்டாம் சேமிசும் முயலல்.

உரோமன் கத்தோலிக்கருக்குச் சலுகை பெறவே முயற்சி செய்யப்பட்டது. இணங்காதாரும் இவ்வரிசையிற் சேர்க்கப்பட்டமைக்குக் காரணம் அவர் களுடைய ஆதரவையும் பெறுவதற்கே. அரசனின் பிரகடனத்தை அவர் கள் ஏற்கவில்லை. எனெனில் உரோமன் கத்தோலிக்கரை அவர்கள் பெரிதும் அஞ்சினர்.

முதலாவது பிரகடனத்தை, பாராளுமன்றம் அமராத சமயம் **இரண்டாவது சார்ள்சு** வெளியிட்டான்: கத்தோலிக்கருக்கும், இணங்காதாருக்கும் மாறுன தண்டச் சட்டங்களையெல்லாம் இது நிராகரித்தது (1672). பாரா ளுமன்றங் கூட்டப்பட்டபொழுது, அவற்றிலடங்கிய முழுக்கருத்துக்களையும் நிராகரித்துவிட்டுச் சோதனை விதியின் மூலம் அவற்றை எதிர்த்தது.

இரண்டாவது பிரகடனம் (1687). **இரண்டாவது சேமிசு** மறுபடியும் மேலேகூறிய இருமதத்தவர்க்கும் சலுகை வழங்கினுன். இணங்காதார் அதை ஏற்றுக்கொள்ள மறுபடியும் மறுத்தனர்.

மூன்றுவது பிரகடனம் (1688) சேமிசால் வெளியிடப்பட்டது. திருச்சபை களில்அதனை விசப்புமாரும், குருமாரும் வாசிக்க வேண்டுமெனக் கட்டளை பிறந்தது. ஏழு விசப்புமார் மறுத்தனர். அரசதுரோகக் குற்றத்துக்கு அவர்கள் விசாரணை செய்யப்பட்டு நடுவரால் நிரபராதிகளெனச் தீர்ப்பளிக் கப்பட்டபொழுது நாட்டிலே மகிழ்ச்சி ஆரவாரமுண்டாயிற்று. சேமிசின் வீழ்ச்சிக்கு இஃது அறிகுறியாகும்.

மூன்றாவது உவில்லியம் இறுதியாக (1689) பொறுதி அளித்தல். பத்திமைச் சத்தியம் செய்யுமிணங்காதாரெல்லாருக்கும் வழிபாட்டுச் சுதந்திமளிக்கப்பட்டது.

(1828 வரை பூரண சுதந்திரமளிக்கப்படவில்லே. அப்பொழுதுதான் **சோதனேவிதியும் தொகுப்பகவிதியும் இறுதியாக** ஒழிக்கப்பட்டன. அதாவது **கத்தோலிக்கருக்கு விடுதலே** கிடைத்தது.)

குறிப்பு 83. பிரித்தாவியப் பேரரசின் ஆரம்பம்.

1. (அ) வெசீனியாவிற் குடியேறுவதற்கு இலிசபெதுக் காலத்தில் நடந்த ஆரம்பமுயற்சிகள் தோல்வியடைந்தன.

(ஆ) முதலாவது அபிவிருத்தி கீழைத்தேசத்தில் நடந்தது.

(1) **இலிசபெதின் கீழ் கிழக்கிந்தியக் கம்பனியை** நிறுவல் (1600). ஆனல் கிழக்கு நாடுகளில் இடச்சுக்காரரின் போட்டியால் வியாபாரம் தடைப்பட்டது. 1623 இல் இடச்சுக்காரர் **அம்போயினவிற்** சில ஆங்கிலேயரைச் சிரச்சேதஞ் செய்தனர். அத்துடன் ஆங்கிலேயர் தீவுகளோடு செய்த வியாபாரத்தைக் கைவிட்டனர்.

(2) இந்தியப் பெருநிலத்திலே ஆங்கிலேயரோடு **போத்துக்கேயர்** போட்டியிட்டனர் (1612). முதலாவது களஞ்சியசாலே **சூரத்தில்**; பின்னர் **சென்னே** (1639) பம்பாய் (1661) கல்கத்தா (1680) ஆகிய நகரங்களில்.

(3) **யமேக்காவைக்** குரம்வெல் கைப்பற்றல் (1655).

(4) **பகாமாக்** குடியேற்றம் (1666) **சென்எலினு** கைப்பற்றப்படல் (1651).

2. அமெரிக்காவின் அபிவிருத்தி

(அ) **வேசீனியாவிற்** குடியேற்றம் (1607–10) தலவார் பிரபுவின் வெற்றி.

(ஆ) வடக்கே **யாத்திரைப்பெரியார்கள்** இங்கிலாந்தை விட்டுப்புறப்படல் (1620). இது சேமிசு ஆட்சியில் நடந்தது. இவர்கள் நியூ இங்கிலாந்துக்குப் பிரயாணமாயினர். முதலாம் சாள்சின் காலத்திலும் பலர் மேலும் சென்றனர். பிரதானகுடியேற்றம் மசச்சுசெற்று. ஆங்கிலத்திருச்சபையினர் பியூரித்தானியரைத் துன்புறுத்தியதால் உண்டானது.

(இ) உரோமன் கத்தோலிக்கருக்குப் புகலிடமாக **மேரிலந்து** (1634) கத்தோலிக்கரான போற்றிமோர் பிரபுவினுல் தாபிக்கப்பட்டது.

(ஈ) இரண்டாவது சாள்சின் ஆட்சியில், தென்திசையாக முதன் முதற் குடியேற்றம் நடைபெற்றது.

(1) சாள்சின் பெயரைக்கொண்ட கரோலினு தாபிக்கப்பட்டது (1663)

(2) பின்னர் வடக்கில் இடச்சுக்காரரிடமிருந்து பிரெடாப் பொருத்தலேப் படி பெற்ற நியூயோக்கு, நியூசேசி, தெலாவேயர் என்பன குடியேற்றப் பட்டன.

(3) இரண்டாவது சாள்சின் கீழ் நடந்த மதத்துன்புறுத்தல் காரணமாக நாட்டை விட்டோடிய குவேக்கர் மதத்தவனுன உவில்லியம்பென் என்பவன் (1680) **பென்சில்வேனியாவைத்** தாபித்தான்.

இவ்வாறு கடற்கரையையடுத்து நெடுகிலும் குடியேற்றங்களுண்டாயின. இதிற் பல சமயங்களேச் சேர்ந்தவர்கள் குடியேறினர். ஆனல் எல்லாரும் ஆங்கில நாட்டினத்தைச் சேர்ந்தவராகவேயிருந்தனர்.

குறிப்பு 84—1688 ஆம் ஆண்டுப்புரட்சி.

(1) புரட்டசுத்தாந்திய சமயத்தையும் புரட்டசுத்தாந்திய அரசையும் நீலேநாட்டவும்,

(2) தன்வயமாகச் சதுவட்டுக்குலத்தவர் ஆட்சி நடத்துவதை ஒழிக்கவுமே புரட்சி உண்டானது. (இரண்டாவது சாள்சு இரகசியமாக முயன்றதைச் சேமிசு வெளியரங்கமாக முயன்றன்.)

1. இரண்டாவது சேமிசின் சமயக் கொள்கை.

(அ) புரட்டசுத்தாந்தியருக்கு அரசுரிமையைக் கொடுக்கும் நோக்கமாக மொன்மது விலேத்த கலகத்தை மிகுந்த கொடுமையுடன் அடக்கினன்.

(ஆ) தனது **விலக்கு** அதிகாரத்தைப் பயன்படுத்திச் சோதனே விதியை நிராகரித்து விட்டு உரோமன் கத்தோலிக்கரை **நீதிபதிகளாகவும், இராணுவ உத்தியோகத்தராகவும்** நியமித்தான்.

(இ) உரோமன் கத்தோலிக்கனை தயக்கொனலே அயலந்திலே பதில்லேயனுக நியமித்தான்.

(ஈ) ஒட்சுபோட்டினுள்ள கிறித்துச் சேர்ச்சுக்கல்லூரித்தலேவராக உரோமன் கத்தோலிக்கரை நியமித்தான். அதே சர்வகலாசாலேயினுள்ள மோட்டினின் கல்லூரியில் உரோமன் கத்தோலிக்க இணேவாளர்களே நியமித்தான்.

(உ) சமய சம்பந்தமான வழக்குக்களே விசாரணே செய்வதற்காக உயராணே மன்றத்தைப் புனருத்தாரணஞ் செய்தான்.

(ஊ) மன்னிப்புப் பிரகடனமொன்றை வெளியிட்டான். எல்லா விசப்பு மாரும் குருமாரும் அதை வாசித்துக் காட்ட வேண்டுமென ஆலோசனே கூறினன்.

(எ) மிதவாதிகளான தனது அமைச்சர்களேப் பதவியிலிருந்து நீக்கி விட்டு உரோமன் கத்தோலிக்கரை நியமித்தான்.

2. சேமிசும் சைனியமும்

உரோமன் கத்தோலிக்க உத்தியோகத்தரை இராணுவத்தில் நியமித்தான். சைனியத்தின் பலத்தை 30,000 ஆக உயர்த்தினான். இலண்டனை அச் சுறுத்துவதற்காக அன்கூலோ ஈத்து என்ற இடத்துக்குப் பட்டாளத்தைக் கொண்டுவந்து நிறுத்தினான்.

3. சேமிசும் பாராளுமன்றமும்

விலக்கு அதிகாரத்தினூற் சட்டங்களை **நிராகரித்துவிட்டுப்** பாராளுமன்ற ஆட்சிக்கு முற்றுப்புள்ளியிட முயற்சிசெய்தான். உரோமன் கத்தோலிக் கரையும் இணங்காதாரையும் நியமிக்கும் நோக்கமாக அத்தகையவருடைய பெயர்களைத் தனக்குத் தருமாறு பதிலாளர் பிரபுக்களுக்குக் கட்டளையிட்டான். இவ்வாறு பாராளுமன்றத்திலே தனக்கு விருப்பமானவர்களைக்கொண்டு வந்து நிறுத்த முயற்சிசெய்தான்.

அவனுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்ததும் (யூன் 1688), அது உரோமன் கத்தோலிக்கனாகவிருக்குமென அஞ்சப்பட்டதாற் புரட்சிக்கு வழியேற்பட்டது. அதுவரை புரட்டசுத்தாந்திய மதத்தினனான மேரி இளவரசியே பட்டத்துக்கு வருவாளென எதிர்பார்க்கப்பட்டது.

ஆறும் பருவத்துக்குரிய கால அட்டவணை

(1603—1688)

மன்னன்	இங்கிலாந்து, கொத்லாந்து, அயலந்து	காலம்	மற்ற வல்லரசுகள்	காலம்
1 ஆம் சேமிசு (1603–1625)	முதலாம் சேமிசு அரசுகட்டிலேறல்; சூயிரவர் மதுப் சமாதான கோட்டு மகாநாடு	1603 1604		
	வெடிமருந்துச்சதி	1605		
	வேசினியாக் குடியேற்றம்	1607		
	அயிசிறாற் சேமிசின் பாராளுமன்றங் கலைக்கப்படல்.	1608		
	முதலாம் சேமிசின் பாராளுமன்றங் கலைக்கப்படல்.	1611	பிராங்கின் அரசன் நாலாம் என்றி கொலை; 13 ஆம் உலூயி அரசுகட்டிலேறல்	1610
	..அதிகாரமளிக்கப்பட்ட விலியம் நூல்	1616	பலற்றினேற்றுத் தோவுரிமையாளர் பிரடரிக்கும் முத	
	செகப்பிரியர் மரணம்	1618	லாம் செமிசின் மகள் இலிசபெத்தும் மணத்தல்	1613
	பேதிய இந்து கூடுகை; இராலியின் ரிசுசேதம்	1620		
	மேலிளவர் புறப்படல்	1621		
	சேமிசின் மூன்றாவது பாராளுமன்றம் கூடல்;	1621		
	பேக்கன் வீழ்ச்சி	1623		
	சான்சு பக்கிங்கமும் மத்திரிட்டு செல்லல்	1625		
	சான்சும் எனறிவெற்றமரியாவும் மணத்தல்	1627		
	பிராங்கடன் யுத்தம்; இலா உரொசெலுக்குப் படை பெடுத்தல்	1628	பிராங்கின் முதல் அமைச்சர் இரிசிலூ (1624—42) இலொசத்துக்கும் பிராண்சுக்குமிடையில் யுத்தம்	1624 1627
	உரிமை மனு; பக்கிங்கம் கொலை	1629		
	சான்சின் மூன்றாவது பாராளுமன்றம் கலைத்தல்; 11 வருடம் பாராளுமன்றமின்றி ஆட்சி	1633		
	வெத்துவேது அயலந்து செல்லல்; உலொட் கந்த பரி அதிகேற்றிராணியாதல்			
முதலாம் சான்சு (1625—1649)	அயிடன் வழக்கு: கொத்லாந்தில் புதிய பிராத்தனை நூல்; நாட்டிலை எதிர்ப்பு	1637	கலீடன் மனனன் கத்தாபக திடோலிபச உலூசன் சண்டையில் இறத்தல்	1632
	முதல் விசர்ப்புமார் யுத்தம்: செளனியில் ஆங்கிலேப் படைதோல்வி ஆரம்பித்தல்	1638 1639		

ஆறாம் பருவத்துக்குரிய கால அட்டவணை

(1603—1688)

மன்னன்	இங்கிலாந்து, கொத்துலாந்து, அயலாந்து	காலம்	மற்ற வல்லரசுகள்	காலம்
	குறுகிய பாராளுமன்றம், இரண்டாம் விசப்புமாமார் யுத்தம் ; நெடிய பாராளுமன்றம்	1640		
	நிரபோட்டு சிரச்சேதம் ; அயலந்துக் கலகம் ; பெரு மன்றுட்டு	1641		
	உண்ணுட்டு யுத்தம் தொடங்குதல். எட்சில் போர்	1642		
	இடசங்கமும் எற்பாடும்	1643		
	யாகற்றன மூர்ச் சண்டை	1644		
	நேசபிச்சண்டை, பிலிப்பாச்சண்டை, உலோட்டின் சிரச்சேதம்	1645		
	அரசன் கொத்துலாந்தரிடம் சரணடைதல்	1646	4 ஆம் உலூயி அரசனுதல் ; முதல்மந்திரி மசரீன். (1643–61)	1643
	இரண்டாவது உண்ணுட்டு யுத்தம் —	1648		
.....	சாள்சின சிரச்சேதம் ; அயலந்திற் குரம்வெல்	1649	வெசுபாலியாப் பொருத்தனை	1648
பொதுநல	தன்பார் சண்டை	1650		
வாயம், புரப்பகம்	உசற்றர் யுத்தம் ; கப்பலோட்டல் விதி	1651		
(1649–1659	முதலாவது இடச்சு யுத்தம்	1652		
.....	எச்சப்பாராளுமன்றம் நீக்கப்படல் ; பெயபோன் பாராளுமன்றம் ; குரம்வெல் புரப்பாளர்	1653		
	முதலாவது புரப்பகப்பாராளுமன்றம் ; இடச்சுக்கார			
	..ருடன் சமாதானம்	1654	இங்கிலாந்திற்கும் பிரான்சுக்குமிடையே நட்புறவு ; சிபெயினுடன் சண்டை	1654
	யமேக்கா கைப்பற்றப்படல்	1655		
	இரண்டாவது புரப்பகப் பாராளுமன்றம் ;			
	பனி மனுவும் ஆலோசனையும்	1656		
	சாந்தாருரில் பிளேக்கு	1657		
	தங்கேக்கு கைப்பற்றப்படல், குரம்வெல் மரணம்	1658		
	இரிச்சட்டு குரம்வெல் புரப்பாளர்	1659	பிரான்சும் சிபெயினுஞ் சமாதானம்	1659
	பிரெடாபிரகடனம் ; முடியரசு புனருத்தாரணம்	1660		
	தொருப்பக விதி ; அயலந்து அரசுரிமை நிருணய விதி	1661		
	ஒரு சீர்மை விதி ; பம்பாயைப் பெறுதல் ; தங்கேக்கு விலைப்படல்	1662		
	சமயக்கூட்டச் சட்டம் ; புதிய அமித்தடாம் கைப்பற்றல்	1664		
	இரண்டாவது இடச்சுப்போர் ; கொள்ளைநோய் ; ஐந்து மைல்விதி	1665		
	இலண்டன் பெருந்தீ	1666		
	மெதுவேயில் இடச்சுக்காரர் ; பிரெடாப் பொருத்தனை கெபல்அமைச்சு	1667		
	மூவர் நட்புறவு	1668		
	தோவர் பொருத்தனை (இரண்டாம் சாள்சும் 14 ஆம் உலூயியும்)	1670		
	மூன்றும் இடச்சு யுத்தம் ; சவுதவோல் குடாச் சண்டை ; மன்னிப்புப் பிரகடனம்	1672	ஒரேஞ்சு உவில்லியம் ஒல்லாந்துத் தலைவனுதல்	1672
	சோதனைவிதி ; கெபல் அமைச்சின் வீழ்ச்சி	1673	யோனும் கோணிலியசு த உவிற்றும் கொலை செய்யப்படல்	1673
	மிவிற்றன் மரணம் ; இடச்சுக்காருடன் சமாதானம்	1674		
	மேரி இளவரசி ஒரேஞ்சு உவில்லியத்தை மணத்தல்	1677		
இரண்டாம்	போப்புச்சதி	1678	பிரான்சுக்கும் ஒல்லாந்துக்குமிடையில் நிம்	
சாள்சு	ஆளுரிமை விதி	1679	வேகன் பொருத்தனை	1678
(1660–1685)	ஒட்சுபோட்டுப் பாராளுமன்றம் குலைக்கப்படல், பென்சில்வேனியாக் குடியேற்றம்	1681		
	இரைமனைச்சதி	1683	கொல்பேட்டு மரணம்	1683
இரண்டாம்	துங்கல், மொன்மதுக்கலகங்கள் ; இரத்த நீதி மன்றம்	1685	நந்தீசுக்கற்பனை மாற்றுத்தரவுப்படல்	1685
சேமிசு	மன்னிப்புப் பிரகடனம்	1687		
(1685–88)	சேமிசு எட்டுவேட்டு பிறப்பு ; விசப்புமார் விசாரணை ; மூன்றும் உவில்லியம் வருதல்	1688	14 ஆம் உலூயி சேர்மனிமீது படையெடுத்தல்	1688

ஆரும் பருவத்துக்குரிய பரீட்சை வினுக்கள்
(1603—1688)

1. உண்ணுட்டுப் பெரும் போர் உண்டானதற்குச் சமயவிடங்கள் எவ்வளவு தூரம் காரணமாயின ?

(LGS 1935)

2. முதலாம் சேமிசின் பிறநாட்டுப் பூட்கையின் நோக்கங்களென்ன ? அவற்றை நிறைவேற்றுவதில் எத்துணை வெற்றிகண்டான் ?

(LGS 1937)

3. முதலாம் சேமிசின் பிறநாட்டுப் பூட்கையின் சார்பாக நீர் கூறக்கூடிய தென்ன ?

(LGS 1932)

4. முதலாம் சேமிசின் பாராளுமன்றம் செய்த முக்கியமான முறைப் பாடுகளைச் சுருக்கமாய்க் கூறுக. அவை எவ்வளவுதூரம் நியாயமானவை ?

(குரு 1938)

5. முதலாம் சேமிசின் பிறநாட்டுப் பூட்கையை, அல்லது உண்ணுட்டுப் பூட்கையை ஆதரித்துக் கூறக்கூடியதைக் கூறுக.

(OC 1936)

6. முதலாம் சேமிசு காலத்திலும் முதலாம் சாள்சு காலத்திலும் வடஅமெரிக்காவிற் பிரித்தானியர் குடியேற்றம்பற்றி விவரிக்க.

(NUJB 1935)

7. உண்ணுட்டு யுத்தத்துக்கான முக்கிய காரணங்களென்ன ?

(NUJB 1939)

8. முதலாம் சேமிசு (1603) அரசுகட்டிலேறிய காலந்தொட்டு முதலாம் சாள்சின் மூன்றுவது பாராளுமன்றம் (1629) கூலைக்கப்படும்வரை அரசனுக்கும் பாராளுமன்றத்துக்கு மிருந்த தொடர்பைப்பற்றி விளக்குக.

(NUJB 1938)

9. உண்ணுட்டு யுத்தத்திலே அரசுக்கட்சியினர் தோல்வியடைந்ததற்குக் காரணமென்ன.?

(OC 1931 : D 1932)

10. பொதுநலவாயம் நீலைத்திராததற்குக் காரணமென்ன ?

(OC 1938)

11. குரம்வெல் புரப்பாளனுயிருந்தபொழுது அவனே எதிர்கொண்ட முக்கியமான இடர்களெவை ? அவற்றை அவன் எவ்வாறு சமாளிக்க முயன்றான் ?

(LGS 1932)

12. 1620 தொடக்கம் 1660 வரை கொத்துலாந்து அல்லது அயலந்து எவ்வாறு ஆங்கில சரித்திரத்தைப் பாதித்ததென்பதைக் கூறுக.

(LGS 1936)

13. நெடிய பாராளுமன்றம் செய்த வேலைகளில் எவ்வெவை நிரந்தர மான பலனை அளித்தன ?

(OC 1939)

14. முதலாம் சாள்சு இறந்தபின் ஒலிவர்குரம்வெல் செய்த வேலை களை விளக்குக ?

(LGS 1937)

15. 1654–58 இல் குரம்வெல்லசமிருந்த அதிகாரங்கள் எவை ? நிரந் தரமான குடியரசை அவன் நிறுவத் தவறியது எதனுல் ?

(B 1932)

16. குரம்வெல் (அ) கொத்துலாந்தரோடு (ஆ) அயலந்தரோடு நடத்திய விவகாரங்களில் முக்கியமானவற்றைக் குறிப்பிடுக.

(NUJB 1936)

17. " அரச மீட்சியானது ஆங்கிலத்திருச்சபைக்கே பெருவெற்றியாயிற்று ; முடியாட்சிக்கு அது அத்துணை பெரிய வெற்றியன்று " இக்கூற்றை 1660–88 காலச் சம்பவங்களோடு ஒப்பிட்டு விளக்குக.

(CL 1932)

18. 17 ஆம் நூற்றுண்டில் நிகழ்ந்த மூன்று ஆங்கில-இடச்சுச் சண்டை களின் முக்கிய சம்பவங்களை விவரிக்க.

(NUJB 1937)

19. முதலாம் சாள்சும் குரம்வெலும் பாராளுமன்றத்தின் துணை யோடு ஆட்சிசெய்ய முடியாதிருந்தமைக்குக் காரணமென்ன ?

(OC 1932)

20. இரண்டாம் சார்ஸின் பிறநாட்டுப் பூட்கை இங்கிலாந்துக்குச் சாதக மானதா ?

(OC 1935)

21. ஆங்கிலேயர் இடச்சுக்காரரோடு நடத்திய கடல் யுத்தங்களுக்குக் காரண மென்ன ? அவற்றின் விளைவுகளென்ன ?

(OC 1936)

22. இரண்டாம் சார்சு காலத்துச் சமயவிவகாரங்களைப்பற்றிச் சுருக்க மாகக் கூறுக.

(LGS 1920)

23. இரண்டாவது சார்ஸின் முக்கிய நோக்கங்களென்ன ? அவற்றை அவன் நிறைவேற்றுவதில் எவ்வளவுதூரம் வெற்றிகண்டான் ?

(OC 1939)

24. 17 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நகரங்களிலும் நாட்டுப் புறங்களிலும் நிலவிய சமூகவாழ்க்கையைப்பற்றிக் கூறுக.

(B 1931)

25. 1688 ஆம் ஆண்டுப் புரட்சி இங்கிலாந்துச் சரித்திரத்தில் மாத்திரமன்றி ஐரோப்பிய சரித்திரத்திலும் முக்கியம் வாய்ந்தது. இக்கூற்றை ஆராய்க.

(LGS 1924)

26. இரண்டாவது சார்சு தனது முடியைக் காப்பாற்ற முடிந்தமைக்கும் இரண்டாம் சேமிசு அதை இழக்க நேர்ந்தமைக்கும் காரணம்கூறி விளக்குக.

(LM 1925)

27. ஆங்கில மக்களுள் மிக முக்கியமான பல்வேறு பிரிவினைரத் தனக் கெதிராக ஒன்றுபடுமாறு (அ) என் (ஆ) எவ்வாறு, சேமிசு தூண்டினான்?

(LGS 1937)

28. இரண்டாம் சார்சும் இரண்டாம் சேமிசும் தனிமுடி மன்னராக ஆட்சி நடத்த விரும்பினர். (அ) இவ்வாறு செய்ய அவர்கள் அனுசரித்த முறைக ளெவை ? (ஆ) இம்முயற்சியில் இரண்டாவது சார்சு வெற்றிபெற்றதற்கும் இரண்டாவது சேமிசு தோல்வியடைந்ததற்கும் காரணமென்ன?

(NUJB 1937)

29. இரண்டாம் சார்ஸின் காலத்திலே கட்சிமுறைமை எவ்வாறு வளர்ச்சி யடைந்த தென்பதைக் கூறுக.

(LGS 1935)

23208.